தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—3

பந்திரர் வைத்திய முறைகள்

(பிணி, பால ரோக சிகித்ஸை)

593

பதிப்பாசிரியர்கள் :

ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி, B. A.,

(ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதிமஹால்)

S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)

ஆயுர்வேத பண்டிதர், ஸரஸ்வதி மஹால்

ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவ காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன் B. A. B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

பதிப்பாளர் :

தொன் போஸ்கோ அச்சகம், தஞ்சை.

1949

இதன் விலை சாதா பயிண்டு ரூ. 3—0—0
காலிகோ பயிண்டு 3—8—0

Tanjore Saraswati Mahal Series No. 3

Sarabendrar Vaidya Muraigal

(Garbhini Balaroga Chikitsai)

Introduction

Maharaja Serfoji who reigned in Tanjore from 1798 to 1832 is justly famous as a scholar-king. The Saraswati Mahal, with its multitudinous manuscripts and printed works on a wide variety of subjects, in a variety of languages, is a lasting tribute to his many-sided intellect and encyclopædic knowledge. But the scholarship of Serfoji was not merely bookish. It assumed various practical forms. One of the far-reaching consequences of his inexhaustible curiosity and research was the establishment of an institution in Tanjore, called the "Dhanvantari Mahal." In it, he had assembled distinguished physicians who pooled their knowledge and recorded their research in the shape of invaluable prescriptions. They carried on research by a comparitive study of cures in various systems of medicine, and the result of their collaboration was recorded in the shape of these prescriptions.

Raja Serfoji was not content to set down the prescriptions as such. His ambition was to render the prescriptions capable of being easily memorised according to the practice of his times. Consequently, he had these recipes composed in easy verses in Tamil

We have today, in the Saraswathi Mahal, 18 volumes of these prescriptions. They are all palm-leaf manuscripts in Tamil, each containing a collection of prescriptions for individual and allied diseases.

In the present volume, we have edited and published one of these manuscripts dealing with Maternity and Children's treatment. It is called in Tamil "GARBHINI BALAROGA CHIKITSAI MURAIGAL" or "Treatment for the diseases of pregnant women and children." We have already edited and published the manuscript on stomach ailments entitled "SARABENDRAR VAIDYA MURAIGAL (Gunmaroga Chikitsaigal)," as the second in 'Saraswathi Mahal Series.' The subject covered by the other unpublished manuscripts are as follows :—

(1) Treatment of the Eye. (2) Ear, Nose, Throat and Head diseases, (3) Diseases of the lung. (4) Diabetes. (5) Rheumatism, Paralysis, Lumbago etc. (6) Diseases resulting from fevers. (7) Treatment for fevers. (8) Anaemia. (9) Piles. (10) Leprosy. (11) Venereal Diseases. (12) Itches, Ulcers, Boils etc. (13) Delirium. (14) Treatment of Poisons. (15) Purgatives, and Treatment of Diarrhoea, and (16) Wounds, Injuries, cancer etc.

Besides the present work and the one already published, the manuscript on Eye treatment is in print and will be shortly published. In editing these manuscripts we have had the valuable expert assistance of Ayurvedic Doctors. The manuscript on Eye-treatment has been edited by the ripe old Eye-Doctor, Mr. T. S. Amirthalingam Pillai, who is Professor of Ophthalmology in the Government College of Indian

Medicine, Madras. It may be stated that all these prescriptions have been in use ever since the days of Raja Serfoji. Both contemporary records and subsequent accounts speak of these cures as widely current. In fact, these prescriptions are called "அனுபவ வைத்திய முறைகள்" (recipes tested by experience). Even today, in many families in Tanjore, these prescriptions are used, and members of the Royal Family in Tanjore possess many of the medicines prepared in Dhanvantari Mahal by a special process called 'kattu' (கட்டு), by which the potency of the medicine is conserved for a long period of years. These special medicines in the shape of pills still have on them the original seals indicative of the names of the medicines.

In the work on hand, we have given the verses of each recipe as we find them in the manuscript and also an analysis of the ingredients, to enable practitioners to follow the verses easily. The preface contains much valuable information on ante-natal and post-natal care.

We are grateful to the Government of Madras for the timely financial assistance they have given us in publishing these and similar treasures lying buried in our library. In this connection, we have to express our special gratitude to Sri O. P. Ramaswami Reddiar, our former Premier, and Sri T. S. Avinasilingam Chettiar, our former Education Minister, who understood the worth of our Library and came to our rescue by placing the necessary funds at our disposal. Our debt to Sardar Vedaratnama Pillai M. L. A., and Sri T. K. Srinivasa Iyyar, Secretary, Tanjore District Congress Committee, is immeasurable for the keen interest they have taken in our affairs and to Sri

T. V Satakopachariar, for the great trouble he took to study the working of the Library and to formulate a scheme for future financial aid, which has been, in the main, approved by the Government. We must thank the Government of Madras for their enlightened decision to give us an annual recurring grant besides the lump grant for publication and equipment of the Library.

SARASWATI MAHAL LIBRARY,
Tanjore
1—7—1949

S. Gopalan,
Hony. Secretary.

நூன்முகம்

நீர்வளம், நிலவளம் முதலிய இயற்கை வளம் மிகுந்த நமது நாட்டில் மக்களின் சராசரி ஆயுள் மிகவும் குறைவாக இருக்கிறது. அதிலும் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் மரண விகிதம் இதர நாடுகளைவிட நம் நாட்டில் அதிகமாக இருக்கிறது, என்பது மிகவும் வருத்தத்தக்க விஷயம். இதற்குக் காரணம் குழந்தை கர்ப்பத்திலிருக்கும்போது கர்ப்பத்தைச் சரியானபடி வளரச் செய்வதற்கான கர்ப்பிணியின் உபசாரங்களின் குறைவேயாகும். இதற்கு அறியாமை ஒரு காரணம். இல்லாமை மற்றொரு காரணம்.

பிரஸவிக்கும்போதும், பிரஸவித்த பின்னரும் ஏற்படக் கூடிய பலவித கோளாறுகளுக்கு உடனடியாகப் பரிஹாரம் செய்யக்கூடிய வைத்ய நூலறிவு படைத்த மருத்துவஸ்திரீகள் அகப்படாமை மூன்றாவது காரணம்.

இக்குறைகளை ஒருவாறு அகற்றுவதற்கென்றே நமது தஞ்சையிலாண்ட சரபோஜி மன்னர் (1798-1832) நமது நாட்டில் பலநூற்றாண்டுகளாக அனுபவசித்தமாகக் கையாளப்பட்ட கர்ப்பிணி பாலரோக சிகித்ஸை முறைகளைத் தனது 'தன்வந்திரி மஹால்' என்ற மேல்நாட்டு, கீழ்நாட்டு வைத்திய ஆராய்ச்சி நிலயத்திலும், அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரியிலும் பரிசோதித்துக் குணந் தரும் முறைகளை மட்டிலும் திரட்டி, தம் ஆஸ்தான தமிழ்ப்பண்டிதர்களைக் கொண்டு தமிழ்ப் பாடல்களாகத் தொகுக்கச்செய்து சரஸ்வதி மஹால் புத்தகாலயத்தில் வைத்துக் காப்பாற்றி யிருக்கிறார். அதில் கண்ட முறைகள் மிகவும் எளிதாகக் கிடைக்கக் கூடிய, மலிவான நம் நாட்டு மூலிகைகளைக் கொண்டே தயார் செய்யக் கூடியவை. இம்முறைகளைக் கண்ணுற்ற நம் நாட்டு வைத்தியர்கள் ஒவ்வொருவரும் அவற்றின் பொருத்தத்

தையும், மருந்துச் சரக்குகளின் சேர்க்கையையும் வியந்து புகழ்ந்து வருகின்றனர்.

இம்முறைகளைத் திரட்டுவதற்கும், சோதனை செய்வதற்கும் செலவு செய்யப்பட்டிருக்கும் பொருளைக் கணக்கிட்டால் இவற்றின் அருமை ஒருவாறு விளங்கும். தற்காலத்தில் அரசாங்கத்தார் நம் நாட்டு முறைகளைப் பரிசோதிப்பதற்காக ஓர் ஆராய்ச்சிக் கழகமேற்படுத்தத் திட்டம் போட்டிருக்கின்றனர். இவ்வித ஆராய்ச்சிக்கழக மொன்றை சுமார் 150 வருடங்களுக்கு முன்னரே சரபோஜி மஹாராஜா மேல் நாட்டு வைத்திய நூல்களையும், மருத்துவர்களையும் கூட வைத்துக் கொண்டு, அதற்கென ஆஸ்பத்திரியையும் நிறுவி, ஆராய்ச்சியைச் செவ்வனே முடித்து, சுமார் 2000 முறைகளைத் தேர்ந்தெடுத்து ரோகங்களுக்குத்தக்கவாறு, அவைகளை 18 பாகங்களாகப் பிரித்து, 18 சுவடிகளில் எழுதி வைத்திருக்கிறார். இவற்றை நாம் புறக்கணிப்போமாயின் நமது செயல், கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்வாங்கச் செல்வது போலாகும்.

ஆகவே, அம்முறைகளை ஒவ்வொரு தொகுதியாக அச்சிட்டு நம் தேசத்துப் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டியது நமது மக்களுக்கு நாம் செய்யவேண்டிய முதல் கட்டமையாகும். அவ்விதப் பிரசுரத்தை சரஸ்வதிமஹால் நிர்வாகத்தார் ஆரம்பித்து, முதல் நூலாக, "குஷ்ம சிகித்ஸை முறை"களை வெளியிட்டிருக்கின்றனர். இப்புத்தகம் அம்மாதிரி வைத்திய வெளியீட்டில் இரண்டாவது ஆகும். இந்நூலில் கண்ட முறைகளைச் செய்யுளாகத் தொகுத்தவர் திருவெங்கடத்தாபிள்ளை என்னும் புலவராவர்.

இம்முறைகளைச் சரிவர அறிந்து உபயோகப்படுத்துவதற்கு உதவியாக, கர்ப்பம் தரிப்பதற்கான காரணங்களும், அது உண்டாகிவளர்ச்சியடையும் விதமும், கர்ப்பிணிகள் செய்யக்கூடாத காரியங்களும், போஷணை விதிகளும், பிரஸவத்தின் போது ஏற்படக்கூடிய கோளாறுகளும், பிரஸவம் செய்விக்கும் முறையும், சிசுவின் ஸம்ரக்ஷணையும் மிகவும் சுருக்கமாக முகவுரையில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலில்

சொல்லப்பட்டிருக்கும் முறைகளைக் கையாளுவதற்குச் சாதனமாக, ஸ்திரீ பாலரோகங்களும், அவற்றின் காரணம், குறிகுணம் முதலியவைகளும் முகவுரைக்குப்பின் தனியாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தயார் செய்வதற்கு சரஸ்வதிமஹால் பால வாகடச் சுவடியும் (நெ. 44) மதராஸ் கவர்ன்மெண்ட் பிரசுரமான பாலவாகடமும் ஆதாரமாகக் கையாளப்பட்டிருக்கின்றன.

இதில் கண்ட முறைகளை உபயோகிக்கும் வைத்தியர்களும், வியாதியஸ்தர்களும் தங்கள் அனுபவங்களை எங்களுக்கு அறிவிக்குமாறு வேண்டுகின்றோம். இந்நூலின் அபிவிருத்திக்கான யோசனைகள் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

சரஸ்வதிமஹால்
தஞ்சாவூர்
1—7—49.

S. கோபாலன்,
கௌரவ காரியதரிசி.

சரபேந்திரர்

கர்ப்பிணி பால ரோகங்களின் சிகித்ஸை முறைகள்

பொருளடக்கம்

		பக்கம்
I.	முகவுரை	I to XXVIII
1.	கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள்	... i
2.	சுத்த சுக்ரத்தின் லக்ஷணம்	... i
3.	சுத்த ஆர்த்தவ லக்ஷணங்கள்	... ii
4.	ருதுவின் லக்ஷணங்கள்	... ii
5.	ருதுமதியின் லக்ஷணங்கள்	... ii
6.	ருது காலத்தில் முதல் 3 தினங்களுக்கு அனுஷ்டிக்கப்படவேண்டிய விதிகள்	... ii
7.	ருது காலத்தில் முதல் 3 நாளும் ஸங்கம் கூடார்து	... iii
8.	ஸங்கத்திற்குரிய ருது காலம்	... iii
9.	சரியான கர்ப்பம் உண்டாவதற்கான ஸ்திரீ புருஷர்களின் குறைந்த பக்ஷ வயது நிரமம்	... iii
10.	சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ, புருஷர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்	... iv
11.	கருத்தரித்ததின் குறிகள்	... v
12.	கர்ப்பச் சின்னங்கள்	... v
13.	கர்ப்பம் வளர்ச்சியடையக் காரணம்	... v
14.	கர்ப்பம் மாதந்தோறும் வளர்ச்சியடையும் விதம்	... vi
15.	கர்ப்பம் போஷிக்கப்படும் விதம்	... viii
16.	கர்ப்பிணியின் ஆகாரமும் போஷணை விதிகளும்	... ix
17.	கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும் அதனலேற்படும் தீமைகளும்	... x
18.	அகாலப்பிரசவத்திற்குக் காரணங்கள்	... xiii
19.	கர்ப்ப ஸ்தாபன மருந்துகள்	... xiii

20. கர்ப்பம் தரித்தபின்னர் ஏற்படும் கோளாறுகளும் அதற்குச் சிகித்ஸை முறையும் ... xiv
21. ப்ரஸவ அறை நிர்மாணிக்கும் விதம் ... xvi
22. ப்ரஸவ அறையில் இருக்கவேண்டிய சாதனங்கள் ... xvi
23. ப்ரஸவத்திற்கான குறிகள் ... xvii
24. ப்ரஸவத்தை எதிர்பார்க்கும் ஸ்திரீ இருக்கவேண்டிய நிலைமை ... xvii
25. கஷ்டப் பிரஸவத்திற்குக் காரணமும் அப்போது கர்ப்பப் பையிலுள்ள சிசுவின் நிலைமையும் ... xviii
26. கஷ்டப் பிரஸவத்திலபாயக் குறிகள் ... xix
27. குழந்தை ஜனித்தபின் நஞ்சை வெளிப் படுத்தும் முறை ... xix
28. தொப்புள் கொடியைச் சேதிக்கும் முறை ... xix
29. பிறந்த சிசுவைப் பராமரிக்கும் விதம் ... xx
30. ஸுதிகைக்கு ஹிதமான ஆகாரங்களும் இதர விதிகளும் ... xx
31. குழந்தையின் ஆகாரக்ரமங்கள் ... xxi
32. தாய்ப்பால் வற்றக் காரணங்கள் ... xxi
33. தாய்ப்பாலில்லாவிடில் குழந்தையின் போஷணை முறை ... xxi
34. தாய்ப்பாலின் சுத்த அசுத்த லக்ஷணங் கள் ... xxii
35. சிசுவின் வேதனைகளைக்கண்டு நோய்களை யறியுமுபாயம் ... xxiii

II. ஸ்திரீ, பால ரோகங்களின் காரணங்களும் குறிகுணங்களும் (1) to (39)

1. ஸ்திரீ ரோகங்கள் :—
1. பெரும்பாடு ... (1)
2. மலட்டு ரோகக் குறிகள் ... (2)

3. கர்ப்ப விப்ருதிக்குறி குணம் ... (8)
4. கர்ப்ப ரோகக்குறி குணம் ... (9)
5. கர்ப்ப சூலைக்குறி குணம் ... (9)
6. இரத்த சூலைக்குறி குணம் ... (10)
7. கர்ப்பப் பையில் சிசு மரித்ததின் இலட்சணங்கள் ... (10)
8. மலட்டு ரோகத்திற்கு மருந்து வகைகள் ... (10)

2. குழந்தைகளின் ரோக வகைகள் :—
1. தோட வகுப்பு ... (12)
2. மாந்த வகுப்பு ... (17)
3. கணச்சூடு வகுப்பு ... (25)
4. கரப்பான் ரோக வகுப்பு ... (34)
5. இரந்தி ரோகம் ... (37)
6. ஆமரோகம் ... (38)
7. கிரிப்பூச்சி உற்பத்தி வரலாறு ... (38)
8. கக்குவான் ரோகக் காரணமும் லக்ஷணமும் ... (39)

III. சரபேந்திர வைத்ய முறைகள் (கர்ப்பிணி பால ரோக சிகித்ஸை முறைகள்) 1 to 240

1. ருதுவாகாதவர்களுக்கு மருந்துகள் ... 1
2. தீட்டாகும்போது உண்டாகும் வலிக்கு மருந்துகள் ... 3
3. கருத்தரிக்கவும் மலட்டுப்புழு விழவும் மருந்துகள் ... 5
4. கர்ப்பம் தரித்தபின் ஏற்படும் வியாதி களுக்கு மருந்துகள் ... 23
5. சீக்கிரப் பிரஸவத்திக்கு மருந்து வகைகள் ... 42
6. இறந்த பிள்ளை வெளிப்பட மருந்துகள் ... 52
7. நஞ்சு விழ மருந்துகள். ... 56
8. பிள்ளை பெற்றபின் ஏற்படும் வியாதி களுக்கு மருந்துகள் ... 57

9.	பிறந்த குழந்தைகளுக்கு மருந்துகள்	... 67
10.	மூலிப்பால் சுரக்க மருந்துகள்	... 72
11.	மூலிப்பால் குடியாத பிள்ளைகள் பால் அருந்த மருந்துகள்	... 76
12.	குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங் களுக்கு மருந்துகள்	... 78
13.	குழந்தைகள் கக்குவானுக்கு மருந்துகள்	... 92
14.	குழந்தைகள் கணச் சூட்டுக்கு மருந்துகள்	... 94
15.	பிள்ளைகளின் சில்லரை வியாதிகளுக்கு மருந்துகள்	... 128
16.	பிள்ளைகளின் ஆமத்திற்கு மருந்துகள்	... 137
17.	பிள்ளைகள் மாந்தத்திற்கும் அதன் உபத்ர வங்களுக்கும் மருந்துகள்	... 142
18.	பிள்ளைகளுக்கு அடிப்புறப்பட்டாலதற்கு மருந்துகள்	... 189
19.	குழந்தைகள் கழிச்சலுக்கு மருந்துகள்	... 190
20.	சிறு பிள்ளைகளின் சுரத்திற்கு மருந்துகள்	... 208
21.	குழந்தைகளுக்குப் புஷ்டிதர மருந்துகள்	... 216
22.	குழந்தைகள் வயிற்றுக்கிருமிகளுக்கு மருந்துகள்	... 222
23.	குழந்தைகள் கரப்பானுக்கும் கிரந்திக்கும் மருந்துகள்.	... 225

சரபேந்திரர் வைத்திய முறைகள்

கர்ப்பிணி பாலரோக சிகித்ஸை

சரபேந்திரர்
கர்ப்பிணி, பால ரோகங்களின்
சிகித்ஸை முறைகள்

முகவுரை

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட் பேறு ; [குறள்
பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவுடைய
மக்கட் பேறல்ல பிற. [குறள்

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் "ஒழுக்கமுடைய மனைவியே ஒருவனுக்கு அழகென்றும், நன் மக்களைப்பெறுதல் அவ்வழகின் மேலிட்ட அணிகலம்" என்றும் கூறியபின் "ஒருவர் பெறும் பல பொருள்களுள் அறிவுடைய குழந்தைகளைப் பெறுவதைக்காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை" என்று கூறியிருக்கிறார். ஆகையால் மக்கட் பேறைப்பற்றிய பகுதியை நமது ஆயுர்வேதத்தில் ஓர் பெரும் தனிப் பகுதியாக விவரித்திருக்கிறார்கள். அதன் சுருக்கம் பின் வருமாறு :—

1. கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள்

சுத்தமான சுக்ரம் (விந்து), சுத்த ஆர்த்தவம் (பெண் தத்வம்) இவ்விரண்டும் கூடும்போது ஜீவன், பூர்வ ஜன்மத்தின் நல்வினை தீவினையாலும், விருப்பு வெறுப்பினாலும், தூண்டப்பட்டு அரணிக்கட்டையிலிருந்து அக்கினி உண்டாவதுபோலக் கர்ப்பம் உண்டாகிறது.

2. சுத்த சுக்கிரத்தின் லக்ஷணங்கள்

ஸ்படிகம் போன்று நிர்மலமாகவும், திரவமாகவும், பிசுபிசுப்போடு கூடியவையாகவும், திதிப்புடன் கூடியதாகவும்,

தேன், நெய், தைலம் இவைகளின் வாஸனையோடு கூடியதாகவும் இருக்கும் சுக்ரம் கர்ப்பத்தை உண்டு பண்ணக்கூடியதாகும்.

3. சுத்த ஆர்த்தவ லக்ஷணங்கள்

முயல் ரத்தம் போலவும், கொம்பரக்குக் கஷாயம் போன்றும், துணியில் கரை யொட்டாததாகவும் இருக்கும் ஆர்த்தவமே கர்ப்பம் உண்டாவதற்கு ஏற்றது.

4. ருதுவின் இலட்சணங்களாவன

ஒவ்வொரு மாதமும் ஸ்திரீகளின் ரஸதாதுவிலிருந்து கருமை கலந்த செம்மை நிறமுள்ளதும், துர்கந்தமுள்ளதுமான 'ருது' என்னும் ரக்த விசேஷம் சேகரிக்கப்பட்டு வாயுவினால் மர்ம ஸ்தானத்தை நோக்கித் தள்ளப்படுகிறது. இது பொதுவாக 3 நாட்கள் வெளிப்பட்டுக்கொண்டிருந்து பிறகு நிற்கும். சுமார் 12 வயது முதல் ஸ்திரீகளின் சரீர தாதுக்கள் விருத்தியாவதால் அந்த வயதிலிருந்து மாதந்தோறும் ருது வெளிப்பட்டு சுமார் 40, 50 வயதில் க்ஷீணமடைகிறது. ருது ஏற்பட்ட காலம் முதல் 12 நாள் வரையில் "ருது காலம்" என்று வழங்கப்படுகிறது. ருது வெளிப்படுதல் கர்ப்பம் உண்டானதும் நின்றுவிடும்.

5. ருதுமதியின் இலட்சணங்கள்

முகம் வாட்டமடைதல், ஸ்தனம், புஜம், துடை முதலிய இடங்களில் துடிப்பு, வயிறு, கண் முதலிய இடங்களில் குழி விழுதல், புருஷர்களிடத்தில் இச்சை உண்டாதல் முதலியவை.

6. ருது காலத்தில் முதல் 3 தினங்களுக்கு அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்

ருது ஆன தினத்திலிருந்து எப்போதும் தனக்கும் பிறருக்கும் நன்மையையே நினைத்து ஸ்நானம், அலங்காரம், இவைகளை விலக்கி கோரைப்பாய் முதலிய படுக்கையில் படுத்துக் கொள்ளவேண்டும். அப்போது பேதி எடுத்துக்

கொள்ளக்கூடாது. தவிர பகலில் தூங்குவது, கண்களில் மையிட்டுக் கொள்ளுதல், அழுவது, எண்ணெய் தேய்த்துக் கொள்வது, நகத்தைக் கிள்ளுதல், தாவுதல், அதிகமாகச் சிரித்தல், பெருங்கூக்குரலிக் கேட்டல், தலைவாரிக் கொள்ளுதல், கடின வேலைகளைச் செய்தல் முதலியவைகளை விலக்கல் வேண்டும். இல்லாவிடில் அவைகள் பிறக்கும் குழந்தைகளை மிகவும் பாதிக்கும்.

4 வது நாள் ருதுஸ்நானம் செய்தபின் முதலில் கணவனைப் பார்த்தல் வேண்டும். ஏனெனில் ருதுஸ்நானம் செய்த ஸ்திரீ எந்த ஆடவனை முதலில் பார்க்கின்றாளோ அவனைப்போன்ற குழந்தையைப் பெறுவாள் எனக் கூறப்பட்டிருக்கிறது.

7. ருது காலத்தில் முதல் மூன்று நாளும் ஸங்கம் கூடாது.

நதியில் ஒரு மிதக்கும் நிரவ்யத்தைப் போட்டால் அது எவ்வாறு மேல் நோக்கிச் செல்லாமல் ஜலப்ரவாகத்துடனேயே செல்கிறதோ அதைப்போல முதல் 3 நாளும் புருடனுடைய சுக்ரம் கர்ப்பாசயத்தையடையாமல் ருதுவுடன் வெளியே வந்துவிடும். ஆகவே, அம்மூன்று தினங்களும் கர்ப்போற் பத்திக்குக் காரணமாகாது.

8. ஸங்கத்திற்குரிய ருதுகாலம்

ருதுவான 4-வது நாள் முதல் 12-வது நாள் வரை கர்போற் பத்திக்கு யோக்யமான காலம். இதற்குமேல் ஸங்கமேற்பட்டால் அநேகமாகக் கர்ப்பம் தரிக்காது. ஏனெனில் தாமரை பகல் பொழுது கழிந்தவுடன் சுருங்கிக் கொள்வது போல் கர்ப்பாசயம் ருது காலம் சென்றவுடன் சுருங்கவாரம்பிக்கிறது. அதனால் அது கர்ப்பத்தை ஏற்காது.

9. சரியான கர்ப்பம் உண்டாவதற்கான ஸ்திரீ புருஷர்களின் குறைந்தபக்ஷம் வயது க்ரமம்

புருஷன் 20 வயது நிறைந்தவனாகவும், ஸ்திரீ 16 வயது நிறைந்தவளாகவுமிருந்தால் வீரியமுள்ள குழந்தைகள் பிறக்கும். இல்லாவிடில் பிறந்த குழந்தை அல்பாயுளாகவோ, பலஹீனமாகவோ இருக்கும்.

10. சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ, புருஷர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்

1. ஆயுர்வேத முறையில் குறிப்பிட்டபடி, தக்க காலங்களில் ஸ்நேஹம், (எண்ணெய், நெய் முதலியவைகளை உள்ளுக்குச் சாப்பிட்டோ அல்லது வெளிப்பிரயோகம் செய்தோ, நைப்பு உண்டாக்குதல்), ஸ்வேதம் (வெந்நீர், ஒத்தடம், முதலியவைகளினால் வியர்வை உண்டாக்குதல்), வமனம் (வாந்தி யெடுக்கச்செய்தல்), விரேசனம் (பேதிக்கு எடுத்துக் கொள்ளுதல்), வஸ்தி (கஷாயம், எண்ணெய் முதலியவைகளைக் கொண்டு எனிமா எடுத்துக்கொள்ளுதல்) முதலியவைகளினால் சரீரத்திலுள்ள வாத, பித்த, கபம் என்கிற தோஷங்களைச் சமமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

2. புருடன் ஸங்க தினத்தன்று இனிப்பான சரக்குகள் சேர்த்துக்காய்ச்சிய நெய், பால், சேர்ந்த ஆகாரத்தையும், ஸ்திரீ நல்லெண்ணெய், உளுந்து இவைகள் சேர்ந்த ஆகார வகைகளையும் சாப்பிடுதல் வேண்டும்.

3. ருதுவான 3 நாட்களும் முன் கூறியபடி நியமமாக இருத்தல் அவசியம். 4-வது நாள் நன்றாக ஸ்நானம் செய்து தூய ஆடைகளணிந்து ஆபரணங்களையும் அணிதல் வேண்டும். புருடனும் அவ்வாறே செய்ய வேண்டும்.

4. இருவரும் புஷ்பங்களைத்தரித்து அந்நியோந்நியம் பிரிய முள்ளவர்களாகச் சேரவேண்டும்.

5. அதிகமாக ஆகாரமுட்கொண்டோ, மிக்க பசியிலோ, அதிக பயத்திலோ, துக்கத்திலோ, கோபத்திலோ, விசாரத்திலோ, வேறு புமானை நினைத்துக்கொண்டோ, சேர்க்கையில் மிதமிஞ்சி விருப்பத்தோடோ ஸ்திரீ இருந்தால் கர்ப்பம் உண்டாவதில்லை, உண்டானாலும் அது அங்க ஹீனமாகவோ, குண ஹீனமாகவோ ஆகும்.

6. அதிக இளமை, அதிக வயது வந்தவர், நரம்புள்ள வியாதியுள்ளவர்கள், வேறுவித மாறுபாடுடையவர்களும் சேர்க்கைக்கு உகந்தவர்களல்ல.

7. குப்புறவோ, அல்லது பக்கத்திலோ ஸ்திரீ சயனிக்கக் கூடாது. முதல் சொன்ன பிசகினுல், பலத்தையடைந்த வாயு மர்மஸ்தானத்தைப் பீடிக்கும், வலது புறமாகப் படுத்துக் கொண்டால் கபம் விருத்தியாகிக் கர்ப்பாசயத்தை மூடிவிடும். இடப்புறமானுல் பித்தம் அதிகமாகி ரத்தத்தையும் சுக்ரத்தையும் எரித்துவிடுகிறது. ஆகவே, ஸ்திரீ மல்லாந்து படுத்தல் வேண்டும். அப்போதுதான் வாத பித்த கப தோஷங்கள் அதனதன் ஸ்தானத்திலிருக்கும்.

8. சேர்க்கை முடிந்ததும் ஸ்திரீயும் புருடனும் குளிர்ந்த ஜலத்தினுல் முகம், கை, கால் முதலிய அங்கங்களைக் கழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

11. கருத்தரித்ததின் குறிகள்

ஸ்திரீ புமான்களுக்குத் திருப்தி, ஸ்திரீயினடிவயிற்றில் துடிப்பு, பாரமுமேற்படுதல், சுக்ரமும், ஆர்த்தவமும் ஒன்று கலந்து வெளி வராதிருத்தல், இருதயத் துடிப்பு, சோப்பல், நாவறட்சி, ஆயாசம், மயிர்க்கூச்சல் முதலியவைகளேற்படும். துடையில் சிறிது வலி, நடுக்கம் முதலியவைகளுண்டாகும்.

12. கர்ப்பச் சின்னங்கள்

ருது நின்று போதல், ஸ்தனங்களின் நுனி சிறிது கறுமை நிறமடைதல், நாபிக்குக் கீழிருங்கும் ரோமராஜி நன்றாக வெளிப்படுதல், கண் இமைகளைச் சுற்றிக் கருத்த வர்ணம் கட்டுதல், காரணமின்றி வாந்தியாதல், ஸ்தனம் பருத்துப் பாலுண்டாதல், வாயில் நீரூறல், உயர்ந்ததும் தாழ்ந்ததுமான வஸ்துக்களின் மேலும், புளிப்பிலும் ஆசையுண்டாகுதல், சோம்பல் இளைப்பு, பலக்குறைவு, காலில் வியர்த்தல், வீக்கம் முதலியவைகள் உண்டாகும்.

13. கர்ப்பம் வளர்ச்சியடையக் காரணம்

கர்ப்பம் தாயிடமிருந்து சில அம்சங்களும், தகப்பனிடமிருந்து சில அம்சங்களும், ஆத்மாவிடமிருந்தும், உணவு ரஸத்திலிருந்தும், பூர்வ ஜன்ம வாசனையினுல் சிற்சில அம்சங்களையும் பெற்றுக்கொள்கிறது.

தாயிடமிருந்து

தோல், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, தொப்புள், இருதயம், க்லோமம், கல்லீரல், மண்ணீரல், மூத்ராசயம், சிறு குடல், பெருங்குடல், வபை முதலியன.

தகப்பனிடமிருந்து

தலைமயிர், நகம், மீசை, உடம்பு மயிர், பற்கள், எலும்பு, ரத்தக் குழாய், தசைக்கயிறுகள், நரம்பு, சுக்ரம் முதலியன.

ஆத்மாவிடமிருந்து

ஜன்ம நிர்ணயம், ஆயுள், ஆத்ம ஞானம், மனது, இந்திரியம், ப்ராணன் முதலிய வாயுக்களையும் மனது முதலிய இந்திரியங்களையும் தூண்டும் சக்தி, ஞாபக சக்தி, உருவம், குரல், நிறம், சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, அறிவு, தைரியம், அகங்காரம், விடாமுயற்சி முதலியன.

தாயின் ஆகாரத்தினால்

ஆரோக்யம், சோம்பலின்மை, புலன் தெளிவு, குரல், நிறம், ஆனந்தம் முதலியவை உண்டாகின்றன.

பூர்வ ஜன்ம வாஸனை

பக்தி, நன்னடக்கை, சுத்தம், ஞாபக சக்தி, மதி மயக்கம், ஈகை, அசூயை, குரத்தனம், பயந்த ஸ்வபாவம், கோபம், சோம்பல், உத்ஸாகம் மிருதுத்தன்மை, கெட்டிக்காரத்தனம், கம்பீரம், சஞ்சல சித்தம் முதலிய குணங்கள் ஏற்படுகின்றன.

14. கர்ப்பம் மாதந்தோறும் வளர்ச்சி யடையும் விதம்

முதல் மாதம்

எல்லா தாதுக்களும், ஒன்றுபட்டுக் குழம்பி ச்லேஷ்ம ரூபமாகி அங்க அவயவங்கள் வெளிப்படையாகத் தெரியாம

விருக்கும் நிலமையையடைகிறது. இதை 'கலலம்' என்று அழைக்கின்றனர்.

2 வது மாதம்

மேற்கூறிய கலலம் கெட்டியாகிறது. முடிச்சுப்போலி ருந்தால் 'ஆண்' என்றும், நீண்டதசையைப் போன்றிருந்தால் 'பெண்' என்றும் திரண்டு உயர்ந்திருந்தால் 'அலி' என்றும் தெரிந்து கொள்ளவும்.

3 வது மாதம்

எல்லா அவயவங்களும் ஒன்றுகவே உண்டாகின்றன. புலன்களும் சேர்ந்தாற் போலுண்டாகின்றன.

4 வது மாதம்

அங்கங்களெல்லாம் வெளிப்படையாகிக் கர்ப்பம் ஸ்திரத் தன்மையை அடைகிறது. கர்ப்பிணியினுடம்பு கனக்கவாரம் பிக்கும்.

5 வது மாதம்

கர்ப்பத்தின் தசைகள், ரத்தம், மாம்ஸம், முதலியவைகள் இப்போது விருத்தியாகின்றது. ஆகவே, கர்ப்பிணியினுடம்பு இளைக்கும்.

6 வது மாதம்

கேசம், ரோமம், நகம், எலும்பு, தசை நார், முதலிய வைகள் விருத்தியாகிறது. கர்ப்பத்தின் பலம், வர்ணம், இவைகளதிகமாவதால் கர்ப்பிணியின் பலமும் வர்ணமும் குறைவடையும்.

7 வது மாதம்

எல்லா அவயவங்களும் பூர்ணமாக அமையப்பெற்று புஷ்டியை யடைகிறது.

8 வது மாதம்

ஸ்ப்த தாதுக்களின் சாரமான ஓஜஸ் என்ற தாது தாயார் சரீரத்திலும் சிசுவின் சரீரத்திலும் மாறி மாறிப் போய்க் கொண்டிருப்பதால், சிசுவின் சரீரத்தில் ஓஜஸ் இல்லாதிருக்கும்போது பிறந்த குழந்தை பிழைப்பது துர்லபமானது.

9 வது மாதம்

இம்மாதம் முதல் பிரசவகாலம்.

15. கர்ப்பம் போஷிக்கப்படும் விதம்

கர்ப்பிணியின் ஆஹார ரஸம் மூன்று விதமாகப் பிரிக்கப் பட்டு ஒரு பாகம் தாயைப் போஷிப்பதற்கும் மற்றொரு பாகம் கர்ப்பம் வளர்ச்சியடைவதற்கும் இன்னொரு பாகம், தாய்ப் பாலை விருத்தி செய்யவும் உபயோகப் படுகிறது. மேலும் கர்ப்பத்தின் ஹ்ருதயம் தாயாரின் தாதுக்களின் அம்சத்தாலுண்டாக்கப்பட்டு தாயாரின் ஹ்ருதயத்தோடிணைக்கப்பட்டிருப்பதால் கர்ப்பத்தின் விருப்பங்கள் தாயாரின் மூலமாகப் பிரதி பலிக்கின்றன. கர்ப்பிணிக்குத் தனது ஹ்ருதயமொன்றும், கர்ப்பத்தின் ஹ்ருதயமொன்றும் ஆக இரு ஹ்ருதயங்களோடு கூடியிருப்பதால் / "தௌஹ்ருதி" என்று பெயர். கர்ப்பிணிக்கு ஏதேனும் ஒரு பொருளின் மீது ஆசையேற்பட்டால் அது கர்ப்பத்தின் இச்சை யென்று அறிந்து அவளுக்கு அதைக்கொடுத்தல் வேண்டும். கர்ப்பிணிக்கேற்படுமிச்சையைத் தடுப்பதால் பிறக்கும் குழந்தை, கூனனாகவோ, முடமாகவோ குள்ளனாகவோ அல்லது பொட்டையாகவோ, மூட்டாளாகவோ, ஆகிறது. கர்ப்பத்தின் நாபியிலிணைக்கப் பட்டிருக்கும் தொப்புள் கொடி மூலமாகவே, ஆகார ரஸமும் வீர்யமும், வயல்களுக்குப் பாய்ச்சப்படும் வாய்க்கால் நீர் போலக் கர்ப்பத்தை யடைகின்றன.

16. கர்ப்பிணியின் ஆகாரமும், போஷணை விதிகளும்

முதல் மாதம்

இனிப்பு, குளிர்ச்சி, த்ரவம் இவை அதிகமாக உள்ள ஆகாரங்களும், வேண்டியஅளவு குளிர்ந்த பாலும் சாப்பிடவும்.

2-வது மாதம்

பழக்கமுள்ள ஆகாரத்தை, அதிமதுரம், திராக்ஷை முதலிய இனிப்பான சரக்குகள் சேர்த்துக்காய்ச்சிய பாலுடன் உபயோகிக்கவும்.

3-வது மாதம்

சம்பா அரிசியினாலான அன்னத்தை பாலுடனே அல்லது தேன் நெய் கலந்த பாலுடனே உட்கொள்ளச் செய்யவும்.

4-வது மாதம்

பாலுடனும், வெண்ணெயுடனும் சேர்ந்த ஆகாரத்தையோ அல்லது ஆட்டு மாமிசத்துடன் ஹிதமான அன்னத்தைச் சாப்பிடலாம். தினந்தோறும் பசு வெண்ணெய் கொட்டைப்பாக்களவு கொடுக்கவும்.

5-வது மாதம்

பாலும், நெய்யும் கலந்த ஆகாரம் அதிகமாக உபயோகிக்கவும்.

6-வது மாதம்

பட நெரிஞ்சில் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை அளவாகச் சாப்பிடுதல் நல்லது.
ஆவான்.

7-வது மாதம்

7-வது மாதத்தில் மார்பிலேற்படும் அரிப்பிற்கு, இலக்தைக் கஷாயத்துடன் அதிமதுரம் சேர்த்துக்காய்ச்சிய நெய்யை உள்ளங்கையளவு உள்ளுக்குச் சாப்பிட்டு, வெளிப்பிரயோகத்திற்குச் சந்தணம், கோரைக்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், இவைகளைப் பூசவும். அரளி இலை போட்டுக் காய்ச்சிய எண்ணெயைத் தடவலாம். அரிப்பு ஏற்பட்டால் சொரியக்கூடாது. தாங்க முடியாவிடில் மெதுவாகத் தடவிக்கொடுக்கலாம். ஓரிலை என்னும் மருந்துச் சரக்கைப் போட்டுக் காய்ச்சிய தித்திப்புடன் கூடிய ஆகாரவகைகளை, சிறிது உப்பு, நெய்புச் சேர்த்து, மிதமாகப்புசித்து, அனுபானமாகச் சிறிது ஜலத்தைப் பருகவும்.

8-வது மாதம்

நெய்விட்ட பால் கஞ்சியைப் பருகக்கொடுக்கவும்.

9-வது மாதம்

அதிமதுரம் முதலிய இனிப்புத்திரவியங்கள் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயால் எனிமாக்கொடுக்கவும். அதையே பஞ்சில் தோய்த்து மர்மஸ்தானத்தில் வைக்கவும். இதனால் வயிறு, இடுப்பு, பக்கம், முதுகு, முதலானஇடங்கள் மிருதுவாகி, வாதம் கீழ் நோக்குவதோடு, மல ஜலங்கள் அவற்றின் நிலைமைகளிலிருந்து/ கர்ப்பமும் சரியானபடி புஷ்டியடைந்து சுகப்பிரஸவமுண்டாகிறது. பிறந்த பிறகு குழந்தைக்குப் பால் எவ்வாறு அவசியமோ அதைக்காட்டிலும் கர்ப்பிணிக்குப் பால் நெய் கலந்த ஆகாரம் அத்தியாவசியம் என்பது கவனிக்கத் தக்கது. குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்பட்ட சில ஸ்தாபனங்களில் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கின்றனர். ஆனால் அதைக்காட்டிலும் கர்ப்பிணிக்குப் பால் கொடுத்தல் முக்கியமானதாகும்.

17. கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும் அதனாலேற்படும் தீமைகளும்

1. மிகவும் உயர்ந்ததும், சிரமத்தைக் கொடுக்கக்கூடியதுமான, மேடு பள்ளங்களுள்ளதும், கடினமாக இடங்களிலும் ஆசனங்களிலும் உட்காரக் கூ

2. மலம் மூத்ராதி வேகங்களை அடக்கக்கூடாது. கடுமையான, அல்லது உசிதமில்லாத தேகப்பயிற்சி செய்யக்கூடாது.

3. அதிக உறைப்பு, உஷ்ணம் இவைகளுள்ள பதார்த்தங்களை அதிகமாக உபயோகிக்கக்கூடாது.

4. வயிற்றுக்குப் போதாமல் சாப்பிடக்கூடாது. இக்குற்றங்களினால் கர்ப்பமானது ஒரு வேளை வயிற்றிலேயே மரிக்கலாம். அல்லது அகாலத்தில் நழுவலாம். அல்லது சோஷித்துப் போகலாம்.

5. கர்ப்பிணிக்குத் தேகத்தில் யாதொரு அடியும் படக்கூடாது. உடம்பிற்கு வருத்த மேற்படக்கூடாது.

6. ஆழ்ந்த பள்ளத்தையோ, கிணற்றையோ, மேலே பார்த்தால் பயம் உண்டாக்கக்கூடிய இடத்தையோ, பார்க்கக் கூடாது. அதனால் கர்ப்பவிச்சதி ஏற்படும்.

7. மிகவும் களைப்பைக் கொடுக்கக்கூடிய வாகனங்களில் செல்லுவதும், மிகக்கடுஞ் சொற்களைக் கேட்பதும் இதே கஷ்டத்தைத் தரும்.

8. கர்ப்பிணி மல்லாந்து படுத்துக்கொள்ளக் கூடாது. அதனால் தொப்புள் கொடி குழந்தையின் கழுத்தில் சுற்றிக் கொள்ளும்.

9. உடம்பை மூடிக் கொள்ளாமல் படுத்துக் கொண்டாலும் இரவில் சஞ்சாரம் செய்தாலும் சிசுவிற்கு சித்த பிரமை உண்டாகும்.

10. சண்டை, கலகங்களிலீடுபட்டால் சிசுவிற்குக் காக்கை வலிப்பு உண்டாகும்.

11. கர்ப்பிணியாயிருக்கும்போது சேர்க்கையிலீடுபட்டால் குழந்தையினுடம்பு அழகு குன்றியோ அல்லது லஜ்ஜையற்ற சுபாவமுடனோ அல்லது ஸ்திரீலோலனாகவோ ஆவான்.

12. சதா வருத்தப்பட்டுக்கொண்டிருந்தால் பயப்படும் ஸ்வபாவமுள்ள குழந்தை பிறக்கும். அல்லது மாம்ஸவளர்ச்சி யில்லாததாகவோ, அல்பாயுஸாகவோ பிறக்கும்.

13. கர்ப்பம் தரித்திருக்கும்போது அவள் பிறருக்குக் கெடுதியை நினைத்துக்கொண்டேயிருந்தால் பிறரை ஹிம் ஸிக்கும் ஸ்வபாவமுள்ளவனும், பொறுமையுள்ளவனும், காமுகனுமான குழந்தை பிறக்கும்.

14. திருடினால், தனக்கும் பிறருக்கும் தொந்தரவைக் கொடுக்கும் பிரஜையைப்பெறுவாள்.

15. பொறுமையற்றவளாக இருந்தால் கோபிஷ்டனாகவும், ஆஸூயையோடு கூடியவனாகவுமுள்ள குழந்தை பிறக்கும்.

16. எப்பொழுதும் தூங்கிக்கொண்டிருந்தால், சோம்பல் புத்திஹீனம், அக்னி பலக்குறைவு முதலியவைகள் குழந் தைக்கு ஏற்படும்.

17. மதுபானத்தில் கர்ப்பிணி அதிகமாக ஈடுபட்டால் குடிகாரனாகவும், சஞ்சல சித்தமுடையவனாகவும் குழந்தை பிறக்கும்.

18. உடும்பு மாம்ஸத்தையே விரும்பி அதிகமாகப் புசித்தால் குழந்தைக்கு மூத்ர ரோகங்களுண்டாகும்.

19. பன்றி மாம்ஸத்தையே விரும்பிச் சாப்பிடுவதால் கண் சிவப்பு, மூச்சுத்திணறல், பருத்த தடித்த மயிர் இவை களுண்டாகும்.

20. மீனை அதிகமாகச் சாப்பிட்டால் கண் இமைப்புக் குறைந்தவனும் நிலையான பார்வையுடையவனுமான குழந் தையைப் பெறுவாள்.

21. இனிப்புப் பதார்த்தத்தையே சாப்பிட்டால் குழந் தைக்கு நீரிழிவு, ஊமைத்தனம், அதிக பருமன் முதலியவை களுண்டாகும்.

22. அதிகமாகப் புளிப்பையே உபயோகித்துவந்தால் குழந்தைக்கு இரத்த பித்தம், தோல், கண் இவைகளைப் பற்றிய வியாதி முதலியவைகளுண்டாகும்.

23. உப்பை அதிகமுபயோகித்துவந்தால் பிறக்கும் பிரஜைக்கு நரை, திரை, வழுக்கை முதலியவைகள் அகாலத்திலே யேற்படும்.

24. உறப்பை அதிகம் சாப்பிட்டால் துர்பலம், அல்பவீரியம் இவற்றோடுகூடிய குழந்தை ஜனிக்கும்.

25. கசப்புப்பண்டங்களை அதிகமாகச்சாப்பிட்டு வந்தால், உடம்பு உலர்ந்தும், பலம் குன்றியும், இளைத்தும் குழந்தை ஜனிக்கும்.

26. துவர்ப்பையேயதிகமாக உபயோகித்தால் கருத்த மேனியும், பொருமல் வியாதியும், வாதரோகங்களும் குழந்தைக்கு உண்டாகும்.

பொதுவாக எந்தெந்த வியாதிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் காரணங்களை கர்ப்பிணி அனுஷ்டிக்கிறாளோ அவ்வியாதிகள் பிறந்த குழந்தைக்கு உண்டாகும். இவ்விதமாகவே தகப்பனுடைய தோஷங்களும் சுக்ரத்தின் மூலமாகக் குழந்தையை வந்தடைகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

18. அகாலப் பிரஸவத்திற்குக் காரணங்கள்

வாதாதி தோஷங்களைப் பிரகோபிக்கச் செய்யும் காரியங்களைக் கர்ப்பிணி அடிக்கடிச் செய்வதாலும், கர்ப்பத்தின் பூர்வ ஜன்ம வினையாலும், மாதா பிதாவின் நாஸ்திகத் தன்மையாலும், கர்ப்பம் அகாலத்தில் வெளிவரக்கூடும். மேலும் க்ருமி, வாயு, அடிபடுதல் முதலியவற்றாலும் கர்ப்பம் சிதைவுறும்.

19. கர்ப்பஸ்தாபன மருந்துகள்

வல்லாரை, பச்சை நிறமுள்ள அறுகம் புல்லின் வேர் (வெள்ளறுகு என்ற தனிமருந்து அல்ல) பாதிரிவேர், சீந்தில்

கொடி, கடுக்காய், கடுகுரோகிணி, மஞ்சள், சிற்றாமுட்டி, ஞாழல் இவைகளை ஸ்திரீ வலது கையிலும், தலையிலும் தரித்துக் கொள்ளலாம். அல்லது இம்மருந்துச் சரக்கு வகைகளைச் சேர்த்துக் காய்ச்சிய பாலையோ அல்லது நெய்யையோ சாப்பிடலாம். பூசநக்ஷத்திரத்தில் இம்மூலிகைகளைச் சேர்த்துக் கொதிக்கவைத்த ஜலத்தில் தவறாமல் ஸ்நானம் செய்யலாம். இம்மூலிகைகளின் சூரணங்களினாலும் உடம்பு தேய்த்து ஸ்நானம் செய்வது நலம்.

20. கர்ப்பம் தரித்தபின்னர் ஏற்படும் கோளாறுகளும் அதற்குச்சிகித்ஸை முறையும்

1. எந்தக்காரணத்தினாலாவது 2-வது அல்லது 3-வது மாதத்திற்குள் கர்ப்பிணி ருதுவானால், அந்தக் கர்ப்பம் தங்காது என்று தெரிந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் அக்காலங்களில் கர்ப்பத்திற்கு யாதொரு பலமுமுண்டாகியிராது.

2. நான்காவது மாதம் முதல் சில சமயங்களில் அடியில் கண்ட காரணங்களினால் ருதுவெளிப்படலாம்.

1. கோபம். 2. துக்கம். 3. அழுக்காறு. 4. பயம் 5. திடுக்கிடல். 6. அதிகஸங்கம். 7. அதிக தேகப்பயிற்சி. 8. மனது கலங்குதல். 9. மலமூத்ராதி வேகங்களை யடக்குதல். 10. பொருத்தமல்லாததும், அகாலத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஆகாரம். 11. ஸமமில்லாத படுக்கை. 12. அதிகமாக நிற்றல். 13. பசி தாகத்தையடக்குதல் முதலியவைகளாம்.

அப்போது கர்ப்பம் சிதையாமலிருப்பதற்காகப் பின்கண்ட முறைகளைக் கையாள வேண்டும்.

1. கர்ப்பிணியைக் குளிர்ந்ததும், மிருதுவானதுமான படுக்கையில் தலைப்பக்கம் சிறிது கீழிருக்கும்படியாகப் படுக்க வைக்கவும். பின்பு, அதிமதுரம் சேர்த்துக்காய்ச்சப்பட்ட நெய்யை மிகவும் குளிர்ந்த ஜலத்தில் வைத்துக் குளிரச் செய்து அதில் ஒரு பஞ்சைத் தோய்த்து மர்மஸ்தானத்தில் வைக்கவும். கர்ப்பிணியின் அடிவயிறு முதலிய இடங்களில் 100 தடவையோ, 1000 தடவையோ தண்ணீரால் கழுவப்ப

ட்ட நெய்யைக்கொண்டு துவளையிடவும். குளிர்ந்த பால், குளிர்ந்த அதிமதுரக்கஷாயம், குளிர்ந்த ஆல் முதலிய பால்மரப்பட்டைக் கஷாயம் இவைகளை அடிவயிறு முதலிய இடங்களிலூற்றி நனைக்கவும். தர்மரை, அல்லி, ஆம்பல், முதலிய புஷ்பங்களின் கேஸரங்களைத் தேனுடனே சர்க்கரையுடனே கலந்து சாப்பிடக்கொடுக்கவும். உடம்பின் ஸ்திதிக்குத்தக்கவாறு நன்றாகக் குளிர்ந்த ஜலத்தில் அமிழச் செய்யலாம். பால் மரப்பட்டைகள் (அத்தி, இத்தி, ஆல், அரசு) துவர்ப்புள்ள மரப்பட்டைகள், இவைகளின் கஷாயத்தில் நன்றாக ஊறிய துணிகளைத் தரிக்கச்செய்யலாம். பால் மரப்பட்டைகளைச் சேர்த்துக்காய்ச்சிய பால் அல்லது நெய்யை 2 தோலா அளவு உள்ளுக்குக் கொடுக்கலாம். அதிலேயே பஞ்சைத் தோய்த்து மர்மஸ்தானத்திலும் வைக்கலாம். அத்தி மொட்டுக்களை ஆட்டுப்பாலிலரைத்துச் சாப்பிடவும். சிற்றாமுட்டி முதலியவை சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட சென்னெல்லரிசியன்னத்தைச் சர்க்கரை சேர்த்துக் குளிரவைத்துக் கொடுக்கலாம். மனக்கவலையை ஒழித்துச் சந்தோஷமாக இருந்து வரவேண்டும். அப்போது கர்ப்பம் சிதைவுறாமல் தங்கும்.

2. அஜீரணம் முதலிய காரணங்களினால் கர்ப்பிணிக்குருது வெளிப்பட்டால், அப்போது கர்ப்பத்தைத் தங்கச்செய்வது கடினம். ஏனெனில் மேல் சொல்லிய குளிர்ச்சி, மிருதுமுதலிய உபசாரங்கள் அஜீரணத்தை யதிகமாக்குவதனால் இவைகள் கர்ப்பத்தை நிலைநிறுத்தப் பிரயோஜனப் படாது.

3. சில சமயங்களில் கர்ப்பம் பலமடைந்த பின்னர், அதிக உஷ்ணம், உறைப்பு முதலியவைகளின் அதிக உபயோகத்தால் ருது வெளிப்பட்டவாரம்பித்தோ அல்லது கர்ப்பஸ்தானத்திலிருந்து வேறுவகை திரவம் வெளிப்பட ஆரம்பித்தோ அக்கர்ப்பம் விருத்தியடையாமல் பல மாதங்கள் வயிற்றிலேயே தங்கிவிடுவதுண்டு. இதற்கு 'உபவிஷ்டகம்' உட்கார்ந்துபோன கர்ப்பம் என்று பெயர்.

4. பட்டினிகிடந்தாலும், எண்ணெய் முதலிய நைப்பு வஸ்துக்களைச் சேர்க்காமலிருந்தாலும், வாதத்தைப் பிரகோபிக்கச் செய்யும் வஸ்துக்களை அதிகமாக உபயோகிப்பத

னலும், கர்ப்பம் விருத்தியடையாமல் மெலிந்து, கர்ப்பத்தின் துடிப்பும் இல்லாமல் வயிற்றிலேயே தங்கிவிடுதல் உண்டு இது 'ஸாகோதரம்' என்று சொல்லப்படுகிறது.

இவைகளுக்கான மருந்துவகைகள்.

வசம்பு, குக்கில் போன்ற பௌதிக சரக்குகளையும், இனப்பானதும், வாதத்தைச் சமனப்படுத்துவதுமான சரக்குகளையும் சேர்த்துத் தயார் செய்யப்பட்ட நெய் மிகவும் நன்மை பயக்கும். இவைகளை வேண்டிய அளவு ஆகாரத்துடனும் உபியோகிக்கலாம். ஓடம், படகு, முதலியவைகளிலோ அல்லது அசங்கக்கூடிய வாகனுதிகளில் செல்லுவதையும் எண்ணெய் தேய்த்தல் முதலியவைகளையும் பரிஹரிக்க வேண்டும்.

கர்ப்பச்சிதைவுற்றால், அப்போது வலி தெரியாமல் செய்வதற்கும், கர்ப்பாசய சுத்திக்கும் மத்யங்களை (மயக்கவஸ்து) அருந்தக் கொடுக்கவும், மனதிற்கு ஹிதமானதும் எண்ணெய்ப் பசையற்றதுமான ஆகார வகைகளைச் சாப்பிடவிடவும்.

21. ப்ரசவ அறை நிர்மாணிக்கும் விதம்.

அது விசாலமாகவும் புழுதி, மண் முதலியவைகளில்லாமலும், காற்றோட்டமுள்ளதாகவும், பிரஸவத்திற்கு வேண்டிய உபகரணங்களோடு கூடியதாகவும், உள்ள ஒரு சிறப்பான இடத்தில் இருத்தல் வேண்டும்.

22. ப்ரசவ அறையில் இருக்கவேண்டியவைகளாவன.

கூர்மையான வாசி வகைகள், ஸ்வர்ணத்தினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட சஸ்திரங்கள், வில்வக் கட்டையினால் செய்யப்பட்ட சாய்ந்து படுக்கும் மஞ்சம், தும்பை, இங்குண மரம் இவைகளின் குச்சியினாலுண்டான அக்னி, அநேக குழந்தைகளுக்குத் தாயாராகவும், நன்மையையே கோருபவரும், கருணையோடு கூடிவர்களும், கௌரவிக்கத் தகுந்தவர்களாகவும், அசூயை இல்லாத வர்களும், பிரியமானவர்களும், ப்ரசவம் செய்விப்பதில் தேர்ச்சி பெற்றவர்களும், வயோதிகர்களுமான ஸ்திரீகளும் பிரசவ அறையிலிருக்கவேண்டும்.

23. பிரஸவத்திற்கான குறிகள்

இன்றைக்கோ, நாளைக்கோ பிரசவம் ஏற்படுமெனில் அக் கர்ப்பிணிக்கு உடம்பில் வாட்டமும் அசக்தியுமுண்டாகும். முகம் வாட்டமடையும். கண்களும் வயிறும் தளரும். மார் பில் கட்டுவிட்டது போன்ற உணர்ச்சியேற்படும். அடிவயிற் றில் பாரமதிகரிக்கும். வாயில் உமிழ் நீருண்டாகும். வயிறு, இடுப்பு, ப்ருஷ்டபாகம், இருதயம், மூத்திரப்பை, துடையிடுக்கு இவ்விடங்களில் வலியும் துடிப்புமேற்படும். மர்ம ஸ்தானத்தி லிருந்து நீர் கசியும். ஆகாரத்தில் விருப்பமின்மையும் ஏற் படும். பின்பு, பிரஸவத்திற்கியல்பான வலி அதிகமேற்பட்டு, கர்ப்பம் கிரமமாகக் கீழிறங்கும்.

24. பிரசவத்தை எதிர்பார்க்கும் ஸ்திரீ இருக்கவேண் டிய நிலைமை

ஸ்திரீ, பூமியில் விரிக்கப்பட்ட ஒரு மிருதுவான படுக்கை யிலிருந்து துடைகளை உயர்த்தி மடக்கிக்கொண்டு மல்லாந்து படுத்துக்கொள்ளவேண்டும். பின்பு நாபிக்குக் கீழே தைலம் முதலானவைகளைத் தடவி மர்ம ஸ்தானத்தை நோக்கி உருவி விடவும். கர்ப்பிணியை, மூச்சையடக்கிப் பொருமலுடன் வயிற்றில் அமுக்கத்தையுண்டுபண்ணி, படுக்கையில் இப்படி யும் அப்படியுமாகப் புரளச் சொல்லவும். இப்போது கர்ப்ப மானது தலை கீழாக மேலிருந்து கீழ் நோக்கி வரும். அதனால் மாதாவிற்கும் சிசுவிற்குமிருக்கும் ஹிருதயப் பற்று தல் விடுபட்டு அடிவயிற்றிலிறங்கித் தாயாரின் மூத்திரப்பைக்கு மேல் நிற்கும். இந்த ஸ்திதியில் பிரஸவத்திற்கு இயல்பான வலியைத் தூண்டிவிட்டுப் பிரஸவிக்கும் ஸ்திரீயைக் கட்டிவி லேற்றிவிடவும். வலி உண்டாகும்போது மர்ம ஸ்தானத்தில் சிறிது உஷ்ணமான தைல வகைகளைத் தடவி நெய்ப்பையுண் டாக்கவேண்டும். சிசுவின் தலை முன்னேக்கி வரும்போது மிருதுவாகவும் பின்பு குழந்தை வெளிவரும்வரை பலமாகவும் மூக்கச்சொல்லவேண்டும். வலி இல்லாத சமயங்களில் மூக்குவது பிசகு, ஏனெனில் அதனால் வீண் களைப்பு ஏற்படும், என்று பிரஸவிப்பவளுக்குச் சொல்ல வேண்டும். அதே

விதமாக வலி உண்டாகும் போது அவசியம் மூக்குதல் வேண்டும். பிரஸவ ஸ்திரீயை அடிக்கடி உற்சாகப்படுத்தியும், "குழந்தை இதோ பிறந்து விட்டது" என்று ஜனனமாகிற சமாசாரத்தை அவளுக்குச் சொல்லியும், ஜலத்தினல் முகத்தைக் கழுவியும், விசிறிகளினல் வீசியும் அவளைக்களை தெளிவித்து தைரியப்படுத்த வேண்டும். இவைகளால் பிரஸவிக்கையில் உண்டாகும் சிரமமும், அதைரியமும் நீங்கும்.

25. கஷ்டப் பிரஸவத்திற்குக் காரணமும் அப்போது கர்ப்பாசயத்திலுள்ள சிசுவின் நிலைமையும்

கடுமையான வேலை, தகாத உணவுகளைச் சாப்பிடுதல், முதலிய காரணங்களால், பூர்ண கர்ப்பமானது அதன் நிலையிலிருந்து நகற்றப்பட்டு வாயுவின் கிரமமான மார்க்கத்தைத் தடை செய்து, மர்ம ஸ்தானத்திலும், அடிவயிறு முதலிய இடங்களிலும் வலியை யுண்டாக்கி, மல மூத்ராதிகளைத் தடுத்து விடுகிறது. இவ்வாறு முறை தவறுன போக்குடைய வாதத்தினல் கர்ப்பம் வளைக்கப்பட்டு அநேக வகைகளாக யோனி மார்க்கத்தை நோக்கி அது வெளியாக முயலும். இதற்கு "மூட கர்ப்பம்" என்று பெயர். முக்யமான அதன் நான்கு நிலைமைகளை இங்கு கூறுவோம்.

1. இரு கைகளும், இரு கால்களும், சிரஸும் மேல் நோக்கியிருந்து குழந்தையின் பிருஷ்டபாகம் (ஆஸனம்) யோனி மார்க்கத்தை யடைத்து வெளியாக முயலும். இதற்கு, "ஜகம்" (Breech Presentation) எனப் பெயர்.

2. மர்மஸ்தானத்தில் இரண்டு கைகளும் கால்களும் வெளிவந்து நிற்க, சிரஸும் அவ்வாறே கீழ் நோக்கி வெளியாதல் "ப்ரதிகுரம்" என்று வழங்கப்படும். (Hands and Feet Presentation).

3. இரண்டு கைகளும் சிரஸும் கர்ப்பத்துவாரத்தை நோக்கித் திரும்பி அதையடைத்துக்கொண்டு வெளிப்பட வாரம்பித்தால் அது 'பீஜகம்' எனப்படும். (Vertex Presentation with Prolapse of the hands).

4. கர்ப்பமானது கருப்பையில் யோனிக்குக் குறுக்காக நீண்டு அடைபட்டு நின்றால், அந்த நிலைமையை "பரிகம்" என்று வழங்குவர். (Transverse Presentation)

ஆனால் சாதாரணமாகக் குழந்தையின் தலைதான் முதலில் வெளிப்படவாரம்பிக்கும். அப்போதுதான் பிரஸவம் சிரமமின்றி ஆகும்.

26. கஷ்டப் பிரசவத்தில் அபாயக்குறிகள்

தாயாரின் தலை தொங்கிப்போகுதல், உடம்பு குளிர்தல், லஜ்ஜை நீங்குதல், வயிற்றிலுள்ள ரேகைகள் நீலநிறமாகவும், மேலெழுந்தும் தோன்றுதல் முதலிய குறிகள் காணப்பட்டால் ஸ்திரீ தனது கர்ப்பப்பையிலுள்ள சிசுவையோ, அல்லது சிசு தாயாரையோ, மரிக்கச் செய்யும் என்று தெரிந்துகொள்ளவும்.

27. குழந்தை ஜனித்தபின் நஞ்சை வெளிப்படுத்தும் முறை

பிள்ளை பிறந்து சிறிது நேரத்திற்குள் "அபரா" என்னும் நஞ்சுக்கொடி தானாகவே வெளிவந்து விடும். அப்படி வராவிடில் பக்கத்திலுள்ள ஸ்திரீ தனது வலது கையினால் கர்ப்பிணியின் தொப்புளுக்குமேல் பலமாக அமுக்கிக்கொண்டு இடது கையினால் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு நன்றாக அசைக்கவும். அபரா (நஞ்சு) வெளி வந்து விடும்.

28. தொப்புள் கொடியைச் சேதிக்கும் முறை

குழந்தையின் தொப்புளிலிருந்து 8 அங்குல நீளம் வரை தொப்புள் கொடியை விட்டு, அதற்கு மேல் ஒரு நீளமான நூலைக் கட்டிவிடவும். வெள்ளி, தங்கம், இரும்பு முதலான உலோகங்களினால் செய்யப்பட்ட, ஒரு கருக்குள்ள கத்தியினால் முன் சொல்லியபடி கட்டிய பாகத்திற்கு மேலே அறுக்கி விடவும். பின்பு, அந்நூலை குழந்தையின் கழுத்தில் மாலை போல் போட்டு விடவும். இப்படிச் செய்வதால் குடல் தொப்புளில் இறங்காது. சிறிது நேரங்கழித்து அறுத்த இடத்தில் கோஷ்டம் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தினால் துவக்கி விடவும்.

29. பிறந்த சிசுவைப் பரிபாலிக்கும் விதம்

குழந்தை பிறந்தவுடன் இந்துப்பையும், நெய்யையும் கலந்து, அதன் மேல் போர்த்திருக்குப் வெள்ளை சவ்வை நீக்குவதற்காகத் தேய்க்கவும். பின்பு, குழந்தையின் காதினருகில் இரு கற்களைக்கொண்டு தட்டி சப்தத்தை உண்டாக்கலாம். குளிர்ந்த ஜலத்தினாலும், உஷ்ண ஜலத்தினாலும் மாறி மாறிக் குழந்தையின் முகத்தைக்கழுவலாம். இம்மாதிரியான உபாயங்களினால் சிசுவிற்கு மூச்சு வரும்படி செய்தல் வேண்டும். பின்பு; குழந்தையின் துர்மலங்களை நீக்கி ஸ்நானம் செய்விக்க வேண்டும். நன்றாக உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டிய பின், வைத்யன் தனது வலது கையின் ஆள்காட்டி விரலால் சிசுவின் வாயினுள் மேற்புறத்தை உயர்த்தவும். தலையின் உச்சிக்குழியில் தைலத்தில் நனைக்கப்பட்ட பஞ்சை வைத்திருக்கவும். இந்துப்புச்சேர்த்த நெய்யை குழந்தையின் வாயிலிட்டு, தொண்டையிலடைப்பட்டுள்ள கர்ப்ப நீரை வாந்தியெடுக்கச் செய்யவும்.

30. ஸூதிகைக்கு ஹிதமான ஆகாரங்களும் இதர விதிகளும்

பிரஸவித்தது முதல் 1½ மாதம் வரை ஸூதிகை எனப் படுவாள். அவள், பிரவித்தினத்தன்று, வாதத்தை சமனம் செய்யக்கூடிய (சிற்றாமுட்டி, தேவதாரு, கோஷ்டம், முதலிய) சரக்குகள் சேர்த்துத் தயார் செய்யப்பட்ட கூழ்வகைகளைச் சாப்பிட வேண்டும். மூன்று நாள் சென்றதும் நிலப்பூசினிக்கிழங்கு, ஆமணக்கு வேர், தேட்கொடுக்கு வேர் முதலிய மருந்துச் சரக்குகளின் கஷாயத்தில் தயார்செய்யப்பட்ட கஞ்சி வகை வேண்டிய அளவு நெய்யைச்சேர்த்து அருந்துவது நல்லது. இதனால் அசுத்த ரத்தம் நன்றாக வெளிவந்து கர்ப்பப்பை சுத்தமாகும். ஸூதிகையின் தேகஸ்திதியை யறிந்து பாலில் பக்குவப்படுத்திய கஞ்சியையும் உபயோகிக்கலாம். 7-வது நாள் முதல் க்ரமமாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், பிடித்து விட்டுக் கொள்ளுதல், முதலியவைகளையும், ஹிருதயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய அன்னபானங்களையும் உபயோகிக்க ஆரம்பிக்கவேண்டும்.

12 நாட்கள் கழிவதற்குள் மாமிச ஆகாரத்தைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. ஸ்திரிகையை அதி ஜாக்கிரதையாகப் பராமரித்தல் அவசியம். ஏனெனில், கர்ப்பம் விருத்தியாகும் போதும், அது பிரஸவத்தின்போது வெளிவருவதினாலும், பிரஸவ வேதனையாலும், பலவித நீர்கசிவுகளாலும், இரத்தக் கசிவும் அதிகமாக உண்டாவதாலும், வலியினால் உண்டான ஆயாஸத்தினாலும், அவளுக்கு ஏற்படும் வியாதிகள் எளிதில் விருத்தியாகி பரிஹரிக்கக் கூடாதவைகளாக ஆகக்கூடும்.

31. குழந்தையின் ஆகாரக்கிரமங்கள்

பிறந்ததினத்தன்று, அறுகம்புற்சாற்றை நெய்யுடனும் தேனுடனும் கலந்து 3 வேளை பருகக் கொடுக்கவும்.

இரண்டாம் தினத்திலும், மூன்றும் தினத்திலும் வெள்ளாக்கண்டங்கத்திரி வேர் சேர்த்துக்காய்ச்சிய நெய்யைப்பருகச்செய்யவும்.

நான்காவது நாள்முதல் சிசுவிற்குத் தாய்ப்பாலைக் கொடுத்து அதற்கு அனுபானமாக இரண்டு வேளைகளிலும் சிறிது வெண்ணெயை நாக்கில் தடவவும். முதல் தடவை தாய்ப்பால் கொடுக்கும்போது வலது ஸ்தனத்தை முதலில் கொடுக்கவும். அதற்குப்பின், குழந்தையின்தேகம் வளர்ச்சியடையத் தாய்ப்பாலே சிறந்த ஆகாரமாகும்.

32. தாய்ப்பால் வற்றக்காரணங்கள்

மனக்கவலை, கோபம், உபவாசம், கண்விழித்தல், முதலியவைகளாலும், ஆயாஸத்தினாலும் பால் வற்றிவிடும்.

33. தாய்ப்பாலில்லாவிடில் குழந்தையின் போஷணை முறை

தாயிடம் பாலில்லாவிடில் குழந்தையிடம் பிரியமுள்ள தாதிகளை (செவிலித்தாய்) அமர்த்த வேண்டும். அவர்கள், சுகதேகமுள்ளவர்களாகவும், சேர்க்கையில் ஈடுபடாமல் இருப்பவர்களாகவும், குழந்தைக்குத்தகுந்த சுபாவம், வயது,

நிறம் முதலியவைகளுள்ளவர்களாகவும், அங்க ஹீனமில்லாதவர்களாகவும், உயிருள்ள குழந்தையுடன் கூடியவராகவும், சபலசித்தமில்லாதவர்களாகவும் இருத்தல் அவசியம். அவர்கள் கிடைக்காவிடில், ஆட்டுப்பாலையோ, அல்லது சிறுமல்லிவேர் போட்டுக் காய்ச்சிச் சர்க்கரை சேர்த்த பசும்பாலையோ தாய்ப்பாலிற்குச் சமான குணமுள்ளதாகச் செய்து குழந்தைக்குப் புகட்டவும்.

34. தாய்ப்பாலின் சுத்த அசுத்த லட்சணங்கள்

ஒரு சொட்டுத்தாய்ப்பாலைத் தண்ணீரில் விட்டால் அது தண்ணீருடனே ஒன்று கலந்துவிடும். மேலும் வெண்மையாகவும், இனிப்பாகவும், நிறமாறுபாடில்லாததாகவும் இருக்கும். இப்படிப்பட்ட பாலே தோஷங்களற்ற பால் என்று தெரிந்துகொள்ளவும்.

வாதத்தினால் தாய்ப்பால் தூஷிக்கப்பட்டால் அது ஜலத்தில் மிதக்கும். தவிர அது குறைவாகவும், நுரையுடனும், துவர்ப்பு ருசியுள்ளதாகவு மிருப்பதால் குழந்தையின் மலத்தையும் மூத்திரத்தையும் கட்டிவிடும்.

பித்தத்தினால் தூஷிக்கப்பட்டால் அது கார்ப்பு, புளிப்பு இச்சுவைகளுடன் கூடியதும், ரக்தவாஸனையுடையதும், உஷ்ணமாகவும், தண்ணீரில் விட்டால் மஞ்சள் நிறக்கோடுகள் படர்ந்து மிருக்கும். இதை உள்ளுக்குக் கொடுத்தால் அயனையை உண்டுபண்ணும்.

கபத்தினால் தூஷிக்கப்பட்டால், மிகவும் இனிப்பாகவும் பின்பு உப்புச்சுவையுள்ளதாகவும் மிக வெளுப்பாகவும், எண்ணெய்ப் பசையுடன் கூடியதாகவும், தண்ணீரில் விட்டாலுடனே அமிழ்ந்து விடக்கூடியதாகவும் இருக்கும்.

இவ்வாறு, தோஷங்களினால் தூஷிக்கப்பட்ட தாய்ப்பாலைபருகுவதனால் குழந்தைக்கு அந்தந்த தோஷங்களுக்குத் தக்கரோகங்கள் சம்பவிக்கின்றன. தாயார் ஒன்றுக்கொன்று விரோத குணமுள்ள ஆகார வகைகளைச்சேர்ப் பிடுவதால் தாய்ப்பால் மேல் சொல்லிய விகாரங்களையடைகின்றது.

35. சிசுவின் வேதனைகளைக்கண்டு நோய் களை யறியுமுபாயம்

(காச்யபஸம்ஹிதை—ஸூதீரஸ்தானம் 25-வது அத்தியாயத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.)

1. தலையில் நோய்

தலையையதிகமாக ஆட்டுதல், கண்களை மூடிக்கொள்ளல், எதைக்கண்டாலும் பிடிக்காமல் கத்துதல், தூக்கமின்மை, முதலிய குறிகள் ஏற்படும்.

2. காதுநோய்

கைகளால் காதுகளைத்தொடுதல், தலையைக் கடுமையாகச் சுழட்டுதல், பால் குடியாமை, தூக்கமின்மை, இவைகளினால் "காதில் நோய்" எனத்தெரிந்து கொள்ளவும்.

3. வாயில் நோய்

அதிக உமிழ் நீர் சுரத்தல், தாய்ப்பாலில் வெறுப்பு, குடித்த பாலை மஞ்சள் நிறமாகக் கக்குதல், மூக்கினுலேயே சிரமப்பட்டு மூச்சுவிடுதல் இவைகள் "வாயிலுண்டாகும் நோயைக்" குறிக்கும்.

4. கழுத்தில் நோய்

பால் செரியாமல் வாந்தி, தொண்டையில் கபம் கட்டுதல், அல்பஜ்வரம், ருசியின்மை, உடம்பில் அயர்வு, இவைகளுண்டாகும்.

5. நாக்கில் நோய்.

உமிழ் நீர் அதிகமாகச் சுரத்தல், அருசி, அயர்வு, கண்ணத்தில் வீக்கம், வாய் திறந்தபடியே இருத்தல், முதலியவைகளேற்படும்.

6. தொண்டைப் பிடிப்பு,

சிறிது ஜ்வரம், அருசி, வாயில் எச்சில் ஊறுதல், அதை விழுங்கமுடியாமை, இவைகளேற்படும்.

7. ஜ்வரத்திற்கான ஆரம்பக்குறிகள்.

அடிக்கடி அங்கங்களே முறித்துக் கொள்ளுதல், கொட்டாவி, இருமல், திடீரெனத் தாயைக் கட்டிக் கொள்ளுதல், தாய்ப்பாலில் விருப்பமின்மை, உமிழ்நீர் உஷ்ணமாகவும், வேறு வர்ணத்தோடுமிருத்தல், நெற்றியிலும், பொட்டிலும் உஷ்ணம், ருசியின்மை, கால்களில் குளிர்ச்சி, முதலியவைகளிருந்தால் ஜ்வரம் வரப்போகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

8. அதீஸாரத்திற்கான ஆரம்பக்குறிகள்.

உடம்பின் மேனி மாறுதல், எதைக்கண்டாலும்வெறுப்பு, முகவாட்டம், தூக்கமின்மை, வாதம் கீழ் நோக்கிச் செல்லாமல் தடையுறுதல் முதலியவைகளுண்டாகும்.

9. வயிற்று வலி.

தாய்ப்பாலே மறுத்தல், விடாமலழுகை, நிற்கவைத்தால் வயிற்றை மடித்துக்கொண்டு முன்னேக்கி விழுதல், வயிறு திமிர்த்துப் போதல், உடம்பில் குளிர்ச்சி, முகம் வியர்த்தல், இவைகள் ஏற்படும்.

10. கழுத்துப் பிடிப்பு.

கழுத்தில் வீக்கம், ஜ்வரம், அருசி, தலைவலி, இவைகளிலிருந்து கண்டு கொள்ளலாம்.

11. வாந்திக்கான முற்குறிகள்.

காரணமின்றி அடிக்கடி ஏப்பமும் கொட்டாவியும், விடுதல், அடிக்கடி தூங்கி விழுதல், இவைகளேக்கொண்டு வாந்தியேற்படுமென்று அறியவும்.

12. விக்கல்.

அடிக்கடி முனகுதல், உஷ்ணச்வாஸம், திடீரென்று ஏப்பமுண்டாதல், உடம்பு இளைப்பு இவைகளேற்படும்.

13 நாவரட்சி.

பாலியதிகமாகக் குடித்தும் திருப்தியில்லாமை, விடாத அழுகை, உதடுகளை மேலே அசைத்தல், ஜலத்திலதிக விருப்பம், பலஹீனம் முதலியவைகளுண்டாகும்.

14. வயிற்றுப்பொருமல்

கண்களையகல விழித்து நிலையாக ஒரு இடத்தைப் பார்த்தல், மூட்டுகளில் வலி, சரீர நிலையில்லாமை, சரீர வாட்டம், மலமூத்திராதிகள் தடையுறுதல் இவைகளிலிருந்து தெரிந்து கொள்ளவும்.

15. சித்தப்பிரமை.

காரணமின்றி திடீரென உரக்கச் சிரித்தல், பிதற்றல், நிலையில்லாமை முதலியவைகளேற்படும்.

16. மூத்திரக்கிருச்சிரம் (மூத்திரமீ சொட்டுச் சொட்டாக வலியுடன் இறங்குதல்)

மயிர் கூச்சல், உடம்பு நிமிர்த்தல், மூத்திரம் விடும்போது எரிச்சல், அதனுல் உதட்டைக் கடித்தல், அடிக்கடி அடிவயிற்றைத் தொட்டுக் கொள்ளுதல் முதலிய குறிகளிருந்து "மூத்திரக்கிருச்சிரம்" என்ற நோயைத் தெரிந்து கொள்ளவும்.

17. ப்ரமேகம். (நீரிழிவு)

உடம்பு கனத்தல், மலச்சிக்கல், ஓய்ச்சல், திடீரென்று மூத்திரம் வெளியாகுதல், மூத்திரம் விட்ட இடத்திற் ஈ, எறும்பு முதலியவை மொய்த்தல், மூத்திரம் வெண்மையாகவும், தடிப்புள்ளதாகவும் இருத்தல் முதலிய குறிகளிலிருந்து "ப்ரமேகம்" என்று தெரிந்து கொள்ளலாம்.

18. மூலம்

நன்முக ஆகாரம் ஜீரணமான போதிலும் மலச்சிக்கலுண்டாதல், மலத்துடன் இரத்தம் வெளிவருதல், உடம்பு இளைத்

தல், மூலமுளை ஆஸனத்திலிருந்து வெளியே நீண்டிருத்தல், அரிப்பு, குத்துவலி முதலியவைகளேற்படுதல்.

19. கல்லடைப்பு.

திப்பியுடன் கூடின அதிக அளவில் மூத்திரம் இறங்குதல். சிறுநீர் விடும்போது எரிச்சல், விடாத அழுகை, பலஹீனம் இவைகளுண்டாகும்.

20. அக்கி

சிவப்பு நிறமுள்ள தழும்புகளேற்படுதல், நாவரட்சி, அயர்வு, ஜ்வரம், நித்திரையில்லாமை, மதுரமான பதார்த்தங்களினாலும் சீதோபசாரத்தினாலும் சமனமாகுதல், முதலிய குறிகளேற்படும்.

21. விஷூசிகா (வாந்தி பேதி)

உடம்பில் எரிச்சல், ஊசிகளினால் குத்தப்படுவது போன்ற வலி, வயிற்றுப்போக்கு இருதயத்தில் வலி, தலை நிற்க மாட்டாமை, அடிக்கடி கொட்டாவி, அதிகமாகத் தாய்பாலைச் சாப்பிடாமல் இருத்தல் உடம்பை முறித்துக்கொள்ளுதல், சாப்பிட்டதை வாந்தி யெடுத்தல், முதலியவைகளினால் "வாந்திபேதி" எனத் தெரிந்து கொள்ளவும்.

22. அலஸகம். (அஜீரணத்தினால் ஆகாரம் மேலும் நோக்காமல் வயிற்றிலேயே தங்கிவிடுதல்)

திக்பிரமை, வயிற்றுப் பொருமல், அருசி, முதலியவைகள் உண்டாகும்.

23. கண்களிலுண்டாகும் நோய்

வஸ்துக்களைப் பார்க்க முடியாமை, வலி, வீக்கம், குத்துவலி முதலியவைகளுடன் சிவப்பு நிறமாகக் கண்ணீர் சுரத்தல், தூங்கினால் இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் முதலிய லக்ஷணங்களினால் அறிந்து கொள்ளவும்.

24. அர்தம் (முகம் ஒரு பக்கம் கோணலாக இழுத்துக் கொள்ளுதல்)

முகத்தின் ஒரு பாகம் இழுத்துக்கொள்ளல், தூங்கும் போது உடம்பை முறித்துக் கொள்ளுதல், விடாமல் அழுகை, உடம்பைப் பிடித்துக் கொள்ளுவதிலாசை, சுறசுறப்பு, அரிப்பு இவைகளிலிருந்து தெரிந்து கொள்ளவும்.

25. ஆமத்தின் முற்குறிகள். (ஜீரணமாகாத ரஸ தாது)

உடம்பு திமிர்த்துப் போதல், அருசி, தூக்கம், உடம்பு வெளுப்பாதல் நிலையில்லாமை, விளையாட்டு, சாப்பாடு படுக்கை, செவிலித்தாய், இவைகளிடத்தில் எப்போதும் வெறுப்பு, ஸ்நானம் செய்யாதபோது ஸ்நானம் செய்த மாதிரியும் ஸ்நானம் செய்தபொழுது ஸ்நானம் செய்யாததுபோன்று மிருத்தல், முதலிய குறிகள் காணப்படில் அது ஆமரோகத்தை உண்டாக்க வல்லது என்று அறியவும்.

26. பாண்டு ரோகம் (சோகை)

வயிற்றில் ஓரே சமனை வீக்கம், கண்கள், நகம், முகம் முதலியவைகள் வெளுத்துப்போதல், பசியின்மை, கண்களில் வீக்கம் முதலியவைகளேற்படும்.

27. காமாலை.

கண்கள், நகம், முகம், மலம், மூத்திரம் முதலியவைகள் மஞ்சள் நிறமானால் 'காமாலை' என்று அறியவும்.

28. லாகிரி வஸ்துக்களைக் கொடுத்ததினாலுண்டாகும் மயக்கத் தைக்காட்டும் குறிகள்.

தாயிடத்திலும், செவிலித்தாயினிடத்திலும் உத்ஸாகமின்மை, அக்னி மந்தம், ஒன்றிலும் ஆசையின்மை, மயக்கம், தூக்கமின்மை, வாந்தி, மனக்கலக்கம், பயம், கடுஞ்செய்கை, தாகம் முதலியவைகளாகும்.

29. பிளஸத்தில் குறிகள். (மூக்கிலிருந்து ரத்தம், நீர், சளி முதலியன சுரத்தல்)

பால் குடித்தபின் அடிக்கடி வாயினுல் மூச்சுவிடுதல், மூக்கிலிருந்து நீரொழுகுதல், நெற்றிக்கட்டு சுடுதல், கண், மூக்கு, காது, வாய் முதலிய துவாரங்களை அடிக்கடி தொடுதல், தும்மல், இருமல், முதலியவைகளுண்டாகும்.

30. மார்பிலடிபட்டதைக் காட்டும் குறிகள்.

மூற்சொன்ன குறிகளுடன், மார்பிலிருந்து முனகுதலும் உண்டாகும்.

31. அரக்குப்பூச்சி கடித்ததினலுண்டாகும் குறிகள்.

யாதொரு வியாதியும் இல்லாமலிருந்து இரவில் குழந்தை படுத்துக்கொள்ளாதிருத்தல், உடம்பில் சிவப்பான பொட்டுகளிருத்தல், முதலியவைகளுண்டாகும்.

முற்றிற்று

ஸ்திரீ, பால, ரோகங்களின் காரணங்களும், குறி குணங்களும்

1. ஸ்திரீகளின் ரோகங்கள்

1. பெரும்பாடு

சையோகஞ் செய்யத் தனிதனி சுழியோடும்
மெய்யாக விந்து விழுவிழுப் புண்ணுகும்
மையூறுங் கண்ணுட்கு மகத்தாம் பெரும்பாடாம்
கொய்யூருந் தாண்டிற் கொப்பளிக்கு மதத்தம்.
(அகஸ்தியர்)

(இ-ள்)

சம்போகத்தினுல் அக்கினி அதிகரித்து / கருக்குழியில் விந்து விழுந்தோறும் புண்ணுகி செவ்விளநீர் போல் உதிரம் வடிந்து கொண்டிருக்கும். வயிற்றுவலி, வீக்கம், முதலியவை களும் உண்டாகும்.

இந்நோயை ஆயுர்வேத முறையில் "அஸ்ருக்தரம்" அல்லது "ரக்தப்பிரதரம்" என்று கூறுகிறார்கள். (இதற்கு "இரத்தப் பெருக்கு" என்று பொருள்).

இந்நோய் கெட்டுப்போன மது வகைகளினுலும், ஆகாரம் ஜீரணிக்கு முன், மேலும் சாப்பிடுவதினுலும், அஜீரணத் தினுலும், கருவழிவதனுலும், அதிக ஸம்போகத்தினுலும், வாகனங்களில் சவாரி செய்வதாலும், அதிக பாரத்தை சுமப்ப தாலும், அடிபடுவதனுலும், பகல் நித்திரையினுலும் ஸ்திரீ களுக்கு உண்டாகின்றது.

ஸாமான்ய லக்ஷணம்:— இரத்தப் பெருக்கும், உடம் பெல்லாம் நசுக்கப்பட்டது போன்ற குத்தலும் வேதனையும் உண்டாகும். இரத்தம் அதிகமாக வெளியானுல், பலக்குறைவு, தலைச்சுற்றல், மூர்ச்சை, நாவறட்சி, காங்கை, பிதற்றல், உடம்பு வெளுமையாதல், சோர்வு முதலியவைகளும் வாத வியாதிகளும் தோன்றும்.

2. மலடு ரோகக் குறி குணங்கள்

ஸரஸ்வதி மகாலிலுள்ள 44 நெ. சுவடியிலுள்ளபடி மலட்டு ரோகத்தின் காரணங்களும், வகைகளும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

(a) கர்ப்பாசயப் புரளல்

ஓதிய மாமக வில்லது நீதியுரைத்திடு வேன்றிருவே
தாதுகுமல்குலிலே மலருண்டது தானிடையே புரளில்
நீதியதாய் விழுமாவழுதம் புகன்றிடமங் கொருவும்
வேதமுமிப்படியே யுரையாடிடு மென்கொடி நீயறியே.

(இ-ள்)

கருப்பப்பைப் புரளுவதினால் அது புருடனுடைய சுக்ரத்தைக் கிரகிக்க முடியாத நிலைமையை யடைகிறது.

இதன் லக்ஷணம்

மேலினி மங்கையர் மாத விடாயென விலகிய நாலாநாள்
வாலிப வாடவர் கூடிய போதினின் மங்கை விலாவது
[தான்
வேலிடு புண்ணெனவே வலியுண்டெனின் மென்பகமா
[மலருங்
கோலமிலாது புரண்டது வென்றறி கூறுவனவுடதமே.

(இ-ள்)

தீட்டான பின் நான்காவது நாளன்று புணரும் போது அந்த ஸ்திரீ விலாவினில் குத்துவலியையுணர்ந்தால், அவளுக்கு கர்ப்பாசயம் புரண்டிருக்கிறது என்று அறிக.

(b) வாயு சேருதல்

நீயறிமாமலர் தானதில் வாய்வுரினேயம தாம்முதந்
தாயகமாகிய மாபலனற்றதின் சார்மெலா மொழிகிச்
சியென நீரெனவேயது போய் வளர் தேகமெலாம்
[வலியா
யோயும் விதங்களிதாகு மறிந்து கொளொண்டொடி
[யின்புறவே

(இ-ள்)

கருப்பப்பையில் வாயு அதிகமாகத் தாக்குவதால் சுக்ரம் பலனற்றதாகச் செய்யப்பட்டு, அது சிற்போலும், தண்ணீர் போலும் ஆவதுடன் தேக முழுமையும் வலியை உண்டாக்க வல்லதாக ஆகும்.

இதன் லக்ஷணம்

உண்டாமே திரண்டிரு நாளினிலொண் கணவன்
[புணரத்
தண்டார் தேகமெலாம் வலியென்னிற் றங்கிய
[பகமலரிற்
பண்டார் வாயு வுறைந்தது வென்றறி.....

(இ-ள்)

நான்காவது நாள் புணரும்போது ஸ்திரீ தன் தேகமெல்லாம் வலிக்கிறது என்று கூறினால் கர்ப்பாசயத்தில் வாயு நிறைந்திருக்கிறது எனக் கொள்க.

(c) **தசை வளர்ச்சி**

இன்புறு மாமலர் தன்னிலுமே தசை யேகமதாய் வளர
அன்புறுமப் பொழுதே விழுமாவமுதஞ் சளி போலுருகி
வன்படியா துறையாது கலங்கி வழிந்திடுமே வெளியில்
மென்பத நூலிடை கஞ்சமதா முலைமென்குழன்
[மெல்லியலே.

(இ-ள்)

கருப்பையில் தசை அதிகமாக வளருவதால், புருஷனுடைய சுக்ரம் சளிபோல் உருகி, உறையாமல் கலங்கி யோனிக்கு வெளியில் வந்து விடும்.

இதன் லக்ஷணம்

.....மாதிடை தான் வலிகாணுமெனிற்
காத்திர வல்குலிலே தசை யென்றறிகளரிடி
[பின்னகமுந்.....

(இ-ள்)

புணரும்போது ஸ்திரீயின் இடைகளில் வலி உண்டாஞல் சுதை கர்ப்பாசயத்தில் வளர்ந்திருக்கிறது எனத் தெரிந்து கொள்ளவும்.

(d) உஷ்ண திக்யம்

மெல்லிதழ் பூவினில் வல்வலியுட்டிண மென்மேலுண்
[டாகில்
நல்லிதமாய் விழுமென்னமுதந்தணனுடிய வெண்
[ணெயதாம்
கொல்லதி னின்று மிகுந்து வெதும்பிக் கோமுகமாம்
[வழியே
செல்ல மூரித்துறை போய் விடு மாமறைச் சூத்திரமிப்
[படியே.

(இ-ள்)

மர்மஸ்தானத்தில் வலியும் உஷ்ணமும் அதிகரிப்பதால் சுக்ரம் நெருப்பிலிட்ட வெண்ணெயைப் போல உருகி அங்கிருந்து வெதும்பி வெளியே வந்துவிடும்.

இதன் லக்ஷணம்

தேன் மொழியைப் புணர் போதினிலே துடை சேர்ந்து
[வலிக்கு மெனின்
மான் மலர் தாணை நிலுட்டிண மென்றறி மாட்டு விலா
[வென்புங்

(இ-ள்)

புணரும்போது ஸ்திரீ "தன் துடைகள் வலிக்கின்றன" என்று சொன்னால் கர்ப்பாசயத்தில் உஷ்ணம் சேர்ந்திருக்கின்றது என அறியவும்.

(e) சீதளச் சேர்க்கை

இப்படிப் பூவினிற் சீதளமே யுறினின் பமதாம் வேளைச்
செப்பிய மாவமுதம் விழுநின்று தெளிந்து முறிந்துடனே
அப்புவெனப் பழுதாகி நலிந்தயலோடி யழிந்துவிடும்
மைப்படியுங் குழற் செம்பிளை மென்முலை வல்லிநன்
[வாணுதலே.

(இ-ள்)

கர்ப்பாசயத்தில் சீதளம் ஏற்பட்டால், புணரும்போது சுக்ரம் தெளிவாகி, முறிந்து, தண்ணீர் போலாகி வீணாகி விடும்.

இதன் லக்ஷணம்

நீங்கிடு மார்பதிலே
கண்ண வலிக்குமெனின் மலர்தான திற் கண்டது சீதள
[மென்
றெண்ணி மருந்துகள் செய்திடு செப்புவனேர் குழலேந்
திழையே.

(இ-ள்)

புணரும்போது "மார்பு வலிக்கின்றது" என்று ஸ்திரீ சொன்னால் அவளது கர்பாசயத்தில் சீதளம் சேர்ந்திருக்கிறது எனத்தெரிந்து கொள்க.

(f) **புழு உண்டாகுதல்**

வாணனி யோனியிலே மலர்மீதினின் மாபுழுவங்
[குறிலோ
ணிய மாவமுதந் தனையே யெடுத்துண்டு களித்து மிக
ஆணவமாக நிலைத்து வளர்ந்திடு மாகையினன் மகவைக்
காணிலை யென்று கரைந்திடு வாரிது கண்டறி
காரிகையே.

(இ-ள்)

கருப்பையில் புழு உண்டாகில் அது புருடனுடைய விந்து வைச்சாப்பிட்டு, புஷ்டியாகி, நிரந்தரமாக அங்கேயே தங்கி விடுவதால் ஜனங்கள் "குழந்தை உண்டாகவில்லையே" எனக் கலங்குவர்.

இதன் லக்ஷணம்

.....மாதரை மருவிய போதினிலே
சித்த மகிழ்ச்சி கொளாமலுமே மையல் தீர்க்கிலை
[யென்று சொலில்
வித்தக வல்குவிலே புழுவென்றறி

(இ-ள்)

ஸ்திரீயைப் புணரும்போது 'அவள் சந்தோஷங் கொள்ளாமலும், இன்னும் மையல் தீர வில்லையே' என்று சொன்னாலும் அவளது கர்ப்பாசயத்தில் புழு இருப்பதாக அறியவும்.

(g) சங்கா தோஷம்

காரிகையின் குறிமாமலர் மேன்மிகு காற்றெனுஞ்
[சங்கையுறில்
வீரியமே விழும் போதினிலேயது வீழ்வதின் முன்பாகச்
சாரமெலாங் கொடுபோய் விடுமேயிது சத்தியமே
[யுரைத்தோம்
வாரணி கொங்கை நல்லாயிதை நீயறிமாமறைநூன்
[முறையே

(இ-ள்)

கர்ப்பாசயத்தில் காற்று என்று சொல்லப்படும் (பூத, பேய் பிசாசுகள்) உபத்திரவங்கள் ஏற்பட்டால், புருடனுடைய வீரியம் கர்ப்பாசயத்தையடையுமுன் விந்துவின் சத்தையெல்லாம் அவைகள் கொண்டுபோய் விடும்.

லக்ஷணங்களாவன:

நாயகியோடுறவாகையிற் குதிகானரம் பிழுத்திடு
[மென்முற்
றீய துற்சங்கைகளாமது வென்றறிசேயரி விழிமாதே.

(இ-ள்)

ஸ்திரீயுடன் புணரும்போது அவள் "தனது குதிகால் நரம்பு இழுக்கிறது" என்று கூறினால் சங்கா தோஷம் என்று அறியவும்.

(h) அவயவ ஏற்றத்தாழ்வுகள்:

(i) நூலிடையாள் குறியாழமதாகவுநூல் கொழு
[நன்குறிதான்
சீலமுடன் சரிநீளமிலாவிடிற்றேய் வதினுலமுதம்
பாலெனவே யுறையாமலுடம்பிற் பரந்து கலந்துவிடும்
வேலெனுமை விழியாயிதுகண்டறிவேதன் விதிப்படியே

(இ-ள்)

ஸ்திரீயின் மர்மத்வாரம் அதிகம் நீண்டிருப்பதால் புருடனின் விந்து பால் போல் உறையாமல் தேகத்தில் வியாபித்து விடும்.

(ii) வேதன் விதித்த விலிங்கமு நீள மிகுந்திடில் வேதனியா
லோதிய மாவமுதம் விழவெய்து மூனியிருந்திடுதாக்
கேது விலாமலுடைந்து மென்மேலிலெழும்பி நலிந்து
[விடும்
மாதனமென் குழலின் பவளஞ்செறிவாயுடை
[மங்கையரே.

(இ-ள்)

அங்கம் அதிகம் நீண்டிருந்தால் கர்ப்பாசயத்தில் விழுந்த சுக்ரம் அங்கேயே நிலைத்து நிற்காமல் மேலும் மேலும் எழும்பி வீணாகி விடும்.

(i) பூர்வ வினை

மங்கையராயினு மாடவராயினுமா வினையாலவிழ்தஞ்
சங்கையிலாமலருந்தியதாலுடல் தங்கிய வெப்பமதாற்
பொங்கிய மாவமுதஞ் சலமாகி மிகுந்து பொழிந்துவிடும்
இங்கிது நீதியறிந்திடு வேதமிசைத்த திளங்கொடியே.

(இ-ள்)

ஸ்திரீயோ புருடனோ பூர்வ ஜன்ம வினையாலும், மருந்துகளை அதிகமாக உபயோகித்ததாலும் ஏற்பட்ட உஷ்ணத்தினால் அவர்களது இந்திரியம் நீற்று சொரிந்து விடும். இதனால் யாதொரு பலனுமில்லாமற் போம்.

இம்மாதிரியான காரணங்களினால் ஸ்திரீகளுக்கு மலட்டு ரோகம் உண்டாகிறது. இதைத் தவிர இன்னும் சில நூல்களில், மலட்டு ரோகத்தை (ஆயூர் வேதத்தில்) :—

ஆதிவந்த்யா:

வயிற்றில் மூன்று மடிப்பு விழுந்து இடுப்புப் பெருத்து, சரீரம் ஸ்தூலித்திருந்தால் இவர்கள் தேவஸ்திரீகளானாலும் கருத்தரிக்காத 'ஜன்ம மலடு' எனக்கூறப்பட்டிருக்கிறது.

காக வந்த்யா

முதலில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பின் பிள்ளைகள் இல்லாது போய்விடும்.

கதலீ வந்த்யா

வாழைமரம் எவ்வாறு ஒரு தார் போட்ட பின்பு ஒன்றும் இல்லாமல் போய் விடுகிறதோ அவ்வாறு ஒரு பிள்ளையை மாத்திரம் பெற்றுப் பின்பு. கர்ப்பம் தரிக்காதிருக்கும். இதைக் கொண்டே ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல, ஒரு மரமும் தோப்பல்ல எனக்கூறப்பட்டிருக்கிறது போலும்!

கர்ப வந்த்யா (ம்ருதப்ரஜா)

வயிற்றிலேயே செத்து விழும் பிள்ளையைச் சாதாரணமாக வருடந்தோறும் பெறுதல் என 4 பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள்.

3. கெர்ப்ப விப்புருதிக் குறி குணம்

கூறிடவே விப்ருதி தானுங் கருதுபோல்
வயிற்றிலே சூதங்கட்டும்
மாறவே தலைவலிக்கும் வீட்டுப் பக்கம்
வயிற்று வலி யிரு துடையு மூளைக்குமேதான்
சீறவே புழுத்திரண்டு மலமிருக்கும்
சிசு கெர்ப்பந்தரியாது உடலிளைக்கும்
ஆறவேயிக் குணங்கள் தானறிந்து
அப்பனே மருந்துண்ணச் சித்தியாமே.

(இ-ள்)

வயிற்றில் சூதக்கட்டுடன் வலியுண்டாகும். தலை வலிக்கும். மாதவிடாய் உண்டானால் வயிற்றுவலி நீங்கும். இரு துடைகளிலும் குடைச்சல் வலிகாணும். மலம் இறுகித் திரண்டு புழுக்கை போலாகும், கருத்தரியாது. உடல் இளைக்கும். இக்குணங்களைக் கொண்டு 'கெர்ப்பவிப்ருதி' என்று தெரிந்து கொள்ளவும்.

4. கெர்ப்ப ரோகக்குறி குணம்

திரண்டு புழுக்கை யுருண்டு வரும்
தீராச் செயலும் பரிந்து விழும்
வரண்டு உடலம் வற்றி வரு
மயமுங் கேடருத்தாதுக்கும்
திரண்ட தனத்து மடந்தையரே
தீராக் கெற்ப விப்பிருதி
யுருண்ட புழுக்கை யுமூலி
யுலையுங் கெர்ப்ப ரோகமிதே. (க)

பொருமித் திரண்டு கீழ் வயத்தில்
புண் போலாக மிக நொந்து
முருவக்குத்திக்குடைந் தெங்கு
மொக்கச் சுரமுந் தலைவலியு
வெருவக் குத்திச் செயல் கட்டி
வெடித்துப்புண் பட்டோடு பட்டுத்
திருவைப் பொருத மேனியரே
செய்யுங் கெற்பரோகமிதே. (உ)

(இ-ள்)

மலம் இறுகிக்கட்டும், செயலற்றுப்போம், உடம்பு இளைக்கும், மயக்கமும் தாது க்ஷீணமும் உண்டாகும், வயற்றுப் பொருமல் உண்டாகும், அடிவயறு புண்போல வலிக்கும், உடம்பெங்கும் குடைச்சல் வலியுண்டாகும், சுரம் ஏற்படும், தலைவலியெடுக்கும். இக்குணங்களினால் கர்ப்பரோகம் என அறியவும்.

5. கெர்ப்ப சூலைக் குறி குணங்களாவன

(கெர்ப்பிணி வாதம்)

திரண்டு கீழ் வயிற்றைப் பற்றிச்
சீதக நின்றி ரத்தம் வீழ்ந்துப்
புரண்டு தான் வலிக்கு மாகில்
பொல்லாது கெற்ப சூலை
மருண்டு மேல் சத்தியாகி
மயங்கிட வருமேயாகில்
புரண்டதின் வலியைப் போக்கி
மருந்தினைப் புகலுவோமே.

(இ-ள்)

அடிவயிற்றில் வலியுண்டாகிச் சீதத்துடன் இரத்தம் விழும். கர்ப்பாசயம் புரண்டு வலியுண்டாகும். மேலும், வாந்தியெடுக்கும். மயக்கம் வரும். இவைகளைக் கொண்டு கெர்ப்பசூலை என்று தெரிந்து கொள்க.

6. இரத்த சூலைக் குறி குணம்

திரண்டு புரண்டு கீழ் வயத்தில் திறமாய் மாதவிடாய்
[பெற்று
உருண்டு குருதி விகுதி விழுமுரையுந் துடையு
[முளைந்து வரும்
திரண்டு சிலநாள் சிக்கி நிற்கும் திறமாய் கருவையழிப்
[பிக்கும்
உருண்டையிரத்த சூலையென்று உறுதியிவை
[கொண்டுரை யீரே.

(இ-ள்)

அடி வயிற்றில் வலியுடன் சூதகம் திரண்டு வெளிப்படும். இரத்தம் அதிகமாக விழும். துடைகளில் வலி உண்டாகும். மாதவிடாய் சிற்சில நாட்கள் தடைபடும். இது, ஏற்பட்ட கருப்பத்தை அழித்து விடும். இக்குணங்கள் கண்டால் இது "இரத்தசூலை" என்று அறியவும்.

7. கர்ப்பப் பையில் சிசு மரித்ததின் லக்ஷணங்கள்

கர்ப்பம் அசைவற்றிருத்தல், யோனிக்கசிவு நின்று போதல், பிரசவ வலி முற்றிலும் தணிவடைதல், வயிற்றில் குத்துவலியுண்டாதல், உடம்பு குளிர்ந்து கறுப்பு நிறமாகவோ அல்லது வெண்மை நிறமாகவோ மாறுதல், கண் குழிவிழுதல், மூச்சுக் காற்று துர்நாற்ற முள்ளதாக ஆதல், தேகத்தில் வீக்கம் முதலிய குறிகள் உண்டாகும்.

மலட்டு ரோகத்திற்கு மருந்து வகைகள்

இதில் 2ம் பக்கத்தில் விவரிக்கப்பட்ட பலவித மலட்டு ரோகங்களுக்குச் சரபேந்திர வைத்ய முறைகளில் சிகித்ஸை அநேகமாகக் காணப்படாததால் 44. நெ. சுவடியிலிருந்து மருந்துகளெடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

1. கர்ப்பாசயப் புரளுக்கு மருந்து

பருத்தி விதை, பெண்கோழி வயிற்றிலுள்ள பித்து (பித்தப் பை) இவ்விரண்டையும் ஒன்றாக அரைத்துப் பஞ்சி

லூட்டி ஸ்திரீயின் மர்மஸ்தானத்தில் ஒரு நாள் முழுதும் வைத்துப் பின்பு புணர்ச்சி செய்தால் குழந்தைகள் உண்டாகும்.

2. கர்ப்பப்பையில் வாயுசேருதலுக்கு மருந்து

திராக்ஷைப்பழம் 2 வராகனெடை எடுத்து நல்லெண்ணெயிலரைத்துப் பஞ்சிலூட்டி மர்மஸ்தானத்திற்குள் தினம் 3 வேளை வைத்திருக்கவும்.

3. சீதளத்திற்கு மருந்து

காக்கரட்டான் புஷ்பம், கோஷ்டம், கருஞ்சீரகம், சிற்றரத்தை இவைகளைச் சரியெடையெடுத்து நல்லெண்ணெயிலரைத்துப் பஞ்சிலூட்டி யோனிக்குள் வைத்தால் சீதளம் தீரும்.

4. உஷ்ணம் சேருதலுக்கு மருந்து

காக்கரட்டான் புஷ்பம், மாட்டின் விலா எலும்பு, இவ்விரண்டையும் நல்லெண்ணெயிலரைத்துப் பஞ்சில் தோய்த்து மர்மஸ்தானத்தில் வைத்திருக்கவும்.

5. கர்ப்பப்பையில் சதைவளர்ச்சியிருந்தால் மருந்து

சீரகம், யானை மதம், இவற்றைப் பசுவின் நெய்யிலரைத்துப் பஞ்சிலூட்டி மர்மஸ்தானத்திற்குள்ளே தினந் தோறும் வைத்து வரவும். சதை வளர்ச்சி தீரும்.

6. மலட்டுப் புழு தீர மருந்து

இதற்கு சவுட்டுப்பு, சாலமிசிரி, பருத்திவிதை, கடுக்காய், இவைகளைத்தண்ணீர் விட்டரைத்துப் பஞ்சில் சிறு பொட்டணமாகக்கட்டி மர்மஸ்தானத்தில் வைத்து வர, புழு நீங்கிக் கர்ப்பம் தரிக்கும்.

7. சங்காதோஷ மலட்டுக்கு மருந்து

கை தேர்ந்த மாந்திரீகர்களைக்கொண்டு மந்திரம், ஜபம், தபம் முதலியவைகளைச் செய்வித்தால் கர்ப்பம் உண்டாகும்.

மேற்சொன்ன மருந்து வகைகளைப் பஞ்சிலூட்டி பகல் பொழுது முழுவதும் யோனிக்குள் வைத்து, இரவில், கணவருடன் சேர்ந்துவர வேண்டும். இவ்வாறு 3 நாட்கள் செய்யத் திண்ணமாகப் புத்திரப் பேறு உண்டாகும்.

குழந்தைகளின் ரோக வகைகள்

1. தோட வகுப்பு

தோடம் என்பது குழந்தைகளுக்கு உண்டாகும் குற்றங்கள் என்று பொருள்படும். இது 1. பட்சிதோடம். 2. பறவை தோடம். 3. புள்தோடம். 4. எட்சிதோடம். 5. குளிதோடம். 6. ஆண்தோடம். 7. எச்சில்தோடம். 8. தேரைதோடம். என்று எட்டு வகைப்படும்.

பட்சி தோஷமாவது

பெருகி வயிறுதான் போகும் பேத மூடம்பு கண்குளிரும்
பெருக முகத்தி முகஞ்சோரும் பேயின் குரல்போல்
[சீறியழும்
அருவி முலையுமுண்ணாது அலறித்தண்ணீர் தரச்
[சொல்லும்
பரிக வியோனத்தானறிய [பகர்வீர் பட்சித்தோஷமிதே.
(இ-ள்)

அடிக்கடித் தண்ணீர்போலப் பேதியாகும். உடம்பு மெலிந்து கண் குளிர்ந்துவிடும். முகம் சோர்வடையும். கையிலடங்காது பயங்கரமாக வீறிட்டு அழும். தாய்ப்பால் அருந்தாது, ஆனால் அதிகமாகத் தண்ணீர் குடிக்கும். இவைகளினால் பட்சி தோடத்தைக் கண்டறியவும்.

பறவைத் தோடக்குறி குணம்

குஞ்சியின் உடலுணர்ந்து குடல்தனில் பாலுந் தங்கா
நெஞ்சையும் சுழியாய் வாங்கும் நெரியவே வலியு
[முண்டாம்
துஞ்சிடும் போதெழுந்து துணிக்கட நீர்குடிக்கும்
பஞ்சின் மெல் முலையினாலே பறவையின் தோடந்தானே.

(இ-ள்)

குழந்தையின் உடம்பு மெலிதல், குடித்தபால் செரியாமல் வாந்தியாதல், மேல்மூச்சுவாங்குதல், தொண்டையில்வலி, தூக்கத்திலிருந்து எழுந்துத் தண்ணீர் கேட்குதல், முதலியவைகள் பறவை தோடக் குறிகளாகும்.

புள் தோடக்குறி குணம்

உச்சி கண்ணுந்தான் குழியும் உண்ணும் பாலுக்
[தங்காது
பச்சைநிறம்போல் வயிறு விடும் பறவைக்குரல்போற்
[சிறியழும்
எச்சமிகூக்குந் தண்ணீரை எடுத்துக் குடிக்கு மெய்
[மறக்கும்
கச்சையணிந்த முலைமாதே காணும் புள்ளின்
[தோடமிதே.

(இ-ள்)

தலையுச்சி, கண் முதலிய இடங்களில் குழிவிழும். சாப்பிடும் பால் வயிற்றில் தங்காது வாந்தியெடுக்கும். பச்சை நிறமாகப் பேதியாகும். பட்சிகளின் குரல்போலச் சிறியழும். தேகம் மெலியும், ஜலத்தை அடிக்கடி குடிக்கும். அடிக்கடி தேகத்தை மறந்து சோர்ந்து விழும்.

எட்சி தோடக்குறி குணம்

தேயுமுடம்பு மிகநாறு செல்வன் மூலையை அருவருக்கும்
தாயைக் கண்டாலொவ்வாது சற்றே சற்றே வயி
[றெழுகும்
காயுமுடம்பு கண் பிசையுங் கண்டாலிவை தானறி
[யிரோ
பாயும் விடையோன் தானறியப் பகரிலெட்
[சித்தோஷமிதே.

(இ-ள்)

குழந்தையின் உடம்பு மெலிந்து, துர்நாற்றம் வீசும். தாய்ப்பால் குடிக்காது. தாயையும் சிறிது கூடப்பார்க்காது, கொஞ்சம் கொஞ்சமாகப் பேதியாகும். சுரம் வரும். கண்கள்

அடிக்கடி பிசையும். இக்குணங்களைக்கொண்டு "எட்சி தோடம்" என்று அறியவும்.

குளிதோடம்

தாயார் முலையில் வாய் வைக்கும் சற்றேயுண்ணு மழு [திறங்கும்
தேய்வாய்த்தேயும் வயிறெழுகும் சிறிதே கண்டாலரி [யிரோ
காயாவண்ணன் முன் பிறந்த கமலம் போன்ற கண் [ணுளே
பேயார் கண்ட தலக்குளித்த பெண்ணர் கண்ட குறியி [துவே

(இ-ள்)

தாய்பாலைச் சிறிது குடிக்கும். உடனே அழும், பின்பு குடிக்காது. பேதியாகும். உடம்பு மெலியும். இக்குறிகள் கண்டால் "குளிதோடம்" அதாவது தூரமான ஸ்திரீ குளித்தவுடன் குழந்தையைப் பார்த்ததாலுண்டான தோஷம் என்று அறியவும்.

எச்சில் தோடம்

அல்லது திட்டி (திருஷ்டி) தோஷம்.

எச்சிற்றோடக்குறியை யியம்புங் காலை
எதிரிட்ட வொருவர் கண்ணேறதாகும்
வைச்சபாலுண்ணுமை தலைதூக்காத
மயக்கமுடல் வாடலதினிறமுமாறல்
அச்சமுறு பூதசுரம் ஒருக்கால் தாயை
அண்டினுற் சிறியழலற்ப பேதி
விச்சலிமை யொட்டுகண்ணி மிண்டி மண்ணில்
மேல் விழுந்து புரண்டழுதலிவைகளாமால்.

(இ-ள்)

குழந்தையைப் பார்க்கும் ஒருவரின் கண் படுதல் "எச்சிற் தோஷம்" எனப்படும்.

தாய்ப்பாலுண்ணுமை. தலைதூக்கமுடியாத மயக்கம். உடம்பு வாடுதல், உடம்பில் பற்பல நிறங்களும் காணுதல்,

பூதசுரம்போல் கான்றுதல், தாயைப்பார்த்தால் சிறி அழுதல், சிறிது சிறிதாக மலம் வெளியாதீதல், கண் இமைகள் ஒட்டிக் கொள்வதினல் அதைக்கிள்ளிக்கொண்டு பூமியில் விழுந்து புரண்டு அழுதல் இவைகள் காணப்படும்.

ஆண்தோடக்குறிகுணம்

போமே உச்சி கண்குழியும் பொருந்துண் பாலுந் தங்
[காது
போமே வயிறு பச்சென்று பொருமியழுமே பறவைக்
[குரல்
தாமே குறுகும் ஒருவேளை தனியே தனியே சிறியழும்
காமே கறுத்த குயிலாளே கலந்த புருடதோடமீதே.

(இ-ள்)

குழந்தையின் தலைஉச்சியும், கண்ணும், குழிவிழும், சாப்பிட்ட பாலை வாந்தியெடுக்கும், வயிறு பொருமலுண்டாகும் பறவையின் குரல்போல அழும். கழுத்து குறுகிவிடும். சிற் சில சமயங்களில் பலமாக அழும். இவைகள் படுக்கையினி ருந்து வந்த ஆடவன் பார்த்த தோடக்குறிகளாம்.

தேரைத்தோடக்குறிகுணம்

தேனேர் மொழியாய் நீ கேளாய் தேரைக்குணந்தானி
[யம்புகிறேன்
ஊனேவற்றியுடம்புலரும் உயர்ந்தே நெஞ்சு தான்
[கூடும்
கானே கண்ணும் பொடித்திருக்கும் கையுங்காலும் சுரி
[முடக்கும்
மானே வயிறு புடைத்திருக்கும் மலமூத்தியும் வாயுல
[ரும், (க)

காலுங்கையு மிகவற்றிக்கட்டிப் போட்டால் போல்
[பிள்ளை
மேலும் வற்றி வெளுப்பிட்டு வேறே குணமாய்க்குரல்
[கெறித்துச்

சால மூலிப்பால் குடித்தாலுஞ் சற்றுந்தேறு திருப்ப
[தெனில்
நீலவட்ட மலர்க்கண்ணுய்! நிசமாம் தேரைத் தோட
[மிதே. (உ)

(இ-ள்)

தேகம் மெலியும், மார்புக்கூடு பின்னும், கண் சிறிதாகும், கைகால் முடங்கியிருக்கும். வயிறு புடைத்திருக்கும், மலச் சிக்கல் உண்டாகும், வாய் உலர்ந்து, கை கால்கள் சிம்பி, கட்டிப் போட்டது போல உடல் இருக்கும். உடம்பு வெளுக்கும். குரல் கம்மிப்போய் குழந்தை எவ்வளவு தாய்ப்பால் குடித்த போதிலும் உடம்பு தேறுதிருத்தல் முதலியவைகள் "தேரைத்தோடத்தின்" குறிகளாகும்.

மேல் சொல்லியவைகள் பொதுவான தோடவகைகளின் குணங்களாகும். இவைகள் ஒவ்வொன்றிலும் பலவகை பேதங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை இங்கு உரைப்பது பொருத்தமாகும்.

எடுப்புதோடம்

மதலையின் மேனிவாடி வயிற்றினில் பாலுந்தங்கா
சதலையிற் குழியுண்டாகிச் சத்தியும் எடுக்கு நீராய்
நுதலினிற் சலமு நண்ணி நோக்கிய விழியுந் தாழ்ந்து
குதலைவாய் கருகித்தோன்றுங் குளித்தவளெடுத்தக்
[காலே. (க)

பாலகன் பவளவாயிற் பனியென வேர்க்கும் மூக்கு
ஆல கண் வலைய மாகும் அடிக்கடி வயிறு போகும்
காலது பின்னிக் கொள்ளுங் கதறியே யலறிச்சீறும்
சீலமாய் விழித்துத் தாவுத் திதவளெடுத்த தாலே. (உ)

(இ-ள்)

குழந்தை உடல் மெலியும், குடித்தபால் வயிற்றில் தங்காது தண்ணீர் போல வாந்தியாகும். தலையுச்சியில் பள்ளம் தோன்றும், கண் கீழ்பார்வையாகும். வாய் கருப்பு நிறமாக ஆகும். வாய், நெற்றி, மூக்கு முதலிய இடங்களில் வியர்வை உண்டாகும். கண்களைச் சுற்றி வலையமிடும். அடிக்கடி பேதி

யாகும். இரு கால்களையும் அடிக்கடி பின்னிக் கொண்டு வீரிட்டுக் கதறும். கண்ட பேரிடம் போக ஆரம்பித்தல் முதலிய குறிகள் குளித்தவள் எடுத்ததினால் ஏற்பட்டவை களாம்.

2. மாந்த வகுப்பு

மாந்த வகைகளும் குறிகளும்

இந்நோய் குழந்தையின் ஜடராக்னி மந்தத்தால் ஏற்பட்ட ரோகம். இது குழந்தையின் முதல் வயதிலாரம்பித்து மூன்று வயது வரை வருத்தும் வியாதி.

இவ்வியாதி வரும் காரணங்களாவன

முளைத்த பின்னன்னை கொள்ள முதிர்ந்த நோய்
வளர்த்த பிள்ளையைச்சூழ்ந்து மலிந்திடுங்
கிளைத்த சர்க்கரை வள்ளிக் கிழங்குடன்
தெளித்த மாங்கனி தெங்கு பலாவிற்கே (க)

பலமதாங் கட்டுப்பால் சுரை பீர்க்கங்காய்
அலரும் வாழை யவரை துவரையுங்
கில மதாக்கிடுங் கீரைத்தண்டின் கறி
குலவு மாங்கடலை தனைக் கொள்ளவே (உ)

கொள்ளவே செம்புலித்தகர் கோழிமீ
னெள்ளற் பன்றிக்கறி பல்லிறைச்சியு
முள்ளுக்கன்னை நித நிதமுண்டக்காற்
பிள்ளைக்குப்பல மாந்தம் பெருகுமே (ங)

(இ—ள்)

குழந்தை பிறந்த பின் தாயார் கீழ்கண்ட உணவு பதார்த் தங்களை யதிகமாகச் சாப்பிடுவதினாலேற்பட்ட தாய்ப்பாலை சிசு பருகுவதினால் பற்பல நோய்வகைகள் குழந்தைக்கு உண்டா கும். அவையாவன: சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மாம்பழம், தேங்காய், பலாப்பழம், அதிகமாகப் பாலின் உபயோகம்,

சுரைக்காய், பீர்க்கங்காய், வாழைப்பூ, அவரைக்காய், துவரம் பருப்பு, கீரைத்தண்டு, கடலை, செம்மறியாட்டு மாமிசம், கோழி மாமிசம், மீன், பன்றிக்கறி, உடும்புக்கறி முதலியவை களைத் தினந்தோறும் தாயார் சாப்பிடுவதால் குழந்தைக்குப் பலவித மாந்த நோய்கள் உண்டாகின்றன.

மாந்த வகைகள்

சில நூலாசிரியர்கள் 21 வகைகள் என்றும் மற்றும் சிலர் 31 எனவும் கூறுகின்றனர். இது எவ்வாறுயிருப்பினும் முக்கிய மான சில மாந்த வகைகள் 44 நெ. சுவடியிலுள்ளபடி எடுத்துக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாந்தங்களின் பொது குணம்

மாந்தமானது கண்டிடில் வயிறு வுப்பிசமாய்ச்
சேர்ந்த பேதியும் பற்பல விதங்களாய்ச் செறிந்து
வாந்தியோடு மெய்மயக்கமுங் குளிருடன் வெப்புங்
காந்துதாகவும் பிரமையுங்கண் மயக்கிடுமே .....

(இ-ள்)

குழந்தைக்கு வயிற்றுப் பொருமல் உண்டாகும். அடிக்கடி பேதியாகும். இதையன்றி பற்பல விதங்களாய் வாந்தியுமெடுக் கும். அடிக்கடி மயங்கிக் கிடக்கும். குளிர்சுரம் காணும்.

1. தலைமாந்த ரோக இலட்சணம்

கூட்டுச் சந்துகள் தலைவலி வேர்வை கொட்டாவி
சாட்டியத்தோடு தலை கனங்குலை வலி சவம்போல்
ஆட்டமில்லாது குளிர் சுர மதிக மெய்பூத
காட்டினுல் தலை மாந்த மென்றதையறி கரும்பே.

(இ-ள்)

துடையிடுக்குகளில் வலி, தலைவலி, வியர்வை, கொட்டாவி, பலக்குறைவு, தலை கனம், ஈரல்குலை வலி, கை கால்களை யசைக் காமல் பிணம்போலக் கிடத்தல். குளிர் சுரம், உடம்பு வீக்கம், முதலான இக்குணங்களினுல் "தலைமாந்தம்" என்று கண்டு கொள்ளவும்.

2. விஷமாந்த இலட்சணம்

ஏகவாந்தியும் பிதற்றலும் வயிற்று நோயிடைக்கீழ்
ஆகச்சீதளக் குளிர்ச்சியு மாந்துத லரிக்கண்
காகம் போலுள்ளிற் சொருகுதல் மலஞ்சிக்கிக்கழிதல்
வேகமாய்ச்சுர மடிக்குதலிது விடமாந்தம்.

(இ-ள்)

அதிகமான வாந்தியும், வாய் பிதற்றலும், வயிற்றுவலி, இடுப்புக்குக்கீழே குளிர்ச்சி, குளிர்ச்சியில் விருப்பம், காக்கைபோலக் கண்கள் சொருகுதல், மலம் சிக்கலுடன் பேதியாகுதல், நல்ல சுரம் இவைகள் "விடமாந்தத்தின்" இலட்சணங்களாகும்.

3. நீர்மாந்த இலட்சணம்

அறுதியாக மேயாதியந்தம் வேர்வையே மிகுந்து
இறுதியாய்த் தலைவலி மூகமினுமினுப் பிரைச்சல்
உறுதியாய்க் கழிந்திடு தனீரிறங்கு தலுதரங்
குறைவிலாக் குலைவலிகள் நீர்மாந்தத்தின் குணமே.

(இ-ள்)

குழந்தையின் உடம்பெங்கும் வியர்வை காணுதல், வியர்வை விட்டபிறகு தலைவலி, முகம் மினுமினுப்பு, வயிற்று இரைச்சல், கழிச்சல், அதிகமாகச்சிறுநீர்விடுதல், ஈரல்குலைவலி முதலியவைகள் ஏற்படில் அவை "நீர்மாந்த ரோக"த்தின் குறிகளாகும்.

4. செரியா மாந்த ரோக இலட்சணம்

போகுமே வயிறு பாலெனக்கழிந்திடும் பொருமுந்
தேக முஞ்சுரமாய்க்குளிர் கண்டிடுந் தெவுட்டிச்
சோகமுந்தலை வயின்வலி வாந்தியுந் தோன்றி
யேகமாயழுஞ் செரித்திடா மாந்த மென்றெண்ணே.

(இ-ள்)

பால்போலப் பேதியாகுதல், வயிறுப் பொருமல், வீக்கம், குளிர்சுரம், ஏக்கம், தலைவலி, வயிற்றுவலி, வாந்தி இவைகள் ஏற்பட்டால் அதை 'செரியா மாந்தம்' என்று கண்டு கொள்க.

5. வறள் மாந்த இலட்சணம்

தொடு மெய்த்தோல் தளர்ந்துருவழிந்துடல் குளிர்ந்
[திருக்கு
முடல் வெளுத்துக்கண் மயக்குமுஞ் சுழலலுண்டாகிக்
கடுகடுப்புடன் கால் கைகளுதிப் பால் குடிக்கும்
வடிவு பல் குணமாம் வறள் மாந்தமுமானே !

(இ-ள்)

தேகத்திலுள்ள தோல் தளர்ச்சியுற்று, உருக்குலையும். தேகம் சீதளமாகும். கண்கள் வெளுத்து, மயங்கி, தலைச்சுழலலும், கைகால்களில் வீக்கமுமுண்டாகி, வலி உண்டாகும். தாய்ப்பாலை மிக அருந்தும். இவைகள் வறள் மாந்த் இலக்ஷணங்களாம்.

6. கட்டு மாந்த இலட்சணம்.

பறந்த மெய்யினில் வெப்புடனுறக்க மும்பலகால்
உறைந்த வேர்வை கொட்டாவியு முதரத்தில் வலியும்
நிறைந்த நாள் மலஞ்சிக்கியுங் கழியும் நேரிறைச்சல்
அறைந்த சீர்கட்டு மாந்த மென்றே யறியனமே.

(இ-ள்)

குழந்தைக்குச் சுரமடிக்கும், தூக்கமும் வியர்வையும் அடிக்கடி உண்டாகும். அதிகமாகக் கொட்டாவி விடும். வயிற்றுவலி உண்டாகும். மலச்சிக்கலுடன் பேதியாகும். வயிறு இரைச்சலுண்டாகும். இக்குறிகளால் 'கட்டு மாந்தம்' என்று உணர்ந்து கொள்க.

7. பால் மாந்தக்குறி குணம்

மொய் கொள் பாலுபாலாய்க் கழிந்திடு முகம் வேரூய்
கைகள் கால்களும் வெதும்பிடும் வாந்தி பால் காணுஞ்
செய்ய கண்களும் வலியமாஞ்சிர மெடுத்திராது
உய்ய மாந்தும் பால் மாந்தமென்றே யறியுடனே.

(இ-ள்)

குழந்தை பால் பாலாகவே கழியும், முகம் பற்பல நிறமாகும். கால் கைகள் வாட்டமுறும். பாலாகவே வாந்தியெடுக்கும். கண்களும் குழிவிழுந்து வலியமிடுதல், தலை தூக்காமை முதலிய பற்பல குறிகளும் உண்டாகும்.

8. ஊதுமாந்தக் குறி குணம்

அகண்ட வாந்தியுங் கழிச்சலுஞ் சுரங்களுமாகிச்
சுகந்த மேனியில் வீக்கமுந் துண்டித்துப் படிந்
திகந்த தாமுதரத்தினி லிரைச்சலுண்டாகில்
உகந்த சேய்க்கிது ஊது மாந்தங்களென்றிசைப்பாய்.

(இ-ள்)

அதிகமான வாந்தியும், பேதியும் உண்டாகும் குழந்தைக்குச் சுரம், உடம்பில் வீக்கம், வயிறு இரைச்சல், முதலியவைகளுமுண்டாகும். இதை 'ஊது மாந்தம்' என்று கண்டு கொள்க.

9. கல்மாந்த ரோக இலட்சணம்

நாடியே சுரமடித்து மெய் வெளுத்து நாவுலர்ந்து
நீடுகால் குளிர்ந்துங் கையான் முகத்தினை நெருடி
வாடும் பற்பல குணங்களாய்க் கழிந்துடல் வடிந்து
கூடு மாஞ்சிர வோ்வை கல் மாந்தத்தின் குறியே.

(இ-ள்)

சுரம் காணும், உடம்பு வெளுத்துவிடும், நாக்கு உலர்ந்து போம். கால் குளிர்ச்சியாகும். குழந்தை தன் கைகளினுல்

முகத்தை அடிக்கடி நெரடிக்கொள்ளும், உடம்பு வாட்ட மடையும், பற்பல விதமாக வயிறு கழியும், தலையில் வியர்வை யுண்டாகும், இவைகள் " கல் மாந்தத்தின் " குறிகளாகும்.

10. வலிப்பு மாந்தக் குறிகுணங்கள்

அயருங் காலகையுமடிக்கடி யிசுப்பு களாகும்
வயிறு பலவிதங் கழிந்து மார்பினில் வலி மிகுத்துத்
தியக்கும் பல் கிட்டிக் கடித்திடும் வாந்தியுஞ் சேர்ந்து
மயக்குமே வலிப்பாகிய மாந்தமாமாதே.

(இ-ள்)

கைகால்கள் அயர்ந்திருக்கும். அடிக்கடி இசிவு காணும். பலவிதமாகப் பேதியாகும். மார்வலியுண்டாகும். பற்கள் கிட்டுவதுடன், நறநறவென்று கடிக்கும். வாந்தியுண்டாகும். மயங்கியிருக்கும். இக்குணங்களினால் " வலிப்பு மாந்தம் " என்று அறியவும்.

11. போர்மாந்தக் குறிகுணம்

பூசலாய்ச் சுரமடித்துடல் கரைந்து போங்கூடாய்
வாசமாய்க் கழிந்துதடுகளுலர்ந்து வாய்நுரையாய்
நீசவாந்தியுங் கண்குழியுட னெஞ்சு புண்ணு
யூசலாகும் போர்மாந்த மென்றே யறிமுனமே.

(இ-ள்)

குழந்தைக்குச் சுரம் உண்டாகும். உடல் இளைக்கும். மிகநாற்றத்துடன் வயிறு கழிச்சலுண்டாகும். உதடுகள் உலரும். வாயில் நுரைதட்டும். வாந்தியெடுக்கும். கண்களில் குழிவிழும். நெஞ்சில் புண்களுண்டாகும். இவைகள் " போர் மாந்தத்தின் " குறிகளாகும்.

12. சந்நிமாந்த லிட்சணம்

தொலைவில் தாகமுமயக்கமு மறிவு தொந்தித்தல்
தலைபுரட்டல் காலகுளிர்ந்திட னுவில் மூள்தடித்தல்
மலைவுசெய் வெறும் வாந்தியுமேப்பமும் வலிப்புஞ்
சிலைநுதற் கணைசந்நி மாந்தமிதெனச் செப்பே.

(இ-ள்)

அதிகமான தாகம், மயக்கம், நிலைதவறுதல், தலையை இப்படியும் அப்படியும் புரட்டுதல், கைகால்களில் குளிர்ச்சி, நாக்கில் முள் உண்டாகுதல், வாந்தியெடுத்தல், ஏப்பம், வலி, முதலியவைகளினால் "சன்னி மாந்தம்" என்று அறியவும்.

13. பேய் மாந்தக் குறிகுணம்

அணங்கிடுப்புகை கால்துடையான்ன மூக்கு
வணங்குபின் பிடர் நரம்பிவை யெட்டிலும் வலிக்கும்
இணங்கும் வாய்நுரை மயக்கமும் பிதற்றல் கீழிழுத்தல்
கணங்கொள் பூதப்பேய் மாந்தமென் றுகந்து
[கண்டறியே.

(இ-ள்)

இடுப்பு, கை, கால், துடை, முகம், மூக்கு, பிடரி, பிடரி நரம்பு இவ்வெட்டு இடங்களிலும் தாளமுடியாத வலி உண்டாகும். வாயில் நுரை தள்ளும். மயக்கமுண்டாகும். நரம்புகள் கீழ்நோக்கி இழுக்குதல், முதலியவைகளேற் பட்டால் இது 'பேய் மாந்தக்குறிகள்' என்று அறியவும்.

14. தலை மாந்த இலட்சணங்கள்

உதிர் கொட்டாவியுந் தாகமுமுடம்பெங்கும் வலியு
மதிர் சுரத்தொடு முகத்திணைப் பார்த்தழும் வியற்கு
முதிர் விலாப் பருத்ததிகமாய் மயங்கி முன் விழுந்தாற்
கதிர் கொள் வெந்தலை மாந்த மென்றறிந்துகொள்
[கண்ணே

(இ-ள்)

அடிக்கடி கொட்டாவி விடுதல். தாகம், உடம்பு முழுமையும் வலி, சுரம், பிறர் முகத்தைப் பார்த்தாலழுவதற்கு ஆரம்பித்தல், வியர்வை காணுதல், குழந்தை விலாப்புறம் பருமனுடன் முன்வந்தது போலாகுதல் முதலிய குறிகள் காணப்படில் இது "தலைமாந்தமாகும்."

15. சுரமாந்த ரோக இலட்சணம்

உகந்த மெய் முக மினுமினுப்பா முயர் சுரமும்
பகர்ந்த பாலருந்தாது நீர் சிவந்திடும் பார்க்கும்
வகிர்ந்த மலஞ்சிக்கியு மயக்கமும் வலியுஞ்
சுகந்தமாயடி குளிர்ந்திடில் சொல் சுரமாந்தம்.

(இ-ள்)

குழந்தையின் தேகம், முகம் முதலிய இடங்களில் ஒருவித மினு மினுப்பு, கல்ல சுரம், இவைகளேற்படும். தாய்ப்பாலருந்தாது, கண்ணில் நீர் வடிதலும், சிவப்பும் ஏற்படும். மலச்சிக்கல், மயக்கம், தேகமுழுவதும் வலி இவைகளுண்டாகும். கால் சில்லிட்டிருக்கும். இக்குணங்களினால் "சுரமாந்தம்" எனத்தெரிந்து கொள்க.

16. உப்பு மாந்த இலட்சணம்

தெளிந்த தாகமுஞ் சுரமுடன் பிதற்றலுஞ் செருமிக்
களங்க மாயிறைத்துப்பிக் கழிந்துடனே
வளர்ந்த வாந்தியுமூலையை நத்தாமலுமயக்கந்
தளர்ந்த தாலுப்பு மாந்த மென்றறிவாய் நீதானே.

(இ-ள்)

நாவறட்சி, சுரம், பிதற்றல், வயிறு உப்பி இறைச்சலுடன் பேதியாகுதல், பின்பு வாந்தியெடுத்தல், தாய்ப்பாலுண்ணுமை, மயக்கம், முதலியவைகள் உப்பு மாந்தத்தின் குணங்களாகும்.

17. கணமாந்தக்குறி குணங்கள்

அருந்து மெய்யினீத் திருமலு மடிக்கடிச் சுரமுந்
திருந்து மூக்கில் நீர் வடிதலும் வயிறுப்பும் சிரநோய்
புரிந்திளைச்சலும் பலவிதம் வயிறு போக்குடனே
வருந்து கண்ணினில் மயக்கமுமாங் கணமாந்தம்.

(இ-ள்)

உடம்பு இளைக்கும், அடிக்கடி இருமலுண்டாகும், சுரமுமேற்படும். மூக்கிலிருந்து நீர் வடியும், வயிறு பொருமும். தலைவலி ஏற்படும், வயிற்றில் வலியேற்பட்டு இரைச்சலுடன் பலவிதமாகப் பேதி உண்டாகும். கண் மயக்கமுமேற்படும். இக்குறிகளினால் 'கணமாந்தம்' என்று அறிந்து கொள்ளவும்.

மேல் சொன்ன மாந்த வகைகளைத் தவிர இன்னும் சில மாந்த வகைகளும் இருக்கின்றன. அவைகள் முக்காலும் முக்கிய குறி குணங்களைக்கொண்டே அழைக்கப்படுகின்றன. உதாரணமாக, விலாவைத் தாக்கினால் 'அள்ளுமாந்தம்,' விக்கல் இருந்தால் 'விக்கல்மாந்தம்,' வாத பித்தச்லேஷ்மங்களின் அதிகரித்தலால் அந்தந்த தோஷங்களின் பெயர்கொண்ட மாந்தம், என்று பலவாருகப் பிரிக்கின்றார்கள்.

---

3. கணச்சூடு வகுப்பு

இது கர்ப்பச் சூட்டினாலேற்படும் நோய். இவ்வியாதி தாய்ப்பாலுங் குடித்து சோறு முண்ணும் சிறு குழந்தைகளுக்கு அதிகமாக வருகின்றது. இது குழந்தைக்கு மூன்றும் ஆண்டு முதல் ஏழாமாண்டு வரை ஏற்படும்.

கணம் வரலாறு

தோன்றுமய்ய பதார்த்தந் தோயப்பகை
யூன்று தாகம் பசி மிகுந்துற்றிடில்
என்ற துன்பமெலாம் வந்து சூழ்தலால்
ஆன்ற சேய்க்குக் கணங்களுமாகுமே.

(இ-ள்)

மிகுதியாகக் கபத்தை விருத்தி செய்யக்கூடிய பதார்த்தங்களைச் சாப்பிடுவதினாலும், தாகமும், பசியும் அதிகமாக

இருக்கையில் தண்ணீர் அருந்துவதனாலும் பற்பல கண நோகங்கள் குழந்தைகளை வருத்தும்.

இந்நோய் 24 வகைப்பட்டவைகள் என்று சில புஸ்தகங்களில் கூறப் படினும் இங்கு 44 கெ. சுவடியிலிருந்து முக்கியமான சில வகைகளைக் கூறுவது பொருத்தமாகும்.

கண நோகத்தின் பொது இலட்சணங்கள்

ஓதிய தோர் பிள்ளைகட்குக் கணந்தான் கண்டா
லூற்ற மெய்யில் கத கதப்பாய் சுரமுங்காணும்
பேதியது கெட்டபால் கருநீர்ப் போலாம்
பெருக்கும் வயிறுங் கால் கை குச்சி போலாஞ்
சீதமோ டிரத்தங்கள் தாகங்காணுஞ்
சிறந்த கால் கை குளிர்ந்திருமலுண்டாம்
நீதியுடன் கண்குழிந்து மூக்கு நாக்கு
நேராக வெந்துடலம் வெளுத்துப்போமே.

(இ-ள்)

உடம்பு எப்போதும் கதகதப்பாக இருக்கும். சுரமு முண்டாகும். கெட்டுப் போன பால் எப்படித் தண்ணீர் வேறு திப்பி வேறு ஆகின்றதோ அதேபோலக் குழந்தை கருநிறத்துடன் தண்ணீர் வேறுகவும் மலம் வேறுகவும் கழியும். வயிறு பொருமும். கை, கால்கள், குச்சிபோலாகும். சில சமயம் சீதமும் இரத்தமுமாய் மலம் போகும். தாக முண்டாகும். கை கால்களில் குளிர்ச்சி, இருமல், கண்குழி விழுதல், மூக்கு, நாக்கு, முதலிய உறுப்புகளில் வேக்காளம் முதலியவைகளுண்டாகும். இதையன்றி

பாரே கணத்தைப் பகரக்கேள் பகருமுடம்பிற் சுரம் [வீக்கம்
பாரே யுட்சுர மிதுதானே பகருங் கணமல முட்சேரும்
பாரே மார்புக்கூண்டெழும்பிப் பதமாய்த் தேகமிக [வற்றிப்
பாரே வாய்மிக நாறும் பதமாய் மலமும் வெட்டை [யன்றே.

(இ-ள்)

உடம்பு சுரமடிப்பது போன்று கதகதப்பு, வீக்கம், மலம் உள்ளேயே தங்கிவிடுதல், மார்புக்கூண்டுமேல் எழும் புதல், தேகம் மிக இளைத்தல், வாயில் நாற்றமடித்தல், மலம் இளைத்து போதல் முதலிய பற்பல குணங்கள் "கணச் சூட்டின்" குறிகளாகும்.

1. நீர்க்கண ரோக இலட்சணம்

இனிதான நீர்க்கணந்தான் கண்டுதானு லிருகை
காற்முக மினுப்பாய் மயக்கமுண்டாம்
பனி நீர் போலடிக்கடி கழிச்சலாகிப் பகர்
நாக்கு புண்ணுய் வாய் வரண்டுபோகும்
நனிவேர்க்குஞ் சந்துகளில் வெப்பங்காணும்
நன் மூக்கில் நீர் வடியுந் தாகங்காணுங்
தனியான தலைவலியு மிகுந்து நிற்குஞ்
சார்வான வவுழ்தங்கள் சாற்றக் கேளே.

(இ-ள்)

குழந்தையின் கை, கால், முகம் இவ்விடங்களில் மினு மினுப்புக்காணும். மயக்கம் ஏற்படும். பனிநீர் போன்று கழிச்சல் அடிக்கடி ஏற்படும். நாக்கில் புண் உண்டாகும் வாய் வறண்டுபோகும். வியர்வையும், துடையிடுக்குகளில் உஷ்ணமும் உண்டாகும். மூக்கிலிருந்து நீர்வடியும். தாகமும் கடுமையான தலைவலியுமேற்படும். இக்குறிகளினால் "நீர் கணம்" என்று அறியவும்.

2. வறட்கண இலட்சணம்

ஓடுகின்ற வறட்கண நந்தான் வந்ததானு
லுடலிளைத்துத்தாகமஸ்தி சுரமுங்காணும்
நீடு கண்டம் புகைந்து புகைந்திருமலாகி
நீர் வெள்ளையாயிறங்கு மூர்ச்சையுண்டாம்
வாடுகின்ற நாக்கு மஞ்சள் வெள்ளை முள்ளாய்
மயக்கமுடன் முக மஞ்சட் பூத்து நிற்கும்
நாடுகின்ற வயிற்றுவலி சற்றே காணும்
நலமான வவுடதத்தை நாட்டக்கேளே.

(இ-ள்)

உடம்பு இளைக்கும். நாவறட்சியும், அஸ்திச் சுரமு முண்டாகும். தொண்டையில் புகைந்து புகைந்து இருமலுண் டாகும். மூத்திரம் வெளுப்பாக இறங்கும். மூர்ச்சை போடும். நாக்கு மஞ்சள் நிறமாகி முட்கள் தோன்றும். முக மும் மஞ்சள் நிறமாகும். மயக்கம், வயிற்றுவலி இவைக ளுண்டாகும். இது வற்கண இலட்சணம்.

3. எரிகண ரோக இலட்சணம்

குலியான வெரிகணத்தின் குணத்தைச் சொல்வேரங்
குலியெரிச்சல் மேலெரிச்சல் தாகம் வாந்தி
யலிமோதிப்புறண்டு புறண்டவதிப்பட்டங்
கழுது மிக வச மழிந்து முகங் கோணித்
தலியசைந்து வாயாலே மூச்சுண்டாகித்
தாங்காத வாராட்டங் கண்டு தானுல்
மலி போலுந் திரண்ட முலி வனிதை மாதே
மருந்தினுட விஷ்ரத்தின் வாறு கேளே.

(இ-ள்)

ஈரல் குலியில் எரிச்சல், தாகம், வாந்தி, முதலியவைக ளுண்டாகும். குழந்தை புறண்டு புறண்டு வீறிட்டழும். கையில் நிற்காமல் முகத்தைக் கீழே போட்டுத் தலை யையசைக்கும். வாயினுல் மூச்சு விடும். குழந்தை அல்லல்படும். இவைகள் "எரி கணத்தின்" இலட்சணங்களாம்.

4. சுழிகணத்தின் இலட்சணம்

மெலிந்து வருஞ்சுழிகணத்தின் பெருமை கேளாய்
வெய்ய சுவாசஞ் சுழித்துச்சுழித்து வாங்கும்
நலிந்து பற்பல விதமாய்க்கழிந்து சோர்ந்து
நரம்புகளைப் புடைத்து மிகு சுரங்களாகிப்
பொலிந்த சிறு வாயாலே வாந்தி கோழை
புகழ் நாக்கு நெஞ்சிரல் வெந்து போகும்
கலந்த முலி குடியாமலிளைத்துப் போகும்
கண் சொருகி நாசியுப்பல் காணுந்தானே.

(இ-ன்)

மேல் மூச்சு சுழித்துச் சுழித்து வாங்கும். பலவிதமாகக் கழிச்சலுண்டாகி, உடம்பு பலஹீனமாகி, நரம்புகள் புடைத்து, சுரர் காணும். கோழை கோழையாக வாந்தியெடுக்கும். நாக்கு, ஈரல், நெஞ்சு முதலிய விடங்களில் வேக்காளம் உண்டாகித் தாய்ப்பாலைச் சாப்பிடாது, தேகம் இளைத்துப் போகும். கண் சொருகி, மூக்கு உப்பி இருக்கும்.

5. மூல கணத்தின் இலட்சணம்

கொள்ளவே மூலத்தின் கணத்தைச் சொல்வேன்
கொடிய மலம்பல நிறமாய் விழுந்து மென்மேல்
துள்ளவே யிரத்தமது மிகுந்து வாய்வு
தொந்தமாயாசனத்திற் கடுப்புண்டாகி
வெள்ளையாய் சடலமது வெளுத்து தாகம்
வெப்பமொடு தலைவலியு முகமுஞ்சும்பி
யுள்ளுகின்றதுடையதுவும் வற்றி நன்று
யுணவுண்ணுமிளைத்துப் போமுடலந்தானே.

(இ-ள்)

குழந்தை பற்பல நிறமாக மலம் கழிக்கும். அதனுடன் இரத்தமும் போகும். வாயு அதிகமாகி ஆஸனத்தில் கடுப்பு வலி காணும். உடம்பு வெண்மை நிறம் பெறும் (பாண்டு). தாகமும், தலைவலியும் உண்டாகும். முகம் சும்பிவிடும். துடையும் வற்றிவிடும். உணவு சாப்பிடாது. உடல் இளைக்க வாரம்பிக்கும். இது "மூலகணத்தின்" குணங்களாம்.

6. முக்கு கண இலட்சணம்.

இருந்ததொரு முக்கி கணத்தியல்பைக்கேளா
யினிய மல முக்கி முக்கியடியுந்தள்ளி
வருந்தி மலத்தோடிரத்தங்கூடச் சேரும்
வாந்தி சுரந்தாகமுக மினுப்பாய் நிற்குந்
திருந்துமுகியுண்ணுது நாக்கு வேகுஞ்
சிறந்த துடையிடை வலிக்குந் தலைநோகும்
விரிந்து கைகால் குளிர்ந்திருக்கும் பவளவாய்தான்
வெங்கடுப்பா முடலிளைக்கும் வித்தைதானே

(இ-ள்)

குழந்தை அடிக்கடி முக்கி முக்கி மலம் கழிக்கையில் குடல் வெளிப்புறப்படும். மலத்துடன் இரத்தமும் கலந்து வெளியாகும். வாந்தி, சுரம், தாகம், முகமினுமினுப்பு, இவை களுண்டாகும், நாக்கில் வேக்காளமேற்படும். துடை, இடுப்பு, இவ்விடங்களில் வலி அதிகமானதால் தலையைக் கீழே தொங் கப்போடும். கை, கால் முதலிய இடங்கள் குளிர்ச்சியாக இருக் கும். வாயில் சிறு கொப்பளங்கள் தோன்றும். உடம்பு இளைக்கும்.

7. விஷ கண இலட்சணம்

கண மென்ற விஷகணத்தின் குணத்தைக் கேளாய்
கைகாலு மதைத்து நெற்றி வலியுண்டாகுங்
குணமில்லாச் சாணியைப்போற் பேதியாகுங்
குரல் கம்மி முலையுண்ணுதிருமலுண்டா
மிணையிலா முகம் வெளுத்துச் சுரமுங்காணு
மென்னேர நெஞ்சுவிலா கொதிப்புண்டாகுங்
துணையான கண்சிவக்குமினைத்துப் போகுஞ்
சொல்லுகின்ற தேகம் பல விதமாந்தானே.

(இ-ள்)

கை கால் வீங்குவதுடன், நெற்றியிலும் வலியுண்டாகும். சாணியைப்போல் (நிறம், குணம்) மலம் கழியும். குரல் கம்மிப்போம். தாய்ப்பாலை யருந்தாது. இருமல், முகம் வெளுத் தல், சுரம், எப்போதும் நெஞ்சில் வலி, விலாப்பக்கங்களில் கதகதப்பு இவைகளுண்டாகும். கண்கள் சிவப்பு நிறமாகும். குழந்தையின் உடம்பு இளைக்கும்.

8. ஆமகணக் குறிகள்

போமென்ற ஆம கணகுணத்தைக் கேளாய்
பொருமியே சீதரத்தம் பரந்து காணும்
ஆமென்ற சுவாசம் விழி சுழித்தல் காச்சல்
அடிவயிற்றில் வலிவேர்வை கழுத்து நாணல்
ஓமென்ற மூக்கு வெந்து திடுக்கென்றேதான்
உலைத்தெழுந்து கைகாலுங் குளிர்ந்து காணும்
நாமென்ற கண்மூடி விழித்திடாது
நலிந்து போமருந்ததற்கு நயமாய்க்கேளே.

(இ-ன்)

வயிறு பொருமி, சீதமும் ரத்தமுமாக வயிறு கழியும். சுவாசம், கண் சொருகல், சுரம், அடி வயிற்றில் வலி, வியர்வை, கழுத்து சிறிது இழுத்துக் கொள்ளல், மூக்கு நுனியில் வேக் காளம், திடீரென்று பயந்து படுக்கையிலிருந்து எழுதல், கால் கைகள் குளிர்ச்சி, கண்களை எப்போதும் திறக்காமல் மூடியிருத் தல், முதலிய குறிகள் காணப்படின் அது " ஆமகணம்" எனப் படும்.

9. மந்தார கணத்தின் குறிகுணங்கள்

தாழ்ந்து வரும் மந்தாரக் கணத்தைக் கேளாய்
தாக்கி வயிறுப் பிசமாய் மலத்தை கட்டிச்
சூழ்ந்து நளிர் சுரமயக்கம் இருமலுண்டாய்ச்
சுவாச மொடுதலைவேர்வை முகிலுண்ணுது
வாந்திதிடுக் கிட்டலற லிளைத்துப் போதல்
வடிந்து வருமூக்கினற் சலங்கள் மிஞ்சி
யேந்து மிளங் கொங்கை நல்லாய் ! மருந்திதற்கே
இயம்புகிறேன் பலமாக வெடுத்துத்தானே.

(இ-ள்)

வயிறு உப்பிசமாகி, மலம் சிக்கலாகும். குளிர் சுரம், மயக்கம், இருமல், சுவாசம், தலையில் வியர்வை, வாந்தியெடுத் தல், திடீரென்று அலறுதல், உடம்பு இளைத்துப்போதல், மூக் கிலிருந்து நீர்வடிதல் முதலியவைகளுண்டாகும். தாய்ப் பால் குடிக்காது. இவைகள் "மந்தார கணத்தின்" லட்சணங் களாகும்.

10. அந்தக கணரோகலட்சணம்

கொடிதான வந்தக மாங்கணத்தைச் சொல்வேன்
கூறுகின்ற வந்தியிலே கண் தோன்றுது
கடிதான சுரந்தோன்று மிரத்தம் போகும்
காள சந்து பல பலவாய் சத்தம் பேசும்
வடிவான முகந்தானு மஞ்சள் போலா
மார்பு மேடா யெழும்பி மயக்க முண்டா
மிடியான யருசி கண்டு தேகம் வற்றி
மேலான மூளையத்தான் பற்றும் பாரே.

(இ-ள்)

சாயங்காலத்தில் கண் தெரியாது. மிகுதியாகச் சுரம் தோன்றும். மலத்திலிரத்தமும் போகும். காலசதி யேற்படும். மூச்சு பற்பல விதமான சத்தத்துடன் வெளிவரும். முகம் மஞ்சள் நிறத்தையடையும். மார்புக்கூடு மேலெழும்பி நிற்கும். மயக்கம், அருசி, தேக இளைப்பு இவைகளுண்டாகி மூளையையும் பாதிக்கின்றமையால் இதற்கு "அந்தக கணம்" எனப் பெயர்.

11. சுர கணரோகலட்சணம்

வாரான சுரகணந்தான் பெருமை மெத்த
மகத்தான தாக சுரம் பிதற்றல் தாகஞ்
சீரான சரீர மிக விளைத்துப் போகுஞ்
சிக்கிவிடு மலந்தன்னை யிருமலுண்டாம்
வேரான கண் மஞ்சள் சிறுநீர் மஞ்சள்
மிக்க வயிறிரைந்துகந்து மூலை கண்கூடுங்
தாரான திவையெல்லாங் கணத்தின் பேதஞ்
சாற்றுகிறே னவுடதத்தால் சாந்தி தானே.

(இ-ள்)

தேகத்தில் சுரம்காணும், பிதற்றல், தாகம் முதலியவையுண்டாகும். சரீரமிளைத்துப்போகும். மலச் சிக்கலுண்டாகும். இருமல், கண், சிறுநீர் முதலியவைகள் மஞ்சள் நிறமாகும், வயிற்று இரைச்சல், பொருமல் இவைகள் உண்டாகும்.

12. அக்கரக் கணரோகலட்சணம்

இருந்ததொரு வக்கரமாங் கணத்தின் செய்கை
யியம்பு வோர்ந்தாது மெத்தத்துடித்து நிற்கும்
வருந்துகின்ற நாசிவாயாவி தோன்று
மதிமுகந்தான் வெளுத்துவிடுஞ் சுரங்களுண்டாந்
திருந்து தலை நாக்கிவைகள் வெந்து போகுஞ்
சீரிய தோர் மூக்கினுற் சலமுங் காணும்
பொருந்து சிரம் வலித்திடு மெய் குளிர்ந்திருக்கும்
பொல்லாதிதற் கவுடதம் புகலக்கேளே

(இ-ன்)

நாடி மிக்க வேகமாக அடிக்கும். நாசி, வாய் இவ்விடங் களிலிருந்து ஆவி யெழும்புதல் போன்ற உணர்ச்சி, முகம் வெளுத்தல் முதலியவைகளுண்டாகும். சுரம் அடிக்கும். நாக்கு வெந்துபோகும். மூக்கிலிருந்து நீர்வடியும். தலைவலி, உடலில் குளிர்ச்சி முதலியவைகளுமுண்டாகும்.

13. குன்றியக்கரகண இலட்சணம்

மாதேகேள் குன்றியக்கர கணத்தின்
வாறு கேள் சிறு நீர்தான் மஞ்சள்ளாமப்
போதே தானிடைக்குமேல் சுரமுங்காணும்
பொல்லாத விருமலுடன் சுவாசங்காணும்
ஓதாமற்குரல் கம்மி வெளுக்குந்தேக
மூலர்ந்து விடுந்தாக மன்னதுவேஷமுண்டாஞ்
சூதாகியீரல் வெந்து புண்ணுய்ப் போகுஞ்
சுளுவாக மருந்திதற்குச் சொல்லுவேனே.

(இ-ள்)

மூத்திரம் மஞ்சள் நிறமாகும். இடுப்பிற்கு மேல்பாகத் தில் சுரம் காயும், இருமல், சுவாசம், குரல் கம்மல், தேகம் வெளுக்குதல், இளைப்பு, சாப்பாட்டில் விருப்பமின்மை முதலி யவைகளுண்டாகும். ஈரல்குலை வேக்காளத்துடன் புண்களும் ஏற்படும்.

14. ஊது கணக்குறிகுணம்

காதுடன் கண்ணுடம்பு கனக்கவே வீங்கும் வற்றும்
போதவே நாவும் புண்ணுய்ப் பொருந்திய சுரமு
[முண்டாம்
வேதுகை காலுஞ் சோர்ந்து வெளுத்திடும் அன்னங்
[தன்னை
ஊது நற் கணமாமென்றே உரைத்தனர் முனிவர் தாமே.

(இ-ள்)

காது, கண்கள், உடம்பு, இவ்விடங்களில் வீக்கமுண்டாகும். பின்பு அது தானாகவே குறையும். நாக்கில் புண்கள் உண்டாகும். சுரம் ஏற்படும். கை, கால் இவைகள் பலஹீனமாகும். உடல் வெளுத்துவிடும். அன்னத்தைத் தள்ளிவிடும். இக்குறிகளால் "ஊது கணம்" என்று தெரிந்து கொள்ளவும்.

15. இரத்தகணத்தின் குறிகுணம்

நாடியயர்ந்தேயுளம் வாடி மெத்தவு நாச பசி
கூடியசனம் புசிக்க வொட்டாது குழந்தைகட்கே
ஓடிய ரத்த மலந்தனிற் சேர்ந்துறு மூலமதால்
சாடிக்கும் ரத்தகணமெனவே முனிசாற்றினரே.

(இ-ள்)

நாடியின் நடை பலஹீனமாகும். மனம் வாட்டமேற்படும். பசியெடுக்காது, ஆகாரத்திலும் இச்சையின்மை, மலத்தில் இரத்தம் கலந்து விழுதல் இவைகளினால் "இரத்தகணம்" என்று அறியவும்.

---

4. கரப்பான் ரோக வரலாறு

பெருகுஞ் சோள மிறுங்கும் பெருங்கம்பு
வரகு காருடன் வாழையின் காயொடு
உரைகொள் பாகல் கெளிற்று மீனுண்டிடில்
விரிவதாய்க் கரப்பானுமிகுந்ததே.

(இ-ள்)

சோளம், கம்பு, வரகு, காரரிசி, வாழைக்காய், பாகற்காய், கெளுற்றி மீன் இவைகளைத் தாயார் அதிகமாகச் சாப்பிடுவதினாலும் அல்லது குழந்தைகள் சாப்பிட்டாலும் கரப்பான் ரோகம் உண்டாகுமெனக் கூறப்பட்டிருக்கிறது.

44 கெ. சுவடியிலுள்ள செய்யுட்கள் கவர்மெண்ட் பிரஸ் பதிப்பு "பாலவாகடம்" செய்யுட்களாகவே இருப்பதினால் இவ்விடத்தில் அச்செய்யுட்களின், பொருள் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. வாதக்கரப்பான் இலட்சணம்

உடம்பிலுள்ள சிற்சில நரம்புகளில் வேதனை, உடம்பு வீக்கம், கடுப்பு வலிதாங்காமலழுதல், உடம்பின்மேல் நெற்பொரியிட்டாற்போல் புண்கள் தோன்றுதல், சிறிது நாள் சென்றபின் அவை பழுத்து உடைதல், திமிருடன் சுரமடித்தல், நாவறட்சி, முதலியனவைகளேற்பட்டாலது "வாதகரப்பான்" என்று அறிந்துகொள்க.

2. பித்த கரப்பான் இலட்சணம்

கடுமையான தலைவலி, உடம்பில் சொறி உண்டாகும், சுரம், வாந்தி, இவைகளுடன் உடம்பு சிவப்பு நிறமாக ஆகும். கண்கள் பச்சை நிறமாக ஆகும், குரல் கம்மல், மலச்சிக்கல் இவைகள் உண்டாகும்.

3. சிலேத்தும கரப்பான் இலட்சணம்

குரல் கம்மிப்போதல், நெஞ்சு புண்ணுதல், தலைவலி, வாய் வேக்காளம், புண்கள் நீர் கொண்டு நீரளுதல் கடுப்பு வலி இவைகளேற்படும்.

4. அரி கரப்பான் இலட்சணம்

தொடை இடுக்குகளில் ரணம் உண்டாகி அதிலிருந்து அதிகமான சலம் வடியும். புண்ணில் தசை மிகக்கரைந்து வலியுண்டாகும். நாள் செல்லச் செல்ல உடம்பு இளைக்கும்.

5. பொரி கரப்பான் குறி குணம்

அடிக்கடி கன்னத்தில் அடித்துக்கொள்வதாலேற்படும் வீக்கத்தைப் போல உடம்பு முழுவதும் சிவப்பு நிறமுள்ள தடிப்புகள் உண்டாகும். சிறிது நாள் சென்று அவை பழுத்து

உடைந்து, தாங்கமுடியாத வலியுண்டாகிப் பின்பு குளிர்ச்சி உண்டாகும், நாவறட்சி, நிலை தவறுதல் முதலியவைகள் ஏற்படும்.

6. வால கரப்பான் இலட்சணம்

கால், கை, துடையிடுக்கு இவ்விடங்களில் வலியுண்டாகி, பின்பு அது விஷகடியில் உண்டாவதுபோல் உடம்பு முழுவதும் நடிக்கும். பின்பு அவை, சுரந்து, உடம்பு இளைத்து இரணங்களாகும். நாக்கு, தொண்டை முதலிய இடங்களிலும் ரணம் உண்டாகும். சுரம் காணும்.

7. செங்கரப்பான் இலட்சணம்

சுரம், உடம்புக்கடுப்பு, வீக்கம், உடம்பு கன்றிப்போதல், கதகதப்பு, உடம்பில் அரிப்பு ஏற்படுதல், உடம்பு முழுவது வியர்வைக் குருபோல காணுதல், முகம் கருப்பாகி உடம்பு சிவப்பாகுதல், முதலிய குறிகள் கண்டாலதைச் 'செங்கரப்பான்' என்று அறிந்துகொள்ளவும்.

8. மண்டைக் கரப்பான் இலட்சணம்

மண்டையில் நமைச்சலேற்பட்டு அதைச் சொரிந்தால் அங்கு புண்களேற்பட்டு, காதில் சீழ் வடிந்து வடிந்து ஆறிப்போகும். தலைவலியுடன், மூக்கினின்று நீர்வடியும். உடம்பு இளைத்துப் பல், சுரம் காணுதல், குரல் வளையில் தினவு இவைகளும் உண்டாகும்.

9. ஓடு கரப்பான் இலட்சணம்

கீல்களில் வலி ஏற்பட்டு நீட்டவும், முடக்கவும் கூடாமற் செய்வதுடன் நரம்புகளில் இசுவைப்போன்ற வலியும் குத்தலும் ஏற்படும். மலச்சிக்கல், உடம்பெங்கும் அரிப்பு, தடிப்புக் காணுதல், வீக்கம், இக்குணங்களைக் கண்டால் "ஓடுகரப்பான்" என அறியவும்.

10. சட்டை கரப்பான் இலட்சணம்

கீல்களில் வலியுண்டாகி, உடம்பெங்கும் கள்ளிப்பூவைப் போல் சிரங்குகள் உண்டாகும், அவற்றிலிருந்து நீர் வடியும், மலச்சிக்கல், சிறிதளவு சுரம், தலைவலி, அன்னத்துவேஷம் முதலியவைகளும் உண்டாகும்.

11. வெடி கரப்பான் இலட்சணம்

உடலெங்கும் விக்கமுண்டாகும். அசைவுள்ள கீல்களும் வீங்கி அது பழுத்து உடையும், சிறிதளவு சுரம், தலைவலி, உடம்பெங்கும் அரிப்பு, முதலிய குணங்களைக்கொண்டு 'வெடி கரப்பான்' என்றறியவும்.

12. கிரந்தி கரப்பான் இலட்சணம்

நெஞ்சையடைத்து, உடம்பு வீங்கி, மேல்மூச்சு வாங்கும். உடம்பு பற்பல நிறங்களையடையும். தொண்டைக்கட்டு உண்டாகி உடலெங்கும் வலி உண்டாகும். இருமல், சிறு தொனியாய் அழுதல், அதனல் குரல் கம்மல் இவைகளுண்டானுல் 'கிரந்தி கரப்பான்' என்று அறியவும்.

---

5. கிரந்தி ரோகம்

செங்கிரந்தி இலட்சணம்

குழந்தை செனித்த பின் அது அழாது. நன்முகப் பார்க்காது. மலஜலம் விடாது. உடம்பை அசைக்காமல் அப்படியே கிடக்கும்.

கருங்கிரந்தி லட்சணம்

குழந்தை நன்முக அழும். தாய்ப்பால் குடிக்காது. வயிறு ஊதி உடம்பு கன்றிப்போய் மூறுக்கிக் கொள்ளும். கண் விழிக்காது. உடம்பு கருப்பு நிறமாக இருக்கும். இந்த லெட்சணங்களைக் கொண்டு "கருங்கிரந்தி" என்று தெரிந்து கொள்ளவும்.

---

6. ஆமரோக லட்சணம்

உண்ட பாலுமெதி ரெடுக்கும் உடம்பும் பற்பல விதந்
[தோன்றும்
அண்ட வயிற்றிற் கனமுண்டாயதிகச்சுரமு முழி
[சிறுக்கும்
விண்ட மலத்தைக் கட்டிவிடும் விழியும் வளைந்து கால்
[குளிரும்
துண்ட மான வாமமென்றே தோன்றி மருந்து செய்
[வாயே.

(இ-ள்)

அருந்திய தாய்ப்பால் வாந்தியாகும். உடம்பு பற்பல நிற மூள்ளதாகத் தோன்றும். குழந்தை வயிறு கன த்துக்காணும். அதிகமான சுரம், கண்குழிவிழுதல், மலச்சிக்கல், கால் குளிர்ச்சி முதலியவைகள் ஏற்பட்டாலதை "ஆமதோஷம்" என்று அறியவும்.

---

7. கீரிப்பூச்சி யுற்பத்தி வரலாறு

உற்றதோர் மலங்கட்டுதலுண்மையாய்க்
குற்றிலைக்கறி நித்தமுங் கூட்டுதற்
பெற்ற தாயொடும் பிள்ளையோடாயினுஞ்
சிற்றயிர்க் கீரிப்பூச்சியுஞ் சேருமே.

(இ-ள்)

மலச்சிக்கல் உண்டாகி, இலைக்கறிவகைகளையும் தினந்தோறும் சேர்த்துக்கொள்வதால் தாயாராகிலும் சரி குழந்தையாயினும் சரி அவர்களுக்குக் கீரிப்பூச்சி உடலில் சேரும்.

கீரிப்பூச்சி ரோக இலட்சணம்

கண்ணெடு பீளைசாறி கையொடு தலையுங்கோதி
திண்ணெனச் சிலத்தில்காது செவியொடு தேய்த்துச்
[சால
பண்ணுள குரலுந்தாழ்ந்து பாலகன் தேயுமாயில்
உண்மைகாண் கீரிநோயென்றுரைத்தன ருலகத்
[தோரே.

(இ-ள்)

அடிக்கடி கண்களில் பீளைகட்டும். கையினால் தலையைத் தடவும். காதுகளைப் பிடித்து இழுத்துக் கொள்ளும். குரல் கம்மிப்போய் குழந்தையும் இளைத்து வந்தால் "கிரி நோய்" என்று அறியவும். இதைத்தவிற, அடிக்கடி வயிறு வலித்துப் பேதி யாகுதல், அன்னத்துவேஷம், சுரம், வாந்தி, நெஞ்சு, மார்பு இவைகள் மேடாகுதல், சூனை வயிறு தட்டுதல் இக்குறி களினாலும் "கிரி நோய்" எனக்கொள்க.

---

8. கக்குவான் ரோக காரணங்கள்

சேருங்காய் கனி செய்பழஞ் சோறுபால்
மோருடன் தயிர் மொய் புளிப்புண்டியாற்
சாகுமே பல நீரினிற்ருனத்தாற்
காருங் கோழையின் கக்குவானென்பதே.

(இ-ள்)

காய், பழம், பழய அமுது, பால், மோர், தயிர், புளிப் புள்ள ஆகாரம் இவைகளை அதிகம் சாப்பிடுவதாலும் பலவித தண்ணீர் வகைகளையும் உபயோகிப்பதாலும் கோழையோடு கூடிய கக்குவான் ஏற்படுகிறது.

கக்குவ ரோக இலட்சணம்

வார்செறிவிலாவில் மார்பில் வந்திடுங்கோழை நெஞ்சிற்
சாரவே செனிப்புண்டாகிச்சளியொடு புகைச்சலுண்டாம்
மூரவே யிருமலாகி யுண்டிடுஞ் சோறுங் கக்குங்
காரமாயிளைக்கு மேனி கக்குவான் குணமிதாமே.

(இ-ள்)

விலா, மார்பு இவ்விடங்களில் கோழை கட்டும். நெஞ்சில் சளிக்கட்டு ஏற்பட்டு/ புகைச்சல் உண்டாகும். அடிக்கடி இருமல் உண்டாகி/ சாப்பிட்ட ஆகாரத்தை வெளியே கக்கி விடும். உடல் இளைத்துப்போகும். இதையன்றி "கொக்குக் கொக்கெனக் கோழையிருமலாங் கக்குவாய்" என்றபடி இரவு நேரங்களில் இருமல் அடுக்கடுக்காக பல தடவைவந்து கடைசி யில் பெருமூச்சில் முடியும். இது 45 நாட்கள் குழந்தையைக் கஷ்டப்படுத்தும்.

உ

ஹரி: ஓம் நன்முக.

காப்பு

வேகமா நெறி சேரும் வினைகளுந்
தாக போக விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியினுல் வருந்துன்பமும்
போக வாணை முகத்தினைப் போற்றுவாம்.

சரபேந்திரர் வைத்திய முறைகள்

(கர்ப்பிணி, பால, ரோக சிகிச்சை)

---

1. சூதுவாகாமல் இருப்பவர் கலுக்கு மருந்துகள்.

1. சூதுவாகாதவர்களுக்கு மருந்து

சிற்றிலையு மம்மான்பச்சரிசிவேரு
மிரு காசிடை தீ வெண்ணீர்
பற்றியரைத்தேழுநாள் பருகிடவும்
தெருளுவள் காண் பாவை யென்றே
கொற்றவனுகிய சரப குணபதி செய்
முறையிதனைக் குறிக்கொள்வோர்கள்
நற்றவஞ் செய்தவரெனவே மற்றவரெல்
லா முகந்து நண்ணுவாரே — (க)

(இதன் பொருள்)

நெய்சட்டி (வேர்)—2 காசிடை
அம்மான் பச்சரிசி வேர்—2 காசிடை

இவற்றை வெண்ணீர் விட்டு நன்றாக அரைத்து 7 நாள் காப்பிடவும்—சூதுவாகாதவர்கள் சூதுவாவார்கள்.

2. மாதவிடாய் வியாதியினால் வரா திருந்தால்

மாம்பட்டை மேற்புராணி சிவியுள்
பட்டை நறுவளிப்பழுப்புக்
காம்பு நல்ல பாம்புசட்டை வகை யொன்றுக்
கே பல நால்கடுகத்தூளி செய்
தாம் பரிசு பொட்டணங்கட்டிப் புகையிட்
டவள் யோனியதனிற் காட்டத்
தேம்பலின்றித் தூரமாங் கைகண்ட
திம் முறையைச்செப்பினேமே— (உ)

(இ-ள்)

மாம்பட்டையின் மேல் புராணி நீக்கி
உள்ளிருக்கும் மெல்லிய பட்டை —4பலம்
நறுவளி இலைப் பழுப்பின் காம்பு —4பலம்
நல்ல பாம்பு உரித்தசட்டை —4பலம்

இவற்றை நன்றாக நுண்ணிய தூளாகச்செய்யவும். இத் தூளைச் சிறிய பொட்டணமாகக் கட்டி நெருப்பில்போட்டு வியாதியுள்ள ஸ்திரீயின் யோனிவரையில் காட்டிவர ஸ்திரீ மாதவிடாய் ஆவாள்

3. தீட்டாகாமலிருந்தால் தீட்டாக மருந்து

ஆண்பனையின் குருத்தோலை சுட்டுப்பா
லிட்டருந்தினுற் றீட்டாவள்
காண்பீரவ்விரவுண்ணு திருந்து மறு
நாளுழக்கு கவிழ்தும்பைப்பூ
வுண் டிசைந்து பசுவின் பாலுடன் வடக்குத்
திசை நோக்கி யுண்டாற் பிள்ளை
யாண் பெணு முண்டாமிது கைகண்டதெனச்
சரபேந்திர ரருள் செய்தாரே— (ங)

(இ-ள்)

(1) ஆண்பனையின் குருத்தோலையைச் சுட்டுக் கரியாக்கிப் பாலுடன் சேர்த்து அருந்தினால் அன்றே தீட்டாகுவாள். (2) அன்றையதினம் இரவு சாப்பிடாமலிருந்து மறுநாள் ஒரு உழக்குக் கவிழ்தும்பைப்பூவைக் கசக்கிப் பாலில் போட்டு வடக்குத்திசையை நோக்கி உட்கார்ந்து சாப்பிட்டால், ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் பிறக்கும். கை கண்டது.

2. தீட்டாகும் போது உண்டாகும் வலிக்கு மருந்துகள்

4. தீட்டானவள் வயிற்றுவலிக்கு மருந்து

உள்ளி யொரு பல்லு மிளகோர் பத்து
நுணுக் கொழுந்து மோர் சம்பீரத்
துள்ள சிறு காயளவு முதகமத
னுலரைத்து மோர் மூன்றுநாள்
மெள்ள முழுகினவுடனே விரைந்தீரந்
துவட்டா முன் விழுங்கச் செய்து
கொள்ள வுமுக்கந்தாயங்குக்கி வலி
குலையுமுப்புப் புளிகொள்ளாதே —

(இ-ள்)

தோல் நீக்கிய உள்ளிப்பூண்டு— 1 பல்லு
மிளகு—10 (எண்ணிக்கையில்)
நுணுக் கொழுந்து—ஒரு சிறிய எலுமிச்சங்காய்ப் பிரமாணம்.

இவற்றைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துத் தீட்டான மூன்றாவது நாள் ஸ்நானம் செய்து தலை துவட்டுவதற்கு முன் சாப்பிடச் செய்யவும். வயிற்றுவலி தீரும்.

பத்தியம்:—

அன்று உப்பு, புளி தள்ளவும்.

5. பெரும்பாட்டுக்கும், தீட்டின்போது உண்டாகும் வயிற்று வலிக்கும் மருந்து

பெரும்பாட்டு வயிற்று வலிப் பிணி தீரப்
பெண்பாலார் பிரியமாக
வருந்து கலத்தலம் பியநீரதனியோர்
சட்டியில் வார்த்தனேக நாளாய்
யிருந்த வொதியின் சிவந்த பட்டையினை
நருக்கியிந்த வெச்சி நீரிற்
றிருந்த வேயூற வைத்த நீரினுற்
கால் கழுவிற் செல்லு நோயே—

(இ-ள்)

பெரும்பாடு, வயிற்றுவலி இவை தீரவேண்டுமானால் அந்த நோயுள்ள ஸ்திரீயின் சாப்பிடும் கலத்தைக் (தட்டு) கழுவிய தண்ணீரை பத்திரமாக ஒரு சட்டியில் வார்த்துக் கொண்டே வரவும். பின்பு, முற்றிய சிவப்பு நிறமுள்ள ஓதியன் பட்டையைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அந்த எச்சில் நீருடன் ஊறவைக்கவும். நோயுள்ள ஸ்திரீ இந்த நீரினால் தினந்தோறும் 'கால் கழுவிவர' குணமாகும்.

பெரும்பாடு = Menorrhagia

6. சூதகம் வந்தபோதெல்லாம் வலித்து இரத்தம் விழுவதற்கு மருந்து

சூதகமாம் போதெல்லாம் வலித்திரத்தம்
வீழ்வதற்குஞ் சொலு நாளுக்குட்
பேதகமாய்க் கெடுத் தப்பி வலிக்கினுஞ்
சூதக்கிராணி யென்று பேராம்
ஆதலினுலிதற்கு மருந்தறிந்து சொன்னார்
சரபேந்திர ரருளினுலே
மாதவிடாய் வலி இந்த மருந்தினாற்
போம் வண்ணம் வகுத்துத்தானே — (கூ)

அதிவிடையஞ் சாதிக்காய் கிராம்பு வகைக்
கோர் வராகனெடை யாராய்ந்த
புதிய கழாயத்தினிற் சீரகமுடிந்து
போடு நாகரப் புராணி
சதிரதாய்ச் சீவியுப்புத்தடவு புடம்
போடு சுக்குத் தட்டிப் போட்டு
அதை யொன்றுய்க் காய்ச்சியதில்
வசம்பு சுட்டபொடி தூவுண்ணகலு நோயே — (எ)

(இ-ள்)

சூதகமாகும் போதெல்லாம் வலித்து இரத்தம் விழுந் தாலும் வழக்கமாக ஏற்படும் நாட்களுக்குள் கெடுத்தப்பி வலித்தாலும், இதற்குச் "சூதகக் கிராணி" என்று பெயர்.

இவ்வியாதிக்கு மருந்தை நன்கு அறிந்து செய்தல் வேண்டும்.

அதிவிடயம்	—	1 வராகனெடை
இராம்பு	—	,,
சாதிக்காய்	—	,,

இவைகளைக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துக் கஷாயமாகச் செய்து அதனுடன் ஒரு வராகனெடை சீரகத்தை ஒரு முடிச்சாகக்கட்டி அதில் போட்டு எரிக்கவும். பின்பு, நன்றாக உலர்ந்த சுக்கை மேல்புராணி நீக்கி, அதன்மேல் உப்பைக் கரைத்துத் தடவிச் சிறு தீயில் புடம் போட்டெடுத்து, இதைச் சூரணித்து வசம்பு சுட்டகரியுடன், வெந்த சீரகத்தையும் சேர்த்து அரைத்து ஷ கஷாயத்தில் குழப்பி நோயுள்ளஸ்திரீ பருகவும்.

---

3. கருத்தரிக்கவும் மலட்டுப்புழு விழவும் மருந்துகள்

(Sterility)

7. கர்ப்பந்தரிக்க, மலட்டுப்புழு விழ, மருந்து

வெல்லமோருண்டை குப்பைமேனிச் சாறு
முக்குடனே மிகுந்தி காயஞ்
சொல்லும் வராகனெடையொன்றுங் கலந்து
கலசத்திலிட்டுத் துணியான் மூடி
மெல்ல வெயிலிடை வைத்து விலகுநாள்
மூன்று முணவே மலட்டுப்
பொல்லாத புழு வீழு மூன்று முறை
செயிற் பூவை பொருந்துஞ் சூலே. (அ)

(இ-ள்)

வெல்லம் 1 கட்டி.
குப்பைமேனிச் சாறு ஒரு உழக்கு.
சுத்தமான பொரித்த பெருங்காயம் 1 வராகனிடை

இவைகளை ஒன்று கலந்து ஒரு புதுச்சட்டியிலிட்டு, ஒரு வெள்ளைத் துணியினால் மூடி, இளம் வெயிலில் வைத்து, மாத விடாய் காலத்தில் மூன்று நாளும் சாப்பிட்டுவரக் கருப்பையி லுள்ள மலட்டுப் புழு விழும். மூன்று முறை செய்தால் ஸ்திரீ கர்ப்ப மடைவாள்.

8. மலட்டுவலி நீங்க, பிள்ளையில்லாதார்க்குப் பிள்ளையுண்டாக மருந்து

கழற்கொடி மேற்படர்ந்த சிறு குறிஞ்சியோ
டமுத வல்லி கைத்த பாகல்
செழித்த பிரமிய மாடாதோடையிவை
யைங்கிலையின் சேர்த்திடித்தே
பிழிந்த சாறதை யெடுத்துக் கழற்கொடித்தோ
லரைத்த தனிற் பின்பு கூட்டி
முழுகுநாலா நாளிற்றண்ணீரில்
நின்றுணச்செய் முறையினுமே. (கூ)

(இ-ள்)

கழிற்சிக்கொடியின் மேல் படர்ந்த சிறு குறிஞ்சி இலை
சீந்தில் இலை.
கசப்புப் பாகல் இலை
பிரமி இலை
ஆடாதோடை இலை

இவைகள் வகைக்கு ஒரு பிடி. எடுத்து எல்லா வற்றை யும் ஒன்றுகச் சேர்த்திடித்துச்சாறு பிழிந்து வைத்துக் கொள் ளவும். பின்பு கழற்சிக்கொடித் தோலைத் தண்ணீர் விட்டு ஒரு (கழஞ்சு அளவு) நன்றாக அரைத்து மேற் சொன்ன சாறுடன் குழப்பி மாதவிடாயின் நான்காம் தினத்தன்று தண்ணீரி லிருந்துகொண்டு சாப்பிடச்சொல்லவும். மலட்டுவலி தீர்ந்து குழந்தையுண்டாகும்.

9. பிள்ளை உண்டாக மருந்து

இலைக்கள்ளிவேர் சிறு பாக்கள வரைத்துப்
பசுவி னெயினிட்ட பின்பு
நலமாக முழுகு நாலா நாளே மூத
லேழு நாளருந்திற்

பலனுகும் வனிதையருக்கே கர்ப்ப
மது தானும் பலிதமாகும்
சொலு மிதனுக்காகிய பத்தியம் பசுவின்
பாலன்னந் துய்க்கலாமே. (ம)

(இ-ள்)

இலக்கள்ளிவேரை நன்முக அம்மியிலிட்டு அரைத்து அதில் ஒரு சிறுபாக்களவு எடுத்துப் பசுநெய் கூட்டி மாத விடாயின் நாலாவது நாள் முதல் ஏழு நாள் தினந்தோறும் காலையில் சாப்பிடவும். ஸ்திரீகளுக்குக் கர்ப்பம் உண்டாகும்.

இதற்குப் பத்தியம்:—

பசுவின்பால் சாதம் சாப்பிட்டு வரவும்.

10. மலட்டுப் புழு விழ மருந்து

வெள்ளுளி யோமஞ் சிற்றரத்தை சுக்கு
பெருங்காய மிளகி தெல்லாங்
தள்ளாதே கொம்மட்டிச் சாறதனி
விட்டரைத்துத் தான் கலந்து
மொள்ளத் தாளிதஞ் செய்து விழுங்கினுங் கொம்
மட்டியிலை விரைந்தரைத்து
மொள்ளிழையார் வயிற்றினிடை கட்ட
மலட்டுப்புழு வீழ்ந் தொழியுந்தானே (ஙக)

(இ-ள்)

வெள்ளைப்பூண்டு.
ஓமம்
சிற்றரத்தை
சுக்கு
பெருங்காயம்
மிளகு

இவைகளைச் சமமெடுத்துக் கொம்மட்டிச் சாறு விட்டுக் கலந்து நன்முக அரைத்துச் சிறிது தாளித்து அப்படியே விழுங்கிவிட்டுக் கொம்மட்டி இலையை அரைத்து வயிற்றில் கட்ட மலட்டுப் புழு விழும்.

குறிப்பு:—

கும்மட்டி = பேய்க் கொம்மட்டி.

11. பிள்ளை உண்டாக மருந்து

பருத்தியினற் கொட்டை கொட்டைப் பாக்களவா
யரைத்ததனைப் பாங்காய் வாங்கி
யொரு கோழி முட்டையினிற் கரைத்துணவிப்
பிருதித் தோலுடனே வீழுந்
திரமாக மறுமாதஞ் செப்பு நெருஞ்
சியின் வேர் பால் சேர்த்தரைத்தே
யருந்திடப் புத்தி ரருண்டாமாயிழைக்கு
மனமகிழ்ச்சியா குந்தானே (ய உ)

(இ-ள்)

பருத்திக்கொட்டையை ஒரு கொட்டைப்பாக்கள வெடுத்து அரைத்து, அதை ஒரு கோழிமுட்டை வெள்ளைக் கருவில் குழப்பிச் சாப்பிட, கர்ப்ப விப்புருதி[1] தோலுடன் விழும் அடுத்தமாதம் செப்பு நெரிஞ்சியின் வேரை பால் விட்டரைத்தே சாப்பிடக் குழந்தை உண்டாகும். தாயாருக்கும் சௌக்கியமுண்டாகும்.

12. மலட்டுப்புழு விழ மருந்து

எருக்கம் பழுப்புக் கொடிக் கழலோ
டாடா தோடையிலை பிரண்டை
வருக்கஞ்சிறு பாகற் குறிஞ்சியிலை
யின்சாறும் வடித்திருத்து
பருத்துச் சிவந்த பசுவின் பா
லுழக்குங் கூட்டிப் பருகிடவே
யிருக்கும் புழு வீழ்ந்திடும் வனிதைக்
கிசைந்து கருப்பமுண்டாமே. (ய ங)

[1] கர்ப்ப விப்புருதி = கர்ப்பம் உண்டாகாமல் தடுக்கும் ஓர் வித்தக் கட்டி.

(இ-ள்)

, எருக்கம்பழுப்பு. கழற்சிக்கொடி, ஆடாதொடை இலை, பிரண்டை, சிறு பாகல், குறிஞ்சியிலை, இவற்றை (ச்சமமெடை யெடுத்துக்) கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துச் சாறு பிழிந்து அதனுடன் நல்ல புஷ்டியுள்ள சிவப்பு நிறப்பசுவின் பால் ஒரு உழக்கும் சேர்த்துச் சாப்பிட, மலட்டுப் புழு வீழ்ந்துவிடும். ஸ்திரீக்கும் கர்ப்பம் தரிக்கும்.

குறிப்பு:—

இலைகளின் ஸ்வரஸம் எல்லாம் சேர்ந்து 1 உழக்கு எடுத்துக்கொள்ளலாம்.

13. மலட்டுப்புழு விழ மருந்து

ஆடாதோடையினிலையுஞ் சிறு குறிஞ்சியிலை
முருக்கினலர்ந்த பூவுங்
கூட வரைத்துச் சிவந்த வான் பாலின்
மூன்று நாள் குழப்பியுண்ண
வாடி மலட்டுப் புழுவும் வழுவி
விழுமாதினுக்கு மகவுண்டாகும்
ஆடவர் திலகனுஞ் சரபேந்திர
வண்ணலாரருளிதாமே. (டிச)

(இ-ள்)

ஆடாதொடை இலை, சிறு குறிஞ்சி இலை, மலர்ந்த முருங்கைப்பூ, இம்மூன்றையும் சிவந்த நிறமுள்ள பசுவின் பாலிலரைத்துக் குழப்பி 3 நாள் சாப்பிட மலட்டுப் புழு விழும். ஸ்திரீக்கு கர்ப்பமும் உண்டாகும்.

14. பிள்ளையில்லாதபேருக்கு மருந்து

தேங்காயி னெய்யுரி நல்லெண்ணெயுரி
யுமாடா தொடைச் சேர்கா
லோங்கு வேப்பிலைச் சாறு முழக்கி தெலாம்
பாத்திரத் தொன்றுக் காச்சி.
தீங்கிலப் பதமா யெரித்துத் திறமாக
வடித்துப் பன்னிரு நாளுண்ண
மாங்குயிலார் தமக்கு மகவுண்டாகும்
புளி கைப்பு மாற்றச் சொல்லே. (டிரு)

(இ-ள்)

தேங்காயெண்ணெய் — ½ படி.
நல்லெண்ணெய் — ½ படி.
ஆடாதோடைச் சாறு — ¼ படி.
வேப்பிலைச் சாறு — 1 ஆழாக்கு

இவற்றையெல்லாம் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மீதேற்றிப் பக்குவமாக எரித்து வடித்த இந்த எண்ணெயை 12 நாள் சாப்பிட்டுவர அந்த ஸ்திரீக்குப் பிள்ளையுண்டாகும்.

பத்தியம் :—

புளிப்பு, கைப்புப் பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

15. கர்ப்பமுண்டாக மருந்து

தருணிக்குச் சவுக்கிய முண்டாம் பிள்ளை
யுண்டாகுஞ் சந்திர சூரியர்
கிரணத்திலே பிரமியிலைச் சாறு துரி கொள்ளக்
கெற்பமுண்டாம்
வருணத்திலுயர்ந்தோர்க்கு மாதானஞ்
செய்தவ ராமகங்கள் செய்வித்
திரணத்திரையந்த விர்ந்த வெங்கள்
சரபேந்திரனரி சைத்த வாறே. (எக)

(இ-ள்)

பிரமியிலைச் சாறு ½ படி யெடுத்துச்சூரிய கிரணத்திலும், சந்திர கிரணத்திலும் வைத்து, அதைப் பருகிவர ஸ்திரீக்குக் கர்ப்பமுண்டாகும், அதனோடு சௌக்கியமும் உண்டாகும்.

16. கர்ப்பமாக மருந்து

நானழி பிரமியிலைச் சாரு நெய்
நானழி நன்ரு யொன்று
தானுகக் கலந்து கடுக்காய் தான்றிக்
கொட்டை விரைதன்னைப் போக்கி
யீனமிலா விவை யொன்றுக் கிரண்டு பல
மிந்துப்புப் பல மிரண்டு
மானசுக்குப் பல மிரண்டு திப்பிலியும்
பல மிரண்டதாகுந்தானே. (எஎ)

நெல்லி முள்ளி பலமிரண்டு சிறு நாகப்
பூப் பலமுமிரண்டு நேராய்
நல்ல மிளகிரண்டு பலம் பொடித்து நெய்யி
னிற் கிளறி நாளீர்போது
நெல்லிக்காயளவு கொள்ளப் பத்தியம் பா
லுஞ் சோறு நேராயுண்ணில்
வல்லபையாம் பதினெட்டுக் குட்டமும் போம்
வாலியசீய் மகவுண்டாமே. (மஅ)

(இ-ள்)

பிரமி இலைச்சாறு — 4 நாழி
பசுவின் நெய் — 4 நாழி

இவற்றை நன்றாகக் கலந்து கடுக்காய்த் தோல் தான்றிக் காய்த்தோல் இவைகள் வகைக்கு 2 பலம்.

இந்துப்பு — 2 பலம்
சுக்கு — 2 பலம்
திப்பிலி — 2 பலம்
நெல்லிக்காய் வற்றல் 2 பலம்
சிறு நாகப்பூ — 2 பலம்
மிளகு — 2 பலம்

இவற்றை நன்றாகப் பொடித்து நெய்யினில் சேர்த்துக் கிளறிப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு தினந்தோறும் இரு வேளை நெல்லிக்காயளவு, இந்நெய்யை உட்கொள்ளப் பதினெட்டுவிதக் குஷ்டமும் தீரும். ஸ்திரீகளுக்குக் குழந்தையும் உண்டாகும்.

பத்தியம் :—

பால் சாதம் சாப்பிடவும்.

17. பிள்ளையுண்டாகப்புழு விழ மருந்து

துத்தியிலை வாய் பேசாமற் றொழுது
பறித்து நெல்லரிசி
குத்தி யிடித்து நல்லெண்ணெய் வார்த்துப்
பிசறிக் கொண்டிடவே

புத்திரோதயமா மிதை நெய்யிற் புசிக்கப்
பெண் பேறுண்டாகுஞ்
சத்திர பதியாஞ் சரபேந்திரன் சாற்று
மூறைமை தானிதுவே. (யகூ)

(இ-ள்)

துத்தி இலையை வாய் பேசாமல் கடவுளைத் தொழுது பறித்து, நெல்லைக் குத்தி அரிசி செய்து, அதனுடன் நன்றாக இடித்துவைத்துக்கொள்ளவும். இதை நல்லெண்ணெயில் குழைத்துச் சாப்பிட ஆண் குழந்தையுண்டாகும். நெய்யில் குழைத்துச் சாப்பிடப் பெண் குழந்தையுண்டாகும்.

18. பிள்ளையுண்டாக மருந்து

விழுப்பதாந்தினத்திரவு பட்டினியாய்
விடிந்துதய மேவும் போதிற்
பழிப்பிறும்பைப்பூ பசுவின் பாலிலரைத்
துத் தரப் பால் பரிந்து நோக்கி
செழிப்புடனே மூன்று தினந்தின்பவருக்
கன்புள சேய் செனிக்குமென்று
வழிப்படுதல் வயித்தியற்கு மன்னர் சர
பேந்திரனுர் வகுத்தவாறே. (உய)

(இ-ள்)

தீட்டான தினங்கள் மூன்று நாளும் இரவு பட்டினியாயிருந்து மறுநாள் விடியற்காலங்களில் தாமரைப் பூவைப் பசும்பாலில் அரைத்து அம்மூன்று நாளும் பருகிவரக் குழந்தை உண்டாகும்.

இறும்பை = தாமரை

19. மஞ்சிட்டி நெய்

(சூதகனியவும் கர்ப்பமுண்டாகவும்)

மஞ்சிட்டிக் கிழங்கு திரிபலை கிழ்காய்
நெல்லியுடன் வள்ளி மூலம்
மஞ்சள் மரமஞ்சள் அசமுதாக முட
னே திருநாமப் பாலிலேவர்

நஞ்சிறேட்கடையமுக்கிரா கரிப்
பாலே வேர் நன்னரி வேரும்
வஞ்சிக்கடுகு ரோகிணி யொன்றுக் கிரண்
டேகால் வராகனிடை வைத்தே (உக)

பாலிலரைத் தொருபடி நெய் பாலுலு
படியும் மந்தாக்கினியிற் பாங்காய்.
சாலவே மூன்று நாளெரித்து நாலா
நாளிற்முன் வடித்து
மேலுரி வங்காளச்சீனியைக் கழஞ்சின்
அளவாய் விரலாற் கொள்ள
வாலே கர்ப்பமாம் புளிகைப்பதுவாகா
மதுராகார மதாம் வாகாய் (உஉ)

பாலுளுந்து பயறு நெய்யாம் பத்தியமஞ்
சிட்டிநெய்தான் பற்முதாகின்
மேலு மிந்தப்படி வைத்து மூன்று மண்ட
லம் புருடன் விரும்பியுண்டால்
வால மடந்தையர்க்கிடப மாயிருப்பன்
மண்டல மூன்றுளவா மட்டும்
மாலுடனேர் மங்கையரை மருவலா
காது மனையவட்கு நெய்யை (உங)

இன்பமுடன் பகிர்ந்தளித்து யிருவரும்
பத்தியமாக விருக்கவேணு
மன்புடனே சிகித்சை முகிந்தா நாளிற்
கூடியனு பவித்திருந்தால்
மன்பதையோர் தாமகிழ மைந்தருண்டா
மென்று சரபேந்திர மன்னர்
தன் பரிவினுலுரைத்துத் தருமுறைகள்
கற்பவர் நற்றமிழாய்ந்தாரே (உச)

(இ-ள்)

மஞ்சிட்டி
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
கீழாநெல்லி

நீர்வள்ளிக் கிழங்கு (தண்ணீர் விட்டான் கிழங்கு)
மஞ்சள்
மரமஞ்சள்
ஓமம்
திருநாமப் பாலே வேர்
தேட்கடைப் பூண்டு
அமுக்கிரூக் கிழங்கு
கரிப்பாலே வேர்
நன்னரி வேர்
கடுகு ரோகிணி

இவைகளை வகைக்கு $2\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துப் பசும் பால் விட்டு நன்றாக அரைத்து

நெய் — 1 படி
பசுவின் பால் — 4 படியும்

கூட்டி எல்லாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின் மீதேற்றி மந்தாக்கினியினால் 3 நாள் எரித்து நான்காவது நாளன்று பதத்தில் வடித்தெடுத்து, அதனுடன் $\frac{1}{2}$ படி சீனியைப் பொடித்துக் குழப்பித் தினந்தோறும் 1 கழஞ்சளவு இந் நெய்யை உட்கொள்ளவும். ஸ்திரீ கர்ப்பமாவாள்.

இதற்குப் பத்தியம்:—

புளி, கசப்பு நீக்கி திப்பிலி பதார்த்தங்களை சாப்பிடவும். பால், உளுந்து, பயறு, நெய் முதலியவைகளைத் தாராளமாக உபயோகிக்கவும். இதனால் கர்ப்பமுண்டாகாமற் போனால், இந்த நெய்யை புருடனும் 3 மண்டலம் சாப்பிட்டால் தாது புஷ்டி உண்டாகும். ஆனால் மும்மூன்று மண்டலம் வரை சேர்க்கை கூடாது.

இதை ஸ்திரீயும், புருடனும் சாப்பிட்டு இருவரும் பத்தியமாக இருந்து சிகித்ஸை முடிந்தபின் சேரப் புத்திரப்பேறு உண்டாகும்.

தேட்கடை — இது ஒரு பூண்டு இனம்.

---

91 கெ. சுவடியில் "பெருங்காயமும்" சேர்க்கப்பட்டிருக்கிறது. வள்ளிக்கிழங்குக்குப் பின்பு 'வள்ளி' என்பது 'நீர்வள்ளி' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

20. பிள்ளை உண்டாக மருந்து

(மஞ்சிட்டி நெய்—வேறு)

கூறிய மண்டல மூன்று கொண்டுமது
ராகாரங் கொளக்கருப்ப
மேறிடும் விருத்தியதா மின்னமொரு
வித மஞ்சிட்டிக் கிழங்குந்
தேறிங்கு மரமஞ்சள் தேள்கடை
யமுக்கிரா திருமப் பாலை
மாறில் வேர்கடுகு ரோகிணி கீழ்காய்
நெல்லி நீர்வள்ளி மேதை (உரு)

வெள்ளி தாந்திரிபலை வங்காள சர்க்
கரையோடதி மதுர மோம
மொள்ளிய மஞ்சளுமிதல்லா மோரிரண்டே
காலாங் காசெடை பாலுய்த்து
மெள்ளவே தானரைத்து நெய்நாலுழி
பாலுழி விட்டு மூன்று
நள்ளிரவும் பகலும் கொதியிட்டுச்
செப்புப் பாத்திரத்திலாம் (உசு)

நல்லதனில் வடித்து நெய்யிருந்த
கலசத்திலதை நன்றாயூற்றி
யான்துடனடியவளு மண்டல மூன்ற
ருந்து மட்டும் அணைந்திடாமல்
வெளிரதியும் போற்குணமேவியிடின்
மெல்லியர்க்குக் கருப்பமெய்துங்
காளை போலே புருடன் சரீரபுட்டியா
மதுராகாரங் கொள்ளே (உஎ)

காலாநாள் முழுகி நெய்யு கலலெண்
ணெய் நற்கருப்புக்கட்டி நன்றாய்ச்
சாலவே சாரித்து தன்கையிலதனை
யெடுத்துத் தகு நாண் (ள்) மூன்றுங்
காலமே பகவானை தண்டனிட்டம்
மருந்தருந்திக் கங்குற் போதில்
வாலிப மாம் புருடனுடன் வந்தணை செயாம்
பத்தியம் வண் பாற் சோறே. (உஅ)

(இ-ள்)

ஷி மருந்தை 3 மண்டலம் (135 நாட்கள்) உட்கொண்டு மதுர ஆகாராதிகள் உட்கொள்ளக் கர்ப்பமும் விருத்தியாகும்.

இன்னொரு நெய் :—

மஞ்சிஷ்டிக் கிழங்கு
பெருங்காயம்
மரமஞ்சள்
தேட் கடை
அமுக்குராக் கிழங்கு
திரு நாமப் பாலே
கடுகு ரோகிணி
கீழா நெல்லி
நீர் வள்ளி (தண்ணீர் விட்டாங் கிழங்கு)
மேலைத (பொற்றலை கையாந்தரை)
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
வங்காள சர்க்கரை
அதிமதுரம்
ஓமம்
மஞ்சள்

மேல் சொன்ன மருந்துகள் வகைக்கு $2\frac{1}{4}$ காசிடை எடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்து

பசு நெய் — 4 நாழி
பசும்பால் — ஒரு நாழியும் சேர்த்து

செப்புப் பாத்திரத்தில் எல்லாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி 3 நாள் இரவும் பகலும் கொதிக்க வைத்துக்கொள்ளவும். முதலில் பக்குவமாக வடித்துக் கொண்டு பின்பு நெய் பூசிய ஒரு கலசத்தில் பத்திரப்படுத்தி 3 மண்டலம் காலையும், மாலையிலும், 1 தேக்கரண்டியளவு பசும்பாலில் சாப்பிடவும்.

பத்தியம் :—

ஸ்திரீபோகம் கூடாது. இனிப்பு வகை ஆகாரா திகளைச் சாப்பிடவும். இம்மருந்தினால் ஸ்திரீகளுக்குக் கர்ப்பமும், புருஷனுக்கு வீரிய விருத்தியும், புஷ்டியும் உண்டாகும்.

பிள்ளையுண்டாக வேறு மருந்து

தீட்டாகி ஸ்நானம் செய்த தினத்திலிருந்து காலையில், நெய்யும், நல்லெண்ணெயும் சேர்த்துக் கருப்புக்கட்டி (பனை வெல்லம்) யும் சிறிது கூட்டிக் கையில் குழைத்து, பகவானை ஸ்மரித்துச் சாப்பிட்டு வந்து இரவில் புருடனைக் கூடினால் குழந்தை உண்டாகும். இவ்வாறு மூன்று நாள் சாப்பிடவும்.

பத்தியம் :—

பால் சாதம் உபயோகிக்கவும்.

21. பிள்ளை உண்டாக மருந்து

மங்கள வாரத்தினன்று மகிழ்ந்தெடுத்த
வைவிரலி மதிமை வித்தை
யங்கிதமாம் பசுவின் வெண்ணெயால் விரையைங்
தரைத்துத் தீட்டாநாடொட்டே
யிங்கிதமாய் மூன்று நாளினிதருந்த
வேந்திழையார்க் கெச்சமுண்டாஞ்
சங்கரனுரருளாலென் றெங்கள்சர
வேந்திரனுர் சாற்றினரே (உக)

(இ-ள்)

செவ்வாய்க்கிழமையன்று ஐந்து ஐவிரலி விதையை (சிவலிங்க வித்தை) வெண்ணெயோடு கூட்டி இவைழத்துத் தீட்டு நாள் முதல் மூன்று நாளும் அந்த வெண்ணெயைச் சாப்பிட ஸ்திரீ கர்ப்பமாவாள்.

22. பிள்ளை யுண்டாக மருந்து

கொட்டைப் பாசியை யுலர்த்திப் பொடி செய்து
நாலாநாட் குணவானின் பால்
விட்டுணவுங் கருப்ப முண்டாம் மெல்லியர்க் கென்
றே பொன்னிவியன் சோணுட

திட்ட முடனே யாளு மெங்கள் சரபேந்
திரனுரியல் பதாகக்
கட்டளை செயிம் முறைகள் கைகண்டோர்
மெய் கண்ட கருணையோரே. (கய)

(இ-ள்)

கொட்டைப்பாசியை வெய்யிலில், தூசி நீக்கி உலர்த்திப் பொடி செய்து, தீட்டாகிய நான்காவது நாள் பசுவின் பாலில் போட்டுச் சாப்பிடக் கர்ப்பம் தரிக்கும்.

23. பிள்ளை யுண்டாக மருந்து

இந்துப்புங் காசுக்கட்டியினுடனே
பூவரசம் பட்டையும் மூன்
றுந் தப்பாதே தன்னி லொக்கக் கொண்
டே முழுகு மோர் நாலாம் நாள்
வந்தவுடனே முழுகி யந்தி சந்தி
நாலு நாள் மருந்தை யுண்ணச்
சந்ததியுண்டா மென்று சரபமகிபதி
யுரைத்ததந்தி தாமே. (ஙக)

(இ-ள்)

இந்துப்பு, காசுக்கட்டி, பூவரசம்பட்டை இம்மூன்றையும் தண்ணீரினுல் நன்றுக அரைத்து முழுகிய நாலாந்தினம் முதல், காலையும், மாலையும் நான்கு நாள் இம்மருந்தைச் சாப்பிட்டுவரக் கர்ப்பம் உண்டாகும்.

24. மலடிகளுக்குப் பிள்ளை யுண்டாக மருந்து

முத்தெருக்கஞ் செவிப் பூண்டு பசுவின்
பாலினிற்று வைத்து முறுக்குஞ் சாற
துய்த்த வரைப் படியுடனே பசுவின் நெய்
யரைப் படியு மொன்றுய்ச் சேர்த்து
வைத்து மதி மதுரஞ் சந்தன மேலஞ்
சீரகமும் வகையொன் றுக்கே
யொத்தபடிக் கல்லிட்ட பலமொன்ற
தூட்டி யரைத்துடனிறுத்தே. (ஙஉ)

நாளாநாள் முதற்கொண்டு கொடுத்து வர
மலட்டுப் பூச்சியுமே நைந்து
சூலாகாமற்றடுத்த தோடத்தாற்றுடித்
துநலி விழுந்தோகைக் கென்றே
மாலாகு மலடகலும் மைந்தருண்டா
மென்று சரபேந்திர மன்னர்
நல்லாயுண் முறையுணர்ந் தின்னு
ணுக்க முரைத்தாரிதனை நுவலுவீரே. (கக)

(இ-ள்)

முத்தெருக்கஞ் செவிப் பூண்டைப் பசுவின்பால் விட்டு அரைத்து அதன் சாறு — ½ படி.

பசு நெய் — ½ படி
இவற்றை ஒன்று சேர்த்து
அதிமதுரம்
சந்தனம்
ஏலக்காய்
சீரகம் — இவைகள் வகைக்கு 1 பலம்

நிறுத்து எடுத்துப் பால் விட்டு மறுபடியும் அரைத்துச் சாறு கூட்டிய நெய்யில் குழப்பி அடுப்பிலேற்றிப் பக்குவமாய் எரித்தெடுக்கவும்.

இந்நெய்யைக் குளித்த நாலாவது நாள் முதல் கொடுத்து வர மலட்டுப் பூச்சிக் கொல்லப்பட்டு மலடு நிவர்த்தியாகும், (குழந்தைகளுமி உண்டாகும்.)

25. பிள்ளையுண்டாகப் புழு விழ மருந்து

விசுவசித்து நிலத்தாள வேரரைத்துப்
பால் கரைத்ததனை விரும்பியுண்டு
வசமிகுந்த நாயகனை மருவியனுபவிக்க
வுண்டா மைந்த ரென்றே
யிசை மிகுந்த சரபேந்திர ரெடுத்திசைத்த
விம் முறையை யியல்பாய்த் தெற்குத்
திசையினுத்தமமான சோணாட்டு
நாவலர்கள் செப்புவாரே. (கச)

(இ-ள்)

வேங்கை வேர் (1 கழஞ்சு)
நிலப்பனைக் கிழங்கு (1 கழஞ்சு)

இவ்விரண்டையும் பால் ($\frac{1}{4}$ சேர்) விட்டு நன்றாக அரைத்துச் சாப்பிட்டுக் கணவனோடு சேரக் குழந்தை உண்டாகும்.

26. மஞ்சிட்டி நெய் (தூது தணிய கர்ப்பமுண்டாக மருந்து)

மஞ்சிட்டி கடுக ரோகிணி யுளுந்து
தகர மதிமதுரங் கோட்டம்
நைஞ்ச கொடிமுந்திரிகைப் பழம் போரீச்
சம்பழ நன்னரிவேரும்
மஞ்சள் மரமஞ்சள் பூச்சக்கரை யமுக்கிரா
வசம்போடிங்கும்
விஞ்சு சருக்கரை யோமந்திரிபலை
நீர்வள்ளி வெண்சீரகம் வெட்பாலை — (நிக)

விதமொன்றுக்கோர் கழஞ்சு விதித்துப்
பால் விட்டரைத்து விடு பானற்சே
ரிதினுடனெய்யிரண்டு சேரெடுத்து
விட்டுக் கலந்து பதத்தினிலிறுத்து
மதிகாலமே கொள்ள யோனி, சுக்கில
தோடம், தீட்டாகாத தோட
யிதமாயித் தோடமெல்லாம் விட்டகலுங்
கருப்பமுண்டாம் விழுப்புமாமே (நகசு)

உண்மைக்காண் வாந்தி விக்கலுக்கிராசா
னரிசி தன்னீ யுரலிற்றீட்டிக் கொண்டு
வெண்மையாகக் கிளைந்து கஞ்சி காச்சி
மிகக் குளிரவாற விட்டு விரும்பி வாங்கி
பெண்மையார் கண்ணியுண்ணப் பெலமுண்டாகு
பிராந்தி விக்கல் வாந்தி செய்யிற் பின்னுமிந்தத்
திண்மையாமரிசி தனீப் பொரிமாச் செய்து
சர்க்கரைமாதுளம் பழத்திற்றினப்போம் நோயே
(நஎ)

(இ-ள்)

மஞ்சிட்டி
கடுகு ரோகிணி
உழுந்து
கிரந்தி தகரம்
அதிமதுரம்
கோஷ்டம்
முந்திரிகைப் பழம்
பேரீச்சம்பழம்
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
நீர்வள்ளிக் கிழங்கு
வெண்சீரகம்
வெட்டாலை அரிசி
நன்னாரிவேர்
மஞ்சள்
மரமஞ்சள்
பூமிச்சர்க்கரை கிழங்கு
அமுக்கிராக் கிழங்கு
வசம்பு
பெருங்காயம்
சர்க்கரை
ஓமம்

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்து

பசும்பால் — 4 சேர்
நெய் — 2 சேரிலும்.

போட்டுக் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு, தினந் தோறும் அதிகாலையில் கொள்ள,

யோனி, அல்லது சுக்ர தோஷம், தீட்டாகாத தோடம், இவைகள் அகன்று கருப்பமுண்டாகும்.

(b) வாந்தி விக்கலுக்கு:—

ராசான் அரிசியை உரலிலிட்டு, நன்றாகத் தீட்டி, வெண்மையாக்கிக் கஞ்சிசெய்து, குளிரும்படி நன்றாக ஆற வைத்து, ஸ்திரீயைச் சாப்பிடச் செய்யவும். பலம் உண்டாகும். மேலும் வாந்தி, பிராந்தி, விக்கல் முதலியவை தீரா விடில்,

ராசான் அரிசியை பொறி மாவாகச் செய்து சர்க்கரை கலந்து மாதுளம்பழச் சாற்றில் சாப்பிடத் தீரும்.

27. மலட்டுப் புழு விழ மருந்து

பொன்னுவாரையின் விரையைப் பொருந்த
வரைத்துண் மலட்டுப் பூச்சி தானுந்
தன்னுற் போம் நுரும் புதல்வர் தையல
விழுப்பா மூன்ற தாந்தினத்தின்
மின்னுர் மஞ்சளையரைத்துப் புதுக்குடத்திற்
கரைத்ததனே விரைந்தெடுத்தே
நன்னீராட்டின வுடனே முடக்கத்தான்
றுவைத்திறுத்த நற்சாரத்தே (நூஅ)

சாரமுழக்கதிலெண்ணெய் தானுழக்குச்
சாரித்துத் தராவி யுண்ண
வீரமுடனே பிள்ளே மேவி வரு
மென்றனர்கள் மேற்செவ்வாயின்
வாரமதிலேவரலிக்காய் விரையைத்தான்
வெண்ணெய் மடுத்தரைத்தே
நீர்தனின் முழுகுமுன்ன மூன்றுநாளுணக்
கருப்ப நிலைக்குந் தானே (நூகூ)

(இ-ள்)

(a) பொன்னுவாரை விரையைத்தண்ணீரில் அரைத்துச் சாப்பிட மலட்டுப் பூச்சி விழும்.

(b) ஒரு புதுக்குடத்திற்குள் மஞ்சளையரைத்துத் தடவி அதில் தண்ணீர் விட்டு வைத்து, மாதவிடாயின் மூன்றுந் தினத்தன்று இம்மஞ்சட் தண்ணீரினால் ஸ்நானம் செய்விக்கவும். பின்பு தலை துவட்டுவதற்குமுன்

முடக்கத்தான் சாறு — 1 உழக்கு
நல்லெண்ணெய் — 1 உழக்கு

இவ்விரண்டையும் குலுக்கிச் சாப்பிட ஸ்திரீக்குக் குழந்தை உண்டாகும்.

*(c) செவ்வாய்க்கிழமையன்று ஐவிரலிக்காயின் விதையை வெண்ணெயுடனே அரைத்துத் தீட்டுவந்தாள்மூதல் 3 நாள் சாப்பிட்டுவரக் கர்ப்பம் நிலைக்கும்.

---

*குறிப்பு:— இம்மருந்து ஏற்கனவே 21 செ. முறையில் கூறப்பட்டிருப்பினும், இதனால் ஏற்பட்ட கர்ப்பம் சிதைவின்றி நிலைப்பதற்காக இங்கு கூறப்பட்டிருக்கிறது போலும்.

4. கர்ப்பம் தரித்த பின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள்

28. இடுப்பு நோவுக்கு மருந்து

அரைப்படி கருங்குருவையரிசி மா
வதிலே முத்தருக்கம் வேரை
நருக்கி யரைத்துக் கலந்து களிக் கிளறிப்
பனை வெல்ல நறு நெய்யிட்டு
தருக்கியுண்ண விடுப்பு வலி தவிரு மெனச்
சரபேந்திர சதுரர் சொன்ன
வருக்க முறை யுணர்ந்தவரே வயித்தியரின்
முக்கியரென மதிப்பர் தாமே. (சம)

(இ-ள்)

கருங்குருவை அரிசி மாவு — ½ படியுடன்

முத்தருக்கம் வேர் தனை (ஒரு விளங்காயளவு)யும் நன்றாகத் துண்டு துண்டாக நறுக்கிச் சேர்த்து அடுப்பின் மேலேற்றித் தண்ணீர் விட்டுக் களியாகக் கிளறிப் பனைவெல்லமும் (1 விளங்காய் பிரமாணம்) சுத்தமான புத்துருக்கு நெய்யும் விட்டுச் சாப்பிட இடுப்பு வலி சாந்தப்படும்.

29. கெற்பிணி வாதத்திற்கு மருந்து

சீரகந்திப்பிலி பொடித்து வெல்லத்தி
னுதல் செழுந் தேனினுதல்
லோருள்ளங் கைக் கொண்ட துண்டிடக்
கெற்பிணி வாதமுடனே தீரு
மாரணங்குக் காரோக்கியமப் பொழுதே
யாமென்ன வளகை வாழு
மோரருஞ் சரபேந்திரனிவ்வுல
கோருக்கிதமாயியம்பினரே. (சக)

(இ-ள்)

நற்சீரகம், அரிசித் திப்பிலி இரண்டையும் சம எடை பொடித்து வெல்லத்திலோ அல்லது நல்ல தேனிலோ கலந்து ஒரு உள்ளங்கை கொண்டது சாப்பிட கர்ப்பிணி வாதம் உடனே தீரும், ஸ்திரீக்கும் ஆரோக்கியமுண்டாகும்.

30. கெற்ப விப்ருதிக்கு மருந்து

வெள்ளே வெங்காயத்தோலை விடுத்த
பருப்பது நாழி மிளகு நாழி
யுள்ளபடி சதுரக் கள்ளிப் பாலை யூற்
றியரைத் தொரு நாள் மட்டு
மெள்ளிள வெயிலிடை வைத்த தெடுத்திரு
சேரிளங் கொதி கொளெழிலானெய்யி
லள்ளியிடச் சிறு தேக்குஞ் சுத்தி செய்
வாளப்பருப்போட ரத்தையாமே, (சஉ)

ஆமே கெந்தக முடனுல் வகை வகைக்
கோர் பலமதாகச் செய்து
தாமதமில்லா மலுள்ளித் தயிலத்
திலிட்டதனீத்தகும் பதத்தி
னேமமுடன் வடித்தெடுத்து நிதமுமிரு
காசி டையந் நெய்யிற் கொடுக்க
மாமயிற்கு வருங் கருப்ப விப்ருதி
யுதர நோய் வாங்கிப் போமே. (சக)

(இ-ள்)

தோல் நீக்கிய வெள்ளே வெங்காயப் பருப்பு — 1 நாழி
மிளகு — 1 நாழி.

இவ்விரண்டையும் சதுரக் கள்ளிப்பால் (கிடைத்த அளவு) விட்டு நன்றாக 1 நாள் முழுவதும் கையோயாமலரைத்து இள வெயிலில் காயவைக்கவும். பின்பு இதை 2 சேர் சுத்தமான பசுவின் நெய்யில் குழப்பி அடுப்பிலேற்றி சிறிது சூடு கொடுத்து இளங்கொதி வரச் செய்யவும். இதனுடன்

சிறு தேக்கு — 1 பலம்
சிற்றரத்தை — 1 பலம்
சுத்தி செய்த நேர் வாளம் — 1 பலம்
,, நெல்லிக்காய் கெந்தகம் — 1 பலம்

இவற்றை நன்முகச் சூரணித்து மேற்சொல்லிய *உள்ளித் தைலத்திலிட்டுக் குழப்பி, தக்க பக்குவத்தில் நெய்யை வடிக்கவும். இந்த நெய்யில் தினமும் இரு காசிடை கொடுத்துவர ஸ்திரீகளுக்கு வரும் கர்ப்ப விப்ருதி, வயிற்றுநோய் இவைகள் தீரும்.

குறிப்பு :—

கெர்ப்ப விப்ருதிக் குறி குணம்

கூறிடவே விப்புருதிதானுங் கருதுபோல் வயிற்றிலே
[சூதங்காட்டும்.
மாறவே தலை வலிக்கும் வீட்டுப் பக்கம் வயிற்றுவலி யிரு
[துடையுமுளைக்குமேதான்
சீறவே புழுத்திரண்டு மலமிருக்கும் சிசு கெர்ப்பந்தரியாது
[உடலுளைக்கும்
ஆறவே யிக்குணங்கள் தானறிந்து அப்பனே மருந்
[துண்ணச் சித்தியாமே.

வயிற்றில் சூதக்கட்டுடன் வலி உண்டாகும். தலை வலிக்கும். மாதவிடாய் உண்டானால் வயிற்றுவலி நீங்கும். இரு துடைகளிலும் குடைச்சல் வலி காணும். மலம் இறுகித் திரண்டு புழுக்கை போலாகும். கருத்தரியாது. உடல் இளைக்கும். இக்குணங்களைக்கொண்டு கெர்ப்ப விப்ருதி என்று அறியவும்.

31. கெர்ப்ப விப்ருதிக்கு மருந்து

பசுவின் பாலிரண்டு பொங்கலானவுடன்
வெள்ளுள்ளிப் பருந்தோனீக்கி
யிசைய வொரு சிரங்கை யிட்டுத் துழாவியே
காச்சிய பினிறக்கி வைத்து
நசையான பசீ வெல்லந் தொட்டந்தப்
பாலுண்ண நற்பாற் கஞ்சி
பொசித்திடவே கருப்பத்தின் விப்ருதி
போங் கைப்புப் புளிப்பு நீக்கே. (சச)

*உள்ளித் தையிலம் = உள்ளிசூட்டிய நெய்.

(இ-ள்)

நல்ல பசுவின் பாலை ஐலம் விடாமல் அடுப்பிலேற்றி 2 தடவை பொங்கி அடங்கியவுடன், உள்ளிப் பூண்டுப் பருப்பை நன்றாகத் தோல் நீக்கி 1 சிரங்கை அந்த கொதிக்கும் பாலிலே போட்டுத் துழாவி, காய்ந்த பின்பு இறக்கிவிடவும். பின்பு பசை வெல்லத்தோடு உள்ளிப் பருப்பையும், பாலையும் பருகவும். அப்பால், பால் கஞ்சி சாப்பிடவும். கர்ப்ப விப்ருதி தீரும்.

பத்தியம் :—

புளிப்பு, கைப்பு தள்ளவும்.

32. திங்களொன்றுமுதல் ஐந்து திங்கள் வரை யிலும் மருந்து முறைகள்

திங்களொன்றி னின் வயிறு நொந்து
வேதனை செயிற் செயு மருந்து
தங்கு தாசுப்பூவுஞ் சந்தனமு மஃலயெ
லும்பிச்சம் வேர் தானு
மங்கு நீர் வார்த்தரைத்து பசுவின் பாலிற்
கலந்த தருந்தச் செய்து
மிங்கித வெந்திரத் தைந்து
ஈகார மெழுதிக் கட்டியல்பதாமே. (சநி)

இரண்டு திங்களில் வயிறு நொந்து
வேதனையானுலிடு மருந்து
தெருண்ட தாமரைப்பூவுமாம்பலுங்
கொட்டிக் கிழங்குஞ்சிவந்த மேனி
டொருந்திந்திர கோபமெனும் பூச்சியும்
நீர் வார்த்தரைத்துப்புகரான் பாலி
லருந்திடச் செய் தெந்திரத் *திறியைங்
தெழுதிக் கட்ட நல்லார்க் கரும்பேறுமே. (சசு)

மூன்றுந் திங்கள் வயிறு நொந்து
வேதனையானுன் மொழி மருந்து
தோன்றிய சந்தன மிலாமிச்ச வேருந்
தோயத்துடனரைத்தே

*திறி = ஸ்ரீ.

இயன்ற பசுவின் பாலி லிட்டருந்தி
யெந்திரத்திறி யெழுதிக் வெவ்வு
மூன்றெழுதிக் கட்டிடவு மொய் குழற்குக்
கருப்ப நல் மொழியலாமே. (சஎ)

நாலாந் திங்களில் வயிறு நன் முதுகு
நலிந்து சலங் கருத்து நண்ணின்
னுலதற்கு மருந்து நெய்தற் கிழங்கு
நெருஞ்சியின் வேரு நன்கரைத் தான்
பால்தனிற் கொடுத் தெந்திர பத்திரியிற்
ஸ ஸ ஸ ப வ வெவ்வென்ன
நூலதனிற் கோர்த்திடவுநுடங்கிடையார்
க்குக் கருப்பநுவலலாமே. (சஅ)

ஐந்தாகுந் திங்களிலுள்ளடி பற்றி
வயிறு நொந்தாலாம்பற் பூவுஞ்
சந்தனமுந் தண்ணீரிற்ருன் ரைத்துப்
பசுவின் பாறனிற் கொடுத்து
மெந்திரத் தோமென்றெழுதி
யேந்தி முயர்க்கியல் பாக விட்டபோதே
மைந்தர் விருத்தியா மெனவு மன்னர் சர்
பேந்திரனர் வகுத்தவாறே. (சக)

(இ-ள்)

முதல் மாதம் வயிறு வலித்து வேதனை செய்தால் மருதோன்றிப் புஷ்பம், சந்தனத்தூள், மலை எலுமிச்சை வேர், இம்மூன்றையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் பாலில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். ஒரு யந்திரத்தில் (செப்புத்தகட்டில்) 5 ஈகாரம் எழுதிக் கட்டவும் "(ஈஈஈஈஈ)".

இரண்டாவது மாதத்தில் வயிறு வலித்து வேதனை செய்தால் தாமரைப்பூ, ஆம்பல் புஷ்பம், கொட்டிக்கிழங்கு, சிவப்பு நிறமுள்ளவையான இந்திரகோபப் பூச்சி இவற்றை தண்ணீர் விட்டு அரைத்துப் பசுவின் பாலில் கலந்து சாப்பிடவும். இதற்கு யந்திரம் "ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ," என எழுதிக்கட்டவும். (இந்திரகோபம் = தம்பலப்பூச்சி, நமனுர் தம்பலம்)

மூன்றுவது மாதத்தில் வயிறு நொந்து வலித்தால் அதற்கு சந்தனத்தூள், விளாமிச்சவேர் இவ்விரண்டையும் தண்ணீர் விட்டரைத்துப் பசுவின் பாலில் குழப்பி அருந்தவும். இதற்கு யந்திரம்: "ஸ்ரீ, ஸ்ரீ, ஷை, ஷை, ஷை" என எழுதிக் கட்டவும்.

நாலாவது மாதத்தில் வயிறு நொந்து வலித்தாலதற்கும், மூதுகுவலி, சிறுநீர் கருமையாதல் முதலியவற்றிற்கும் மருந்து:—

நெய்தல்கிழங்கு, நெருஞ்சிவேர், இவ்விரண்டையும் தண்ணீரிலரைத்துப் பசுவின்பாலில் கொடுக்கவும்.

இதற்கு யெந்திரம்:— "ஸ ப ஸ ப ப வ ஷ" என எழுதிக் கட்டவும்.

ஐந்தாவது மாதத்தில் வயிறு வலித்தால் அதற்கு மருந்து.

ஆம்பல் பூவையும், சந்தணத்தையும் தண்ணீரில் அரைத்துப் பசுவின்பாலில் குழப்பிக் கொடுக்கவும்.

இதற்கு யெந்திரம் "ஓ, ஓ, ஓ, ஓ, ஓ," என எழுதிக் கட்டவும்.

யந்திரம் செய்முறை:—

செப்புத்தகட்டில் (2" × 1") எழுத்தாணியால் வேண்டிய எழுத்துக்களை எழுதிக் கொண்டு அதை ஓரே சீராகச் சுருட்டி வெள்ளித் தாழ்த்துக்குள் போடவும். சிறிது குங்குமத்தைச் சேர்த்துத் தாழ்த்தை மூடிவிட்டு, அதற்குத் தீப தூபங்கள் காட்டிப் பின்பு தரித்துக் கொள்ளச் செய்யவும்.

33. நாலுமாத மாறுமாத வரைக்கு மருந்து

நாலு மாதம் மாறு மாதமும் பற்றிப் போருக்கு
நன் மருந்து
சாலபுங்கம் வேர் கொழுந்து சங்கத்தாரி
யின் வேருந் தளிர்க் கொழுந்து
மேலு *மாடாதொடை வேர் குழைகான
மல்லிகை வேர் மென் கொழுந்தோ
டேலும் பாவட்டை வேர் கொழுந்து
வரப்பூலா வேரிதின் கொழுந்தே (ருய)

*91. கெ. சுவடியில் ஆடாதொடைக்கு பதில் ஆதண்டு காணப்படுகிறது.

இத்தனையுந் தன்னிலொக்கக் கூட்டி யரைத்
தூரி யெண்ணெயினிற் கலந்து
வைத்துச் சூரிய புடமாகக் கோலாற்
கலக்கு மாற்றிரை தெளிந்தாற்
சத்தையில்லை பிள்ளை பெற்றூர் சாங்
கடிகை தனிற்றெளிந் தாற்றனையை யுண்டாம்
முத்த விடத் தேரிலைப்பட்டை வேப்பம்
பட்டையுள்ளி முதிர் வசம்பும் (ருக)

உள்ளதிவை நான்கும் நீரூற வைத்தன்
னீர் புகட்டவுறு நோய் தீரும்
பிள்ளை பெண்ணுந் தரிக்கு மெனப் பிரதா
பசிம் மேந்திரன் பேரரான
வள்ளல் சரபேந்திரனூர் வான் முறையை
வாஞ்சிப் போர்மான் மியமேவுந்
தெள்ளியராம் வபித்தியரிற்றி லகரே
னத்தமிழ்ப் புலவர் செப்புவாரே (ருஉ)

(இ-ள்)

புங்கம் வேர், புங்கங்கொழுந்து, செங்கதாரி வேர், செங்கதாரிக் கொழுந்து, ஆடாதொடை வேர், ஆடாதொடைக் கொழுந்து, காட்டு மல்லிகை வேர், காட்டு மல்லிகைக் கொழுந்து, பாவட்டை வேர், பாவட்டைக் கொழுந்து, வரப்பூலா வேர், வரப்பூலாக் கொழுந்து வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவெடுத்து இச் சரக்குகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நன்றாக அரைத்து ½ படி நல்லெண்ணெயில் குழப்பி வெயிலில் வைத்து கோலால் நன்றாகக் கிளரிவிட அத்தைலம் உடனே தெளிந்தால் ஆண்பிள்ளை பிறக்கும், சாமநேரங் கழித்துத் தெளிந்தால் பெண் பிறக்கும் என்று அறியவும்.

விடத்தேரி இலை, அதன் பட்டை, வேப்பம்பட்டை, உள்ளிப்பூண்டு, வசம்பு, இந்நான்கு சரக்குகளையும் ஒன்றி ரண்டாக இடித்துத் தண்ணீரில் ஊரவைத்து அந்த சித கஷாயத்தைச் சாப்பிட பலவித நோய்கள் நீங்கிக் குழந்தையும் தரிக்கும்

குறிப்பு :—

மேலே கண்ட முறைக்குப் பொருள் சரியாக விளங்கவில்லை. கோலினால் கிளருவது கர்ப்பிணியா என்பது தெரியவில்லை; தெளிந்தால் பிள்ளை பிழைக்காது என்று செய்யுள் பொருள்படுகிறது. இதில் கொடுத்திருக்கும் உரை 91-ம் நம்பர் சுவடியில் உள்ளது.

34. பிள்ளை பெற மாட்டாமல் மல சலமடைத்த பேருக்கு

வித்தார குன்றியின் வேரினை யெடுத்து
நல்ல தண்ணீர் விட்டரைத்தே
யொத்த வுள்ளங்கால் கை தனிலுரித்தாக்கத்
தடவிடவே யுடனே யந்த
முத்தநகை மாதா பிள்ளை பெற மாட்டாதே
வருத்து முதிர மலக்கட்
டத்துடனே சலக்கட்டு மகன்று விடு
மாரோக்கிய மாமவர்க்கே (நிக)

(இ-ள்)

குன்றிமணி வேரை யெடுத்துக் குளிர்ந்த ஜலம் விட்டு நன்கு சந்தனம்போல அரைத்து உள்ளங்கால், உள்ளங்கை முதலிய இடங்களில் தடவினால் கர்ப்பிணியைப் பிரசவிக்க முடியாமல் செய்யும், உதிரக்கட்டு, மலக்கட்டு, சலக்கட்டு இவைகள் நீங்கிச் சுகமுண்டாகும்.

35. கெற்பத்தின் மேற் பெரும்பாட்டிற்கு மருந்து

அரசு புளியத்தி நாவற் பட்டை யாவார
மடிவேர் பட்டை
மரு தொதியம் பட்டை நாவற் கொட்டை
நன்னிமயிர்மாணிக்கம்
கருவாழைக் கிழங்குடனே களீயீச்சம்
பட்டை கீழ் காயா நெல்லி
குரை மூடக்கொத்தானட்டார்ங் கொடி
நெய்தற் கிழங்குட் கொங்குறு வேர் தண்டு (நிச)

தண்டுடன் சீந்திற்றண்டு தானேரிதழ்த்
தாமரை மூத்தக் காசோங்கி
கொண்ட தென்னம் பாளை தாமரைச் சுருள்
பொன்னுங்கண்ணிக் குளிர்ந்த வேரு
மண்டருகம் பட்டை சிறுக் கீரையுடனே
யமுத வள்ளி வாகா
மொண்டருவினிற் படருற் றெளிரு
முசுமுசுக்கையிவை யுகந்தன்னளே (நிரு)

நாழி நெய்க்கு நாணுழி நாவல் விரை
நிரை மருந்து நாவற் பட்டை
நாழி நெல்லிடை கூட்டி நன்கிடித்து
முக்குறுணி நன்னீர் காய்ச்சிச்
சேகரஞ் செய்திட்டருந்தவே யிருந்த
சீயுரத்தச் சிராவ மென்னு
மாகுலந்தீர்ந்தா ரோக்கிய மாமெனவே
சரபேந்திரரருள் செய்தாரே (நிகு)

(இ-ள்)

அரசம் பட்டை
புளியம் பட்டை
அத்திப் பட்டை
நாவற் பட்டை
ஆவாரம் வேர் பட்டை
மருதம் பட்டை
ஓதியம் பட்டை
நாகக் கொட்டை
நன்னரி வேர்
மயிர் மாணிக்கம்
கருவாழைக் கிழங்கு
களியீச்சம் பட்டை
கீழா நெல்லி
முடக்கொத்தான்
ஆட்டாங்கொடி
நெய்தல் கிழங்கு
குறு வேர் தண்டு
சீந்தில் தண்டு
ஓரிலைத் தாமரை
கோரைக் கிழங்கு
தென்னம்பாளை
தாமரைச் சுருள்
பொன்னங்காணி வேர்
அருகம்பட்டை
சிறு கீரை
அமுத வள்ளி
முசுமுசுக்கை

இச்சரக்குகளில் நாவல் கொட்டை — 1 நாழி நெல் எடை (24 பலம்) அரசம்பட்டை முதல் பாக்கி 26 சரக்குகளும் வகைக்கு — 1 நாழி நெல் எடை (6 பலம்) எடுத்து எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்து இதனுடன் 8 மடங்கு ஜலம் விட்டு 3 குறுணி யாகக்காச்சி, பசு நெய் 1 நாழி கூடச்சேர்த்து அடுப்பின் மேல் ஏற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும்.

(அடியிற் கண்ட கல்க சரக்குகளையும் கஷாயத்தில் 4-ல் ஒரு பங்கு இருக்கும்படி சேர்த்து க்ருதம் செய்யும்படி 91 நெ. சுவடி 97-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது)

அதிமதுரம்	மாதுளங்காய்
ஏலக்காய்	வட்டத்திருப்பி
முந்திரிகைப் பழம்	அசமதாகம் (ஓமம்)
பேரீச்சம்பழம்	மாவிதை
குடசப்பாலை	விளாம் பிஞ்சு
அருகம்பூ	கோஷ்டம்
நிலப்பனை	
நாகப்பூ	

இதன் குணம் :—

இந்நெய்யை (1 காசிடை வீதம்) தினம் இரு வேளை அருந்திவர இரத்தசிராவம் நீங்கி கெர்ப்பிணிக்குச் சௌக்கிய முண்டாகும்.

36. கெர்ப்பிணிக்கு சுரம், வீக்கம் கண்டு, மல சல மடைத்தால் அதற்குக் கஷாயம்

கர்ப்பிணி மேற் சுர வீக்கங் கண்டு மல சல
மடைத்தாற் கடுக்காய் பத்து
பருத்திடு கற்சிவதை வேர் கடுகு ரோகிணி
யிதெல்லாம் பலமிரண்டு
மெரித்து வறுத்துப் பொடி செய்திட்டுவை
பேரா முட்டி நொச்சில் வேருந்
திருத்துழா யொரு பிடியுஞ் சிறுபூளைச்
சமூலமு மோர் சிரங்கை சேர்த்தே (ருஎ)

சேர்த்து நருக்கித்து வைத்து மிருபடிநீர்
விட்டுழக்காய் சிறுகக் காய்ச்சி
வார்த்திறுத்துக் கொண்டிதின் மூன்
வைத்தபொடி வெருகடியின் மட்டே யிட்டுப்
போர்த்து மொரு மஞ்சாடி பொரித்திட்டிம்
மருந்திதனைப் பெண்கள் கூட்ட
வார்த்து விரோசனமாகும் வீக்கமும்
வாடும்மறு நாளா நல்லெண்ணை (ருஅ)

எள்ளினிலாம் நறுநெய்யினிற் கரிப்பா
னுழக்குச் சாறிட்டதின் மேல்
மெள்ள மிளகொரு பிடியுமிணுக்கி யிட்டுக்
காய்ச்சி மேற்றடவி வெங்கீ
ருள்ளபடி யொரு சாலும் வைத்து நீராட்
டிடவு முள்நோயெல்லாங்
கள்ளமற வெள்கி விடும் வள்ளல்
சரபேந்திரன் கை கண்டவாறே (ருக)

(இ-ள்)

கொட்டை நீக்கிய கடுக்காய்	— 10 பலம்
சுத்தி செய்த சிவதை வேர்	— 2 பலம்
கடுகு ரோகிணி	— 2 பலம்

இவைகளை நன்றாக வகுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

பேராமுட்டி வேர்	— ஒரு பிடி
நொச்சி வேர்	— ஒரு பிடி
துளசி வேர்	— ஒரு பிடி
சிறு பூளை சமூலம்	— ஒரு சிரங்கை

இவைகளை நன்றாக நறுக்கி 2 படி ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றக் காய்ச்சி, இந்தக் கஷாயத்துடன் மேற் சூரணத்தில் ஒரு வெறுகடி சூரணம் எடுத்துப் போட்டு பொரித்த வெங்காரப் பொடி ஒரு மஞ்சாடி (2 குன்றுமணி) கூடப்போட்டு வியாதியுள்ள ஸ்திரீக்குப் பருகக் கொடுக்க நன்றாக விரேசனமாகி வீக்கமும் மாறும்.

மறுதினம், நல்லெண்ணெய்	— 1 உழக்கு
கரிசலாங்கண்ணிச் சாறு	— 1 உழக்கு
நுணுக்கிய மிளகு	— 1 பிடி

போட்டு அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி யிறக்கிக்கொண்டு இதைத் தேய்த்துக்கொண்டு ஸ்திரீ வெந்நீரில் நன்றாக ஸ்நானம் செய்ய பலவகைப்பட்ட நோய்களும் தீரும். கை கண்டது.

37. கொப்பத்தின்மேற் பெரும்பாடுக்கு மருந்து

சந்தணம் பூசணிக்காய்நீர் தண்ணீர்
மீட்டாலுடன் கற்றழஞ் சாறு
முந்திரிகைப்பழங் கோட்டங் கருப்பஞ்
சாறதிமதுர முதிர் நெல்லிக்காய்
கைந்த பேரீச்சம்பழ நற் சீந்திற்
கொடிச் சாறும் நன்காய்க் கூட்டி
யீந்த முறை தனிஞழி நெய்க் காவின்
பாஞழி யிடுமின்னெய்யில் (கூ)

இட்டமாஞ்சீனி சர்க்கரை கலந்து
கருப்பிணியின் னெய்யை யுண்ணக்
கட்டமாம் பெரும் பாட்டுக் கடும் பிணி தீர்ந்
தாயிழைக்குக் களைப்பு நீங்கும்
வட்ட வாரிதி சூழ்ந்த மானிலத்திற்
சோணாட்டு மாந்தர்க் கெல்லாங்
கட்டளையாமிம் முறையைக் கற்றவர்
நற்றவமிகுந்த காட்சியோரே (கூக)

(இ-ள்)

சந்தணத்தூள்
திராக்ஷைப் பழம்
கோஷ்டம்
அதிமதுரம்
முற்றிய நெல்லிக்காய்
நல்ல பேரீச்சம்பழம்

இவைகளை வகைக்கு ¾ தோலா வீதம் எடுத்து

பூசினிக்காய்ச் சாறு
தண்ணீர் விட்டான் திழங்கின் சாறு
கற்றழைச் சாறு
கருப்பஞ் சாறு
சீந்திற் கொடிச் சாறு

மேற் கூறிய சாறு வகைக்கு 1 நாழி எடுத்துக் கொண்டு, கல்கத்தரவ்யங்களே ஷை சாற்றினுல் நன்றாக அரைத்துக் கொண்டு, சாறுகளுடன் குழப்பி

பசுவின் நெய் — 1 நாழியும்
பசுவின் பால் — 1 நாழியும் விட்டு

அடுப்பின் மீதேற்றிப் பதத்தில் நெய்யை வடித்து வைத்துக்கொள்ளவும். பின்பு, இதனுடன் சர்க்கரை சேர்த்துத் தினந்தோறும் கெர்ப்பிணி சாப்பிட்டு வர, பெரும் பாட்டினுல் உண்டாகும் வலி நீங்கி, களைப்பும் நீங்கும்.

சாப்பிடும் அளவு :— வேளைக்கு ஒரு தோலா வீதம், இரு வேளை சாப்பிடவும்.

38. பெண்களுக்கு கெர்ப்ப சுரத்திற்கு மருந்து

பத்துக் காசிடை பாலிற் சிந்திலிட்டுக்
காச்சியதைப் பாகமாகச் சம
சுத்த தேனிற் கொடுக்கக் கெர்ப்ப சன்னி
சுரந் தோடந்துலைந்து போமென்
றுத்தமனுர் சரபேந்திரர் வைத்த முறை
யிவை தன்னை யுண்மையாகப்
புத்தியுள வைத்தியர்களித்திரஞ் செய்தா
லின்நோய் போகுந் தானே (கூஉ)

(இ-ள்)

பத்து காசிடைப் பசுவின் பாலில் சிந்தில் கொடியைச் சிதைத்துப் போட்டுப் பாகமாகக் காய்ச்சிச் சம தேனில் கொடுக்கக் கெர்ப்பசன்னி, சுரம், தோஷம் முதலியவைகள் குணமாகும்.

39. கெர்ப்பினிக்கு ஜ்வர வீக்கங் கண்டால் கடாயம்

வெள்ளைச் சாறணை சமூலஞ் சுக்கோ
டிரண்டினையுமே கழாயங்
கொள்ளத் தானெய்யுடனே வெல்லமுங்
கூடக் கலந்து கொடுக்கவே தான்

வள்ளைக் காதரிவையர்கள் கர்ப்ப
காலத்தில் வந்து வலி செய் வீக்க
மெள்ளத் தானழுவுமெனச் சரபேந்திர
வித்தகனுர் விளம்பினரே (கூஉ)

(இ-ள்)

வெள்ளைச் சாறணை சமூலம் — 1 பலம்
சுக்கு — 1 பலம்

இவ்விரண்டையும் கஷாயம் செய்து நெய்யும், வெல்லமும் கூடச் சேர்த்துத் தினமும் பருகிவர ஸ்திரீகளுக்கு கர்ப்ப காலத்தில் வந்து உபத்ரவிக்கும் வீக்கம் நீங்கும்.

40. கொர்ப்ப காலத்தில் மலஜல மடைத்தால் மருந்து

கோவைக் கிழங்கு துவைத்த தனிக்
கொண்டு பிழிந்து குணமாக
வாவின் பாலிற் கொடுத்திட நீ
ரடைப்பு மலக் கட்டகன்று விடும்
பாவை மார்கள் மூன்று தினம் பருகி
னென்று சரபேந்திர
பூவுக்கதிபன் புகன்ற முறை
புதுமை காணும் புலவீரே (கூச)

(இ-ள்)

கோவைக் கிழங்கை கொண்டுவந்து கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்து அதன் ரசத்தைப் பசும்பாலில் கலந்து கொடுக்க, நீரடைப்பும், மலக்கட்டும் நீங்கும். இம்மாதிரி 3 தினங்கள் பருகவும்.

குறிப்பு :—

91 நெ. சுவடியில் "பிட்டவித்துப் பிழிந்து" எனக் காணப்படுகிறது.

41. கொர்ப்பிணிகள் வாந்தி யெடுத்தால் ஸ்வரசம்

கொத்தமல்லி வித்தினைத்தான் கழு நீரி
லே யரைத்துக் கொடு பிழிந்து
வைத்ததனிற் சர்க்கரையிட்டுக் கொடுக்க
வாந்தியது வராதெனத் தீருஞ்

சித்தமிது வென்று சரபேந்திரனுர்
செய்முறையைச் சிந்தை செய்து
பத்தியுடனே புரியும் வித்த கமா
வயித்தியர்க்குப் பரிசுண்டாமே. (கூடு)

(இ-ள்)

ஒரு சிரங்கை கொத்தமல்லி விதையைக் ½ சேர் கழு நீரில் ஊரப்போட்டு அதிலேயே அரைத்துத் துணியில் பிழிந்து சிறிது சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.

கர்பிணிகளுக்கு உண்டாகும் வாந்தி உடனே நிற்கும்.

42. கெர்ப்பமுண்டான பிறகு இரத்தமாய் சாய்க்கிற பேர்க்கும் வயிற்றிற் செத்த பிள்ளை விழவும் மருந்து

அதிமதுர மஞ்சிட்டி செங்கழுநீர்க்
கிழங்கு காட்டாத்திப் பூவு
மிதமான வகைக்கொரு காசிடை பா
லிலரைத்திர தமேய்ந்த வெல்லம்
பதமாக யிட்டே காச்சிப் பாலிலுணுண்ணன்
றின்று மிரு பகலு முண்ண
விதி வசமாய் செத்த பிள்ளை விழுமி ரத்தஞ்
சாய்கிறதும் விடும் பண்பாமே. (கூசு)

(இ-ள்)

அதிமதுரம்
மஞ்சிஷ்டி கிழங்கு
செங்கழு நீர் கிழங்கு
காட்டாத் திப்பூ

இவை ஒவ்வொன்றும் ஒரு காசிடை எடுத்துப் பசும்பாலிலரைத்து வெல்லமிட்டுப் பாலிலேயே காய்ச்சிக் கொடுக்கவும் இந்தப்படி 3 நாள் இரண்டு நேரமும் உட்கொள்ள,

ரத்தம் சாய்கிறது நிற்கும். இறந்த பிள்ளையும் விழும்.

43. (வேறு)

பாற் பாடகமு நெல்லி விரகு சுட்ட
சாம்பலுமான் பாலரைத்தான்
நற்பாலிற் கொடுத்திடவு மிரத்த நிற்கு
நாள் மூன்று நன் காயுண்ணி
லுற்பவியா தொரு நோயு முழலே தாப
மூர்ச்சை யுள தேன் மாவால்
நற்பன்ன மரசத்தி நற்றுளிரோர்
பிடிக்கருக்குண் ணலமுண்டாமே. (கள)

(இ-ள்)

பற்பாடகம்
நெல்லி முள்ளி
வரகு சுட்ட சாம்பல்

இம்மூன்றையும் பசுவின் பாலினுலரைத்து அப்பாலி லேயே குழப்பிச் சாப்பிட இரத்தம் நிற்கும். 3நாள் சாப்பிட மறுபடியும் அந்நோயுண்டாகாது. (தினமும் இரு வேளை சாப் பிடவும்)

உழலை, தாபம், மூர்ச்சை இவைகளுக்கு,
தேன் மா இலை. (துளிர்)
ஆல் இலை. (துளிர்)
அரசந் துளிர்
அத்தித் துளிர்.

இவைகள் வகைக்கு ஒரு பிடி எடுத்துக் கருக்குக் கஷாயம் செய்து கொடுக்கக் குணமுண்டாகும்.

கருக்குக் கஷாயம்:

ஷி சரக்குகளை ஒரு புதுச் சட்டியிலிட்டு அடுப்பின் மீதேற்றிக் கருக வறுத்து 2 சேர் ஜலம் விட்டு ¼ சேராகச் சுண்டக் காய்ச்சி வடிக்கட்டிக்கொடுக்கவும்.

44. கர்ப்பிணிகளுக்கு உண்டாகும் அதிசாரத்திற்கு

நெற்பொரி பாசிப்பயறு கற்புள வில்
வப்பரு வேர் நேராய்க் கூட்டித்
தற்படியே பொட்டணங் கட்டித் தண்ணீர்
விட்டதனைத் தராவிக் காச்சி
நற்படியே பருகிடவும் விட்டகலுங்
தாகமது நண்ணிடாது
கற்புள கர்ப்பிணி வயிற்றில் காணதிசா
ரக் கழிச்சல் கண்டிடாதே. (கூஅ)

(இ-ள்)

நெற் பொரி, பாசிப் பயறு, வில்வ மரத்தின் பருமனுள வேர் இவைகளைக் கல் உரலிலிட்டு நன்றாக இடித்து ஒரு துணியில் கட்டி, பாத்திரத்தில் போட்டு அத்துடன் தண்ணீர் விட்டு நன்றாகக் காய்ச்சி அதைச் சாப்பிடத் தாகமும், கர்ப்பிணிகளுக்கு உண்டாகும் அதிசாரக் கழிச்சலும் தீரும்.

இதுவுமது

ஆகிய மாவிரை குடசப்பாலி யதி
மதுர நிலப்பனை விளாம்பிஞ்
சே கலந் தேலங் கோட்ட மாதுளங் கா
யி வையனைத்து மியல்பதாகச்
சேகரஞ் செய்திட்டருந்தச் சேயிழைக்குச்
சீயிரத்தச் சிராவ மென்னு
மா குலந்தீர்ந்தழகா மென்றண்ணல் சர
பேந்திரனருள் செய்தாரே. (கூகூ)

(இ-ள்)

மாவிரை, குடசப்பாலி, யிதிமதுரம், நிலப்பனை கிழங்கு, விளாம் பிஞ்சு, ஏலம், கோட்டம், மாதுளங்காய் இவையாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணமாகச் செய்து சாப்பிட, சீசிராவீம், இரத்தச் சிராவம் இவைகள் அனைத்தும் தீரும்.

45. கர்ப்பிணிக்கு விரேசனம்

ஒரு கொம்பாரையுடன் பொன்னுங்கண்ணி
வேரதுவு மெள்ளி செய் பொற்பூப்
பெருந்துத்தி வேர் நாரிம் மூன்றினையு
மெண்ணெயிலே பிசைந்திறுத்து
விரைவுடனே கொடுக்கக் கர்ப்பிணியர்
மெல்லியர்க்கு விரோசனத்தால்
பொருமலிலா தேயகலும் பூவையர்க்குக்
கர்ப்ப நலம் பொருந்துந்தானே. (எம்)

(இ-ள்)

ஒரு கொம்பாரை, பொன்னுங்காணீ வேர், பெருந்துத்தி வேரிலுள்ள நார், இவை (ஆமணக்கு) எண்ணெயிலே அரைத்துப் பிசைந்து வடித்துக் கொடுக்க கர்ப்பிணிகளுக்கு சுக விரேசனமுண்டாகும்.

குறிப்பு :—

கொம்பாரை என்பது எவ்வகையென்று புலப்படவில்லை. இதில் கொடுத்திருக்கும் உரை 91 வெ. சுவடியில் உள்ளது.

46. கர்ப்பிணி யதிசாரத்துக்கு தூரணை

திப்பிலி யோமங் கருஞ் சீரகம் வில்வப்
பிசின் காட்டாத்திப்பூ சுக்கு
மெய்ப்படியைங் கழஞ்சு மிளகதி விடயஞ்
சாதிக்காய் விதமும் வெண்ணிந்
துப்பிலவங்கப் பூவிங்கு ரைப்பது முக்
கழஞ்சு மாதுளம் பழத்தோல்
இப்படியைந் திரண்டு மாவித்துத்தூள்
களினிரு காசிடை தேனிட்டே. (எக)

கொள்ளவுந் தாகவுங்காணி லாலத்தி
நாவலிந்தக் குளிர்ந்த பட்டை
வள்ளி தாயிடித் ததனீக் கஷாயம் வைத்துக்
கொடுத்திடவும் வாந்தி பண்ணில்
உள்ள கடலேத்து வரையுண்டிடவு
மென்று சரபேந்திர ரென்னும்
வள்ளல் மொழி கொண்டுலகிலுள்ளவர்க
ளதி சாரமறிக்கலாமே. (எஉ)

(இ-ள்)

திப்பிலி ஓமம் கருஞ்சீரகம் *வில்வ பிசின் காட்டாத்திப்பூ சுக்கு	இவைகள் வகைக்கு 5 கழஞ்சு.
மிளகு அதிவிடயம் சாதிக்காய் பொரித்த இந்துப்பு கிரும்பு பொரித்த பெருங்காயம்	இவைகள் வகைக்கு 3 கழஞ்சு
மாதுளம்பழ ஓடு	5 கழஞ்சு
மாவிதை	2 கழஞ்சு.

• இவைகளையெல்லாம் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திர காயம் செய்து 2 காசிடை வீதம் தேனில் சாப்பிடவும்.

நாகம் உண்டாயின்

அத்திப்பட்டை
ஆலம்பட்டை
நாவல்பட்டை

இவற்றைச் சமனாக எடுத்து இடித்துக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

வாந்தியுண்டாயின்

கடலை, துவரை கொள்ளவும்.

---

* வில்வப் பிசினிக்கு பதில் 91 நெ. சுவடியில் இலவம் பிசின் காணப்படுகிறது.

47. பிரஸூதிக் கழிச்சலுக்கு மருந்து

மாங்கொட்டை யாத்திப்பூ வெள்ளிலோத்தி
ரங்கழுநீர் வார்த்தரைத்துத்
தாங் கொடுக்கவுங் கலங் கொம்புங், கருஞ்
சீரக முருங்கைத் தன் பூவோடு
மாங்கிவைக்ள் சமமாக வரைத்தான் வெண்ணீ
யிற் கொடுத்திட்டாலு மாதர்
வீங்கு கர்ப்பந்தனிலே வருகின்ற
கழிச்சலுந்தான் விட்டுப் போமே. (எஉ)

(இ-ள்)

மாங்கொட்டை (பருப்பை உபயோகிக்கவும்). ஆத்திப்பூ (காட்டாத்திப்பூ), வெள்ளிலோத்திரப்பட்டை இவைகளை அரிசி கழுவிய கழுநீரினுல் நன்றாக அரைத்துக் கொடுத்தாலும், அல்லது மான் கொம்பு, கருஞ்சீரகம், முருங்கைப்பூ இவைகளைச் சமமாக எடுத்து நன்கு அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழைத்துக் கொடுத்தாலும், ஸ்திரீகளுக்குக் கர்ப்பகாலத்தில் வருகின்ற கழிச்சல் தீரும்.

குறிப்பு:— ஆன் வெண்ணெய் = பசுவின் வெண்ணெய்.

---

5. சீக்கிரப் பிரஸூதிக்கு மருந்து வகைகள்

48. சீக்கிரப் பிரஸூதி

பாலேவேரும் வேலிப்பருத்தி வேரும் இரண்
டும் பசுவினிற் பாலிற்
சாலவரைத்துண்டிடினுஞ் சண்டையது
மூலமுந்தான் றண்ணீராலே
சிலமுடனே யரைத்துத் தேன் கலந்து
சேயிழைக்குத் தினச் செய்தக்காற்
பாலகன்றனே பிறக்கும் பைந்தொடிக்கா
ரோக்கியமாம் பகருவீரே (எச)

(இ-ள்)

பாலை வேரையும், வேலிப்பருத்தி வேரையும் பசுவின் பாலில் நன்றாக அரைத்து (கொட்டைப்பாக்களவு) சாப்பிட்டாலும், அல்லது சண்பக வேரைத்தண்ணீரில் இழைத்துத் தேன் கலந்து சாப்பிட்டாலும் குழந்தை தானாகவே பிறக்கும். தாயாருக்கும் தேக ஆரோக்கியமுண்டாகும்.

49. ப்ரஸவ மருந்து

முலைப்பாலிலே வேலிப்பருத்தியிலைவேரும்
இங்கு மூன்று மிட்டே
தலைப்பாக மாயரைத்துத் தடவிலிந்த
மருந்தது தானுபிதன்னிற்
கலக்காமலிட வெள்ளாக்காக்கணஞ் செவ்
வாய்கிழமை காப்புக்கட்டி
வலப்பாக மாயரைத்து மறு செவ்வா
யிற்கொணர்ந்து வலையமாக்கே (எடு)

வலைய மோதிரக் குளிசமாடித்
தூபங்கொடுத்து மயிர் நீளுச்சி
யுளம் மகிழவைத்திரக்கிப் பெருவிரலில்
இட உதயமுண்டாம் பாலன்
கலைகணுய்ச் சோணாடு காத்தருளுஞ்
சரபேந்திரன் கண்டு சொன்ன
வளவறிந்திம் முறை யிச்சித்தன்புறுவோர்க்
கே குளிசமழகதாமே (எசு)

(இ-ள்)

வேலிப்பருத்தி இலை, வேலிப்பருத்தி வேர் இவ்விரண்டோடு மூன்றுவதாகப் பெருங்காயத்தையும் முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துக் கர்ப்பிணியின் தொப்புளைச் சுற்றித்தடவிக்கட்டவும். பின்பு, வெள்ளாக்காக்கணச் செடிக்கு ஒரு செவ்வாய்க்கிழமை காப்புக்கட்டி மறு செவ்வாய்க்கிழமை அதன் வேரைக்கொண்டுவந்து ஒரு சிறு மோதிரம் போலக்குளிசம் செய்யவும். பின்பு இதற்குத் தூபதீபங்கள் காட்டிக் கர்ப்பிணி

யின் தலையுச்சி முதல் கால் வரை இறக்கி அவளது கால் பெரு விரலில் அக்குளிசத்தை இடவும். குழந்தை பிறந்து விடும் (குளிசம் என்பது தாயத்து).

50. பிரஸவத்திக்கு மருந்து

நங்கை பெற நோக்குங்கா ணுயிற்றுக்
கிழமை யினிஞனிலத்தே
தங்கமுக்கிராக் கிழங்குக்கே காப்புக்
கட்டி நல்தன்மை யாய்த்தூ
பங் கொடுத்துத் திங்கள் வாரந்தவரு
மல் வேரைப் பக்குவத்தோ
டங்கையாற் குளிசஞ் செய் தவளெதிரே
தரை மெழுகி யன்பாய்த்தானே (எஎ)

அன்பாக வைங்கரனைத் தொழுது தூ
பந்தீப மளித்த தன்பின்
னின்புறு நற்சட்டியின் வைத்திடு
குளிச மேல் மூடியிதமதாக
வன்புவியிற் சுகத்துடனே பிரசூதமா
மெனவே வகுத் தென்ஞளுந்.
தன்புவியாஞ் சோணுடு தனிபுரக்குஞ்
சரபேந்திரன் சாற்றினரே. (எஅ)

(இ-ள்)

கர்ப்பிணி பிரஸவிக்க வேண்டுமானால், ஞாயிற்றுக்கிழமை யன்று அமுக்கிராக் கிழங்குச் செடிக்குக்காப்புக்கட்டித் தூபம் காண்பித்து, மறுநாள் திங்கள்கிழமையன்று வேர் அறுந்து போகாமல் ஜாக்கிரதையாக அதைப் பிடுங்கிக் குளிசம் செய்து எந்த கர்ப்பிணிக்கு குளிசமிட வேண்டுமோ, அவளுக்கெதிர் மெழுகிக் கோலமிடவும், பின்பு பிள்ளையார் பிடித்துவைத்துத் தியானித்துக்கொண்டு அக்கிழங்கினுலாகிய குளிசத்திற்குத் தீப தூபங்கள் காட்டி, ஒரு புதுச்சட்டியில் வைத்து மூடி, பிரஸவ அறையிலே வைக்கவும். சுகப்பிரசவ முண்டாகும்.

51. பிரஸவத்திக்கு மருந்து

தைவேளை வேர் பேசாமற் பிடுங்கி
மோதிரமாகச் செய்து
கைவிரலிட்டிதைய முதற்கடிதட மட்
டதனையுறக் கலந்தவ் வேரைச்
செவ்விய தண்ணீருக்குஞ் சிறந்த
பாணையிற் போடச் செய்துமே செம்பை
யை விரையை யரைத்து நாபியிற்
றடவ பால னவதரிக்குந்தானே. (எக)

(இ-ள்)

(a) தைவேளைச் செடியினுடைய வேரை வாய் பேசாமல் பிடுங்கி வந்து, மோதிரமாகச் செய்து, கர்ப்பிணியின் இருதயத்திலிருந்து பிரசவமார்க்கம் வரை இறக்கி, அப்பால் இதை ஒரு தண்ணீருள்ள பாணையில் போட்டு விடவும்.

(b) செம்பை விதையைத் தண்ணீரில் இழைத்துக் கர்ப்பிணியின் வயிற்றில் தடவ, குழந்தை ஜனிப்பான்.

52. பிரஸவத்திக்கு மருந்து

மங்கல வார்த்தினமாவாசை யினில்
நெரிஞ்சி வேர் வாங்கிக்கொண்டே
யங்கதனைத் தலைகீழாய்க் குளிசமாடி
யதையழகாய் மார்பிட்
டிங்கிதமாயிறக்கி வரப்பேற் நோக்கு
மெனத் தஞ்சையிருந்து வாழு
மெங்கள் சரபேந்திரன் செய்யும் முறையை
மெய் முறையா யெண்ணுவீரே. (அ)

(இ-ள்)

செவ்வாய்க்கிழமையோடு கூடிய அமாவாசையன்று நெருஞ்சில் சமூலமாக வேர் அருமல் பிடுங்கி அதைத்தலை கீழாகக் குளிசம் கட்டிக் கர்ப்பிணியின் மார்பு முதல் அடிவயிறு வரை இறக்கவும். சுகப்பிரசவமுண்டாகும்.

53. பிரஸவத்திக்கு மருந்து

சணல் விதையைப் பொடித்துத் தேங்காய் திருகிப்
பிசறியதைத் தான் கலந்தே
நண் வெயிலிட்டிடத் தைல நல்குமதை
யே யெடுத்து நலமதாக
வணியிழையுச் சந்தலே தொட்டல் குலள
வுக் தடவியதின் பின் பக்கம்
பிணி தவிரப்பிடரி மூதல் பானி வரைக்
குக் தடவப் பெறுவள் சேயே. (அக)

(இ-ள்)

சணல் விதையைப் பொடித்துத் தேங்காய் (முத்தின) த் திருவலுடன் சேர்த்து நன்கு பிசறி வைத்துக்கொள்ளவும். இதை ஒரு கல்வத்தில் அப்பி, ஒரு மூலையாகச்சாய்த்து வைத்துக் கடும் வெயிலில் வைக்கவும். இதிலிருந்து எண்ணெய் வடியும். இதை யெடுத்துக் கர்ப்பிணியின் உச்சந்தலை, தோள், மர்ம ஸ்தானம் முதலிய இடங்களுக்குத் தடவியபின், பின் பக்கம் பிடரி முதலிய இடங்களிலிருந்து அபானம் வரை தடவி வரச் சுகப்பிரசவ முண்டாகும்.

குறிப்பு :—

இதை உள்ளுக்கும் கொடுக்கலாம் என்று 91 நெ. சுவடியில் காணப்படுகிறது.

54. நிள்வே பெருமல் வருந்தின் மருந்து

குதிரையி னல்லி லத்திதனை யுடனெடுத்துப்
பிழிந்து வைத்துக் கொண்டசார
மதினுட னூமத்தையிலைச் சாருடெள்
ளெண்ணெய் சமமாகக் கூட்டி,
பதருமன் மத்திச் சீர் காசிடையி
னளவாகப் பருகப் பின்னு
முதர முதுகினுமிட்டுத் தடவி வரச்
சேய்தானே யுதைய மாமே. (அஉ)

(இ-ள்)

புதிய குரைலத்தியைப்பிழிந்தசாறு, ஊமத்தை இலைச் சாறு, சுத்தமான எள்ளெண்ணெய் இம் மூன்றையும் சமமாகக் கூட்டவும். பின்பு இதை நன்றாகக் கையினால் குழைத்து காசிடை அளவாகச் சாப்பிடவும். இதையே வயிறு, முதுகுப் பக்கங்களிலும் தேய்த்துவரக் குழந்தை தானாகவே பிறக்கும்.

"ஓம் கம் கணபதயே நம:" என்று 22 உருச்செபித்துக் கொடுக்கவும் என்று 91 செ. சுவடியில் காணப்படுகிறது.

55. பிள்ளை பெறமாட்டாதவர்க்கு மருந்து

வெள்ளைச்சாறடை வேரை மேலுமந்த
விலைச்சாற்றூல் விரைந்தரைத்தே
யொள்ளிழையார் நிதம்ப மதிலுறப்பூசிற்
சேய்தானு முதையமாகும்
வெள்ளைக் குன்றியின் வேரை மெல்லியலி
னிடையதனின் மேலே கட்டப்
பிள்ளையழகாய்த் தோன்றும் பிரசூதிக்
கேசுகமும் பிறக்குந்தானே. (வாகடம்)

(இ-ள்)

(1) வெள்ளைச் சாறடை வேரை அதேயிலைச் சாற்றி னால் நன்றாக அரைத்துக் கர்ப்பிணியின் அடிவயிறு, பின்புறம் முதலான இடங்களில் பூசக் குழந்தை பிறக்கும்.

(2) வெள்ளைக் குன்றுமணியின் வேரைக் கர்ப்பிணியின் அரையில் கட்டினாலும் சுகப்பிரசவமுண்டாகும். தாயாருக்கும் நல்லது.

56. பிள்ளை பெருமல் வருந்தின் மருந்து

கொந்தலரா வில்வ மரத்தினில் வேரைக்
கொடுவந்து குளிர்நீர் விட்டுச்
சந்தணம்போ லேயரைத்துத் தானெலுமிச்சங்
காய் நேர்தனையே ரண்டங்
தந்தயிலங் கலந்து சாரித்துக் காச்
சியதைத் தானருந்திற்
பைந்தொடிக்கு வருத்தமின்றிப் பாலகனும்
பிறக்குமெனப் பகருவீரே. (அ)

(இ-ள்)

புஷ்பிக்காத ஒரு வில்வ மரத்தின் வேரைக் கொண்டு வந்து, சுத்த குளிர்ந்த ஜலத்தினால் சந்தனம்போல் நன்றாக அரைத்து, அதில் ஒரு எலுமிச்சங்காய் பிரமாணம் எடுத்து 1 சேர் விளக்கெண்ணை (சிற்றாமணக்கெண்ணையில்) குழப்பி அடுப்பின் மேல் வைத்து, பாகமாக எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு சாப்பிடக் கர்ப்பிணிக்குச் சிரமமின்றிக் குழந்தை பிறக்கும்.

குறிப்பு :— கொந்து = பூங்கொத்து.
அலரா = மலராத.

91 கெ. சுவடியில் "இம்மருந்தைக் காச்சாமல் அப்படியே சாப்பிட்டாலும் சுகப்பிரஸவமாகும்" என்றிருக்கிறது.

57. பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து

வடக்கே நோக்கிடு நந்தியாவட்டை
வேர் பிடுங்கி வந்து நங்கை
யிடக்கானற் பெருவிரல் மோதிரம் போல
வனையஞ் செய்திடினும் பின்பு
கடுத்த கற்றுழையின் வேரைத் தலைகீழா
யவளிடத்திற் கட்டி வைக்கி
லடைவுடனே சேயுதிக்கு மது கண்டு
கற்றுழையின் வேரையவிழ்த்துப் போடே. (அநி)

(இ-ள்)

வடக்குத் திசையை நோக்கிப்போகிற நந்தியாவட்டத்தின் வேரைப்பிடுங்கி வந்து ஒரு மோதிரம் போல் செய்து, இடது காலின் பெரு விரலில் இடவும். இதனுடன் சோற்றுக் கற்முழையின் வேரைத் தலைகீழாகக் கர்ப்பிணி இருக்குமிடத்தில் கட்டிவிடவும். குழந்தை பிறந்துவிடும். அப்பால் கற்முழை வேரை அவிழ்த்து விடவும்.

58. பிரஸவத்திக்கு மருந்து

வெள்ளெருக்குத்தர நோக்கும் வேர்
கொணர்ந்து மெய்யினில் வைத்திறக்கினுலு
மெள்ளெண்ணெயிலே முசுட்டையிலை வேக
வைத் துடம்பினிட்டிட்டாலுங்
கள்ளமில் கையாந்த கரைச்சாறு நசி
யஞ் செயினுங் கருவிலுற்ற
பிள்ளையுடனே புவியிற் பிறக்குமெனச்
சரபேந்திரன் பேசுவாரே. (அசு)

(இ-ள்)

(a) வடக்கே நோக்கிச் செல்லும் வெள்ளெருக்கின் வேரைக் கொண்டுவந்து கர்ப்பிணியின் உடலில் வைத்திறக்கினுலும், (b) முசுட்டை இலையைச் சுத்தமான எள்ளெண்ணெயிலிட்டுக் கொதிக்கவைத்து அந்த எண்ணெயைக் கர்ப்பிணியின் உடம்பிலிட்டுக் கீழ் நோக்கித் தேய்த்தாலும், (c) கையாந்தகரைச் சாற்றை நஸ்யம் செய்தாலும் வயிற்றிலுள்ள குழந்தை உடனே பிறக்கும்.

நஸ்யம் — இலைச் சாற்றை மூக்கிலிட்டு ஊதவும்.

59. சீக்கிரப் பிரசூதி மருந்து

சிவந்த வாமணக்கின் வேர் வலையமாகச்
சுற்றித் *தெரிவை தானே
யுவந்து தன திடது காற் பெருவிரலி
லிட்டிடச் சேயுதையமாகுந்

*தெரிவை = 25 முதல் 31 வயதுள்ள ஸ்திரீக்குப் பெயர். இங்கு, பொதுவாக 'ஸ்திரீ' என்று பொருள்.

தவஞ் செப நற் கல்வி முதற்றூர் தாங்கண்
டந்தணர்க்குத் தானஞ் செய்யுஞ்
சிவபூசா துரந்தரனுஞ் சில சர
பேந்திர வேள் செப்பும் வாறே. (அள)

(இ-ள்)

செவ்வாமணக்கு வேரை மோதிரம்போலச் செய்து அக் கர்ப்பிணிக்கு தானுகவே தன் இடது கால் பெரு விரலில் அணிந்துக்கொள்ளக் குழந்தை உண்டாகும்.

60. பிள்ளைபெற மாட்டாதற்கு மருந்து

சீதேவிச் செங்கழுநீர் சமூலமும் செந்
தழலிடவே சிறந்த தூமம்
மாதரல் குற் காட்டிடினு மரையிலவ் வே
ரினைக் கட்டி வைத்திட்டாலும்
மாதாவா மவ் வேரை யவ்விலைச் சாற்
றுற்றண்ணீராதல் கொண்டப்
போதுற வாயரைத்தவட் கஞ்சன மிடச் சேய்
பிறக்குமிது பொருந்திப்பாரே. (அஅ)

(இ-ள்)

சீதேவி செங்கழுநீர்ச் செடியை சமூலமாகப் பிடுங்கி, இடித்து அதைத் தணலில் இட்டு அதினின்று எழும் புகையை கர்ப்பிணியின் மர்மஸ்தானம் முதலிய இடங்களில் காட்டினாலும், அந்த வேரை அந்த ஸ்திரீயின் அரையில் கட்டிவைத்தாலும், சுகப்பிரசவ முண்டாகும்.

சீதேவி செங்கழுநீர் வேரை, அதன் இலைச் சாற்றினாலோ அல்லது தண்ணீரினாலோ நன்றாக அரைத்து அக்கர்ப்பிணிக்கு அஞ்சனமாகக்கடுகளவு கோலிலெடுத்துக் கண்ணிலிடக் குழந்தை பிறக்கும்.

61. பிள்ளை பிறக்க மருந்து

முள்ளி வேர், நாயுருவி விடத் தேரை வேர்
மூன்றினையு முறுக்கிச் சுற்றி
மெள்ளவே பெருவி ரலினிட்டிறக்கப்
பேற்நோக்கு மிகுமிவ்வேரை
யெள்ளெண்ணெயிற்றேய்த்துச் சிரசிலிருந்
திறக்கியிட வீனுஞ்சேயை
வள்ளல் சரபோசேந்திரவேள் சொன்ன
முறை யிதென்ன மகிழுவிரே. (அக)

(இ-ள்)

முள்ளி வேர், நாயுருவி வேர், விடத்தேரை வேர், இம் மூன்றையும் மெல்லியதாக எடுத்து நன்றாக முறுக்கி மோதிரம் போலச் செய்து கர்ப்பிணியின் பெருவிரலில் இட்டு இறக்கினாலும், இந்தக் குளிசத்தைச் சுத்தமான எள்ளெண்ணெயில் தோய்த்துத் தலை முதல் கால் வரை இறக்கித் தடவினாலும் குழந்தை சிரமமன்னியில் பிறக்கும்.

62. பிள்ளைபெற மாட்டாதார்க்கு மருந்து

ஊமத்தை வேர் தலைகீழாய்க் கட்டித்
தூக்கிடவுமுந்தி மீதிற்
சேமச் செம்பையின் விரையை யரைத்துந்தி
தனிற்றடவச் சேய்தான் றோன்று
நேமமதாமிம் முறையைச் சோழ வள
நாடாளு நிறைந்த தஞ்சைப்
பூமனெனுஞ் சரபேந்திரன் புகன்ற முறை
யிது தன்னைப் புகழுவீரே (கூடு)

(இ-ள்)

ஊமத்தை வேரைத் தலை கீழாகக்கட்டிக் கர்ப்பிணியின் வயிற்றிற்கு மேல், தொங்கவிட்டாலும் அல்லது செம்பை விரையைத் தண்ணீர் விட்டரைத்துக் கர்ப்பிணியின் வயிறு தனில் நன்றாகப்பூசி விட்டாலும் குழந்தை பிறக்கும்.

குறிப்பு:— 51-வது முறையையும் பார்த்துக் கொள்க

63. பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து

சங்கங் கொழுந்தோர் பாக்களவ
தரைத் தாமணக்கின்றயிலத்திற்
செங்கையாலே குழப்பி மங்கை
தின்னக்கொடுக்கிற் சேயுதிக்கும்
பங்கமாக வயிறதனிற்
பாலன் மதித்தே யிருந்தாலுந்
தங்காதந்தக் கணந்தனிலே
தரையினமூவி விழுந்திடுமே. (கூக)

(இ-ள்)

சங்கங் கொழுந்து (முட்சங்கன்) ஒரு பாக்களவெடுத்து அரைத்து கர்ப்பிணியின் கையினுலே (சிற்றுமணக்கெண்ணெயில்) குழப்பிச் சாப்பிடக் குழந்தை பிறக்கும். குழந்தை இறந்த போதிலுங்கூட வயிற்றிலே தங்காமல் நழுவி விழுந்து விடும்.

64. பிள்ளை வாதியாமற் பிரசூதி மருந்து

கவிழ்த்தும்பை வேர் பிடுங்கித் தோலுரித்து
நெற்றியினிற் கயிற்றுற் கட்டி
யவிழாமல் வைத்திடினு மக்கணம் பைங்
தொடிவருத்த மணுகுறுமற்
றவமிகுஞ் சந்ததி தோற்றுந் தாயார்க்கு
மிகுந்த சவுக்கியமா மென்றே
புவனி முழுதையுமாளுஞ் சரபமகீ
பதி முறை நூல் புகலுந்தானே (கூஉ)

(இ-ள்)

கவிழ்த்தும்பைச் செடியின் வேரைப் பிடுங்கி அதன் மேல் தோலை உரித்து, அதைக் கர்ப்பிணியின் நெற்றியில் கயிற்றினுல் கட்டி அவிழ்ந்து விடாமல் வைத்திருக்கவும். அந்த க்ஷணமே கஷ்டமில்லாமல் குழந்தை பிறந்து சௌக்கியமும் உண்டாகும்.

---

6. இறந்த பிள்ளை வெளிப்பட மருந்துகள்

65. கருத்தரியா மருந்து

அவுரி வேர் பூஷணி வேர் சம
னெகவரைத்து நீராடுநாளிற்
கவுரவமாய் அரைத்துண்ணக் கருத்தரியா
துசிலையிலை கல்லுப்புள்ளே

யுவதையுடன் முடிந்து வைத்தான் பாலி
லரைத்துண்டிடினுமுயர் பேரீச்சி
னவிர் பாலைய ருந்திடினுங் கருத்தரியா
தெனவுரைத்தாரறிஞர் தாமே (கூங)

(இ-ள்)

அவுரிவேர், பூஷணிவேர் இவ்விரண்டையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து ஸ்நானம் செய்யும் தினத்தன்று சாப்பிடவும். அந்த ஸ்திரீ கருத்தரிக்கமாட்டாள்.

உசிலை இலையை ஒரு முழுச்சாகக் கட்டிக் கல்லுப்பிற்குள் வைத்துப் பசுவின் பாலில் அரைத்துச் சாப்பிட்டாலும் அல்லது பேரீச்ச மரத்தின் மலரும் பாலையைப் பால் விட்டு அரைத்துச் சாப்பிட்டாலும் கர்ப்பம் தரிக்காது.

66. செத்த பிள்ளை விழ மருந்து

பெரும் பயரினளவது காந்தஞ்
சணற்பூவதுவுமொரு பிடியுஞ் சேர்த்துக்
குறும்பையிள நீரினரைத்துக் கொடுக்க
வங்குதிக்குங் குழவி தானும்
வருந்துதலங்ககன்று மந்த மாதிருப்ப
ளெனப் பொன்னிவள நாடாளுஞ்
சரபமகிபதியுரைசெய் முறையிதனை
மனமகிழ்ந்துதான் செய்வீரே (கூச)

(இ-ள்)

சுத்தி செய்த காந்தம் — 1 பெரும் பயறளவு
சணல் பூ — ஒரு பிடி

இவ்விரண்டையும் குறும்பையிள நீரினரைத்துச் சாப்பிட, இறந்த குழந்தை விழும். சுகமுமுண்டாகும்.

67. மதித்த பிள்ளை விழ மருந்து

இலந்தையின் பட்டையை யரைத்துப் பசுவினெய்யிற்
கலந்துணச் செத்திடுஞ் சேய் வீழும்
மலர்ந்த பூஷணிப் பூவையரைத்துள்ளங்
காலிடவு மரித்த சேயும்
நிலந்தனில் வந்தடையுமென நீதியுள
சரபேந்திர நிருப துங்கன்
நலந்தரு மிவ்வாயுணூல் நங்கையர்
துன்பறும் வண்ண நல்கினரே (கூரு)

(இ-ள்)

1. இலந்தைப் பட்டையையரைத்துப் பசு நெய்யில் கலந்து சாப்பிட வயிற்றிலேயே இறந்த குழந்தை விழும்.

2. புதிய பூஷிணிப் பூவையரைத்துக் கர்ப்பிணியின் உள்ளங் காலில் தேய்க்கவும். இறந்த பிள்ளை உடனே பிறக்கும்.

குழந்தை பிறந்தவுடன் கழுவி விடவும்.

68. செத்த பிள்ளை விழ மருந்து

பருத்தியதின் வடக்கேகும் பருத்த
வேரொரு முழமாம் படியதாக
நருக்கித்தாய் பருந்தலையிற் கட்டிடச்
செத்திடு பிள்ளை நழுவி விழும்
மூரித்தா யிளந் தலையிலே வேரைக் கட்
டிடவு மொண்ணுதென்று
மூரைத்த நல் முறையிதனை யுண்மையா
யறிந்து கொள்ளு முலகத்தீரே ! (கூசு)

(இ-ள்)

வடக்கு நோக்கிச் செல்லும் பருத்தி வேரைக் கொஞ்சம் பருமனுகப் பார்த்து ஒரு முழ அளவு எடுத்து முதுமைப் பருவ முள்ள கர்ப்பிணியின் தலையைச் சுற்றிக் கட்டிவிட வயிற்றி லுள்ள இறந்த குழந்தை விழும். இதை இளமைப் பருவ முள்ள கர்ப்பிணிக்குக் கட்டுதல் நன்றன்று.

குறிப்பு :— 91. தெ சுவடியில் " பருத்திவேரின் பருத்த தலையைக் காட்ட பிள்ளை விழும் இளந்தலைக்கட்ட விழாது " எனக் காணப் படுகிறது. இம்முறையின் பொருள் சரியாக விளங்கவில்லை.

69. மதித்த பிள்ளை விழ மருந்து

வேலிப்பருத்தி யிலை வசம்போடுள்ளி
விரும்பு முலைப் பால் விட்டரைத்துக்
கோலி மாது கீழ்வயிறு கொப்பூழ்
மட்டுங் கொண்டிடவே
சாலமதித்த பாலகனுஞ் சதிராயுதைய
மா மென்னும்
ஞாலந்தனிலேயுயர் சோழ நாடன்
சரபேந்திரன் முறையே (கூஎ)

(இ-ள்)

வேலிப்பருத்தி இலை, வசம்பு, உள்ளிப் பூண்டு, இம் மூன்றையும் ஒன்றுகூட்டி, வேண்டிய முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து அக்கர்ப்ப ஸ்திரீயினுடைய கீழ்வயிறு, தொப்புள், அடிவயிறு முதலிய இடங்களில் நன்றாகப் பத்துப் போட, வயிற்றிலேயே இறந்த குழந்தை பிறக்கும்.

70. மதித்த பிள்ளை விழ மருந்து

வெள்ளாட் டெருவைக் கருக்கி நெய்யை
விட்டுக் குழைத்து விரும்பி யுண்ணப்
பிள்ளை வயிற்றிலிருந்து விழும்
பெரிய மூங்கிலிலை கஞ்சுரஞ் சின்
முள்ளினிலையு மருவாதி முழுது மரைத்து
முகந்துள்ளே
கொள்ளும் பேர் தின மதித்திருந்த
குக்கிக் குழவி குதித்திடுமே (கூஅ)

குதிக்கும் பரியப் போதிட்ட
கொள்ளா நிலத்தி கொடுவந்து
மதித்தோருழக்கு மருவாதி வயிதிற்
பிழிந்து வண்சுக்கின்
கதித்த பொடிதூவிக் கொடுக்கக் கழன்று
விழுங் காண் கான் முளையும்
விதித்தார் சரபேந்திரரிதனை விரும்பிக்
கொள்வார் வித்தகரே (கூக)

(இ-ள்)

(a) வெள்ளாட்டுப் புழுக்கையைக் கருக்கி நெய்யில் குழைத்துச் சாப்பிட மதித்தகுழந்தை பிறக்கும்.

(b) மூங்கிலிலை — 1 கழஞ்சும், முள்ளி இலையையும் சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க இறந்த குழந்தை விழும்.

(c) புதிதாகப் போட்ட குதிரை லத்தியைக் கொண்டு வந்து சிறிது இடித்துப் பிழிந்து, சுக்கின் சூரணத்தையும் கூடச் சேர்த்து, கர்ப்பிணியைப் பருகச்செய்ய இறந்த குழந்தை பிறக்கும்.

குறிப்பு :— 54-ம் முறையையும் கவனிக்க.

---

7. நஞ்சு விழ மருந்துகள்

71. நஞ்சொளித்தால் மருந்து

காடியினிற் பருத்தி யிலையரைத்து மந்தக்
காடிதனிற் கரைத்துண்டக் கா
னீடிய நஞ்சவிழ்ந்து விழும் நேரிழைக்
கா ரோக்கியமும் நிகழ்த்தலாகும்
தேடரிய விம்முறைய தனைத் தேடி
யுல கிருகந்து தோமினென்றே
யாடவர் கமலகனெனும் சரபமகிபன்
பாலருள் செய்தானே (ஈ)

(இ-ள்)

பருத்தி யிலையைக் காடிவிட்டு நன்றாக அரைத்து, அந்தக் காடியிலேயே கரைத்துச் சாப்பிட இறுகி இருக்கும் நஞ்சு அவிழ்ந்துவிழும். பிரஸவித்த ஸ்திரீக்கும் சௌக்யமுண்டாகும்.

72. நஞ்சு விழாதிருந்தால் மருந்து

பெண்டுகட்கு நஞ்சு விழாதெனிற்
கருணைச் சமூலமதைப் பிடுங்கிவந்து
துண்டு துண்டாய் நறுக்கியம்மிதனிலே
வைத்தரைத்ததனைத் தொகுத்திடித்தே
யொண்டொடியாள் பிடரியினிட்டுயர்
முதுகூடிறங்கி வரவுரமாய்ப்பூசில்
பண்டியினின்றிடு நஞ்சு விழும் பின்பு
துடைத்திடு முன் பற்றைத்தானே (ரு)

(இ-ள்)

கருணைக்கிழங்குச் செடியைச் சமூலமாகப் பிடுங்கி வந்து துண்டம் துண்டமாக வெட்டி நன்றாக அரைத்து, அப் பிரசவித்த ஸ்திரீயின் பிடரியிலிருந்து முதுகு முழுதும் நன்றாகப் பத்துப்போட்டால், ஸ்திரீயின் வயிற்றிலுள்ள நஞ்சு வெளிப்படும். அது வெளியான பின் பற்றை நீக்கிவிடவும்.

---

8. பிள்ளை பெற்றபின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள்

73. பிள்ளை பெற்ற பெண்களுக்கு வயிறு ஊதிக் கழிந்தால் மருந்து

அரிந்த குறிஞ்சாவிலையோர் சிறங்கை
பழம்புளி யெலுமிச்சங்காய் நேரா
யொருங்குற நாழி பினுழக்குத்தண்
ணீரிட்டதை யுரிநீருறவே காச்சிம்
மருந்து பிசைந்ததை வடித்து வாங்கி
யுண்ணும் வனிதை வயிறு வடிந்து நன்காம்
பரிந்து சாறணை சமூலமும் பிடிங்கித்
துவைத்திறுத்தோர் பாத்திரத்தே (ரூ)

பாத்திரத்தில் வெங்காயம் புளி சுக்
கிட்டிளம் பதமாய் பரிந்து காச்சி
வார்த்துரீ ரீரிறுத்தோரெலுமிச்
சங்காய் மட்டளவாய் வாங்கி வெல்லஞ்
சேர்த்திதனிற் கரைத்துணவுஞ் சேயிழைக்
கூதும் வயிறு செவ்விதாகும்
மாத்திரைப்போதே வென்னீர் வார்த்
தரைவவ்வாற் புழுக்கை வயிற்றிற் பூசே (ாஈ)

(இ-ள்)

(a) நறுக்கிய குறிஞ்சா இலை 1 — சிரங்கை (கைப்பிடி) பழம்புளி — எலுமிச்சங்காயளவு

இவற்றை ஒரு பட்டணம்படி அளவு தண்ணீரில் ஊற வைத்து மேலும் 1 கால் படி தண்ணீர் விட்டு இதை அடுப்பின் மீதேற்றி ½ படியாக வற்றக் காய்ச்சி மருந்துகளை நன்றாகப் பிசைந்து சக்கையை எறிந்துவிடவும். இக்கஷாயத்தைச் சாப்பிட வயிறு வடியும்.

(b) சாறணையை சமூலமாகக் கொண்டுவந்து இடித்து, அதன் சாற்றை ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, அதனுடன் வெள்ளை வெங்காயம், புளி, சுக்கு இவைகளைச் சிறிது போட்டு இளம் பதமாக அடுப்பின் மீதேற்றிக் காய்ச்சவும். அதில் ½ படி இறுத்து ஒரு எலுமிச்சங் காயளவு (பணை) வெல்லம் சேர்த்து நோயுள்ள ஸ்திரீயைப் பருகச் சொல்லவும். ஊதிய வயிறு வாடும்.

(c) வெளவாற் புழுக்கையை வென்னீரில் நன்றாக அரைத்து அடிவயிற்றில் பூசவும்.

ஊதிய வயிறு வடியும்.

74. பிள்ளை பெற்றபோது வந்த, கோப்ப, விஷபாக பாண்டு, விக்கல், விடவும், கன்மிழமவிழவும் மருந்து

சித்திர மூலந்திராய் தேவதார
முவாய் சிறு முட் கண்டங்
கத்திரி வேர் சாரணை முட்கா வேளை
நொச்சி மூறுங்கை வில்வத்தின்

பத்திரி வாயு விளங்க நீர்மூள்வி
சமூலஞ் சுரையின் பழுப்புத் தண்டு
மெர்த்த சணல் வித்தோமஞ் சிற்ரு மல்லி
பேராமல்லியுஞ் சமூலம். (ாச)

மூங்கிலின் மேற் புரணி இலே பொன்
முசுட்டை தும்புராட்டமுன்னே மஞ்சள்
திங்கிறிப்பிலி மூலமர மஞ்சறிறிகடுஞ்
சிறு குறிஞ்சா
தாங் கண்டு பாரங்கி மாவிலங்கை
யாயில் புன்கைந் தருவின் பட்டை
வாங்குவாய்க் கோர் கழஞ்சிட்டிடி தூளிற்
கோசலம் வெள்ளாட்டு நீரும். (ாரு)

நீர்மையுள்ள சிறு நீருமிவைகள்
இடைத்த திருசேர் நீரும் விட்டுப்
பாருமுழக்காய்க் காய்ச்சிப் பருகிடவே
பிரஸ்ுதமாம் பார்த்து வந்த
வேரறும் சோபம் வீக்கம் பாண்டு
விடபாகம் வயிற்றுளே விரத்தந்
தீருங் கன்மிடஞ் சிறிதுஞ் சிக்காது
குராசானி சேர்த்துக் கொண்டே (ாசு)

சேர் சாதிக்காய் சாதிபத்திரி யோமந்
தகரத்திற் கழாய
மோ ரொன்றுக் கோர் மூன்று காசிடை
தூள் கண்டங்கத்திரி யினுள்ள
சாரமதிட்டே வெல்லத்தாற் காய்ச்சி
லேகியத்தைத் தான்றினந்தான்
சூரிய புடத்திட் டெலும் பிச்சம் பழ
நேருண சந்தி சுரமும் ஓராமே. (ாள)

சீந்தில் பற்பாடகங் கோரைக் கிழங்கு
சிறு காஞ்சோறி வேர் சிறு தேக்கெல்லா
மாய்ந்திரண்டு காசிடை கொண்டாவின்
பாலிரு சேரிட்டனலில் வைத்துப்

பூந்தேன் முன் போலிட்டுச் சர்க்கரையும்
போட்டதனிற் பொங்கு முன்னே
சாந்தமுடனே யிறக்கித் தையலார் கூட்டிட
கபங் காச்சலுந்தான் போமே. (ாஅ)

(இ-ள்)

கொடிவேலி வேர்	தேவதாரம் (சரளம்)
துராய் சமூலம்	உவாய் மரப்பட்டை
சிறு கண்டங்கத்திரி வேர்	தும்புராட்டம் (பேரரத்தை)
சாறணை இலை	முன்னை இலை
முக்காவேளை இலை	மஞ்சள்
நொச்சி இலை	திப்பிலி மூலம் (கண்டந்திப்பிலி)
முருங்கை இலை	மரமஞ்சள்
வில்வ இலை	சுக்கு
வாயு விடங்கம்	திப்பிலி
நீர் முள்ளி சமூலம்	மிளகு
சுரையின் பழுப்புத் தண்டு	சிறு குறிஞ்சான் வேர்
சணல் விதை	கண்டு பாரங்கி
ஓமம்	மாவிலங்கப்பட்டை
சிற்றாமல்லி சமூலம்	ஆயில் பட்டை
பேராமல்லி சமூலம்	புங்கம் பட்டை
மூங்கிலின் மேற்புரணி, இலை	
பொன் முசுட்டை	

இச்சரக்கு வகைகளை வகைக்கு ஒரு கழஞ்சாக எடுத்துக் கல்லுரவிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து அதனுடன்

பசுமூத்திரம்
வெள்ளாட்டு மூத்திரம்
சிறு நீர்

இவைகள் கிடைத்ததில் 2 சேர் விட்டு, ஊறிய பின் அடுப்பின் மீதேற்றி ஒரு உழக்காகச் சுண்டக் காய்ச்சவும்.

அப்பால் இதை வடிக்கட்டிப் பிரஸவித்த ஸ்திரீ தினந்தோறும் பருகி வரச் சோபம், வீக்கம், பாண்டு, விடபாகம், வயிற்றுளைவு, இரத்தம் விழுதல் முதலிய வியாதிகள் தீரும் ரத்த கல்மஷம் விழும்,

குறிப்பு :— உலகவாஸினை அறியாத சிறுகுழந்தைகளின் சிறு நீரைச் சேர்த்துக்கொள்ளவும். நெ. 91-ல் மணலிச் சமூலமும் சேர்க்கப்பட்டிருப்பதுடன், சரக்குகளை வகைக்கு 1 வராகனிடையும் மூத்திரம் 2 படியும் சேர்த்து உழக்காகக்காய்ச்சிக்கொள்ளவும் என்று காணப்படுகிறது.

(b) குராசானி ஓமம்
சாதிக்காய்
சாதிப் பத்திரி
ஓமம்
தகரம்

இவைகள் மேற்கூறிய கஷாயம் சேர் ஒன்றுக்கு 3 காசிடை வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாளனம் செய்து கொள்ளவும். கண்டங்கத்திரிச்சாறு, கஷாயத்தின் அளவு கூட்டித் தக்க வெல்லம் போட்டுப் பாகு காய்ச்சிச் சூரணத்தையும் போட்டு, (நெய் விட்டு) லேகிய பதமாகக் கிண்டி வைத்துக்கொள்ளவும். இந்த லேகியத்தைத் தினசரி சூரிய புடத்தில் வைத்து எலுமிச்சங்காயளவு உட்கொள்ளவும்.

இதனால் சன்னியும், சுரமும் நீங்கும்.

(c) சீந்தில் கொடி
பற்பாடகம்
கோரைக் கிழங்கு
சிறு காஞ்சோறி வேர்
சிறு தேக்கு

இவைகள் வகைக்கு இரண்டு காசிடை எடுத்துக்கொண்டுப் பசுவின்பால் 2 சேரில் சரக்குகளைச் சூரணித்துப் போட்டு அடுப்பின் மேலேற்றி உழக்காகச் சுண்டக் காய்ச்சி, தேனும் சர்க்கரையும் கூட்டி, பொங்குவதற்கு முன், இறக்கி, அதைப் பருக சுபசுரம் தீரும்.

75. பிள்ளை பெற்ற பிறகு இரத்தம் சாய்ந்தால் மருந்து

பொற்கம் பிதனி லெண்ணை பொருந்தவிட்டு
கம்பியச்சிற் போட்டு வாங்க
நிற்கின்ற தைலத்திலே நிம்பப் பருப்புரை
த்து நேராமுண்டை—

வற்கந்தான் றிரிகடுகம் வளமாய்க்
காய்ச்சிய நீரில் வாணிபத்தோ
ரிற்கண்ட மிளகள விட்டுணத் திரும்
பிரசூத விரத்த நோயே. (ரசு)

(இ-ள்)

பொற்கம்பியில் நல்லெண்ணெயைத் தடவிக் கம்பியச்சில் இழுத்து அச்சிலே ஒட்டியிருக்கும் துளியை ஒரு சந்தனக் கல்லில் இட்டு வேப்பம்பருப்பை நன்றாக உறைத்து (மிளகளவு) மாத்திரை செய்து, இதை திரிகடு (சுக்கு, திப்பிலி, மிளகு) கஷாயத்தில் இட்டு அருந்த பிரஸவித்த ஸ்திரீயின் இரத்த நோய் தீரும்.

76. பிள்ளை பெற்றபேர்க்கு வயிற்றில் சீழ்க் கட்டினில் மருந்து

உரியெண்ணெய் திராய் கொத்தான் விழுவிச்
சாறு உரியிதெல்லாமூடன் கலந்தே
யெரி செய்து பதத்தில் வடித்து இரண்டு பல
மிளகு சுக்கு மிரு பலந்தான்
பருமுள்ளி பலநாலு பலமரைக்கால்
கடுகோமம் பலமரைக்கால்
பொரிய வெள்ளுவெச்சென வைத்திவையெல்லாம்
பொடித்தொரு நற்புதுப் பாண்டத்தே. (ரஅ)

வைத்ததனை முன்றயிலத்தால் பிசைந்து
வெலும்பிச்ச வண்காய் மட்டாய்த்
துய்த்திடினுங் கழுவின வெள்ளுழக்களவு
பொடித்தெண்ணெய் தோய்த்துண்டாலும்
புத்தெண்ணெயுழக்கெலும்பிச்சம் பழச் சா
றுழக்கிரண்டும் பொன்னுவாரைப்
பத்திரமுமெருமை மோரினிலரைத்துப்
பருகினுஞ் சீப்பற்றுதே. (ரஅக)

(இ-ள்):

நல்லெண்ணெய் — ½ படி
திராய்ச் சாறு — ,,
கொத்தான் சாறு — ,,
விழுதிச் சாறு — ,,

இவைகளை அடுப்பின் மீதேற்றிப் பதத்தில் எரித்து வடித்துக்கொள்ளவும். இதனுடன்,

மிளகு	—	2 பலம்
சுக்கு	—	2 ,,
வெள்ளைப்பூண்டு	—	4 ,,
கடுகு	—	$\frac{1}{8}$,,
ஓமம்	—	$\frac{1}{8}$,,
எள்ளு	—	2 ,,

இவைகளைப் பொன் வறுவலாக வருத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து ஒரு புதுப் பாண்டத்தில் வைத்து மூன் தயார் செய்த தைலத்தை விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு எலுமிச்சங்காயளவு சாப்பிடவும். அல்லது,

இதனுடன், கழுவின எள்ளு — 1 உழக்கு

பொடி செய்து நல்லெண்ணெயில் தோய்த்து விழுங்கவும்.

2. நல்லெண்ணெய் — 1 உழக்கு
எலுமிச்சம்பழச்சாறு — 1 உழக்கு

இவ்விரண்டையும் கூட்டி, இதனுடன் பொன்னுவாரை இலையை எருமைத்தயிரில் அரைத்துக் (கொட்டைப் பாக்களவு) இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கொடுக்கவும்.

சீக்கட்டு, உதிரக்கட்டு இவைகள் தீரும்.

77. கெற்ப சூர மருந்து

ஒரு நாட் பட்டினியிருந்து வருநாள்
மத்தியானத்திலுடனே காய்ச்சி
வரு கஞ்சியாறவிட்டுக் கொடுத்திட
வம்மடந்தை வைக்கும் கஷாயம்
விரை செய் சந்தணச் சிராய் சுக்கு
பற்பாடக மிலாமிச்சு வேரும்
பருமுத்தக்காசு மிரு காசிடையிட்டிரு
படி நீர் பாச்சிக் காய்ச்சி (ஈமடை)

காய்ச்சி யுழக்காய்க் கொடுக்கச் சகல சுரமும்
போங்கைகண்ட தின்னும்
வாச்ச பற்பாடக முத்தக் காசு கொத்தமல்லி
நாகர வண் சீந்தில்
தேச்ச சிறு காஞ்சோறி வேரிவைதனை மூங்
தின படியே கஷாயம் செய்கை
தோச்சுச் சூடறிந்துணவுஞ் சகல
சுரமுந் திருஞ் சுகமுண்டாமே (சாமந)

(இ-ள்)

கர்ப்ப சுரத்தன்று ஒரு நாள் பட்டினி இருந்து மறுதினம் மத்தியானம் கஞ்சி காய்ச்சிக் குளிர ஆறவிட்டுச்சாப்பிடவும்.

இதற்குக் கஷாயம்:—

(a) சந்தனச் சிராய்
சுக்கு
பற்பாடகம்
விலாமிச்சம் வேர்
கோரைக் கிழங்கு

இவைகள் வகைக்கு 2 காசெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து, 2 படி தண்ணீர் விட்டு 1 உழக்காகக் காய்ச்சிக் கொடுக்க சகல ஜ்வரமும் தீரும். கை கண்டது.

(b) பற்பாடகம்
கோரைக்கிழங்கு
கொத்தமல்லி
சுக்கு
சீந்தில் கொடி
சிறு காஞ்சோறி வேர்

இவற்றை முன் போல இடித்து (வகைக்கு இரு காசிடை) 2 படி நீர் விட்டு 1 உழக்காகச் சுண்டக்காச்சிக் கஷாயம் செய்து கை பொறுக்கும் சூட்டில் சாப்பிடச் சுரம் தீரும்.

78. பிள்ளை பிறந்து சீழ்க்கட்டினபேருக்கு மருந்து

எள்ளு நாழி யூறவைத்துப் பிசைந்தும்
அதனை யிறுத்தெடுத்து
மெள்ள வுழக்குச் சாறதனில் வெங்காரந்
திப்பிலி பொருத்திட்
டள்ளிப் பொடித்தண்ணீர் கலந்து மரிவை
யருந்த வளித்திடவே
பிள்ளை பிறந்து சீய்க்கட்டும் பிணி
போமென்று பேசினரே (ாகசு)

(இ-ள்).

எள்ளு 1 நாழி எடுத்துச் சுத்தத்தண்ணீரில் நன்றாக ஊற வைத்துப் பிசைந்து, (பிழிந்து வடித்துக்கொண்டு) மேல் நிற்கும் தெளிவு நீரை இறுத்துக்கொள்ளவும். அந்த நீர் உழக்கில் வெங்காரமும் (பொரித்தது), பொரித்த திப்பிலியும் பொடித்துக்கலந்து ப்ரஸவித்த ஸ்திரீ அருந்திவரப் பிள்ளை பிறந்த பின் ஏற்பட்ட சீழ்க்கட்டுத்திரும்.

குறிப்பு :— (சூரணம் வகைக்கு 1 விராகனெடை எடுத்துக் கொள்ளலாம்)

79. பிள்ளை பெற்றபேருக்குக் கழிச்சலிரைச்சல் சீழ்க்கட்டுக்கு மருந்து

குடிநீர் படிமூன்றேர் நாழி குளிர்
நீரிதனிற் கொள்ள வித்தோர்
படியாய்க் காய்ச்சி யிறுத் துள்ளி பல
மொன்றிங்கு பல மொன்று
கடுகு வெந்தயமும் வகைக்கோர்
பலமுங் கண்டங்கத்திரி வேர
தோடு கத்திரி வேர் தூதுவளைத்
தூளோர் வகைக்குத் தோடி காலும் (ாகடு)

உழக்கு நீரிட்டோர் மூன்று நாளு
மிருபோதுகந் துண்டாற்
கழிச்ச விரைச்சலுப்பிசஞ் சீய்க்
கட்டு மூதலிக் கட்டகலும்

வழக்க மிவை காண் வயித்தியரென்று
சரபமகிபதி தான்
பழக்கமாமிவ் வாகட நூல் பகர்ந்தார்
பார்மின் பாவலரே (ாகசு)

(இ-ள்)

குடிநீர் 3 படியில் ஒரு நாழிக்கொள்ளே வேகவைத்து 1 நாழியாகும் வரை வற்றக் காய்ச்சி வடிக்கட்டி, அதில்

உள்ளிப் பூண்டு	— 1 பலம்
பொரித்த பெருங்காயம்	— 1 பலம்
கடுகு	— 1 பலம்
வெந்தயம்	— 1 பலம்
கண்டங்கத்திரி வேர்	— ¼ பலம்
கத்திரிவேர்	— ¼ பலம்
தூதுவேளே வேர்	— ¼ பலம்

இவைகளெல்லாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்து அரைத்துக் கொள்ளுக்கஷாயத்திலிட்டு, அடுப்பின் மீதேற்றித் திரும்பவும் ஒரு உழக்காகக் காய்ச்சிக் கொள்ளவும்.

இதைத் தினமொன்றுக்கு இரு வேளே வீதம் மூன்று நாள் சாப்பிடக் கழிச்சல், இரைச்சல், உப்பிசம், சீழ்கட்டு முதலியவைகள் அகலும்.

80. பிள்ளேயிலில் வந்த விக்கல் வாந்தி தீர மருந்து

சிறு தேக்கு திப்பிலி கற்கடகச்சிரிங்கி சிறு
வழுதலையிலைகாய் சேரக்கூட்டி
புறம் வேடுகட்டிப் புட்டவியலாதல்
பொருந்து கடாயமாதல் பொரியிந்துப்புச்
சிறு தூள் செய்திட்டா நெய் தேன் கலந்து
தினச் சுவாச காசமு நெஞ்சிற் கட்டாதி
யுறு நோயு மேன் மூச்சுமு பாதியாது
உண்மைச் சரபேந்திரனுரைத்தவாரே. (ாகள)

(இ-ள்)

சிறு தேக்கு
திப்பிலி
கற்கடச்சிரிங்கி
சிறுவழுதலை இலை
,, காய்

இவைகளை (சமமாக) எடுத்து வேட்டில் வைத்துப் புட்ட வியலாகிலும் அல்லது கஷாயமாகிலும் செய்து இந்துப்பைப் பொரித்துக் கூட்டித் தேனும், பசு நெய்யும் கூடக் கலந்து, சாப்பிடச் சுவாசம், மேல் மூச்சு, நெஞ்சுக்கட்டு முதலியவைகள் தீரும்.

---

9. பிறந்த குழந்தைகளுக்கு மருந்துகள்

81. பிள்ளை பிறந்ததற்கு மருந்து

பிள்ளை பிறந்திடு முதலுள் பெருத்த சேங்
கொட்டையொன்று பிழிந்தெடுத்தே
கிள்ளை மொன் மூலைப்பால் கிடைத்தது கொண்
டதிற் போட்டுக் கிளறிக் காய்ச்சி
யுள்ள பாலினை யிறுத்து யொரு மூன்று முறை
கொடுத்திட்டுட்டு மென்றே
வள்ளல் சரபேந்திரனுர் வசனித்தார்
நிசமுற்ற மருந்தைத்தாமே. (ாகஅ)

(இ-ள்)

ஒரு முற்றிய சேராங்கொட்டையைக் கொண்டுவந்து நன்றாகச் சுத்திசெய்து தாயின் பாலிலிட்டுக் காய்ச்சியபின், அப்பாலதனை இறுத்து 3 வேளை குழந்தை பிறந்த அன்று கொடுக்கவும்.

82. குழந்தைக்கு மருந்து

மருந்தாகும் பரங்கிப்பட்டையை நறுக்கிச்
சிறு நீரை வார்த்தூறச் செய்
திரண்டானுட் புகட்டிடவுமிதின் மேன்மூன்று
நாளுக் கிசை மருந்து
பரிந்து கொள் சங்கதாரிப் பட்டை சங்கன்
பட்டையுடன் பார்த்து வாங்கு
கருஞ்சீரகத்திணியும் நறுக்கியதைச்
சிறு நீரிற் கலந்து வைத்தே. (ாகக)

வைத்தூற வீட்டிறுத்து வைத்துக் கோரோ
சனீயும் வைத்துரைத்தே
பத்திரமாகப் புகட்டிப் பார் நாலா
நாளிலுள்ள பரு வசம்புங்
குத்திடு கூரச் சங்கிலையுங் கூட்டி நறுக்
கிச் சிறு நீர் கொண்டூறச் செய்
தத்தினமே துவைத்துச் சாற்றைப் பிழிந்து
முறிச் சூட்ட லாநாற் போதே. (ாஉய)

(இ-ள்)

2-வது தினத்தன்று பரங்கிப் பட்டையைச் சிறு நீரில் ஊரவைத்து நாலு தடவை புகட்டவும்.

3-வது நாளன்று சங்கம் பட்டை, செங்கதாரி பட்டை, கருஞ்சீரகம் இவற்றைச் சிறு நீரில் நன்றாக ஊரவைத்து இடித்து வைத்துக்கொண்டு கோரோசனையும் கூடச்சேர்த்து உரைத்துப் புகட்டவும்.

*4-வது நாளன்று சங்கன் இலை, வசம்பு, இவைகளை நறுக்கிச் சிறு நீர் விட்டு ஊறவைத்து அதை நசுக்கி அந்த சாற்றைப் பிழிந்து முறித்து ஒரு நாளைக்கு 4 முறை புகட்டவும்.

குறிப்பு :— * உலக வாசனையறியாப் பிள்ளையின் சிறுநீரை எடுத்துக் கொள்ளவும். 91 கெ. சுவடியில் உள்ளியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

83. குழந்தைகளுக்கு மருந்து

ஆமஞ்சாநாளுசி மல்லிகையினிலே வசம்
போடாகு முள்ளி
சேமஞ் செய்சிறுநீர் விட்டேர வைத்துச்
சாறு பிழிந்தே முறிச்சுத்
தாமஞ்சாதூட்டிட வப்பாலாரு நா
ளுள்ளிதான் வசம் போ
டேமஞ் சார்ரா தொண்டையுள்ளி வசம்பினைச்
சிறு நீரினிற்று வைத்தே. (ாஉக)

துவைத்ததனைப் பிழிந்து முறிச்சுக் கொடுத்
தேழ் தினத்தில் கருந்துமாய் வசம்புற்
பவித்திடுள்ளி வேலையிலை பறித்து முறித்
துக் கொடுக்கப் பகலெட்டாகிற்
சிவத்திடு செங்கதாரி யுள்ளி வசம்பினைக்
கூட்டிச் சிறுநீர் விட்டுத்
துவைத்து முறிச்சுக் கொடுக்கச் சொல்
லொன்பதாந் தினந்தூது வலையுள்ளி. (ாஉஉ)

உள்ள வசம்புடனே செம்முள்ளி தேட்
கொடுக்கி யிலை யுடன்று வைத்து
மொள்ளு சிறு நீர் விட்டு முறித்தெடுத்துக்
கொடுத்திடவு மொழி பத்தா நா
ளுள்ளி வசம் போம மிளகுள்ளதை யெண்ணை
யினறுக்கி யூரப் போட்டு
மெள்ளவுங் காச்சியு மிறுத்துக் கொடுத்திடெனச்
சர்பேந்திரர் விளம்பினரே. (ாஉங)

(இ-ள்)

5-வது நாளன்று ஊசி மல்லிகை இலை, வசம்பு, உள்ளி, இவைகளைச் சிறு நீர் விட்டு நன்றாக ஊறவைத்து, நசுக்கிச் சாறு பிழிந்து, முறித்து, உள்ளுக்குப் புகட்டவும்.

6-வது நாள் உள்ளி, ஆதண்டையிலை, வசம்பு இவற்றைச் சிறு நீரில் ஊறவைத்து, நசுக்கிப் பிழிந்து முறித்துக் கொடுக்கவும்.

7-வது நாள் கருந்துளசி, வசம்பு, உள்ளி, இவற்றோடு * வேளை இலையும் சேர்த்து முறித்துக் கொடுக்கவும்.

8-வது நாள் செங்கதாரி இலை, உள்ளி, வசம்பு இவைகளைக் கூட்டிச் சிறு நீர் விட்டு நசுக்கிப் பிழிந்து முறித்துக் கொடுக்கவும்.

9-வது நாள் தேள் கொடுக்கு இலை, தூதுவேளை இலை, செம்முள்ளி இலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு இவைகளைச் சிறு நீர் விட்டு நசுக்கிப் பிழிந்து, முறித்துக் கொடுக்கவும்.

10-வது நாளன்று மிளகு, உள்ளி, ஓமம், வசம்பு இவற்றை எண்ணெயிலிட்டுச் சிவக்கக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும்.

84. கை குழந்தைகளுக்கு மருந்து

விளம்பு பதினேரா ளாளீர வெங்காயந்
துளசி விதமிரண்டும்
உள்ளங்கையினிலே கசக்கி யெண்ணெயிலூ
றப் போட்டு முடனே காச்சி
யிளம் பதமாயிறுத்துக் கொடுக்கவும்
பன்னி ரண்டா ளாளினில் வெங்காயந்
தளந் தளமாய் முசு முசுக் கையிலை நறுக்கிப்
போட் டெண்ணெ தன்னிற் காச்சே. (ாஉச)

எண்ணெ தன்னைப் பதிமூன்று நாட் புகட்டிக்
கோவையினல் லிலையினேடே
தண்ணீர வெங்காயந்தனை நருக்கி
முன்னெண்ணெ தன்னிற் காச்சி
யெண்ண முடனே கொடு ளாளீரே
ழிற் றாது வளையிலை யினேடே
யுண்ணீர வெங்காய மெண்ணெயி
லூற காச்சி யூட்டலாமே. (ாஉரு)

---

*வேளைக்கு பதில், வட்ட கிலுகிலுப்பை இலை என 91 செ. சுவடியில் காணப்படுகிறது.

ஊட்டு பதினைந்தா நாள் வெங்காயம்
பழம்பாசி யுளவேரெண்ணை
கூட்டு கொடு பதினாறு நாள் கீழ் காய்
நெல்லி வேர் தளிர் வெங்காயம்
போட்டு நறுக்கெண்ணையினிற் போட்டுக்
காய்ச்சியுமிதனைப் புகட்டென்றே சோ
ணாட்டரசர் சரபேந்திரர் நவிற்று முறை
புவித்தலத் தென்னாளும் வாழவே. (ாஉசு)

(இ-ள்)

11-வது நாள் துளசியிலையும் ஈர வெங்காயமும் நறுக்கி இரண்டையும் உள்ளங்கையினால் நன்றாகக் கசக்கி எண்ணெயி லூறப்போட்டு அடுப்பின் மீதேற்றிக் காய்ச்சி இளம் பதமாக வடித்துக் கொடுக்கவும்.

12-வது நாள் வெங்காயமும், முசுமுசுக்கை இலையும் நசுக்கிப் போட்டு எண்ணெயிலிட்டு இளம் பதமாக வடித்துக் கொடுக்கவும்.

13-வது நாளன்று, தோவையிலை, ஈர வெங்காயம் நறுக்கி எண்ணெயிலிட்டுக் காய்ச்சி உள்ளுக்குப் புகட்டவும்.

14-வது நாள் தூதுவேளை இலையும் ஈர வெங்காயத்தையும் நறுக்கி எண்ணெயிலூறவைத்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

15-வது நாளன்று, பழம் பாசி வேரும், வெங்காயமும் எண்ணெயில் ஊறவைத்து வடித்துக் கொடுக்கவும்.

16-வது தினத்தன்று, கீழா நெல்லி வேரையும் ஈர வெங்காயத்தையும் நறுக்கி எண்ணெயில் ஊறவைத்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

குறிப்பு :—

இம்முறைகளிலெண்ணெய் வருமிடங்களில் "ஆமணக் கெண்ணெயை" எடுத்துக்கொள்க.

10. முலைப்பால் சுரக்க மருந்துகள்

85. முலை சுரக்கமருந்து

கஞ்சா இலையை ஏழுதரம் வருத்துக்
கருகாதெடுத்துப் பொடித்ததின் மேல்
விஞ்சு பனிவெல்லமும் வறுத்த விரை
யெட் பொடிகளிவை சமமாய்
தஞ்சமாயோர் பிடியளவு தா
னுண்டதன் பின்றயிரசனம்
வஞ்சியுண்டான் முலை சுரக்கு மக
வுண்டாடி மகிழ்ந்திடுமே (ாஉள)

(இ-ள்)

கஞ்சாயிலையை வாணையிலிட்டு ஏழுதடவை கருகாமல் திரும்பத் திரும்ப வறுத்து, அதேபோல் எள்ளையும் வறுத்து இவற்றிற்குச்சமமாகப் பனிவெல்லம் சேர்த்து நன்றாக இடித்து வைத்துக் கொண்டு, 1 பிடியளவு சாப்பிட்டு இதற்கு மேல் தயிர் சாதம் சாப்பிடவும். இப்படிச் செய்தால் பால் நன்றாகச் சுரக்கும்.

86. முலைப் பால் சுரக்க மருந்து

நான்கு தரத்தோடாறு தரநன்
மீனதனைக் கழுவியதைத்
தானே யூற்றிப் பின் கழுவுந் தண்
ணீரதிற் பற் பாடகத்தை
பான்மையாகவே யரைத்துப்
பருகின் முலைப்பால் சுரந்து வரு
மான் பாணஞ் சரபேந்திர
மகிபனுரைத்த வாறிதுவே (ாஉஅ)

(இ-ள்)

மீனை 4 முதல் 6 தடவை கழுவிய நீரதனைக் கொட்டி விட்டு, அதன் பின் கழுவிய தண்ணீரினால் பற்பாடகத்தை நன்றாகவரைத்து பருகினால், ஸ்திரீக்கு முலைப்பால் சுரக்கும்.

87. பால் சுரக்க மருந்து

பாதிரி வேரைப் பசுவின் பாலிலரைத்தே யந்தப்
பசுவின் பாலின்கண் துறவே
சேர்த்தினிது விருப்பமுள
சர்க்கரையும் விரைவாய்க் கூட்டிக்
காதலுடனே பருகி வரக் கனத்த,
முலைப்பான் மிக வுண்டாம்
நீதியுயர்ந்த சரபேந்திர
நிருபனுரைத்த முறை யிதுவே. (ரா உசு)

(இ-ள்)

பாதிரி வேரைப் பசுவின் பாலிலரைத்து, நன்றாக அந்தப் பாலிலேயே குழப்பிச் சர்க்கரை சிறிது சேர்த்துத் தினந் தோறும் பருகி வர, முலைப்பால் அதிகமாக உண்டாகும்.

88. மாதா முலை சுரக்க மருந்து

குன்றியிலை முத்திருக்கஞ் செவியினிலை
யிவை யிரண்டுங் குளிர் மோரிட்டு
நன்றாகவே யரைத்து அம் மோர் தனிற்
கலந்துணினு நயந் தாலம் பால்
கன்றுவின் பால் தனிற் பிரைகுத்தி
வைத்த தயிர் கலந்தசனத்தோ
டன்றே தான் அருந்திடினும் பால
னருந்திட முலைப்பாலதிக மாமே (ரா நம)

(இ-ள்)

(a) குன்றியிலையையும், முத்தெருக்கஞ் செவியின் இலை யையும் குளிர்ந்த மோர் விட்டு நன்றாக அரைத்து, அந்த மோரி லேயே குழப்பிச் சாப்பிட முலைப்பால் விருத்தியாகும்.

(b) கன்றுள்ள பசுவின் பாலில் ஆலம்பால் உரைக்குத்தி வைத்துத் தயிரான பின் அதைச் சாப்பிட்டு வர முலைப்பால் அதிகமாகும்.

89. முலை சுரக்கு மருந்து

பாதிரிவேர் மருதாணி வேரிவைகளி
ரண்டினையும் பரிந் தரைத்துச்
சேதாவின் பாலுடனே குடிக்க முலை
சுரக்கு மிது தினந்தான் மூன்றுங்
காதலுணர்விற் பருகக் காவிரி
கங்கையுமி தெனக் காணும் பாலக
னுதலினுலிம் மருந்தைப் பருகு மெனச்
சரபேந்திர ரருளினுரே (ராகஉ)

(இ-ள்)

பாதிரி வேர்
மருதாணி வேர்

இவ்விரண்டு வேர்களையும் நன்றாக அரைத்துச் சிவப்பு நிறப் பசுவின் பாலில் குழப்பிக் குடிக்கத் தாய்ப் பால் காவேரி, கங்கை இவைகளின் பிரவாகம் போன்று அதிகமாகும்.

90. முலை சுரக்கு மருந்து

பாதிரி வேர் கூவிளை வேர் தான்றியின் வேர்
மூன்றினையும் பசுவின் பாலின்
மாதரைத்துப் பருக வனப்பு முலை சுரக்
கு மாவாரை வேரின்
மேதியினல் வெண்டயிரை விட்டரைத்துக்
கொள்ளவுமே விம்மி விம்மி
யாதரவால் பாலகருக் கமுதம் போன்
முலை சுரக்கு மிரிவை மார்க்கே (ராகஉ)

(இ-ள்)

1. பாதிரிவேர், வில்வவேர், தான்றியின் வேர், இம்மூன்றையும் பசுவின் பாலிலரைத்துத் தினந்தோறும் பருக முலைப் பால் சுரக்கும்.

2. ஆவாரை வேரை எருமைத் தயிர் விட்டு நன்றாக அரைத்துச் சாப்பிட்டாலும் முலைப்பால் விருத்தியாகும்.

91. முலை சுரக்கு மருந்து

நெல்லிப் பருப் போர் பிடி யேலரிறுத்
தோர் பிடியு நெடிதரைத்துச்
சொல்லிச் செய்யுஞ் சிறு கடத்திற்
ரெரு குத்திட்டந்தத் தோண்டியினன்
னெல்லுக் கஞ்சி வடித்திரவி
னிறுத்தி யன்னெற் கஞ்சியினீர்
வெல்லத் தரம்பைக் கனி பிசைந்து
உண்விம் முலைப்பான் மிகச் சுரந்தே (ாஙஙு)

(இ-ள்)

ஒரு பிடி ஏலக்காய், ஒரு பிடி நெல்லிப் பருப்பும் சேர்த்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து ஒரு புதிய மட்பாண்டத்தினுள் தடவி அதில் இராத்திரி நெற்கஞ்சி வடித்து வைத்து, விடியற்காலத்தில் அக் கஞ்சியுடன் நல்ல வெல்லம், வாழைப் பழம் இவை இரண்டையும் கூட்டிப் பிசைந்து கொடுக்க முலைப் பால் சுரக்கும்.

92. முலை சுரக்கு மருந்து

குருந்தின் மேற் புல்லுருவி கொய்து புன்னைக்
காயளவு கொண்டரைத்து
விரைந்தாவின் பாலாதல் வெள்ளாட்டுப்
பாலாதல் விட்டொன்றாகக்
கரைந்து வரச் செய்தெடுத்துக் கொடுக்க
முலை சுரக்கு மெனக் கண்ணிரண்டாம்
புரந்தரனாகிய சரப புண்ணியனூர்
புகன்ற முறையைப் புகழுவோமே (ாஙச)

(இ-ள்)

குருந்தின் (காட்டு நார்த்தை அல்லது எலுமிச்சை) மேல் வளரும் புல்லுருவியைக் கொண்டுவந்து, தண்ணீர் விட்டு அரைத்துப் புன்னைக் காயளவெடுத்துப் பசுவின் பாலிலோ அல்லது வெள்ளாட்டுப் பாலிலோ குழப்பிச் சாப்பிடத் தாய் பால் விருத்தியாகும்.

93. முலை சுரக்கு மருந்து

பாதிரியின் வடக்கேகும்பரு வேரை
யெலுமிச்சம் பழச் சாறிட்டே
யாத ரவிஞ்லரைத்துப் பசுவின் பா
லிற் கலந்து மளிக்கவே தான்
சூதளவாகிய முலைகள் சுரக்கு மெனச்
சர பேந்திரர் தோணச் சொன்ன
மூதுரையாகிய விந்தவாகட நூ
லினையுகந்து மொழிதனன்றே. (ாஙரு)
(இ-ள்)

பாதிரி மரத்தின் வடக்கே போகும் பருமனை வேரைக் கொண்டுவந்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் பாலில் கலந்து சாப்பிடத் தாய் பாலைச் சுரக்கச் செய்யும்.

---

11. முலைப்பால் குடியாத பிள்ளைகள் பால் அருந்த மருந்துகள்

94. முலையுண்ணுத பிள்ளைகட்கு

சதுரக் கள்ளி யினடியின் முளைத்த பூண்டினைக்
காப்புச் சதுராய்க் கட்டி
யதின் வேரைக் கழுத்தினிற் கட்டவு முலைப்
பாலுண்பதற்கே யாவலுண்டாம்
யிதமுடனே தாரணியிலிருப்பவர்களி
யாவர்கட்டு மியல்பதாக
வதர பவள மலர்ந்து சரபேந்திர
மகரா சரருள் செய்தாரே. (ாஙசு)
(இ-ள்)

சதுரக்கள்ளியினடியில் முளைத்த பூண்டு ஏதேனும் ஒன்றுக்குக் காப்புக்கட்டி அதன் வேரை எடுத்துக் குழந்தையின் கழுத்தில் கட்டவும். குழந்தை முலைப்பாலுண்ணத் தொடங்கும்.

95. முலைப்பாலுண்ணுத குழந்தைக்கு

அதிமதுரம் பசுவின் பால திலரைத்
தாகத்தினிலே யடை வாய்ப்பூசி
யிதனை நெய்யிற் குழைத்துச் சேயின்
றலையிலே தடவிலினி தாயுண்ணு
மதி மதுர முலைப் பாலில ரைத்துள்ளுக்குங்
கொடுத்திட்டாலு முண்ணும்
பதருதிப்படி வுடம்பிற் பூச
முலைப்பாலுண்ணும் பரிசிதாமே. (ராகுஎ)

(இ-ள்)

(a) அதிமதுரத்தைப் பசும் பாலிலரைத்து தாயின் மார்பிலெங்கும் பூசி, நெய்யில் குழைத்துக் குழந்தையின் தலையிலும் தடவினால் குழந்தை பால் குடிக்க ஆரம்பிக்கும்.

(b) அதிமதுரத்தை முலைப் பாலிலரைத்து உள்ளுக்குக் கொடுத்தாலும் பால் குடிக்கும். இதையே குழந்தையின் உடம்பிலும் பூசப் பால் குடிக்கவாரம்பிக்கும்.

96. முலைப்பால் குடிக்காத பிள்ளைகட்கு

முலை குடியாப் பாலகர்க் கிந்துப்புப்
பசு மஞ்சள் முலைப்பாலி வார்த்து
நில்லாமலேயரைத்து நெய்யிற் குழைத்து முலைக்
கண்ணிலிட நிதமுந்தானே
கவ்வலெனச் சலங்கை யொலி காண்மடி
மீதிருந்து கைக்கொண்டுண்ணும்
நலஞ் செயுமிம் மருந்தினைச் சேய்
நாவிலிடவு முலைப்பா லுடுந்தானே. (ராகுஅ)

(இ-ள்)

இந்துப்பு, பசு மஞ்சள் இவ்விரண்டையும் முலைப்பால் விட்டுச் சிறிது அரைத்து நெய்யில் குழைத்துத் தாயாரின் ஸ்தனக்கண்களில் தினந்தோறுமிட்டுக் குழந்தையைக் குடிக்கச் செய்ய அது குடிக்கவாரம்பிக்கும். இதையே குழந்தையின் நாக்கிலுந்தடவலாம்.

97. முலையுண்ணைப் பிள்ளைகட்கு

முலையுண்ணைப் பிள்ளைகட்குத் தலைமயிரும்
மயிலிறகு முழுக்கச் சுட்டே
நிலைமையுடனே பொடித்து முலைப்பாலி
லே புகட்ட நினைத்துக்கொண்டே
குலவி முலைதாவெனவெ குடித்திடும் புத்
திரரெனவிக் குணங் கண்டேதான்
றலைமை யுள்ள சரபேந்திரர் சாற்று முறை
நாற்றிசையுந் தழைக்குந்தானே. (ாநகூ)

(இ-ள்)

தலைமயிரையும், மயிலிறகையும் வாணையிலிட்டுக் கருக வருக்கப் பொடியாகும். இதைப் பாலில் கலந்துக் குழந்தைக்குக் கொடுக்கப் " பால் கொடு " எனக்கேட்கும்படியாகக் குழந்தை பால் குடிக்கும்.

---

12. குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங்களுக்கு மருந்துகள்

98. குளி தோஷ மருந்து

வெள்வேல் வடக்குப்போம் வேர்க்கு
முதனுள் காப்பு விழைந்து கட்டிக்
கொள்வாய் பலியுங் கொடுத்ததனைக்
கொணர்ந்து காடி சேர்த்தரைத்து
உள்ளுங் கொளச்செய் பொட்டணங்கட்
டுடனே காடியுறத் தோய்த்தும்
மெள்ள வாயிற் பிழிந்திடவுங்
குளி தோடந்தான் விட்டறுமே. (ாசல)

(இ-ள்)

வெள்வேலம் வேர் வடக்கு நோக்கிப் போகும் வேருக்குக் காப்புக் கட்டிவிட்டு மறுநாள் பலிகொடுத்து அதைக்கொண்டு வரவும். இதை நசுக்கி ஒரு பொட்டணமாகக்கட்டிக் காடியில் தோய்த்துக் குழந்தை வாயில் பிழியவும். குளி தோஷம் தீரும்.

99. குழந்தைகள் தோஷங்களுக்கு மாத்திரை

சங்கு சிறு செருப்படிவேர் தண்ணீர்
மீட்டான் கிழங்கு தானன்னரி
யங்கு சிறுகாஞ்சோறி வேரைந்துள்ளி
நாலென்னு மளவ தான
கொங்கு மிளகிவையரைத்துக் கொண்டிதனை
மிள்களவாய்க் கொள்ளக் கொள்ள
மங்கு மைந்தர் தோழம் பொருதேக
வாகறிந்து மாற்றிரையை நல்கே. (ராசக)

(இ-ள்)

சங்கம் வேர்
சிறு செருப்படி வேர்
தண்ணீர்விட்டான் கிழங்கு } (இவை வகைக்கு 1 கழஞ்சு)
நன்னரி
சிறுகாஞ்சோறி வேர்

உள்ளி — (5 கழஞ்சு)
மிளகு — (4 கழஞ்சு)

இச்சரக்குகளைத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, மிளகு அளவாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு, குழந்தையின் தேக வாகறிந்து ஜாக்கிரதையாக, மாத்திரையை உபயோகப்படுத்தப் பலவித தோஷங்களும் தீரும்.

100. தோஷத்தில் மலசலங்கட்டினால் மருந்து

உத்தாமணிச் சாறதனிற் றிப்பிலி
யையுரைத்தே யுச்சி பிடர்
வைத்திட்டுஞ் செம்முள்ளி கரு
முள்ளியுடனே வுள்ளி கண்டங்

கத்தாரி வேரரைத்துண வக்கணமே
தோடங்கன்மிடங்கள்
சித்த மிவை தான் சுத்தியதா
மென்ரூர் சரபேந்திரனரே. (ரசஉ)

(இ-ள்)

உத்தாமணிச் சாற்றினில் திப்பிலியை உரைத்து, தோஷ முள்ள குழந்தையின் தலையுச்சி, பிடரி முதலிய இடங்களில் தடவவும். உள்ளுக்கு, செம்முள்ளி, கருமுள்ளி, கண்டங் கத்திரிவேர் இவைகளைச்சமமெடுத்துத் தண்ணீரில் அரைத்துச் சாப்பிட, அந்த க்ஷணமே சகல தோஷங்களும், கன்மிடங்க ளும் தீரும். மல ஜலம் விடும்.

101. எடுப்புத்தோட மருந்து

விடத் தேரை சித்தையென வினவுமிரு
வகையான வேர்க்கனின்று
வடக் கெரி பாந்தூது வினை வள வேரைத்
திங்களெனும் வாரங் காப்பு
திடத்துடனே கட்டியுஞ் செவ்வாய் கிழமை
பலியுடனே சிறப்புச் செய் தூல
எடுப்புத் தோடந்த விருமென்று
சரபேந்திரனுரிசைந்த வாறே. (ரசஙூ)

(இ-ள்)

விடத்தேரை வேர், சித்தை வேர் இதனருகிலிருந்து வட க்கே போன தூதுவளை வேர் இவைகளுக்குத் திங்கள்கிழமை யன்று காப்புக் கட்டிச் செவ்வாய்க்கிழமை பலிகொடுத்து, அவைகளை வெட்டி வந்து குளிசம் செய்து தரித்துக்கொண் டால் எடுப்புத் தோடம் தீரும்.

102. எடுப்புத் தோடத்திற்கு மருந்து

மூத்தெருக்கஞ் சிறு பூளை சீதவுரி
வேர் வெள்ளி முளைத்தபோதே
புத்திநிறை சந்திரற்குப் பொங்கலிட்டுத்
தேங்காயைப் புடைத்துடைத்து

வைத்தது வேர் வெட்டிவந்து கன்னி
கழியாப் பெண்டான் வருந்தி நூற்ற
குத்திரமில்லா நூலாற் குளிசங்
கட்டவுந் தோடங்குலைந்து போமே (ராசரு)

போமே புண்ணுக்கு வேர் புலிதுடக்கி
வேரிதனைப் போற்றி வாங்கி
மாமே வில்லிற் கிரந்திவேர்
சுத்தியாயதன்மேல் வைத்தபோதே
தாமேகியம்மான் பச்சரிசிவேர் சுத்தி
ரண்டுந்தானெண்ருய்ச்சுத்
தோமெனவே குளிசங்கட்டிடப்பலி செய்
யாண் பிள்ளைக்கொரு பெண்கோழி (ராசசு)

பெண் பிள்ளைக்கொரு சாவல் பெலியிட்டுக்
குளிசமிடப் பில்லித் தொட்ட
நண்புடனே மென்றினிதாய் தங்கள்
சரபேந்திரனுர் கவிலாயுணர
லுண்மையிது கண்டவரே யுத்தமர்கள்
குத்திரத்தையுடனே தீர்க்குந்
திண்மையரென்றே யெவருஞ்சேர்த்திடுவா
ராம் பரிசு செப்பினேமே (ராசள)

(இ-ள்)

(a) முத்திருக்கஞ் செவிவேர்
சிறுபூளை வேர்
சீதவுரி வேர் (அவுரி வேர்)

இம் மூன்று வேரும், அதிகாலையில் சந்திரனுக்குப் பொங்கலிட்டுத் தேங்காய் உடைத்த பின்பு, அவ்வேர்களை வெட்டி வந்து, கன்னியாப் பெண் (சிறுமி) நூற்ற நூல் கொண்டு வந்து குளிசங்கட்டவும் தோஷங்கள் தீரும்.

(இ-ள்)

(b) புலிதுடக்கி வேர் (இரண்டு வேர்)
பிண்ணுக்குக்கீரை வேர்

இவ்விரண்டையும் முதலில் முறுக்கிக் கொள்ளவும். பின்பு, வில்லிகிரந்திவேர் (விஷ்ணுக்ராந்திவேர்) எடுத்து

அதன் மேல், அம்மன் பச்சரி வேரைச் சுற்றிவிட்டு முதலில் முறுக்கி வைத்திருக்கும் வேரையும் இதனுடன் சுற்றவும். இதைக் குளிசமாக்கி ஆண்பிள்ளைக்கு ஒருபெட்டைக்கோழியும் பெண்பிள்ளைக்குச் சேவலையும் பலிகொடுத்துத் தோடம்பட்ட குழந்தைக்குத் தரிக்கச் செய்யவும். தோடம் தீரும்.

103. திட்டிதோஷ/கிராணிக்கு மருந்து

அச்வகந்திக் கிராணியின் மஞ்சனத்தியிலை
யிரண்டு பிடியரிந்து கொண்டே
யசமதாகங்கூடச் சேர்த்தொரு பாண்டத்
தனலிட்டதை வருத்து
நிசமாக வொருபடி தண்ணீர் விடிடதுரி
நீராய் நிற்கக் காச்சி
வசம்போ மந்திரிகடுகம் வண்காயம் வெண்
காரம் வருத்திடித்தே (ாசஅ)

இடித்துயிந்தக் கழாயத் தினிடி தூளிட்டே
குழம்பா மென்னக் காச்சி
யடுத் தந்தி சந்தியுமே மூன்று நாளுணத்
தோட் மகலுமப்போ
தெடுத்த கழிச்சல் பொருமலிரைச்சல சீரண
மிதெலா மிராது நன்ரு
மடுத்து வந்தோரைக் காக்கு மண்ணல்
சரபேந்திரனுரருள் செய்தாரே (ாசக)

(இ-ள்)

அச்வகந்தி (அமுக்குரா கிழங்கு)
மஞ்சனத்தி இலை (நுணை இலை)-2 பிடி
ஓமம்

இவற்றை ஒரு சட்டிலிட்டு வருத்து இதனுடன் 1 படி ஜலம் விட்டு ½ படியாக வற்றக்காய்ச்சி

வசம்பு
ஓமம்
சுக்கு
மிளகு
திப்பிலி
பொரித்த பெருங்காயம்
வெங்காரம் (பொரித்தது)

இவற்றை வகைக்கு ½ பலம் எடுத்து வறுத்துச் சூரணம் செய்து மேற் சுஷாயத்திலிட்டுக் குழம்பாகக் காய்ச்சி,

இதைக் காலையிலும் மாலையிலும் 3 நாள் கொடுக்கத் தோஷங்கள் தீரும். கழிச்சல், பொருமல், இரைச்சல், அஜீரணம் முதலியவைகளும் தீரும்.

104. குளிதோஷத்திற்கு மருந்து

வேலிப்பருத்தி யிலை குப்பைமேனி
யிலையுமே தண்ணீரால்
அங்கதனைப் பிசைந்தடை வாயங்
கைதனின் மங்கைய ரெடுத்து
பாலகன்றன் (றன்) றலை தனினும்
பரிவதாகப் பெற்றெடுத்த
கோலமடந்தை தலைதனினுஞ்
சொரியப் போமே குளி தோடம் (ாருல)

(இ-ள்)

வேலிப் பருத்தியிலை
குப்பைமேனியிலை

இவ்விரண்டையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துப் பிசைந்து குழந்தையின் தலையிலும், ஸ்திரீயின் தலையிலும் சொரியக் குளி தோடம் தீரும்.

105. குளிதோடத்திற்கு மருந்து

வடக்கே போஞ்சடைக் கஞ்சாவலு வேரைத்
தான் சுக்கிரவாரத் தேகுக்
குடத்தினையே பலி கொடுத்துக் கொள் வேரைக்
கோதையர்க்குக் குளிச மாய்க்கட்
டிடத்தினிலுங் குளி தோட மிரா தெனவே
சரபேந்திர ரெடுத்துச் சொன்ன
வடக்க முரை யறிந்த வரை நடத்த நலத்
தோரெனவே யறியலாமே. (ாருக) [b]

(இ-ள்)

வடக்கே போகும் சடைக் கஞ்சாவின் பருத்த வேரைச் சுக்கிர வாரத்தில் (வெள்ளி கிழமை) ஒரு கோழியைப் பலி கொடுத்து பின்பு, அதன் வேரை ஸ்திரீக்கும் குழந்தைக்கும் இடுப்பில் குளிசமாகக்கட் டக் குளிதோடம் தீரும்.

106. (a) பட்சி தோடத்திற்கு மருந்து

விடத் தேரிலையும் படர் விழலின்
மிகுந்த தளிருமே கருக்கிக்
கொடுக்க வாங்கித் தலையுச்சி குளிரப்
பிழிந்தக் கோதினைப் பெண்
மடிக்குள் கட்டப் பொட்டணமாய்ப்
பறவைத் தோட மாறி விடு
மிடைத் தட்டினிற் கட்டவு மினி
தென்றி சைத்தார் சரபேந்திரனுரே. (ாருஉ)

(இ-ள்)

விடத்தேரி இலையும்
விழல் புல்லின் தளிரையும்

ஒரு சட்டியிலிட்டு நன்றாகக் (நருக்கி) தலை, உச்சி முதலிய இடங்களில் அதன் சாற்றைப் பிழிந்து, பிழிந்த கோனத, பெண்ணின் மடியில் கட்டவோ அல்லது குழந்தையின் இடையில் கட்டினாலும் பறவை தோஷம் மாறும்.

106. (b) பட்சி தோடத்திற்கு மருந்து

கடுகு மிளகு கரி சாரங்கண்ணி
கீழ்காய் நெல்லியும் புள்
ளடியாவின் பால் வார்த்தரைத் தெண்
ணெயினிலிட்டங் கருந்திடவே
படும் மிதினிலாம் பாலகனுக்குப் பட்சி தோடம்
பறக்கு மென்க
கடலின் கட்டிற் சுழித்தெழுங்
காவிரி நாடாளு மன் கட்டுரையே. (ாருஈ)

(இ-ள்)

கடுகு
மிளகு
கரிசாரங்கண்ணி
கீழா நெல்லி
சிறுபுள்ளடி

இவற்றை பசும்பாலிலரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்கப் பட்சி தோஷம் தீரும்.

107. பிள்ளை தேரை நோய்க்கு மருந்து நெய்

சிறுக் கீரை சவரிக் கொத்தோரி தம்த்
தாமரை கோவை சிறு நெரிஞ்சி
கறிக்காகுங் கொடிப் பசளை யவுரி தூது
வகளவிட்டுணு கரந்தி சீந்தில்
முறை பொன்னுங்காணி நிலக்குமிழ் முதிர்ந்த
செருப்படி மொய் முசுமுசுக்கை
தறை காட்டு மல்லிகை மாதளை நெய்தல்
செங்கழு நீர் நரிப் பயற்றை (ாருச)

நறுக்கெனு முட் செம்முள்ளி பொடுதலை
வல்லாரை தாமரை தன்னுளமு
முறைக்கு முரு விலி யிரு பாணன் கிணையுஞ்
சமூலமதாயுடனே கொண்டு
நறுக்கியதைத் தன் சாருய் நற் பசுவின்
பாலி லிட்டு நன்ருய்க் காய்ந்து
வரக்குழம்பாம் வர வறிந்து முன்னுழி
பசுவினெய்யும் வார்த்துத் தானே (ாருரு)

வரகொள் தேரையு மைந்து சித்தி
நாணுன் சிணையும் வருவித் தைந்து
வி கொளும் வெள வாலிலந்து நிணத்து
நண்டு பதினைந் தோடிவ் வாறைந்திற்
சேகரமாகிய நிணத்தை வாங்கி முன்
பச்சிலைச் சாரத்திட்டுக் காச்சிப்
பாகு பத மாய் வரச் சே நெய்யிலிட்டுக்
காச்சு பின்பு பசு மோரிட்டே. (ாருசு)

இட்டமுடனே தெளிக்கக் குபீரென்று
பொங்கு மிதிற் கியல் பதாக
வெட்டி வேர் சந்தன மிவ் வகைக்கிக்
காசிடை நறுக்கி மீட்டவே தா
னெட்டி வாசனை கிளம்பு மொரு பலஞ்
சர்க்கரை போடத் தெளியும் பின்பு
மட்ட முருங்கை யினிலையை யஞ்சு கூடப்
போட்டு வடித்துக் கொண்டே. (ாருள)

கொண்டு தினமிரண்டு காசிடை கொடுக்
கவுந் தேரைக் கொடு நோய் தீரும்
உண்டியின் மிகவாசை யுண்டாங்
தீபனமுண்ட முடல் பருக்கும்
மண்டலாதிபன் சரபமகிபதி தா
னுரைத்த விந்த மகிமை நூலே
யெண்டிசையுங் கொண்டாடுஞ் சோழவள
நாட்டறிஞரினி தென்பாரே. (ாருஅ)

(இ--ள்)

சிறுக்கீரை
சவரி (குறட்டை)

கொடிப்பசலை
அவுரி இலை
தூதுவேளை
விஷ்ணு கிராந்தி
சீந்தில் கொடி
மாதுளை இலை
நெய்தல்
செங்கழு நீர் கிழங்கு
நரிப் பயறுக் கொடி
முட்செம்முள்ளி
பொடுதலை
வல்லாரை இலை
தாமரை நாளம் (தண்டு)

ஓரிதழ் தாமரை
கோவை
சிறு நெரிஞ்சில்
பொன்னாங்காணி
நிலக்குமிழ் இலை
செருப்படி
முசு முசுக்கை
காட்டு மல்லிகை
உருவிலி, (உருவலி)

இந்த 24 சரக்குகளையும் சமூலமாக எடுத்துக் கல்லுரலி லிட்டு நன்றாக இடித்துச் சாறு பிழிந்து அந்த சாற்றிற்குச் சரிபாகம் பசும்பால் கூட்டி அடுப்பின் மேலிட்டுக் குழம்பாகக் காய்ச்சவும். பின்பு,

தேரை — 5
வெளவால் — 5 (ஈத்தின்னி வெளவால்)
நண்டு — 15
சீத்தியோணான் — 5 (சினையுள்ளது)

இவைகளின் கொழுப்பை எடுத்து முன் சொன்ன பச்சிலைக் குழம்போடு இட்டுக் காய்ச்சவும். இது பாகு பதம் வரும்போது 3 படி பசுவின் நெய்யைச் சேர்க்கவும். அப்பால் பசுமோர் அதில் தெளித்தால் குபீரென்று பொங்கும் அப்போது

வெட்டி வேர்
சந்தணம்
சீரகம்
ஏலரிசி

இவை வகைக்கு 1 காசிடை நறுக்கிப் (பால் விட்டு அரைத்துக் குழப்பி) எரிக்கவும். நன்றாக வாசனை கிளம்பும் போது 1 பலம் சர்க்கரையை அந்நெய்யிலிடத் தெளியும். பின்பு முருங்கை இலை 5 அல்லது 6 இலை கசக்கிப் போட்டு வடித்துக் கொள்ளவும். இதில் தினம் 2 காசிடை நெய் கொடுத்துவர, தேரை தோஷம், தீர்ந்து ஆகாராதிகளில் ஆசை, பசி முதலிய வைகள் உண்டாகி உடல் பருக்கும்.

108. பில்லாகன் தேரைத்தோடத்திற்கு மருந்து

தேரையிரண்டு பொறி நண்டு சேர்ப்ப
திரண்டூத் தின்னும் வௌவா
லீரன் மூன்று நாக்கப்பூச்சியதோன்
றினிமி சிறுக்கிரை
வெருவச்மட்டு வெண்காயம் வெண்
சாறணைவேர் கருஞ்சீராம்
மீரப்பொன்னாங்காணியின் வேரிதெலாஞ்
சேர்த்தெண்ணெயிலெரித்தே (காருகு)

சேர்த்துள்ளுக்குங் கொடுத்துடம்பிற்றி
மிர்ந்து முச்சிச் சிகையினிட்டும்
பார்க்கும் போதே யுடம்புணர் பாதல்
பசியாத்தாகம் பண்பாகா
தார்த்து வயிறு கழிதலிவை யகலு
மாரோக்கியமுமென்
றூர்க்கு மினிய சர்பேந்திரன்பா
வருளிச் செய்தனரே (தரகும்)

(இ-ள்)

தேரை 2
பொரிநண்டு 2
சுத்தின்னி வெளவால் ரா-ஒன் 1-3
நாக்கப்பூச்சி 1
சிறு கீரை
வசம்பு
வெங்காயம்
வெண்சாறணை வேர்
பொன்னுங்காணி வேர்
கருஞ் சீரகம்

இவைகளை நல்லெண்ணெயிலிட்டுப் பக்குவமாக எரித்து உள்ளுக்குக் கொடுத்தும், உடம்பிலும் பூசி தலையுச்சி மயிர் கால் முதலிய இடங்களிலும் தேய்க்கவும்.

வயிறு கழிதல் தீரும். ஆரோக்யமுண்டாகும்.

இதற்குத் தாய் பத்தியம் :—

சேர்க்கை, அகால/சாப்பாடு, இவைகள் ஆகாது

109. பகுதித் தோஷத்தினும் பச்சென்று கழிந்தால் மருந்து

பக்குத் தோடத்தினுற் பச்சென்று
கழியுமந்த பாலகர்க்கு
வொக்கும் வகை பிராய்துடரிகளா வரப்
பூலாங் கொழுந்து மொன்ருய்ச் சேர்த்து
மிக்காவின் பாலாதல் வெள்ளாட்டுப்
பாலாதல் விட்டரைத்து
மக்கணமே கரைத்தருந்த சேயினுடனே
வயிறு விடலகலுந் தானே (ரகக)

(இ-ள்)

பகுதித் தோஷத்தினுல் பச்சையாக கழியும் குழந்தைக்குப்
பிராய்க் கொழுந்து
தொடரி (இண்டு)க் கொழுந்து
களாக் கொழுந்து

வரப்பூலாக் கொழுந்து இந்த மருந்துகளைச் சமமாக எடுத்துக்கொண்டுவந்து பசுவின்பாலிலோ அல்லது வெள்ளாட்டுப் பாலிலோ நன்றாக அரைத்து அப்பாலிலேயே கரைத்துச் சாப்பிட வயிற்றுப்போக்கு உடனே நிற்கும்.

110. புட்டித் தோஷத்துக்கு

ஆதிவாரத்தாதல் வெள்ளி வாரத்தாதல்
சிறுபுள்ளடிக்கு மருணன் மூன்றும்
போதினிலே காப்புக்கட்டியுமே யந்திப்
பொழுதினிலே பிடுங்கி வந்து புதல்வர் மார்பி
லாதர வாய்க் கட்டவுந் தாயார்க்கவ் வேரை
யழகு குளிசமதாக வணிந்து மிண்டைக்
கோதில் வேரையுங் குளிசமாகக் கட்டிற்
குருவித் தோடங்களெல்லாங் குலைந்து போமே

(இ-ன்) (ராகூ2)

ஞாயிற்றுக்கிழமையிலோ அல்லது வெள்ளிக்கிழமையிலோ சூரியோதய காலத்தில் சிறுபுள்ளடி வேருக்குக் காப்புக்கட்டிச் சாயங்காலத்தில் பிடுங்கி வந்து குழந்தை மார்பில் கட்டினாலும், தாயாருக்குக் குளிசமாகக் கட்டினாலும், அல்லது இண்ட வேரைக் குளிசமாக அணிந்தாலும் குருவித் தோடங்கள் தீரும்.

111. குருவித் தோடங்களுக்கு

தண்ணீர் குடித்து வாய் மெலு மெந்தத்
தோடங்கடவிர்ந்திடவே
பண்ணு புங்கவேர் குளிசமாடிக்
கட்டப்பரிந்து மவ்வேர்
வண்ணவுடம் பிற்று வளை யிட்டாவாரை
வரப்பூலாங் கொழுந்துந்தான்
வெண்ணெயன லிட்டுண வசம்பு
மிடு தூதுவளை வெண்காயம் (ராகூ3)

காயஞ் சிறு புள்ளடி சின்னி யிலையும்
வசம்புங்கை கொண்டு
சாயங்காலத்தினனறுக்கித் தனது
மடிக்கோர் சலா விரித்து
சேயையதனிற் கிடத்தியதன்
றேகமெங்குந்து வலியிட்டு
வாயிறுனிலம் மருந்து சிந்தாமன்
னற்சந்தி வழி விட்டே (ராசூ)

வரவுமிரு பச்சிலை யுள்ளி வசம்
பும் வளமதாய் நறுக்கி
பிழிவிற் பிழிந்துச்சி யிற்றேய்த்
தும் பருக நாலுகாசளவு
விரைவிற் கட்டி கையிற் பொட்
டணமுங் கட்டிவிடவே
கரமார் நெல்லிக்கனி போலக்
காணுமிது கை கண்டதுவே (ராசூரு)

(இ–ள்)

*தண்ணீர் குடிக்கும், வாய் மெல்லும் எவ்வித தோஷங்களுக்கும்,

(a) புங்க வேரை குளிசமாகக் கட்டத்திரும்.

(b) உள்ளுக்கு மருந்து :—

ஆவாரைக் கொழுந்து
வரட் பூலாக் கொழுந்து
வசம்பு
தூதுவளை
உள்ளி

இவற்றைப் பசு நெய்யில் எரித்துக் கொடுக்கவும்.

(c) சிறுபுள்ளடி
சின்னி இலை
உள்ளி
வசம்பு

* இங்கு கொடுத்திருக்கும் உரை 91 செ. சுவடியைத் தழுவியது. செய்யுளில் புங்கம் வேரைத் துவளையிடும்படிக்கும், ஆவாரை, வரட் பூலாவை நெய் காய்ச்சிக் கொடுக்கும்படிக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. வசம்பு, தூதுவளை, உள்ளியுடன், காயமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இவைகளை வெண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி நெய்யாகக் காய்ச்சிக்கொண்டு துவள யிடவும்.

(d) மடியில் புடவையை விரித்துப் போட்டுப் பிள்ளையை மடியில் கிடத்தி உடம்பெல்லாம் மிஞ்சி நெய்யினால் துவள யிட்டு மருந்தைக் கீழே சிந்தாமல் கூட்டிப் புடவையுடனே பிடித்துக் கொண்டுபோய் நாற்சந்தியில் (நான்கு வீதிகள் சந்திக்குமிடம்) உதறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வரவும்.

(e) மேற்சொன்ன இரு பச்சிலையும், உள்ளியும், வசம்புங் கூட்டி நறுக்கிச் சாறு பிழிந்து உச்சியிலும் தேய்த்து உள்ளுக் கும் நாலுகாசளவுச் சாறு புகட்டவும். கையில் பொட்டணமாகக் கட்டவும். கை கண்டது.

112. குருவித் தோடத்திற்கு மருந்து

வரச்சுண்டியம்மான் பச்சரிசி வேரை வசம்
புள்ளியுடனறுக்கி வாய் பேசாமல்
தருக்கி யுண்ணக் குருவி தோடங்க ளெல்லாஞ்
சாராதென்றே சரப சதுரர் சொன்ன
திருத்திய தாம் வாகட நூலுரைக்க வல்லோர்
திவாகர சூளாமணிகள் செய்யுட்கோவை
வருக்க விலக்கண மைந்துங் கற்றுணர்ந்தே
வரகவிகளென வுலகோர் மதிப்பர் தாமே (ராகூ)

(இ-ள்)

வாய் பேசாமல் அம்மான் பச்சரிசி வேரும் வரட்சுண்டி வேருங் கூட்டி, உள்ளி வசம்பும் கூடச் சேர்த்து நறுக்கிக் கொடுக்கக் குருவி தோடங்கள் தீரும்.

13. குழந்தைகள் கக்குவானுக்கு மருந்துகள்

113. குழந்தைகள் கக்குவானுக்கு

குட்டி விளா களிபாக்கு கூறு நெய்
கொட்டான் பழமுங் கொடு வென்னீரில்
இட்டுணச் சேய் முப்பிறை கண்டெழுங்
கக்குவானேழு நாளினிற் போமென்றுங்
கட்டளை செய்திடு சரபகாவலர்வர்கடங்
குட கீழ்கடலென் கன்னி
யிட்ட வட வேங்கடமா லெல்லையப்பாலு
மிசை பெற்றிருக்குந் தானே (ாகூஎ)

(இ-ள்)

குட்டி விளா
களிப்பாக்கு
நெய்க் கொட்டான் பழம் (பூவந்தி)

இவற்றைச் (சமமெடுத்து) வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும். மூன்று பிறைகள் வரை வருத்தும் கக்குவான் 7 நாளில் தீரும்.

114. கக்குவானுக்கு மருந்து

உரியாடா தோடைச்சாறுடனே தான்
தூது விளம்பழச்சாறுந்தான்
உரிப்பசுவின் னெய்யினி லீத்தின்னும்
வெளவாலொருபிடி கற்கடசிங்கி
திரிகடுகு திரிபலை யிந்துப்பு சிறு
தேக்கி தெல்லாஞ் சேரக்கொண்டே
யொருவகைக் கோர் காசினிடை கண்டங்
கக்திரி வேரோடுறவே காய்ச்சி (ாகூஅ)

காய்ச்சி வடித்துக் கொடுக்கக் கக்குவா
னிருமலெல்லாங் கடுகத் தீரும்
பேச்சியுண் ணு மூமத்தங்காய் விரையை
ப்போக்கி யுப்புப் பெய்தரைத்திட்
டேச்சுதலின்றிச் சேலை மண் செய்திட்
டேபுடமிட் டெடுத்திட்டுப் புக்
காச்சக் கடுக்காய் பொடி காசிடை வகைக்குக்
கலந்துணப் போங்கக்குவானே (ாசுகூ)

(இ-ள்)

ஆடாதோடைச்சாறு	—உரி (½ படி)
தூதுவிளம் பழச்சாறு	—உரி ,,
பசுவின்நெய்	—உரி ,,
ஈத்தின்னி வெளவால்	—10

கற்கட சிங்கி சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் இந்துப்பு சிறுதேக்கு	* இவை வகைக்கு ஒரு காசிடை எடுத்துக் கொண்டு

கண்டங்கத்திரி வேரும் கூடப்போட்டு இடித்து மேற் சொன்ன சாறு விட்டு அரைத்து நெய்யுடன் கலந்து எல்லா வற்றையும் அடுப்பின்மீதேற்றிப் பக்குவமாக வடித்துத் தினமும் (2 வேளை) கொடுக்கக் கக்குவான் இருமல் தீரும்.

(2) ஊமத்தங்காயைக் குடைந்து உள்ளிருக்கும் விரை களை நீக்கி அதில் உப்பைத் திணித்துச் சேலைமண் செய்து புடம் இட்டு எடுத்து,

கடுக்காய்த் தூள் காசிடையும், மேற்சொன்ன ஊமத்தை உப்பு ஒரு காசிடையும் கொடுக்கக் கக்குவான் தீரும். சோதனைக்குக் கைக்கண்டது.

---

* 91 நெ. ல் வராகனெடை எனக் காணப்படுகிறது.

115. கக்குவானுக்கு மருந்து

கொன்றை யாவாரம் பட்டை தூதுவளை
கொடிகள் வேரிக் கொள்ளும் வெளவா
லொன்றுரு வரம் பூவுள்ள நாக்கப்பாம்
பொன்றிந்த வகைகளோ ரைந்து
மன்று நல்லெண்ணெய் தன்னிலிட்டெரித்து
மாற்றி நக்கவுங் கக்குவானு
மின்றகல்வோ மென்றெண்ணிமூப்பிறை
கண்டிட்டது போது மென்றெழுமே (ாஎ)

(இ-ள்)

கொன்றைப் பட்டை
ஆவாரம் பட்டை
தூதுவளை வேர்
ஈத்தின்னி வெளவால்

நாக்கப்பாம்பு (மண்புழு) இவைகளை எடுத்து நல்லெண் ணெயிலிட்டுப் பக்குவமாக எரித்து (ஒரு காசிடை வீதம்) கொடுக்கவும். "மூன்று பிறைகண்டது போதும். இன்றே அகல்வோம்" என்பது போலக் கக்குவான் நீரும்.

---

14. குழந்தைகள் கணைச் சூட்டுக்கு மருந்துகள்

116. கணத் தெண்ணெய்

கடுக்காய் தான் பதினைந்துங் காசிரண்டு
கார்போகவரிசி தாசொன்
றெடுத்திடு சண் பகப்பூ சாதிக்காயும்
வகையொன்றுக் கேயைங்காசு
கடுகு ரோகணி தான் காற்பணங் கருஞ்
சீரக மிலவங்கப் பூவுக்கும்
மிடுவகைக் கிருகாசு மேலங்கா
சொன்று வசம்பிரு காற்காசே. (ாஎக)

காசு நான்குள்ளியது காசரையாம்
நெல்லி முள்ளி காசு மூன்றே
பேசும்வலம் புரிக்காய்க்குப் பிறகு நற்
சீரகத்திற்கும் பேசீர் காசு
மேசில்வகை பதிமூன்று மெடுத்து
நறுக்கிப் பொடி செய்திதணீ யெல்லா
மாசில் கலசத்திலிட்டா மணக்கெண்ணீ
முச்சேர் நால் வார்த்திட்டே தானே (எஉ)

இட்டு நல்ல பட்டை யெனிலே மல
நாற்றங்களிதுவே யெழும்புங்
குட்டி வேலாம் பட்டை குறுக நறுக்
கியுரூறக் கூடப்போட்டுங்
கட்டளீயாய் நாள் நாலதஞ்சினிலே
வெய்யிலினீக் காண வைத்தே
திட்டமுடனே யெடுத்துக் கொடுத்தி
டென்று சரபேந்திரர் செப்பினரே (ாஎங)

(இ-ள்)

	கடுக்காய்த்தோல்	— 2 காசிடை
	கார் போகரிசி	— 1 காசிடை
*	சண்பகப்பூ	— 5 காசிடை
	ஜாதிக்காய்	— 5 காசிடை
	கடுகு ரோகிணி	— ¼ பண எடை
	கருஞ்சீரகம்	— 2 காசிடை
	இராம்பு	— 2 காசிடை
	ஏலக்காய்	— 1 காசிடை
	வசம்பு	— ½ காசிடை
	வெள்ளைப்பூண்டு	— 4 காசிடை
	நெல்லிமுள்ளி	— ½ காசிடை
	வலம்புரிக்காய்	— 3 காசிடை
	சீரகம்	— 2 காசிடை

இந்தப் பதின்மூன்று சரக்குகளையும் எடுத்து நசுக்கிக் கல்லுரலிலிட்டு, இடித்துப் பொடிசெய்து, யாவற்றையும் ஒரு

* 91 கை. சுவடியில் 2 காசெடை என்று காணப்படுகிறது.

கலசத்திலிட்டு 3 அல்லது 4 சேர் விளக்கெண்ணெய் விட்டு மூடிவைக்கவும். பிறகு பீறுறிப்பட்டை, குட்டி வேலம் பட்டை இவ்விரண்டையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மேல் சொன்ன எண்ணெயில் போட்டு 4 அல்லது 5 நாளைக் கொருதரம் வெய்யிலில் சூரிய புடமாகவைத்து, இறுத்து இதை ஒரு காசிடை வீதம் கணச்சூட்டிற்குக் கொடுக்கவும்.

117. கணத் தெண்ணெய்

பத்தெலுமிச்சம் பழச்சாற்றிரண்டு
சேர் விளக்கெண்ணெ பல்லாகைக்குட்
சுத்தமுடன் கற்றுழ மடலஞ்சின் சோ
றெடுத்தச் சோற்றிலொன்றே
முத்துக்கடுக்காய்ப் பொடியிட்டுப் பிசறி
வைக்கில் தினமுறியுந் தண்ணீர்
அத்தையுங் கூடவும் விட வெந்தெயங்
காசீரண்டு வசம்பரைக் காசாமே (ாளசு)

ஆமீர வெங்காயங் காசொன்று வெள்
ளுள்ளியதுவுங் காசொன்
றேமணச் செண்பவித்துவுக் கொரு
காசு கோட்டத்துக் கிரண்டுகாசு
காமதியாதிமதுரந்தனக்கிரு கா
சதிவிடையந்தனக்கீர் காசு
காமர் கொள்ளுஞ் சாதிபத்திரி கா
சொன்றொரு காசு கடுக்காய்தானே (ாளரு)

கீடிதுடன் தான்றிக்காயோர் காசில
வங்கப்பட்டை காசொன்றுகுங்
கொடு சிறுநாகப்பூவுக்கோர்கா சிப்பதின்
மூன்றுங் குணமாய்க் கொண்டே
பொடி செய்திட்டு மெழுகு பதமாக
வே யெரித்தப் போது தானே
வடிகொண்டு மேன்பொடி செய் சாதிக்
காயுங் கார்ப்பணமாய் வாங்தே (ாளக)

ஏலமிலவங்கங் குங்குமப்பூ கோ
ரோசனையென் றியம்பா நின்ற
நாலுவகைக்கும் வகைக்கு நல்கரைக்
காற்பணஞ் சரக்கை நன்றுய் தூள்செய்
தாலதனை மென் பொடியிட்டக்
கணமேகண நோயதாலுணர்ந்த
பாலகருக்கருள் சகலசூடுகள் போங்
கைகண்டார்ப் பத்தியமின்றே (ளஎ)

பத்தியுடன் கொளுமாதர் கருங்கிரந்திப்
பிணிதிரும் பாலருண்டாங்
தத்தைகளைந்தாமாதந்தானேழு மாத
மொன்பதா மாசத்தில்
வைத்துணவுங் கரப்பான் பண்டத்துடனே
வாயுபதார்த்தங்களாகா
தித்திறஞ் செய்தார் சவுக்கிய மென்றூர்
கைகண்ட சரபேந்திரர் தாமே (ளஅ)

(இ-ள்)

பத்துளுமிச்சம் பழத்தின் சாறு எடுத்து வைத்துக் கொள்ளவும். பின்பு 5 கற்றுழை மடலைக்கொண்டுவந்து மேல்தோலை நீக்கி உள்ளிருக்கும் சோற்றைத்தனியாக எடுத்துக் கடுக்காய்ப்பொடி தூவிப் பிசறிவைக்கவும். அப்போது அதனின்று சாறுவரும். அந்தச்சாறு முழுவதையும் முன் எலுமிச்சம் பழச்சாற்றோடுக் கூட்டிக்கொள்ளவும். ஆமணக்கெண்ணெய் 2 சேர் சேர்த்து,

வெந்தயம்	2 காசு எடை
வெள்ளைவெங்காயம் (பூண்டு)	1 காசு எடை
வெங்காயம்	1 காசு ,,
கடுக்காய்	1 காசு ,,
வசம்பு	½ காசு ,,
சண்பகவித்து	1 காசு ,,
கோஷ்டம்	2 காசு ,,
அதிமதுரம்	2 காசு ,,

அதிவிடயம்	2 காசு	எடை
சாதிபத்திரி	1 காசு	,,
தான்றிக்காய்	1 காசு	,,
லவங்கப்பட்டை	1 காசு	,,
சிறு நாகப்பூ	1 காசு	,,

இப்பதிமூன்று சரக்கையும் பொடி செய்து போட்டு மெழுகு பதமாக எரித்து வடித்துக்கொண்டு

சாதிக்காய்	$\frac{1}{4}$ பண	எடை
ஏலக்காய்	$\frac{1}{8}$ பண	,,
கிரும்பு	$\frac{1}{8}$ பண	,,
குங்குமப் பூ	$\frac{1}{8}$ பண	,,
கோரோசனை	$\frac{1}{8}$ பண	,,

இந்த 5 சரக்குகளையும் பொடிசெய்து எண்ணெயிலிட்டுக் குழுக்கி வைக்கவும். கணச்சூட்டினால் மெலிந்த பிள்ளை களுக்கு இருக்கும் சகல சூடுகளும் தீரும். இச்சாபத்தியம்.

ஸ்திரீகள் சாப்பிடக் கருங்கிர்ந்தி நீங்கும். பிள்ளை யுண்டாகி இருக்கிறவர்களுக்கும், 5-ம் மாதம், 7-ம் மாதம், 9-ம் மாதத்தில் கொடுக்கவும். கரப்பான் பதார்த்தங்களும், வாயு பதார்த்தங்களும் நீக்கி சௌக்கியமாக இருக்கவும். கை கண்டது.

குறிப்பு : கரப்பான் பதார்த்தங்களாவன:— சோளம், கம்பு, வரகு, கார் அரிசி, வாழைக்காய், பாகல் காய், கெளுத்தி மீன், கத்தரிக்காய், முதலியவை.

118. கணத் தெண்ணெய்

அறுபதாங் கொட்டை யெண்ணை யறுநாழி
கற்றுழை மடல் பத்தச்சாற்
றுறவிரண்டு கடுக்காயைப் பொடித்திட்டு
நிய நீரையுடன் கொண்டெண்ணை
நிறையாக விட்டெலுமிச்சம் பழச்சாற்றினை
மூச்சேர் நிரையாய் விட்டுக்
குறையாமற் சாதிக்காயொன்றுடன்
காவி யணங்கொள் வாய் குங்குமப்பூ (எளகூ)

பூவிலவங்கம் பணங்கால் புதுலவங்கப்
பட்டைக்குப் போடூர் காசு
கோவுள கோரோசனையைக் கொண்டரைக்காற்
பணங் கோட்டங் கொள்வோர் துட்டே
தாவுள்ள சாதியினற் பத்திக்குக்
காற்பணமாந்தகும் வசம்புக்
கேவொரு காசதிமதுரத்திடுவரைக் காற்
பண முள்ளிக் கிரண்டு காசே. (ாஅம)

காசிரண்டு சிறு நாகப்பூ விரண்டு
காசு செண்பகப் பூத்தானும்
பேசிலதி விடைய மரைக்காற் பணந்தான்
றிக்காயும் பேசீர் காசிட்
டாசையுடனே வாங்கியதைப் பொடித்திட்
டூர வெங்காயத்தைத் தானுங்
காசிரண்டுக்கே வாங்கித் துவைத்தந்தச்
சாற்றினையுங் கலந்து தானே (ாஅக)

கலந்துள்ளி யிரண்டு காசிடை நறுக்கிப்
போட்டுப்பின் காச்சி மெள்ள
விலங்கிய நன்மெழுகு பதமாயிறக்கி
வடி கொளவுமிரு போதுந்தான்
நலங்கிளரவே பொசிக்கில் வாயுபதார்த்
தந்தவிர்த்து நற்புளிப்புப்
பலங்காரமாய் பொசிக்கலாகுமென
நோயாளற் கருள் செய்வீரே (ாஅஉ)

செய்யுமுட்டண மந்தத்துந் தீர்க்குங்
கைகாலெரிவு தீர்க்குந் தீராப்
பெய்யுமேகப் பிணியும் பெருக்குமுடலினைத்
திடச் சேய் பிணியுந் தீர்க்குங்
கையினுமலக மென்னக் கண்டுகந்து
கற்றவர்கள் களிக்கும் வண்ணம்
வையகத்தின் மகிழ்ந்துரைக்கும்
மகராசா சரபேந்திரர் வசனந்தானே (ாஅங)

(இ-ள்)

அறுபதாங் கொட்டை (ஆமணக்கு) விதையின் எண்ணை — 6 நாழி

கற்றுழை மடல் பத்தின் சோற்றைத் தனியாக எடுத்துக் கடுக்காய்த்தூள் பிசரியபின் அதினின்று வரும் சாறு — 6 நாழி

எலுமிச்சம் பழச்சாறு	3 சேர்
சாதிக்காய்	1 பலம்
குங்குமப்பூ	$\frac{1}{4}$ பலம்
இரும்பு	$\frac{1}{4}$ பண எடை
லவங்கப்பட்டை	2 காசு எடை
கோரோசனை	$\frac{1}{8}$ பண எடை
கோஷ்டம்	ஒரு துட்டெடை
சாதி பத்திரி	$\frac{1}{4}$ பண எடை
வசம்பு	1 காசு எடை
அதிமதுரம்	$\frac{1}{8}$ பண எடை
வெள்ளைப் பூண்டு	2 காசு எடை
சிறு நாகப் பூ	,,
ஜண்பகப் பூ	,,
அதிவிடையம்	$\frac{1}{8}$ பண எடை
தான்றிக்காய்த் தோல்	2 காசு எடை

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றுகப் பொடி செய்து வைத்துக்கொண்டு, ஈர வெங்காயம் 2 காசிடை எடுத்து அதை நசுக்கி அதன் சர்ற்றையும் கலந்து வெள்ளைப்பூண்டு இரு காசிடையும் நறுக்கிப்போட்டு மேல் சொன்ன எண்ணெய், சாறு, பொடி, எல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்து அடுப்பின் மேலேற்றி மெழுகு பதமாக எரித்து இறக்கவும்.

இதைத் தினந்தோறும் இருபோது உட்கொள்ளவும்.

பத்தியம் :— வாயு பதார்த்தங்களை நீக்கி, உப்பும், புளிப்பும் கூட்டவும்.

நீரும் வியாதிகள் :—

உஷ்ணம் தீரும், கைகால் எரிவு தீரும், மேகரோகங்கள் நீங்கி உடல் இளைத்த குழந்தை பெருக்கும். இன்னும் பல வியாதிகள் தீரும்.

119. கணச் சூட்டிற்கு முலைப்பாலெண்ணெய்

இண்டிலைச் சாறுடன் முலைப்பாலீர
வெங்காயச் சாறுமிவை கலந்து
கொண்டே யாமணக் கெண்ணெ கூட்டிப்
பக்குவந்தானே கொள்ளக்காச்சி
யுண்டிடச் செய் கணந்தீருமென்று சர
பேந்திரனுர் உண்மையாக
வெண்டிசையுமறியும் வண்ணமியம்பினு
ரிம் முறையினியல் பினுலே. (ரா அ)

(இ-ள்)

இண்டு இலைச்சாறு
முலைப்பால்
வெங்காயச்சாறு
ஆமணக்கெண்ணெ

இவைகளைச் சமமெடுத்து ஒன்றுகூட்டி அடுப்பின்மீதேற்றிப் பக்குவமாக வடித்துக் குழந்தைக்குக் கொடுத்துவர கணச் சூடு தீரும்.

120. முலைப்பாலெண்ணெய் (வேறு)

ஆமெருகங் கிழங்குடனே சிறுமுகந்
திப்பிலி தேவதாரமி யாவும்
தாமதமில்லாமலொரு சரக்கினுக்கு
முக்கழஞ்சதாகக் கூட்டி
சேமமுடனே யரைத்து வடித்து மிடச்
சித சுரந்தீரு மென்றே
மாமகிபர் சரபேந்திரர் வசனித்தார்
நோயற்று வாழத்தானே. (ரா அரு)

(இ-ள்)

மெருகங்கிழங்கு
சிறுமுகம் (இம்பூராவேர்)
திப்பிலி
தேவதாரம்

இவைகள் வகைக்கு 3 கழஞ்சு எடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்து முலைப்பாலும், ஆமணக்கெண்ணெயும் சேர்த்து (வகைக்கு ஒரு சேர்) அடுப்பின் மீதேற்றிப் பக்குவமாய் வடித்துச் சாப்பிடவும். சீத சுரம் தீரும்.

121. பிள்ளைகளுக்குக் கணம், அக்கரக் காச்சல், குளிர் இவைகளுக்கு மருந்து

திருமணிந்து பவங்கள் பருத்திப்
பருப்புப்பலமைந்து சீரகந்தான்
இருபலஞ் சந்தணமுமிருபல நன்னரி
யின் வேர் நாயுருவியின் வேர்
கிரந்திநாயகங் கீழ்காய் நெல்லிசமூல
மும்கிறையங்கொள் பலந்தான்
ஒரு மூன்றுபலங் கடுகுரோகிணி
கோரோசனையுமோர் பலமே (ரா அசு)

குறிப்பு : அடுத்த ஏடு சுவடியில் காணப்படாததால் அடியில் கண்ட உரை 91 செ. சுவடியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

(இ-ள்)

திருமண் (நாமக்கல்)	5 பலம்
பருத்திப்பருப்பு	5 பலம்
சீரகம்	2 பலம்
சந்தணம்	2 பலம்
நன்னரிவேர்	3 பலம்
நாயுருவிவேர்	3 பலம்
கிரந்திநாயகம் (சிலந்திநாயகம்)	3 பலம்
கீழாநெல்லிசமூலம்	3 பலம்
கோரோசனை	1 பலம்
ஆமையோடு	1 பலம்
கடுகு ரோகிணி	1 பலம்

இவைகளைக் கற்பூரவல்லிச்சாறு விட்டரைத்துக் குன்றிமணி அளவு உருட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு, கற்பூரவல்லிச்சாற்றில் கொடுத்திட

மாந்தம்
கணம்
அக்காரக்காச்சல்

இவைகளெல்லாம் தீரும்.

122. பூச்சிக்கு மருந்து கணத்துக்கு மருந்து

நன்னரிவேர் வெளிச்சை ப்பிசின் வகைக்கோர்
வராகனிடை நன்றுப்க் கொண்டே
மின்னுவின் வெண்ணெய் எலுமிச்சங்கா
யளவு கொண்டு வேறே வைத்து
டுண்ணெயிரண்டு கடுக்காயிட்டெ
ரித்தி டெருக்கின் பழுப்பை
யன்னள் தொட்டே முந்நாள் நசியஞ்
செய்திடப்பூச்சியகன்று போமே (ரா-அ)

(இ-ள்)

(a) நன்னரிவேர் 1 வராகனெடை
வெளிச்சைப்பிசின் (முருங்கை 1 ,,
அல்லது நறுவிலி)
பசுவெண்ணெய் எலுமிச்சங்காயளவு
கடுக்காய் 2 (எண்ணிக்கையில்)

இவற்றை ஒன்றுகலந்து அடுப்பின் மீதேற்றி எரித்துக் கொடுக்கவும். கணம் தீரும்

(b) எருக்கின் பழுப்புச்சாற்றை நசியம் பண்ணப் பூச்சி விழும். இவ்வாறு 3 நாள் செய்யவும்.

123. ஊதுகணத்திற்கு மருந்து

கழற்கொடியினிலையோர் பிடிகசக்கி
வாய்பேசாமற் கையிற்கொண்டு
விளக்கெண்ணெயினிற் போட்டு மீர
வெந்தாயமரிந்து மேலே போட்டுக்

இழக்குதைய மானபின்பு சூரியபுட
மாகவைத்துக் கிளரித்தானே
யுழக்கினிலீர் துட்டிடையிட்டு கைகொடுப்பா
யுப்புப் புளிப்புண்ணுணுதே (ா அ)

வேலிப்பருத்திக் கொழுந்தோர்பிடி
வெள்வெங்காயம் வசம்போமம்
மேலுக்கடுக்காயிதினல்லெண்ணெ
மிதமாய் வார்த்துமே யெரித்திட்
டாலக் கரண்டிதனி லெண்ணெயளித்துக்
குழப்பிப் கொடுக்கவுமே
தூலப்பொருமல் வாடுமெனச்
சொன்னர் சரபேந்திர துரையே (ா அ)

(இ-ள்)

கழற்சிக்கொடி இலை—ஒரு பிடி கசக்கி வாய்பேசாமல் தொண்டுவந்து விளக்கெண்ணெய் 1 உழக்கில் போடவும், பின்பு வெங்காயத்தைச் சிறிது சிறிதாக அரிந்துபோட்டு காலை வெயிலில் சூரியபுடமாக வைக்கவும். நன்றாகக் கிளரிக் கொடுத்து இதில் தினசரி இரு துட்டெடைவீதம் எடுத்துச் சாப்பிடவும்.

பத்தியம் :—உப்பு, புளிப்பு, ஆகாது

(2) வேலிப்பருத்திக் கொழுந்து ஒருபிடி.
வெள்ளைப்பூண்டு
வசம்பு
ஓமம்
கடுக்காய்

இவைகளுக்குத் தக்கப்படி நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து இறக்கிக்கொள்ளவும்.

கடுகுடன் ஒரு கரண்டிவீதம் தினம் கொடுத்துவரவும். இவ்விரண்டு முறைகளாலும் வயிற்றுப்பொருமல் தீரும்.

124. இரத்த கணத்திற்கு மருந்து

தகரை பொன்னங்காணி நரிப்பயிற்றை
வட்டக்கிலு கிலுப்பை தானின்னலு
வகையும்வேர் வல்லாரை யீரவெங்கா
யத்துட்னிவ்வகை களாறும்

யிகழாமலேயிடித்துப் பாணியில் போட
வுங் கலுக்கமிலா மிச்சம் வேர்
பகருஞ் சாதிக்காய் சாதிபத்திரி
போச்சம் பழமுமாமே (ராகம்)

ஆங்கொத்தமல்லி சீரகம் கோட்டம்
அதிமதுர மக்கிராக்காரம்
தீங்கற் கண்டேலமு முந்திரி கையி
னற் பழத்துடனே சிறுநாகப்பூ
வாங்கு பெருநாகப்பூ குரோசானி
யோமமிந்த வகை வகைக்கே
யீங்கொரு நால் வராக னெடையிடித்து
முன்செய் மருந்தினிலே எடுத்துப்போடே (ராகம்)

எடுத்துப் போட்டதுதனிலே விளக்கெண்
ணெய் நாலுபடியெடுத்து விட்டுத்
திடத்துடன் சூரியபுடமாய் வைத்திதனைக்
கொடுக்கவுமே தீரு நோய்தான்
கடுத்தரத்தக் கணமாமக்கண
மத்திசுரமும் வரற்கணமுந் தீரும்
யிடுக்கணுஞ்சருவ கணமுந் தீரு
முப்புப்புளி யீந்திட்டாதே (ராகம்)

(இளர்)

தகரை வேர்
பொன்னுங்காணி வேர்
நரிப்பயிறு வேர்
வட்டக் கிலுகிலுப்பை வேர்
வல்லாரை
வெங்காயம்

இந்த ஆறுசரக்குகளையும் சம எடை (4 விராகனிடை) எடுத்து இடித்து ஒரு பாணியில் போடவும்.

விலாமிச்சம் வேர்
சாதிக்காய்
சாதிப்பத்திரி
பேரீச்சம் பழம்
கொத்தமல்லி விதை
சீரகம்
சிறுநாகப்பூ
பெருநாகப்பூ
கோஷ்டம்
அதிமதுரம்
அக்கிராகாரம்
கற்கண்டு
ஏலக்காய்
திராக்ஷைப்பழம்
குராசானி யோமம்

இச்சரக்குகளை வகைக்கு 4 வராகனெடை எடுத்து நன்றாக இடித்து, முன்பானையிலே சித்தமாக வைக்கப்பட்டிருக்கும் சரக்குகளோடு இதையும் சேர்த்துக் கொள்ளவும். இதனுடன் விளக்கெண்ணை 4 படி விட்டு எல்லாவற்றையும் குழப்பி/சூரியபுடமாக வைக்கவும். இந்தத் தைலத்தை தினம் உள்ளுக்குக் கொடுத்து வர இரத்தக்கணம், ஆமக்கணம், அஸ்திசுரம், வறட்கணம், முதலிய பலவித கணங்களும் தீரும்.

பத்தியம் :—உப்பு, புளி, கீக்கிவிடவும்.

125. கணத்திற்கும், எரிகணத்தின் குணமும் மருந்தும்

பசவாய்க் கொள்ளுமெதிரெடுக்கும்
பாயிற் கிடந்து முலையோடே
யிசைய மோதிக் கொள்ளும் பெருமூச்
செறியுமுகங் கீழாய்க் கிடக்கும்
விசையா யழுமிப் பிள்ளை கட்கு
வேண்டு மருந்த தேலங் கோட்டம்
பசையா மாசிப் பச்சையிலை
வாழிக்கு வேர் சண்பகப்பூவும் (ரக்கூ)

பகரும் வகைக்கோர் காசிடையே
பகுத்துச் சாதிப்பத்திரியில்
வகையோடே தானதிமதுரம்
வராகனெடை யொன்றேயாகும்
முகருங் கோரோசனை தானு
முக்காசிடை யோடித்தனையும்
தொகையாய்க் கொண்டு வேடன் வேர்த்
துண்டு நறுக்கிச் சாறுகொண்டே (ராகூச)

கொண்டிந்தச்சாறு வார்த்தரைத்திதனை
கடலிலையெனக் கூறக்கையா
லுண்டைபண்ணி முலைப்பாலிலூட்டிடக்
கணமும் வயிற்றுக் கடுப்பும்
விண்டேகும் பெரியவர்க்குச் சுரமிவை
யெல்லாந்திரும் விந்தை தான்கை
கண்டதெனச் சரபேந்திரர் காசினி
யுள்ளோர்க் குரைத்தார் கருணையாலே (ராகூரு)

(இ-ள்).

எரிகணத்தின் குணம்.

அடிக்கடி கை கால்களை பிசைதல், வாந்தியெடுத்தல், தாயாரின் மார்பின்மேல் அடிக்கடி மோதிக்கொள்ளுதல், பெரு மூச்சு விடுதல், முகத்தைக் கீழ்நோக்கி வைத்துக்கொள்ளுதல், சொம்பவும் வீறிட்டு அழுதல் இவைகள் எரிகணத்தின் குணங்களாகும்.

இதற்கு மருந்து

ஏலக்காய்	1 காசெடை
கோஷ்டம்	1 காசெடை
மாசிப்பச்சை	1 காசெடை
இலாமிச்சை வேர்	1 காசெடை
சண்பகப்பூ	1 காசெடை
சாதிப்பத்திரி	1 வராகனெடை
அதிமதுரம்	1 வராகனெடை
கோரோசனை	3 காசெடை

இந்தச் சரக்குக்களனைத்தையும், நிலவேம்பு வேரை இடித்து அச்சாற்றினால், நன்றாகக் கல்வத்திலிட்டு அரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதை முலைப்பாலில் அரைத்துக் கொடுக்க அந்தக்ஷணத்திலேயே வயிற்றுக்கடுப்பு, கணச்சூடு, இவைகள் தீரும். பெரியவர்களுக்குக் கொடுத்தால் சுரம் நீங்கும்.

126. ஆமக்கணைத்திற்கு ஈரவெங்காய எண்ணெய்

ஈரவெங்காய மிளகு கடுகு
ரோகிணி கருஞ்சீரக மிதோடே
சீரகமுங் கடுக்காயும் பொடிசெய்து
மிளகு காய்திருத்து காம்பை
யோரிரு காசிடை பொடித்து மொரு
சிமிழிட்டே வைத்து முறைக்கு மிந்த
யீரவெங்காயச் சாற்றை விளக்கெண்
ணெயினில் விட்டு மிதமாய் வைத்தே (ரா கூசு)

இதமாய் மூக்கரட்டை வேர் வெள்ளைச்
சாறணை வேரு மிடித்தரைத்திட்
டிதில் வெள்ளைப்பூண்டு மிடித்தே போட்டுக்
காச்சி வடித்தெடுத்துக் கொண்டு
அதையும் வடிக்கட்டிக்கொண்டா
தித்தனுதையத்தோ ரளவதாகப்
பிதிராமலுள்ளுக்குக் கொடுத்திடவும்
வயிறு நன்றாய்ப் பேதியாமே (ரா கூஎ)

பேதியான தின் பிறகு கஞ்சி காய்ச்சிக்
கொடுப்பாய் பேதியாகா
தோதிய கற்குடலாகிலுயர் சதுரக்கள்ளி
யிலோர் துண்டம் வெட்டிச்
சாதுரிய மாயதனைச் சன்னபின்னமாய்
நறுக்கித்தானே யெண்ணெய்
மீதி லிட்டுக் காய்ச்சி நல்கப் பேதியாம்
வியாதி யெல்லாம் விட்டுப் போமே (ரா கூஅ)

(இ-ள்)

வெங்காயம்
மிளகு
கடுக ரோகிணி
கருஞ் சீரகம்
சீரகம்
கடுக்காய்
*மிளகுக் காயின் கர்ம்பு,

இவைகளை வகைக்கு இரு காசெடை எடுத்துச் சூரணம் செய்து இதையும், ஈரவெங்காயச் சாற்றையும் (1 படி) விளக் கெண்ணெயில் (1 படி) விட்டுக் குழப்பி வைக்கவும்.

மூக்கரட்டை வேர்
வெள்ளைச் சாறணை வேர்
வெள்ளைப் பூண்டு

இவைகளை இடித்து அரைத்து மேற் எண்ணெயில் குழப்பி எல்லாவற்றையும் அடுப்பின்மேல் வைத்துப் பதமாகக் காய்ச்சி வடித்து இறக்கவும்.

இதை உதய காலத்தில் ஒரேஅளவாக உள்ளுக்குக் கொடுத்திடவும். நன்றுகப் பேதியான பின் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

கல்குடலுள்ள பேர்களுக்குச் சதுரக்கள்ளித் தண்டை நறுக்கி அரைத்து எண்ணெயை விட்டுப் பதமாக எரித்துக் கொடுக்க, நன்றுக பேதியாகி வியாதிகள் தீரும்.

* மிளகு காய் திருத்து காம்பை—மிளகுக் கதிரிலிலுள்ள மிளகுகளை நீக்கிய பின் அவைகளின் காம்பை உலர்த்தி வைத்துக் கொண்டு உபயோகிக்கவும்.

127. மூக்கு கணத்திற்கு மருந்து

கோழியாவிரங் கொழுந்தோர் பிடி பரித்து
வசம்புன்னி கூடக் கூட்டி
யாழுங்கல்வத்திடை யிட்டதை
நறுக்கித்துவளையுடம் பதனிலிட்டுச்

சாழிலைக் காசொன்றளவு தானுள்
ளேபுளிதான் கைப்பாகா
தேழு நாளினிலிந்த மூக்கு கண
மகலுமென வியம்பலாமே (ராகூ)

(இ-ள்)

கோழியாவரங் கொழுந்து	1 பிடி.
வசம்பு	(சிறிதளவு)
வெள்ளைப் பூண்டு	(,,)

இவைகளைக் கல்வத்திலிட்டு நசுக்கி நன்றாக அரைத்து அதை உடம்பின் மேல் துவளையாக இடவும். இதில் ஒரு காசெடை உள்ளுக்கும் கொடுத்திடவும்.

இதற்குப் பத்தியம் :— புளி, கைப்புத் தள்ளவும். ஏழு நாளில் மூக்கு கணம் தீரும்.

128. மூக்கு கணத்திற்கு மருந்து

முருங்கை கழற் கொடி வரப்பூலாவுடன்
சாறணைக் கொழுந்து மூக்கரட்டை
தருங் கொழுந்து மதிகாலந் தனிற் பறித்து
வசம்புடனே தட்டிக் கொண்டு
யிருந்திடு நல்லெண்ணெயிலே யிட்டு
மிளகும் பொடித்திட்டிதை யொன்றாக்கி
வருங்கதிர் முன்னாக வைத்து நாலு கா
சளவு கொள்ளிம் மருந்தைத் தானே (உரா)

மருந்துடனே கடுகினையுங் கூட
வரைத்துக் கொள்வாய் வசம்போடுள்ளி
யிரிந்து பீர்க்கிலையுடனே நறுக்கி
மேனியிற்றுவளையா யிட்டிருதல்
மருந்தினை யோர் காசளவு தானுள்ளே
புகட்டவு மென்றாரிவ் வையத்
திருந்தரசாளுஞ் சரபேந்திர
ரென்ன யிவ்வுலகோரியம்புவாரே (உராக)

(இ-ள்)

முருங்கைக் கொழுந்து
கழற்கொடி கொழுந்து
வரப் பூலா ,,
வெள்ளைச் சாறணை ,,
மூக்கரட்டை ,,

இவைகளைச் சூரியோதய காலத்தில் பறித்துவந்து அம்மி யிலிட்டு அரைத்து அதனுடன்

மிளகு
வசம்பு

இவ்விரண்டையும் பொடிசெய்து கூட்டி எல்லாவற்றை யும் நல்லெண்ணெயில் ஒன்றுகக் கலந்து, சூரியபுடமாக வைத்து நாலுகாசளவு இம்மருந்தைச் சாப்பிடவும். கடுகு கூட அரைத்துக்கொண்டு, பீர்க்கிலையும், உள்ளி, வசம்பு மிட்டு நறுக்கி உடம்புக்குத் துவளை இடவும். ஒரு காசளவு உள்ளுக்கும் கொடுக்கவும்.

129. கணத்தெண்ணெய் பண்ண மருந்து

கோடகசாலை விடத்தேரிலை சிறு
புள்ளடிவசம்பு குதிரைவாலி
தோடின் பூராபழம் பாசியினுடன் வெள்
ளுள்ளி யிவைத்தினை நறுக்கிச்
சூடி நல்லெண்ணெயிலெரிக்கத் தூங்கு
கணத்திற்கு விளக்கெண்ணெய் தன்னிற்
போடிதெல்லா மிட்டெரித்துப் புகட்
டிரண்டு காசளவு புகட்டத்தானே (உஉ)

அற்பமானுலிந்தப் பச்சிலையைந்தினை
நறுக்கியதைக் கைக்கொண்டே
யுற்பணமாய்ச் சாறு புகட்டவுங் கழியுங்
கணத்துக் கென்றுரைத்தா ரெங்கள்

விற்பன்னனுஞ் சரபேந்திர ரென்
றிந்த முறையிதணை விவரமாக
நற்பரிசாலிம் மருந்தை நசல்
தீர வைத்தியர்கள் நல்கினரே (உரை)

(இ-ள்)

கோடகசாலி
விடத்தேரி இலை
சிறுபுள்ளடி
வசம்பு
குதிரைவாலி (முதியார் கூந்தல்)
இம்பூரா
பழம்பாசி
வெள்ளுள்ளி

இவைகள் எல்லாவற்றையும் நறுக்கி நல்லெண்ணெயில் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து இறக்கவும். இதைக் *கணத்திற்குக் கொடுக்கவும். தூங்கு கணத்திற்கு ஆமணக் கெண்ணெயில் எரித்து இரு காசெடை வீதம் புகட்டவும். அற்பமானால் இந்த பச்சிலை ஐந்தையும் (கோடகசாலி, விடத்தேரி, சிறுபுள்ளடி, குதிரைவாலி, இம்புரு) நசுக்கிச்சாறு புகட்டவும். கழியும் கணம் தீரும்.

* 91 கெ. சுவடியில் கழியும் கணத்திற்குக் கொடுக்கவும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

130. கணத்திற்கு மருந்து

கற்றுழை மடல் வட்டத்துத்தி வேர்
கடுகு ரோகிணி கடுக்காய்
நற்சீரகங் கருஞ் சீரகத்துடன் வெந்த
யமுஞ் சாரடை வேர் தானும்
பற்பலநாட் பழம் புளி ஈர வெங்காய
முங் கூட்டிப் பரிந்தரைத்து
வற்க விளக்கெண்ணெயி னிலுற்பன மா
கப் பிழிந்து வடித்துக் கொண்டே. (உரை)

வடித் தெடுத்து வார்க்கவுங் கைகண்ட
திந்த மருந்து தின்ரூல் வன்மையாகப்
பிடித்திட வேண்டும் பத்தியம் பேசிலொன்
ரூகாதெனவே பேசுவாரென்
றடுத்த வருக்கருள் புரியுமண்ணல் சர
பேந்திரனுரருளிச் செய்தே
கொடுத்த விந்த முறையிதனைக் குவலயத்
தோரனைவருங் கொண்டாடுவாரே. (உரு)

(இ-ன்)

கற்ரூழை மடல்
வட்டத்துத்தி வேர்
கடுகரோகிணி
கடுக்காய்
நற்சீரகம்
கருஞ்சீரகம்
வெந்தயம்
சாதிடை வேர்
வெகு நாட்பட்ட (பழம்) புளி
ஈரவெங்காயம்

இவைகளைத் தண்ணீர்விட்டு நன்ரூக அரைத்து ஆமணக் கெண்ணெயில் பிழிந்து, குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக் குவமாக எரித்து இறக்கவும்.

இதைத்தினம் சாப்பிட்டுவரக் கணத்திற்குக் கைகண்டது. இதற்குக் கடும் பத்தியம் இருத்தல் வேண்டும்.

131. கணத்திற்கு எண்ணெய்

திப்பிலி கத்தூரிமஞ்சள் செண்பகப்
பூ கிராம்பு கருஞ்சீரகஞ் சுக்
கப் பாம்புக்கட்டங் கோட்டம் மேலம்
பொன்முசட்டை யவுரி வேரும்

கொப்பினி லேறிப்படருஞ் சிற்றவரை
தூதுவளை கொடி வேலி வேர்
வெப்பில் விடத்தேரை வேர் நன்னரி வேர்
வசம்பு வெள்ளைப் பூண்டே (உரூ)

பூண்டுடனே சுடலையினில் முளைத்த பூண்
டே தேனும் போட்டுக் கூட்டி
தோண்டியினல் லெண்ணெயிலாகுதல் பசு
வின் னெய்யாதல் சுகமாய்ப்பண்ணி
மீண்டதனை யெடுத்து நக்கவுந்தீருங்
கணமென்னும் வியாதி யென்றே
யாண்டகையாஞ் சரபேந்திர ரவனியு
ளோர்க்கன்புடனே யருள் செய்தாரே (உரள)

(இ-ள்)

திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், சண்பகப்பூ, கிரும்பூ, கருஞ் சீரகம், சுக்கு, பாம்புக் கஷ்டம், கோஷ்டம், ஏலக்காய், பொன் முசுட்டை, அவுரிவேர், கொம்புகளில் படரும் சிற்றவரை, தூதுவேளை, கொடிவேலி வேர், விடத்தேரி வேர், நன்னரி வேர், வசம்பு, வெள்ளைப்பூண்டு, சுடலையில் முளைத்துள்ள ஏதேனும் ஒரு பூண்டு, இச்சரக்குகளை யெல்லாம் சமபாகம் எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து, நல்லெண்ணெயிலோ அல்லது பசுவின் நெய்யிலோ குழப்பிப்பக்குவமாக எரித்து இறக்கி வைத்துக்கொள்ளவும்.

இதைத் தினந்தோறும் சாப்பிட்டுவரக் கணச்சூடு தீரும்.

குறிப்பு:—

'பாம்புக் கஷ்டம்' என்பதற்குப் பொருள் விளங்கவில்லை.

132. கணத்திற்கு எண்ணெய்

தளச்சட்டி தனினெரு மைதலக் கொம்
பைச் சீவி மெல்லிதாகப்போட்டு
பிளக்கும்விறகினை யடுப்பிட்டெரித்திடவும்
பிடிக்கு மந்தப் பொரியைப் பேணிக்
களிப்பக்கு வந்தனிற்றிருகு கள்ளி மேற்
பொருக்கினை முக்காசிடையே
வளப்பமுடன் பொடித்ததனின் விளக்கெண்
ணெயொருபடியே வார்த்துக் கிண்டே (உஅ)

கிண்டியிருநாள் வெயிலில் கிடக்கவைத்து
மூன்று நாள் கிளறெடுத்துக்
கொண்டொரு துட்டிடையளவே கொடுத்திடவே
கணமெட்டுங் குணமாமென்றே
திண்டிறலார் சரபேந்திரர் செப்பினரிம்
முறையிதனைத் தெளிவுள்ளோர்கள்
கண்டு நிதி கிடைத்ததெனக் களிக்கின்றூர்
கணந்தீர்தல்கை கண்டோரே (உாகூ)

(இ-ள்)

எருமை மாட்டின் கொம்பைச் சிறு சிறு துண்டுகளாகச் சீவி ஒரு சட்டியில் போட்டு, அடுப்பின்மேல் வைத்து எரிக்கவும். அது பொரிந்து களிப்பக்குவமாக ஆகும். அப்பொழுது திருகுகள்ளியின் மேலுள்ள பொருக்கு 3 காசிடை கூடப் போட்டு, ஒரு படி விளக்கெண்ணெய் சேர்த்து ஒன்றுகக் கிண்டவும். பின்பு இதை இரண்டு நாட்கள் சூரியபுடமாக வைத்து மூன்றுவது நாள் கிளறிவைத்துக்கொண்டு ஒரு துட்டெடை வீதம் கொடுத்துவர 8 வகைக் கணமும் தீரும்.

133. கணத்தெண்ணெய்

பேய்க்கொம்மட்டிக்காய் மூன்றெடுத்து
மேலிருக்கிற தோற் பிராணி வாங்கிச்
சீக்கிர மதாயறுத்துள்ளே யிருக்கும்
விரைதீர்த்துச் சிறுகத்தானே
பாக்கு வெட்டியானறுக்கி வெங்காய
மேற்றேலைப் பரிகரித்து
மேர்க்க நன்றுயரைத்து விளாங்காயளவு
விழுது கொம்மட்டிக் காயுள்ளே (உாஅ)

இக்காயினிற் சதையும் விளக்கெண்ணெ
யோர் படியுமிதிலே யிந்தப்
பக்குவமா மருந்திரண்டுஞ் சேர்த்தடுப்பி
லே யெரித்துப் பருவமாய்க் காச்
சிக் கோரோசனை யரைக் காசிடை
யொரு காசிடையேலத்தினைப் பொடித்தே
அக்கணமே போட்டிறக்கி யிக்கணந் தீர
சிறு கறண்டி யளவுட் கொண்டே (உகக)

(இ-ன்)

பேய்க் கும்மட்டிக்காய் 3 எடுத்து மேலே இருக்கும் தோலைச் சீவிவிட்டு, அவைகளை அறுத்து உள்ளிருக்கும் விதை களை நீக்கி விடவும். பின்பு, அதைப் பாக்குவெட்டியாற் சிறுக நறுக்கி வைத்துக் கொள்ளவும். இதேபோல் வெங்காயத்தின் மேல் தோலையுரித்து விட்டு, அப்பியிலிட்டு அரைத்த விழுது ஒரு விளாங்காயளவு எடுத்துக்கொண்டு, மேலே சொன்ன கும்மட்டிக் காய்க் குள்ளே வைத்துவிடவும். இவை யாவற்றையும் விளக்கெண்ணெய் (ஆமணக்கெண் ணெய்)1 படியில் குழப்பி அடுப்பின் மேல் வைத்துப் பக்குவ மாகக் காய்ச்சி இறக்கவும். அதனுடன்

கோரோசனை	½ காசெடையும்
ஏலக்காய்	1 காசெடையும்

பொடி செய்து எண்ணெயில் போட்டுக் குழப்பி வடிகட்டிக் கொள்ளவும். இதில் ஒரு சிறு கரண்டி வீதம் உட்கொள்ளக் கொடுக்க எல்லாவித கணங்களும் தீரும்.

134. கணத்திற்கு மருந்து

சீரகம் வெந்தயஞ் சாதிக்காயிலவங்
கப் பட்டை செண்பகப் பூ
யீர வெங்காயங் கோட்டங் திப்பிலி
திப்பிலி மூலமேலங் இராம்பு
பேருள செங்கழுநீருங் கருஞ்சீரகமும்
வெளிச்சைப் பிசின் கணப்பூண்
டேருள சாதிப்பத்திரி யித்தனையு
மெண்ணெயிலே யியல்பா யிட்டே (உகஉ)

இட்டிதெலாம் வைத்தொன்றி லெடுத்துச்
சூரிய புடமிட்டெடுத்துக் கொண்டே
மெட்டுடனே கணமென்னப் பட்டதற்குக்
கொடுத்திடவும் வெண்ணீர் சோறுந்
திட்டமிடு தின்னவு மென்றட்ட திசை கொ
ண்டாடுஞ் செழுநீர் பொன்னி
யிட்டவளஞ் சுரக்குஞ் சோணாட்டிறை
வர் சரபேந்திரரியம்பினரே (உகங)

(இ-ன்)

சீரகம்	கருஞ்சீரகம்
வெந்தயம்	வெளிச்சைப் பிசின்
சாதிக்காய்	கணப்பூண்டு
இலவங்கப் பட்டை	சாதிப்பத்திரி
செண்பகப் பூ	
ஈரவெங்காயம்	
கோஷ்டம்	
திப்பிலி	
திப்பிலி மூலம்	
ஏலக்காய்	
கிரும்பு	
செங்கழு நீர்	

இவைகளைச் சமனாக எடுத்துச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி, சூரிய புடமாக வைக்கவும். இதில் ஒரு சிறு கரண்டி வீதம் கணச் சூட்டிற்குப் புகட்டவும்.

பத்தியம் :— அன்றைய தினம் வெள்ளீர் சாதம் சாப்பிடவும்.

135. கணத்திற்கு நெய்

ஈரவெங்காயம் பசுவின் நெய்
நற்சீரக மூன்று மியல்பாய்க் கொண்டே
வேருடனே சிற்று அம்மான் பச்சரிசி
விதமொன்றுமே சமூலம்
வார்மூள் கருவேலங் கொழுந்தோர் பிடி
யிது விரண்டும் வாய் பேசாமல்
ஏருடன் கொண்டே மூன் மருந்திம் மருந்தும்
வெந்ததனையே பிடித்தே (உகச)

பிடித்துப் பார்த்தால் மொருகு மொருகென்
றுலப் பதத்திற் பிடித்திறக்கி
யெடுத்துக் கொண்டே யிரண்டு துட்டளவு
தினசரி யெடுத்து நல்கு

கடுகென யிப்படி மாத மூன்று திரங்
கொடு சகல கணமுந் தீரும்
விடு புளியுப்பினை யென்று வேந்தனுர்
சரபேந்திரர் விளம்பினரே (உகரு)

(இ-ள்)

சர வெங்காயம்
நற் சீரகம்
சிறு அம்மான் பச்சரிசி சமூலம் 1 பிடி
முட்கருவேலங் கொழுந்து 1 பிடி

இவைகள் எல்லாவற்றையும் சமனாக எடுத்துப் பசு நெய்யில் போட்டு அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சவும். அதன் அடியிலிருக்கும் கடுகு மொரு மொரு என ஆகும் பதம் கண்டு அதை இறக்கவும். பிறகு நெய்யை வடிக்கட்டித் தினம் 2 துட்டளவு வீதம் மாதத்திற்கு 3 முறை கொடுக்கவும். இதற்குப் பத்தியம் :— உப்பு, புளி நீக்கவும்.

136. சுழிகணமும் வயிறு கழிச்சலு மெடுத்த பொருமலுக்கு

வசம்புள்ளி வெதுப்படக்கி கோழி
யவரை பேராமட்டி நொச்சி
யிசைந்த வாறையும் நறுக்கி முறித்தி
றுத்து மிலவங்கத்தூள் மேலிட்டு
நிசங்கமுடனே கொடுக்கக் கணங்
கழிச்சனிற்கும் வயிறே பொருமி
லசமதாகங் கருக்கிக் கிராம்பாறு பூ
பச்சையாகப் போட்டே (உகக)

போட்டிதெலாங் கழாயம் வைத்திறுத்தி
லவங்கப் பூவைப் பொடிக்கரைத்து
மீட்டுமிதிலிட்டிட்டு மேல் வசம்
பிலுப்பரைத்து மேலிட்டே திக்
காச்சு சற்றே வெதுப்பி யுப்பைக் கையாற்
றட்டியே நறுக்கிக் கனல் மேற் சட்டி
போட்டதனைக் கருக வறுத்துக் கருக்கா
யிட்டுதவு பொருமல் போமே (உகஎ)

(இ-ள்)

வசம்பு
வெள்ளைப் பூண்டு
கோழியாவரை
பேராமுட்டி
நொச்சி
வெதுப்படக்கி

இந்த ஆறு பச்சிலைகளையும் நன்றாக இடித்து ஸ்வரஸம் செய்து, முறித்துக் கிழம்பின் தூளுடனே சாப்பிடக் கொடுத்தால் கணக்கழிச்சல் நிற்கும்.

அப்போது வயிறு பொருமல் கண்டால், ஓமத்தை சட்டியிலிட்டுக் கருக்கி அதனுடன் கிழம்பு 6 (எண்ணிக்கையில்) பச்சையாகப் போட்டுக் கஷாயம் வைத்து, நன்றாக வற்றியபின் கிழம்புகளை எடுத்து சிறிது கஷாயம் விட்டு நன்றாக அரைத்து மீதியுள்ள கஷாயத்துடன் குழப்பிக் கொள்ளவும். இக் கஷாயத்தைப் பருகக் கொடுக்கவும்.

வசம்பின் மேல் உப்பைக் கரைத்துத் தடவி அடுப்பிலிட்டு வெதுப்பவும். பின்பு உப்பை நீக்கிவிட்டு அடுப்பில் ஒரு சட்டியை வைத்து அதில் மேற் வசம்பை இட்டுக் கருகும் படி வருத்து ஜலம் சேர்த்து, கருக்குச் கஷாயம் போட்டுச் சாப்பிடப் பொருமல் தீரும்.

137. கணம் எனப்பட்டதிற்கெல்லாம் எண்ணெய்

மருது கோவள வெள்வேலோ கருவேலோ
வரசுடன் மாம்பட்டை செப்பு
நெருஞ்சியின்ற் கொழுந்து துடரிக்
கொழுந்து மாதுளத்தினிற் கொழுந்து
வரப்பூலா நீர்ப் பூலா விடத் தேரை
கருவேலா மரக்கொழுந்து
கருஞ் சீரகங் கம்பிப் பிசின் வசம்பே
லரிசியு நாகரமுமாமே (உகஅ)

நாகரிகச் செண்பகப் பூ சதகுப்பை
நற் சீரகம் லவங்கப் பட்டை
பாகணிய வதிமதுரஞ் சரிகூட்டி
வைத்திந்தப் பலசரக்கோ
டே கொழுந்து பட்டையுட
னிம் மூன்று வகை யினையுமே நல்லெண்ணெய்
சேகரமா யெரித்திறக்கும் போது நெய்யு
நாலு துள்ளி தெரித்தே பின்னும் (உகக)

பின்னு முருங்கையினிலையு மிரண்டு
மணங் கொளக் கூட்டிப் பிரியமாகத்
தின்னு கண மென்பதெல்லாந் தீருங்
காசளவுள்ளே செலுத்தி மேலு
முன்னித மாமுடம்பிட்வு மொரு வருந்
தீர்க்காத கணமோடுங் கைகண்
டின்ன முறை தனைச் சரபேந்திர மன்னர்
மனமிரங்கி யியம்பினரே (உஉய்)

(இ-ள்)

மருதம் பட்டை
கூவிளம் பட்டை (வில்வப் பட்டை)
* வேலம்பட்டை (கருவேல் அல்லது வெள்வேள்)
அரசம்பட்டை
மாம்பட்டை
செப்புநெரிஞ்சில் கொழுந்து
துடரிக் கொழுந்து (இண்டங் கொழுந்து)
மாதுளங் கொழுந்து
வரப்பூலாக் கொழுந்து
நீர்ப்பூலாக் கொழுந்து
விடத்தேரைக் கொழுந்து
கருவேலங் கொழுந்து
கருஞ் சீரகம்
கம்பிப் பிசின்
வசம்பு
ஏலரிசி
சுக்கு

செண்பகப் பூ
சதகுப்பை
நற் சீரகம்
லவங்கப் பட்டை
அதிமதுரம்

இந்தக் கடைச் சரக்குகள், கொழுந்து, பட்டை இவைகளைச் சமமாக எடுத்துக் கல்கமாகச் செய்து,

நல்லெண்ணெய் ஒரு நாழியில் குழப்பி அடுப்பின் மேல் வைத்துப் பக்குவமாக எரித்து இறக்கவும். இறக்கும்போது நாலு துளி நெய்யைத் தெறித்து, முருங்கை இலையில் இரண்டையும் வாசனைக்குக் கூட்டிக் கொள்ளவும். இதில் ஒரு காசளவு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச, ஒருவரும் தீர்க்காத கணச் சூடு தீரும். கை கண்டது.

* 91 கை. சுவடியில் கருவேல், வெள்வேல் இரண்டையும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

138. சுழி கணத்திற்கு எண்ணெய்

முன்னீயிலை ஒரு குத்து விளக்கெண்
ணீயிட்டெரித்து முறைமையாகத்
தின்னென வோர் துட்டெண்ணீ கொடுத்
திடவுஞ் சுழிகணந்தான் தீர்ந்து போகு
மின்னங் கோரோசனை கொம்புப் பாகற்
சாறு திராம்பிழைத்தே சுக்கும்
நன்னயமாகக் கூட்டி நல்கிடின் மும்முறை
யினினெய் நடந்து போமே (உஉக)

(இ-ன்)

முன்னீ இலை ஒரு குத்தளவெடுத்து விளக்கெண்ணெயில் போட்டுப் பக்குவமாகக் காய்ச்சி இறக்கவும்.

இதில் ஒரு துட்டளவு எண்ணெய் எடுத்துக் கொடுக்கச் சுழிகணம் தீரும்.

2. கோரோசனை, இழும்பு, இழைத்த சுக்கு இவைகளைக் கொம்புப்பாகலிலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துத் தினம் மூன்றுமுறை கொடுக்கச் சூழிகணம் தீரும்.

139. சூழி கணத்திற்கு மருந்து

குப்பைமேனிச் சாறுணை யுத்தாமணியை
வதக்கிக் கைக்கொடு பிழிந்தே
திப்பிலி யோடிலவங்கங் கத்தூரி மஞ்சள்
கருஞ்சீரகங்கம
ரிப்பிசினும் வருத்து மேன்பொடி
தூவிக் கொடுத்திடவும் பிள்ளைகட்கே
யெப்படியுஞ் சூழிகணத்தான் றீரு மெனச்
சரபேந்திரரியம் பினரே (உஉஉ)

(இ-ள்)

குப்பைமேனி இலை
சாறுணை இலை
உத்தாமணி இலை

இவைகளை வதக்கிச் சாறு பிழிந்து கொண்டு, இதனுடன்

திப்பிலி
இழும்பு (ரா
கஸ்தூரி மஞ்சள்
கருஞ்சீரகம்
கமரிப்பிசின்

இவைகளைப் பொன்வருவலாக வருத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, மேலே சொல்லிய பச்சிலைகளின் சாறோடு, சூழிகணத்திற்குக் கொடுக்க, நோய் தீரும்.

140. முலைப்பாலென்னெய் கணத்திற்கு

கருஞ்சீரகங் கடுக்காய் சீரகங் கஸ்தூரி
மஞ்சள் கலந்தின்னன்கு
மருந்தினை நெய்யினிலாதல் தேனினிலாதல்
வகையாய் வருத்துப் போட்டு

இருந்த சீயக்காய் கொஞ்சம் போட்டுப்
பருத்திப் பிஞ்சிரண்டு கூட்டி
யெரிந்த வெங்நீரினிலாதல் முலைப்
பாலிலே யாதலிட்டரைத்தே (உஉ-ந)

இட்டரைத்திட்டதின் பிறகே யெண்ணெயைக்
காச்சியுமொரு சேரென்னத்தானே
வெட்டுப் பூலாங்கொழுந்து மேலுசிலங்
கொழுந்துட மானிக்கொழுந்தும்
பொட்டனவே கடுக்காய் நீர் பூண்டுள்ளி
யுஞ் சேர்த்துப் பொங்கக்காய்ச்சி
யுட் கொள நல்கீர் வெங்காயத்துடன்
கஞ்சியும் பத்திய முதவுவாயே (உஉ-ச)

(இ-ள்)

(a) கருஞ்சீரகம்
கடுக்காய்
சீரகம்
கஸ்தூரிமஞ்சள்

இந்த நான்கு சரக்குகளையும் நெய்யிலோ அல்லது தேனிலோ பொன் வருவலாக வருத்து

சீயக்காய்—கொஞ்சம்
பருத்திப்பிஞ்சு —இரண்டு

இவ்விரண்டையும், வென்னீரிலோ அல்லது முலைப் பாலிலோ அரைத்து ஆமணக்கு எண்ணை சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

(b) வெட்டுப் பூலாக்கொழுந்து
உசிலங் கொழுந்து
ஒடமானிக் கொழுந்து
கடுக்காய்
வெள்ளைப்பூண்டு

இவைகளை ஒன்றிரண்டாக இடித்துக் கஷாயம் வைத்துப் பருகவும்.

இதற்குபத்தியம் :—

வெங்காயமும், கஞ்சியும் சாப்பிடவும்

குறிப்பு :—

1. ஓடமானிக் கொழுந்து இன்னதென்று விளங்கவில்லை. ஒடுக்கன் என்பது 'ரப்பர் கொடி' என்று வழங்கப்படும் ஓர் கொடி. வேலிகளில் பயிராகும். மணியைப் போன்ற புஷ்பமுடையதாக இருக்கும்.

ஓடம் = செங்கருங்காலி என்று மலையகராதியில் காணப்படுகிறது.

141. பிள்ளைகளுக்குக் கணத்தெண்ணை

மாசிக்காய் சீரக மோடதி மதுரம்
வகைக்கோர் பலமாங் கிராம்போர்
காசிடை கோழியினவரை வேர் பலம்பத்
தீர வெங்காயமுமோர் சேரு
மீசுரமாய்ச் சிறுகவரிந் தொன்றரைச்சேர்
விளக்கெண்ணை மீதினிட்டே
வாசமுறப் பொன்னிறமாய் வர வேக
விட்டு வேர் வகையெடுத்தே (உ உரு)

எடுத்திதனைப் பஞ்சனைப் பிச்சிப் போ
டவுங் கண்ட கொண்டிடு மருந்தை
யிடுச்சுப் போடவு மிந்தப் பதத்தின்
மறுகலசத்திலெடுத்து வார்த்துக்
கொடுத்துக் கொள்ளவு மெந்தக் கணத்
துக்குங் குணமிரத்தக் கணமே யாதி
படுத்து கணம் பதினெட்டும் பறக்கு
மெனச் சரபேந்திரர் பகர்ந்திட்டாரே (உ உசு)

(இ-ள்)

மாசிக்காய்	1 பலம்
சீரகம்	1 பலம்
அதிமதுரம்	1 பலம்
இரும்பு	1 காசிடை
கோழியாவாரை வேர்	10 பலம்
சரவெங்காயம்	1 சேர்

இம்மருந்துச் சரக்குகளை சிறு சிறு துண்டுகளாக்கி, ஆமணக்கெண்ணை 1½ சேர் விட்டுப் பொன்னிறமாக வதக்கிப் பின்பு வேர் வகைகளை எடுத்து பஞ்சுபோல இடித்து எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாகக் காய்ச்சி வடிக்கவும். இதைத் தினந்தோறும் பருகிவர இரத்தக் கணம் முதல் 18 வித கணமும் தீரும்.

142. கணத்துக்கு மருந்து

மணித்தக்காளியும் வேலிப்பருத்திச் சாறிவ்
வகையுடன் குப்பைமேனி வகையின் சாறும்
உணர்ச்சியுடன் றன்னி லொக்க வோரிரு நாழி
யுங் கொண்டோர் பசுவினெய்யுரி யாமணக்கெண்
ணெயுழக்கு
மிணக்கமுள்ள நல்லெண்ணை யுழக்கிதெல்லாங்
கூட்டி யெரித்து நல்லக் கணப்பினி போமென்பதனை
யெண்ணிக்
குணக்குரிசில் சரபேந்திரர் கூறு முறை தன்னைக்
குவலயத்தின் மானிடர்கள் கொண்டாடுவாரே
(உஉஎ)

(இ-ள்)

மணித்தக்காளிச் சாறு
வேலிப்பருத்திச் சாறு
குப்பைமேனிச் சாறு

இம்மூன்று வகைச் சாறும் சேர்ந்து 2 நாழி (2 படி)

பசுவின் நெய்	½ படி
ஆமணக்கெண்ணெய்	1 உழக்கு (¼ படி)
நல்லெண்ணெய்	1 உழக்கு (¼ படி)

இந்தவகைச்சாறு கூட்டிய எண்ணெயை அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும்.

இதைத் தினந்தோறும் சாப்பிட்டு வரக் கணச் சூடு தீரும்

143. பொருமு கணத்திற்கு

சாணக்கியுள்ளி யொருதலைப் பூண்டு
வசம்பொன்று தான் வதக்கி
தாணுக்கியே நருக்கிப் பிழிந்தேதார்
சங்கு புகட்டிடவுந் தானந்தன்னிற்
கோணுமலே தடவிக் கொண்டு நேர்
மூன்று கொடு வதக்கா.
தூணுகத் தட்டி நாள் மூன்றுறு பொழுது
கொடுத்துதவு வாயே (உஉஅ)

(இ-ள்)

சாணக்கி/
வெள்ளைப் பூண்டு ஒன்று
வசம்பு ஒன்று

இவைகளை வதக்கி இடித்துச் சாறு பிழிந்து ஒரு சங்கு உள்ளுக்குப் புகட்டி மேலேயும் தடவவும். இதை மூன்று நாளைக்கு ஆறு பொழுது கொடுக்கவும். பொருமு கணம் தீரும்.

144. மாந்த கணத்திற்கு மருந்து

பேய்ச் சுரை வேராறு பலங் கழுவிச் சற்றே
பெருந் தணலிலே வெதுப்பிப் பிடித்திடித்த
தாய்ச் சாறு பிழிந்து கொண்டச்சாறுழக்கி
ட்டான் மிளகும் பொடித்திட்டதனிற் கூட்டிக்
காய்ச்சு குழம்பாகு பதத்தினிலிறக்கிக் கரத்
தி லொரு காசிடை மட்டா யெடுத்துத்
தோய்த்த தயிருடன் கலந்து கொடுக்க
மாந்தத்துட நோய்கள் கணநோய்கள் துலைந்து
[போமே. (உஉக)

இ-ள்)

பேய்ச்சுரைவேர். 6 பலம் எடுத்து நன்றாகக் கழுவி அனலில் வெதுப்பி, இடித்துப் பிழிந்த சாறு ஒரு உழக்குடனே, மிளகுப் பொடியிட்டு, அடுப்பின் மேல் வைத்துக் குழம்பாகக் காய்ச்சவும். இதில் ஒரு காசெடை யளவு எடுத்து நன்றாகத் தோய்ந்த தயிருடன் கலந்து கொடுக்க மாந்தநோய்களும், கண நோய்களும், தீரும்.

145. வரள்கண, வரள்மாந்தத்தின் குணமும், மருந்தும்

நெஞ்சுவத்தி வாயுணரு முடம்புகாயும்
நீண்டகண் பீளையுஞ் சாரு நேரந்தோறும்
மிஞ்சிடுந் தண்ணீர்த் தாகங் குரலுங் கம்முமே
யழமாட்டாதிதற்கு வெள்வெங்காயம்
முஞ்சாணகம் வசம்பு முதிர் துழாயின்
முத்திலையுங் கூட்டியுள்ளுக்குங் கொடுத்தே
யஞ்சு விரலாற்று வளிட்டிடவப் போதே
யனல்மாந்தம் வரக்கணமு மகன்று போமே (உகம)

(இ-ள்)

(குறி, குணம்)

நெஞ்சு வற்றும், வாய் உலரும், சுரதாபங் காணும், அடிக்கடி கண்களில் பீளைகட்டும், நாவறட்சியுண்டாகும், குரல் கம்மும், குழந்தை அழமுடியாத நிலைமையிலிருக்கும்.

இதற்கு மருந்து :—

வெள் வெங்காயம்
சோணகம் (பெரு வாகை)
வசம்பு
முதிர்ந்த துளசி

இவற்றை இடித்துக் குழந்தைக்குப் பிழிந்து, மேலும் துவையிட அனல் மாந்தமும் வரள் கணமும் தீரும்.

146. சுரி கணத்திற்கு

வெள்ளிண்டு கொண்டுவந்து நறுக்கி முலைப்
பால் விட்டுமே பிழிந்து
மெள்ள விளக்கெண்ணெ சரிவிட்டுள்ளி
வசம்பீர வெங்காயத்தை
யெள்ளளவாகவு நருக்கி யிட்டெரித் துள்
ளுக்கு தவியிடு மேலெங்கும்
பிள்ளை கணந்தீரு மென்று சரபேந்தி
யணரும் பேசினரே (உகக)

(இ-ள்)

வெள்ளிண்டு கொண்டு வந்து நன்றாக நறுக்கி முலைப் பால் விட்டு இடித்துப் பிழிந்து எடுத்த சாற்றிற்குச் சரி நிறை விளக்கெண்ணெய் விட்டு,

வெள்ளைப் பூண்டு
வசம்பு
வெங்காயம்

இம்மூன்று சரக்குகளையும் எள் பிரமாணமாகச் சிறு சிறு துண்டுகளாக அரிந்து, சாறு கூட்டிய எண்ணெயில் குழப்பி அடுப்பின் மேல் வைத்துப் பக்குவமாக எரித்து வடிக்கட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலேயும் தடவவும்.

குழந்தைகளின் கணம் இரும்.

---

15. பிள்ளைகளின் சில்லரை வியாதிகளுக்கு மருந்துகள்

147. பிள்ளைகளின் வயிறு பொருமலுக்கு மருந்து

இலையேழுத்தாமணியிலே
யெட்டிப் பறிவாய் பேசாமல்
விலையிட்டுங் கொண்டே யெருமை
வெண்ணெயினிலே வேகவைத்து
நலமாய்க் கொடுக்கவும் பொருமு
நசல்போமிந்த நன்முறையை
யுலவாதுண்டு கை கண்டோருத்
தாமணியுத்தம மெனவே (உஉ)

உத்தாமணியினிலை நொச்சி
யுகாயின் கொழுந்தோர் மூன்றினையும்
வைத்து நறுக்கி வெள்ளுள்ளி
வராகனெடையே வைத்துக் கொண்

டொத்த விளக்கெண்ணெயை விட்டுப்
பதத்தில் வடித்திட்டோர் நால் நாள்
நத்திக் கொடுக்கப் பொருமலெனு நசல்
போமினி நாடாதெனவே (உங்க)

(இ-ள்)

(1) உத்தாமணி இலை ஏழு இலை வாய் பேசாமல் பறித்து எருமை வெண்ணெயில் இலைகளை வேகவைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதனல் பொருமல் வியாதி தீரும்.

(2) உத்தாமணி இலை
நொச்சி இலை
உகாய்க் கொழுந்து

இம்மூன்று இலைகளையும் சிறியதாக நறுக்கி, வெள்ளைப் பூண்டு ஒரு வராகனெடை எடுத்து வதக்கிக் கொண்டு, எல்லா வற்றையும் சேர்த்து விளக்கெண்ணெய் விட்டுப் பதத்தில் வடித்து, 4 நாள் குழந்தைக்குப் புகட்டப் பொருமல் எனும் வியாதி தீரும்.

148. பிள்ளைகள் விரைவாதத்திற்கு மருந்து

கழற்கொடி சேம்பிலைச் சாறு வகைக்கிரு
நாழியுங் கொட்டைக் கரந்தைச் சாறு
முழக்கு நாலுடன் முடக்கொத்தான் சாறு
மொரு நாழியுடன் பாவட்டைக்
குழைச் சாறு மிருநாழி விளக்கெண்ணை
சேரிரண்டு கொள் கிழாயம்
பழக்க முறையே கொட்டைக் கரந்தை
வேர் பலம் பத்துப் பார்த்தி தோடே (உங்க)

பார்க்குள் வேலிப்பருத்தி வேரு மிருவது
பலமும் பதக்குத் தண்ணீர்
ஏர்க்க விட்டஞ் சொன்முகவே காய்ச்சி
யெண்ணெயிலே யெடுத்துவிட்டு

மார்க்கவே பொடித்திடு சுக்கரைப் பலங்
காற்படி பாலிலரைத்துக் கூட்டச்
சேர்க்கக் காச்சியு மெழுகு பதத்தி
றக்கு ... ... (உருரு)

(இ-ள்)

சமற்சி இலைச்சாறு	2 நாழி
சேம்பிலைச் சாறு	2 நாழி
கொட்டைக் கரந்தைச் சாறு	4 உழக்கு
மூடக்கொற்றான் சாறு	1 நாழி
பாவட்டை இலைச் சாறு	2 நாழி
விளக்கெண்ணெய்	2 சேர்
கொள்ளுக்கஷாயம்	2 சேர்

இவைகளை ஒன்று சேர்த்து, இதனுடன்

கொட்டைக்கரந்தை வேர்	10 பலம்
வேலிப்பருத்தி வேர்	20 பலம்

இவ்விரண்டையுமிடித்து, 2 மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின் மீதேற்றி $\frac{1}{5}$க் காய்ச்சி இந்த கஷாயத்தை இறுத்து மூன் சாறுகூட்டிய எண்ணெயில் விட்டு, சுக்கு ஒரு பலத்தைக் கால் படிப் பால் விட்டு நன்றாக அரைத்து, கல்கமாகச் செய்து எண்ணெயில் குழப்பி மெழுகு பதமாக வடித்து உபயோகித்து வர விரைவாதம் தீரும்.

149. பிள்ளைகளுக்கு அர்மைக்காயம், கண, வைதூரி, தோன்றினால் மருந்து

நன்னாரி வெள்ளருகு சிற்ற ரை நிலப்
பனசாரணை நல் வேரும்
சொன்ன வகைக் கோர் பாக்களவரைத்து
நாழி நெய்க்குச் சொல் வாறூட்டி
அன்ன வாவின் பாலீரழக் கிட்டங்
நெயிற் கருஞ் சீரகந் தன்னோடே
பின்னரதி விடையங் திப்பிலி பூதக்
கரப்பானும் பிரித்தெடுத்தே (உருக

எடுத்தோர் வகைக் கோர் கழஞ்சிட்டரைத்
ததனைக் கரைத்து நெய் செய்தேயுட்கொளக்
கொடுத்திடு காசிடையும் நக்கிக் கொண்டி
டெனக் குருசில் சரபேந்திரர் தம்மை
யடுத்த வருக் கருள்புரியுமம் முறையே
மெய் முறை யென்றவை யினுள்ளோர்
படித்ததனைப் பார்த் தெவர்க்கும் பண்டிதங்
கை கண்ட தெனப் பகர்ந்திட்டாரே. (உஎஎ)

(இ-ள்)

நன்னரி வேர்
வெள்ளருகு ,,
சிற்றவரை ,,
நிலப் பனைக்கிழங்கு
சாரணை வேர்

இவைகள் வகைக்கு ஒரு பாக்களவெடுத்து, அரைத்து ஒரு படி நெய்யுடன் குழப்பி, பசுவின்பால் இரண்டு ஆழாக்கும் கூட விட்டு

கருஞ்சீரகம்
அதிவிடயம்
திப்பிலி
பூதக் கரப்பான் பட்டை

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து அரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக வடிக்கவும்.

வேளைக்கு ஒரு காசிடை வீதம் சாப்பிட்டால் மேலே கண்ட நோய்கள் தீரும்.

150. பிவ்லாக்குத் தண்ணீர் தாகத்துக்கு

துடரி வரப் பூலா வாலதுவான் கொழுந்துஞ்
சொலு நாரத்தை யிலையுந் தொகுத்துக் கொண்டே
யிடுபுற்று மண்ணுடனே குளவிக் கூடிட்டிருந்த
மண்பச்சோலி விளா விலையுங் கூட்டி

யடை வுடை யொன்பது மருந்திட்டிடு கஷாயத்
தனற் செங்கற் சுட்டிடு வப்போதே யத்தை
எடுவிந்த கஷாய மாத்திரர்க்கு நல்கவே
தண்ணீர் தாகந்தானெடுத்திடாதே. (உங-ஏ)

(இ-ள்)

துடரிக் கொழுந்து (இண்டு)
துவான் கொழுந்து (பொன் முசுட்டை கொழுந்து)
ஆலங் கொழுந்து
வரப்பூலாக் கொழுந்து.
நாரத்தை இலை
புற்று மண்
குழவிக்கூண்டு மண்
பச்சை ஓலை
விளா இலை

இச்சரக்குகளையெல்லாம் சேர்த்துக் கஷாயம் செய்து, ஒரு புதுச் செங்கலிச் சுட்டுக் கஷாயத்தில் நனைத்து எடுத்து விட்டு, அக்கஷாயத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கத் தீராத தாகம் நிற்கும்.

151. எங்கும் வெடி சிரங்காய் போகாமலிருக்கிறதற்கு உள் மருந்து

அனிச்சம் வேரொரு சேரையரைத்
தெலுமிச்சம்பழத்தினள வெடுத்தே
புளிற் றெருமை மோரி லிட்டுக் கலக்கி
யந்தி சந்தி யிரு போதுந்தானே
மூன்றுக்கு ளெட்டு நாளளவுங் குடித்திரு
பத்தியம் பிடிக்கில் வாகாமென்றிங்
கனைத்துலகு மார்க்க வந்த தவச்சர
பேந்திரர் கை கண்டருள் செய்தாரே. (உங-கூ)

(இ-ள்)

அனிச்சை வேர் 1 சேர், வெட்டிவந்து அம்மியிலிட்டு அரைத்து ஒரு சிறு எலுமிச்சங்காயளவு எடுத்து, எருமை மோரில் கலக்கி அந்தி சந்தி குடிக்கவும். 8 நாள் சாப்பிட்டுப் பத்தியமாயிருக்கவும். கை கண்டது.

அனிச்சை = நாகமல்லிகை.

152. சிறுபிள்ளைகளுக்குப் பேதி எண்ணெய்

சத்திச் சாறடை வேருத்தாமணி
சாறடை சங்கதாரி வேரும்
வைத்தசிறு வழுதலை வேர் தூதுவளை
தலைச் சுருள் வள்ளி வேரும்
இத்துடனே திருவப் பட்டையும் வேருங்
குட்டிலெனும் வேருள்ளி
பத்துடனப்பைக் கிழங்கு கண்டம்
வசம் பெள்ளெண்ணெய் பரு வேப்பெண்ணெய்
(உசம)

எண்ணெ யொக்கக் கொண்டு யெரித்திட
வயிறு கழியு நோயிராது தீரும்.
உண்ணுகடும்பத்திய மொன்றுகாது
வாகாக வுண்ணச் செய்யேன்
றண்ணல் சரபேந்திரனை ருண் முறையா
லளகை வயித்தியர் களானே
ரெண்ணியனு சரித்த வருக்கெங் நோயுந்
தீர்ப்போ மென்றிருந்திட்டாரே (உசக)

(இ-வ்)

சத்திச்சாறணை வேர்
உத்தாமணி வேர்
மூக்கறுட்டை வேர்
சங்கதாரி வேர்
சிறு வழுதுலை வேர்
தூது வேளை வேர்
தலைச்சுருள் வள்ளி வேர் (பெருமருந்து வேர்)
திருவப் பட்டை
திருவப்பட்டை வேர்
குட்டிவிளா வேர்
வெள்ளுள்ளி
அப்பைக்கிழங்கு துண்டம்
வசம்பு

இவற்றைச் சமயெடை எடுத்து நன்றாக இடித்து, வேப் பெண்ணெயும் நல்லெண்ணெயும் ஒன்று கூட்டி யாவற்றையும் ஒன்றாகக் குழிப்பி, அடுப்பில் வைத்துப் பக்குவமாக எரித்துக் குழந்தைக்குப் புகட்ட வயிறு கழிந்து பற்பல நோய்களும் தீரும். பத்தியமாக இருக்கவும்.

குறிப்பு:—

சரக்குகள் ½ பலம் என்றால்
வேப்பெண்ணெய் 2½ சேர்
நல்லெண்ணெய் 2½ சேர் } எடுத்துக் காய்ச்சவும்.

153. பிள்ளைகள் வயிறு கழிய மருந்து

காட்டு மல்லிகையிலையு மீர வெங்
காயத்துடனே கருஞ்சீரகமு
கூட்டி நறுக்கிப் பிழிந்து விளக்கெண்
ணெய் தனிற் கூட்டிக் கொடுக்கவே தான்
னீட்டமுள கல்மிழங்க ளெலாமகல
வயிறு கழிந்திடு மென்றே சோ
ணுட்டரசர் சரபேந்திரர் நவிற்று முறை
யெவர்க்கு மதிசய நன்காமே (உசஉ)

(இ-ள்)

காட்டு மல்லிகை இலை
வெங்காயம்
கருஞ்சீரகம்

இவற்றைச் சமமெடுத்து ஒன்று கூட்டி இடித்துப் பிழிந்து விளக்கெண்ணெயில் கலந்துக் கொடுக்க நன்றாக வயிறு கழியும். கல்மிஷங்களும் தீரும்.

154. உரம் விழுந்த பிள்ளைகளுக்கு

உரம் விழுந்த பிள்ளைகளுக்குடனிரு
காதுங்கரங் கொண்டுருவும் போது
விரவி வீறென்றிடு மிவ்விட மறிந்து
மஞ்சள் விளக்கெண்ணெய் மத்தித்

திருகையினிற்ற டவிக் கொண்டே கழுத்தி
லிரத்தங் கட்டின விடத்தி
லெரி செய் வெண்ணீரைத் தெறித்திட்டே
மூன்று நாளிவ் வாறி டநன்காமே. (உசஎ)

(இ-ள்)

உரம் விழுந்த குழந்தைகளுக்கு இரு காதுகளையும் உருவும் போது அது வீரிட்டு அழும். எந்த இடத்தில் தொட்டால் அழுகிறதோ அந்த இடத்திலும், மஞ்சளையும் விளக்கெண்ணெயையும் ஒன்றுகக் கூட்டிக் கையில் தடவிக்கொண்டு/ கழுத்தில் இரத்தம் கட்டின இடத்திலும் உருவி விடவும். வெண்ணீரையும் தெளிக்கவும். இவ்வாறு 3 நான் செய்யவும்.

155. சிறு பிள்ளைகளுக் கெண்ணெய்

உள்ளி கோழியின் முட்டை வசம்பினை
யுத்தாமணி பீர்க்குணும் நல் வேளை
ஒள்ளிய நாய் வேளை யவரை கோழிய
வரைச் சாறுடன் கோவைச் சா
றுள்ளி யெடுத்தே யரைத்தவ்வளவுக்
கவ்வள வெண்ணெயதனிற் காச்சிப்
பிள்ளைகட்குக் கொடுக்கவுங் கைகண்ட
தெனச் சரபேந்திரர் பேசினரே. (உசச)

(இ-ள்)

வெள்ளைப் பூண்டு
கோழி முட்டை (வெள்ளைக் கரு)
வசம்பு
உத்தாமணி இலை
பீர்க்கிலை
நல்ல வேளை இலை
நாய் வேளை இலை
கோழியவரைச்சாறு
கோவைச்சாறு

இவைகளைச் சம அளவாக எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து எண்ணெயில் குழப்பிப் பதமாகக் காய்ச்சி வடிக்கவும் கை கண்டது. (எண்ணெய்—ஆமணக்கெண்ணெய்)

156. குழந்தைப் பிள்ளைகளுக்கு நெய்

கழற் கொடியினிலைக் கொழுந்துத் தாமணி
சாறணை மணித்தக்காளி நொச்சிற்
குழைக் கொழுந்தாடா தொடை நுணைவினிலை
பொடுதலைக்காய் கொண்டி தெல்லாங்
கழற்கொடிக் காயின்னளவே யரைத்தெ
டுத் தேலஞ் சாதிக்காய் கிரும்பு
மிழைத்த திரிபலை கருஞ்சீரகஞ் சீரகம்
வசம் போடிவையுங் கொண்டே (உசரு)

கொண்டு திரி கடுகமுடன் வகைக்கொரு
காசிடை யிடித்துக் கொணர்ந்து தூளைப்
பண்டிதமா யோர் நாழி பசுவின் வெண்
ணெயிற் கலந்து பாங்காய்த்தானே
யண்டை யிருந்ததைக் கிருத பக்குவமாகக்
காச்சியதை வடித்தே
உண்டிடப் பிள்ளைகட்கு தவிலுடன் மாந்த
மென்பதெல்லா மோடுந்தானே. (உசஉ)

(இ-ள்)

வேலிப் பருத்தி (உத்தாமணி) கொழுந்து
மணித்தக்காளிக் கொழுந்து
கழல் கொடி இலைக் கொழுந்து
சாறணைக் கொழுந்து
நொச்சில் கொழுந்து
ஆடாதொடை இலை
நுணை இலை
பொடுதலைக் காய்

இவைகளை ஒரு கழற்சிக் காயளவு எடுத்து நன்றாக அரைத்து

ஏலம்
சாதிக்காய்
இரும்பு
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
கருஞ்சீரகம்
சீரகம்
வசம்பு
சுக்கு
திப்பிலி
மிளகு

இவைகளை வகைக்கு ஒரு காசிடை எடுத்துப் பொடி செய்து, பசு வெண்ணெய் 1 நாழியில் கலந்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாகக் காய்ச்சி நெய்யை வடிக்கவும்.

இதை உள்ளுக்குக் கொடுக்க மாந்த வகைகள் அனைத்தும் தீரும்.

---

16. பிள்ளைகளின் ஆமத்திற்கு மருந்துகள்

157. குழந்தைகள் ஆமவலிக் கெண்ணெய்

சாரணை பாவட்டையு முத்தாமணியும்
மூவகை வேர் சலத்தாமை யோ
டோ ரொன்றுக் கோர் கழஞ்சுமு.....சிற்
றுமணக் கெண்ணெயுப் பொடித்திட்
டேருள்ளி வசம்பும் வகைக்கோர் கழஞ்
சிட்டேயிடித் திட்டியல் பாய்க் காச்சி
பிராயம் பிலாபிலமும் புரிந்தொரு காசிடை
யரையும் புகட்டின்னங் கேளே (உடனே)

இன்னுங் கேணெச்சி வேலிப்பருத்தி
சாறணே பேயெனுந் தும்மட்டி
சென்னிறுத்தகனி வீழி பொடுதலையினி
லேச சாறுந்தினி சொன்றுக்கு
யன்னி யுழக்கிறுத்துச் சிற்றுமணக்கெண்
ணெயை காழியூற்றிக்காச்சி
அன்ன பிள்ளே பெலமறிந்தோர் காசிடை
யொன்றரைக் காசு மளிக்கலாமே (உசஅ)

அழைத்தடுத்துப் புகட்டவுமே யாம் வலிப்
படங்கும் வலியடுத்து வந்த
பொழுதெடுத்துப் புகட்டவுங் கை கண்ட
தென னெய் போமென்னவே புலவர் மெஞ்சுஞ்
செழியன் சொன் புகழுஞ் செம்பியனுட்
டங் கலுமே செவ்விள தாளு
மழகர் சரபேந்திரனுர் அருளிய தென்
ரு லெவர்க்கு மன்புண்டாமே (உசஉ)

(இ-ள்)

சாறணே வேர்
பாவட்டை வேர்
உத்தாமணி வேர்
ஆமையோடு

இவை வகைக்கு ஒவ்வொரு கழஞ்சு எடுத்துச் சிற்றுமணக் கெண்ணெயில் (½ படி) குழப்பி,

உள்ளி
வசம்பு

இவ்விரண்டும் வகைக்குஒரு கழஞ்சு, கூட்டிப் பக்குவமாக அடுப்பின்மேலிட்டுக் காய்ச்சி, வடித்து குழந்தைகளின் பல மறிந்து ஒரு காசிடையோ அல்லது ½ காசிடையோ கொடுத்து வரவும்.

(2) நொச்சிச் சாறு
வேலிப்பருத்தி ,,
சாறணே ,,
பேய்கும்மட்டிக் காய் ,,
வீழிக் ,,
பொடுதலைக் ,,
} இவைகள் வகைக்கு ஒரு உழக்கு

சிற்றுமணக்கெண்ணெய் 1 படி விட்டுக் காய்ச்சிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இதில் ஒரு காசிடையோ அல்லது 1½ காசிடையோ, குழந்தையின் பலத்திற்குத் தக்கப்படி வலி வரும்போது உள்ளுக்குப் புகட்டவும். உடனே நிற்கும். கை கண்டது.

158. ஆமத்துக்கு

விடத்தேரை பிண்ணாக்கி விளாசிறு
புள்ளடி நீர் பூலாவும் வேருய்
வடுத்திடு கீழ்காய் நெல்லி வரற்
பூலாவும் புளிக்க வைத்த காடி
யெடுத்துடன் வார்த்தரைத்துள்ளுக்கும்
புகட்டித் துவகீளயுமிட்டே சங்காலு
மடுத்த நாட் புகட்டவுமே யாமவலிப்
பகலுமென வறிமினீரே (உரும்)

(இ-ன்)

விடத்தேரி வேர்
பிண்ணாக்கி வேர்
விளா வேர்
சிறுபுள்ளடி வேர்
நீர்பூலா வேர்
கீழாநெல்லி வேர்
வரப்பூலா வேர்

இவைகளைச் சமமெடுத்து நன்றாகப் புளித்த காடி விட்டு அரைத்து அதை குழந்தைக்குப் புகட்டி மேலும் துவகீளயிடவும். இதை, மறுநாளும் ஒரு சங்கு கொடுக்கவும். ஆம வலிப்பு தீரும்.

159. ஆமத்துக்கு

கடுக்காய் நெல்லியின் முள்ளி மடற்றுத்தம்
பளிங்குக் கல் கடைச் சரக்கை
யெடுத்துத் தன்னின மொக்கவே யெலு
மிச்சம்பழச் சாறிட்டரைத்தே

அடுத்துண்டை செய்து நிழலாலுலர்த்திக்
காடியினுகு தனீராதல்
விடுத்தஞ்சன மிடவும் வேணு மெனச்
சர பேந்திரர் விளம்பினரே. (உருக)

(இ-ன்)

கடுக்காய்
நெல்லி முள்ளி
மடல் துத்தம்
பளிங்குக்கல்

இக்கடைச் சரக்குகளை எல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றினால் நன்றாக அரைத்து, மாத்திரை செய்து, நிழலில் உலர்த்திக் காடியிலோ அல்லது தண்ணீரிலோ இழைத்து ஒரு பயறளவு ஒரு கோலில் எடுத்துக் கண்களில் அஞ்சனமாக இடவும். ஆமதோஷம் தீரும்.

160. ஆமத்துக்கும் எடுப்புத்தோஷத்திற்கும்

காஞ் சோறி முக்கா வேளை முத்தக்
காசுடனே பங்கம் பாளை வேர்
ஆய்ந்தெடுத்து வகை வகை கட்கடுத்
தது முப்பலத்துடன் முக்குறுணி யானீர்
திதாஞ்சுற நாலொன்றுகக் காச்சு
பிசை பிழியி தினிற்றெருகு நெய் நாழி
காஞ்ச வுப்புக் கூட்டுழக்கு கற்கஞ்சுக்
கதி விடையங் கருஞ்சீராமே. (உருஉ)

கருஞ்சீரகம் மிளகு திப்பிலி
யுநற் சீரகத் தோ டோமம்
யிருந்த வத்திப் பூவுடன் கூவிளஞ் சதை
யுந்தின் புதுவர்சிகையு மொன்றுக்
கருங் கழஞ் சொன்றுற வரைத்துக் கரை
பதத்தில் வடித்து நக்க வாங்கைத் தோடம்
பொருந்தி வயிற்றினி னுள்ள தோட
மூமாமத்துடனே போகுந்தானே. (உருங)

(இ-ன்)

காஞ்சோறி	3 பலம்
மூக்கா வேளை	,,
கோரைக் கிழங்கு	,,
ஆடு தின்டாப் பாளை வேர்	,,

இவைகளை இடித்து 3 மரக்கால் பசு மூத்திரம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலில் ஒன்றாகக் காய்ச்சிப் பிசைந்து பிழிந்து வடிகட்டி

பசு நெய்	1 படி
பொரித்த உப்பு	ஒரு உழக்கு
சுக்கு	
அதிவிடயம்	
கருஞ்சீரகம்	
மிளகு	
திப்பிலி	
சீரகம்	
ஓமம்	
அகத்திப்பூ	
வில்வப்பழச்சதை	
பிஞ்சுக் கடுக்காய்	

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, நெய்யோடு குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் இறக்கிச் சாப்பிட்டுவர

ஆந்தை தோடம்
வயிற்றிலுள்ள ஆமதோஷம் இவை தீரும்.

17. பிள்ளைகள் மாந்தத்திற்கும் அதன் உபத்திரவங்களுக்கும் மருந்துகள்

161. மாந்தம் பொருமல் கழிச்சலுக்கு மருந்து

உத்தாமணியோடுள்ளி வெதுப்படக்கி
கோழியவரை வசம்புடன் சாணைக்கி
யித்தினையுமோமத்தினிற் கூட்டிக்
கருக்கிட்டுமே புகட்ட
வத்தினமே மிகுதாகமனல் கண்டா
னுணவிலை வெந்தயம் வசம்பும்
புத்த வெண்காயமுங் கூட்டுங் கருக்குணப்
பேதிகள் மாந்தம் பொருமல் போமே (உரு.)

(இ-ள்)

உத்தாமணி வேர்
வெள்ளைப் பூண்டு
வெதுப் படக்கி
கோழியாவரை
வசம்பு
சாணக்கி
ஓமம்

இவை எல்லாவற்றையும் ஒரு சட்டியிலிட்டு நன்றாகக் கருக்கித் தண்ணீர் விட்டுக் கஷாயமாக இறக்கி அன்றைய தினமே புகட்டவும். தாகமும் ஜ்வரமும் கண்டால்,

(b) நுணை இலை
வெந்தயம்
வசம்பு
வெள்ளைப்பூண்டு

இந்நான்கையும் கருக்கிக் கஷாயம் செய்து சாப்பிடப் பேதிகள், மாந்தம், பொருமல் தீரும்.

162. மாந்தத்திற்கு பிள்ளோப்பிணி தீர மருந்து

பிள்ளோயுடற்பிணி மாந்தந்தவிர்ந்திடவே
பெரியோர்கள் பேணிச் சொன்ன
உள்ளி வசம்புயர் பனைவேருடன் வே
விப்பருதியிலை யுகந்துதேடி
வெள்ளாட்டின் புழுக்கையுமிட்டே காடி
விட்டரைத்து மேல் வயிற்றின்
வள்ளிதாய்ப்பூசவுமே வயிறு கழிந்
திடும் பொருமல் வாடிப் போமே (உருரு)

போமிந்த மருந்தினையே கொதிக்கவைத்து
வயிற்றினிலே பூசப் பூசத்
தாமதியாதுடனே தான்ற விர்ந்து விடும்
பிணிமாந்தஞ் சவுக்கிய முண்டாஞ்
செம்மிது வென்றுலகோர் தெளியுமெனச்
சரபேந்திரர் செப்ப நூலே
பாமரர்களறியார்கள் பாவாணர்
கயந்திவை பாராட்டுவாரே (உருரு)

(இ-ள்)

உள்ளி
வசம்பு
பனை வேர்
உத்தாமணி இலை
வெள்ளாட்டுப் புழுக்கை

இவற்றைக் காடிவிட்டு நன்றாக அரைத்து மேல் வயிற்றில் பூச, வயிறு கழிந்து, பொருமல் தீரும்.

இதையே கொதிக்கவைத்து வயிற்றில் பூசமலங்கழியாது. மாந்தம் நீங்கும். சுகமுண்டாகும்.

163. சிறு பிள்ளைகள் மாந்த சுரத்திற்கு மருந்து

மாந்த சுரம் பிள்ளைகட்கு வந்தால்
வில்வத்துடன் பாவட்டை வேரும்
போந்த பூனைக் காலி முடக்கொத்தான்
சிறுபுள்ளடிப் புதிய வேரும்

காந்திடாமற் சுட்ட வசம்புடனுமையீ
ஞேடுங் கருகச் சுட்டே
யேந்தி நாழியினீரிட்டுரியாகக் காய்ச்சு
புகட்டின்னெய் போமே (உருசு)

(இ-ள்)

வில்வ வேர்
பாவட்டை வேர்
பூனைக்காலி வேர்
முடக்கொற்றான் வேர்
சிறு புள்ளடி வேர்
காந்தாமல் சுட்ட வசம்பு

ஆமையோடு (நன்றாகக் கருக்கியது) இவற்றை நன்றாக இடித்து 1 படி ஜலம் விட்டு ½ படியாகக் காய்ச்சிப் புகட்டவும் ஜ்வரம் (மாந்தம்) நீரும்.

164. மாந்தத்திற்கு மருந்து

நல்லெண்ணெய் நீர் முள்ளி நருஞ்சாறு
முருங்கையிலை நல்ல சாறு
மெல்லவே சமனாக விடு கலந்து
கொடு மாந்தம் விட்டு விட்டே
யல்லலினிச் செய்யோம் என்ற கலுழி
தைச் சரபேந்திரராயு ஞாற் கண்
டில்லறத் தோர்க்கினி தாய் மற்றேனை
யோர்க்கு மியல்பாயியம்பினரே. (உருள)

(இ-ள்)

முருங்கையிலைச் சாறு
நீர் முள்ளிச் சாறு

இவ்விரண்டையும் நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்க மாந்தம் "இனி குழந்தைக்குக் கஷ்டம் கொடுக்கமாட்டோம்" எனச்சொல்வது போல் நீரும்.

165. மாந்தத்திற் கெண்ணெய்

வேலிப் பருத்தி முடக்கொத்தான் வேர்
சாறடை நாய் வேளை வேர்
சாலப் பாணு வேரு மணித் தக்காளி
வேருந் தானேர் வகைக்
கேலுந் தோல் பாக்கள வரைத்து
மிதில் வெண்காய மிரண்டு தைய
காலே கடுகு ரோகணியுங் கருஞ்
சீரக மும் கலந்துரைத்தே (உருஅ)

உரியாமணக் கெண்ணெயிலிதனை
யூற்றிக் கொதிக்க வைத்து தைய
வரையிற் பரிதி வருதல் கண்டு
மைந்தர்க் கொரு நாற் காசிடையே
விரைவாய்த் தண்ணீர் தொடா தெண்
ணெய் விட்டுக் கொடுக்கவே மூன்று
திரமே வயிறு விடுமாமஞ்சிக் கா
தொரு முத்தினத்தினிலே (உருக)

(இ-ன்)

வேலிப் பருத்தி வேர்
முடக்கொத்தான் வேர்
சாறடை வேர்
நாய் வேளை வேர்
* பாணு வேர் (காட்டாமணக்கு)
மணித் தக்காளி வேர்

இவற்றின் தோல் வகைக்கு ஒரு பாக்களவு அரைத்து இதனுடன் 2 பூண்டு, கடுகு ரோகிணியும், கருஞ்சீரகமும் அரைத்துக் கரைத்து, ஆமணக்கெண்ணெய் உரி (½ படி) யில் குழப்பிக் கொதிக்க வைத்து,

---

* பாணு வேர் என்பதற்கு காட்டாமணக்கு வேர் என்று பொருள்.

சூரியதோய காலத்திலே, சூரியன் புறப்பட்ட பின் தாயார் தண்ணீர் தொடாமல் இருந்து, குழந்தைக்கு 4 காசளவு எண் ணெயைக் கொடுக்கவும். 3 தடவை வயிறு கழியும். ஆம மும் போகும்.

இவ்வாறு மூன்று நாள் கொடுக்க மாந்தம் தீரும்.

166. மாந்தத்திற்குக் கஷாயமும் உருண்டையும்

ஓமங் கருஞ்சீரகம் வேலிப்
பருத்தி யிலையுமொரு குத்து
வேமச் சட்டிதனிலிட்டு வேலிப்
பருத்தி யிலைக் கருக
ஓமம் வெடிக்க விட்டுழக்கு
மூதக மூற்றியுறைக்கு நீலச்
சேமத் துளசி சிக்கினன்
பட்டையுடனே சிறு குறிஞ்சா. (உகம)

குறைவில்லாத பெருங் கிழங்கு
கூடக் கொண்டு புலி துடக்கி
நறிய வேரு மிலையிதெலா
நறுக்கி யிடு நன்முப்க் காச்சி
சிறுக வரும் போதே யிறக்கிச்
சிறுவர்க் கொரு போதிரு போதுந்
திறமாம் பெரிய மனிதர் களுந்
தினப் போமாந்தத் தீ நோயே. (உகக)

(இ-ள்)

ஓமம் ஒரு பிடி
கருஞ்சீரகம் ,,

உத்தாமணி இலை ஒரு குத்து. இவைகளைச் சட்டியில் போட்டு இலை கருகும் வரை ஓமத்தை வெடிக்க விட்டு உழக்கு நீர் விட்டு,

நீலத்துளசி வேர்
இத்துணைப்பட்டை

சிறு குறிஞ்சான் வேர்
பெருங் கிழங்கு
புலி துடக்கி வேர் (இண்டு)

இவைகள் கூடப்போட்டுச் சிறுகக் காய்ச்சிக் கொடுக்கவும். சிறுவர்களுக்கு ஒரு வேளை அல்லது 2 வேளை கொடுக்கவும். பெரிய மனிதர்களுக்குச் சாயங்காலம் புதியதாகக் கஷாயம் போடவும்.

167. மாந்தத்திற்கு உருண்டையும் எண்ணெயும்

திரி கடுகந் திரி பலி தான் வகை யொன்றுக்குச்
சீர் செய் பலமரை சுத்தி செய்து வாளப்
பருப்புப் பலமொன்றிவைகள் பிளகளவதாகப் பண்ணு
முண்டை கொளச் செய்வாய் பறக்கு மாந்த
வர்க்க மெனச் சரபேந்திரன் மகிழ் வாற் சொன்ன
வாகட நூலுணர்ந்த வரே வைத்ய ரெல்லாம்
விருப்ப மூடனே மெச்சு மேன்மையுள்ள
மேதாவி யோரெனவே விளம்பலாமே (உசுஇ)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
மிளகு
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
} இவைகள் வகையொன்றுக்கு ½ பலம்

சுத்தி செய்த வாளப் பருப்பு — ஒரு பலம்.

இவைகளைத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்யவும். இதை உட்கொள்ள மாந்தங்கள் தீரும், குழந்தைக்கும் நன்கு பேதியாகும்

வேறு

சுகரைப் பழம் பாசி கணப் பூண்டு
முசுமுசுக்கை வேர் நீதிக்காயும்
பகர் சாதி பத்திரியும் குட்டி விளா
விடத்தேர் வேர் பட்டை தன்னை

டிக போக வில வங்க மிலை நறுக்கிப்
போட்டு விளக் கெண்ணெ யிட்டே
பகற் சூரிய புடம் வைத்தோர் கரண்டி
நல்கு உப்புப் புளி பார்த்திடாதே. (உசுஙு)

(இ-ள்)

தகரை வேர்
பழம் பாசி வேர்
கணப் பூண்டு வேர்
முசு முசுக்கை வேர்
சாதிக்காய்
சாதிப் பத்திரி
குட்டி விளா
விடத்தேரி வேர்
இரும்பு

இவைகளைச் சமமெடுத்து, நறுக்கிப் போட்டு விளக்கெண்ணெய் (ஆமணக்கு) விட்டுச் சூரிய புடம் வைத்து ஒரு கரண்டியளவு உள்ளுக்கு கொடுக்கவும்.

பத்தியம் :—

உப்பு, புளி, நீக்கவும்.

91 கெ. சுவடியில் இண்டங் கொழுந்தும் காணப்படுகிறது.

168. மாந்தக் கஷாயம்

ஈழா நெல்லி யினீர்க்கும் வெந்தய மாதுளம்
பிஞ்சுங் கிளர்த்தி மூன்றுங்
தாழாமல் கழாயம் வைத்து மைந்து வேளை
கள் கொடுக்க தவிரு மாந்த
மீழாதென்றே யுகந்து மேதினியாள்
சரபேந்திரர் விதித்துச் சொன்ன
வாழ்வா மிவ் வாகட நூல் வந்தவரை
மந்திரியாய் மதிக்கலாமே. (உசுஜ)

வேம்புடனே முருங்கை நுணை கழற்கொடி
கார் வேப்பிலையின் மேன்மை யிர்க்கு
மாம்படி நற் கழாயம் வைத்துக் கொடுத்திட
மாந்தங்களெல்லா மகலு மென்று
சாம்ப சிவார்ச்சனை செய்யுஞ் சபாபேந்திர
மகராசர் தமிழாற் செய் வித்
தாம் பரிசு கொடுத் தளித்து மாயுணா
லம்புவி யோர்க்கறிவித்தாரே. (உசுரி)

(இ-ன்)

(a) ஈழா நெல்லி ஈர்க்கு
வெந்தயம்
மாதுளம் பிஞ்சு (பூவோடு கூடியது)

இம் மூன்றையும் கஷாயம் வைத்து 5 வேளை கொடுக்க மாந்தம் தீரும்.

(b) வேம்பின் ஈர்க்கு
முருங்கை ஈர்க்கு
நுணை ஈர்க்கு
கழற்சிக் கொடியின் ஈர்க்கு
கருவேப்பிலை ஈர்க்கு

இவைகளை நசுக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்க எவ்வித மாந்தமும் தீரும்.

குறிப்பு :—

கிளர்த்தி = பூந்தாது.

169. மாந்தத்திற்குக் கஷாயம்

சங்கு தூது விளை வேர் பெரு மருந்து
சத்திச் சாரணைக் கிழங்கு
செங்க தாரிப் பட்டை புளி நறளை
சிற்றவரை சிறு குறட்டை
குங்கிலிய மணித் தக்காளியினிலை வெள்
வேற் பட்டை கொன்றைப் பட்டை
வெங் கொடு வேலியின் வேரும் அவி
பூதக் கரப்பான் பட்டை மிது மரத்தை. (உசுசு)

அப்பைக் கிழங்கு கரிய சீரகமும்
கம்பிப் பிசினது வும்
வெப்பில்லா நல்லெண்ணெ யுரி
விளக் கெண்ணெயு மொரு முக்காவின்
துப்பு மிதெல்லாங் கூட்டித் தொகுத்து
வடித்துச் சொலு பிருகா
சொப்பாயிடையுட் கொடுத் துடம் பிற்
றடவிப் புளியுப் பொழித்திடலாம். (உகுள)

ஆமணக் கெண்ணெயரையுடனெரு
சேராகுங் கார்போக நல்லரிசி
யோமம் வெட்பாலியரிசி நீரடி முத்
துரையரைக்காற் பலமுள் ளி
யர்மொரு பலமும் வசம்பரைப் பலமு
மாகுமே நஞ்சறப் பாய்ந்தான்
வேமனற் பிரண்டை வேர் பலமொன்று
வெண்கார்யமே சிவந்தனவே (உகுஎ)

சிவந்தனகாயமெடுத் தெண்ணெய் வடித்துத்
தின்னவு மின்னஞ் செய்மருந்து
முவந்திட மெழுகித் தியினை மூட்டி
யுட்டணமாகி ஞமத்தைக்
கவர்ந்து உத்தாமணி யாவரை மூவகை
யுங் கசக்கியே பிழிந்திடக் கன்னறு
நிவர்ந் தெழு நுரையை முதுகினில்
வயிற்றினெடித்திட நிலாது மாந்தமுமே (உகுஅ)

(இ-ள்) (1)

சங்கு
தூதுவளை வேர்
பெருமருந்து
சத்திச் சாறணைக் கிழங்கு
செங்கதாரிப்பட்டை
புளி நரலைக் கிழங்கு
சிற்றவரை
சிறுகுறட்டை
குங்கிலிய மணித்தக்காளி இலை

வெள் வேலம் பட்டை
கொன்றைப் பட்டை
வெள்ளைக் கொடிவேலி வேர்
பூதக் கரப்பான் பட்டை
சிற்றரத்தை
அப்பைக் கிழங்கு
கருஞ்சீரகம்
கம்பிப் பிசின்

இவை வகைக்கு (2 வராகனெடை) எடுத்துப் பால் விட்டு நன்முக அரைத்து, இதனுடன்,

நல்லெண்ணெய்	½ படி
விளக்கெண்ணெய்	1 உழக்கு (¼ படி)
பசுவின் நெய்	½ படி

இவையாவற்றையும் ஒன்று கூட்டி அடுப்பிலேற்றிப் பதத்தில் எரித்து வடித்து, வேளை ஒன்றுக்கு இரண்டு காசெடை விதம் உள்ளுக்குக் கொடுத்து மேலும் தடவி வரவும். மாந்தம் குணமாகும்.

பத்தியம் :—
உப்பு, புளி, நீக்கவும்.

(2) ஆமணக்கெண்ணெய் 1½ சேர்

கார்போகரிசி ஓமம் வெட்பாலையரிசி நீரடிமுத்து	}	இவை வகைக்கு ⅛ பலம்
பூண்டு		1 பலம்
வசம்பு		½ பலம்
நஞ்சறப் பாய்ந்தான் (கொடிப்பாலை வேர்) பிரண்டை வேர்	}	வகைக்கு 1 பலம்

இவற்றைச் சிறுகத் அரிந்து விளக்கெண்ணெயில் போட்டு அடுப்பின் மீதேற்றிப் பூண்டு சிவக்குமளவும் கொதிக்க வைத்து எண்ணெயும் சிவந்த பின்பு வடித்துக்கொண்டு தினந் தோறும் கடுகுடன் (தைலக்கசண்டுடன்) கொடுக்கவும். மாந்தம் நீங்கும்.

(3) அடுப்பை மெழுகித், தீமூட்டி அதில் ஊமத்தை இலை, உத்தாமணி சமூலம், ஆவரைச் சமூலம் இம்மூன்றையும் வாட்டிக் கசக்கிப் பிழிந்து அரிலுண்டாகும் நுரையை மாந்த முள்ள குழந்தையின் முதுகிலும், வயிற்றின் அடியிலும் பூசி விட மாந்தம் தீரும்.

170. மாந்த எண்ணெய்

வகையதாங் குதிரை வாலிதான் சமூலம்
வரு சிறு புள்ளடி சமூலம்
மிகவு நல்வேளை சமூலமாம் விடத்தேர்
வேர்ப்பட்டை வெள்வேலம் பட்டை
புகல் புன் முருங்கை யாமை யோடி தெலாம்
பொடிப்பொடியாக வே நறுக்கி
தகை பேறச்சம மாய் விளக்கெண்ணெய்
நாழி தன்னிலுற விட்டனற் காச்சே. (உளம்)

காச்சியே வடித்து மாந்தம் வந்திடு சேய்களுக்
கெலாஞ் சற்றனற் காட்டிப்
பீச்சு பெண் முலைப் பானிற் கலந் தூட்டப்
பெயர்ந்திடும் பெரும்பிணி மாந்தம்
ஆச்ர மத்தேர் நால்வரும் மகிழ வண்ணல்
சரபேந்திர ரரு ணூல்
வாச்சது நமக் கென்று கந்திடும் நல்லோர்
வைத்யர் மதிக்க வாழ்பவரே. (உளக)

(இ-ள்)

முதியார் கூந்தல் சமூலம்
சிறு புள்ளடி சமூலம்
நல் வேளை சமூலம்
விடத்தேரி வேர்ப் பட்டை
வெள் வேலம் பட்டை
நல்ல முருங்கைப் பட்டை
ஆமை யோடு

இவை எல்லாவற்றையும் சமமாக எடுத்துப் பொடிப் பொடியாக நறுக்கி விளக்கெண்ணெய் ஒரு நாழியில் போட்டு அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சவும். பக்குவத்திலிறக்கி மாந்தமுள்ள குழந்தைகளுக்குச் சிறிது எண்ணெயை எடுத்து வெதுப்பிக்கொண்டு அதனுடன் சிறிது முலைப்பால் விட்டுக் குலுக்கிக் குழந்தைக்குப் புகட்ட மாந்தம் தீரும்.

171. மாந்தத்திற்கு மாத்திரை

வேங்கைப் புலித் தோல் செருப்புத் தோல்
மிக்க வசம் போடிவை மூன்றும்
தாங்குஞ் சட்டிதனிற் பற்பஞ்
சமனுய்ச் செய்துத் தாமணிச்சா
ருங்கு காய வைத்தொப்ப
மாக வரிசித் திப்பிலியுங்
கீங்கில் சமமாயிவை யெல்லாங்
தெரிவை முலைப்பால் சேர்த்தரைத்தே. (உஎஉ)

சேந்த குன்றிப் பிரமாண
முண்டை செய்து தினச் செய்யின்
மாந்தந் தனக்கே யனுபான
மறிந்து செய்வீர் வைத்யர் என்
றேந்தல் சரபேந்தி ரனுரைத்த
லிதனே யியல் பாயெண்ணு கின்ற
மாந்தர் தங்கள் பின்னேகட்கு
மாந்த நோய்கள் வாராதே. (உஎஙு)

(இ-ள்)

வேங்கைப் புலித் தோல்
செருப்புத் தோல்
வசம்பு

இவைகளைச் சமனாக எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக வருத்துப் பற்பம் செய்துகொண்டு, உத்தாமணிச் சாறு கூட்டிக் காய வைத்து, இந்த பற்பத்திற்குச் சமன் அரிசித்திப்பிலி கூட இட்டு, இவ்விரண்டையும் முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்.

இதை மாந்தத்திற்குத் தகுந்த அனுபானத்திலிடவும், குணம் தரும்.

குறிப்பு :—

உத்தாமணி, வேலி வேர், நொச்சி துளிர், பொடுதலை யிலை, முருங்கையிர்க்கு, நுணையிர்க்கு இவைகளின் கஷாயம் மாந்த நோய்களுக்கு அனுபானங்களாம்.

172. மாந்த வலிப்புக்கு மருந்து

வடக் கயிறு கோழி யிற குடனே நல்ல
மாட்டுக் கொம்புந் தலையின் மயிரீ தெல்லா
மிடித்து வாசனத்திலுடம் பெங்கும் பூசி
யிப்புகை காட்ட வு மாந்த வலிப்பு மேகும்
அடுத்த வருக்கருள் புரியுஞ் சரபபூபன றிந்து
சொன்ன விம் முறையை யறிய வல்லோர்
படித்த வரின் மிக்க வராய்ப் பரிசுள் ளோராய்ப்
படி மிசை யில் வாழ்வரெனப் பகரலாமே. (உளசு)

(இ-ள்)

வடக் கயிறு
கோழியிறகு
சிவிய மாட்டுக் கொம்பு
தலை மயிர்

இவற்றைச் சிறுகக் கத்தரித்து இடித்து அனலிலிட்டு வலிப்புள்ள குழந்தையின் உடம்பிலும், ஆசனத்திலும் அதன் புகையைக் காட்ட வலிப்புத் தீரும்.

173. மாந்தத்திற்கு மருந்து

அகத்திப் பழுப்புப் பூண்டு வசம்
பதனெறுக்கிப் பிழிந்துள்ளுக்
குகப்பாய் வார்த்து மூச்சியிலிட்
டுடனே மேலுக்கும் பூசிற்

நிகைப்புத் தீரும் திப்பிலியைச்
சேர்த்து மூன் கையினிற் சேரிவ்
வகைச் சாத்திரத்தை மகிழ்ந்து கற்றோர்
மாந்த நோயை மாற்றுவாரே (உளரு)

(இ-ள்)

அகத்திப் பழுப்பு
வெள்ளைப் பூண்டு
வசம்பு

இவைகளை வெதுப்பி நறுக்கிச் சாறு பிழிந்துகொண்டு உள்ளுக்குங் கொடுத்து உச்சிக்கும், உடம்பிற்கும் பூசினுல் மாந்தத்திகைப்புத் தீரும்.

மே மருந்தோடு திப்பிலியையும் சேர்த்துக்கொடுக்கலாம்.

174. பிள்ளைகள் மாந்தக் குளிகைக்கு மருந்து வகை

வசம்பு கார்போகரிசி சிற்றரத்தை
வாய்விளங்க முள்ளி கம்பிப்
பிசினி லவங்க பிளகு நாகரங்
திப்பிலி கருஞ்சீரகம் பேசி
லுசித்திப்பிலி மூலங் கடுகு ரோகிணி
யோதிய வகை வகைப்பலங்கால்
பசையதாகிய வுத்தாமணி நொச்சில்
பாவட்டை பகர் வெண்சாறடையே, (உளக)

அடைவாயிருக்குஞ் செருப்படி
யுமானபொடுதலைப் புதலுங்
தடையில்லாமலே நறுக்குஞ்சா
றிட்டரைத்துச் சரக்கெல்லாங்
திடமாய்ச் சேரக்கொண்டதனைத்
தேற்றுவிரைபோலே திரட்டி
யிடு நல்லிள வென்னீர்முலைப்பா
லிட்டுண்டிடப் போமிந் நோயே (உளஎ)

(இ-ள்)

வசம்பு
கார்போகவரிசி
சிற்றரத்தை
வாயு விடங்கம்
உள்ளி
கம்பிப்பிசின்
கிரும்பு
மிளகு
சுக்கு
திப்பிலி
கருஞ்சீரகம்
திப்பிலி மூலம் (கண்டந்திப்பிலி)
கடுகு ரோகிணி

இவைகள் வகையொன்றுக்கு $\frac{1}{4}$ பலம்

உத்தாமணி
கருநொச்சில்
பாவட்டை வேர்
வெள்ளைச் சாறணை
செருப்படி
பொடுதலை

இவைகள் ஒவ்வொன்றின் சாற்றினால் மேற் கூறிய மருந்துச் சரக்குகளைத் தனித்தனியாக நன்றாக அரைத்துத் தேத்தான் கொட்டைப் பிரமாணம் மாத்திரை உருட்டி வைத்துக்கொண்டு இளவெந்நீரிலாவது அல்லது முலைப் பாலிலாவது இழைத்துக் கொடுக்கவும் மாந்தம் தீரும்.

175. மாந்தத்திற்குப் பேய் மருட்டி எண்ணெய்

பீர்க்கு சாணுக்கி வெதுப்படக்கி
யுத்தாமணி பொடுதலை பேய் மருட்டி
தீர்க்க வகத்திப் பழுப்போடிதன் பட்டை
திருத்துமாய் தெளி நல்லெண்ணெய்

கார்த்த மணற்றக்காளி வகையொன்
றுக் காழாக்கு கலந்த சாறும்
சீர்த்த பசு மஞ்சற் சாரு ழாக்கா
மணக் கெண்ணெய் சேர் தான் காலே (உஎஅ)

ஆமோமம் பலங்கா லோடுள்ளி
வசம்பது வுடனே யாமை யோடும்
வேமன லிட் டிவை கூட்டிக் காய்ச்சிவடித்
தோர் கடத்தில் விட்டு வைத்துத்
தாமதமிலாதோர் துட்டிடை நெய்யில்
வெண் காரந்தனைப் பொரித்திட்
டே மணக்கும் இங்கு பண விடை யுரைத்துட்
கொடுத்திடன்னளினிற் கழிந்தே (உஎக)

இனி மறு நாட் கழிச்சலுடன் பொரும
லுறக்கமசதி யெல்லாந் தீரும்
கணமாந்த நோய்களுக்குப் பேய்மருட்டித்
தயிலங் கை கண்ட தென்ன
மனு நீதி யுடன் சோழ வள நாடா
ளுஞ் சரப மகிபர் வார்த்தை
தனமெனவே மனது தனிற்றரிப்பவரை
மந்திரியாய்ச் சாற்றலாமே (உஅ)

(இ-ள்)

பீர்க்கு
சாணக்கி
வெதுப்படக்கி
உத்தாமணி
பொடுதலை
பேய்மருட்டி
அகத்திப்பழுப்பு
அகத்திப்பட்டை
துளசி
மணித்தக்காளி

இவைகளின் சாறு வகை யொன்றுக்கு ஒரு ஆழாக்கு

பசு மஞ்சள் சாறு — ஒரு ஆழாக்கு
சுத்தமான எள்ளெண்ணெய் — ஒரு ஆழாக்கு
ஆமணக்கெண்ணெய் — ¼ சேர்

ஓமம்	¼ பலம்	இவைகளைச் சட்டியிலிட்டு நன்றாக வருத்து
வெள்ளைப் பூண்டு	,,	
வசம்பு	,,	
ஆமை யோடு	,,	

மேல் சொன்ன எண்ணெயுடன் சேர்த்துக் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கிக்கொண்டு ஒரு பாளையில் பத்திரப்படுத்தவும். பின்பு, ஒரு துட்டிடை நெய்யில் வெங்காரத்தைப் பொரித்துப் பெருங்காயம் ஒரு பணவிடையும் சேர்த்து உரைத்து, எண்ணெயையும் கொடுக்கவும். அன்றைய தினம் நன்றாக மலங்கழிந்து வயிற்றுப் பொருமல், அசதி எல்லாம் தீருவதுடன் மாந்தத்திற்கும் கைகண்டது.

176. மாந்தத்திற்கு

கள்ளி நாக நாகி வேர் கமழுஞ்
சீரகங் கடுக்காய்
புள்ளி வசம்பு நாய் வேளை யுத்
தாமணி வேர் புளி நரளை
வெள்ளை வெண் சாறடை கொன்றை
விளக்கெண்ணெயிலே கொதிக்க விட்டு
மெள்ள விறக்கிக் கொடு மாந்தம்
விடுங் காணிது கை கண்டதுவே (உஅக)

(இ-ள்)

கள்ளி
நாக நாகிக் கிழங்கு
சீரகம்
கடுக்காய்
வெள்ளைப் பூண்டு
வசம்பு
நாய் வேளை
உத்தாமணி வேர்
புளி நரளைக் கிழங்கு
வெள்ளைச் சாறடை
கொன்றை வேர்

இவைகளைச் சமமெடுத்துத்தூள் செய்து விளக்கெண்ணெயில் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கிக்கொண்டு சாப்பிடமாந்தம் தீரும்.

177. மாந்தத்திற்கு

மதுக் காரை வேர்ப் பட்டை யெலுமிச்
சம் பழச் சாறு வார்த்தரைத்தே
யதற் கேற்க வநித் தூற்றும் விளக்கெண்ணெ
யதினெரித்திட்டதை வேண்டும் போ
திருத்துடன் சற்றனற் சுடவைத்திடு
புகட்டு கடுகு புகைத்திட வலிப்புக்
கதைத்தான் சட்டியிலழலிட்டே
கடுகிட்டே யிளறியதிற் றண்ணீரை (உஅஉ)

தண்ணீரைத் தெளித்ததன் பிள்ளையைச்
சேலையின் மூடித்தான் வைப்பாயென்
றண்ணல் சரபேந்திரனுர் ஆயுண் நூ
லின் முறைகளாய்ந்து சொன்ன
துண்மை யென வேயுகந்த வுத்தமர்க
ளுத் தெரிசித்தோர்க்கு மாந்தம்
மண்ணியிடா தெனப் பரிவானலு வரு
னத் தோரும் நவிற்று வாரே (உஅக)

(இ-ள்)

மதுக்காரை வேர்ப்பட்டையை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து ஊற்றின விளக்கெண்ணெய் 2 சேர் விட்டுப் பக்குவமாக எரித்து வேண்டும்போது அனலில் வெதுப்பிப் புகட்டவும்.

அதன் கடுகை, ஒரு சட்டியை அனல் மேல் வைத்து, அதில் போட்டுப் புகைத்துப், பின்பு அதில் தண்ணீர் விட்டுக் குழந்தையை ஒரு சேலையினுல் மூடி அதன் ஆவியைப் பிடிக்கச் செய்யவும். இப்படிச் செய்தால் மாந்தம் தீரும்.

178. பிள்ளைகள் மாந்தத்திற்கு

ஏழு மிளகு மஞ்சணுறியப் பட்டை
யுரு மிளகினிடை வசம்புந்
தாழ்விலொரு மிளகளவே மஞ்சளுங்
காசிடை யோமந்தானிட்டு யாவுஞ்
* சாளிகை போற் பொட்டணஞ் சல்லாவினிட்டுத்
தானுழக்குத் தண்ணீர் விட்டு
மாழியினற் சங்கு நீர் நிற்கப் பொட்ட
ணம தெடுத்தரைத்துத் தானே. (உ-அ)

தானிறக்கிச் சங்கினீர் தனிற் கலக்கிப்
புகட்டவுமே தணியர் மாந்தம்
போன விடந்தெரியாமற் போமென்றும்
வாகடநூல் புகன்ற தெல்லா
மான்பாளுஞ் சரபமகிபதி செந்தமிழ்
தனில் வகுத்துச் செய்வித்
தானமற நோயகல வுலகினுள்ளோ
ருள மகிழவுரை செய்தாரே. (உ-அ)

(இ-ள்)

மஞ்சணுறிப்பட்டை (நுணுப்பட்டை) 7 மிளகு நிறை
வசம்பு ஒரு மிளகு நிறை
மஞ்சள் ,,
ஓமம் காசிடை

இவற்றை ஒரு சேலையில் மூட்டையைப்போலப் பொட்டணம் கட்டி ஒரு சட்டியில் உழக்குத் தண்ணீர் விட்டு, அதில் மூட்டையையிட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு சங்காகும் வரை வற்றக்காய்ச்சிப் பின்னர், மூட்டையை அவிழ்த்து, எல்லாச் சரக்குகளையும் ஒன்றாக அரைத்து அந்த ஒரு சங்குத் தண்ணீருடன் கலந்து மாந்தமுள்ள குழந்தைக்குக் கொடுக்கவும். மாந்தம் தீரும்.

* சாளிகை = பணப்பை ; அல்லது ஜாடி.

179. மாந்தத்திற்கு உருண்டை

கடுகு ரோகிணி யிலுப்பைக் கமழ்பூ
நேர்வாள சுத்தி கண்டிரண்டு
மிடு சமஞ் கொண்டே பாகலிலைச் சாற்றி
லே யரைத்து மே பருத்தி
யுட விரையின் பிரமாண முண்டை
செய்து நிழலுலர்த்தி யோருண்டை
யோடு மிரண்டு மிளகினையு மூட்டியரைத்
திள வென்னீருண்ணப் பண்ணே (உ-அ-)

பணிவேரும் வசம்பினையும் பழங்காடி
வார்த்தரைத்துப் பாங்கதாகத்
தினையர் வயிற்றினிற் றடவத்தான் வயிறு
விடும் வாடுந்தானிதைத் தான்
அனலதனிற் கொதிக்க வைத்துப்பூசிலை
வயிறு விடலகலுமென்று
மனுநீதி தவறுத சரபேந்திரர்
மகராசர் வசனித்தாரே (உ-அள)

(இ-ள்)

கடுகு ரோகிணி
இலுப்பைப் பூ
நேர்வாளம் (சுத்திசெய்தது)

இவைகளைச் சமமாக எடுத்துப் பாகல் இலைச்சாற்றினால் நன்றாக அரைத்துப் பருத்தி விதையளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, ஒரு மாத்திரையை 2 மிளகுடனே அரைத்து இளவென்னீரில் கொடுக்க மாந்தம் தீரும்.

(b) பணமரத்தின் வேரையும் வசம்பையும் காடி வார்த்து அரைத்து, வயிற்றில் பூச வயிறு கழிந்து வாடும். இதையே கொதிக்கவைத்துப் பூசினால் வயிறு கழிதல் நிற்கும்.

180. * மாந்தியந் சகலத்நுக்கும் லேகியம்

(கருக்கு)

ஆவாரை கொழுஞ்சி மஞ்சணத்தியுவாய்
முருங்கை யுத்தாமணி யாறுத்த
பூவிலையும் வகைக் கோர்பிடி போட்டுச்
சட்டியிற் கருகும் போதினலு
பூவராகனிடை வசம் பொரு துட்டு
மிளகோமப் பொடியோர் துட்டும்
மூவகை கூடப் போட்டுச் சிவந்த பதத்
திரு படிநீர் முழுவுழக்காய் (உஅஅ)

உழக் கொன்றதாய்க் காய்ச்சியோர் மூன்று
சங்கிறுத்து முடனே நல்கப்
பழக்க மாயிருந்திடு மெப்படிக்கொத்த
மாந்த முத்திப்பாலே திரும்
வழக்கமிது வெனச் சரபமகிபதிதா.
னுரைத்தருள் வாகட நூல் வந்தே
பழக்கமதாயிருப்பவர் போற் பூவுலகி
லார் வைத்யர் புகலுங்காலே (உஅகூ)

(இ-ள்)

ஆவாரம்பூ	ஆவாரை இலை
கொளுஞ்சிப்பூ	கொளுஞ்சி இலை
நுணைப்பூ	நுணைவிலை
உவாய்ப்பூ	உவாய் இலை
முருங்கைப்பூ	முருங்கை இலை
உத்தாமணிப்பூ	உத்தாமணி இலை

இவைகளை வகைக்கு ஒரு பிடி போட்டுச் சட்டியிலிட்டு நன்றாகக் கருகவருத்து,

வசம்பு	1 வராகனெடை
மிளகு	1 துட்டெடை
ஓமத்தூள்	1 துட்டெடை

* 'மாந்தம்' என்னும் தமிழ்ச் சொல் 'மாந்தியம்' என்னும் வடமொழியின் சிதைவு.

இம் மூன்று சரக்கையும் திரும்பவும் அதிலிட்டுச் சிவந்த பின்பு, தண்ணீர் 2 படி விட்டு, உழக்காகக் காய்ச்சவும்.

இதில் 3 சங்கு இறுத்துக் குழந்தைக்குக் கொடுக்க வழக்கமாக இருக்கும் எப்படிப்பட்ட மாந்தமும் அன்றே தீரும். கை கண்டது.

181. பிள்ளைகள் மாந்தத்திற்கு எண்ணெய்

கோமயச்சா றுழக்காவினெய்யுழக்குப்
பாலுழக்குக் குலை முதிர்ந்த
வாமணக் கெண்ணெயு முழக்கு வாடு
தீண்டாப்பாளையதினற் சாறுங்
தாமுழக்குச் சாணிச்சா றுழக்கு தேங்காய்ப்
பாலுந்தானுழக்கிட்
டே முடக்கொத்தான் சாறு மீரழக்கிட்
டே ரைசெச் சொட்டிடு கள்ளிப்பால் (உசுய)

இடுபுரசம் விரையைந்து பொடிசெய்திட்
டே கலந்திட்டெரித்திறக்கா
தடுப்பினிலே தராவி மெழுகது பதமாயிறுத்
தோர் வருடந்தாஞ் சேய்க்குக்
கொடுத்தொரு காசிடையரைக் காசிடை கொடுப்
பாயாறு திங்கள் கொண்ட பிள்ளைக்
கடுத்து மிந்தப் பாலகற்கதிய மாகில்
வெண்ணெ யளித்திட்டாற்றே. (உகூக)

(இ-ள்)

பசுமாட்டு மூத்திரம்	1 உழக்கு
பசு நெய்	1 உழக்கு
பசுவின் பால்	1 உழக்கு
ஊற்றின ஆமணக்கெண்ணெய்	1 உழக்கு
ஆடு தீண்டாப்பாளைச் சாறு	1 உழக்கு
சாணிச் சாறு	1 உழக்கு
தேங்காய்ப் பால்	1 உழக்கு
முடக்கொத்தான் சாறு	2 உழக்கு
கள்ளிப் பால்	(1 சொட்டு)

இவை யெல்லாவற்றையும் ஒரு சட்டியில் ஒன்று கலந்து, அதனுடன், 5 புரசம் விதையைப் பொடிசெய்து கூடப் போட்டுக்காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு ஒரு வயதுள்ள குழந்தைக்கு ஒரு காசிடை கொடுக்கவும். 6 மாதக் குழந்தைக்கு ½ காசிடை கொடுக்கவும்.

அதிகமாக மலங்கழிந்தால் வெண்ணெய் கொடுக்கவும்.

182. கோரோசனாதி குளிகை

(மாந்த கணங்காமாலை யழற்காமாலைக்கு)

இரந்தி நாயக வேர் நன்னரி வேர்
நாயுருவி கீழ்காய் நெல்லி
யிருந்த வேர் வகை யொன்றுக்கே
வராகனிடை மூன்றே கலங்கொம்
புரைந்த சந்தண முருத்திராக்கஞ் சீரக
மும் வகையோ ரொண் ணுக்கே
யிரண்டு வராகனிடை கடுகு ரோசனை
கோரோசனை யொன்றே வராகன் (உகூடு)

வராகனிடை யொன்ற தாமை யோடோர்
வராகனிடை வைப்பரைந்து
வராகனிடை செம்பருத்திக்கொட்டை திரு
மண் ணும் வராகனிடையைந்து
தராதரமாய் கல்வத்திலிட்டு நறுக்கிப்
பொடியதாக்கிக் கொண்டே
யிராவு பகன் மூன்றே நாள் கற்பூர
வள்ளிச் சாற்றிட்டரைத்தே (உகூடு)

அரைத்து மிளகளவுண்டையாய்ச் செய்து
நிழலுலர்த்தி யதை வைத்துக் கொண்
டிருக்க வலுபானங் கற்பூர வள்ளியிலை
முலைப்பாலெரித்த வெந்நீர்
வருக்கவல்லாரை குடிநீரதி லோருண்
டைவைத்திடக் காமாலை மாந்தந்
தரிக்காதக் காமத்தி சுரமழற்கா
மாலைகணந்த விருந்தானே (உகூச)

(இ-ள்)

கிரந்திநாயக வேர்
நன்னரி வேர்
நாயுருவி வேர்
கீழா நெல்லி வேர்

இவைகள் வகையொன்றுக்கு 3 வராகனெடை

மான் கொம்பு
இழைத்த சந்தனம்
ருத்திராக்ஷம்
சிரகம்
} இவை வகைக்கு 2 வராகனெடை.

கடுகரோகிணி
கோரோசனை
} இவை வகைக்கு 1 வராகனெடை

சுத்தி செய்த (சுட்ட) ஆமையோடு 1 வராகனெடை
செம்பருத்திக்கொட்டை 5 வராகனெடை
நாமக்கல் (திருமண்) 5 வராகனெடை

இவைகளை ஒன்று சேர்த்துத் தூள் செய்து கல்வத்திலிட்டுக் கற்பூரவல்லிச் சாற்றினால் இரவும், பகலும் 3 நாள் விடாமல் அரைத்து. மிளகளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

இதற்கு அனுபானம் :—

கற்பூரவல்லிச் சாறு, முலைப்பால், வெந்நீர், வல்லாரைக் குடி நீர் இவைகள் ஏதேனும் ஒன்றில் ஒரு மாத்திரை வீதம் இழைத்துக்கொடுத்தால் காமாலை, மாந்தம், காம சுரம், அழற் காமாலை இவைகள் தீரும்.

183. சிறுபிள்ளைகள் மாந்த கணத்துக்கும், இதிலெடுத்த சுரத்திற்கும்

வெள்ளவிண்டங் கொழுந்து பழம் பாசி
சமமாய் நறுக்கி விரைந்து கொண்டே
யுள்ளி வசம்பினைக் கூட்டி யொன்றுகச்
சேர்த்ததனை யுகந்தலம்பும்

எள்ளெண்ணெயதனிற் கலந்து மிரவி
புடமாய் வைத்து மிறுத்துச் சங்கிற்
பிள்ளைகட்குப் புகட்டவுமே பேதி
மாந்தப் பிணிதான் பிரிந்து போமே (உகூடு)

குருவிச்சி கருவேல வேரிலை விடத்தேரி
லைத் தகரை குழையும் வேரும்
நரிப்பயற்றினிலை வேரும் நருக்கி நையவ
வசம்புள்ளி நன்றுப்க் கூட்டி
யெரிக்கும் விளக்கெண்ணெய் கலந்திட்டுச்
சூரிய புடம் வைத்தெடுத்துள்ளுக்குந்
தரித்திட விட்டுச்சியுடம்பினுந்
தடவக்கணசுர முந்தாம் நில்லாதே (உகூஉ)

(இ-ள்)

விளாங்கொழுந்து
இண்டங்கொழுந்து
பழம்பாசி

இம்மூன்றையும் சமமாக எடுத்து நறுக்கி இதனுடன்

வெள்ளைப்பூண்டு,

வசம்பு இவ்விரண்டையும் சேர்த்து நன்றுக அரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து சூரியபுடம் வைத்து இறுத்து ஒரு சங்கு வீதம் குழந்தைக்குப் புகட்டவும்.

பேதி, மாந்தம் இவை தீரும்.

(b) குருவிச்சிப் பூண்டின் வேரும், இலையும்
கருவேலம் வேரும், இலையும்
விடத்தேரி வேரும், இலையும்
தகரை வேரும், இலையும்
நரிப்பயிற்றின் வேரும், இலையும்

இவைகளை நன்றுக நறுக்கி இடித்து வசம்பு, வெள்ளைப் பூண்டு இவைகளோடு சேர்த்து அரைத்து விளக்கெண்ணெயில் கலந்து சூரியபுடம்வைத்து, உள்ளுக்குக் கொடுத்துத் தலையுச்சியிலும் தடவிவரக் கணச் சுரம் தீரும்.

184. மந்த கணத்துக்கு

அதிமதுரங் கற்கடக சிங்கி கம்பிப்
பிசின் கிழம்பு அசமதாகஞ்
சதகுப்பை திரிகடுகங் திரிபலை
மாதளை லவங்கச் சாதிப்பத்திரி
யதி விடையம் பெருமரப்பட்டை விளங்கம்
திப்பிலி மூலங் கற்பூரம்
இத நற்சீரகங் கத்தூரியின் மஞ்சள்
சந்தணஞ் சாதிக்கா யேலம் (உகஎ)

ஏலங் கோரோசனை யொன்றி ரண்டு பங்கு
மற்ற தெல்லாமே சமந்தான்
மாலணியுந் துளசியினையைக் கீழ்மேலும்
வைத்து வேறே பொட்டணமாய் வைத்தே
நாலுபடி தண்ணீரிட்டே வேக
வைத்துக் கால்நாழி நீராய்ச்
சாலதனிற் கண்டந்தத் தண்ணீர் வார்த்த
ரைத்துண்டை தரமாய்ப் பண்ணே (உகஅ)

பண்ணியந்த விலையுமரைத் துண்டை செய்தெல்
லாங் கலந்து பண்ணு முண்டை
யுண்ண வென்னீரிற் கொடுக்கப் பெருவாரிக்
காச்சலுந் தாலுடனே தீரும்
நண்ணு பயித்திய வாதசுரஞ் சேத்துமம்
சுரமிந்த நசல் கிரந்திப்
புண்ணுறுந் தூதுவளை துளசி கஞ்சாங்
கோரையெனு மாதலுங் கண்டே (உகக)

கண்டங் கத்திரி யிதெலாங் கடுகச் செய்
புட்டவியலாலந்த சாற்றில்
லுண்டை யிரண்டுதவி செய்தலுயர் பிள்ளைக்
குண்டையை வென்னீரிலூட்டல்
மண்டியினல் வயிறு விடு மதற்கு மா
தளையிலையை வைத்து வேகச்
சுண்டிய நீரிற் கொடுக்கப் பேர்ப்பாற் சோற்
றியினுமிது துய்த்தனன்றே (உகா)

நன்றுண்டை தேற்றுங்கொட்டை யினளவு
பண்ணியதை நன்னுடன்னிற்
றின்றிடத்தான் பத்தியங் கத்திரிப்பிஞ்சு
முருங்கையினற் சின்னப் பிஞ்சுந்
துன்றிய தூதுவளை வற்றல் துவரையின்
வெம்பருப்பி தெலாந் துய்க்கலாகு
மென்று சரபேந்திர னுரின்றிது கை
கண்டதென வியம்பினரே. (நூல்)

(இ-ள்)

அதிமதுரம்
கற்கடசிரிங்கி
கம்பிப்பிசின்
கிராம்பு
ஓமம்
சதகுப்பை
சுக்கு
திப்பிலி
மிளகு
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
மாதுளை ஓடு
லவங்கப்பத்திரி
ஜாதிப்பத்திரி
அதிவிடயம்
பெருமரப்பட்டை
வாயு விடங்கம்
கண்டத்திப்பிலி
பச்சைக் கற்பூரம்
ஜீரகம்
கஸ்தூரி மஞ்சள்
சந்தணத்தூள்
ஜாதிக்காய்

இவைகள் வகைக்கு 1 தோலா

ஏலக்காய் 2 தோலா
கோரோசனை 2 ,,

பச்சைக் கற்பூரம், கோரோசனை இவ்விரண்டையும் தவிர்த்து, மற்ற சரக்குகளை ஒன்றிரண்டாக இடித்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில துளசியை நன்றாகப் பரப்பி நடுவில் இந்த சரக்குகளைப் போட்டு, மேலும் துளசியைப் போட்டு 4 படி தண்ணீர் விட்டு அடுப்பின்மேல் வைத்து, ¼ படியாகும் வரை சுண்டக் காய்ச்சவும். இக்கஷாயத்துனல் ஷை சரக்குகளை நன்றாக மசியும்படி கல்வத்திலிட்டு அரைத்து, வெந்த துளசியையும் கூடச் சேர்த்து, பச்சைக் கற்பூரம், கோரோசனை இவ்விரண்டையும் வைத்து, நன்றாக அரைக்கவும். பின்பு இதை மாத்திரையாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு உருண்டை வெந்நீரில் சாப்பிடப் பெருவாரி சுரம், உடனே தீரும். வாத, பித்த, சிலேஷ்ம சுரங்களும் தீரும். கிரந்தி நீங்கும், புண்களும் ஆறிவிடும்.

(b) தூது வளை
துளசி
கஞ்சாங் கோரை
மாதுளை
கண்டங்கத்திரி

இவைகளைப் புட்டவியலாக அவித்து இதன் சாறுடன் 2 மாத்திரை இழைத்துக் குழந்தைக்குக் கொடுத்து வெந்நீரும் கொடுத்தால்

பேதியாகும்.

(c) மாதுளை இலையை வேக வைத்துச் சுண்டிய நீரில் கொடுத்து வந்தால் வயிறு கழிதல் நிற்கும். மேலும் பாச்சோற்றிப் பூண்டின் சாற்றிலும் இழைத்து தேற்றங் கொட்டை பிரமாணம் மாத்திரை பண்ணி நல்ல நாளில் சாப்பிட குணம் தரும்.

இதற்குப் பத்தியம் :—

கத்தரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, தூதுவளை வற்றல், துவரம் பருப்பு இவைகளைச் சாப்பிடவேண்டும்.

185. கணமாந்தக் குடைச்சலுக்கு

இருபது தூது விளை யிலை யிருபது
தேற்றுவிரை யோடி தனை யெல்லா
மொரு விளாங்காய் மாதிரி யாயிர வெங்
காயத்துடனே யொன்றுய் வைத்துப்
பருவமுடனே நையப்படி தட்டி
யே கடுக்காய் பத்திரண்டு
பொருளையுடனே தட்டியுடன் விளக்கெண்
ணெயிற்றுனே பூறப் போட்டே. (கூஉ)

ஊறப் போட்டே சூரிய புட மதிட்
டோர் நாளினைப் போலுண்மை யாகி
யேற தோர் துட்டிடையே யெடுத்திறுத்துக்
கொடுத்திடவு மிதற்குப் பத்தியங்
கூற கத்தி துவரையுமே கூட்ட வு மென்
றூர் சரபர் கொண்ட றுன்னை
மாறது வேண்டாதருளும் வண்ணமே
யெண்ணி மன மகிழ்ந்து தானே. (கூஎ)

(இ-ள்)

தூ துவிளை இலை — 20
தேற்றுன் வித்து — 20

வெள்ளைப்பூண்டு அரைத்த விழுது — விளாங்காய்ப் பிரமாணம்.

கடுக்காய் — 20-ன் தூள்

எல்லாவற்றையும் நன்றாக அரைத்து, விளக்கெண்ணெயில் ஊறப்போட்டுச் சூரிய புடம் வைக்கவும். 2, 3 நாட்கள் சென்றவுடன் இதில் ஒரு துட்டெடை யெடுத்து இறுத்துக் கொடுக்கவும். கணமாந்தக் குடைச்சல் தீரும்.

பத்தியம் :—

அகத்தி, துவரை இவைகளைக் கூட்டவும்.

186. கணத்துக்கும், மாந்தத்திற்கும் எண்ணெய்

சாதிக்கா யதிமதுரஞ் செண் பகப்பூ
வசம் பரத்தை தான்றி யுள்ளி
சோதித் திப்பிலி கடுக்காயிலவங்கங்க
ருஞ் சீராந் தூட்செய்தெண்ணெ
மீதிட்டேலப் பொடியு மிட்டுடன் சிற்
றமுமுட்டி வேர் கணப் பூண்
டோ தப்பைக் கிழங்கம்மான் பச்சரிசி
யோரிதழ்தாமரையோ ரைந்தும். (கூகச)

நைந்துடனே நரிப் பயற்றங் கொடி சிறு புள்
ளடி முடக் கொற்றுன் வில்வத்தின்
செந்தளி ருந்துடரி விடத் தேரையிலை
பழம் பாரி சிறந்த காட்டில்
வந்தெழு மல்லிகை யிலையுங் குட்டிவிளா
வரப் பூலா மல நாறுந் துர்
கந்தக் குட்டியின் வேலாம் பட்டை யெல்லாஞ்
சேர்த்திடித் தூள் கலந்தெண்
[ணெய்க்கே. (கூகடி)

இட்டவெண்ணெய் துட்டினிடையே யெடுத்து
வெய்யிலில் வைத்தே கொடுக்க
உட்டணமாகிய கணத்துக் கொக்குமெனச்
சரபேந்திரருலகத் தோருக்
கிட்டமுடனே யுரைத்துக் கட்டளை செய்
திடு நூலையினிது கற்போர்
அட்டதிசை கொண்டாட வீட்டமுட
னே வாழ்வரறிவுள்ளோரே. (கூகக)

(இ-ள்)

சாதிக்காய்
அதிமதுரம்
சண்பகப்பூ
வசம்பு
சிற்றரத்தை
தான்றிக்காய்

வெள்ளைப்பூண்டு
வாலுளுவை
திப்பிலி
கடுக்காய்
கிராம்பு
கருஞ்சீரகம்

இச்சரக்குகள் எல்லாவற்றையும் சமமாக எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து (ஆமணக்கு) எண்ணெயில் குழப்பி,

ஏலக்காய்த்தூள்
சிற்றாமுட்டிவேர்
கணப்பூண்டு
அப்பக் கோவைக் கிழங்கு
அம்மான் பச்சரிசி வேர்
ஓரிதழ்த்தாமரை
நரிப்பயற்றங்கொடி
சிறுபுள்ளடி
முடக்கொற்றான் இலை
வில்வத்துளிர்
துடரிக் கொழுந்து (இண்டு)
விடத்தேரி இலை
பழம்பாசி இலை
காட்டு மல்லிகை இலை
குட்டி விளா வேர்
வரட் பூலா கொழுந்து
குட்டி வேலம் பட்டை (துர் நாற்றமுள்ளது)

இவைகளையும் சமமெடுத்து ஒன்றாகக் கூட்டி முன் எண்ணெயில் இடித்துப்போட்டுச் சூரிய புடத்தில் வைத்துக் கொடுக்கவும். வேளைக்கு ஒரு துட்டெடை வீதம் சாப்பிடவும். இதனால் கணச்சூடு தீரும்.

குறிப்பு :—

சரக்குகள் வகைக்கு 1 வராகனெடையானால் ஆமணக் கெண்ணெய் 3 சேர் எடுத்துக் கொள்க.

187. மாந்த கணத்துக்கும் போர்மாந்தத்திற்கும்

வட்டத் திருப்பியிலை யஞ்சு வசம்பு வராக
னிடை யொன்று மகலு மேற் புராணி
திட்டமுடனே சீவிச் சேர்த்தொரு கா
சிடை யுள்ளி சேரச் சேர்த்தே

யிட்டமுடனே நறுக்கி யிரண்டு சேர்
விளக்கெண்ணெயினிற்பிசைந்து
சுட்டவெயிலிட்டருள் வெங்காயமகத்
திக் கிரை துய்க்கலாமே (கூளை)

(இ-ள்)

வட்டத்திருப்பி இலை 5 வராகனெடை (சினை
மேல் புறணி நீக்கிய வசம்பு 1 வராகனெடை
மேல்தோல் உரித்த வெள்ளைப் பூண்டு 1 காசிடை

இவைகளை நன்றாக அரைத்து, ஆமணக் கெண்ணெய் 2 சேரில் நன்றாகக் குழப்பிச் சூரிய புடமாக வைக்கவும். வெங்காயம், அகத்திக் கிரை ஆகாரத்திற் கூட்டவும். மேற்சொன்ன நோய் தீரும்.

188. மாந்த சன்னிக்கு

உத்தாமணி பேய் மிரட்டியிலையுணுநல்
வேளை கழற்சியிலையுடனெருக்கின்
முத்துமிலைப் பழுப்பு தழுதாழை மூடக்
கொத்தானு முறுக்கி நன்றாய்ச்
சத்தையினைப் பிழிந்தெடுத்துச் சக்கையிதனைத்
தள்ளியுள்ளி வசம்பைச் சாற்றில்
வைத்தரைத்துக் கலந்து புளி மரப் புராணி
யைச் சுட்டு மாற்றிப் போடே (கூளை)

போட்டபின்பு சாற்றையிட்டுப் பூமியிலே
துணிசுற்றிக் குளறிப் போட்டு
மீட்டு மந்தத் துணி பிழிந்து விட்டுள்ளுக்
குங் கொடுத்து மீந்தசாற்றைக்
கூட்டி மெள்ளத் துவையிட்டுக் கொள்ளவும் போ
மாந்த சன்னிக்கொடு நோயென்று
நாட்டமுடன் கைகண்டு நவின்ற முறை
நாடினர் கொண்டாடினரே (கூளை)

(இ-ள்)

உத்தாமணி இலை
பேய்மருட்டி இலை

சாப்பிடக்கூடிய நல்வேளை இலை
கழற்சி இலை
எருக்கம் பழுப்பு
தழுதாழை
முடக்கொற்றான்

இவைகளைச் சமமெடுத்து, நன்கு அலம்பிக் கல்லுரலிலிட்டு இடித்துச்சாறு பிழிந்து கொள்ளவும்.

வெள்ளைப்பூண்டு, வசம்பு இவ்விரண்டையும், இச்சாறு கொண்டு நன்றாக அரைத்துக் குழப்பிப் புளியம் புராணி சுட்ட சாம்பலை ஒரு முட்டாகப்போட்டு, அதில் அச்சாற்றை ஊற்றி, ஒரு கம்பியில் துணியைச் சுற்றி, கிண்டிக் கொடுத்துப் பிறகு துணியைப் பிழிந்து, அதினின்று வரும் சாற்றை உள்ளுக்குக் கொடுக்கவும். மீதியுள்ள சாற்றைக் குழந்தையின் மேலே துவளையிட மாந்த ஜன்னி தீரும். கைகண்டது.

189. போர் மாந்தத்திற்கு

போர்மாந்த மெனும் பிணிதான் போராடிற்
பனைவடக்கே போகும் வேரைப்
பார மாந்திரிகமுடனே பறித்திடித்துள்
ளியும் வசம்பும் பாங்காயக் கூட்டி
சீர்மாந்தப் பிள்ளை வயிற்றினிற்றடவப்
பொருமலுடன்றீரு மித்தை
யோர் மாந்தப் புத்தியை விட்டுடன்றடவின்
மலசலம் விட்டுபாதிபோமே (ஞானம்)

(இ-ள்)

பனைமரத்தின் வடக்கே போகிற வேரை, வெட்டிவந்து உள்ளியும் வசம்புங் கூடப்போட்டுத் தண்ணீர் சிறிது விட்டு நன்றாக அரைத்துக் குழந்தை வயிற்றில் பூச பொருமல் நிற்கும் கொதிக்க வைத்துப் பூசவும். மலசலம் விட்டு குணமுண்டாகும்.

குறிப்பு :—

179 வது மருந்தில் (b) யைப் பார்த்துக் கொள்க.

190. உப்பு மாந்தத்திற்கு உருண்டை

இழைத்திழைத்து வாந்தியுஞ் செய்தேபிராந்தி
யுஞ் செய்துப் பிசமாமாந்தக்
கிழிச்சலுக்குண்டையைச் செய்யக்கழஞ்சி
ரண்டு சுத்திசெய் வாளப்பருப்புந்
தழைச் சலவங்கப்பட்டை யதிமதுரத்
துடன் கோட்டஞ் சண்பகப்பூ
பழச்சாற்றிலரைக்க வின்னல் வகைக்கும் வரா
கனிடை யொன்று பகருங்காலே (கூ-க)

பகருமிந்த வகையிலுண்டை பண்ணியுப்பு
மாந்தம் வந்த பாலகற்கு
நகையிலகு முலைப்பாலினல் கிடவு
மனுபான நலமறிந்துங்
தகுமிதனைச் சரீர பெலந்தானுணர்ந்துங்
கொடுமாந்தந்தானே தீரும்
பகலவன் மூன் மின்மினி போற்பகையை
வெல்லுஞ் சரபேந்திரர் பகர்ந்ததாமே. (கூ-உ)

(இ-ள்)

அழுந்தி அழுந்தி உண்டாகும் வாந்தியுடன் மயக்கமும் ஏற்பட்டு, உப்பிசத்துடன் இருக்கும் மாந்தத்திற்கு மருந்தாவது :—

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு—2 கழஞ்சு
லவங்கப்பட்டை
அதிமதுரம்
கோஷ்டம்
சண்பகப்பூ

இந்தாலும் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து, எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாற்றினல் நன்றாக அரைத்து, மிளகளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். உப்பு மாந்தம் வந்த குழந்தைக்கு முலைப்பாலிலோ அல்லது சரியான அனுபானத்திலோ குழந்தையின் சரீர பலம் அறிந்து மாத்திரையைக் கொடுக்க, மாந்தம் தீரும்.

191. போர் மாந்தத்திற்கு மருந்து

கள்ளிப் பாலொரு துளி நாய் வேளை வசம்
புடனேநாகரங்தைவேளை
வெள்ளுள்ளியும் வேலிப் பருத்தியின் வே
ராறினையு மிக வரைத்து
எள்ளெண்ணெய் தனிலே வெந்திறக்கி யேர் கா
சிடை முலைப்பாலிதனிலிட்டுக்
கொள்ளச் செய்யவுந் தீராதெனிற் சுக்கெண்
ணெயை வடித்துக் கொடுக்கப்

[போமே. (கூடுகூ)

(இ-ள்)

கள்ளிப்பால் — ஒரு துளி
நாய் வேளை வேர்
வேலிப் பருத்தி வேர்
வசம்பு
சுக்கு
தை வேளை
வெள்ளைப் பூண்டு

ஆக இந்த மருந்து சரக்குகளையும் சமமெடுத்து அரைத்து, ஒரு ஆழாக்கு நல்லெண்ணெயில் குழப்பி, அடுப்பிலிட்டு எரித்து ஒரு காசிடை முலைப் பால் விட்டுக் கொடுக்க மாந்தம் தீரும்.

தீராவிட்டால் சுக்கு எண்ணெய் வடித்துக் கொடுக்கவும்.

192. போர் மாந்தத்திற்கு

கைக் கொண்டு பதிறு கடுக்காயின்
பொடி யோடிட்டுக் கையிற் பிசைந்து
மக்கணமே முறியு மந்தத் தண்ணீரையி
றுத்துக் கொண்டம் மருந்திற்
சிக்கிய சாறுடனே பச்சிலைச் சாற்றி
னுரித் தீரஞ் சேர் வெங்காயத்
துக்குள் சாறுரி கோட்ட மதிமதுரம்
வகைக் கொரு சேர் தொகுத்தொப் பாக (கூடுச)

ஓப்பாஞ் செங்கழு நீரு மொரு காசி
னிடையிருகா சேர்ப்பாஞ் செண்ப
கப்பூவுங் கருஞ் சீராம் பலமரை மூந்
தின சாறு கலந் தரைத்தே
யிப் படியே மூந்தின சாற்றிற் கலந்தும்
விளக்கெண்ணெ யிரு சேரிட்டு
மொப்புரவாய்க் கூட விட்டுக் காச்சி
மெழு கது பத மாயுற்ற வாறே (கூய்ரு)

உற்ற வாறே யிறக்கி வைத்தோர்
கரண்டியினுற விட்டுகந்து காச்சி
மற்றொரு புத்திரர்க்கு நல்க மாந்த கணம்
வறட் கண நீர்க் கணம் பேராமங்
குற்றிரு மலிவையணைத்துங் குணமாகுஞ்
சரபேந்திரர் கூறும் வார்த்தை
கற்ற வருக்கே தெரியுங் கை கண்ட
திது வெனவே கருதுவீரே. (கூய்கூ)

(இ-ள்)

16 கடுக்காயை நன்றுகத் தூள் செய்து ஐலம் விட்டு ஒரு இரவு முழுவதும் ஊரவைத்த பின்பு, அதைக்கையினல் நன்றுகப் பிசைந்து தண்ணீரை இறுத்துக்கொண்ட சீத கஷாயம் ($\frac{1}{2}$ படி)

பச்சிலைச் சாறு — 1 உரி ($\frac{1}{2}$ படி.)
ஈர வெங்காயச் சாறு — 1 உரி ,,

இவைகளோடு,

கோஷ்டம், அதிமதுரம் இவை வகைக்கு 1 சேர்.
செங்கழு நீர் 1 காசிடை
செண்பகப்பூ $\frac{1}{2}$ சேர்
கருஞ்சீரகம் $\frac{1}{2}$ பலம்.

இவைகளையும் மூந்தின சாறு விட்டு நன்றுக அரைத்து, எல்லாவற்றையும் 2 சேர் விளக்கெண்ணெயிலிட்டு அடுப்பின் மேலேற்றி, மெழுகு பதமாகக் காய்ச்சி வடிக்கவும். இந்த

தினந்தோறும் ஒரு கரண்டி யெடுத்து வெதுப்பி மாந்தம், கணம், வறட்கணம், நீர்க் கண்ணம், பேராமை, குற்றிருமல் இவைகள் உள்ள குழந்தைக்குக் கொடுத்தால் இவை அனைத்தும் தீரும்.

193. மாந்த சன்னிக்கு

மாந்த சன்னி தனக்கு உத்தாமணி முருங்
கை யாவாரை மஞ்ச ணத்திப்
பூந்துளிரோடுவாய் கொஞ்சி பொடுதலையுங்
கருக வரும் போது தானே,
கர்ந்திடாதே நாலு காசினிடை
வசம்பு மிளகது தானேர் துட்
டேந்து மிடை யோமமும் மோர் துட்டிடையிட்
டே சிவந்த தேனும் பத்தே (கூயிஎ)

படியிரண்டு தண்ணீர் விட்டுழக்காய்க் காய்ச்
சியதைப் பால் வெண்சங்கிட்
டடைவுடனே புகட்டவு மாந்தங்கள் சுழி
மாந்த சன்னியனைத்துந் தீர்ந்து
விடுமெனவே சரபமகி பாலருரைத்
திடுமிந்த மெய்மை நூலைத்
திட்முடனே கற்றுணர வல்லவர் முன்
செய்த தவச் செயலுள்ளோரே (கூயிஅ)

(இ-ள்)

உத்தாமணிக் கொழுந்து
முருங்கைக் ,,
ஆவாரைக் ,,
நுணுக் ,,
உவாய் ,,
கொஞ்சி ,,
பொடுதலை ,,

இவைகளைச் சட்டியிலிட்டுக் கருக்கி, இதனுடன்

வசம்பு 4 காசெடை
மிளகு ஒரு துட்டு எடை
ஓமம் ,, ,,

இவற்றை முன் சட்டியிலிட்டுக் கருகுவதற்கு முன் இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி வடிக்கட்டிக் கொள்ளவும். ஆறியபின் 10 துட்டெடைத் தேன் விட்டு, ஒரு வெண்மையான சங்கினுல் இதைக் குழந்தைக்குப் புகட்டச் சுழிமாந்தம், சன்னிமாந்தம், இவை தீரும்.

194. கணத்திற்கும், மாந்தத்திற்கும் மருந்து

உழக்கு வெங்காயத்துடனே நிலக்குமிழின்
பட்டையிலே யோரிரண்டு
விளக்கிடு மாமணக்கினெய்யும் விட்டு முக்காற்
படி தூதுவிளை முள்ளி வேர்
அழைப்பிவித்த சிறுக்காரை கண்டங் கத்
திரி கோழியாவாரை வேருந்
தழைத்திடு முத்தம தானித் தண்வேர் பொன்
னுங்கண்ணிதன் வேரெல்லாம் (கூடிக)

தன்னிலே தனித்தனியே தான் மூன்று
வராகனிடை தானே வைத்து
முன்னமிட்ட வெண்ணெய் படி முக்கானற்
காலிதனின் மூட்டடுப்பிட்
டின்ன வெண்ணெய் கொதிக்கயிலே யீர வெங்கா
யமு முழக்கு மெடுத்துப் போட்டுப்
பின்னிண்டங் கொழுந்திடு முப்பிடி சதுரக்
கள்ளிப்பால் பிழியோர் காசிடையே (கூடுமி)

காசில் கடுக்காயைந்து பொடித்திடுதேற்
றுன் விரையைக் கடுகச்சீவிப்
பேசு பத்துமை வேர் சாறணி வெள்ளைக்
காக்கணத்தின் பெருவேர் மூன்றிட்
டாசை வசப்பொரு மூன்றேடுள்ளி முன்சொல்
மருந்து பத்து மடைவாய்க் கூட்டிக்
கூசாமலே வடித்திட்டே மெழுகு
பதத்திறக்கிக் கொண்டு வைத்தே (கூடுக)

கொண்டொருக்கொரு காசளவு கொடுத்திடப்
பதினெண் கொடிய காச்சல்
விண்டிடு மாந்த மகலுங் கணந்தீரும்
விடும் வயிறு மெனவே சோழ
மண்டல மெண்டிசையளவுங் கண்டுபட
ருங் கீர்த்தி மகிமையுள்ள
திண்டிறலார் சரபேந்திர தீரனரு
ளாலிதெலாஞ் செப்பினரே. (கூஉஉ)

(இ-ள்)

வெங்காயம் (சிறுக வரிந்து) — 1 உழக்கு
நிலக்குமிழம் பட்டை, இலை — 2 உழக்கு
சுத்தமான ஆமணக்கெண்ணெய் — ¾ படி
தூது வேளை வேர்
மூள்ளி வேர்
சிறு காரை வேர்
கண்டங்கத்திரி வேர்
கோழி யாவாரை வேர்
உத்தம தாளி வேர்
பொன்னங்கண்ணி வேர்,

இவைகள் வகைக்கு 3 வராகனெடை எடுத்து, நன்றாக அரைத்து எண்ணெய் ¾ படியில் குழப்பி அடுப்பின் மீதேற்றி, எண்ணெய் நன்றாகக் கொதிக்கும்போது ஷை ஈர வெங்காயம் ஒரு உழக்கையும் போட்டு, இண்டங் கொழுந்து 3 பிடியும் சதுரக் கள்ளிப்பால் ஒரு காசிடையும் கூட்டவும்.

பிறகு 5 கடுக்காயைத் தூள் செய்தும், தேற்றாங்கொட்டை பத்து விதையைத் தோல் சீவிக்கொண்டும், சாறடை வேர் ஐந்தும், வெள்ளைக் காக்கணம் வேர் மூன்றும், வசம்பும், வெள்ளைப் பூண்டின் திரி மூன்றும் முன் சொன்ன 10 மருந்தும் இடித்துக் கூடப்போட்டு மெழுகு பதத்தில் இறக்கிக்கொண்டு ஒரு நாளைக்குக் காசளவு சாப்பிடவும்.

18 வகையான சுரவகைகளும், மாந்தமும், கணையும் தீரும். நன்றாக மலம் கழியும்,

195. சிறு பிள்ளைகள் மாந்த சுரத்துக்கு மருந்து

மாந்தசுரம் பிள்ளைகட்கு வந்தால் வில்
வத்துடன் பாவட்டை வேரும்
போந்த பூனைக்காச்சி முடக்கொத்தான்
சிறு புள்ளடிப் புதிய வேரும்
காந்திடாமற் சுட்டவசம்புடனே
மையி னேடுங் கடுகச் சுட்டே
யேந்தி நாழியினீரிட்டுரியாகக்
காச்சு புகட்டின்னெய் போமே (நூஉஈ)

(இ-ள்)

வில்வ வேர்
பாவட்டை வேர்
பூனைக்காலி வேர்
முடக்கொற்றான் வேர்
சிறுபுள்ளடி வேர்
காந்தாமல் சுட்டவசம்பு
ஆமையோடு (நன்றாக கருக்கியது)

இவற்றைச் சமமெடையெடுத்து, நன்றாக இடித்து ஒரு படி ஜலம் விட்டு ½ படியாகக் காய்ச்சிப் புகட்டவும். மாந்தசுரம் தீரும்.)

196. மாந்த காசத்திற்கு

அஞ்சிலை நொச்சியினிலை கையாந்தகரை
யெலுமிச்சையிலையு மாய்ந்து
மஞ்சள் வெயிலில் வரும் வரைக்கும் வைத்
துலத்தியே பற்பமாக்கிச் சுக்கு
கொஞ்ச மிளகிந்துப்பு வெங்காரம்
பூ நாகங் கோழிக்காரம்
மிஞ்சு துருசியினுடனே வெச்சோடு கொண்
டே துருசி விதம் பொரித்தே (நூஉச)

பொரித்திடித்துக் கூட்டிவைத்துக் கொடுக்கவு
மாந்தக் காசம் போகுமென்றே
யுரித்துள தஞ்சையினுடனேயு டைய
காவிரித்தீர மொருங்கேயாளுஞ்

துரைச் சரபபூபதிதான் சொன்முறை நன்
முறை யென்னச் சொல்லிப் பாலர்க்
கரிட்ட மாந்தக் காச மகற்று மரண்
மணை வயித்தியரருளுள்ளோரே (ந உரு)

(இ-ள்)

அஞ்சிலை நொச்சியிலை
கையாந்தகரை
எலுமிச்சை இலை

இவைகளை நன்றாக ஆய்ந்து மஞ்சள் வெயில் வரும் வரைக்கும் வைத்து உலர்த்திக் கொண்டு, இவைகளைச் சட்டியிலிட்டுப் பற்ப மாக்கி,

சுக்கு
மிளகு
இந்துப்பு
வெங்காரம்
பூநாகம் (மண்புழு)
கோழிக்காரம்
துரிசு

ஒரு ஓட்டில் துரிசைப் பொரித்துக் கொள்வது போல் மற்ற சரக்குகள் யாவற்றையும் பொரித்துக் கொண்டு மேல் சொன்ன பற்பத்தையும் சேர்த்து இடித்துக் கூட்டிக் கொண்டு சாப்பிட மாந்த காசம் தீரும்.

197. மாந்தக் கழிச்சலுக்கு

மாந்தப் பட்டையினுடனே பாவட்டை வேர்ப்
பட்டை யரைப்பாக்கு வாங்கிக்
காந்தாமலாண் வசம்பு பணவிடை சுட்
டுள்ளியுடன் கலந்தி தெல்லாம்
பாந்தமாய் கழாயம் வைத்துப் பாலகற்குப்
புகட்டிரைச்சல் பண்பதாகு
மாந்தக் கழிச்சல் பொருமல் மாறும்
நில்லாக் கழிச்சலுக்கு மருந்து கேளே (ந உசு)

மருந்து தேங்காயளவாய்க் கொஞ்சியிலை
யை கருக்கு வைத்திறுத்துப்
பரிந்தெடுத்துக் கொடுக்கவுங் கைகண்டது
நில்லாக் கழிச்சல் பண்பாமென்றே
யருந்தவத் தாலவதரித்திங்கரசாளுஞ்
சரபேந்திரரருளிச் செய்திங்
கிருந்த முறை மருந்து வகை யின்னமுங்
கேண்மின் னெனவே யியம்பினரே. (நூஉஎ)

(இ-ள்)

மாந்தப்பட்டை (மாந்தப் புல்) - (1 வராகனெடை)
பாவட்டை வேர் ,,
அரைப்பாக்கு (பாதிப்பாக்கு)
ஆண் வசம்பு சுட்ட கரி - 1 பணவெடை
வெள்ளுள்ளி

இவைகளை எடுத்துச் சுமாராக இடித்துத் தண்ணீர் விட்டுக் கஷாயம் வைத்துக் கொடுக்கக் குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தக் கழிச்சல், பொருமல், இவை மாறும்.

(b) நில்லாத கழிச்சலுக்கு :—

கொஞ்சியிலையை ஒரு தேங்காயளவு எடுத்துக் கருக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்கவும். நில்லாத கழிச்சல் நிற்கும். கைகண்டது.

198. மாந்தக் கழிச்சலுக்கு

வெங்காயந் திப்பிலி வாய் விளங்க
மோமம் மிளகு மேலாமை யோ
டுங் கழற்கொடிப் பருப்புமொரு நிறையாய்ப்
பொடுதலைச் சாறுற வரைத்துத்
துங்கக் கல்வத் தெடுத்துச் சூரைக்கா
யளவுண்டை தோன்றச் செய்து
விங்கித வுண்டையைக் காச்சலிருமலுண்டாய்க்
கழியிற் புத்திரர்க்கு நல்கே. (நூஉஅ)

நல்கு கண்டங் கத்திரியினற் கழாயத்
தினிலே நலிந்தோர் காளம்
புல்கியுடனே வயிறு பொருமலுக்குத்
தாமணியின் புதுக் கழாயத்
தில் விடவும் வயிறு கழிந்திட்டிடிலோ மக்
கருக்கிட்டிடவு மென்றே
வல்லமையாற் சரபேந்திரர் கைகண்ட
வாறிதெல்லாம் வசனித்தாரே. (கூஉசு)

(இ-ள்)

வெங்காயம்
திப்பிலி
வாய் விடங்கம்
ஓமம்
மிளகு
ஆமையோடு (கருக்கியது)
கழற்சிக் கொடிப்பருப்பு

இவைகளை ஒரே நிறையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடுதலைச் சாற்றினால், நன்றாக அரைத்துச் சூரைக்காயளவு மாத்திரை செய்து, இருமல், காச்சல், கழிச்சல் உள்ள குழந்தைக்குக் கண்டங் கத்திரிக் கஷாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

வெள்ளை ஓக்காளம், வயிறு பொருமல் இவைகள் இருந்தால் உத்தாமணிக் கஷாயத்தில் கொடுக்கவும்.

வயிற்றுக்கழிச்சலுக்கு ஓமக் கருக்குக் கஷாயத்தில் இடவும். கைகண்டது.

199. மாந்தக்கழிச்சலுக்கு மாசிக்காய் கட்டுவாதி

காட்டாத்திப்பூ மாசிக்காய் சி
ரகத்துடன் கற்கடசிங்கி
யீட்டிலவம் பிசின் சோம்பு மிவை யெல்
லா மிளவறுப்பாயிட வறுத்துக்

கூட்டுகல்வத்திலரைத்தே சாதிக்
காய் புளியங்கொட்டைத் தோலும்
போட்டு மாதளீ யோடும் போஸ்துக்காய்
அதிவிடயம் புகல் வகைக்கே (கூகய்)

வகைக்கொரு காசிடை யிலவங்கப்பட்டை
யோர் பலமிவ்வகையிதெல்லாங்
குகைக்கல்வத்தினினறுக்கிக்கொண்டு
கருக்காக வைத்துக்கொணர்ந்தியாவும்
மிகப் பொடித்திட்டிக் கருக்கை விட்ட
ரைத்து மெலுமிச்சில் விழும் பழச்சா
றுகப்புடன் விட்டரைத்ததனை யுண்டை
பண்ணிக் கொள் மாந்த முளீ நோய் போமே (கூகக)

உளீந்து வயிறிடல் வயிறு கடுப்பிரத்தக்
கடுப்புடனுட்புஞ்சமூலம்
விளீந்திடு மாந்தக்கழிச்சல் மூல
மதிசாரமெலாமே சமூலந்
தளர்ந்திவை யெல்லாந்த விருந்தரமிது
கை கண்ட தெனச் சரபபூபன்
உளந்தெளிந்திவ்வுலகத் தோர்க்கு
பாதியறவே யிதெலா முரை செய்தாரே (கூகஉ)

(இ-ள்)

காட்டாத்திப்பூ
மாசிக்காய்
சீரகம்
கற்கடசிங்கி
இலவம் பிசின்
சோம்பு

இவைகள் எல்லாவற்றையும் சம எடை (ஒரு காசெடை) எடுத்து இள வறுப்பாக வறுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு, சாதிக்காய், புளியங்கொட்டைத் தோல், மாதளீ ஓடு, போஸ்த்துக்காய், அதிவிடயம் இலவகள் வகைக்கு ஒரு

காசிடை கூட்டி, லவங்கப் பட்டை ஒரு பலமும் சேர்த்துக் கருக்கு கஷாயம் செய்து காட்டாத்திப் பூ முதல் சோம்புவரை உள்ள மருந்துகளை மிடி கருக்கு விட்டு நன்றாக அரைத்து, மறுபடியும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்.

இதன் குணம் :—

வயிறு வலித்தல், வயிறு கடுப்பு, இரத்தக் கடுப்பு, மூலச் சூடு, மாந்தக் கழிச்சல் அதிசாரம், மூலம் இவைகள் யாவும் தீரும்.

200. மாந்தக் கழிச்சலுக்கு

வேளை வேரொன்றுடன் வெந்தயம் பலமொன்
றன் வசம்பு வெள்ளைப் பூண்டொன்
றுளுஞ் சட்டியிற் கருக்குங் கழாயத்தைச்
சங்கினிறுத்தன் பினலே
நாளொரு மூன்றுங் கொடுக்க நலந்திடும்
மாந்த கழிச்சனலியாதேகுஞ்
சூளிது கை கண்ட தெனத் துரைச்சரபேந்
திர மகிபர் சொன்னதாமே (கூகூகூ)

(இ-ள்)

வேளை வேர் 1 பலம்
வெந்தியம் ,,
வசம்பு ,,
வெள்ளைப்பூண்டு 1 பலம்

இவைகளைத் தினம் பழகும் சட்டியிலிட்டு வறுத்துத் தண்ணீர் விட்டுக் கருக்குக் கஷாயம் செய்து சங்கினல் ஒரு காலைக்கு 3 வேளை கொடுக்க மாந்தக் கழிச்சல் தீரும்.

201. மாந்த வயிற்றுவலிக்கு மருந்து

இன்னமொரு வகையுள்ளித் தயிலங்
காசிடை நாலுமிதின் வேப்பெண்ணெய்
தன்னையிரு காசிடை யிட்டே கூட்டிக்
கொடுக்கவுமே தணியர் கட்கே

யின்னல் செய்யும் வயிற்று வலியிக்கணம்
தீர்ந்திடுமெனவே யெழிலார் தஞ்சை
நன்னகராளுஞ் சரபநரபதி தா
னுரைத்த முறை நலமதாமே (கூ.கூ.ச)

(இ-ள்)

உள்ளித் தயிலம் 4-காசிடை
வேப்பெண்ணெய் 2 காசிடை

இதை ஒன்று கூட்டிக் குழந்தைகள் வயிற்று வலிக்கும் கொடுக்க, அந்த க்ஷணமே அது தீரும்.

202. பிள்ளைகள் கணமாந்தத்திற்கு எண்ணெய்

தகரை மருக்காரை சங்கதாரி வன்னி
கோடக சாலியு மாணிவும்
புகல் கொழுஞ்சி குட்டி வேலாம் பட்டை நரிப்
பயற்றை பொன்னுங்கண்ணி
வகை கணப்பூண்டோரிதழ்த் தாமரை
பழம் பாசியினுடனே வட்டத்துத்தி
தகுஞ் சிறு புள்ளடி பேராமுட்டி சிற்
றாமுட்டி பொடுதலைப் பூண்டாமே (கூகரு)

பூண்டு நெக்குஞ் சூரை சுவரிக் கொத்
தினுடனே முன்புகன் மருந்தின்
வேண்டு மிலையுருவியிட்டும் வேர் பட்டை
யினை நறுக்கி மிகப் பொடித்துந்
தோண்டிக் காடியிற் பிசைந்து சுருக்குடனு
ழிக் காடி தோன்றக் கொண்டே
யாண்டு கற்றாழஞ் சோறூர் குத்தெடுத்துக்
கைக் கொண்டு மதனித்தானே (கூகசு)

கொண்டு துவளிட்டிடவும் வெள்ளுள்ளி
வசம்பரைத்துங் குப்பை மேனி
மண்டிய சாற்றினி லரைத்துக் கொதிப்பித்து
மணிமுடி தொட்டடி வரைக்குங்

கண்டுடைம் பெலாந் தடவி னின்று துவ
ளிட வலிப்புக் கன் மாந்தங்கள்
விண்டிடு மென்றே சரபவித்தகனு
மூத்தமனூர் விளம்பினரே (கூகூஎ)

(இ-ள்)

தகரை
மரக்காரை
சங்கதாரி
வன்னி
கோடகசாலை
பாணவேர் (கூட்டமணக்கு வேர்)
கொளுஞ்சி
குட்டி வேலம்பட்டை
நரிப்பயிறு
பொன்னுங்காணி
கணப்பூண்டு
ஓரிதழ்த்தாமரை
பழம்பாசி
வட்டத்துத்தி
சிறுபுள்ளடி
சிற்றாமுட்டி
பேராமுட்டி
பொடுதலை
வெள்ளைப்பூண்டு
சூரையிலை
சவுரி இலை (குறட்டை)
கொத்தான்

இப்பச்சிலைகள் இலை, வேர், பட்டை இம் மூன்றையும நன்முகச் சிறு சிறு துண்டுகளாக்கி இடித்து ஒரு தோண்டிக் காடியில் பிசைந்து அடுப்பின் மேலேற்றி ஒரு நாழி (படி) யாகக் காய்ச்சியபின்பு, சோற்றுக் கற்றழையின் சோறு (ஜீரகத் நல் பிசரி வைத்து நீர் போன பின்பு) ஒரு குத்தளவெடுத்து மேல் சொல்லிய காடியில் தோய்த்துத் துவளையிடவும்.

(b) வெள்ளைப்பூண்டு
வசம்பு
குப்பை மேனி

இம் மூன்றையும் குப்பை மேனி சாற்றினால் அரைத்துக் கொதிக்க வைத்து தலையுச்சி முதல் பாதம் வரை உடம்பில் தேய்த்துத் துவளையாக இட

வலிப்பு, கல்மாந்தம் இவை தீரும்.

---

18. பிள்ளைகளுக்கு அடிப்புறப் பட்டாலதற்கு மருந்துகள்

203. பிள்ளைகளுக்கு அடிபுறப்பட்ட கழிச்சலுக்கு

புளியாரை சமூல முடனிலந்தையிலை
பழமாதல் புதிய சுக்கும்
இளந்தயிர் சமன் கூட்டியிட்டரை
த்து மடிப்புறப் பட்டிடுமிடத்தில்
வளம் பெறவே நிரம்ப விட்டு மாட்டுத்
தோல்கட்டி வைக்க வாங்குமுள்ளே
யிளம் பிள்ளைகட்கியல் பாமென்று சர
பேந்திரனரிசைத் திட்டாரே (நா-அ)

(இ-ள்)
புளியாரைச் சமூலம்
இலந்தை இலை
இலந்தைப் பழம்
சுக்கு

இவைகளைத் தயிர் சேர்த்தரைத்துக் குதம் வெளிவந்திருக்கும் இடத்தில் வைத்து, மாட்டுத்தோல் போட்டு நழுவாமல் கட்டிவைக்க குதம் உள்ளுக்கு போய்விடும். சிறிய குழந்தைகளுக்கு அடிப்புறப்படுதல் இயல்பானது.

204. பிள்ளைகளுக்கு அடிபுறப்பட்டால் மருந்து

முத்தின தேங்காய் திருகி முதிர் மஞ்ச
ணுனி விடத்தேரிலையிம் மூன்றும்
வைத்து ரலினிற் பொடித்து வறுத்துச் சூர
ணத் தொருகை வரு சிறங்கை
யித்தை யொரு புன்னைக்காயின்னளவு
தின்னிடவே யேழுநாளில்
சொத்த மடிப்புறப் பட்டதுள் வாங்குமெனச்
சரபதுரை சொன்னாரே (நூகூ)

(இ-ள்)

முத்தின தேங்காயின் திருகல்
பசுமஞ்சள்
விடத்தேரி இலை

இம்மூன்றையும் உரலிலிட்டுப் பொடி செய்து அதை வருத்து ஒரு புன்னைக்காயளவு வீதம் ஒரு வாரம் சாப்பிட அடிப்புறப்பட்டது உள்ளுக்கு வாங்கும்.

---

19. குழந்தைகள் கழிச்சலுக்கு மருந்துகள்

205. அதிசாரக் கழிச்சலுக்கு மருந்து

அதிவிடயங் திப்பிலி வெட்பாலியரி
சியு முலிப்பாலரைத்தே
யிதை முலிப்பாலிற் புகட்ட விதம் புளியா
ரையினுடனே இளவாழைப் பூ
விதமாகப் புகட்டிட்டுப் பிழிந்து தேன்
கலந்தோர் சங்கே புகட்ட
சதியான சலக்கழிச்சல் தவிருமெனச்
சரபேந்திரர் சாற்றினாரே (நூசம)

(இ-ள்)

(1) அதிவிடயம், திப்பிலி, வெட்பாலையரிசி இம்மூன்றையும் முலைப்பாலில் அரைத்து அதிலேயே புகட்ட, அதிசார பேதி நிற்கும்.

(2) புளியாரையையும், இள வாழைப்பூவையும் நறுக்கிப் புட்டவியலாக ஆவியின் மேல் வைத்து அவித்து, அதைப் பிழிந்து அதன் சாறுடன் தேன் சிறிது கலந்து ஒரு சங்கு புகட்ட, எப்பேர்ப்பட்ட ஜலக்கழிச்சலும் தீரும்.

206. அதிசாரமும், வாந்தியும் தீர மருந்துக்குடி நீர்

கடுகுரோகிணியை முலைப்பாலிலரைத்தே
புகட்டிக் கடுகை மேலிட்
டிடு சுரம் விட்டிடுமென்று எங்கள்
சரபேந்திரனுரி தமதாகப்
படிமிசையில் வாழ்பவர்க் கிப்படியுரைத்து
மேலின்னம் பரிவினுலே
குடிநீரு மருந்தி னீயுங் குறித்திசைத்
தாரிம் மருந்தின் குணங்கை கண்டே. (நாசக)

(இ-ள்)

(1) கடுகு ரோகிணியை முலைப்பாலில் அரைத்து அதைச் சாப்பிடச் சுரம் விட்டு விடும்.

(2) இதையே குடிநீராகவும் கொடுக்கலாம்

207. பிள்ளைகள் கழிச்சலுக்கு மருந்து

கருஞ்சீரகம் வசம்பும் தூதுளையினிலை
கொழுந்துங்கவின் முலைப்பால்
சொரித்தரைத்து மூன்று நாள் தொடர்ந்து புகட்
டவுங் கழிச்சல் சுருக்காய் நிற்கு
மருந்தவத்தாலவதரித்த சரபேந்திர
மகாராசரருளிச் செய்த
மருந்திது காண் மானிடரே! யென்று சபை
வயித்தியர்கள் வசனிப்பாரே (நாசக)

(இ-ள்)

கருஞ்சீரகம்
வசம்பு
தாதுவேளை இலை, கொழுந்து

இவற்றைக் கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து 3 நாள் விடாமல் குழந்தைக்குப் புகட்டக் கழிச்சல் சீக்கிரத்திலேயே நிற்கும்.

208. கொதுக்குக் கொதுக்கென்று கழிகிறதற்கு மருந்து

விடத்தேரை வரப்பூலாங் கொழுந்து
பாற் சோற்றியிலை விதமொன்றுக்குப்
பிடித்தோர் பிடியெடுத்து நெய்யைப்
பெய்திதனைப் பொன்னிறம் போற்பெறவறுத்து
மடுத்தோமஞ் சுக்கினையு மந்தத் தண்
ணீரிலரைத்ததைக் கண்டி
யெடுத்ததிலிட்டெரித்து நல்லெண்ணெயைக்
கலந்தூட்டிடத் தீரு மிந்நோய் தானே (கூடாகு)

(இ-ள்)

விடத்தேரைக் கொழுந்து
வரப்பூலாங் கொழுந்து
பாற்சோற்றி இலை

வகையொன்றுக்கு ஒரு பிடி எடுத்து நெய் விட்டு வதக்கி (பொன்னிறமாகும் வரை) ஓமம், சுக்கு இவ்விரண்டையும் தண்ணீரில் அரைத்து அதையும் சேர்த்துக் கண்டி நல்லெண்ணெயும் கூடச் சேர்த்துப் பதமாக எரித்துக் குழந்தைக்குக் கொடுத்துவர கொதுக்கு கொதுக்கென்று கழிதல் தீரும்.

209. சிறுபிள்ளைகள் பெரியவர்களுக்குங் கடுப்பு, இரத்தம் விழுகிறதற்கு மருத்து

பசுவின்பால் வெள்ளாட்டுப் பாலாத
லிரண்டுழக்குப் பாலோர் பாத்திரத்
திசைவாகவே கொதியிட்டெழுந்தவுட
னே பாலிலே யோர் பாதி
பசையான வரசம் பட்டையை யிடித்துச்
சாறுவடியிட்டுப் பாலில்
நிசமாகவே யிட்டுக் கிளறியதைச்
சுடக்குடிக்கு நேர் மூன்றே (கூசத)

மூன்று திரங்குடிக்கவுமே தீருங் கை
கண்டதென் முதலாம் வள்ளல்
தோன்றினரு மெனுஞ் சரபேந்திரரிந்த
முறைய தெலாந் தொகையதாக
யீன்றருள் தாய் தந்தையென யிவ்வுலகோர்க்
கிதஞ் செய்வானெண்ணிச் சொன்ன
தென்ற மிடுக்கண்டவிர்த்த தென்று
தமிழ்ப் பாவலர்களியம் பினரே (கூசரு)

(இ-ள்)

பசுவின் பால் 2 உழக்கு
வெள்ளாட்டுப் பால் 2 உழக்கு

இந்த இருவகைப் பாலையும் கலந்து அடுப்பின்மேலேற்றி நன்றாகக் கொதிக்கும்போது அரசம்பட்டையை இடித்துப் பிழிந்த சாறு 2 உழக்கும் சேர்த்துக் கிளறி அதைச் சுடச்சுட 3 தடவை சாப்பிடவும்.

வயிற்றுக் கடுப்பு, இரத்தம் விழுதல் முதலியவை தீரும்.

210. குழந்தைகளுக்கு வயிற்றுக்கழிச்சல் நிற்க மருந்தெண்ணெய்

தளச் சட்டி தனிலெலுமிச்சம் பழத்தை
யொன்றறுத்தச் சாற்றை யூற்றி
விளக்கெண்ணே சேரொன்று விட்டதின்
மாதளை யிலந்தை மிக்க நாவற்
றளிர்ச் சன்னலவங்கப் பட்டையிலவங்
கப் பத்திரி தன்னேடேலம்
வெளிப்படு செண்பக மொட்டும்
வெந்தயமோர் மூறவேயரைத்தே (நசசு)

அரைத்தந்த வெண்ணெயிலே யீர வெங்
காயத்தை மெல்லிய தாயரிந்திட்
டுரித்தாகப் பக்குவமாய்க் காச்சி வடிக்
கட்டிக்கொண்டோயாப் பேதி
யிரைத்து வயிறிடுங் குழந்தைக் கிந்தவெண்
ணெய் கொடுக்கிலுடனே கழிச்சல்
யிரைச்சலு மக்கணமேகுமென்று
சரபேந்திரனுரியம்பினரே (நசள)

(இ-ள்)

ஒரு வாயகன்ற சட்டியில் ஒரு எலுமிச்சம் பழத்தின் சாற்றை விட்டு அதனுடனே விளக்கெண்ணெய் 1 சேர் சேர்த்து

மாதுளைத் தளிர்
இலந்தங் கொழுந்து
நாகக் கொழுந்து
சிறு லவங்கப்பட்டை
லவங்கப் பத்திரி
ஏலக்காய்
செண்பக மொட்டு
வெந்தயம்

இவைகள் வகைக்கு 1 பல மெடுத்துத் தண்ணீரி லூற வைத்து, நன்றாக அரைத்து எண்ணெயுடன் குழப்பி வெங் காயத்தை மெல்லியதாக நறுக்கிப் போட்டு, எல்லாவற்றையும் அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடித்து வைத்துக் கொள்ளவும்.

ஓயா பேதி, இரைந்து கொண்டிருக்கும் பேதி, இவைக ளுக்கு இந்த எண்ணெயைக் கொடுக்கக் கழிச்சலும், இரைச் சலும் அந்த க்ஷணமே நிற்கும்.

211. வயிறு கழிச்சல், பொருமல், இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

கருவேப்பந்தண்டு நாகரம் வசம்பு
நற்சீரகத்திலேடும்
வருநெல்லி முள்ளியிவை வகைக்கொரு
காசிடையுமரை மரக்காணீரிட்
டுரியாகக் காச்சி வெந்தமருந்து மரைத்
துக் கரைத்து முண்ணப்பேதி
பிரையாமலேய மருமிதற் கேற்ற
கருக்கினீயு மிசையக் கேளே (நாசஅ)

இசையரசம்பட்டை கருக்கிட்டுக் கா
சிக்கட்டியினீத்தூள் செய்யாதே
யசராமல் மென்பொடியிட்டருந்திடவே
சுரமிரத்தமாங் கடுப்பும்
விசை விசையாய் வரும் பேதி விடுமிது
கை கண்டதென விகிதமாக
வசனித்தார் சரபேந்திர மகராச
நிம்மருந்தின் வகையைத் தாமே (நாசஉ)

(இ-ள்)

(1) * கருவேப்பந்தண்டு
சுக்கு
வசம்பு
நற்சீரகம்
நெல்லிவற்றல்

* கருவேம்பு—வேப்பமரத்தில் கருமை நிறமுள்ள ஒரு ஜாதி

இவைகள் வகைக்கு ஒரு காசிடை யெடுத்து, ஒண்றிரண் டாக இடித்து, ½ மரக்கால் ஜலம் விட்டு ½ படியாகச் சுண்டக் காய்ச்சி மேற் மருந்துகளையும் அரைத்து எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துச் சாப்பிடப் பேதி நிற்கும்.

(2) இதற்குத் தகுந்த கருக்கு :—

அரசம்பட்டைக் கருக்குக் கஷாயம் செய்து அதனுடன் காசிக்கட்டித்தூள் சேர்த்துச் சாப்பிடச் சுரம், இரத்தக் கடுப்பு, அடிக்கடி வரும் பேதி இவைகள் நிரும்.

212. பிள்ளை வயிறு கழியக்கட்ட மருந்து

நிலப்பனை வேர் தூதளங்காய் நிறையரைத்து
முலைப்பாலினேர்ந்து கொண்டே
யிலக்கணமாய்க் கலந்து புகட்டிட
வயிறு கழியு மிதையிப்படிக்கே
கலக்கிய மோரிற் கொடுக்கக் கழிச்சனிற்கு
முதிராத்திக் கணுவிலி பட்டை
பலக்கொரு பாக்கள வெருமைப் பழமோரிற்
கரையெள் நெய் பாதிக்காசே (கூருய)

பாதிக்காசள வெள் நெய் பரிந்து குத்திக்
கொடு மூன்று பகலம் மட்டும்
பேதிக்காதடை படுமிப் பிள்ளை வயி
றின்ன மொன்று பேசச்தேளே
ஆதிக்கமுடன் குப்பை மேனி வேரொரு
காசினளவதாகப்
பேதைப் பாலினிற் கொடுக்க வயிறு
மடைபடு மென்னப் பேசலாமே (கூருக)

(இ-ள்)

நிலப்பனை வேரை (கிழங்கை) ஒரு தூதுவளங்காய் நிறை அரைத்து முலைப்பாலில் கலந்து, குழந்தைக்குப் புகட்ட, வயிறு கழியும்.

2. இதையே மோரில் கலந்து கொடுக்க கழிச்சல் நிற்கும்

3. முற்றிய அகத்திக்கணுவிலுள்ள பட்டை ஒரு பாக் களவெடுத்து, பழய எருமை மோரில் கரைத்து அதனுடன் எள் ளெண்ணெய் ½ காசெடை விட்டு 3 நாள் பகலில் கொடுத்துவர பேதியாகாமல் மலத்தைக் கட்டி விடும்.

4. குப்பைமேனி வேர் ஒரு காசள வெடுத்துத் தாய்ப் பாலில் அரைத்துக் கொடுக்கக் கழிச்சல் நிற்கும்.

213. சிறு பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் கடுத்திரத்தம் விழுகின்றதற்கு மருந்து

எலுமிச்சம் பழம் வட்டமிட வறுத்திட்
டிதினபின் மாம் பிசினே யாதல்
திலந்திலமாகச் சிறுக நறுக்கி நெருப்
பினிற் கொதிக்கச் செய்தெடுத்தே
பலமார வைத்திந்தப் படி மூன்று திரம்
கொதிக்கப் பண்ணிக் கொண்டே
சிலவிட்டிம் மருந்தினைத் தினச்சிறு
வர்க்கும் பிழிந்து செலுத்துவாயே (ருஉ)

செலுத்தின்ன முறையொன்று செப்பக்கேண்மின்
சீராவின் பால் வெள்ளாட்டின் பாலாதல்
இலக்கண மாயுரிப் பாலையிடு கொதியிட்டதனை
விரண்டு பங்கிட்டொரு பங்கிலே யரசம்பட்டை
துலக்கமுறு வேயிடித்து வடித்திடு சாறினிற் பால்
சொரிந்து சுடச்சுடக் குடிக்கச் சொல் மூன்றுதர
[மாய்
அலுக்காமலே குடிக்கத் தீருங் கைகண்ட தரசர்
சரபேந்திரனுரருண் முறையிதாமே (ருருக)

(இ-ள்)

ஒரு எலுமிச்சம் பழத்தை வட்டமாக அறுத்து அதில் / நல்ல அபினை அல்லது மாம்பிசினை ஒரு பருத்தி விதையளவு எடுத்துக்கொள்ளவும். பின்பு, மேற் பழத்தின் மூடியைத் தணலின் மேல் வைத்து, சிறிது சிறிதாகக் கிள்ளி பழத்தின் மேல் போட்டுவர அது பொங்கும். கொதித்தபின், அதைக் கீழிறக்கி ஆறவைத்து, அந்த எலுமிச்சம்பழத்தின் சாற்றைப் பிழிந்து உள்ளுக்குப் புகட்டவும்.

2. ½ படி பசும் பாலையோ அல்லது வெள்ளாட்டுப் பாலையோ அடுப்பின்மேல் ஏற்றி 2 தடவை கொதிக்கவைத்து, அதை இரண்டு பங்குகளாகசெய்து ஒரு பங்கில் அரசம் பட்டையை இடித்த சாற்றைவிட்டு, மேலும் அந்த மீதியுள்ள பாலைச் சேர்த்துக் கிளரி சுடச் சுட மூன்று தடவை குடிக்க வயிற்றுக்கடுப்புத்தீரும்

214. சிறு பிள்ளைகள் கிராணிக் கழிச்சலுக்கு மருந்து

புளியங்கொட்டைத்தோல் காசுக்
கட்டி யிலவம் பிசினேமம்
விளையுஞ் சாதிக்காயோடதி விடய
மாங்கொட்டையின் விரையு
முள்பொன் முசுட்டை வேரிதெல்லா
மாகக் கூட்டியுட னெருமைக்
குளீர் மோரினீ விட்டரைத்ததனீக்
குன்றியிடையே குளிகை பண்ணி (கருசு)

குளிகைதனீ வெண்ணீரிலிட்டுக்
கொடுக்கக் கிராணி கொளுங் கழிச்சல்
கனீயாங் காச்சனிற்கு மிது
கைகண்டதெனக் காவிரி சூழ்
வள நாடாளுஞ் சரபேந்திரர்
வண்மையதனுன் வாய் மலர்ந்து
முளமே மகிழச் சொன்ன திவை
யுலகோர்க் கிதமா முண்மையிதே. (கருரு)

(இ-ள்)

புளியங்கொட்டை மேல்தோல்
காசுக்கட்டி
இலவம் பிசின்
ஓமம்
சாதிக்காய்
அதிவிடயம்
மாங்கொட்டைப் பருப்பு
பொன் முசுட்டை வேர்

இவைகளைச் சமமாக எடுத்து உரலிலிட்டு இடித்துப் புளித்த எருமை மோர் விட்டுச் சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதில் ஒரு குளிகையை வெண்ணீரில் இழைத்துக் கொடுக்க,

கிராணி, கழிச்சல், காய்ச்சல் இவை நிற்கும். கைகண்டது.

215. வெள்ளெடுப்புக் கழிச்சலுக்கு

காவல் பொடுதலை கீழ்காய் நெல்லியின்
நற் கொழுந்தை வெள்ளை நற்பாறன்னி
லாவலுடனே யரைத்து மூன்று பொழு
தளித்திடவு மதற்குப் பத்திய
மீவதையுண்டு புளி யிச்சியாதே
யிந் நோயிறங்கு மட்டென்
றுவதறியுஞ் சரபேந்திரருரைத்த
வாறி தெலாமழகதாமே. (கருசு)

(இ-ள்)

காகக் கொழுந்து
பொடுதலைக் கொழுந்து
கீழாநெல்லிக் கொழுந்து

இவைகளை வெள்ளைப்பசுவின் பாலிலரைத்து 3 பொழுது சாப்பிடக் கொடுக்கவும்.

பத்தியம் :—

கொடுத்ததைச் சாப்பிட்டு நோய் நீங்கும்வரை புளியைத் தள்ளவும்,

216. பிள்ளைகளுக்கு வயிறு கழிந்தால் மருந்து

மாவடுவையுலர்த்தி வைத்துப் பொடிசெய்து
மற்றதனைத் தயிரின் மத்தித்
தேவடிப்பமாய்க் கொடுக்கப் பிள்ளைகட்கு
வயிறு கழிந்திடா தென்றேதான்

மாவளமாகிய சோழவள நாட்டை
முழுதாளும் மகிமையுள்ள
கோவளகைப் பதிக்கரசர் சரபேந்திர
மகராசர் கூறினரே (கருஎ)

(இ-ன்)

மாவடுவைகறுக்கி வெய்யிலில் நன்றாகக்காயவைத்து வயிறு கழிச்சலுக்கு இதைத் தயிரில் அரைத்துக் கலக்கிச் சாப்பிட குழந்தைகளின் வயிறு கழிச்சல் நிற்கும்.

217. பிள்ளைகளுக்குக் கடுப்புக்கும் கழிச்சலுக்கும் கருக்குக் குடிநீர்

பருத்திவிரை யொரு நாழி காடியிலூறப்
போட்டுப்பார் மற்றுநாள்
நற்றுக்கியதைப் பிழிந்து சாறுமுக்குடனே
பொடுதலைச் சாறமு நன்றாகக்
கரத்தினில் வைத்துக் கசக்கி யிதிற் பாதி
கலந்ததனிற் பாதி கழுவுமெள்ளெய்
விருப்பமுடனே காச்சிக் கொடுத்திடவே
கடுப்புளதும் விட்டுப் போமே (கருஅ)

வேப்புப் பொடுதலைத் தண்டு பழம்பாசித்
தண்டோமம் விட்டுணுகரந்தி
காப்புள நாகர முருங்கை சிரகஞ்
சற்றே கருக்கிக் கண்முன்னுழி
நீர்பெருக்கி மூவழக்காய் நிற்கக் காச்சி
யுமதனை நேர் மூன்று
தாய்ப்பிரியமாய்க் கொடுக்கக் கழிச்ச
னிற்குஞ் சரபேந்திரர் சாற்றினரே (கருக)

(இ-ன்)

பருத்தி விதை — 1 நாழி

எடுத்துக் காடியில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அதை இடித்துப் பிழிந்த ரசம் ஒரு ஆழாக்கில், பொடுதலையை

கையினால் கசக்கிப் பிழிந்த ரசம் ½ ஆழாக்கும் கூட விட்டுச் சுத்தமான எள்ளெண்ணெய் ¼ ஆழாக்கும் கூட விட்டு, எல்லாவற்றையும் அடுப்பின் மேல் வைத்துப் பக்குவமாக எரித்து வடிக்கவும்.

இத்தைலத்தில் சிறிதளவு சாப்பிட வயிற்றுக் கடுப்பு நிற்கும்.

2. பொடுதலைத் தண்டு
பழம் பாசித் தண்டு
ஓமம்
விட்டுணுக் கராந்தி
சுக்கு
முருங்கை
சீரகம்

இவைகளைச் சட்டியிலிட்டுக் கருக்கி 3 நாழி ஜலம் விட்டு மூன்று உழக்காகக் காய்ச்சி அதை 3 வேளை, பருகக் கொடுத்து வரக் கழிச்சல் நிற்கும்.

218. குழந்தைகள் வயிறு கழிச்சலுக்குக் கஷாயம்

வெந்தயத்தையே வறுத்துக் கஷாயம் வைத்துக்
கொடுத்திடவும் இளைத்து மென்மேல்
வந்த வயிற்றுக் கழிச்சல் மாறிவிடு
மென்று சரபேந்திர வள்ளல்
விந்தை விந்தை யாயுரைத்த மெய் முறைபி
னிம் முறையு மிக நன்றென்றே
சிந்தையினி லெண்ணியிது சித்தர் முறை
யென நல்லோர் செப்புவாரே (கூசுலி)

(இ-ள்)

வெந்தயத்தை (1 பலம்) சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்து, (2 சேர்) தண்ணீர் விட்டுக் கஷாயம் செய்து கொடுக்கக் கழிச்சல் நிற்கும்.

219. பிள்ளைகள் வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கு மருந்து

ஆதண்டையிலை காய் பூவதை எலுமிச்
சம் பழச் சாறதனிலாதல்
மேதியின்னற்றயிராதல் விட்டடை சுண்
டைக்காய் போல விடுத்தவுண்டை
பேதியாகாது கொடு பிள்ளைகட்கும்
பெரியவர்க்கும் பிரியமாய் நல்க
ஆதரவா மென்று சரபேந்திரனுர்
ருண் முறையே யடைவதாமே (கூகக)

(இ-ள்)

ஆதண்டையின் இலை, காய், பூ இவைகளை எலுமிச்சம் பழச் சாற்றிலோ அல்லது எருமைத் தயிரிலோ அரைத்துச் சுண்டைக்காயளவுப் பேதியாகும் குழந்தைக்குக் கொடுக்க மலம் அடைபடும். இதை பெரியவர்களுக்கும் வழங்கலாம்.

220. வாந்தியோடு கூடிய கழிச்சலுக்கு மருந்து

வசம்புள்ளி மிளகாமை யோடு சற்றே
வறுத்து மரை மரக்காணீரிட்டே
யசராமலே யுழக்க தாய்க் காய்ச்சிக்
கொடுத்திட வாயாலெடுத்து
விசை விசையாகக் கழிதல் விடுமெனவே
சரபேந்திரர் விபரந்தேடி
வசன் பூருவமாக வசனித்தா
ரிம் மருந்தின் வகையைத்தானே (கூகஉ)

(இ-ள்)

வசம்பு
வெள்ளைப்பூண்டு
மிளகு
ஆமையோடு

இவைகளோச் சமமெடுத்து (வகைக்கு ¾ பலம்) வறுத்து, ½ மரக்கால் தண்ணீர்விட்டு ஒரு உழக்காகும் வரை வற்றக் காய்ச்சிக் கொடுத்திட வாந்தியோடு கூடிய பேதி தீரும்.

221. பிள்ளை வயிறு கழிச்சலுக்கு மருந்து

மாம்பட்டை வகிர்ந்தரைத் தோர் வரிவளைச் சங்
கிற் பாலின் மத்தித்தே தான்
ஆம் பருவத்தோடிரண்டு போது கொடுக்
கவும் வயிறங் கடைப்பதாகும்
கீம்புகள் தீர்ந்திடு மிதுகை கண்டதெனச்
சரபேந்திர தீரர் செப்பும்
நாம் புகல்வதென்னிந்த நன்முறையின்
பெருமை நல்லோர் நவிற்றுவாரே (கூகூ)

(இ-ள்)

மாம்பட்டையை அரைத்து ஒரு சங்குப் பாலில் கலந்து இரண்டு பொழுது கொடுக்க வயிற்றுக் கழிச்சல் அடைபடும். கைகண்டது.

222. குழந்தைகள் கிராணிக்கெண்ணெய்

இடித்திடு சுக்கீரைந்து பலத்தினிலெட்
டுப்படி நீரிட்டுக் காச்சோர்
படியளவாம் பொழுதந்தப் பாகத்திற்
படியெண்ணெய் பரிந்திட்டிந்துப்
பொடு செவ்வியங் கொடுவேலி வகைக்கொருமுக்
கழஞ்சரைத்திட்டுடன் வடித்தே
கொடு கழஞ்சு மேல் மூச்சு கொடுங் கிராணி
வீக்க மெல்லாங் குணமாந்தானே (கூகூ)

குணமா முக்காவேளை சுண்டி வில்வ
நன்னரி கொடு வேலி வேர்
அணுகாமலேகிக்காஞ்சோரி சிறு
வழுதலை வட்டத் திருப்பி

யெனும் வேரெட்டுடனெதி யாலில
வங்கப்பட்டை யாயிற் பட்டையும்
பணத்திப் பெருமர முள்ளிலவு குடசப்
பாலிப் பட்டையாமே (க கரு)

ஆவாரைப் பஞ்சக மாதளை தென்னம்
பாலையடப்பங் கொழுந்துங்
காவட்டம் புல் முத்தக் காசு கரு
வாழைப்பூ கருவேப்பந் தண்
டாவலுடன் கொண்டு புளியாரை சமூ
லமுமிதலாமாய்ந் தெடுத்திட்
டே வகைக் கோர் பல மிடித்திட்
டிற்றூணி யெருமை மோரிட்டெரித்தே (க கரு)

தூணி விட்டு நாளுழியாய்க் காச்சி
வடித்துக் காசுக் கட்டியும்
வேணுமதி விடையமுடன் வெட்பாலை
யரிசி யிலவின் பிசின்றூன்
காணுங் காட்டாத்திப்பூ கருஞ்சீர
கஞ் சாதிக்காய் கல்நாரும்
ஆண மிளகோமங் கிராம்பாங் கோட்டம்
பால் கோட்ட மாயிற்பட்டை (க களை)

பட்டை குடசப்பாலைப் பட்டை திரி
பலவிள விற்படும் பிசின்றூன்
வெட்டு பெரு மரப்பட்டை பெருங்குரும்பை
நன்னாரி வேர் நற்சீராம்
விட்ட நறு விளிப்பிசின் றிப்பிலி
மூலமிம் மருந்து விதமொன்றுக்
கிட்ட முடனிரு கழஞ்சி னிடை பொடிசெய்
தே முன் பண்ணின கருக்கில் (க கரு அ)

கருத்துடனல்லெண்ணெ யுழக்காவினெய்யு
முழக்கிதனைக் கலந்து காச்சி
வரக் குழம்பாம் பதத்தில் வைத்த பொடியினை
மேலிட்டதனை வாகாய்க் கிண்டித்

திருத்தமுடன் கொடுத்து வர விரைச்சல்
கிராணியு மிரண்டுந் தீரு மென்றே
யுரைத்தனர் தஞ்சையில் வாழுமுத்தமனுர்
சரபேந்திரருலகத் தோர்க்கே (கூசுக்)

(இ-ள்)

சுக்குத்தூள்—10 பலம், இதனுடன்,

8 படி ஜலம் விட்டு ஒருபடியாக வற்றக் காய்ச்சிக் கொண்டு

நல்லெண்ணெய்—படி 1
செவ்வியம்
கொடிவேலி வேர் } இவையிரண்டும் தனித்தனி முக்கழஞ்சு எடுத்து கல்கமாக அரைத்துக் கஷாயம் கலந்த எண்ணெயில் குழப்பி, அடுப்பின் மேல் வைத்துப் பக்குவமாக வடித்து இறக்கி, இதில் ஒரு கழஞ்சு வீதம் கொடுத்து வர

மேல்மூச்சு
கொடுங்கிராணி
வீக்கம் முதலியவைகள் குணமாகும்.

(2) முக்காவேளை
சுக்கு
வில்வம்
நன்னரி வேர்
கொடிவேலி வேர்
காஞ்சோரி
சிறுவழுதலை
வட்டத்திருப்பி

இந்த எட்டு வகை வேர்களுடன்

ஓதியம் பட்டை
ஆலம் பட்டை
இலவங்கப் பட்டை
ஆயில் பட்டை
பெருமரப் பட்டை

முள்ளிலவம் பட்டை
குடசப்பாலைப் பட்டை
ஆவரை பஞ்சாங்கம் (இலை, பூ, காய், பட்டை, வேர்)
மாதுளை ஓடு
தென்னம்பாளை
அடப்பங் கொழுந்து
காவட்டம் புல்
முத்தக்காசு (கோரைக் கிழங்கு)
கருவாழைப்பூ
கருவேப்பந்தண்டு
புளியாரை சமூலம்

இவைகள் அனைத்தும் வகைக்கு 1 பலம் எடுத்து, இச் சரக்குகளை நன்றாக இடித்து ஒரு தூணி (4 மரக்கால்) எருமை மோர்விட்டு அடுப்பின்மேல் வைத்து 4 நாழியாகும்படி வற்றக் காய்ச்சவும். இதனுடன்,

காசுக்கட்டி
அதிவிடயம்
வெட்பாலை அரிசி
இலவம் பிசின்
காட்டாத்திப்பூ
கருஞ்சீரகம்
சாதிக்காய்
கல்நார்
மிளகு
ஓமம்
கிராம்பு
கோஷ்டம்
பால் கோஷ்டம்
ஆயில் பட்டை
குடசப்பாலைப் பட்டை
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
விளாம்பிசின்
பெருமரப்பட்டை

பெருங்குரும்பை
நன்னரிவேர்
நற்சீரகம்
நறுவிளிப் பிசின்
திப்பிலி மூலம்

இம் மருந்துகள் வகையொன்றுக்கு இரண்டு கழஞ்சு எடை எடுத்து, நன்றாகத் தூள் செய்து வைத்துக்கொண்டு

நல்லெண்ணெய் 1 உழக்கு
பசு நெய் ,, இவைகளை

கருக்குடன் (மேலே சொன்ன மோர் கஷாயத்துடன்) கலந்து அடுப்பின் மேலேற்றிக் குழம்பாக வரும் பதத்தில் மேற் சொன்ன பொடியைத் தூவிக்கிண்டி வைத்துக் கொள்ளவும்.

இதைத் தினந்தோறும் சாப்பிட்டுக் கொண்டுவர இரைச்சல், இராணி இவ்விரண்டும் தீரும்.

குறிப்பு :—

தூணி = 4 மரக்கால் அளவு
கழஞ்சு = 40 குன்றிமணி அளவு அல்லது 1¼ வராகனெடை.

223. குழந்தைகளுக்கு வயிறு கழியாமல் நிற்க மருந்து

* சீகுப்புல்லினைச் சுட்டுக் கரியாக
கழாயமதாய்ச் செய்து நல்கி
லே குழந்தைகளுக்கு வயிறிரையாமலே
மலக்கழிச் சலியல்பாய் நிற்குஞ்
சேகரி மாங்கொட்டையினற் பருப்பினைத்
தூளாக்கிச் சேரு சர்க்கரை
வாகுமிதைக் கலந்து கொடுத்திட வயிறு
விடாதெனவே யறியலாமே (கஎ)

* சீகுப்புல் = துடப்பம்

(இ-ள்)

1. சீகுப்புல்லை நெருப்பிலிட்டுக் கருக்கித் தண்ணீர் விட்டுக் கஷாயம் செய்து கொடுக்க வயிறு இரைச்சல், மலக் கழிச்சல் இவை நிற்கும்.

2. மாங்கொட்டையின் பருப்பை இடித்துத் தூளாக்கிச் சர்க்கரை சேர்த்துக் கலந்து, குழந்தைக்குக் கொடுக்க வயிற்றுக் கழிச்சல் நிற்கும்.

---

20. சிறுகுழந்தைகளின் சுரத்திற்கு மருந்துகள்

224. சிறுபிள்ளைகளின் சுரமும் அதிசாரமும் வாந்தியும் நீக்குமிடம்

அஞ்சனக் கல்லதி மதுரங் கூகை
நீர் பேரீச்சு மடைவதாக
வுஞ்சமலு செய்துடன்றேன் சர்க்கரை
கூட்டியுணச் செய்யிலுளவு பாந்தி
மிஞ்சழலை யிளைப்புள்ளதும் விடுஞ்சகல
தாபமும் போமெனைச் சோணுட்டைத்
தஞ்சையிருந்தரசாளுஞ் சரபேந்திர
மகராசர் சாற்றினரே (கூகக)

சீதேவிச் செங்கழு நீரிலைச் சாற்றுற்
கடுகு ரோகிணியைச் சீர் செய்
தாதரவினு லரைத்துக் கழச்சி சுண்டைக்
காயளவதான வுண்டை
போதர வாய்ச் சுண்டைக்காய் போலுண்டை
முலைப் பாலிற் புகட் டோர் சங்கு
மீதியுடம் பினிற் பூசி மேற் பெலங் கண்
டங்கழற்சி விரை மட்டுட்டே (கூகஉ)

(இ-ள்)

அஞ்சனக்கல்
அதிமதுரம்
கூகை நீர்
பேரீச்சை

இவைகளைச் சமமாக எடுத்து நன்றாக இடித்துச் சூரணம் செய்து, அதனோடு தேனும், சர்க்கரையும் கூடவிட்டுக் குழந்தைகளுக்குக் கொடுக்க உளமாந்தம், அழலை, இளைப்பு, சகலவிதமான தாபங்கள் முதலியவை தீரும்.

(2) கடுகரோகிணியைச் சீதேவியார் செங்கழுநீரிலைச் சாறுவிட்டு அரைத்துச் சுண்டைக்காயளவாகவும், கழற்சிக் காயளவாகவும் உருண்டை செய்து குழந்தையின் பலமறிந்து, பல்வினமாயிருந்தால் சுண்டைக்காய்ப் பிரமாணமுள்ளதைத் தாய்ப்பாலில் அரைத்து ஒரு சங்கு புகட்டி, மேலும் பூசவும். பலமுள்ள குழந்தைகளுக்குக் கழற்சிக்கொட்டைப் பிரமாண முள்ளதை உள்ளுக்குத் தாய்ப் பாலில் புகட்டவும்.

225. வாந்தியுடன் கூடின சூரத்திற்கு மருந்து

கலிமான் கொம்பதி விடையங் திப்பிலியுஞ்
சமங்கூட்டிக் கல்வத்திட்டே
யுளவாமற் பொடி பண்ணி யுள்ள தேனிற்
கொடுக்கவு வாந்தி யோடே
நலி சுரமும் விடுமென்று நரபதி பூ
பதி சரபனுமன் சொல்லே
கலியாயுணூல் தமிழிற் கவி செய்யக்
கண்டெவருங் களிக்கின்றாரே. (கூளக)

(இ-ள்)

சுத்தியான கலிமான் கொம்பு
அதிவிடையம்
திப்பிலி

இவைகளைச் சம எடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து, தேனில் கொடுக்க வாந்தியோடு கூடிய சுரம் தீரும்.

226. பிள்ளைகளின் காய்ச்சலுக்கும், இருமலுக்கும், இரைப்புக்கும் மருந்து

பூசணிப்பூ வசம்புள்ளி தூதுளை லீலியின்
வேரீப் புசிக்கும் வெளவால்
நேசமூற்றுக் கொடுவந்து நெய் வடிக்க
வுங் கெற்பம் நிறைதல் கண்டே
மாசம் பத்தினிற் பிறந்த மகவாயிற்
கரட்டோணனி ரத்தம் வார்க்கிற்
பேசு மெத் தோடமும் போங் காப்பினியிலை
குன்றியிலை சிறு பீளையுள்ளி. (கஎச)

உள்ளி வசம்புடனே விளவினிலையிதெலா
மொரு நாள் முன்னுறவே கொண்டே
மெள்ள வதி காலமே விடியும் வே
ளையின் வாசற்படி மேற்றுயைப்
பிள்ளையுடனே யிருக்கச் சொல்லி மருந்
தீனை நருக்கிப் பிழிய முக்கால்
அள்ளி மருந்தினைத்துவளையாயிடவு
மூன்று நாளன்னுட்டூரும். (கஎடு

(இ-ள்)

(1) பூசணிப்பூ
வசம்பு
உள்ளி
தூதுவளை
அவுரி வேர்
ஈத்தின்னி வெளவால்

இவற்றை கொண்டு வந்து வகை யொன்றுக்குக் கால் பலம் வீதம் சூரணித்து 2 சேர் நெய்யில் கலந்து பக்குவம் செய்து வடித்துக் கொடுக்கக், காய்ச்சல், இருமல். இளைப்பு இவை தீரும்.

(2) பத்தாம் மாதம் பிள்ளை பிறந்த தினத்தன்று, கரட்டோணுனின் இரத்தம் வாயில் வார்க்கவும். எவ்வித தோஷங்களும் தீரும்.

(3) புளி இலை
குன்றியிலை
சிறு பீளையிலை
உள்ளி
வசம்பு
விளா இலை.

இவைகளை முதல் நாளே கொண்டுவந்து வைத்து, மறு நாள திகாலையில் (விடியற் காலத்திலே) வாசற்படியிலே பிள்ளையையுந் தாயையுமிருக்கச் செய்து, முன் மருந்துகளை நருக்கி இடித்து முக்கால் பாகம் பிழிந்து, உடம்பிலே துவளையிடவும். இந்தப்படி 3 நாள் துவளையிட வெடி நோய்கள் தீரும்.

227. பிள்ளைக் காச்சலுக்கும், இருமலுக்கும், இரைப்புக்கும் மருந்து

அன்னளிலே விடத்தேரிலை சிறு புள்ளடி
யிலையுமதை முன் வைத்தே
பன்னளிற் காடியினிற்றுவளை யிட்டுப்
பார்க்கவுமே பலிக்கும் நன்கென்
றின்னளிற் காவேரியின்றீர
முழுதாளுமெங் களேந்தேன்
மன்னவனுர் சரபேந்திரர் வசனித்தா
ரிம்முறையின் வகையைத்தானே. (கூளகூ)

(இ-ள்)

சிறுபுள்ளடி
விடத்தேரி இலை

இவ்விரண்டையும் காடிவிட்டு அரைத்துக் குழப்பி முன் போலத் துவளையிட மேற்சொல்லிய வியாதிகள் தீரும்.

228. சிறு பிள்ளைகளின் கூரம், அதிசாரம், வாந்திக்கு

அதிசாரத்தினுக்கு மஞ்சள் மரமஞ்சள்
தூதுவளையடி வேர்த்தோலும்
அதிமதுரம் வெட்பாலையரிசியுடனே
சமஞ் செய்ததனை நன்றுய்ங்
திதமான கழாயஞ் செய்திரு நேரமுங்
கொடுக்கவே நீர்ப்பேதி
மிதமாகு மனுகூல மெனச் சரபேந்திர
மன்னர் விளம்பினரே. (கூளஅ)

(இ-ள்)

மஞ்சள், மரமஞ்சள், தூதுவேளை வேரின் மேல்த்தோல், அதிமதுரம், வெட்பாலை அரிசி இவைகளைச் சமமாக எடுத்துச் சூரணித்துக் கஷாயம் செய்து இரு நேரமும் கொடுக்க நீர் பேதி (தண்ணீராகக் கழிதல்) தீரும்.

229. சிறுபிள்ளைகள் சூரத்திற்குச் சுகதேவித் தைலம்

குரு வேர்த்தண்டுடன் சீந்தில் நெய்சட்டிப்
பூண்டுடனீக் கை கொடு பிசைந்தே
உரிசாறிட்டுரி மூலிப்பாலுடன் கடுக
ரோணியதி மதுரத் தோடும்
அரைபடு சந்தன மவையுங் கூட்டி யெண்ணெய்
பண்ணிச் செய்தங் கத்திட்டால்
சுரம் நிற்கும் பிள்ளைகட் கென்றே சரப
சுந்தர வேள் சொன்னர்தாமே (கூளஆ)

(இ-ள்)

வெட்டிவேர்த் தண்டு, சீந்தில்கொடி, நெய்ச்சட்டிப் பூண்டு இம்மூன்றையுங் கொண்டுவந்து இடித்து ½ படி சாறெடுத்து, அதற்குச் சமம் (½ படி) மூலிப்பால் கூட்டிக் கடுக ரோகிணி அதிமதுரம், இழைத்த சந்தனம், இவைகளை வகைக்குக் காற்

பல மெடுத்து நன்றுகப் பால் விட்டரைத்து ½ படி நல்லெண் ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து உடம்பில் பூசி வரக், குழந்தைகளின் சுரம் நீரும்.

230. சிறுவிஷ்கோகள் பித்த சுரத்திற்கு

கொத்தமலி யொருபிடி சுக்கிரண்டு கடுக்
காய் நாலு கொண்டு கூட்டி
யித்தணியுங் குடி நீரிட்டுக் காய்ச்சி
முலைப்பாலிலே கொடுக்கப்
பித்தசுரம் விடுமெனவே வித்தகனார்
சரபேந்திரர் பிரிய மில்லாச்
சத்துருவை சங்கரிக்குஞ் சத்திரபதி
தன் வாயாற் சாற்றினாரே. (நூஎக)

(இ-ள்)

கொத்தமல்லி விதை—1 பிடி
சுக்கு 2 துண்டு
கடுக்காய்—4

இவற்றை ஒன்றிரண்டாக நசுக்கித் தண்ணீர் விட்டுக் கஷாயமாகக் காய்ச்சி, வடிக்கட்டி, முலைப்பால் சிறிது சேர்த்துக் கொடுக்கப் பித்தசுரம் நீரும்.

231. வேறு

கலிக் கொம்போடு ருத்திராக்க முலைப்
பாலிலேயரைத்துக் கலந்து நல்க
நலுக்கஞ்செய் பித்த சுரம் நாடாதென்
றேசோழ நாடாளுகின்ற
யிலக்கணமாகிய சரபேந்திரருரைத்த
விம்முறையையுணர்ந் தோர்
நிலத்திற் கற்றவரெவரும் நிச்சயங்
கண்டதி சயிக்க நிகழ்த்தினாரே. (நூஅ)

(இ-ள்)

மான் கொம்பு
ருத்திராக்ஷம்

இவ்விரண்டையும் முலைப்பாலில் இழைத்துக் கலந்து கொடுக்க, பித்த சுரம் தீரும்.

232. சிறு குழந்தைகள் பித்தசுரத்திற்கு மருந்து

சீருள விட்டுணு கிராந்தி செப்பு நெருஞ்
சியினுடனே சிறந்த சாரச்
சாறணி வேரிம் மூன்றுஞ் சமனுக்
விடித்துத் தூளாக்கு சுக்கும்
ஆருக்கு மாகுங் கொத்தமல்லித் தூ
ளும் வெருகடிப் பிரமாணம்
நேருற்ற நாழியினீரி தெல்லாம் போட்
டுழக்கும் நிற்கக் காச்சே. (கூஅக)

காச்சி யந்தி சந்தியுமே கொடுக்கவும்
வெச் சென்றவுடன் கடுகி நல்கப்
பேச்சதிகமாம் பித்த சுரம் விடுமென்
றே சரபப் பெருமான் சொன்ன
வாச்சரியமாகிய விவ்வரு முறையை
யருந்த வந்தணர் கள்யாரும்
ஈச்சுர சகாயமிது வென்று மன
மகிழ்ந்திடு வரென்றுந்தானே. (கூஅஉ)

(இ-ள்)

விஷ்ணுகிராந்தி
செப்பு நெருஞ்சில்
சத்திச் சாரணி வேர்

இம்மூன்றையும் சமமெடுத்து இடித்துத் தூளாக்கி சுக்கு, கொத்தமல்லி விதைப் பொடி இவ்விரண்டும் வகைக்கு ஒரு வெரு கடிப் பிரமாணம் போட்டு, ஒரு படி ஜலம் விட்டு அடுப் பின் மேலேற்றி, ஒரு உழக்காக வற்றக்காய்ச்சவும். இதைத் தின மொன்றுக்கு இரு வேளை, காலையும், மாலையும் உப யோகிக்கப் பித்த ஜுரம் தீரும்.

233. சீத சுரத்திற்கு

சீத சுரத்திற்கு மெருகங் கிழங்கு
சமூல முந்தான் சேர்த்திடித்தப்
போது பதக்குக் காடி புகப்போட்டு
நாணுழிபோலே காய்ச்சி,
யீதிரு நாழியை யீறுத்துப் பசுவின் பால்
குருணி யீரிரண்டு நாழிக
ளாதரவாய் மரமஞ்சள் யாலீத்திப்
பிலி சிறு தேக்கது சுக்காமே. (கஅக)

ஆமெருகங்கிழங்கு சிறு முகமுடன்
றிப்பிலி தேவதாரமி யாவுந்
தாமத மில்லாமலொரு சரக்கினுக்கு
மூக்கழஞ்சதாகக் கூட்டி
சேமமுடனே யரைத்து மிடச் சீத
சுரந்தீரு மென்றே
மாமகிபர் சரபேந்திரர் வசனித்தார்
நோயற்றும் வாழத்தானே (கஅச)

(இ-ள்)

மெருகங் கிழங்கு சமூலமாக எடுத்து, நன்றாக இடித்து, 2 மரக்கால் காடிவார்த்து, அடுப்பின் மேல் வைத்து 4 படியாகச் சுண்டக்காய்ச்சி * எண்ணெய் இருநாழி வார்த்து, பசுவின் பால் ஒரு குறுணியும் 4 நாழியும் வார்த்து

மரமஞ்சள்
யாலீத் திப்பிலி
சிறு தேக்கு
சுக்கு
மெருகங்கிழங்கு
சிறுமுகம்
திப்பிலி
தேவதாரம்

* இது மூலச் செய்யுளில் காணப்படவில்லை. 91. கூ. சுவடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகள் வகைக்கு 3 கழஞ்சு எடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்து, ஏண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதமாக, எரித்து வடிக்கவும். இதைத்துவளையிட சீதசுரம் நீங்கும்.

---

21. குழந்தைகளுக்குப் புஷ்டிதர மருந்துகள்

234. வறட்சி, தூ, உள்ள குழந்தைகளுக்கு

சேரொன்றதாம் பசுவினெய்க் கோர் குத்து
முசுமுசுக்கை தேற்றுங்கொட்டை
சீரகமும் வகைக்கோருழக்கே யெடுத்தூறப்
போட்டுச் சேர்த்தரைத்தே
யேர்வையுடனே நெய்யில் கலந்தடுப்பில்
வைத்திறக்கி விதுகை கண்ட
தோரொரு கொட்டைப் பாக்கினளவு கொடு
உடல் பருக்கும் பாலகருக்கே. (கருவி)

(இ-ள்)

பசுவின் நெய்	1 சேர்
முசுமுசுக்கை இலை	1 குத்தளவு
தோல் நீவின தேற்றுங்கொட்டை	1 உழக்கு
சீரகம்	1 உழக்கு

இந்தச்சரக்குகளைத் தண்ணீரில் ஊரப்போட்டு, நன்றாக அரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பில் வைத்துப் பதமாக இறக்கி ஒரு வேளைக்குக் கொட்டைப்பாக்களவு கொடுக்க (பாலுடன்) குழந்தைகளின் உடல் பருக்கும். தினமிருவேளை சாப்பிடலாம்.

235. பிள்ளைகளுக்கு முலைப்பாலெண்ணெய்

மெருகெண்ணெயெப்படியு முலைப்பாலி
லே பண்ண வேண்டிற் சீந்தி
லுரு விலைச் சாறுரியோ டெண்ணெயுழக்குங்
காய்ந்தோங்கி யொருபதமாகச்சே
யொரு மூன்று காசிடையாங் கடுகுரோ
கிணி பொடி செய்துடனே தூவித்
தராவி யிறக்கித் தலையிலுடம்பி லிடப்
பிணிதீருஞ் சவுக்கியமாமே. (அகத)

(இ-ள்)

சீந்தில் கொடியின் சாறு	ஒரு உரி
உருவிலிச்சாறு	ஒரு உரி

ஆமணக்கெண்ணெய் ஒரு உழக்கும் சேர்த்துக் காய்ந்து பதமாக வரும்போது 3 காசிடை கடுகு ரோகிணி பொடி செய்து தூவி நன்றாகக் கலக்கி இறக்கவும்.

இதைத் தலையிலும் உடம்பிலுமிடப் பிணிகள் தீர்ந்து சௌக்கியமுண்டாகும்.

குறிப்பு :—

இத்தத் தைலத்தில் முலைப்பால் சேர்க்க வேண்டும் என்று கூறப்படவில்லை. ஆனல் தைலத்தின் பெயர் "முலைப்பாலெண்ணெய்" என்றிருக்கிறது. காரணம் புலப்படவில்லை. அகராதியில் மெருகெண்ணெய்க்கு மினுக்கெண்ணெய் என்று பொருள் காணப்படுகிறது.

236. இளைத்தப் பிள்ளை தேற மருந்து

அதிமதுரமாறு கழஞ்சதினுடன்
கோரோசனை நாலாங் கழஞ்சும்
யிதமாக விருநாழி யெள்ளெண்ணெ
யினிலெரித்திட்டே வுடம்பில்

வதனமுட னுச்சி தலை வார்த்து நனைத்
திட வினைத்தல் மாறுந் தேறும்
பதருமலிப்படிச் செய்யென்று சர
பேந்திரனுர் பகர்ந்திட்டாரே. (க-அள)

(இ-ன்)

அதிமதுரம்—6 கழஞ்சு
கோரோசனை—4 கழஞ்சு

இவ்விரு சரக்குகளையும் நன்றுகத் தூள்செய்து நல்லெண்ணெய் 2 நாழியில் போட்டெரித்து உடம்பிலும், தலையிலும் தடவிவர இளைத்த பிள்ளை பெருக்கும்.

237. உலர்ந்த பிள்ளை பருக்க மருந்து

நல்லெண்ணெய் பசுவெண்ணெ யாமணக்
கெண்ணெய் பொடுதனற் கொழுந்துத்
துல்லிய வேலிப்பருத்தி கருவேலினிலை
பேய்ப்பாற் சோற்றி ரீர்த்தம்
புல்லிய பொன்னுங்கண்ணி சமூலமிவை
வகைக்கோர் பிடிபுதிதாய்க் கொண்டு
நல்ல சீரக மிளகு வெளிச்சையினற்
பிசின் பலங்கானவில் வகைக்கே. (க-அஅ)

வகை முழுதும் போட்டெரித்துக் கடுகுடன்
வைத்து வராகனிடை வாங்கி
புகலந்தி சந்தியுமே புகட்டுணர்ந்த
பிள்ளையுடல் பூரிப்பாமென்
றகமகிழுஞ் சரபேந்திரர் நுணமுறையை
நெறியுணர்ந்தோராருங் கற்றே
சகமீதிலவரவர்க்குச் சாற்றினுர்
பரம்பரையாய்த் தழைக்கத் தானே. (க-அக)

(இ-ன்)

நல்லெண்ணெய்
பசு வெண்ணெய்

ஆமணக்கெண்ணெய்
பொடுதலைக் கொழுந்து
வேலிப்பருத்தி இலை
கருவேலங் கொழுந்து
பேய்ப்பாற் சோற்றி
பொன்னுங்காணி சமூலம்

இவைகள் வகைக்கோர்பிடி புதிதாக எடுத்து அம்மியிலிட்டரைத்து நற்சீரகம், மிளகு, வெளிச்சைப்பிசின் இவைகள் வகைக்கு ¼ பலம் எடுத்துச் சூரணித்து, எல்லாவற்றையும் எண்ணெய் வகையுடன் குழப்பி அடுப்பின்மேலிட்டுப் பக்குவமாக எரித்து, வடிகட்டாமல் கடுகுடனே வைத்து, ஆறியபின் ஒரு விராகனெடை வீதம் காலையிலும் மாலையிலும் சாப்பிட, மெலிந்த குழந்தை பெருக்கும்.

குறிப்பு :—

நல்லெண்ணெயும், வெண்ணெயும், ஆமணக்கெண்ணெயும், வகைக்கு 1 சேர் எடுத்துக் கொள்ளலாம்.

238. உலர்ந்துப் போகிற பிள்ளைகளுக்கு மருந்து

இலந்தை நுணை நாவன் மாதுளத்தினிளங்
கொழுந்து வகைக்கிடை காசொன்றே
கலந்திடித்து வெந்தயத்தைக் காற்படியிற்
பாதிகொண்டு கனல் வெதுப்பி
யிலந்தனிற் சூரணித்தேலமிலவங்
கப்பத்திரி
யிலங்கிய செண்பக வரும்பு சீரகமிவ்
வகைக்கொரு காசிடையுமிட்டே. (கூகூ)

இட்டிவை யெல்லாந் தண்ணீர் விட்டரைத்து
முன் சொன்ன விளங்கொழுந்தோ
டொட்டிய வெந்தயப் பொடியோடுள்ள மருந்
தனைத்தையு நெய்யுறவேபோட்டுக்
கட்டலையாகக் கலந்து பக்குவமாய்க்
காய்ச்சி வடிகட்டிக் கொண்டே
திட்டமுடனே குழந்தை கட்கோர் பிர
மாணமாய்ச் செலுத்து வீரே. (கூகக)

(இ-ன்)

இலந்தை
நுணை
நாவல்
மாதுளங்கொழுந்து

} இவைகள் வகைக்கு ஒரு காசிடை எடுத்துக் கொள்ளவும்

வெந்தயம் $\frac{1}{8}$ படி எடுத்து, பொன்வறுவலாக வறுத்துச் சூரணம் செய்து இதனுடன்,

ஏலக்காய்
இலவங்கப் பத்திரி
செண்பகப்பூ
சீரகம்

இவை வகைக்கு ஒரு காசிடையு மிடித்துப்போட்டு, நான்கு கொழுந்துகளையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, மேல் சொன்ன வெந்தியப் பொடியோடு கூடிய மருந்துகளின் சூரணத்தையும் சேர்த்து, எல்லாவற்றையும் நெய் (1 சேரில்) குழப்பி அடுப்பின் மேல்வைத்துப் பக்குவமாக எரித்து, வடித்து நன்றாக வடிக்கட்டிக்கொண்டு, தினந்தோறும். குழந்தைகளுக்கு $\frac{1}{2}$ காசெடை வீதம் கொடுத்து வரவும்.

239. குழந்தைகள் வயிற்றிற்றிமிர் புழு, விழக் காச்சல், கிராணி முதலியவை தீரவும் உடம்பு பருக்கவும் நெய் பண்ணும் விதம்

தேவதாரஞ் சரள தேவதாரந்திப்பிலி
திப்பிலி மூலஞ் சிற்றேல மேலம்
பூவதரந் தோடுடன் மாதுள வேர்ப்பட்டை
புதிய பேய் புடல் மிளகோடசமதாகம்
காவேறிப் படரும் பொன் முசுட்டை கோட்டங்
கடுகு ரோகிணியிலவங்கத்தின் பத்திரி
யாவதாமத்திக் திப்பிலி வெட்பாலியரிசி
வசம்பதி விடையுய்ய் கொடுவேலியாமே. (கூஉ)

ஆமிலந்தைப்பட்டை யிலவங்கப்பட்டை யுடனே
யா மஞ்சள் மரமஞ்சலான தெலா மாய்ந்தே
யோமமூடனேரோர் வகைக்கொரோரு காசிடையே
யொன்றுகக் கூட்டியதை கன்றுவின் பால்விட்
டே மதுரமாக வரைத்தே யோர்படி நெய்யுமிரண்டு
படி பாலுடன் விட்டே வடித்துக் கொண்டே
சேமமுடன் பிள்ளை பெலமறிந்தோர் சங்கு புகட்டத்
திமிர் புழுக்காச்சற் கிராணி தீர்ந்திடுமெய் திடமே

(கூகூ)

(இ-ள்)

தேவதாரம்
சரள தேவதாரம்
திப்பிலி
திப்பிலி மூலம்
சிற்றேலம்
பேரேலம்
பூவோடு கூடிய மாதுளையின் வேர்ப்பட்டை
பேப்புடலை
மிளகு
ஓமம்
பொன் முசுட்டை
கோஷ்டம்
கடுகரோகிணி
இலவங்கப் பத்திரி
யானைத்திப்பிலி
வெட்பாலையரிசி
வசம்பு
அதிவிடயம்
கொடிவேலிவேர்
இலந்தைப்பட்டை
லவங்கப்பட்டை
மஞ்சள்
மரமஞ்சள்
ஓமம்

இவைகளை வகைக்கு ஒரு காசிடையெடுத்துப் பசும்பால் விட்டு ஊரவைத்து, பின்பு அவைகளை அம்மியிலிட்டு அரைக்கவும். நன்றாக மசிந்தபின் அந்தக் கல்கத்தை,

நெய்—— 1 படியோடும்
பால்—— 2 படியோடும்

சேர்த்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். குழந்தையின் பலம் அறிந்து இந்நெய்யில், ஒரு சங்கு புகட்டத் திமிர்புழு, காச்சல், கிராணி, இவைகள் தீரும்.

குறிப்பு :—

இம்முறையில் "ஓமம்" இரு தடவை சொல்லப்பட்டிருப்பதால், ஒரு இடத்தில் ஓமத்தையும் மற்றொரு இடத்தில் குராசானி ஓமத்தையும் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

---

22. குழந்தைகள் வயிற்றுக் கிருமிகளுக்கு மருந்து

240. பிள்ளைகளுக்குக் கீரிப்புழு விழ மருந்து

சீரகம் வெள்ளுள்ளியுமே சேர்த்தரைத்துக்
கொடுத்திடு கஞ்சியிற் கொடுக்க
நீரினதி தாக மெழினெருப்பி னெழு
புகை படர்மண்ணி னீயுமிட்டு
கூரிய பச்சைப்பாலி சீவின பாக்
குடனரைத்துக் குறுணித் தண்ணீர்
சீருடன் விட்டிரு சேரதாய்க் காச்சி
யேசிறுகச் செலுத்துள்ளுக்கே. (கூசுஉ)

செலுத்து மளவிற் கீரிப்புழுக்களிழுக்
குடலிலந்து செத்துந்தானே
மலத்தோடும் வீழுமெனவே வாகடநூ லு
ரைத்தெல்லா மனத்தினெண்ணிக்

கலிக்கடலின் கட்டினின முக்காத
கொழுந்திடுங் காவிரிச் சோணாட்டின்
றலத்தை முழுதரசாளுஞ் சரபேந்திர
மகி பாலர் சாற்றினரே. (கடவுள்)

(a)

(இ-ள்)

சீரகம் 1 வராகனிடை
வெள்ளைப்பூண்டு 1 வராகனிடை

இவை இரண்டையும் கொதி கஞ்சியிலரைத்துக் கொடுக்கவும்.

(b) தண்ணீர் தாக மேற்பட்டால், புகைபடாதமண், சீவினபாக்கு, பச்சைப்பாகு இம்மூன்றையும் சமமெடுத்து, நறுக்கிப் போட்டு, குறுணித் தண்ணீர் விட்டு 2 சேராகக் காய்ச்சிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கவும். கீரிப்புழுக்களெல்லாம் குடலிலேயே செத்து மலத்துடனே வெளிப்படும்.

241. கீரி நோய்க்கு

இலுப்பினிலை நறுக்கி வசம்பினையுமுள்ளி
யினையுமிட்டுளரிறங்கச் செய்து
தலைப்புறத்தினும் பிழியச் சாரிபோங்
கீரி நோய் தானே யென்று
நிலத்தினின் மன்னுயிர்க்கிதமாய் நிகழ்த்து சர
பேந்திரரிந் நெறியாயுணரல்
யிலக்கணச் செந்தமிழினி விட்டெடுத்துரைமின்
னெனப்புலவர்க் கியம்பினரே. (கடவுள்)

(இ-ள்)

இலுப்பையிலை நறுக்கி, வெள்ளைப்பூண்டும், வசம்பும் கூடச்சேர்த்து இடித்துச் சாறுபிழிந்து, உள்ளுக்குங்கொடுத்து, தலையிலும் பிழிய கீரிப்பூச்சியினாலுண்டான நோய் தீரும்.

242. கீரிப்பூச்சி நோய்க்கு

குப்பைமேனி யினிலை யுத்தாமணியி
னிலை நீரைக்கொடு பிசைந்தே
கொப்புள், தாயார் தலையுங் குழந்தை
தலையுஞ் சொரியக் குளிதோடம் போம்

இப்படிப் பிள்ளைப் பிணிக்கு மிம் மருந்
தை வரைத்திடு கிரியெனும் நோயு
மெப்படியுந் தீருமெனச் சர
பேந்திர மகராசரியம்பினரே. (நூகூள)

(இ-ள்)

குப்பை மேனி இலை.
உத்தாமணி இலை.

இவ்விரண்டையும் தண்ணீர் விட்டுப் பிசைந்து குழந்தை தலையிலும், தாயார் தலையிலும் பூசக் குளிதோஷம் போகும். குழந்தைகளுக்கு வரும் கிரி நோயும் தீரும்.

குறிப்பு:— 83-ம் பக்கத்திலுள்ள 104 மருந்து கெ. பார்க்கவும்.

243. சிறுபிள்ளைகளின் வயிற்று நாக்கப் பூச்சிக்கு எண்ணெய்

நெஞ்சு வற்றி மார்பு சந்து வற்றி வயி
றும் பெருத்து நொந்தப் பிள்ளைக்
கஞ்சாமற் சாறணை வேளையிலையும்
வகைக்கோர் பிடியாய் நறுக்கி
மிஞ்சிய கள்ளிப் பாலும் விட்டழக்கா
மணக்கெண்ணெய் விட்டு நாழி
மஞ்சாதியே கொடுத்து வரும் போது
மிளகு மஞ்சள் வகைக் கோர் காசே. (நூக்அ)

வகைக்கொரு காசிடை பொடித்திட்டே கொதித்து
வரவிறக்கி வைத்தாழாக்கு
நகைப்புடனே கொடுக்கவுமே நன்றாக
வயிறு விடும் நாக்கப் பூச்சி
யுருத்திடுங் கிரிப்புழுவினுடன்றிமிரிப்
புழுவு விழுமுடன் கை கண்டே
சகத்தினி யாளு மகிப சரபேந்திரரா
சவாணையாய்ச் சாற்றினரே. (நூகூசஅ)

(இ-ள்)

நெஞ்சு வற்றி, மார் சந்து வற்றி, வயிறு பெருத்து வலியுடனிருந்தால்,

சாறணையிலையும்

வேளை இலையும் வகைக்கு ஒவ்வோர் பிடி நருக்கி, 1 ஆழாக்குக்கள்ளிப் பாலும்விட்டு, 1 நாழி ஆமணக்கெண்ணெய் கூட்டிக் கொதித்து வரும்போது,

மஞ்சள் 1 காசெடை
மிளகு 1 காசெடை

பொடி செய்து போட்டு நன்றாகக் கொதிகண்டு இறக்கி, ஒரு ஆழாக்குச் சாப்பிட வயிறு கழியும்.

நாக்குப்பூச்சி, கிரிப்பூச்சி, திமிர் புழு யாவும் நீரும். கை கண்டது.

---

23. குழந்தைகள் கரப்பானுக்கும், கிரந்திக்கும் மருந்துகள்

244. கரப்பானுக்கு எண்ணெய்

ஈரவெங்காயச் சாறேர் படி விளக்கெண்
ணெயும் படி யொன்றிரண்டுங் கூட்டிச்
சீரி தாகிய கலசத்தினிலூற்றிச்
சின்னியிலை சிவனார் வேம்பு
சாறணை தூதுவளை கருநொச்சில்
மணித்தக்காளி தன்னேடே கற்
பூர வல்லி சிறுக்கீரை சேம்பு செருப்
படி பருத்தி பொன்னுங்கண்ணி. (சார)

கண்ணி நீர் முள்ளியுஞ் சங்கங் குப்பி
விருகு சங்கு கண்டங் கத்திரித்
தன்னிலை யோடே யிடித்துச் சாறு
பிழிந்தே யந்தச் சாறேர் நாழி
நண்ணுமதி மதுரஞ் சீரகங் கருஞ்
சீரகங் கடுக்காய் நல்ல யேலம்
உண்ணு மிளகுடன் பறங்கிப் பட்டை
சதகுப்பை மரமஞ்சள் ஓமம். (சாக)

ஓமந்திப்பிலி யிதெலா மொரு வகைக்
கீர்காசிடை யிட்டுரலிற்றூள் செய்
தாமணக் கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி
வடிக்கட்டி யெடுத்ததனை வைத்தே
நேம மூடனே கரப்பான் ரோகிகளுக்
கோர் கறண்டி நேரமொன்றுக்
காமின்னே யில்லாருக் கந்த வெண்
ணெய்காசிடை யொன்றதிற் கலந்தே. (சாஉ)

கலந்திரண்டுமே கலந்துகொடு விரண்டு
மூன்று விசை கழியும் பத்தியம்
உலர்ந்த பாசிப் பயறு மரிசியுங்
காய்ச்சிக் கொடுத்தாலுடன் கரப்பான்
ருலைந்திடு மிவ்வெண்ணெய் வடித்துணும்
போது பரங்கிப்பட்டைக் சூரணித்தோர்
கலந்தனி லிட்டேயதிலே வடித்துக்
கொள் சரப மன்னர் கருத்திதாமே. (சாஙு)

(இ-ள்)

ஈரவெங்காயச் சாறு 1 படி
ஆமணக்கெண்ணெய் 1 படி

சின்னி இலை
சிவனார் வேம்பு
சாறணை
தூது வேளை
கருநொச்சில்
மணித்தக்காளி
கற்பூரவல்லி
சிறுக்கீரை
சேம்பு
செருப்படி
பருத்தி
பொன்னாங்காணி
நீர் முள்ளி
சங்கங்குப்பி இலை
சங்கன் இலை
வெருகு (மெருகங் கிழங்கு)
கண்டங் கத்திரி இலை

இவைகளைக் கல்லுரலி லிட்டு நன்றாக இடித்துப் பிழிந்த சாறு ஒரு நாழி

இவைகளுடன்,

கல்கத்திற்கு :—

அதிமதுரம்
சீரகம்
கருஞ்சீரகம்
கடுக்காய்
ஏலம்
மிளகு
பறங்கிப்பட்டை
சதகுப்பை
மரமஞ்சள்
ஓமம்
திப்பிலி

இவைகள் வகைக்கு இரண்டு காசிடை யெடுத்து, பறங்கிப்பட்டையைத்தவிர மற்றசரக்குகளை உரலிலிட்டு இடித்துத் தூள் செய்து, மேல்சொன்னச் சாறு கூட்டிய ஆமணக்கெண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிக் கொண்டு, பறங்கிப்பட்டையைச் சூரணித்து ஒரு பாத்திரத்திலிட்டு அதில் எண்ணெயை வடித்துக் கொள்ளவும். கரப்பான் ரோகிகளுக்கு வேளைக்கு ஒரு கரண்டி வீதமும், நோயில்லாதவர்களுக்கு ஒரு கரண்டி எண்ணெயை ஒரு காசிடை வெண்ணெயிற் கலந்து, இரண்டுமாகக்கொடுக்கவும். 2 அல்லது 3 தடவை வயிறு கழியும்.

இதற்குப் பத்தியம் :—

பாசிப்பயறும், அரிசியும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். கரப்பான் ஒழியும்.

குறிப்பு :—

91. நெ. சுவடியில் கல்க சரக்குகளில் பூதக்கரப்பான் பட்டையையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

245. கரப்பானுக்கு

கருஞ்சீரகம் பூதக்கரப்பான் பற்
பாடகம் வெண்காயம் காயம்
பரிந்த வசம்புடன் கௌரி பாடாணஞ்
சடைச்சி கான்படரு மொச்சை
சொரிந்து கொளச் செயுஞ்சிறு காஞ்சோறி
மிளகரணை பொன் முசுட்டை வேரும்
பெருங் குரும்பை புனலி சத்திச் சாறணை
நன்னரி வேர் பெருமருந்தே (சாசு)

மருந்தினங் கேள் சிறுகுறட்டை கொடு
வேலிவேர் சிற்றவரைக் கிழங்கும்
இருந்த குப்பை மேனியின் வேர் இவையனைத்து
மே யரைத்து கரைத்து நெய் செய்
அருந்தி நக்கியுண்டிடவு மலது விளக்
கெண்ணெயிற் செய்தவ் வாறுண்ணென்
றிருங் குடனற் சரபேந்திர ருரைத்த
படியுணக் கரப்பா னுடனே போமே (சாரு)

(இ-ன்)

கருஞ்சீரகம்
பூதக்கரப்பான்பட்டை
பற்பாடகம்
வெங்காயம்
பெருங்காயம்
வசம்பு
கௌரிபாஷாணம் (சுத்திசெய்தது)
சடைச்சி
காட்டு மொச்சை
சிறு காஞ்சோறி
மிளகரணை வேர்
பொன் முசுட்டை வேர்
பெருங்குரும்பை
புனலி
சத்திச்சாறணை
நன்னரிவேர்

பெருமருந்து
சிறுகுறட்டை
கொடிவேலிவேர்
சிற்றவரைக்கிழங்கு
குப்பைமேனிவேர்

இவையாவற்றையும் வகைக்கு ஒரு தோலா வீதம் எடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, நெய் ஒரு படியுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக வடிக்கவும் அல்லது விளக்கெண்ணெயில் கலந்து எரித்து இறக்கவும்.

இதைத் தினந்தோறும் 1 காசிடைவீதம் பாலில் கலந்து சாப்பிட்டுவரக் கரப்பான் நோய் தீரும்.

246. கரப்பானுக்கு

காட்டு மல்லிகை யிலிலையை யிரண்டு
பிடி கொண்டு வந்து கலந்திரங்க
மீட்டா னெல்லரிசியோடு மிக விடித்துப்
புடைத்தெடுத்து விரைந்து மெய்வெள்
ளாட்டுப் பாலினிற் களிக்கிண்டந்த
வாவியை முகத்திலாகச் செய் பின்
கூட்டி வெல்லத்துடனுணவுங் கொடிய
கரப்பானுடனே குலைந்து போமே (சாகூ)

(இ-ன்)

காட்டுமல்லிகை இலை--2 பிடி, கொண்டுவந்து இரங்க மீட்டான் நெல்லரிசியோடு நன்றாகச் சேர்த்து இடித்துப் புடைத்து அரைத்து, வெள்ளாட்டுப்பால் விட்டுக் களிகிண்டி அந்த ஆவியைக் கரப்பான் குழந்தையின் முகத்தில் பிடித்த பின் இதை வெல்லத்துடன் கூட்டிச் சாப்பிடச் செய்யவும். பயங்கரமான கரப்பான் ரோகம் தீரும்.

247. வாதக் கரப்பானுக்கு

வாதக் கரப்பானகலும் வகை கருஞ்
சீரக மேலம் வண் கிரும்பு
பூதகரப்பான் வசம்பு புகலும் வகைக்
கொரு பலந்தான் போட்ட பின்பு

மீதுவசு வாசு குகை மேன்வீறு
மழுக்கிராவுமே யொக்கக் கொண்
டே தேனிற் குழைத்துணவு மினஞ் சொல்வோ
மெனச் சரபேந்திரர் சொன்னரே. (சாள)

(இ-ன்)

கருஞ்சீரகம்
ஏலக்காய்
இரும்பு
பூதக்கரப்பான்பட்டை
வசம்பு
ஜாதிபத்திரி
கூகைநீர்
அமுக்குராக்கிழங்கு

இவைகள் வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டு, இடித்து ஒரு வெறுகடி சூரணத்தைத் தேனில் குழைத்துத் தினம் 3 வேளை சாப்பிடவும். வாதக்கரப்பான் தீரும்.

248. வாதக் கரப்பானுக்கு

இனப்படி கஞ்சாங்கோரை குழி மிட்
டான் செருப்படி புங்கினிய பட்டை
தனித்தனியே யிடித்திறுத்துச் சாறுவ
கைக் கோர் நாழி தானுங்கூட்டி
யினிப்பாலு மொரு நாழி யிதிலூற
வொரு நாளிட்டிரு கூருக்கி
நினைத்தொரு பங்கினை நெய்யிலே வேக
வைத்தந்த நெய்யிற் கொள்ளே (சாஅ)

கொள்ளவு மெண்ணெயிலொன்றைக் கொதித்திட
வேகீச் செய்து கொண்டுண்டெண்ணெய்
மெள்ள வுடம்பினிற் பூச விடும் வாதக்
கரப்பான் மேன் முறைன்மின்கயேங்!

உள்ளு கடல் குழுலகீர் ! என்று சர
பேந்திரனர் சொன்னது யாவுங்
கள்ள மனக்கதங் காற்று கற்ற வ
ருற்ற வாக்கிது கை காட்டுவாரே. (சாசு)

(இ-ள்)

கஞ்சாங் கோரை
தண்ணீர் விட்டான் நெழுங்கு (தண்ணீர் விட்டான்)
செருப்படி
புங்கம்பட்டை

இவைகளைத் தனித்தனியே இடித்துப் பிழிந்த சாறு வகைக்கு ஒரு படியும் * பசுவின்பால்—ஒரு படியும் சேர்த்து ஒரு நாள் ஆனபின் அதை (பால் கலந்த சாற்றை) இரண்டு கூறுப் பிரித்து ஒரு பங்கை நெய்யில் (1 படி) பக்குவமாகக் காய்ச்சி வடித்து அதை உள்ளுக்குச் சாபபிடவும்.

அதிலுள்ள இரண்டாவது பங்கை, நல்லெண்ணெயுடன் (1 படி) கலந்து அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிப் பக்குவ மாக வடித்து உடம்பில் தேய்க்கவும். வாதக்கரப்பான் நீரும்.

* 91. நெ. சுவடியில் பசுவின்பால் 4 படி எனக் காணப்படுகிறது.

249. வாதக் கரப்பானுக்கு

குருந்து பெருமருந்து சிறுகுறிஞ்சி வேர்
தூதுவிளைக் கொழுத்த வேரும்
முருங்கை புலிதுடக்கி பாலொடிவி சிறு
கத்திரி பொன் முசுட்டை வேரும்
பரிந்துணு மாதொண்டை மிளகறணி சங்கம்
வேர் கருணைப் பெருங் கிழங்கும்
மருந்தெனப் பீனறி செங்கத்தாரியெ
ருக்க வுரியும் வனமரை நன்னரி (சாயி)

நன்றுக விவையனைத்தும் நறுக்கி யுள்ளி
வசம்புடனே நல்லெள் ளெண்ணெய்
குன்றுக விளக் கெண்ணெய் வேப்பெண்ணெய்
யுங் குழப்பிக் கூட்டி மைந்தன்
தன்றலை மார்பக மட்டுந் தடவி வீக்க
மு மிறங்குந்தனையும் வார்க்கத்
துன்று கரப்பான் வாதந் தொலையுமெனச்
சரபேந்திரர் சொன்னவாறே (ஃகக)

(இ-ள்)

குருந்து
பெருமருந்து
கிறுகுறிஞ்சிவேர்
தூதுவேளையின் பருத்தவேர்
மூருங்கை
புலிதுடக்கி (இண்டு)
கொடிப்பாலை
சிறுகத்திரி
பொன்முசுட்டைவேர்
ஆதொண்டை
மிளகரணை
சங்கன்வேர்
கருணைக்கிழங்கு
பீநாறிப்பட்டை
செங்கதாரிவேர்
எருக்குவேர்
அவுரிவேர்
நன்னாரிவேர்
வெள்ளைப்பூண்டு
வசம்பு

இச்சரக்குகளை ஒரே எடையாக (1 தோலா) எடுத்து இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, எல்லாவற்றையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து,

நல்லெண்ணெய்
விளக்கெண்ணெய்
வேப்பெண்ணெய்
} இம் மூன்றும் சேர்ந்து (5 சேர்)

விட்டுப்பக்குவமாக எரித்து அடுப்பினின்று இறக்கவும். இத்தைலத்தை கரப்பானுள்ள குழந்தையின் தலை, மார்பு முதலிய இடங்களில் தடவிவர, வாதக்கரப்பான் அறவே ஒழியும்.

250. வெடிகரப்பானுக்கு

கருஞ்சூரை நிலவாகை சிவனார் வேம்பு
காட்டு மல்லிகையிலை மிளகறணைவேரும்
கிரந்தி நாயகம் கழலின் கொடி வேரெட்டுங்
கிளைந்து களைந்தெடுத்து வெயிற் கிடத்திவைத்தே
பரிந்திடித்து வத்திரகாயமு நன்றுகப்
பண்ணியதைக்கொண்டு வெருகடிப்பிரமாணம்
எரிந்து வருமிள வெண்ணீர் தன்னிலே தா
னிருபோதுணபத்திய நாளீரைந்தாமே. (சகஉ)

நாளொரு பத்தும் மறு பத்தியம் பிடிக்கி
னலமானவுப்பு சற்றே நல்கக் கொள்வாய்
மீளவுந்தானிளங்கீரை முருங்கைக்கீரை
மேற்படி பிஞ்சுங் கூட்டிக்கொள்ளலாகுங்
கொளசெய் புளியாகாது பத்து நாளுங்
கூட்டாதே கைக்கண்ட குணங்காணென்ன
வாளேந்து கரசரபப்பூபர் சொன்ன
வாகட நூன்முறைமையிது மகிமையாமே. (சகங)

(இ-ள்)

* கருஞ்சூரை
நிலவாகை
சிவனார் வேம்பு
காட்டுமல்லிகை
மிளகறணை வேர்
கிரந்தி நாயகம்
கழல் கொடி வேர்

இச்சரக்குகளின் வேரை வெயிலில் நன்றாக உலர்த்தி, உலர்ந்தபின் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து அத்தூளை ஒரு வெருகடிப் பிரமாணம் இளஞ் சூடான வென்

* சூரை—இது காரை இனத்தைச் சேர்ந்தது. காகோலி என்று ஸம்ஸ்க்ருதத்தில் வழங்குவர்.

னீருடன் தினமொன்றுக்கு இருவேளை வீதம் சாப்பிடவும். 10 நாளைக்கு மேடி மருந்தைப் பத்தியமாகச் சாப்பிட்டு மறுபடியும் பத்து நாள் மறு பத்தியம் பிடிக்கவும். முதல் 10 நாளும் இளங்கீரை முருங்கைப்பிஞ்சு இவைகளைக் கூட்டி புளியை விலக்கவும். மிக்க நன்மை தரக்கூடியது.

குறிப்பு:—

செய்யுளில் எட்டுவகை வேர்களையும் எடுத்துக்கொள்க என்று சொன்னபோதிலும் 7 வகை வேர்களைமாத்திரமே சொல்லப்பட்டிருப்பதையும் கவனிக்க.

251. பல கிரந்திக்கும், கரப்பானுக்கும் எண்ணெய்

சத்திச் சாறடைக் கிழங்கு சிற்றவரைக்
கிழங்கு சங்கதாரி வேரும்
இத்துடன் வேலிப் பருத்தியின் வேரப்
பைக் கிழங்குமிவை யோரொன்றுக்
கெத்தினை யொப்பெலுமிச்சங் காயளவ
தரைத்துள்ளி யிதில் வசம்பும்
வைத்திடு கம்பிப் பிசின் கார்போகரிசி
கருஞ்சீராம் வகையும் வைத்தே (சகச)

வகைக்கடுகு ரோகிணியும் பூதக்கரப்
பானுடன் மூன் வகையும் வைத்தே
புகன் மருந்துக்கோரொரு காசிடையரைத்துக்
கரைத்ததனை பொருந்தக் கூட்டி
யிகழுவின் மனத்தக்காளி யிரைஞ்சோ
டுடன் சிற்றுமணக்கினெண்ணெய்
பதிர் நாழி விட்டிதெலாம் பதமாகக்
காய்ந்து வரும் பாத்திரத்தே (சகரு)

பார்த்தெடுத்துச் சிலந்திப் பூச்சியுமுழக்குப்
போட்டிதெல்லாம் பதத்திறுத்தே
வார்த்தொரு காசிடையளவு நக்கியுண்ட
பின்பதனை வகையாய்ப் பூசிற்

பூத்த பலகிரந்தி பல கரப்பானும்
போமெனவே புலவர் மெச்சுஞ்
சீர்த்த சரபேந்திரனுர் செய் முறையென்
ருலெவர்க்குந்திட முண்டாமே (சகசு)

(இ-ள்)

சத்திச் சாறணிக்கிழங்கு
சிற்றவரைக் கிழங்கு
செங்கதாரி வேர்
வேலிப்பருத்தி வேர்
அப்பக் கோவைக் கிழங்கு

இவைகள் வகைக்கு ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து, உள்ளிப்பூண்டு, வசம்பு, கம்பிப்பிசின், கார்போக அரிசி, கருஞ் சீரகம், கடுகரோகிணி, பூதக்கரப்பான் பட்டை, இவைகள் வகைக்கு ஒரு காசிடை எடுத்து நன்றுகத் தண்ணீர் விட்டு அரைத்து, மணத்தக்காளிக்காய் 10 காசிடையும் கூட்டி, சிற்றுமணக்கெண்ணெய் ஒரு நாழி விட்டு, இவற்றை எல்லா வற்றையும் ஒன்று கூட்டி அடுப்பின் மேலேற்றிப் பதமாகும் போது சிலந்திப்பூச்சி 1 உழக்குப்போட்டு இறக்கிக்கொண்டு வடிக்கவும். இதில் ஒரு காசிடை உள்ளுக்குச்சாப்பிட்டு, மேலுக் கும்பூச பலவித கிரந்தி, கரப்பான், முதலியவை தீரும்.

252. கரப்பான் கிரந்திக்கு

இண்டிலே வேலிப்பருத்தியிலே முதலியாவு
நறுந்தாளியின் வேர் வீழி
மண்டிலேயு மோரிதழ் தாமரைப் பூண்டு
சமூல மிந்தவகை வகைக் கோர்
கொண்டொரு கைபிடி யிதெலாங் கொண்
டு முக்குநெய்யுட னெள்நெயு முழக்
கேரண்ட மென்னுமணக் கெண்ணெயுழக்
கிந்த மூன்றின் மருந்தான தெல்லாம் (சகஎ)

மருந்தினை யெல்லாம் நருக்கிப் போட்டெரித்
து மேற்பதமாய் வருதல் கண்டே
யிருந்த கார் போகரிசி பொன் மெழுகும்
பொடித் தெடுத்தேயிதின் மேற்றூவிப்

பரிந்தார வைத்துள்ளுக்குங் கொடுத்து
மே பூசிற் படர் கரப்பான்
கிரந்தி நோய் தீருமெனக் கிளர் சர
பேந்திர மகிபர் கிளர்த்தினரே (சகஅ)

(பாட பேதம்)

விழுவிலை யோரிதழ்த் தாமரை வேலிப்
பருத்தி யிந்த விதஞ் சமூலம்
குழைவான கறுத்தாளி வேரிண்டி
னிலைவகைக் கோர் பிடியுங் கொண்டே
கழுவிய நல்லெண்ணெயு முக்காமணக் கெண்
ணெய் யுழுழக்குக் கறவையா நெய்
யுழக்கி தனிலிருந்த மருந்தினை நருக்கி
யுடனெடுத்துப் போட்டெரித்தே (சகக)

எரித்ததனைப் பதமாக வருங்காற் பொன்
மெழுகு பொடித்திதிற் கார்போக
வரிசியுங் கூட்டிப் பொடித்து மென் பொடியா
கத்தூ வி யாறவைத்துளக்
குரிசையுடன் கொடுத்து மேலும் பூசிற்
கரப்பான் மேலுள கிரந்தி
தரியாது தீருமெனச் சரபேந்திர
மகராசர் சாற்றினரே (சஉய)

(இ-ள்)

இண்டிலை
வேலிப்பருத்தியிலை
நறுதாளியின் வேர்
வீழி இலை
ஓரிதழ் தாமரை சமூலம்

இவைகள் வகைக்கு ஒருபிடி எடுத்து நன்றாக நசுக்கி

இதனுடன்

பசுநெய்——ஒரு உழக்கு
நல்லெண்ணெய்——ஒரு உழக்கு
ஆமணக்கெண்ணெய்——ஒரு உழக்கு

இம்மூன்றும் கூடவிட்டு அடுப்பிலிட்டுக் காய்ச்சும்போது

கார்போகரிசி
* பொன்மெழுகு

இவ்விரண்டையும் பொடி செய்து (வகைக்கு ½ பலம்) எண்ணெய் வகைகளுடன் குழப்பிப் பதத்தில் வடித்து இறக்கிக்கொள்ளவும்.

ஆறியபின் இதை மேலுக்குத் தடவி, உள்ளுக்கும் கொடுக்கப் படர் கரப்பான், கிரந்தி இவைகள் தீரும்.

குறிப்பு :—

* மெழுகைத் தயிலத்தில் சேர்க்காமல், தனியாகச் சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு அதன்மேல் சூடான தயிலத்தை வடித்தால், மெழுகு உருகி தயிலத்துடன் ஒன்று கலந்துவிடும். இவ்வாறுகவும் செய்துகொள்ளலாம்.

253. கருங்கிரந்திக்கும் கரப்பானுக்கும் எண்ணெய்

கருங்கிரந்திக் கரப்பானுக்குக் கருநொச்சி
யிலை யெண்ணெய் கலந்தரைத்தே
வொரு நாரத்தங்காய் போலொரு விழுதும்
வெள்ளைப் பூண்டுடன் வசம்பும்
கருஞ்சீரகங் கடுக்காய் கலந்தோர்படி
விளக்கெண்ணெய் கலந்தரைத்தே
பரிந்து கரைத்தொரு மூன்று பகல் வெயிலிட்
டே நாலாம் பகலெடுத்தே (சஉக)

எடுவெரித்து பதத்தில் வடித்தே யொரு
காசத்தினை யுள்ளிறங் கத்தானே
கொடு தொண்டைக் கட்டிருவல் கருங்
கிரந்திக் கரப்பானோடு கொடு நேராவும்

விடுமென்று சரபேந்திர வேந்தர் சொல்லு
முறையிதனை விரும்பிக் கொள்வார்
படிமிசையிலடைந்தவர்க்கும் படிப்பிப்பார்
பரம்பரையாய் படருந்தானே (சஉஉ)

(இ-ள்)

கருநொச்சி இலை அரைத்த விழுது—ஒரு நார்த்தங் காயளவு

வெள்ளைப்பூண்டு
வசம்பு
கருஞ்சீரகம்
கடுக்காய்

இவைகளையும் வகைக்கு (1 பலம்) நன்றாக அரைத்து ஆமணக்கெண்ணெய் ஒரு படியில் கலந்து குழப்பி, மூன்று நாளைக்கு வெயிலில் வைக்கவும். நாலாம் நாள் பகலில் எடுத்து அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்த எண்ணெயில் காசெடை உள்ளுக்குக் கொடுத்தால் கரப்பான், கிரந்தி, இவை தீரும்.

254. கரப்பான் கிரந்திக்கு

விழுவி வேருமிலையுங் கெர்ட்டைப் பாசி
யினிலையும் விரைந்து கொண்டே
பழகிய சங்கிலை கையாந்த கரையிலை
செருப்படியும் பாங்கா யுள்ளி
புழுவில் வசம்புங் கூட்டி நறுக்கி விளக்
கெண்ணெயிலே போட்டெரித்து
மெழுகு பதமாயிறக்கி மென் பொடி குங்
கிலிய மிட்டு மேற்ற ராவி. (சஉங)

விட்டிதை வைத்திரண்டு காசிடையிட்டுக்
கொடுத்திடவும் வித மூன்றுக்க
கூட்டுரை செய்கரப்பானதும் விட்டுவிடு
மென்றழகாய் கா ணுந்தஞ்சைப்

பட்டிணை மற்றும் பவனி மத்த கயத்
தவிதாமேற் பவளக்கால் சேர்த்
திட்டிடும் வெண்குடை நிழலுற்றவினிது வருஞ்
சரபேந்திரரிசைந்தார் தாமே. (சஉச)

(பாட பேதம்)

சங்கிலி கையாந்தகரையிலி விழுவி
வேரிலைகள் சரியதான
பங்கு கொட்டைப்பாசி செருப்படியிலியுஞ்
சமங் கூட்டிப் பருத்த வெள்ளை
வெங்காயம் வசம்பினையுமே கூட்டி
நறுக்கி விளக்கெண்ணெய் விட்டே
பொங்க வெரித்தே யிறக்கிக் குங்கிலியப்
பொடி போட்டப் புறந்துளாவே. (சஉரு)

துளாவூற வைத்திரு காசிடை கொடுக்க
முக்கரப்பான் றெலிந்து போகுங்
கிளையாது மேல் வந்து கிட்டாதென்
றே சரபேந்திரர் கிளர்த்தும்
வளமொழியே நமக்கிதமாகிய மருந்தென்
றே யளகை மாந்தரக்கண
கிளைஞர் முதலோரெவருங் கிடைத்து கை
கண்டதெனக் கிளர்த்துவாரே. (சஉசூ)

(இ-ள்)

விழுதி வேர்
விழுதி இலி
கொட்டைப்பாசி இலி
சங்கன் இலி
கையாந்தகரை இலி
செருப்படி
வெள்ளைப் பூண்டு
வசம்பு

இவைகளை நன்றாக (வகைக்கு 1 வராகனெடை) நறுக்கி ஆமணக்கெண்ணெய் 1 சேர்விட்டு அடுப்பின் மேல் வைத் தெரித்து மெழுகுபதமாக ஆனபின், இறக்கிச் சூடாறுமுன் குங்கிலியத்தைத் தூள் செய்து போட்டுக் குழப்பிக்கொண்டு இதில் 2 காசிடை அளவு கொடுக்கவும். இவ்வாறு 3 நாள் கொடுக்கவும். கரப்பான் தீரும். மறுபடியும் கிளைக்காது.

முற்றிற்று

பாகுடன் கலந்துப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும். ஆறிய பின் சுத்தமான தேன் 1 படி விட்டுக் குழப்பிக்கொள்ளவும்,

தினம் ஒரு வேளை ஒரு சிறு கரண்டியளவு உட்கொள்ள

அரோசகம், பாண்டு, இருமல், வீக்கம், செறியாமை, ஈளை, அருவருப்பு முதலிய ரோகங்கள் தீரும்.

இதற்குப் பத்தியம் :—

புளிப்பு, கைப்பு, உப்புப் பதார்த்தங்களைத் தள்ளவும்.

---

5 பாண்டு முதலானதற்குச் 'சிஞ்சாதி லேகியம்.'

இலங்குபுளி யிலைநூறு பலமுமேகொண்
டித்துடனே துருப்பிடித்த விரும்புதானும்
பலமன்ப தாகுந்தண் ணீர்நாலைந்து
படிகூட விட்டுநன்றாய்க் கடாயங்காய்ச்சுக்
கலங்காம லிரண்டுபடி யாயிறக்கிக்
கரைத்திடைம்ப தாம்பலநற் பழவெல்லத்தை
நலமான விஞ்சிமேற் புரணிசீக்கி
நறுக்கியது பதினறு பலமுஞ்சேரே. (கூ)

சேர்த்திடுமுன் கடாயத்திற் பதனமாகச்
சீருடனே பாகதுபோற் காய்ச்சிக்கொண்டு
சீரகமு மிளகுகருஞ் சீரகஞ்சேர்
திப்பிலியுஞ் சுக்குடனே யாய்ந்ததின்மே
லோர்வகைக்கு ரெண்டுபலம் பொடிசெய்நன்றாய்
உண்மையுட னேவடியிட் டயமண்டரைஞ்
சார்புடனே வகைக்கிரண்டு பலம்பொடித்துத்
தனித்தனியே முன்பாகிற் கலந்துகொள்ளே. (ம)

கலந்திடுவாய் அரைப்படிதேன் விட்டுக்கிண்டி
கண்டதுசிஞ்சாதி லேகியமதாகும்
நலந்தருமே யிருவேளை யுங்கொடுப்பாய்
நட்பான புளியுப்புக் கடுகோடெண்ணெய்ப்
பலவாயுக் கரியிறைச்சி நீக்கிப்பின்பு
பத்தியமாய்த் தானிருக்கிற் பண்பில்லாத
துலையாத பாண்டுகா மாலைதீருஞ்
சுந்தரனுஞ் சரபேந்திரன் சொன்னவாறே. (கக)

(இ-ள்)

புளியிலை—100 பலமும், துருப்பிடித்த இரும்பு—50 பலமும் எடுத்து, தண்ணீர் 20 படி விட்டு அடுப்பின்மேலேற்றி 2 படி கஷாயமாகும்வரைச் சுண்டக் காய்ச்சவும்.

பழய வெல்லம் 50 பலத்தைக் கஷாயத்துடனே கரைத்து, மேல்புரணி நீக்கிய இஞ்சி 16 பலம் கூடப்போட்டு, மறுபடியும் அடுப்பின்மேலேற்றிப் பாகாக்கிக்கொள்ளவும்.

சீரகம்	மிளகு
கருஞ்சீரகம்	திப்பிலி
சுக்கு	

இவைகளை வகைக்கு 2 பலம் எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு,

சுத்திசெய்த இரும்புத் தூள் 1 பலமும்
,, மண்டூரத்தூள் 1 பலமும் கலந்து,

பாகில் போட்டுக் கிளறவும். லேகிய பதத்திலிறக்கி, ஆறியபின் சுத்தமான தேன் ½ படி விட்டுக் குழப்பிக் கொள்ளவும்.

இந்த லேகியத்தைத் தினம் 2 வேளை (காலை, மாலை)களிலும் கொடுக்கப் பாண்டு, காமாலை முதலிய ரோகங்கள் தீரும்.

இதற்குப் பத்தியம் :—

புளி, உப்பு, கடுகு, நல்லெண்ணெய், வாயு பதார்த்தங்கள், இறைச்சி முதலியவைகளை நீக்கவும்.

குறிப்பு:—

இரும்பைச் சுத்தி செய்யும் முறை: முதல் நாள் நல்லெண்ணெயில் ஊறவைத்து, மறுநாள் வறுக்கவும்.

(2) மண்டூரம்:— பசு மூத்திரத்தில் ஊறவைத்துக் கழுவிவிடவும்.

---

6. பாண்டு, மகோதரம் முதலானதற்குச் "சிஞ்சாதி லேகியம்"

புளியிலைத்தூக் கொன்றுகிட்டங் தூக்கொன்றுங்கேள்
புதியமோர் படி பத்துக் கடுக்காய்நூறு
வளமுள்ள காடியுமைங் குறுணியாகும்
வகையெல்லாஞ் சேர்த்துசட்ட மாய்த்துவைத்து
உளமகிழ வேயிரும்புத் தூக்கொன்றும்போட்
டூரவைத்தே காய்ச்சிப்பின் னிறுத்துக்கொண்ட
தெளிவுதனிற் பனைவெல்ல மூன்றரைச்சேர்
சேர்த்திடவே நன்றுகக் கரைத்திடாயே. (ம2)

கரைத்ததனைக் குழம்பாகக் காய்ச்சிப்பாகு
கண்டபதந் தனிலேல மிளகுசுக்கோ
டுரைத்திடும் பூலாங்கிழங்கு தான்றிக்காயிந்
துப்புடன் சாதிக்காய் நெல்லிமுள்ளி
யரிதான வாய்விளங்கந் தேவதார
மழகுறுதிப் பிலியோமஞ் சாதியின்பத்
திரியிலவங்கத்திலெடு வகையொன்றுக்குச்
சீரான பலமரைகூரணித்திடாயே. (ம3)

சூரணமும் பசுவின்னெய் யெள்ளினெண்ணெய்
சுசியுள்ளதாய்வகைக்குச் சேரொன்றும்சிந்
தூரமுடன் சுத்திசெய்த மண்டூரத்தின்
றூகைவகைக்குப் பலமரைதான் பொடித்துக்
சேரதிலே கிளறியபின் னிறக்கிவைத்துச் [கொண்டு
சிவந்ததே னரைச்சேரும் விட்டுக்கிண்டிச்
சீருடன்சிஞ் சாதிலேகியமதாகுந்
திறமுளநெய்க் கலசத்திற் கொண்டிடாயே. (மிச)

கொண்டிடுபாக்கவ்வளவா யிரண்டுநேரங்
கொடுக்கவொரு மண்டலம்பால் பருப்புக்கீரை
யுண்டிடலாம் புகையிலையும் புளியுமேதள்
ளுதல்மகோ தரமும்பாண்டசதிசூல
கண்டிடுகா மாலையிரைப் புங்கிரந்தி
கதிரோனைக் கண்டபனி போலநீங்கும்
வண்டுறைபூ மாலையணி சரபபூபன்
வன்மையுட னிம்முறையை வழுத்திஞரே. (மரு)

(இ-ள்.)

புளி இலை	ஒரு தூக்கு ($1\frac{1}{4}$ வீசை)
கிட்டம் (சுத்திசெய்தது)	,,
புதிய பசுவின்மோர்	10 படி
விதைநீக்கிய கடுக்காய்	100 (எண்ணிக்கையில்)
காடி	5 மரக்கால்
இரும்புத்தூள்	$1\frac{1}{4}$ வீசை

இவைகளை ஒன்றுகலந்து ஒரு நாள் முழுதுமூறவைத்து, மறு நாளடுப்பில் வைத்து நாலிலொன்றாகக் காய்ச்சி, வடிக்கட்டி, பனைவெல்லம் $3\frac{1}{2}$ சேரை அதில் கரைத்துக்கொள்ளவும். இதை அடுப்பின்மேல் வைத்துப் பாகாக்கி,

ஏலக்காய்	மிளகு
சுக்கு	பூலாங்கிழங்கு
தான்றிக்காய்தோல்	இந்துப்பு
சாதிக்காய்	நெல்லிமுள்ளி
வாயுவிடங்கம்	தேவதாரம்
திப்பிலி	ஓமம்
சாதிப்பத்திரி	கிராம்பு

இச்சரக்குகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துச் சூரணம் செய்து, பாகுடன் கலந்து,

பசுவின் நெய்	1 சேரும்
சுத்தமான நல்லெண்ணெய்	1 சேரும்

விட்டுக் கிண்டவும். பின்பு மண்டூர சிந்தூரம் அல்லது சுத்தி செய்த மண்டூரம் ½ பலமெடுத்து லேகியத்துடன் கிளறி, அடுப்பின் மேலிருந்து இறக்கி, ஆறியபின் சுத்தமான தேன் ½ சேர்விட்டு கிளறிவைத்துக் கொள்ளவும், இவ்லேகியத்தை ஒரு பழகிய நெய் பாண்டத்தில் பத்திரப்படுத்தி, தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கொட்டைப் பாக்களவு சாப்பிடவும். இவ்வாறு 1 மண்டலம் (40 நாட்கள்) உட்கொள்ளவும்.

பத்தியம் :—

பசுவின் பால், பருப்பு, கீரை வகைகள் முதலியவைகளை வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளலாம். புகையிலை, புளி இவைகளைத் தள்ளவும்.

தீரும் வியாதிகள்:—

வீக்கம், மகோதரம், பாண்டு, அசதி, சூலை, காமாலை, இரைப்பு, கிரந்தி முதலியவைகள்.

---

7. ஊது பாண்டு-ரோகத்திற்குச் சூரணம்.

கரிப்பான் வெண்சாரடையுஞ் சிவதைவேருங்
கணக்குட னெவ்வொன்றுழக்கரப்பொடியினேடே
புரிபுங்கின் கொழுந்து மூவுழக்குநய்யப்
பொடித்த கரிப்பானுதிச் சூரணத்தி
லொருநற் காசிடைபொடித்த மிளகுநேரா
யுண்டிட வூதினபாண்டுபோம் நல்லெண்ணெய்
யுரியகற்றி பிண்ணைக்குங் கூட்டிக்கொள்வா
யுண்மைமுறை சரபேந்திர னுரைத்தவாறே (மசூ)

(இ-ள்)

கையாந்தகரை வெள்ளை சாரடை
சுத்திசெய்த சிவதை வேர்

இவைகளின் சூரணம் வகைக்கு ஒவ்வொரு உழக்கு.

சுத்திசெய்த அரப்பொடி 3 உழக்கு.
புங்கங்கொழுந்துச் சூரணம் ,,

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்துகொண்டு ஒரு காசெடைச் (1 வராகனெடை) சூரணத்திற்கு ஒரு காசெடை மிளகுத்தூள் சேர்த்து உட் கொண்டுவரப்

பாண்டு ரோகம் திரும்.

பத்தியம் :—

நல்லெண்ணெய், கரிவகைகள் (மாம்ஸம்), பிண்ணாக்கு முதலியவைகள் சேர்த்துக்கொள்ளலாம்.

குறிப்பு :—

சிவதைவேர் சுத்தி :—மேல் தோலைநீக்கிவிட்டுப் பசுவின் பாலில் வேகவைத்துக் கொள்ளவும்,

---

8 பாண்டுரோகத்திற்கு 'லோக சிந்தூரம்'

அரப்பொடியைக் கல்வத்திற் போட்டுமேலு
மதனின் மருதப்பட்டைச் சாறுவிட்டு
இரவிதனில் வைக்கவுருகிப் போமேலுமெடுத்
ததையோர் குகையிலிட்டு மேல்வாய்மூடிச்
சரசமுடன் சேலமண் செய்ததின்மேல்
நற்கசபுடமிட லோகசிந்தூரமாகு
மூரியவனுபான மறிந்துண் பாண்டும்போ
முயர்முறையைச் சரபேந்திர னுரைத்தவாறே. (ஙஎ)

(இ-ள்)

சுத்திசெய்த அரப்பொடியைக் கல்வத்திற் போட்டு, மரு தம்பட்டைச்சாறு விட்டு அரைத்து, வெயிலில் வைத்தால் அது உருகி ஒன்றுகும். இதை ஒரு குகையிலிட்டு ஒரு சில் வினல் மூடிச் சேலமண் செய்யவும். நன்கு காய்ந்தபின் கஜ புடம் இடவும்,

சுத்தமான அயச் செந்தூரம் கிடைக்கும். தக்க அனு பானத்தில் சாப்பிடப் பாண்டு தீரும்,

---

9. பாண்டு முதற் சோகைக்கு 'ஸ்வரஸம்'

முருங்கைகரி சாலிலைசெருப் படியிம்மூன்று
மூன்றுபிடி யரப்பொடியு முழக்கதாகும்
திருமருவு மெலுமிச்சம் பழத்தின்சாறு
திடமுடன் விட்டந்தச் சுரசந்தன்னை
யுரிமையுட னுலிரண்டு நாளுண்பீராய்
யூதிடும்பாண் டுடன்சோகை தீருமெங்கள்
தருமகுண நிருபனெனுஞ் சரபபூபன்
சாற்றினு ரிம்முறையைத் தமிழ்ப்பாவாலே. (மஅ)

(இ-ள்.)

முருங்கை கையாந்தகரை செருப்படை

இம்மூன்றும் வகைக்கு ஒரு பிடி.
சுத்தி செய்த அரப்பொடி 1 உழக்கு.

இவைகளை யொன்றுகூட்டி எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக இடித்துப் பிழிந்த ரஸத்தைத் தினம் இருவேளை சாப்பிடவும். இவ்வாறு 8 நாளைக்குச் சாப்பிடவும்.

வீக்கத்துடன் கூடிய பாண்டு, சோகை முதலிய ரோகங்கள் தீரும்.

---

10. பாண்டு ரோகத்திற்கு 'நாயுருவியாதி உருண்டை'

அருமையுறுஞ் சிவந்திடு நாயுருவிவேரும்
அவுரியிலை கிட்டமுடன் சமனதாகு
மெருமையின்மோ ரதிலரைத்துக் குளிகையுஞ்செய்
திருவேளை யுங்கொடுக்கப் பாண்டு தீரும்

திருவுறையு மெழில்மார்பன் மன்னர்மன்னன்
தேசமெல்லா மொருகுடைக்கீ ழாளும்யோகன்
மருமலர்சே ரிருப்புயத்தோன் சரபபூபன்
மானிலத்தோர்க் கிம்முறையை வகுத்தவாறே. (ய௯)

(இ-ள்)

சிவப்பு நாயுருவி வேர்
அவுரி இலை
சுத்தி செய்த கிட்டம்

இம்மூன்று சரக்குகளையும் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு மோர் விட்டரைத்து (சுண்டைக்காயளவு) உருண்டைகளாகச் செய்துகொண்டு தினம் 1 உருண்டை வீதம் காலையிலும் மாலையிலும் கொடுத்து வரவும்.

பாண்டு தீரும்.

||. பாண்டு முதலானதற்குச் 'இரதாதிச் சூரணம்'

இரதமோர் பலமுங்கெந் தகமுங்காந்த
மிதுவகைக்குப் பலமுநா லாகுமேலும்
அரப்பொடியும் பலமெட்டுப் பொடித்தகிட்ட
மதின்பலமும் பதினெட்டாங் குமரிச்சாற்றி
லரைத்தெடுத்துத் தேங்காய்க்குள் வைத்ததின்மே
லாமணக்கி லிலைசுருட்டி ரவியில்வைக்கி
லுரியசூ ரணமாங்கற் முழைதன்னி
லுண்மையுட னேர்வாளப் புடமும்போடே. (உ0)

புடமுறு நேர்வாள மிருபதின்கழஞ்சுப்
புகலுமொரு பிடியாகு மிளகுஞ்சேர்த்துப்
பொடியிடுமுன் னிரதாதிச் சூரணத்திற்
பொருந்திடவே கலந்து சிமிழ்தனிலடைத்துக்
கொடுமூன்று பணவெடையைக் குழைத்துத்தேனிற்
குளிர்குலைப்பும் பாண்டுங்காமாலை சோகை
அடுத்துவரு நாளுநாள் மாறல்தீரு
மண்ணல் சரபேந்திரனுர் அரைந்ததாமே, (உக)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்		1 பலம்
,,	நெல்லிக்காய் கெந்தகம்	4 பலம்
,,	காந்தம்	4 பலம்
,,	அரப்பொடி	8 பலம்
,,	கிட்டம் (பொடித்தது)	8 பலம்

இவற்றைக் கல்வத்திலிடவும். முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கூட்டி அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு சரக்குகளை ஒன்றன்பின்னென்றுய் போட்டு *சோற்றுக்கற்ருழைச் சாற்றினுல் அரைத்துக்கொள்ளவும். ஒரு முற்றிய தேங்காயின் கண்களைத் திறந்து அதனுள்ளிருக்கும் இளநீரை ஊற்றிவிட்டு, அதற்குள் முன் அரைத்த விழுதை அடைத்து, ஆமணக்கிலை போட்டுச் சுற்றி வெயிலில் வைக்கவும். இவ்வாறு அவை நன்ருகக் காய்ந்து சூரணமாகும்வரை வைக்கவும். கற்ருழைச் சாற்றில் டோலா எந்திரமாக வைத்து எடுத்த நேர்வாளம் 20 கழஞ்சுடனே மிளகு 1 பிடியும் சேர்த்து அரைத்துவைத்துக் கொள்ளவும். இதனுடன் முன் சூரணத்தைக் கலந்துகொண்டு, ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி 3 பணவெடை வீதம் தேனில் குழைத்துச் சாப்பிடவும்

*கற்ருழை மடலைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிச் சிறிது கடுக்காய்த் தூள் போட்டு, ஊரவைத்து இடித்துப்பிழிய சாறு கிடைக்கும்.

குளிர், குலைப்பு, பாண்டு, காமாலை, சோகை, முறை ஜ்வரம் (4 நாள் காய்ச்சல்) முதலியவை தீரும்.

குறிப்பு :—

பணவெடை = $3\frac{1}{3}$ குன்றிமணி.

இந்த முறையில் வாளம் அதிகமாகச் சேர்த்திருப்பதால் நிதானித்துச் சாப்பிடவும்.

(2) ஒரு பாத்ரத்தில் வேண்டிய திரவத்தை $\frac{1}{2}$ வாசியூற்றி அதில் சுத்தி செய்யப்படவேண்டிய சரக்கைத் தொங்கவிட்டு அடுப்பின்மேல் வைத்து எரிப்பது 'டோலா எந்திர' மாகும்.

---

12. பாண்டு முதலானதற்கு "வில்வாதி லேகியம்"

நலமுறு வில்வத்தின்வேர் கோவைத்தண்டு
நளின நிலப்பனைக்கிழங்கு வகைக்குநூறு
பலமந்த நிறையாகுஞ் சீந்திற்றண்டு
பண்புடனே யதிலுரை சர்க்கரையுங்கொண்டு
நிலவாகை கண்டங்கத்திரியு நொச்சி
நேரான காஞ்சொரியுஞ் சிற்றமுட்டித்
துலங்குசங்கு நாயுருவி சங்கங்குப்பி
தூதுவளை யாடாதோ டையுமாமே. (உஉ)

ஆமிதற்குச் சிறுகுரிஞ்சான் சங்கத்தாரி
அமுக்கிரூக் கிழங்குங் காட்டாமணக்கு
மாமுத்தக்காசு முக்காவேளை காட்டு
மல்லிகையு நன்னாரி பேராமுட்டிச்
சேரமன்னியுஞ் சிவனார் வேம்புங்கொண்டு
சொல்வகைக் கைம்பதுபலமா மிடித்ததெல்லாஞ்
சேமமுள்ள பாண்டத்திற் போட்டுமேலுஞ்
சீருடனே கலநீர்விட் டெரித்திடாயே (உங)

எரித்திடு கடாயம்போல் மருகக்காய்ச்சி
யிரண்டுபடியா யிறுத்து முடக்கொத்தா லுங்
கரிசாலை பொடுதலையு முசுமுசுக்கை
கனமான மாதளையும் கரும்புமாகும்
பிரமிநாரத்தை பூசினியிலேடு
பின்பு செருப்படியிஞ்சி வகைக்குச்சாறு
மரியதொரு காற்படிசேர் கொத்தமல்லி
அதிமதுரஞ் செவ்வியத்தோ டரத்தைச்சேரே. (உச)

சேர்த்திடு திப்பிலிமூல மிளகுசுக்குச்
செவ்வல்லிக் கொடியுடன் வாய்விளங்கமோமஞ்
சிரகந்ற் றிப்பிலியுங் கோட்டமாகுஞ்
சித்திரமூல முடனிதெல்லாஞ் சேர்த்தே
யோர்வகைக்குப் பலமரைபேய்ப் புடலுங்காந்த
முள்ளி நெல்லிமுள்ளியு மருப்பூமாகுஞ்
சிரிரு வராகனெடை வகையொன்றுக்குச்
செப்பியநற் சாதியின்பத் திரியுமாமே. (உடு)

சாதிக்காய் சிறுநாகப்பூவசம்பு
சார்புடனே யரப்பொடி கிராம்புமாகுங்
கோதில்லா நல்லகுரா சாணியோமங்
கூட்டொரு வராகனெடை வகையொன்றுக்குத்
தீதில்லாக்கடுகு ரோகணி கடுக்காய்
சீருடன்றேசா புரங்கேளோர் வகைக்கு
நீதியுறு மூன்றுவராக னெடையுங்கொள்
நேர்மையுடனே யிடித்துப் பிடித்துக்கொள்ளே. (உசு)

பொடியுடனற் பழவெல்லம் பலமைந்தாகு
புனிதத்தேன்னெய் வகைக்குப் படியொன்றுமுன்
வடித்திடு கடாயமதிற் போட்டுக்கிண்டில்
வளமுள வில்வாதிலேகிய முண்பீரிப்

படியொரு மண்டலந்தனிலே வாய்வுகுன்மம்
பாண்டு சிலேட்டுமங்கள் விஷப்பாகமல்லாற்
கொடும்பித்தமுந் தீருஞ் சரபபூபன்
கூறுமுறை யுலகினயங் கொள்வர்தாமே. (உஎ)

(இ-ள்)

வில்வவேரின் மேல்தோலை நீக்கி உள்ளிருக்கும்	
கட்டையை வெட்டியதூள்	100 பலம்
கோவைத்தண்டு	100 பலம்
நிலப்பனைக்கிழங்கு	100 பலம்,
சீந்தில்சர்க்கரை	நிலவாகை
கண்டங்கத்திரி	நொச்சி
காஞ்சோரி வேர்	சிற்றாமுட்டி வேர்
சங்கம் வேர்	நாயுருவி
சங்கம்குப்பி	தூதுவளை
ஆடாதோடை	சிறுகுறிஞ்சான்
சங்கதாரி வேர்	அமுக்கிராக்கிழங்கு
காட்டாமணக்கு	கோரைக்கிழங்கு
முக்காவேளை	காட்டுமல்லிகை
நன்னாரி	பேராமுட்டி
சிவனார் வேம்பு	

இச்சரக்குகளின் வேர் வகைக்கு 50 பலம் வீதமெடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி முன்சொன்ன வேர்களையும் வெட்டி, ஒரு பெரிய பாத்திரத்திலிட்டு, 12 மரக்கால் தண்ணீர் விடவும். ஒரு நாள் அவை நன்றாக ஊறியபின், இவைகளைச் சிறிது சிறிதாகக் கல்லுரலிலிட்டு நசுக்கி, அத்தண்ணீரிலேயே கலக்கி, அடுப்பின் மேலேற்றி 2 படி (அதாவது 1 மரக்கால்) ஆகும்வரை எரிக்கவும். பின்பு, கஷாயத்தை வேறொரு பாத்திரத்தில் இறுத்துக்கொண்டு,

கரிசலாங்கண்ணிச்சாறு	...	¼ படி
பொடுதலைச்சாறு	...	¼ படி
முசுமுசுக்கைச்சாறு	...	¼ படி
மாதளம்பழச்சாறு	...	,,
கருப்பஞ்சாறு	...	,,
பிரமிச்சாறு	...	,,
நாரத்தஞ்சாறு	...	,,
பூஷணிக்காய்ச்சாறு	...	,,
செருப்படிச்சாறு	...	,,
இஞ்சிச்சாறு	...	,,

முதலிய சார்றுவகைகளையும் கஷாயத்துடன் சேர்த்துக் கொள்ளவும்.

கொத்தமல்லி விதை	அதிமதுரம்
செவ்வியம்	சிற்றரத்தை
கண்டந்திப்பிலி	மிளகு
சுக்கு	செவ்வல்லிக்கொடி
வாயுவிளங்கம்	ஓமம்
சீரகம்	திப்பிலி
கோஷ்டம்	கொடிவேலி வேர்

இவைகள் வகைக்கு ½ பலம்

பேய்புடல்	சுத்திசெய்த காந்தம்
நெல்லிமுள்ளி	முள்ளிவேர்

இவைகள் வகைக்கு 2 வராகனெடை

சாதிக்காய்	சிறுநாகப்பூ
வசம்பு	சுத்திசெய்த இரும்புத்
கிராம்பு	குராசானி ஓமம் [தூள்

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை

கடுகரோகிணி கடுக்காய்தோல்
* தேசாவாரம்

இவைகள் வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்து கடைச் சரக்குகளனைத்தையும் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

சாறுகூட்டிய கஷாயத்தை அடுப்பின்மேலேற்றிப் பழய வெல்லம் 5 பலம் போட்டுப் பாகாக்கிச் சூரணங்களையும் கலந்து 1 படி பசுவின் நெய்விட்டுக் கிண்டி இறக்கவும். ஆறிய பின் 1 படி தேன்விட்டுக் கலந்துகொள்ளவும்,

இந்த "வில்வாதி லேகியத்தை"த் தினம் (கழற்சிக்காயளவு காலையிலும் மாலையிலும்) 40 நாளைக்குச் சாப்பிட்டு வர

வாயுகுன்மம், பாண்டு, கபம், விஷ ரோகங்கள், பித்தம் முதலிய பலவித ரோகங்களும் தீரும்.

---

13 பாண்டு முதலானதற்குச் 'சிஞ்சாதிக் குழம்பு'

புளியிலைச்சாறது மூன்று படியதாகும்
புகழ்ந்திடு கோமூத்திரம் நாழிகொண்டு
வளமுள்ள காடியொரு குறுணியாமிவ்
வகைதுவைத்துப் பலமைம்ப தாமிரும்பவ்
வளவுகிட்டங் கடுநெல்லித் தான்றிமூன்று
மவ்வகைக் கன்பதுகாயின் விதைகளெல்லாங்
களைந்திவைகள் முன்சாற்றிற் போட்டுநன்றாய்
காய்ச்சிடுவா யோர்மூன்று தினமுங்காணே. (உஅ)

---

* இதற்கும் நாம் கண்டத்திப்பிலியையே உபயோகப்படுத்துகிறோம். ஏற்கனவே இச்சரக்குக் கூறப்பட்டிருப்பதால், மொத்தம் 4 வராகனெடை எடுத்துக்கொள்ளவேண்டும்.

காணவே சத்தெல்லா மிறங்கிநிற்கக்
கண்டுகையால் பிசைந்துபிழிந் தெடுத்திறுத்துத்
தோணவதிமதுரந் திப்பிலி யிந்துப்பு
சுக்கு பெருங்காய மிளகசமதாகம்
மூணுவலோயற்கார சீனக்காரம்
பொருந்துநற் சீரகங் கருஞ்சீரகமுங்காந்த
நீணுசவுக்காரமுடன் கடுகுரோகணியு
மொன்றுக்கிரண்டு காசெடை னிறுத்தே. (உக)

நிறுத்ததனேடே கிட்டம் பலமிரண்டா
நிரையுள்ளி மூன்றுபலஞ் சங்கின்வேரு
மொருத்தவெள்ளைச் சாறணியின் வேரொவ்வொன்றுக்
கோர்பலமாமிவை யரைத்துக் கரைத்ததிற்சேர்
சிறுத்த செருப்படிநற் சாரணைமுருங்கை
சிருறுநாயுருவி பொடுதலையு மல்லாற்
குறித்தவரி பிரமியுங் காடொரையுமல்லி
கூறுமொவ்வோர் வகைக்கிலைச் சாறுழக்கதாமே.
(நய)

உழக்குப்புஞ் சேர்த்து நயமாகக்காய்ச்சி
லுண்மையுடன் சிஞ்சாதிக் குழம்பதாகு
மெழிலெலுமிச்சம் பழத்தி னளவருந்தி
லெரிகாமாலைச் சுழற்காமாலை பாண்டு
வழுத்து மஞ்சக்காமாலை யழற்காமாலை
மாறிப்போங் கைப்புடனே புளிப்புந்தள்ளி
தழைமுருங்கையின் இலைகாய் கிரைத்தண்டுண்
தஞ்சையில்வாழ் சரபேந்திர னருளிதாமே. (நக)

(இ-ள்.)

புளிஇலைச்சாறு	3 படி
பசுவின் மூத்திரம்	4 படி
புளித்தகாடி	2 படி

இவைகளை ஒன்று கலந்து, 50 பலம் சுத்திசெய்த இரும்புக் கிட்டத்தை இடித்துப் போடவும்.

கடுக்காய்	தான்றிக்காய்
நெல்லிக்காய்	

இவைகளை வகைக்கு 50 (எண்ணிக்கையில்) எடுத்துக் காயவைத்து உடைத்துக் கொட்டைகளை நீக்கி அவைகளின் தோலை, முன் சொன்ன சாறுவகைகளில் போட்டு, அடுப்பின் மேலேற்றி, 3 நாளைக்கு எட்டிலொன்றுகும்வரை எரிக்கவும். கஷாயத்தில் சத்தெல்லாம் இறங்கும். அப்போது அவைகளைக் கையினுல் பிசைந்து, பிழிந்து, இறுத்துக்கொள்ளவும். அதனுடன்,

அதிமதுரம்	திப்பிலி
இந்துப்பு	பெருங்காயம்
மிளகு	ஓமம்
வளையலுப்பு	சீனுக்காரம்
நற்சீரகம்	கருஞ்சீரகம்
சுத்திசெய்த காந்தம்	சவர்க்காரம்
கடுகரோகிணி	

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதம் நிறுத்தெடுத்து, சுத்தி செய்த கிட்டான் 2 பலம் போட்டு, இடித்துச் சூரணித்துக்கொள்ளவும். பின்பு

பூண்டு	3 பலம்
சங்கம் வேர்	1 பலம்
வெள்ளைச்சாரணை வேர்	1 பலம்

இவைகளை அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றுக அரைத்து கஷாயத்துடன் கலந்துகொண்டு,

சிறுசெருப்படிச்சாறு
சாரணைச்சாறு
முருங்கிலைச்சாறு
நாயுருவிச்சாறு
பொடுதலைச்சாறு
பிரமிச்சாறு

இந்த வகைச் சாறுகள் வகைக்கு ஒரு உழக்கு வீதம் விட்டு, உப்பு 1 உழக்கும் சேர்த்துக் கலந்து அடுப்பின்மேல் வைத்துக் குழம்பாகும்வரை காய்ச்சவும். பின்பு இதை ஒரு ஜாடியில் பத்திரப்படுத்தி, எலுமிச்சங்காயளவு எடுத்துத் தினம் ஒரு வேளை சாப்பிட

எரிகாமாலை, சுழல்காமாலை, பாண்டு, மஞ்சட்காமாலை, அழற்காமாலை முதலிய ரோகங்கள் தீரும்.

கசப்பு, புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கி, முருங்கைக்கீரை, முருங்கைக்காய், கீரைத்தண்டு முதலிய வைகளை சேர்த்துக்கொள்ளலாம்.

---

14. பாண்டு, மகோதரம் முதலானதற்கு "லோக சிந்தூரம்"

அரப்பொடியும் பன்னிரண்டாங் கழஞ்சுநற்கெங்-
தகங்கழஞ்சு மேழாகும் பலமுமேயொன்
றரையிரதம் வெண்காரங் கழஞ்சுநாலா
மாகயிவை நான்குமே குமரிச்சாற்றி
லரைநாலு சாமங்க புளியின்வன்ன
மானவுடன் கற்றுழஞ் சோறுவிட்டே
எரித்திடுவாய் மூன்றுநா ளானவாறே
யெழிலான லோக சிந்தூரமாமே. (நூ)

சிந்தூரந்தனை நற்றேனிற் குழைத்துண்
செப்புவிட பாகமகோதரமும் பாண்டுந்
தொந்தமுள்ள சோகைபயித்தியங் காமாலை
துலையுமுள்ளித் தைலமதிற் கொண்ணீராமை
வந்தகுவை நீரழிவு சத்திகுன்ம
மங்குமெரிகுன்மம் போம் வெண்காயத்தி
னந்தரசந்தன்னி லுண்ணீரடைப்பு மேகல்-
லடைப்பும்போஞ் சரபேந்திர னருளிதாமே. (நந)

(இ-ள்)

சுத்திசெய்த அரப்பொடி		12 கழஞ்சு
,,	கெந்தகம்	7 கழஞ்சு
,,	பாதரஸம்	1½ பலம்
பொரித்த வெங்காரம்		4 கழஞ்சு

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்ருக கறுப்பாகும்வரை அரைத்துக்கொள்ளவும். பின்பு அரப்பொடியையும் வெங்காரத்தையும் சேர்த்துக் கற்ருழைச்சாறு விட்டு 4 ஜாமம் அரைக்கவும், புளியின் நிறமாகிறதைக் கண்டு கற்ருழஞ்சோறு விட்டு அடுப்பின் மேலேற்றி எரிக்கவும். இவ்வாறு 3 நாட்கள் எரிக்கச் சுத்தமான லோகசிந்தூரம் கிடைக்கும்.

இதைத் தேனில் (3 அரிசியெடை)குழைத்துச் சாப்பிட

விஷம், மகோதரம், பாண்டு, சோகை, பித்தம், காமாலை முதலியவை தீரும்.

வெள்ளைப்பூண்டுத் தைலத்தில் சாப்பிட

நீராமை, நீரழிவு, சத்திகுன்மம், எரிகுன்மம், முதலியவைகளும் தீரும்.

வெங்காயச்சாற்றில் உண்ண

நீரடைப்பும், கல்லடைப்பும் தீரும்.

---

15. பாண்டு, மகோதரம் முதலானதற்கு "இரதாதிக் குமரி பற்பம்"

புகழிரதங் காசிடை நாலாகுமேலும்
புகலுமுருக் கரப்பொடி காசிடையெண்ணைன்கு
மகிழ்ந்திடு மஞ்சிலை காசிடையிரண்டா
வளமுடனே காந்தங் காசிடைநாலுங்கு
திகழுறு நெல்லிக்காய் கெந்தகமொன்றுக்குச்
சேர்த்திடு காசிடை யெட்டாங்கடுக்காய்தன்னை
வகையுடனே பொடிசெய்து குமரிச்சாறு
வாங்கியதிற் பிசைந்திடவே மூறியுந்தானே (நச)

மூறிந்தெளி தண்ணீரை யிறுத்துக்கொண்டு
முன்சொன்ன மருந்ததனில் விட்டுநன்றாய்
இரண்டுநாள் அரைத்து வெண்கலத்திலப்பி
ரவிதனி லுலர்ந்துநாள் வைப்பீராகிற்
பொருதா மலுலர்ந்திருக்கு மதையெடுத்துப்
புதுக்கலசந் தனிலடைத்து வேடுகட்டி
இருமாத நெல்லுக்குள் புடமும்வைத் தெடுத்து
தேங்காய்க் குடுக்கைதனி லடைத்திடாயே. (நரு)

அடைத்தநாள் சென்றக்காற் குணமதாகு
மதற்குமேன் பொடிமிளகு சுக்கிஞ்சேடே
கடுக்காய்திப்பிலி நான்குஞ் சமனதாகுங்
கறுகாமலிள வறுப்பாய் வறுத்துக்கொண்டு
பொடித்து குமரிச்சாம்பற் சரியாய்சேர்த்துப்
புகழ்ந்ததனிற் பணவெடையும் நான்கதாகுங்

கொடுத்திடுமுன் மருந்து பணவெடையுந்தேனிற்
குழைத்துண்போர் குமரிபற்பங் குணமுங்கூறே. (நசு)

கூறுநீராமை மகோதரமும் பாண்டு
கொடிய விடபாகமெய் வீக்கஞ்சத்தி
மீறுசெரியாமை புளித்தேப்பத்தோடு
மிக்ககழிச்சல் வாதபித்த மய்யத்தின்பா
லாறுநூத்தெட்டு வியாதிகளுந் தீரு
மூப்போடுப் புளிதவிர்த்து மிளகுதூளுந்
தேறுமிளங் கீரையுண்பீர் சரபபூபன்
செப்புமுறை நயமிதுகாண் தெளிந்துபாரே. (நஎ)

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்	4	*காசெடை
,, உருக்கு அரப்பொடி	32	காசெடை
,, மஞ்சிலை	2	காசெடை
,, காந்தம்	16	,,
,, நெல்லிக்காய் கெந்தகம்	8	,,

இவைகளைத் தனித்தனியே எடுத்து, முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றுகக் கறுப்பாகும்வரை அரைத்துப், பின்பு சரக்குகளை ஒவ்வொன்றுகப் போட்டு, அரைத்துக்கொள்ளவும். சோற்றுக்கற்றுழை மடலைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி 50 கடுக்காயின் தூளைப்போட்டுப் பிசரிவைக்கவும். மறுநாள் அதைப் பார்க்க அது தெளிந்து நிற்கும், அந்தச்சாற்றை விட்டு முன்கூறிய சரக்குகளை 2 நாட்கள் அரைத்து, ஒரு வெங்கலப் பாத்திரத்தில் வில்லை தட்டி 5 நாட்கள் வெயிலில் வைக்கவும். நன்றுகக் காய்ந்த பின் அதை எடுத்து ஒரு புதுச்சட்டியில் வைத்து வெள்ளைத்

துணியினுல் சட்டியின்வாய்க்கு வேடுகட்டி 2 மாதங்களுக்கு அதை நெல்லுப்புடத்தில் வைக்கவும். பின்னர், இதை ஒரு தேங்காய் குடுக்கைக்குள் பத்திரப்படுத்தவும் .நாட்கள் செல்லச்செல்லப் பயன் அதிகம்.

இதற்கு மேல் மருந்தாவது :—

மிளகு, சுக்கு, கடுக்காய்தோல், திப்பிலி இந்நான்கையும் சமனெடுத்து (வகைக்கு 1 பலம்) பொன் வருவலாக வறுத்துச் சூரணித்து முன் சொன்ன குமரிச்சூரணத்துடன் சரி அளவு சேர்த்துக்கொள்ளவும்.

இம்மருந்தில் 4 பணவெடைதூள் (13 குன்றிமணி) தேனில் குழைத்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிட

நீராமை, மகோதரம், பாண்டு, விஷம், உடம்பு வீக்கம், வாந்தி, செரிமானமில்லாமை, புளித்த ஏப்பம், அதிகமான கழிச்சல், முதலான வாத பித்தங்களினுல் ஏற்படும் 108 வியாதிகளும் தீரும்.

உப்பு, புளி இவைகளை நீக்கி, மிளகு, இளங்கீரை முதலியவைகளைக் கூட்டிக்கொள்ளவும்.

குறிப்பு :—

7 நாட்கள் உட்கொண்டு பத்து நாளைக்குப் பத்தியம் பிடிக்கவும் என்று 74 செ. சுவடியில் கூறப்பட்டிருக்கிறது.

---

* காசெடை—வராகனெடை.

16. சோகை முதலானதற்குக் "காந்தாதிச் சூரணம்"

அந்தமிகு காந்தமிள கிரும்பின்றூளு
மதுகாசிடை யிருபதாகு மல்லால்
விந்தையுறு கிட்டாங்காசிடை யெண்ணைந்து
விதித்ததெல்லாஞ் சூரணித்துக் கரிப்பான்சாறு
பந்தமுடனே விட்டுக் கலக்கிமேலும்
பாங்கான நிழலுணத்தி மோருஞ்சோறுண்
டந்தமுள கலமதனிற் சிலமோர்வார்த்தே
யதனிற் காந்தாதிச்சூரணமும் போடே (நஅ)

போட்டுண்பாய் வெருகடியவ் வளவாகக்கேள்
புன்கோழிக் கறியாகும் புளிப்புங்கைப்புங்
கூட்டலாகாது பத்திய மதாகுங்
கொடிதான சோகையுடன் சூலையுமே
யேட்டிலுநன்னுவி லடங்காத கீர்த்தி
யிசைந்துல கிற்றரும மனுநீதிதன்னை
நாட்டியநற் றஞ்சையில் வாழ்சரபபூபன்
நவிலுமுறை யெல்லோரும் நயங்கொள்வாரே. (நக)

(இ-ள்)

சுத்திசெய்த காந்தம்		20 காசெடை
,,	இரும்புத்தூள்	20 காசெடை
,,	கிட்டம்	40 காசெடை
மிளகு		20 காசெடை

இவைகளைக் கல்லுரலிலிட்டித்து, வஸ்திரகாயஞ்செய்து, அது முழுகும்படி கையாந்தகரைச்சாறுவிட்டு ஊறவைக்கவும். பின்பு, இதை யொரு கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக்கொண்டு, நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு, மோர்

சாதம் சாப்பிட்ட பின்பு இக்காந்தாதிச் சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்து மோரிலேயே குழப்பிச் சாப்பிடவும்.

பத்தியம் :—

கோழிக்கறி கூட்டிக்கொள்ளவும். புளிப்பு, கசப்புப் பதார்த்தங்களை நீக்கவும்.

தீரும் வியாதிகள் :—

சோகை, சூலை முதலியன.

---

17. பாண்டு, நீரழிவு, க்ஷயம் முதலானதற்கு 'லோக சிந்தூரம்'

பலம் பத்தாலம் பட்டைச்சாறுதன்னிற்
பாங்கான வரப்பொடியை யூறவைக்கில்
நலந்தருமே மூன்று நாளானவாறே
நாலாநாட் பிசைந்திறுத்துக்கொண்டு நல்ல
சலம்விட்டுக் கழுவியே நாவற்பட்டை
சார்ந்தகடுக்காய் கரிப்பான் சாற்றிலல்லா
வெலுமிச்சம் பழச்சாறின்நான்கிலேயு
மினமுடனே தனித்தனிமுன் முறைபோற்செய்யே. (சய)

செய்தபின்பு நற்கையாந் தகரைச்சாறு
சேர்த்துநயமா யரைத்துத் துட்டுப்போலே
பையவேசெய்து குழிந்தோட்டில் வைத்துப்
பாங்குடனேர் சேலமண் செய்தாறவைத்து
செய்பெரிய குக்குடம்போற் புடமும்பத்து
தீர்ந்திடவே லோசிந்தூரமாகுந்
துய்யநல் சர்க்கரையுங் கரிப்பான்சாறுந்
துலங்கிய தேனிவைக ளனுபானமாமே. (சக)

அனுபானம் மூன்றிலொன்றும் நற்சிந்தூர
மதுவுமொரு பணவெடையுங் குழைத்துண்பீராய்
வினையுறும் பஞ்சச்சயநீர்க் கட்டுஞ்சேர்
கைவிடபாகம் பாண்டுஞ் சுக்கிலவியாதி
யனத்துசுரம் வீக்கங் காமாலையும்நீ-
ரழிவு பஞ்சபடலமுடன் சன்னிதீரும்
வனசமலற் பெண்புயனுஞ் சரபபூபன்
வையகத்தோர்க் கிம்முறையை வழுத்தும்வாறே.
(சஉ)

(இ-ள்.)

ஆலம்பட்டை 10 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சாறுபிழிந்து, அந்த சாற்றில் அரப்பொடியையிட்டு 3 நாளூற வைக்கவும். நான்காவது நாளதைப் பிசைந்து வடிக்கட்டிக் கொண்டு சுத்த ஜலம்விட்டுப் பிசைந்துக் கழுவிக்கொள்ள வும்.

இம்மாதிரியே நாகப்பட்டை சாற்றில் 3 நாளூறவைத்து 4வது நாள் முறையே சுத்த ஜலத்தில் கழுவவும்.

கடுக்காயின் சீதகஷாயத்திலும் (ஊறவைத்தெடுத்த நீர்) 3 நாளூறவைத்துக் கழுவிக்கொள்ளவும்.

கரிசாலங்கண்ணிச் சாற்றிலும் 3 நாளைக்கு ஊறவைத்து அலம்பிக்கொண்டு, எலுமிச்சம் பழச்சாற்றிலும் இவ்வாறே ஊறவைத்து அலம்பிக்கொள்ளவும்.

இவ்வாறு சுத்திசெய்த அரப்பொடியை ஒரு கல்வத்தி லிட்டு கையாந்தகரைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துத் துட்டளவு வில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு, ஒரு ஓட்டில்வைத்து மற்றொரு ஓட்டினால்மூடிச் சீலைமண் செய்து காயவைக்கவும்.

பின்னர் இதைக் குக்குடபுடம் (ஒரு சாண் நீள, அகலம் உயரமுள்ள புடம்) போட்டுச் செந்தூரத்தை எடுத்துக் கொண்டு, மறுபடியும் கையாந்தகரைச்சாறுவிட்டு அரைத்துக் குக்குட புடம் போடவும். இவ்வாறு 10 புடங்களிடவும். நல்ல லோகச்சிந்தூரம் கிடைக்கும்.

இச்செந்தூரத்தில் $3\frac{1}{2}$ குன்றி யெடை யெடுத்துச் சர்க்கரையிலோ, தேனிலோ அல்லது கையாந்தகரைச்சாற்றிலோ கொடுக்க

5 வித கூயங்கள், நீர்க்கட்டு, விஷம், பாண்டு, சுக்கில வியாதிகள், ஜ்வரம், வீக்கம், காமாலை, நீரழிவு, 5 வித படலங்கள் (கண் ரோகங்கள்) சன்னி, முதலிய பலவித ரோகங்கள் தீரும்.

---

18. பாண்டு, மகோதரம் முதலானதற்கு 'மண்டூரச் செந்தூரம்'

காரிசாலை நிலவாகை சிவனர்வேம்பு
கனத்தசிரு செருப்படி யெல்லாந்துவைத்துப்
புரியும் வெள்ளாட்டுனீர் குறுணிவிட்டுப்
புகழுநற் கிட்டமதை யூறவைத்து
விரிவான வெட்டுநா ளானவாறே
விடுவித்துக் கரிப்பானி லரைத்துக்கொண்டே
இருபதுவாம் புடமும் போட்டெடுத்துப்பாரு
மெழிலுரு மண்டூரச் செந்தூரமாமே. (சந)

சிந்தூரமதிற் பணவெடையு மிரண்டு
திகழ்காந்தம் பணவெடையு மொன்றதாகும்
பைந்தேனிற் குழைத்துண்ணச் சோகைபித்த
பாண்டுதிமிர் பித்தங்காமாலை யீளை

தொந்த மகோதரமு மூதிடுங்காமாலை
தொலையாத விருமல் பெருவயிறுந்தீரு
மந்தமுள வனுபான மறிந்துகொள்வீ
ரண்ணலெனுஞ் சரபேந்திர னருளிதாமே. (சச)

(இ-ள்.)

கரிசாலங்கண்ணி	நிலவாகை
சிவனர் வேம்பு	சிறுசெருப்படி

இவைகளைச் சமூலமாக வகைக்கு (10 பலமெடுத்து) வெள்ளாட்டு மூத்திரம் 1 மரக்கால் விட்டு, அதனுடன் கிட்டத்தை (½ வீசை) இடித்துப் போட்டு, 8 நாளைக்கு ஊறவைத்தெடுக்கவும்.

பின்பு, இதை எடுத்து நன்றுகச் சுத்தஜலத்தில் அலம்பி, கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாற்றில் (2 நாட்கள்) அரைத்து, வில்லைகளாகத் தட்டி, உலர்த்திப் புடம் போடவும். இவ்வாறு 20 புடங்களிடவும். மண்டூரச் செந்தூரம் கிடைக்கும்.

இச்செந்தூரம் $3\frac{1}{3}$ குன்றி எடையும், காந்தச்செந்தூரம் $6\frac{2}{3}$ குன்றியும் கலந்து தேனில் குழைத்துச் சாப்பிடவும். மேலும்,

சோகை, பித்தபாண்டு, பித்தம், காமாலை, ஈளை, மகோதரம், இருமல், பெருவயிறு முதலிய ரோகங்களுக்குத் தகுந்த அனுபானங்களிலிடவும்.

19. பாண்டு முதலானதற்குக் "காந்தாதி மண்டூரச் சிந்தூரம்"

(தக்க அனுபானங்களுடன்)

தூதுவளை கண்டங்கத்திரியு மாடா
தோடையுடன் சின்னியும் நீர்முள்ளியல்லாற்
கோதறுபாவட்டை செருப்படி முருக்குங்
கொண்டுபடரவரையு மிவ்வகை யொன்றுக்கே
யோதிலைச் சாறுழக்காமவ் வகையின்வேரு
மோர்பாக் கவ்வளவாக வரைத்துக்கொண்டு
தீதறுநற் சுக்குங் கத்தூரிமஞ்சள்
சிறுநாகப்பூ கருஞ்சீரக மூமாமே. (சடு)

சீரானமிளகு வெள்ளுள்ளி மஞ்சள்
செப்புமிலவங்கந்திப்பிலியுமேலம்
நேரான தேற்றுவின் விரைகடுக்காய்
நிறையொவ்வொன்றுக் கேகாசெடை யைந்தாகு
மேரான யிவ்வகையை யரைத்துமுன்சா
றிடைகரைத்துக் காய்ச்சிப்பின் வடித்துக்கொண்டு
கூரான மண்டூரச் சிந்தூரத்திற்
கூறுமிரு பணவெடையுங் கொண்டிடாயே. சசு)

கொண்டிடுமோர் பணவெடைநற் காந்தங்கூட்டிக்
குணமான நெய்யதனிற் கொடுக்கவேகேள்
பண்டுறு மகோதரமுஞ் சோகைபித்த
பாண்டுங் காமாலை பெருவயிறுபீளை
கண்டிடு போலாத்திமிர் பித்தமூதா
காமாலை யிருமலொடு தீருமிந்த
வெண்டிசையுங் கீர்த்திபெற்ற சரபபூப
னின்முறையை யுலகத்தோர்க் கியம்புவோமே.
(சஎ)

(இ-ள்.)

தூதுவளை	கண்டங்கத்திரி
ஆடாதோடை	சின்னி
நீர்முள்ளி	பாவட்டை
செருப்படி	கல்யாணமுருக்கு
அவரை	

இவ்வகைகளின் இலைச்சாறு 1 உழக்கும்,
,, வேர் ஒரு பாக்களவும்

எடுத்து அரைத்துக்கொண்டு,

சுக்கு	கஸ்தூரி மஞ்சள்
சிறுநாகப்பூ	கருஞ்சீரகம்
மிளகு	வெள்ளைப்பூண்டு
மஞ்சள்	கிராம்பு
திப்பிலி	ஏலக்காய்
தேற்றுங்கொட்டை	கடுக்காய்த்தோல்

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்துப் பொடி செய்து, முன்கூறிய சாற்றிலேதேனும் ஒன்றைவிட்டு நன்றாக அரைத்துச் சாறுகளுடனே குழப்பி, அடுப்பின்மேலேற்றி நாலிலொன்றாகக் காய்ச்சி வடித்து, மண்டூரச் செந்தூரத்தில் 2 பணவெடை (6½ குன்றி) போட்டுக்கொண்டு, காந்த செந்தூரம் 1 பணவெடையும் சேர்த்து நெய்யுடன் கொடுத்து வர

மகோதரம், சோகை, பித்தபாண்டு, காமாலை, பெருவயிறு, பீலிகை, திமிரம், பித்தம், ஊதுகாமாலை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு :—

மருந்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர் பொருத்தமாக இல்லை.

20. பாண்டு, சுவாச காசம் முதலானதற்குப் 'பஞ்சபாணச் சூரணம்'

ஏலமிலவங்கங் கல்ப்பூரத் தோடே
யெழிலான திரிகடுகு நாகப்பூவுங்
கோலமுள கடுநெல்லி தான்றியுந்தக்
கோலமதி மதுரஞ் சந்தனமுமல்லாற்
சாலநல்லத்தித் திப்பிலி வகைக்குச்
சமன்கூட்டிச் சூரணஞ்செய்ததற்கு நேராய்ச்
சீலமிகு கஞ்சாவி னிலையைச்சுத்தி
திறமாகச்செய்து சூரணமுஞ் செய்தே. (சஅ)

செய்யிருசூரணம் ருசைசர்க்கரை கலந்து
சிருடனே வெருகடியோர் வேளைகொள்ளில்
மெய்தனிலே வருமிரத்த பித்தம்பாண்டு
விரைந்தேழு சுவாச காசங்களுரு
மையல் மிகுபோகநிலை சமனதாகும்
வளமான விம்முறையைச் சரபபூபன்
ஐயமறப் பலநூலை யாய்ந்துரைத்த
வரிய பஞ்சபாணச் சூரணமதாமே. (சகூ)

(இ-ள்)

ஏலக்காய்	கிராம்பு
பச்சைக்கல்பூரம்	சுக்கு
திப்பிலி	மிளகு
சிறுநாகப்பூ	கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்	தான்றிக்காய்த்தோல்
தக்கோலம்	அதிமதுரம்
சந்தனம்	யானைத்திப்பிலி

இவைகளோச சமஎடை எடுத்துக் காயவைத்துக் கல்லுலுரலி லிட்டிடித்துச் சூரணித்து, வஸ்திரகாயம் செய்துகொள்ளவும் கஞ்சாஇலையைச் சுத்திசெய்து சமஎடை எடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, இருவகைச் சூரணங்களையு மொன்று கலந்துகொண்டு, ஷை சூரணங்களுக்கு இருமடங்கு சர்க்கரை கூட்டிக்கொள்ளவும்.

இதில் மூவிரல்கொண்ட அளவு வீதம் தினம் ஒரு வேளை சாப்பிட

இரத்தபித்தம், பாண்டு, சுவாசகாசம், முதலிய ரோகங் கள் தீரும்.

குறிப்பு :—

கஞ்சா இலையைப் பாலிலூறவைத்து, 7 தடவை ஓடும் தண்ணீரில் கழுவவும்.

---

21. பித்த பாண்டு காமாலைக்கு 'உருண்டை'

தேடரிய மிளகுசீரக மிந்துப்புத்
திப்பிலியு முண்டுமிவை சமனதாகக்
கூடியதற் கோர்பாதி யிரும்பின்றூளைக்
கோமயத்திற் காடியிலுஞ் சுத்திசெய்க
கோடிகுண மேயுறுநற் கரிப்பான்சாறு
கொண்டிவையெல் லாமரைத்து வாக்காய்நேராய்
நாடுரிய நெய்தனிலுண் பித்தபாண்டு
நவிலுங் காமாலையுடன் தீருந்தானே. (நய)

(இ-ள்.)

மிளகு	சீரகம்
இந்துப்பு	திப்பிலி

இவைகளைச் சமனெடை எடுத்து, இதற்குப் பாதி எடை பசுவின் மூத்திரத்திலும், காடியிலும் ஊறவைத்துச் சுத்தி செய்த இரும்புத் தூளைக் கூட்டிக் கல்வத்திலிட்டுக் கையாந் தகரைச் சாறுவிட்டு நன்றாக (4 மணி நேரம்) அரைத்துக் கொள்ளவும் இவைகளை (ச்சுண்டைக்காயளவு) மாத்திரை களாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

வேண்டும்போது ஒரு உருண்டையைப் பசுவின் நெய்யு டன் குழைத்துச் சாப்பிடப்

பித்தபாண்டு, காமாலை முதலிய ரோகங்கள் தீரும்.

---

22. சோகை, பாண்டு, காமாலை, பைத்தியத்திற்கு மருந்து.

திப்பிலிநற் கடுகசம தாகமுஞ்சா-
திக்காயும் வெள்ளுள்ளி மிளகுசுக்கிந்
அப்புகருஞ் சீரகஞ் சீரகங்கடுக்கா
யோது வெளிச்சைப்பிசின் கிராம்புகிட்ட
மொப்புடனே வகைக்கொரு காசிடையதாகு
மோங்கு மரப்பொடி நான்குபலமதாகுஞ்
செப்புகழற்கொடி கரிப்பான் குப்பைமேனி
செருப்படியுங் காட்டுமல்லிகையுமாமே. (நிக)

ஆமைந்தின் கொழுந்தெலுமிச் சங்காய்நேர்கொ
ளரைத்து சங்கம்வேருங் காசெடைநான்காகுங்
கோமளஞ்சேர்க் கடுக்காயின் றோலெடுத்துக்
கொண்டு தேசிப்பழச்சா றுழக்குக்கூட்டி
கோமூத்திரம் படிவிட்டரைத்து வெல்லங்
கூறியசர்க்கரை பனையின் வெல்லந்தானும்
நேமமுட னிம்மூன்றி லொன்றைக்கூட்டு
நிறையதற்குப்பலமுஞ் சேர்த்தெடுத்துக்கொள்ளே
(ருஉ)

எடுத்ததையோர் கலசத்தில் வைத்துக்கொண்டே
யெழிலான பாக்களவுண் மண்டலத்தில்
தொடுத்தகொடும் பாண்டு பைத்தியங்காமாலை
சோகையறுங் கைப்புடனே புளிப்பிரண்டும்
விடுத்தசனஞ் செய்யும்போ தெண்ணெய்வார்த்துண்
வேந்தனுஞ் சரபேந்திரன் பலநூலாய்ந்து
வடித்துரைத்த யிம்முறையைத் தமிழ்ப்பாவாலே
வண்மையுட னுலகத்தோர்க்கு வகுத்தவாறே.
(ருங)

(இ-ள்.)

திப்பிலி	கடுகு
ஓமம்	சாதிக்காய்
வெள்ளைப்பூண்டு	மிளகு
சுக்கு	இந்துப்பு
கருஞ்சீரகம்	சீரகம்
கடுக்காய்த்தோல்	வெளிச்சைப்பிசின்
கிராம்பு	சுத்திசெய்த கிட்டம்

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை

சுத்திசெய்த இரும்புத்தூள்	1 பலம்
கழற்கொடிக்கொழுந்து	1 எலுமிச்சங்காயளவு
கையாந்தகரைக்கொழுந்து	1 ,,
குப்பைமேனிக்கொழுந்து	1 ,,
செருப்படிக்கொழுந்து	1 ,,
காட்டுமல்லிகைக்கொழுந்து	1 ,,
சங்கம் வேர்	4 வராகனெடை
கடுக்காய்த்தோல்	4 ,,
எலுமிச்சம்பழச்சாறு	1 உழக்கு

இச்சரக்குகளையெல்லாம் பசுவின் மூத்திரம் 1 படிவிட்டு அம்மியின்மேல் வைத்தரைத்து, சர்க்கரையோ அல்லது பனை வெல்லமோ அல்லது வெல்லமோ 1 பலம் சேர்த்து, ஒன்றுகக் குழப்பி (ஒரு நெய் தடவிய) கலசத்தில் வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு பாக்களவெடுத்துத் தினம் 1 வேளை வீதம் 40 நாட்களுக்குச் சாப்பிடப்

பாண்டு, பித்தாதிக்கம், காமாலை, சோகை முதலான ரோகங்கள் தீரும்.

பத்தியம் :—

கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கி ஆகாரத்தை உட்கொள்ளவும். வேண்டிய அளவு நல்லெண்ணெய்க் கூட்டிக்கொள்ளவும்.

23. சோகை, முதலானதற்கு "நந்தியாவட்டைச் சூரணம்"

அடுக்குநந்தி யாவட்டைச் சிவதைவேரு
கதுகளுட பட்டையுமே கொண்டுவந்து
கடுக்காயுஞ் சமபாக மிடித்துமேசர்க்
கரைகலந்து வெருகடியி னளவெடுத்துக்
கொடுக்கவுங் காமாலை பைத்தியமும்பாண்டு
கொடுஞ்சோகை யுடன்றீரு மெளியோர்தங்கள்
இடுக்கண்களைத் தீர்க்குஞ் சரபபூப
னெழில்முறையை யெல்லோரு மிதங்கொள்வாரே.
(ருச)

(இ-ள்.)

அடுக்குப் புஷ்பங்களாகப் புஷ்பிக்கும் நந்தியா
வட்டை வேரின் மேல்த்தோல்
பாலில் வேகவைத்தெடுத்த சிவதைவேரின்
மேல்த்தோல்
கடுக்காய்த் தோல்

இவைகளைச் சமபாகமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தை மூவிரல் கொள்ளுமளவு எடுத்து, வெந்நீருடன் உட்கொள்ளக் கொடுக்க

காமாலை, பித்தாதிக்கம், பாண்டு, சோகை, முதலிய நோய்கள் தீரும்.

24. பாண்டு, காமாலைக்கு 'மண்டூரச் சிந்தூரம்'

உரிய கோமூத்திரத்திற் பழங்கிட்டத்தை
யுண்மையுட னேவேக வைத்தெடுத்துக்
கரிசாலைச் சாறதனிலே யரைத்துக்
கருத்துற்றே யொருபடியாய் வில்லைதட்டிப்
பிரியமுள நிழலினி லுலர்த்திக்கொண்டு
பின்பு வராகப்புடம் வைத்தெடுத்தேயேழு
திரமுமிப்படிச் செய்யவே மண்டூரம்
சிந்தூரமா மதனைப் பொடித்துக்கொண்டே. (டுடு)

கொண்டபின்பு பணவெடை சிந்தூரந்தேனிற்
கொள்ளவும் நீராமைமகோதரமும் பாண்டு
பண்டுற்ற பெருவயிறுதிடுங்காமாலை
பண்பாகத் தீரும் வெண்காரத்தோடே
தண்டிகழ் நாயுருவிநன்னீர் முள்ளிகையாந்
தகரையொடு சூரணங்க ளனுபானங்கள்
கொண்டிடலாம் வண்டுறை பூமாலைமேவும்
கோமகனுஞ் சரபேந்திரன் கூறும்வாறே. (டுசு)

(இ-ள்.)

பசுவின் மூத்திரத்தில் கிட்டத்தைப் போட்டூறவைத்து, மறுநாளடுப்பின் மேலேற்றி, நன்றாக வேகவைத்து எடுத்துக் கழுவிக்கொள்ளவும்.

இதை யொரு கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, ஒரு கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறு விட்டு நன்றாக அரைத்து ஒரே வில்லையாகத் தட்டி நிழலில் காயவைக்கவும்.

இதை ஒரு அகலில் வைத்துச் சீலைமண் செய்து, வராக புடம் இடவும். இவ்வாறு 7 தடவை செய்யவும். துல்ய மான மண்டூரச் செந்தூரம் கிடைக்கும்

இதில் $3\frac{1}{3}$ குன்றியளவு வீதமெடுத்துத் தேனில் குழைத் துச் சாப்பிட

நீராமை, மகோதரம், பாண்டு, பெருவயிறு, ஊது காமாலை, முதலிய நோய்கள் அகலும்.

மேலும், வெங்கார பற்பம், நாயுருவி, நீர்முள்ளி, கையாந் தகரை முதலான கஷாயங்களான அனுபானங்களிலும் உட் கொள்ளலாம்.

குறிப்பு :—

வராகபுடம் :—ஒரு முழம் நீளம், அகலம், உயரம் இருக் கும்படியாக வரட்டிகளையடுக்கி, அதன் மத்தியில் சரக்குகளை வைத்துப் புடமிடுதல்.

---

25. பாண்டு முதலானதற்குக் "கண்டாமலகம்"

நெல்லிக்காய்ச் சாறொருகாற்படி பிழிந்து
நேர்மையுட னடுப்பேற்றிக் கொதிக்கும்போது
நல்ல சர்க்கரைப் பலம் போடிருபத்தைந்து
நாழிசெந்தே னெய்யுரி சீரகம்நாகப்பூ
சொல்லுமிலவங்கப் பத்திரியுமேலந்
துலங்குமிலவங்க மதிமதுர மல்லால்
வல்லுறுஞ் சித்திரமூல வேரின்பட்டை
வாய்விளங்க மிந்துப்பு வகையாய்ச்சேரே. (ருஎ)

வகையொன்று பலமரைதான் சூரணித்து
வளமாக பாகிறக்கித் தூவிக்கிண்டி
நிகரில்லாத்துரிய கண்டாமலகந் தன்னை
நிதமூன்று காசெடை கொள்ளுதயந்தன்னில்
தொகுமிரத்த பித்தமுடன் பித்தபாண்டு
சுவாசமுடன் சோபங்காமாலை யெல்லா
மகலுமே தேகசவுக்கிய முண்டாகு
மண்ணலெனுஞ் சரபேந்திர னருளிதாமே, (ருஅ)

(இ-ள்)

நெல்லிக்காய்ச் சாறு ¼ படி யெடுத்து அடுப்பின்மே லேற்றிக் காய்ச்சிக், கொதிக்கும்போது சர்க்கரை 25 பலம் போட்டுப் பாகுசெய்து,

சிரகம்	சிறுநாகப்பூ
இலவங்கப்பத்திரி	ஏலக்காய்
கிராம்பு	அதிமதுரம்
கொடிவேலிவேர்ப்பட்டை	
வாயுவிடங்கம்	இந்துப்பு

இச்சரக்குகளை வகைக்கு ½ பலம் வீதம் எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பாகில் போட்டு பசுவின் நெய் 1 படியும் விட்டுக் கிளறி லேகிய பதமாக இறக்கிக்கொள்ளவும். இது 'கண்டாமலக' லேகியமாகும். இது ஆறியவுடன் சுத்தமான தேன் ½ படி விட்டுக் கிளறி வைத்துக்கொள்ளவும். தினமும் 3 வராகனெடை வீதம் காலையில் இந்த லேகியத்தை உட்கொள்ள

இரத்தபித்தம், பித்தபாண்டு, சுவாசம், வீக்கம், காமாலை முதலிய நோய்கள் தீரும். உடம்பும் நன்றாகும்.

26. சகல பாண்டு முதலானதற்கு "மண்டூரச் சூரணம்"

கரிதுறு நற்குணமான பழங்கிட்டத்தைக்
கருத்துத் தேமணலுங்கற் பொருக்கிப்போட்டு
திருத்தமுடன் சூரணித்துப் படிதூளாகிற்
சிருற்ற பசுவின் நீர் படியெட்டேகொண்
டுருமையுடனே யுலர்த்திக் கொண்டிடித்தே
யுண்மையுடன் கொடிவேலி வேரின்பட்டை
திரிகடுகுத் திரிபலைநற் றேவதாரஞ்
செவ்வியந் திப்பிலிமூலந் திறமாய்ச்சேரே. (ருக)

திறமான மரமஞ்சள் வாய்விளங்கஞ்
செப்புமிவை சமனுகச் சூரணித்து
யுறமான சேலுதனில் வடியுமேகொண்
டுண்மையுடன் முன்றாளுமே கலந்து
நிறைகழஞ் சோர்பொழுதும் பசுமோரிற்கொள்ள
நிகழ்த்தும் வயிற்றுக்குளருந் திரட்சிதானு
மருவியெழு புகைச்சற் காமாலைமூலம்
மகத்தான பாண்டுடன் கால்வீக்கம்போமே. (சுயி)

(இ-ள்.)

பழய கிட்டத்தைக் கொண்டுவந்து, இடித்து அதிலுள்ள மண், கல்முதலியவைகளை நீக்கி, அச்சூணரம் 1 படிக்கு, 8 படி பசுவின் மூத்திரம் விட்டு, 4 அல்லது 5 நாள் அப்படியே வைத்து, உலர்த்திக்கொள்ளவும். பின்பு,

கொடிவேலிவேர்	சுக்கு
திப்பிலி	மிளகு
கடுக்காய்த்தோல்	தான்றிக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி	தேவதாரு
செவ்வியம்	கண்டத்திப்பிலி
மரமஞ்சள்	வாயுவிடங்கம்

இவைகளைச் சமனுகவெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ் திரகாயஞ் செய்துகொண்டு, முன்கூறிய கிட்டத்தின் சூரணத் துடன் கலந்து வைத்துக்கொண்டு, 1 கழஞ்சு வீதம் (40 குன்றி) பசுவின் மோரில் சாப்பிட்டு வர

வயிற்றிலுள்ள கட்டி, புகைச்சல், காமாலை, பாண்டு, கால்வீக்கம் முதலிய ரோகங்கள் தீரும்.

---

27. பாண்டு, காமாலை முதலானதற்கு "எலுமிச்சம்பழ லேகியம்"

பழங்கிட்டங் காந்தமரப் பொடியிந்துப்போர்
பலம்வகைக்கு மிளகுதிப்பிலி வெள்ளுள்ளி
வழங்குமிருபலம் வகைக்குக் கடுக்காய்பத்து
வண்மையுடனே யிடித்துப்பொடிசெய் தேசிப்
பழம் பன்னிரண்டதை நாலாய்ப்பிளந்துள்
பண்பான சூரணத்தை யூட்டிமேலுந்
தழும்பற்ற கலசத்துள் வைத்துக்கையாந்
தகரையின் சாற்றுல்பழத்தை மூடிடாயே. (சுக)

மூடியபின் பகல்முழுது மிரவிதன்னில்
மோகமுடன் வைத்திவா யிரவுதன்னிற்
கூடியகால் நாழியனலாவியேறக்
கொண்டிடுவா யிவ்விதமாய்ப் பத்துநாள்கேள்
நாடி கையாந்தகரைச் சாறுசுண்டில்
நலமாமச்சாறு முன்போல் விட்டுக்கொள்ளு
நீடுபதிஞ்ரோநாள்ச் சாறுகண்ட
நேர்மையுடனே யெரியிட்டெடுத்திடாயே. (சுஉ)

எரித்ததனை யெடுத்துக் கல்வத்திலிட்டே
யெழிலான வெண்ணெயைப்போ லரைத்தபின்பே
யுரிய புதுச்சட்டிதனிலெள்ளினெண்ணெய்
உண்மையுடன் மூவுழக்கு விட்டுக்கிண்டி
யெரியடுப்பில் லேகியம் போலானவாறே
யிறக்கியே கழற்கொடிக்காயளவாயுண்கில்
இருமலொடு பாண்டு காமாலைசத்தி
இளைக்குமஸ்திச் சுரங்கைகால் அசதியோடே. (சுஉ)

ஓடுமதிசார மக்கினியின் மாந்த
மோர்பதினேர் விப்புருதி யன்னத்துவேட
நீடுசுரத்தோடிரத்த பாண்டுமல்லால்
நிகழ்த்துவிட பாகமெய் வீக்கங்கேளு
காடுகரப்பான் முதலா யாவுந்தீரு
நலம்பெறவே தென்னளகைப் பதியில்வாழுங்
கூடியவன்பத்தாறு தேசராசர்
கொண்டாடுஞ் சரபேந்திரன் கூறும்வாறே. (சுச)

(இ-ள்,)

பழய கிட்டம் சுத்திசெய்த காந்தம்
சுத்திசெய்த இரும்புத்தூள் பொரித்த இந்துப்பு

இவைகள் வகைக்கு 1 பலம்

மிளகு திப்பிலி
வெள்ளைப்பூண்டு

இவைகள் தனித்தனியே 2 பலம்

கடுக்காய் 10 (எண்ணிக்கையில்)

இச்சாக்குகளை யெல்லா மொன்று கலந்து, கல்லுரலிலிட் டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

12 எலுமிச்சம்பழங்களைக் கொண்டுவந்து, அவை களைத் தனித்தனியே நாலாகப் பிளந்து, முன் சொன்ன சூரணத்தை அதற்குள் அடைக்கவும். இப்பழங்களை ஒரு வாயகன்ற சட்டியில் வைத்து, அது முழுகும்படி கையாந் தகரைச்சாறு விடவும். இதைப் பகல் முழுவதும் வெய்யிலில் வைக்கவும். இரவு நேரத்தில் மேற்படி கலசத்தை அடுப்பின்மேல் வைத்து அனல் தாக்கும்படி செய்யவும். இவ்வாறு 10 நாட் கள் செய்யவும். கையாந்தகரைச்சாறு சுண்டிவிட்டால், மறு படியும் அச்சாற்றைச் சேர்த்துக்கொள்ளவும். 11-வது நாள் சாறு மிகுந்திருந்தால் சட்டியை அடுப்பின்மேல் வைத்து நன் றாக எரிக்கவும். ஆறியபின், மேற்படி பழங்களை எடுத்துக் கல் வத்திலிட்டு, வெண்ணெயைப்போல் அரைத்துத்கொள்ள வும். ஒரு புதுச்சட்டியை அடுப்பின்மேல் வைத்து, அதில் முன் சொன்ன எலுமிச்சை விழுதையிட்டு, நல்லெண்ணெயும் 3 உழக்கு விட்டுக் கிண்டி லேகிய பதத்திலிறக்கவும.

இதில் ஒரு கழற்சிக்காயளவெடுத்துச் சாப்பிட

இருமல், பாண்டு, காமாலை, வாந்தி, இளைப்பைத் தரும் எலும்பைப்பற்றிய ஜ்வரம், கைகாலசதி, அதிசாரம், மந்தாக் கினி, 11 வகை விப்புருதி, ஆகாரத்தில் வெறுப்பு, சுரம், ரத்த மின்மை, (பாண்டு) விஷங்கள், உடம்பின் வீக்கம், கரப்பான் முதலான பற்பல ரோகவகைகள் தீரும்.

குறிப்பு :—

இந்த முறையில் 'பொற்றலைக் கையாந்தகரை'யை உப யோகிப்பது வழக்கமாயிருக்கிற்து.

---

28. பாண்டு முதலானதற்கு "லோகச் சிந்தூரம்"

நல்லெண்ணெய் காடிகோசலமூ மோரி
னயக்காணச்சா றெலுமிச்சம்பழத்திற்
சொல்லுமரப்பொடியதனை யொவ்வொன்றிற்கே
யுள்ச்சுவற வொருநாளுறவைத்தெடுத்து
வெல்லுகரிப்பான் பிரமி யாடாதோடை
வேண்டுமுருக்கிஞ்சியும் நீர்முள்ளியோடே
வல்லமையாந்தேட்கொடுக்கி சீந்திற்றண்ணீர்
வழுத்துகொட்டைக் கரந்தைக் கத்தரியுமாமே. (சுடு)

அரியவேலம்பட்டை யரசம்பட்டை
யரத்தை குடிநீராலம் பட்டையோடு
மூரியபெருஞ் செருப்படி மாதளம்பழச்சா
றெவ்வொன்றில் புடம்பத்து வைப்பீராகில்
விரியுமயச் செந்தூரமாகுங் கண்டாய்
விளங்குமதிற் பணவெடையும் மிளகுசுக்கு
கரியதிப்பிலி இவைகள் சமனதாகக்
கண்டிடவே பொடித்ததனிற் சேர்த்திடாயே. (சுசு)

சேர்த்ததனிலிரண்டு பணவெடையுங்கொண்டு
தேன்விரவிக் கொடுத்திடுவாய் பாண்டுவல்லாய்
நேர்வயிற்றுப் பொருமல் மெய்க்கன்பிணெடு
நிகழ்த்து காமாலை திமிரெல்லாந்தீரும்
பாரதிலே மனிதருட நேர்மைகண்டு
பாங்கான வனுபான வகையிலீதன்
மாரனெனுஞ் சரப பூபாலனிந்த
வைத்திய நூலாய்ந்துகவி வகுத்தவாறே. (சுள)

(இ-ள்)

நல்லெண்ணெய்	காடி
பசுவின் முத்திரம்	மோர்
எலுமிச்சம்பழச்சாறு	கொள்ளுக்கஷாயம்

இத்திரவ பதார்த்தங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாள் வீதம் இரும்புத்தூளை (1 பலம்) ஊறவைக்கவும்.

கரிசலாங்கண்ணி	பிரமி
ஆடாதோடை	முருக்கு
இஞ்சிச்சாறு	நீர்முள்ளி
தேட்கொடுக்கி	சீந்தில்கொடி
கொட்டைக்கரந்தை	கத்தரிக்காய்
வேலம்பட்டை	அரசம்பட்டை
சிற்றரத்தைக்கஷாயம்	ஆலம்பட்டை
பெருஞ்செருப்படி	மாதளம்பழச்சாறு

இம்மருந்துகளின் சாறு அல்லது கஷாயம் விட்டுத் தனித் தனியே அரைத்து, 10 புடங்கள் வீதம் ஒவ்வொன்றிலும் போடவும்.

சுத்தமான அயபற்பம் கிடைக்கும். இதில் $3\frac{1}{8}$ குன்றியளவெடுத்துச் சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளின் சூரணம் $6\frac{2}{8}$ குன்றியுடன் (திரிகடுகு) கலந்து தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

பாண்டு, வயிற்றுப் பொருமல், காமாலை, திமிர் முதலான ரோகங்கள் தீரும். நோய்க்குத் தகுந்த அனுபானங்களிலும் சாப்பிடலாம்.

---

29. மகோதரம், முதலானதற்கு "மண்டூர வடகம்"

கொடிவேலிவேர்ச் சதுரக்கள்ளியின் வேர்
கொன்றையின் வேர்ப்பட்டையும் நாகணத்திவே
நெடிதான வெள்ளெக்காக்கண வேரல்லால் [ரும்
நெருஞ்சி சிறுவழுதலை சாரணையின்வேரு
கடுநெல்லி தான்றியுஞ் சேங்கொட்டையோடு
கருவேப்பந் தண்டரசம் பட்டைநல்ல
வடிவுற்ற கண்டங்கத்திரியும் பேரா
மல்லி சிற்றுமல்லி சிவதையு முணர்ந்தே. (சுஅ)

உணர்ந்திவையின் வேருந்தூரும் பிரித்தே
ஒவ்வொன்றுக்கோர் மூன்றுபலம் நிறுத்து
கணக்குடன் கோமூத்திர வெள்ளாட்டுநீருங்
கைபாகமாகவுந் தூளிதற் சேர்த்தே
குணமுறுமவ் வேருகடாயமுமே காய்ச்சிக்
கொண்டிருந்துப் பதமாக மேலுங்காய்ச்சி
இணக்கமுடன் மரமஞ்சள் தேவதார
மிரும்புபொடி சுக்குடன் சிரகமுமாமே. (சுக)

சிறுமூலம் வெட்பாலையரிசி கிட்டங்
திப்பிலியரத்தை யதிவிடையங் கோட்டஞ்
சிறுநாகப்பூ விழலினரிசியுஞ் சா-
திக்காய் கற்கடக சிங்கி தில்லம்பாலுஞ்
சிறுதேக்கு மிளகுடனே யசமதாகஞ்
செப்புதுவட்சிகையும் யெவட்ச்சாரத்தோடே
யுறுகருஞ் சீரகமல்லாற் கடுகுரோகிணி
யுண்மையுடனே வகைக்குப் பலமிரண்டே. (எம)

பலமிரண்டாகப் பொடித்துத் தூவிக்கிண்டி
பருங்கழற் காயளவுண்டை செய்துலர்த்தி

நலமான மண்டூர வடகந்தன்னை
நற்றேனில்லது நெய்யில் மோரிலாதல்
மலரத்தூள்ச் செய்தொன்றை யுண்பீராகில்
மகோதரங் காமாலை பித்தபாண்டுகுன்மஞ்
சலோதரம் பீலிகைசோகைக் காசத்தோடு
சகசமாய் பெருவயிறுட்டிணமும் போமே, (எக)

(இ-ள்.)

கொடிவேலி வேர் சதுரக்கள்ளிவேர்
கொன்றைவேர்பட்டை *நாகணத்திவேர்
வெள்ளைக்காக்கணவேர் நெருஞ்சில்வேர்
சிறுகத்தரிவேர் சாரணைவேர்
கடுக்காய்த்தோல் தான்றிக்காய்த்தோல்
சுத்திசெய்த சேராங்கொட்டை
கருவேப்பந்தண்டு (ஈர்க்கு)
அரசம்பட்டை கண்டங்கத்திரி வேர்
பேராமல்லி சிற்றாமல்லி
சுத்திசெய்த சிவதைவேர்

இச்சரக்குகளை வகைக்கு 3 பலம் வீதம் நிறுத்து, ஒன்றிரண்டாக இடித்துப் பசுவின் மூத்திரம், வெள்ளாட்டு மூத்திரம் இவைகளில் தனித்தனியே (சுமார் 5 படி விட்டு) அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி, ஒரு சட்டியில் இறுத்து மறுபடியும் அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சவும். பின்பு,

மரமஞ்சள் தேவதாரம்
சுத்திசெய்த இரும்புத்தூள் சுக்கு
சீரகம் திப்பிலி (யானை)
வெட்பாலை அரிசி சுத்திசெய்த கிட்டம்
திப்பிலி சிற்றரத்தை

* நாகணம் என்ற சரக்கிற்கு நேர்வாளத்தின் வேரையும் எடுத்துக் கொள்ளலாம்.

அதிவிடையம்	கோஷ்டம்
சிறுநாகப்பூ	விழலரிசி
சாதிக்காய்	சிறுதேக்கு
கற்கடசிங்கி (கடுக்காய்ப்பூ)	தில்லம்பால் (உறைந்
மிளகு	ஓமம் [தது
கடுக்காய்ப்பிஞ்சு	எவச்சாரம்
கருஞ்சீரகம்	கடுகுரோகிணி

இச்சரக்குகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்துக் கல்லுர லிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, கொதித்து இறுகும் கஷாயத்துடன் தூவிக் கிண்டவும்,

இதை ஒரு பெருங் கழற்சிக்காய் பருமனுள்ள உருண் டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும், இம் 'மண்டூர வடகத்தை'த் தேனிலோ, நெய்யிலோ அல்லது மோரிலோ தூள் செய்து குழப்பிச் சாப்பிட,

மகோதரம், காமாலை, பித்தபாண்டு, குன்மம், ஜலோ தரம், சோகை, காசம், வயிற்றுக்கட்டி, பெருவயிறு, உஷ் ணம் முதலான பற்பல ரோகங்கள் தீரும்.

---

30. பாண்டு முதலானதற்கு "வில்வாதி லேகியம்"

(சந்தம் வேறு.)

பகரும் வில்வத்தின் வேரிருநூறதாம்
பலமு நன்னரிவேர் பெருவாகைவேர்
திகழுறும் வெட்டிவேரிலாமிச்சம்வேர்
சிறந்த பாதிரிவேர் சிறுவாகைவேர்

நுகர்பெரு விளாவேர் தேற்றும்வேருடன்
உண்மையாகுஞ்சிறு விளாவேருங்கொள்
புகர் முசுமுசுக்கை வகைக்கோர்பலம்
புனிதமாயிடித்தோர் பாண்டத்திற்கொள்ளே. (எஉ)

கொண்டிரு கலத்தண்ணீர் விட்டேயெரி
குறுகவே யெட்டிலொன்றாய் வடித்ததிற்
கண்டங்கத்திரி கொம்மட்டி மாதளை
கன்றிடா தெலுமிச்சம்பழமும் நீர்ச்
சுண்டிடாத நல்லிஞ்சி யோரொன்றுக்குத்
தோகையர் நாழிரசமுடன் சர்க்கரை
கண்டிடு பலமைம்பதுங் கூட்டியே
கரைத்துமுன் கடாயத்திற் கலந்திடே. (எஙு)

கலந்தடுப்பினெரி குழம்பாகவே
கருஞ்சீரக மரமஞ்சள் செவ்விய
மெலுமிச்சம் விரையுஞ் சடாமாஞ்சிலு
மிந்துப்புஞ் செங்கழுநீர்க் கிழங்குட
னிலவங்கப்பட்டை கோட்டம் வில்வப்பழ
மெழில்விளாம்விரை வாய்விளங்கந்திரி
பலிதிரிகடுகேலஞ் சதகுப்பை
பண்புடன் கொத்தமல்லி கிராம்புமே. (எச)

மேவுஞ் சந்தனந்தா னிருபத்திரி
மென்மையாஞ் சிறுதேக்கும் பரிமளப்
பூவுஞ் சித்திர மூலமரேணுக
புனித முந்திரிகைப்பழஞ் செண்பகப்
பூவுடன் விழலரிசியுமே நல்
புகழ்பருத்தி விரையுஞ் சிறுநாகப்
பூவதிமதுரந் தேவதாரமும்
புகலு மிவ்வகைக்குச் சமன்செய்திடே. (எடு)

செய்திடுபின்னிடித்து வடிக்கொள்ளு
சேரவே முன்குழம்பதிற் தூவியே
நெய்யும்நாழி விட்டேகிண்டி நற்பத
நேரிடும்போ திறக்கிடு நாழிதேன்
பய்யவேவிட்டு நன்முய்க் கிளறிடு
பகரும் வில்வாதிலேகிய மீதுண்ணி
லுய்ந்திடுவர் சுவாசம ரோசிக
முலர்த்திடுஞ் சயம்விக்கலின்னங்கேளே. (எசு)

கேள் மகோதரம் பாண்டதிசாரமுங்
கிராணியும் மருந்திடு மிரத்தமூந்
தாள்கரத்தி னெரிவு வெள்ளோக்காளஞ்
சத்திகாசம் பைத்தியஞ் சூலையு
நாள்துடர்ந்திடுமஸ்தி சுரமுட
லுடுவீக்கமசதியுந் தீரும்பொன்
முளிஞைப் பணிந்தோர் கலிதீர்த்திடும்
தயவுருஞ் சரபேந்திரன் முறையிதே. (எஎ)

(இ-ள்.)

மேல்த்தோலை நீக்கிய வில்வத்தின் வேர் } 200 பலம்

நன்னரி வேர் — பெருவாகை வேர்
வெட்டிவேர் — இலாமிச்சைவேர்
பாதிரிவேர் — சிறுவாகை வேர்
பெருவிளாவேர் — தேற்றுங்கொட்டைவேர்
சிறுவிளாவேர் — முசுமுசுக்கை

இவைகள் வகைக்கு ஒரு பலம்

இவைகளை வெட்டிக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு, 24 மரக்கால் ஜலம் விட்டூறவைத்து, அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன் றாகக் காய்ச்சவும். இதை வேறொரு பாத்திரத்தில் வடிகட்டிக் கொண்டு, இதனுடன்

கண்டங்கத்திரி	கொம்மட்டி மாதளை
எலுமிச்சம்பழம்	இஞ்சி

இவைகளின் சாறுகள் வகைக்கு 1 படி விட்டு, சாக்கரை 50 பலமும் போட்டுக் கரைத்து, அடுப்பின்மேலேற்றிக் குழம்பா கும் வரை எரிக்கவும். பின்பு,

கருஞ்சீரகம்	மரமஞ்சள்
செவ்வியம்	எலுமிச்சை விதை
சடாமாஞ்சில்	இந்துப்பு
செங்கழுநீர்க்கிழங்கு	இலவங்கப்பட்டை
கோஷ்டம்	வில்வப்பழம்
விளாமபழ விதை	வாயுவிடங்கம்
கடுக்காய்த்தோல்	தான்றிக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி	சுக்கு
திப்பிலி	மிளகு
ஏலக்காய்	சதகுப்பை
கொத்தமல்லி	கிராம்பு
சந்தனம்	ஜாதிப்பத்திரி
இலவங்கப்பத்திரி	சிறுதேக்கு
மராட்டிமொட்டு	கொடிவேலிவேர்பட்டை
காட்டுமிளகு	திராக்ஷைப்பழம்
செண்பகப்பூ	விழலரிசி
பருத்தி விதை	சிறுநாகப்பூ
அதிமதுரம்	தேவதாரம்

இச்சரக்குகளை வகைக்குச் சமனெடை (½ பலம்) எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, முன்

கூறிய பாகில் போட்டுக்கிண்டி, பசுவின் நெய் 1 நாழியும் விட்டுக் கிளறிப் பதத்தில் இறக்கவும். இவ் 'வில்வாதி லேகிய'த்தைச் சாப்பிடச்

சுவாசம்	அரோசகம்
கூயம்	விக்கல்
மகோதரம்	பாண்டு
அதிஸாரம்	கிராணி
மருந்தீடு	இரத்தநோய்
கை, கால்களின் எரிச்சல்	
வெள்ளோக்காளம்	
வாந்தி	இருமல்
பைத்தியம்	சூலை
நாள்ப்பட்ட அஸ்திசுரம்	
வீக்கம்	அசதி

முதலான பலவித ரோகங்கள் தீரும்.

---

31. பாண்டு ரோகத்திற்குக் "குமரி பற்பம்"

இரதநற் கெந்தகஞ் சாதிலிங்கமு
மிதுவராகனெடை வகைகொண்டரை
யரப்பொடியின் வராகனெடை சொல்லை
யாறதாகும் வராகனெடையு முன்
அரிய காந்தங் கற்றுழையின் சாற்றினி
லுண்மையாய் முறித்துக்கொள் சாறுவிட்
டரை யிருபத்திரெண்டரை நாழிகை
யானபின் புதுச்சட்டியு ளிட்டிடே. (எஅ)

இட்டிடு மறுசட்டியிலை மூடி
யிடைதெரியாமற் சீலமண் செய்திடு
யெட்டுச் சாமங்கமலாக்கினியாக
யெரித்திட் டாறவைத்தே யிடுபாண்டத்துள்
திட்டமாமிதன்பேர் குமரிப்பற்பந்
தேனில் மூன்றுபணவெடை தன்னையே
சட்டமாய்க் குழைத்தே யிருவேளையுந்
தந்திடாய் பத்துநாள தின்மேற் கேளே. (எசு)

கேள்மறுபத்தியம் பத்து நாளிளங்
கீரையாகு மிளகை நன்றுகச்செய்
தூளனத்தினை யுண்டிடும் போதுமேற்
தூவிக்கொள்ளவும் பத்தியமாகுமன்
னுள்புளிப்புக் கசப்பு முப்பாகாது
நவிலும் பாண்டு வியாதியுந்தீருமே
தோளிற் பங்கயப் பெண்ணுரையுமதி
சுந்தரச் சரபேந்திரன் முறையிதே. (அய)

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, லிங்கம்
,, கெந்தகம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை யெடுத்து, முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றுகக் கறுப்பாகும் வரை அரைக்கவும் இதனுடன் பின்பு லிங்கத்தைச் சேர்த்து அரைத்தபின், சுத்தி செய்த அரப்பொடி 6 வராகனெடை கூட்டிக் *கற்றுழைச்சாறு விட்டு 22½ நாழிகை (10¼

* கற்றுழை மடலைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கடுக்காய்த் தூள் போட்டுப் பிசறிவைத்து இடித்துச் சாறுபிழியவும்.

மணிநேரம்) அரைத்து ஒரு புதுச்சட்டிக்குள் வில்லையாகத் தட்டி வைக்கவும்.

இச்சட்டிக்குத் தகுந்த வேறொரு அகலினுல் மூடி இடை வெளியில்லாமல் சீலமண் செய்யவும்.

இதை ஒரு அடுப்பின்மேல் வைத்துக் கமலாக்கினியாக 6 ஜாமங்கள் எரித்து ஆறவைத்து ஒரு பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும். இது 'குமரி பற்பமா'கும்.

இப்பற்பத்தில் 10 குன்றிமணி எடை எடுத்துத் தேனில் குழைத்து 2 வேளை வீதம் (காலையிலும் மாலையிலும்) 10 நாளைக்குச் சாப்பிடவும். பத்து நாளைக்கு மறுபத்தியமும் பிடிக்கவும்.

பத்தியம் :—

10 நாளைக்குக் கீரை வகைகளையும், மிளகுத் தூளையும் ஆகாரத்துடன் சேர்த்துக்கொள்ளவும். புளிப்பு வகைகளை யும், கசப்புப் பதார்த்தங்களையும், உப்பையும் நீக்கவும்.

பாண்டு ரோகம் தீரும்.

---

32. பித்த, விஷ, பாண்டு முதலானதற்குக் "கரிப்பாணதி லேகியம்"

கரிசாலை குப்பைமேனி நீர்முள்ளியுங்
காட்டுமல்லிகைக் காட்டாமணக்குமே
பிரிமியு மாடாதோடை பொடுதலை
பின் முசுமுசுக்கை நல்நொச்சியுஞ்
சரிவகைக்கதின் சாறொரு காற்படி
சார்ந்த தேசிப்பழச்சாறுங் காற்படி
உரிய நற்புதுச்சட்டியில் விட்டெடலா
முயர்ந்த திப்பிலிசுக்கு மிளகுஞ்சேர். (அக)

சேர்வகைக்குப் பலமரையாகவே
செவ்வியஞ் சாதிக்காயுஞ் கிராம்புமே
யோர்குராசானி யோமம் மதுரமு
மிசைந்த கோட்டம்சமதாகத்துடன்
சீர்பெருங் கடுகுரோகணி காயமுஞ்
செப்புமொவ்வோர் வகைக்கொரு காசெடை
கூர்மையாகுமயப்பொடியோர் பலங்
கொள் கடுநெல்லியீர் பலமாகுமே. (அஉ)

ஆகுகாந்தம் வராகனெடையு நான்
கழகுறுங்கிட்டம் மொருபலம் பேய்ப்புடல்
பாகமுமோர் பலங்கொள்ளிதுவெலாம்பண்
டிறுத்த நற்சாறதனிலேயரைத்
தேகமான வடுப்பதிற் காய்ச்சியே
யிளம்பதத்தினி லோர்படி தேன்விடு
வேகமாகவே நெய்படி யொன்றுமே
விட்டுக்கிண்டிச் சர்க்கரையுமிடேன். (அங)

இடுவது பலமோர் மூன்றதாகுமே
யிறக்கிடு கரிப்பானுதி லேகிய
மடவுடன் காலமாலையுந் தேனுடன்
அருந்துவாய்க்கே வரைப்பாக்கள வாகவே
கொடியதாம் பித்தபாண்டு காமாலையுங்
குன்மந்தோந்த பித்தம்விட பாண்டுதீர்ந்
திடுமே கைப்புப் புளிப்புத்தவிரவீ-
தேயிசைந்ததோர் நல்பத்தியமாகுமே. (அச)

(இ-ள்.)

கையாந்தகரை	குப்பைமேனி
நீர்முள்ளி	காட்டுமல்லிகை
காட்டாமணக்கு	பிரமி

ஆடாதோடை	பொடுதலை
முசுமுசுக்கை	நொச்சி

இவைகளின் சாறு வகைக்கு ¼ படி.
எலுமிச்சம்பழச்சாறு ¼ படி.

இவைகளை யொன்று கலந்து ஒரு புதுச்சட்டியிலூற்றி அடுப்பின் மேலேற்றி எரித்துக் குழம்பாகும்போது

திப்பிலி	சுக்கு
மிளகு	

இவைகள் வகைக்கு ½ பலம

செவ்வியம்	சாதிக்காய்
கிராம்பு	குராசானி ஓமம்
அதிமதுரம்	கோஷ்டம்
ஓமம்	கடுகரோகிணி
பெருங்காயம்	

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

சுத்திசெய்த இரும்புத்தூள்	1 பலம்
கடுக்காய்த்தோல்	2 பலம்
நெல்லிமுள்ளி	2 பலம்
சுத்திசெய்த காந்தம்	4 வராகனெடை
,, கிட்டம்	1 பலம்
பேய்ப்புடல்	1 பலம்

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்து, மேற்கூறிய ஏதேனும் ஒரு சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குழம்பான சாற்றிலே குழப்பி, இளம்பதமாக இருக்கும்போது தேன் 1 படியும், பசுவின் நெய் 1 படியும், விட்டுக் கிளறி சர்க்கரை 3 பலமும் போட்டு, லேகிய பதமாக இறக்கவும்.

இந்தக் 'கரிப்பான்' லேகியத்தைத் தினமும் காலையிலும் மாலையிலும் தேனுடனே ½ கொட்டைப் பாக்களவு உட் கொள்ள

பித்தபாண்டு காமாலை
குன்மம் பித்தம்,
விஷபாண்டு முதலான நோய்கள் தீரும்.

பத்தியம் :—

கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் தள்ளவும்.

---

33. பித்த பாண்டு, வயிற்று வலிக்கு "வடகம்"

சாரணைக் கொடிவேலியின் மூலமுந்
தான்றியுங் கடுநெல்லி கடுக்காயுங்
கூறுந் திப்பிலியுந் தேவதாரமுங்
கோதறு மிளகும் மரமஞ்சளும்
வீறுருநல்ல விழலினரிசியு
மேவலம்புரிக் காயுடன் செவ்வியந்
தேறுநாற்பல மிவ்வகை யொன்றுக்கு
சேர்த்திடித்துத் தூளாக்கிப் பின்னிடே. (அடு)

இடுவாய்நாழி கிட்டப் பொடியுமலர
வெழிலயப் பொடியுமுழுக்கா மிவை
இடமதாகிய பாண்டத்திலே யிடு
சேரிரண்டுபடி யாவின் மூத்திர
மடவுடன் பதமாகவே காய்ச்சிநல்
லரும்பிரண்டை நெல்லிக்காயின்சாறுடன்
விடுமுந்நாழி யளவாயதனிலே வைக்க
வேகுறுகக் காய்ச்சிக் கொண்டிடே. (அசு)

கொண்டபின்பொருசாமமரைத்திடு
கொட்டைப்பாக்குப் பிரமாணமாகவே
யுண்டைசெய்து நிழலிலுலர்த்தியே
யுண்மையாக விரோசனமுங் கொடு
பண்டுறும் புளிமோரதிலோருண்டை
பண்புடன் உண்கொடும்பித்தபாண்டலாற்
கண்டிடுமோர் வயிறு வலியும்போம்
கனமதற்கு மிக்கைமுறை கண்டிடே, (அஎ)

(இ-ள்.)

சாரணை	கொடிவேலி வேர்
தான்றிக்காய்த் தோல்	நெல்லிமுள்ளி
கடுக்காய்த்தோல்	திப்பிலி
தேவதாரம்	மிளகு
மரமஞ்சள்	விழலரிசி
வலம்புரிக்காய்	செவ்வியம்

இவைகளை வகைக்கு 4 பலம் வீதம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு,

சுத்தி செய்த கிட்டத்தின் தூள் 1 படியும்
,, இரும்புத்தூள் 1 உழக்கும்

சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு, 2 படி பசுவின் மூத்திரம் விட்டு, அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி,

பிரண்டைச்சாறு	3 படியும்
நெல்லிக்காய்ச்சாறு	3 படியும் விட்டு

மறுபடியும் சுண்டக் காய்ச்சிப் பின்பு இவைகளைக் கல்வத்திலிட்டு ஒரு சாமம் அரைக்கவும். இவைகளைக் கொட்டைப்

பாக்களவுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொண்டு, நிழலில் காயவைத்துக்கொள்ளவும்.

நோயாளி ஆரம்பத்தில் பேதிக்குச் சாப்பிட்டபின், இவ் வுருண்டையி லொன்றை யெடுத்துப் புளித்த மோருடன் சாப்பிடப்

பித்த பாண்டு, வயிற்றுவலி, முதலான ரோக வகைகள் தீரும். கைகண்டது.

---

34. சோகை, பித்தபாண்டு முதலான நோய்களுக்கு "அரப்பொடியாதி வடகம்"

அரப்பொடியு மிளகுங் கடுகுஞ்சுக்
கசமதாக மிந்துப்பும் நேர்வாளமும்
பெருங்காயங் கருஞ்சீரகஞ் சீரக
மபின்கடுக்காயவட்சாரங் காந்தமு
மிருகிட்டஞ் சத்திட்சார மரத்தையோ
டிவ்வகைக்கு முக்காற்பல மாகவே
யரிய வெற்றிலையோடு பிரிகையாந்
தகரை வகைக்குரிசாறுமே. (அஅ)

சாறும் விட்டரைத்தே யுண்டைசெய்திடு
சார்ந்தரப் பொடியாதி வடகமாங்
கூறதாக நிழலி லுலர்த்தியே
கொள்புளியங் கொட்டைப் பிரமாணமே
தேறுங்கையாந் தகரையின் சாற்றினிற்
சீருடன்குழைத்தே யுண்ணச் சோகையும்
மீறிய பித்தபாண்டுடன் நீருநன்
மேன்மையா யிம்முறையி னெறியதே. (அக)

(இ-ள்,)

சுத்திசெய்த இரும்புத்தூள்
,, நேர்வாளம்
,, இரும்புக் கிட்டம்
,, எஃகு கிட்டம்
,, சுத்திசெய்த காந்தம்

மிளகு	சுக்கு
ஓமம்	இந்துப்பு
பெருங்காயம்	கடுக்காய்த் தோல்
எவச்சாரம்	கடுகு
சத்திச்சாரம்	சித்தரத்தை
சீரகம்	கருஞ்சீரகம்

இவைகளை வகைக்கு ¾ பலம் வீதமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு,

வெற்றிலைச்சாறு	⅛ படியும்
கையாந்தகரைச்சாறு	½ படியும்

தனித்தனியே சூரணங்களுடன் விட்டு நன்றாக அரைத்து, புளியங்கொட்டையளவுள்ள உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். இவைகளை நிழலிலுலர்த்தி வேண்டும்போது கையாந்தகரைச் சாற்றில் குழைத்துச் சாப்பிட

சோகை, பித்தபாண்டு முதலான நோய்கள் தீரும்.

---

35. சகல பாண்டு ரோகத்திற்கும் "மண்டூர வடகம்"

மரமஞ்சள் செவ்வியந் தேவதாரமு
மஞ்சளொவ் வோர்வகைக்கொரு பங்குகேள்
பெருங்காயங் கருஞ்சீரக மிந்துப்பும்
பேணுந் திப்பிலிமூலங் கடுக்காயுந்
திரிகடுகு மசமதாகத்துடன் சீரக
மிவ்வகைக் கிருபங்கு சே-
ருருமை யோடிது வெல்லாகயந்துதூளுள்
ளுரைக்கும் நற்சுத்தி செய்கிட்டமே. (கூ)

கிட்டமோ ரெட்டுப்பங்கதுவாமிவை
கிரமமாகக் கோமூத்திரம் விட்டரை
திட்டமாஞ் சுண்டைக்கா யளவாகவே
செய்துலர்த்தி மண்டூர வடகத்தை
சட்டமாக நன்மோரில் அரைத்துணு
சகல பாண்டறும் மண்டலந்தன்னிலே
விட்டிடு புளிப்புடன் கைப்புமே
வேந்தனுஞ் சரபேந்திரன் முறையிதே. (கூக)

(இ-ள்)

மரமஞ்சள் செவ்வியம்
தேவதாரம் மஞ்சள்

இவைகள் வகைக்கு 1 பங்கும்

பெருங்காயம் கருஞ்சீரகம்
இந்துப்பு கண்டத்திப்பிலி
கடுக்காய்த்தோல் சுக்கு
திப்பிலி மிளகு
ஓமம் சீரகம்

இவைகள் வகைக்கு 2 பங்கும் எடுத்துக் கல்லுரலிலிட்டு, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, இதனுடன் 8 பங்கு சுத்திசெய்த கிட்டத்தைத் தூள்செய்து கலந்து, கல்வத்தி லிட்டுப் பசுவின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்து, சுண் டைக்காயளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த் திக்கொள்ளவும்.

வேண்டும்போது 1 மாத்திரை யெடுத்து மோரில் குழப் பிச் சாப்பிடவும். 1 மண்டலத்தில் (40 நாட்களுக்குள்) சகலவித பாண்டுரோகங்களுந் தீரும்.

பத்தியம் :—

புளிப்புச் சுவையையும் கசப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும்.

---

36. பித்தபாண்டு ரோகங்களுக்கு "இலந்தையிலை மருந்து"

இலந்தையின் கொழுந்தைப் பறித்தே
பருவெலுமிச்சங்கா யளவாயரைத்ததை
பலந்தரும் பசுவின் பாலுரியதிற்
பண்புடன் குழைத்தே நுகர்பத்தியம்
நலந்தரு மெய்ப்பாலுடன் சோறுண்
ணவிலுமோ பித்தபாண்டறு முண்மையைத்
தலந்தனி லுனவர்க்குந் தெரிந்திடச்
சாற்றினர் சரபேந்திரன் முறையிதே. (கூஉ)

(இ-ள்.)

இலந்தைக் கொழுந்தை யொரு எலுமிச்சங்காயள வெடுத்து சிறிது தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துப் பசுவின்

பால் ½ படியுடன் குழப்பிச் சாப்பிடவும்.

பத்தியம் :—

அன்றையதினம் பசுவின் பால் விட்டுச் சாதம் சாப்பிட வும்.

தீரும் நோய் :—

பித்த பாண்டு முதலியவை.

---

37. பாண்டு முதலானதற்கு "அய பற்பம்"

சொல்லும் நல்லெண்ணெயினிலரப்பொடி
யைவேகவைத்துச் சுத்தியாக்கி
நெல்லியின்பருப்புக் கடாயம் புளி
யிலைச்சாறு நேர்மையான
வல்லுறு நாவற்பட்டைச் சாறு
தனிலேயரைத்து வண்மையாக
நல்லகெச புடமைந்து போட்டெடுக்கப்
பற்பமதாம் நவிலுவேனே. (கூந)

நவிலுவேனதற்குரிய வனுபானமுங்
கூட்டி நயந்துட் கொண்டால்
பவத்தினு லனுபவிக்கும் சோகை
யுடன்காமாலை பாண்டு தீரும்
தவத்தினு லத்துள சேந்திர
னருள் பாலன் தருமசாலி
குவலயத்திற் பேறுபெற விம்முறையைத்
தமிழினுற் சரபேந்திரன் கூறும்வாறே. (கூச)

(இ-ள்.)

இரும்புத்தூளை ஒரு நாள் முழுவதும் நல்லெண்ணெயி லூற வைத்து மறுநாளதை அடுப்பின்மேலேற்றி வறுத்துக் கொள்ளவும், இதை யொரு கல்வத்திலிட்டு

நெல்லிப்பருப்புக் கஷாயம்
புளிஇலைச்சாறு
நாகப்பட்டைச்சாறு

இவைகள் விட்டுத் தனித்தனியே நன்றாக அரைத்து வில்லை கள் தட்டி, அகலில் வைத்துச் சீலமண் செய்து, கஜபுடம் இடவும். இவ்வாறு 5 புடங்கள் போடவும். சுத்தமான பற்பம் கிடைக்கும்.

தக்க அனுபானங்களில் சாப்பிடச்

சோகை, காமாலை, பாண்டு முதலான நோய்கள் தீரும்.

---

38. விடபாண்டு ரோகத்திற்கு "மருந்து"

அரப்பொடி சித்தரத்தை மிளகிந்துப்பு
சீரகம் பேரரத்தை சுக்கு
கரியசீரகமு முள்ளித்திப்பிலி யோர்
பலம்வகைக்குக் கரிப்பா னல்லாற்
பிரமி பொடுதலை வகைக்குச் சாறுமிரு
நாழி யுடன் சங்கின்வேர்
சரியான மிளகரணையிலையிரண்டு
மரைத்தெலு மிச்சங்காய் நேரே. (கூடு)

அளவு கரிப்பான்சாறு முந்நாழி
தனிலிதெல்லா மரைத்ததின் மேல்
வளமுள நல்லெண்ணெயறுநாழியும்விட்
டிரவிதனில் வைத்துக்கொண்டே
உளமகிழ நாலாநாள் காசெடை நா-
லாகநிதமுட் கொண்டக்கால்
கிளர்விட பாண்டறு மெண்ணெய் மேகரணமுந் 1117
தயிரோடுங் கிருதமாமே, (கசு)

(இ-ள்.)

சுத்திசெய்த அரப்பொடி	சித்தரத்தை
மிளகு	இந்துப்பு
சீரகம்	பேரரத்தை
சுக்கு	கருஞ்சீரகம்
பூண்டு	திப்பிலி

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக்

கையாந்தகரைச்சாறு	பிரமிச்சாறு
பொடுதலைச்சாறு	

இவைகள் வகைக்கு 2 படி

சங்கம்வேர்	மிளகரணையிலை

இவ்விரண்டு மருந்துகளும் வகைக்கு எலுமிச்சங்காயளவு யெடுத்து அரைத்துக்கொண்டு படி சாறுவிட்டு ஊறவைத்து கடைச்சரக்குகளுடன் மறுபடியும் அரைத்துச்

சுத்தமான எள்ளெண்ணெய் 6 படியும் விட்டுக் கலக்கிச் சூரியபுடம் வைக்கவும். 4 நாளைக்குச் சூரியபுடமிடவும். பின்பு இந்த எண்ணெயில் 4 வராகனெடை யெடுத்துத் தினமும் உட்கொண்டுவர

விஷ பாண்டு தீரும்.

பத்தியம் :—

தயிர், நெய் இவைகள் கூட்டிய அன்னத்தை உட்கொள்ளவும்.

---

39. பாண்டு முதலானதற்கு "லேகியம்"

எருமையின்மோர் படிநாலிற் பேய்க்கொம்மட்டி
இலையையும் போட்டிறுக்கக் காய்ச்சி
யொருபடியாய்ச் சுண்டின் பின்னிறக்கியிலை-
யைப் பிசைந்தே யுண்மையாக
பிரியமுடன் பிழிந்து மிளகிந்துப்பு
சுக்கு விளாம்பிசினு மல்லாற்
பெருங்காயஞ் சடைக் கஞ்சாவிலைகருஞ்
சீரகமுந் திப்பிலியு மாமே. (கூஎ)

மாமதுரங் கொடிவேலி வேர்கற்க-
டசிங்கி மகிள் கிராம்போ
டோம மதிவிடய மிலவம்பிசினூ-
சிக்காந்த மோது மேலங்
கோமளஞ்சேர் சாதிக்காய் சாதியின்பத்-
திரி புளியங் கொட்டையின்றே
லாமத்தை விரையபினுஞ் சீரகங்கு-
ராசானி யோமஞ் சேரே. (கூஅ)

சேர்த்திடு காசுக்கட்டி யிவ்வகையொவ்
வொன்றுக்குத் திருத்தமான
ஏர்குடிநீர் நாழிக்கோர் கழஞ்சளவு
சூரணித்தே யெலாங் குமரதக்

காரெருமைப்பாலு மொருபடியுட்னே
குடிநீருங் கலந்து காய்ச்சிக்
கூர்மையுடனே குறுகி வரும்பதத்திற்
சூரணத்தைக் கொண்டுபோடே. (கூகூ)

கொண்டபின்பு தெளிவுற்ற நல்லெண்ணெ
யுமுழக்குக் கூட்டி யப்பாற்
பண்டுற்ற வெல்லமது வுழக்குடன்
காய்ச்சிப் பதந் தப்பாமற்
கண்டிறக்கி யோர்கலசத்திற் கொளு
தூபதீபங் காண்பித்தே
யுண்டிடரை மண்டல மோர்பாக்களவு
புளியுப்பு யொவ்வாதன்றே. (ஈ)

ஒவ்வு விளக்கெண்ணெய் யொன்றைவிட்டொருநா
டோய்ந்து குளியுற்றசோகை
யவ்விடபாண்டும் பித்த பாண்டுங்கா-
மாலையுடனடர்கிராணி
கவ்விய வாயுச்சயம் போந்தாதுவிருத்
தியுமுண்டாங் கனத்தபாரி
லெவ்வுயிருந் தன்னுயி ரென்றெண்ணுசர
பேந்திர மாலியம்பும் வாறே. (ஈக)

(இ-ள்.)

தண்ணீர் விடாத எருமைமோர் 4 படியில், பேய்க்கொம்மட்டி இலையை (1 வீசை)ப் போட்டு, அடுப்பின் மேலேற்றி ஒருபடியாகும் வரை சுண்டக் காய்ச்சவும். பின்பு இலைகளை நன்றுகப் பிசைந்து பிழிந்துவிட்டு,

மிளகு	இந்துப்பு
சுக்கு	விளாம்பிசின்
பெருங்காயம்	சுத்தமான சடைக்கஞ்சா
கருஞ்சீரகம்	திப்பிலி

[யிலை

அதிமதுரம்	கொடிவேலிவேர்
மகிழம்பூ	கிராம்பு
ஓமம்	அதிவிடயம்
இலவம்பிசின்	சுத்திசெய்த ஊசிகாந்தம்
ஏலக்காய்	சாதிக்காய்
சாதிப்பத்திரி	புளியங்கொட்டைத் [தோல்
ஊமத்தை விதை	அபின்
சீரகம்	குராசானி ஓமம்
காசுக்கட்டி	கற்கடசிங்கி (கடுக்காய்ப் பூ)

மூதலான இச்சரக்கு வகைகளை, 1 படி பேய்க்கொம்மட்டி கஷாயத்திற்கு 1 கழஞ்சளவு (40 குன்றி) வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். மோர்க்கஷாயத்துடன், எருமைப் பால் 1 படி விட்டு மறுபடியும் அடுப்பின் மேலேற்றி வற்றக் காய்ச்சவும் அது சுண்டி வரும்போது மை சூரணத்தைப் போட்டு நல்லெண்ணெய் 1 உழக்கும் கூட்டி, வெல்லம் 1 உழக்கு, ($\frac{1}{8}$ வீசை) போட்டு லேகிய பதம் பார்த்து இறக்கவும். இதை ஒரு கலசத்தில் பத்திரப்படுத்தி தூப தீபங்கள் காண்பித்து, தினமும் ஒரு பாக்களவு வீதம் எடுத்து 20 நாளைக்கு உட்கொள்ளவும்.

பத்தியம் :—

உப்பு, புளிப்புச் சுவைகளுள்ள பதார்த்தங்களை விலக்கவும். ஒன்றுவிட்டொருநாள் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

தீரும் வியாதிகள் :—

விஷபாண்டு, பித்தபாண்டு, காமாலை, வாதக்ஷயம், முதலியன. தாதுபுஷ்டியுமுண்டாகும்.

---

40. பாண்டு, கிரிச்ரங்களுக்கு "நெய்"

ஆதலே காக்கணஞ் சிவதை கொடிவேலி
சாரடை வேரைந்துந்தானே
நீதமொவ்வோர் வகைக்கு நாற்பலங்கூட்டி
யிடித்து நல்லநீரை வார்த்து
கோதறுகஷாயமிட்டு நெய் தயிர் பால்
கோசலமக் கோமயத்தைப்
பேதமில்லாமற் பிழிந்த சாறுடனெவ்-
வோர் வகைக்குப் பின்னுங்கேளே. (ரஉ)

பின்னது வோர்நாழி கருஞ்சீரக நற்திப்பிலி
கடுகு பெருங்காயந்தான்
இன்னம் விழலரிசி வெட்பாலையினரிசி
திரிகடுகோடிந்துப்போமம்
சொன்ன செவ்வியங்களிவை யோர்வகைக்கொவ்
வோர் கழஞ்சு சுகமாய்வைத்தே
அன்னதிடித்துக் கரந்தை யிலேச்சாற்றை
லொருநாழி யப்பாற்றூனே. (ரஙு)

அப்பாற் கள்ளிப்பாலிலோருரி நேர்
வாளம் நன்றுயன்பதிட்டே
அப்பாலிக் கஷாயமுன் சொல்வகை மருந்தெல்
லாங்கலந்தே யொருமையாகத்
தப்பாமலே காய்ச்சிப் பக்குவம்பார்த்-
தே வடித்துத்தானுண்டாக்கால்
வெப்பாய்வல் வேதனைசெய் பாண்டுகிரிச்
சங்களெல்லாம் விலகிப்போமே. (ரச)

(இ-ள்.)

ஆதலே(ஆமணக்கு)வேர் காக்காரட்டான் வேர்
சிவதை வேர் கொடிவேலி வேர்
(நரம்பை நீக்கியது)
சாரடைவேர்

இச்சரக்குகளை வகைக்கு 4 பலமெடுத்துச் சிறுசிறு துண்டுக ளாக நறுக்கி, இடித்து 16 மடங்கு ஜலம்விட்டு எட்டிலொன் றுகக் காய்ச்சி வடிக்கட்டின கஷாயம் 1 படி.

பசுவின் நெய்	1 படி.
,, தயிர்	1 படி.
,, பால்	1 படி.
பசுவின் சாணியைப் பிழிந்த சாறு	1 படி.

இவைகளை யொன்று கலந்து

கருஞ்சீரகம்	திப்பிலி
கடுகு	பெருங்காயம்
விழலரிசி	வெட்பாலையரிசி
சுக்கு	மிளகு
திப்பிலி	இந்துப்பு
ஓமம்	செவ்வியம்

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு (40 குன்றி) வீதமெடுத்து கரந்தை (சிவ) இலைச்சாறு 1 படி விட்டு நன்றாக அரைத்து, திரவ பதார்த்தங்களுடனே குழப்பி,

கள்ளிப்பால் — ½ படியும் விட்டு, அதனுடன் சுத்தி செய்த நேர்வாளம் 50 (எண்ணிக்கையில்) போட்டு எல்லா வற்றையு மொன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும்,

இந்த நெய்யில் ¼ அவு அளவெடுத்துத் தினம் ஒரு வேளைச் சாப்பிடப்,

பாண்டு, மூத்திரகிரிச்ரம் முதலான ரோகங்கள் தீரும்.

சரபேந்திரர் வைத்ய முறைகள்.

(காமாலை ரோக சிகித்ஸை.)

1. காமாலைக்கு "நெய்"

ஓதிய நற்கடுக்காய் விரையெடுத்துப்
பதக்குநன்நீரூத்திவைத்துத்
தீதில் கீழ்காய் நெல்லிநாய்வேளை
முசுமுசுக்கைத் திடமாஞ்சங்கு
மீதிலங்கு கொடிவேலி நிலக்குமிழ் மூக்
கரட்டையிவ் வேர் நேராய்க்கூட்டி
நீதியுடன் வீழியிலை முன்புசொன்ன
தோர்வகை வேர் நிகராய்ச்சேரே, (க)

நிகராய்ச்சேர்த்திடரத்தை விழலரிசி
மிளகுசுக்கு நீண்டகோட்டம்
சுகமாந்திப்பிலி யேலமதிமதுர
மிலவங்கஞ் சொற்றுன்றிக்காய்
புகல்வசம்பு வெட்பாலையரிசி வெள்ளை
வெங்காயம் பொருந்து மொவ்வோர்
வகையினுக்கு நாற்கழஞ்சு கொண்டரைத்தே
பின்னமொரு வயணங்கேளே. (உ)

வயணமதுகேளு நல்லநெய்யுமிரு
நாழிவிட்டு வளமாய் முன்சொல்
நயமுரு வேரிடத்ததுங் கடுக்காயுந்
தண்ணீரும் நயந்தொன்றுக்கி
அயராமலே யெரித்துப் பதத்தினில்
வடித்தொருமையாயுண்டாக்கால்
வியன்மேவு பலவகைக் காமாலையெல்லாஞ்
சொல்லாமல் விட்டுப்போமே. (ங)

(இ-ள்.)

சுத்தமான கடுக்காய் (100 எண்ணிக்கையில்) எடுத்து, விரையை நீக்கி, அவைகளின் தோலை யொரு பாத்திரத்தில் போட்டு, 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு ஊரவைத்துக் கொள்ளவும்.

கீழாநெல்லிவேர்	நாய்வேளை வேர்
முசுமுசுக்கைவேர்	சங்கம் வேர்
கொடிவேலி வேர்	நிலக்குமிழ் வேர்
மூக்கரட்டை வேர்	வீழியிலை

இச்சரக்குகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, நைய இடித்து, கடுக்காய்த் தண்ணீருடன் போட்டு ஊரவைக்கவும். பின்பு,

சித்தரத்தை	விழலரிசி
மிளகு	சுக்கு
கோஷ்டம்	திப்பிலி
ஏலக்காய்	அதிமதுரம்
கிராம்பு	தான்றிக்காய்த்தோல்
வசம்பு	வெட்பாலையரிசி
வெள்ளை வெங்காயம்	

இச்சரக்குகளை வகைக்கு 4 கழஞ்சு (5 வராகனெடை) வீதமெடுத்து, ஷி சீதகஷாயம் விட்டு நன்றாக வரைத்து, அதனுடன்

பசுவின் நெய் 2 படியும் விட்டு, கடுக்காய் சீதத்தண்ணீருடனே கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்நெய்யை வடிக்கட்டி யொரு சீசாவில் பத்திரப்படுத்துக.

இந்நெய்யில் ½ தோலா எடுத்து பாலில்கலக்கிக் கொடுத்து வரப் பலவகை காமாலைகளுந் தீரும்.

---

2. காமாலைக்கு 'அதிமதுர நெய்'

நன்னயஞ் சேரதிமதுரஞ செண்பகப்பூ
கோட்டமிலவங்க மேலம்
இன்னமரப் பொடியரத்தைக் கடுகுரோ—
கிணி தஞ்சையிலங்குங் கிட்டம்
சொன்னபடி கூட்டியரைத்துக் கரைத்து
நெய்யும்விட்டுச் சுகமாய்க் காய்ச்சிப்
பண்ணளவாயுண்டு வந்தால் பொல்லாத
காமாலைப்பிணி யொட்டாதே. (சு)

(இ-ள்.)

அதிமதுரம்	செண்பகப்பூ
கோட்டம்	கிராம்பு
ஏலக்காய்	சுத்திசெய்த இரும்புத்தூள்
சித்தரத்தை	,, தஞ்சைக்கிட்டான்
கடுகரோகிணி	

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை யெடுத்து, நன்றாக இடித்துத் தண்ணீர் விட்டரைத்து பசுவின் நெய்(4 சேர்)யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ½ தோலா வீதம் சாப்பிட்டுவரக் காமாலை தீரும்.

---

3. காமாலை, பாண்டு முதலான நோய்களுக்குக் 'கடுக்காய் நெய்'

செப்பு கடுக்காய்நூறு காரிசாலங்
கண்ணியுள்ளி சிந்திற்றண்டு
மொப்புள சாரணை முருக்கம்பட்டைநில
வேம்பிடித்தே யோர்பதக்கே
யப்புநற் கஷாயமது நாநாழி
யாய்காய்ச்சி யதிலோர் நாழி
தப்புராமற் பசுவின் நெய்கூட்டி-
யே தேவதாரந்தானே. (ரு)

தாரமொடு மரமஞ்சள் நாலுகடுக்-
காயரைத்துத்தான் கலந்தே
நேரதுவாய்க் காய்ச்சி வடித்தப்படியே
சொன்னபடி நெய்தான் செய்தே
ஓரளவாய் நித்தம்நித்த முண்டுவந்தால்
பண்டுமுத லோங்குமந்த
வீரமுள்ள பொல்லாத பாண்டுகா-
மாலையப்பால் விலகிப்போமே. (சு)

(இ-ள்.)

கடுக்காய்	100 (எண்ணிக்கையில்)
காரிசாலங்கண்ணி	சிந்தில்கொடி
வெள்ளைப்பூண்டு	சாரணைவேர்
முருக்கம்பட்டை (முள்முருக்கு)	நிலவேம்பு

இவைகளின் வேர் வகைக்கு (1 பலமெடுத்து) அவைகளை வெட்டி ஒன்றுகலந்துக் கல்லுரலிலிட்டிடித்து, 2 மரக்கால்

சுத்த ஜலம் விட்டூறவைக்கவும். மறுநாள் இதை யடுப்பின் மேலேற்றி 4 படி கஷாயமாகும்வரை சுண்டக் காய்ச்சவும். அக்கஷாயத்தை யிறுத்து அதனுடன்

பசுவின் நெய் 1 படிவிட்டு,

தேவதாரம் மரமஞ்சள்
கடுக்காய்த்தோல் (4)

இம்மூன்று சரக்குகளை வகைக்கு (½ பலம்) எடுத்துக் கஷாயம் விட்டு அரைத்து, நெய் கலந்த கஷாயத்துடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இந் நெய்யைத் தினம் ½ தோலா வீதம் உண்டு வர, பாண்டு, காமாலை முதலான ரோகங்கள் தீரும்.

---

4. காமாலைகளுக்கு 'எண்ணெய்'

சுக்கதிருபது பலம் பெருங்காயம்
வெங்காரம் சொல்வகைக்கே
தக்கதொவ்வோர் பலஞ்சுத்தி நேர்வாளத்
தின் பருப்புத்தானே கேளாய்
மிக்கவு மோரெழுபது கடுக்காயோ-
ரைம்பதும் மிதமாய்க்கூட்டிச்
சிக்கவன்றிக் கோசலத்திலூறவைத்தெ-
டுத்தபின்னுற் செப்புவேனே. (எ)

செப்பு மருள்கிழங்கினுட சாறதனி
லரைத்தெடுத்துச் சீராயுண்ணுட
கைப்பிலமாய்ச்செய்து நிழலினிலுலர்த்திக்
கருப்புட்டிக் கனஞ்சேர் வெண்ணெய்

இங்நான்கு சரக்குகளையும் சமமெடுத்து, அம்மியின்மேல் வைத்து அரைத்து, ஒரு எலுமிச்சம்பழப்பிரமாணம் எடுத்து, வெள்ளாட்டு மூத்திரத்துடன் கலந்து சாப்பிடவும்.

நீர்க்காமாலை, காமாலை முதலான நோய்கள் தீரும்.

---

8 காமாலைக்குப் 'பஞ்சகவ்விய எண்ணெய்'

கோலமுள்ள பசுவின்பால்தயிர்க்கோச-
லமகரு கோமயத்தைச்
சாலவும் பிழிந்தெடுத்த வகைக்குச்சாரேடு
மொவ்வோர் வகைக்குச்சாற்றும்வண்ணஞ்
சிலமதாயிரண்டுபடி செங்கழுநீர்க்
கோஷ்டம்மணச் செண்பகப்பூ
ஏலம்வெட்பாலியினரிசியி லவங்க
மதிமதுர மின்னந்தானே, (யச)

இன்னமந்தச் சீரகமுமோர் வகைக்கிரு
வராகனெடை யியல்பாய்க்கூட்டி
வண்ணமுயர் நாரத்தம்பழத்திலொன்று
மொருசிரங்கை வஞ்சிவாய்போல்
நன்னயஞ்சேர் தூதுவளங் கனியுமிந்தப்
பலவகையும் நயந்தரைத்தே
அன்னதெல்லாங் கரைத்தெரித்துக் காய்ச்சிவடிக்
கிறபொழுதிலப்பாற் கேளே. (யரு)

அப்பாற் சிற்றுமணக்கினெண்ணெய்தனி
லோராழாக்கேயத்திற் கலந்தே
தப்பாமலாதித்த வாரமுத
லொருகரண்டி தானேநெய்யில்

துய்ப்பா மேலந்திசந்தி யெட்டுநா-
ளிட்டமொடுதுதி செய்வாரே
ஒப்பான பத்தியந்தான் பதிறுறு
நாட்களுக்கு ஒதுவேனே. (மசு)

ஒதுமுப்புப்புளியிரண்டுஞ் சட்டமதாய்
தள்ளிவிட்டே ஒளிர்முருங்கை
மீதுருநற்காயிலையு மிளங்கீரைக்
கேமிளகை மென்றூளிட்டுக்
கோதுபடா பசுவின்நெய்பால் சேர்த்துண
லாங் காமாலை குணமேயாகும்
மாதுபங்கர் கிருபைநிறை சரபேந்திர
பூபதி சொல் மார்க்கந்தானே. (மஎ)

(இ-ள்.)

பசுவின் பால்	2 படி
பசுவின் தயிர்	2 படி
,, மூத்திரம்	2 படி
,, சாணியைப் பிழிந்தெடுத்த நீர்	2 படி

இவைகளை யொன்று கலந்து,

செங்கழுநீர்க்கிழங்கு	கோஷ்டம்
செண்பகப்பூ	ஏலக்காய்
வெட்பாலையரிசி	கிராம்பு
அதிமதுரம்	சீரகம்

இச்சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து இடித்து மேற்கூறிய ஏதேனுமொரு திரவத்திலுலரைத்து, அத னுடன்

நாரத்தம்பழம் 1 சிரங்கை
தூதுவளம்பழம் 1 சிரங்கையுமெடுத்து

அரைத்துத் திரவங்களுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிக் கொதித்து வரும்போது,

சிற்றாமணக்கெண்ணெய் 1 உழக்கும் சேர்த்துப் பதத்தில் வடித்து இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு கரண்டியெடுத்துத் தினம் காலையிலும் மாலையிலுமாக, ஞாயிற்றுக்கிழமை முதல் 8 நாளைக்குச் சாப்பிடவும். 16 நாளைக்கு மறுபத்தியம் பிடிக்கவும்

உப்பு, புளி இவ்விரண்டையும் தள்ளவும். முருங்கைக்காய், முருங்கைக் கீரை, மிளகுத்தூள், பசுவின் பால், பசுவின் நெய், இவைகளை வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும்.

காமாலை தீரும்.

---

9. காமாலைக்கு 'லவங்கப்பட்டைச்சூரணம்'

சிலமுள்ள சன்னலவங்கப்பட்டை
யதிமதுரஞ் சிறுநாகப்பூ
கோலமுயரிலவங்கப்பத்திரி முத்-
தக்காசு கூகைநீரோ
டேலமுந்திரி கைப்பழநற் சீரகம்நன்-
ஞரியின் வேரெழில் கிராம்பு
சாலவும் தக்கோலம் நெல்லிமுள்ளி நெல்லுப்
பொரியிலங்குஞ் சாதிக்காயே. (ம அ)

சாதிக்காய் செங்கழுநீர்க்கிழங்கொடுவாய்-
விளங்கமணச் சந்தனம்பின்
னேதியதிப்பிலி பேரீச்சம்பழமோர்
வகைக்கே யுரந்திடாமல்
நீதியுடனெவ்வொரு வராகனெடை
திட்டமதாய் நிறுத்துப்போட்டுத்
தீதில்லாதிடித்தெடுத்த நேர்த்தியுள்ள
சூரணத்தின் திட்டந்தானே. (ஙசு)

திட்டமுள்ள சர்க்கரையிட்டே கலந்தே
தப்பாமல் தினமுந்தானே
வட்டந்த மூவிரற்கொண்டவ்வளவே
யந்திசந்தி மருந்துண்டாக்கால்
விட்டகலு முட்காய்ச்சல் காமாலே
வாசியதாம் விமலர்பூசை
யிட்டமொடுசெய்த மகிழ்சரபேந்திர
பூபதிசொல் லியற்கையாமே. (உஅ)

(இ-ள்.)

சன்னலவங்கப்பட்டை	அதிமதுரம்
சிறுநாகப்பூ	இலவங்கப்பத்திரி
கோரைக்கிழங்கு	கூகைநீர்
ஏலக்காய்	திராக்ஷைப்பழம்
சீரகம்	நன்னாரிவேர்
கிராம்பு	தக்கோலம்
நெல்லிமுள்ளி	நெல்லுப்பொரி
சாதிக்காய்	செங்கழுநீர்க்கிழங்கு
வாயுவிடங்கம்	சந்தன்த்தூள்
திப்பிலி	பேரீச்சம்பழம்

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, இதற்குச் சமனெடை சர்க்கரை கலந்து, தினமும் மூவிரல் கொள்ளுமளவு இச்சூரணத்தை யெடுத்துச் சாப்பிட்டு வர

உட்சுரம் காமாலை

மூதலான ரோகங்கள் தீரும்.

---

10. காமாலைக்குத் 'தண்ணீர்விட்டான் கிழங்கு நெய்'

சுந்தரஞ்சேர் தண்ணீர்விட்டான் கிழங்குடன்நன்
னரியின் வேர்சூழ் தேத்தாம்வேர்
பந்தமுடனே யிலங்கு மோரிதட்டா
மரைவேரும் பனையின் வேரும்
சந்தன மொவ்வோர் வகைக்கரைக்கழஞ்சு
கொண்டுவந்து சரியாய்க்கூட்டி
யந்த மருந்துப்படியே சந்தனம்போ-
லரைத்தெடுத் தேயப்பாற்கேளே. (உக)

அப்பாற்கேளோ ருழக்குநெய்யும் விட்டுத்
தான்கலந்தே யடுப்பிலேற்றி
ஓப்பாக வேயெரித்துப் பதத்தினில்
வடித்து நன்முயுரைத்தவாரே
தப்பாமல் நித்தம்நித்தமொவ்வொரு காசிடை
நின்றயேதா றுண்டாக்கால்
வெப்பான பித்தகாமாலை செய்யுங்
துன்பமெல்லாம் விட்டுப்போமே. (உஉ)

(இ-ள்)

தண்ணீர்விட்டான் கிழங்கு — நன்னரிவேர்
தேத்தாம் வேர் — ஓரிதழ்த் தாமரை வேர்
பலவேர் — சந்தனத்தூள்

இவைகளை வகைக்கு ½ கழஞ்சு வீதமெடுத்து அம்மியின்மேல் வைத்து வெண்ணெய்போ லரைத்து, 1 உழக்கு பசுவின் நெய் யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்து பதத்தில் வடித்து இறக்கவும். இந்நெய்யைத் தினந்தோறும் ஒரு வராகனெடை யெடுத்துச் சாப்பிடப் பித்தகாமாலை தீரும்.

---

11. காமாலைக்கு 'வங்க பற்பம்'

வங்கமதிற் நாற்களஞ்சு சட்டியிலிட்
டெரித்துருகி வாருபோதில்
சங்கினுடப் பொடியுமொரு நாற்கழஞ்சு
வங்கமொடு சரியாய்த்தூவி
அங்கந்தக்கரண்டியினல் மத்திதாற்
பற்பமுமாயதற் கொப்பாய்மேல்
இங்கிதமா மிளகு பொடியுஞ்சேர்த்துக்
கொண்டுநன்ரு யியம்பக்கேளே, (உங)

இயம்பக்கேள் சட்டமதாய் திட்டமொரு
காசளவே யெழிலாம்பற்பம்
சுயமானபசுவின் நெய்யிலே குழைத்துக்
கொண்டுநித்தஞ் சுகமாயுண்டால்
வியனுதுவாதங் காமாலைபிற
நீர்கோர்வை விளம்புஞ்சோகை
உயராது தருமமில்லாப் பாவியர்கள்
செல்வமொப்பா யொதுங்கிப்போமே. (உச)

(இ-ள்.)

சுத்திசெய்த வெள்ளீயம், 4 கழஞ்சு நிறை யெடுத்து, ஒரு சட்டியிலிட்டு, அடுப்பின் மேலேற்றி அது உருகிவரும் போது அதனுடன்,

பொரித்த சங்கின்தூள் 4 கழஞ்சையிட்டு ஒரு கரண்டியினல் வறுக்கவும், அது பற்பமாகும், இதற்குச் சரிஎடை மிளகுப்பொடி சேர்த்துக் கலந்துகொண்டு வேளைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துப் பசுவின், நெய்விட்டு குழைத்துச் சாப்பிட,

வாதரோகங்கள், காமாலை, நீர்க்கோர்வை, சோகை முதலான ரோகங்கள் தீரும்.

குறிப்பு :—

வங்கத்தை ஒரு கரண்டியிலிட்டு உருக்கி, இலுப்பெண்ணெயில் 7 தடவை ஊற்றவும்.

---

12. காமாலைக்குக் 'கிட்டாதிர் தூணம்.'

கிட்டம்நற் செங்கற்பொடிமே லரப்பொடியொவ்
வோர். வகைக்கோராழாக்கே
சட்டமுள்ள காந்தமொடு மிளகோமம்
வெங்காயம் சார்ந்த சுக்கு
திட்டமொவ்வோர் வகைக்கரைப்ப லங்களது
திப்பிலியுந்திகழ் நாகப்பூ
யிட்டகாற் பலஞ்சொற் கடுக்காயி
லிருபது தானின்னந்தானே. (உடு)

இன்னமருந்திடித்தெடுத்து நல்லபுதுச்
சட்டிதனிலெல்லாம் போட்டு
சொன்னவிதங் கோசலத்திற் கணக்குடனேர்
நாழிவிட்டால் சுவறிப்போகும்
அன்னமெடுத்துலர்த்தி வைத்து வெள்ளாட்டுச்
சிறுநீரிலவ்வாறே செய்
பின்னந்தநீர்மூள்ளி குப்பையின்மே-
னியல்லது பேசக்கேளே. (உசு)

பேசிடுமாடாதோடை பொடுதலைகை
யாந்தகரை பிரங்கும்நொச்சி
வாசமிடுவாதமடக்கிப் பலவாய்ச்
சொல்லுமிவ் வகையாஞ்சாற்றில்
நேசமூரிவொவ்வோர் சாற்றிற்சுவறப்
போட்டுலர்த்தி நேர்தூளாக்கி-
யேசரியாய் மூவிரற்கொண்டம்மருந்தை
யுண்டுவந்தாலியல்பதாமே. (உஎ)

இயல்பானபத்தியங்கேள் பசுவினுட
பாலுநெய்யு மிதுவல்லாமல்
நய மேவும் வெள்ளாட்டுக் கறியும் நன்முய்ச்
சேர்த்திடலாம் நாலுநாட்க்கோர்
வியமாயச் சொல்லெண்ணெயுமே தலைமுழுகிக்
கொண்டுவந்தால் வீக்கம் பாண்டு
துயரமிடும் பொல்லாத காமாலை
யத்தனையும் துலைந்துபோமே (உஅ)

(இ-ள்.)

சுத்திசெய்த கிட்டம் செங்கல்தூள்
,, இரும்புத்தூள்

இவைகள் வகைக்கு 1 ஆழாக்கு

சுத்திசெய்த காந்தம்	மிளகு
ஓமம்	வெங்காயம்
சுக்கு	
இவைகள் வகைக்கு	½ பலம்
திப்பிலி	சிறுநாகப்பூ
இவ்விரண்டும் வகைக்கு	¼ பலம்
கடுக்காய்	20 (எண்ணிக்கையில்)

இச்சரக்குகளைச் சிறுசிறு துண்டுகளாக்கிச் சூரணித்து, ஒரு புதுச்சட்டியிலிட்டு, 1 படி பசுவின் மூத்திரம்விட்டுப் பிசரி வைக்கவும். நீர்சுவறியபின், அதை யெடுத்து உலர்த்தி, வெள்ளாட்டு மூத்திரம் முன்போல 1 படிவிட்டுப் பிசரிவைத்து உலர்த்தவும். இவ்வாறே

நீர்முள்ளிச்சாறு	குப்பைமேனிச்சாறு
ஆடாதோடைச்சாறு	பொடுதலைச்சாறு
கையாந்தகரைச்சாறு	கருநொச்சிச்சாறு
வாதமடக்கிச்சாறு	

முதலிய சாறுகளிலும் தனித்தனியே முன்கூறிய சூரணத்தைப் பிசரி ஊறவைத்து நிழலில் உலர்த்திக்கொண்டு வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இம்மருந்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து (வெந்நீருடன்) உட்கொள்ளவும்.

பத்தியம் ;—

பசுவின் பால், நெய் முதலியவைகளையும், வெள்ளாட்டுக்கறி வகைகளையும் கூட்டிக்கொள்ளவும்.

நாலு நாட்களுக்கொருதடவை எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

தீரும் வியாதிகள் :—

வீக்கம், பாண்டு, காமாலை முதலியன.

---

13. காமாலைக்குச் 'சங்கம்வேர் மருந்து'

தப்பாமற்சங்கம் வேர்ப்பட்டைதனை
யரைத் தெடுத்துத்தான் புன்னைக்காய்க்
கொப்பாவின் பாலினிலே மூன்றேநா-
ளந்திசந்தியுண்டேவந்தாற்
செப்பார்ந்த நற்பசுவின் பாலன்னமுண்
பத்தியத்தின் செய்கை கேளா
யப்பாலுப்புப்புளிப்புமாகாது
காமாலையன்றே போமே. (உசு)

(இ-ள்.)

சங்கம்வேர்ப் பட்டையை, அம்மியின்மேல் வைத்துப் பசுவின் பால்விட்டு நன்றாக அரைத்து, அதில் ஒரு புன்னைக் காயளவெடுத்து அந்தப் பாலிலேயே குழப்பி, 3 நாளைக்குக் காலையிலும் மாலையிலுமுட்கொள்ளவும்.

பத்தியம் :—

உப்பையும், புளியையும் விலக்கிப் பசுவின் பால்விட்டுச் சாதம் சாப்பிடவும்.

காமாலை தீரும்,

---

14. காமாலைக்குச் ' சுண்ணும்பு மருந்து '

புகலுமந்தச்சுண்ணும்போர் கொட்டைப்
பாக்களவு புளியும் நன்முய்
திகழேலுமிச்சங்காய் நேருதயமதி
லிவ்விரண்டுந்திரட்டிக்கொண்டு
சுகமாயோர் மூன்றே நாளுண்டூர
வெங்காயஞ் சோறு மோரும்
அகலாமலாறு நாளுண்டிடுப்புக்
கூட்டாமலப்பாற் கேளே. (நம)

அப்பாற்கேளிப்படியே பத்தியந்தான்
செய்துவந்தாலடுத்த சோகை
வெப்பாக வந்த வரட்காமாலை
மஞ்சலினைய் வீறுபாண்டு
இப்பாலிலங்கு செங்கல் மாறியிந்த
ரோகமெல்லாமேனியோர்க்கென்று
தப்பாமலன்ன மிடும் புண்ணியவான்
பிணியொப்பாய்த் தணிந்துபோமே (நக)

(இ-ள்.)

புதிய சுண்ணும்பு — ஒரு கொட்டைப்பாக்களவு
புளி — ஒரு எலுமிச்சங்காய்பிரமாணம்

இவ்விரண்டையும் நன்முக மத்தித்துத் தினம் காலை நேரங்களில் 3 நாளைக்கு உண்ணவும். மோர் சாதத்தை வெங்காயத்துடன் கூட்டிச் சாப்பிடவும். உப்பையும் நீக்கவும். இதனல்

சோகை, வரட்காமாலை, மஞ்சட்காமாலை, பாண்டு முதலான நோய்கள் தீரும்,

15. காமாலைக்குப் 'பயறு கஷாயம்'

செப்பும்நற்பாசிப் பயற்றைச்சட்டிதனி
லும்மளந்து சீராயிட்டே
யப்புமொருநாழிவிட்டு நெல்லிமுள்ளி
யொருசிரங்கை யதிலேபோட்டே
யொப்புடனேர் நாள் முழுதுமூறவைத்து
மற்றொருநாளுட னெடுத்துத்
தப்புவராமற்போட்ட நெல்லிமுள்ளி
யைப்பொறுக்கித் தள்ளிப்போடே. (நஉ)

தள்ளியப்பாலங்நீரை யிறுத்தொருபாக்-
களவு வெல்லந்தான்கரைத்தே
அள்ளியுண்டுபின்னல் வெல்லமும்பயறுங்
கரைத்தெடுத்தே யவ்வாருண்டே
யெள்ளிய வெள்ளாட்டுப்புக் கண்டமொடு
மோரன்னமுமுண்ணலாம் மேல்
நள்ளிய பத்தியமிதுவே யோங்குவரட்
காமாலை நலிந்துபோமே. (நந)

(இ-ள்.)

பச்சைப்பயறு (½ படியை) ஒரு சட்டியில் அளந்துபோட்டு, அதனுடன் 1 படி தண்ணீர்விட்டு, நெல்லிமுள்ளி ஒரு சிரங்கையும் கூடப்போட்டு, ஒருநாள் முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் அதில் ஊறிய நெல்லிமுள்ளிகளைப் பொறுக்கி எரிந்துவிட்டு அந்தத் தண்ணீரை இறுத்துக்கொள்ளவும். ஒரு பாக்களவு வெல்லமெடுத்து, மேலேசொன்ன பாசிப் பயறுக் கழுநீரில் கரைத்துக் குடித்துவிட்டு, ஊறிய பயறையும் வெல்லத்துடன் கூட்டி உண்ணவும்.

பத்தியம் :—

வெள்ளாட்டு உப்புக்கண்டம் உபயோகப்படுத்தவும். மோர்சாதம் சாப்பிடவும்.

இதனால் வரட்காமாலை குணமாகும்.

---

16. காமாலைக்கு 'அரப்பொடி மருந்து'

நன்னயஞ்சேரரப்பொடியைக் கிட்டமதைக்
கொண்டுவந்து நயந்துதானே
சொன்னபடி யம்மிதனிலிட்டதனைப்
பொடியாக்கிச் சுகமாயப்பால்
வன்னமிகு நேர்வாளத்துடன் பிசைந்து
கொடுத்துவரில் வயிறுபோகும்
முன்னடுத்த காமாலை யெல்லாந்தான்
சொல்லாமல் முறிந்துபோமே. (நசி)

(இ-ள்.)

சுத்திசெய்த அரப்பொடி 1 பங்கு
,, கிட்டம் 1 பங்கு

இவ்விரண்டையும் அம்மியின்மேல் வைத்துச் சூரணஞ் செய்து, சுத்திசெய்த நேர்வாளத்(¼ பங்கு)தையும் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும்.

இம்மருந்தை (ரோகியின் பலத்திற்குத் தக்கபடி 3 முதல் 10 குன்றிவரை)க் கொடுத்து வந்தால் நன்றுகப் பேதியாகும். காமாலையும் முறிந்துபோகும்.

---

17. காமாலைக்குப் 'பீர்க்கம்விதை நஸ்யம்'

நல்லபீர்க்கின் விரைக்குட்பருப்பிருப்ப-
தைப்பொடிகள் நன்ருய்செய்து
சொல்லந்த முலைப்பாலில் நசியமிட்டா
மணக்கெண்ணெயைச் சுகமாய்த்தானே
புல்லவுந்தான் தலைதனிற்தேய்த்தே
தயிரனமும் புசிமூன்றேநாள்
வல்லமையாய் வந்தடுத்த பொல்லாத
காமாலை வாசியாமே (நடு)

(இ-ள்)

பீர்க்கம் விதைக்குள்ளிருக்கும் பருப்பை யெடுத்துலர்த்திச் சூரணித்து, முலைப்பாலில் உரைத்து நோயாளிக்கு நஸ்யமிடவும்.

பத்தியம் :—

விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை முழுகவும் வேண்டிய அளவு தயிர் சாதமும் சாப்பிடவும். 3 நாளில் எவ்வித காமாலைகளுந் தீரும்.

குறிப்பு:— நஸ்யம் செய்யும் விதம்.

நோயாளியை மல்லாந்து படுக்கச்செய்து, அவனது மூக்கை உயர்த்தியொரு நீர் ஊறுத பேப்பரைப் புனல்போல் செய்து, நாசியில் சொருகி அதில் வேண்டிய திரவத்தை ஊற்றி, நிதானமாக வாயினுல் ஊதி மருந்தை மூக்கில் செலுத்தவும்.

18. காமாலைக்கு 'சீகைக்காய்மருந்து'

இயல்பான புதுச்சியக்காய்நாலு
விதைநீக்கி யிட்டரைத்தே
நயமேவு பசுவின்பாலரைச்சேர்விட்
டுக்கலந்து நயந்துண்டிட்டால்
சுயமாகப் பேதிசெய்தாலுத்தமந்தான்
வாந்திவந்தாற் சொன்னவாறே
அயராமலந்தவண்ண மூன்றுநா-
ளுங் கொடுப்பாயப்பாற் கேளே (நசு)

அப்பாற்கேள் பத்தியந்தானப்பசுவின்
பாலனமு மன்பாயுண்பாய்
தப்பாமலே புளியுமுப்பிரண்டுஞ்
சேர்க்காமல்தள்ளிவிட்டால்
இப்பாரில் யாவர்க்கு மெந்தவகைக்
காமாலையேவந்தாலும்
செப்பாமலுயராடிக் காற்றிலெதிற்
பஞ்சதுபோல் சிதறிப்போமே (நஎ)

(இ-ள்.)

புதுச்சியக்காய் எண்ணிக்கையில் 4, கொண்டுவந்து அதனுள்ளிருக்கும் விதையை நீக்கிவிட்டு, அக்காய்களைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் பால் ½ சேருடனே குழப்பிப் பருகவும்,

பேதியாகில் மிகவும் நல்லது, வாந்தி ஏற்படில் முன் கூறிய பிரகாரம் 3 நாளைக்குக் கொடுக்கவும்.

பத்தியம் ;—

பசுவின் பால்விட்டுச் சாதம் சாப்பிடவும். உப்பையும், புளியையும் நீக்கவும். எவ்விதமான காமாலை ரோகங்களும் தீரும்.

19. காமாலைக்குப் 'பொன்னுங்காணி எண்ணெய்.'

அணிசெய் பொன்னுங்காணியின் வேரொரு
நாரத்தங்காயினளவிற்றூனே
தணியாமலரைத்தெடுத்தோர் குறுணி
பசுவின்பால் சரியாய்விட்டு
வனிதமொடு தோயவைத்துக் கடைந்துவெண்ணெ
யதிலெடுத்து வளமாயுண்டால்
கனிதமதாயுள்ள வரட்காமாலை
வலுக்குலைந்து கலங்கிப்போமே. (நஅ)

(இ-ள்.)

பொன்னுங்காணியின் வேரை ஒரு நாரத்தங்காயினளவு கொண்டுவந்து, அம்மியின்மேல் வைத்து நேகவரைத்துக் கொள்ளவும்.

அதை 2 படி (பட்டணம் படி) பசுவின் பாலுடனே குழப்பி அப்படியே தோயவைக்கவும். பின்பு, மறுநாளிதைக் கடைந்து வெண்ணெயை எடுத்து, நோயாளி சாப்பிட்டு வர, வரட்காமாலை தீரும்.

---

20. காமாலைக்கு மருந்துகள்.

சொல்லியதோர் பிரண்டையினற் கொழுந்துமிள
கேர்வசம்பு சுக்குகூட்டி
புல்லிடவு மரைத்தொருபாக்களவு தவுட்
டினிற்பிரட்டிப் புசித்தேயப்பால்

நல்லியல் நற்கழற்கொடியினிலை யோடுள்ளி
வசம்பிதெல்லாம் நறுக்கிக்கொண்டே
யெல்லிருகண்ணிற் பிழிந்தஉடனே கண்
ணூதிவிட்டா லியல்பதாமே. (நக)

இயல்பருகங் கொழுந்து பசுவின்பாலி-
லரைத்தெடுத்தே யியம்பும்வண்ணம்
வியன்செய் மருந்திருவகையும் நாளாறு-
மே கொடுக்கவேணும் நன்முய்
அயர்செய்யும் பொல்லாத காமாலை
வாசிதருமல்லாமல் வேறு
சுயமோடொருவருடமது சென்ற சுடலை
யின்னெலும்பைச் சொன்னவாறே. (சம)

சொன்னபடி பொடியாக்கி நற்பசுவின்
பாலினிலே சுகமாயீவாய்
இன்னமொன்று நாள்சென்ற வல்லிரும்புக்
கிட்டமதை எளிற்தூளாக்கி
நன்னயமாமைம்பது கடுக்காயைப்
பொடிகளது நன்முய்ச்செய்து
பின்னதனைவடியிட்டு கையாந்த
கரைச்சாறதைப் பேசுவேனே. (சக)

பேசக்கேளிருநாழி சாறதைவிட்டுக்
கொதிக்கவைக்கிற் பிசகிடாமல்
நேசமுள்ளகுமிழி யெழும்போதிலந்தப்
பொடிமிதக்க நினைவாய்த்தூவி
யேசரியாய்கலந்த பின்பிறக்கி வெள்ளைக்
காக்கணம்வேர் வெச்சோட்டில்
வாசமுறவே வறுத்து நுண்மையாயப்
பொடிகளிட்டு வயணங்கேளே. (சஉ)

19. காமாலைக்குப் 'பொன்னுங்காணி எண்ணெய்.'

அணிசெய் பொன்னுங்காணியின் வேரொரு
நாரத்தங்காயினளவிற்ருனே
தணியாமலரைத்தெடுத்தோர் குறுணி
பசுவின்பால் சரியாய்விட்டு
வனிதமொடு தோயவைத்துக் கடைந்துவெண்ணெ
யதிலெடுத்து வளமாயுண்டால்
கனிதமதாயுள்ள வரட்காமாலை
வலுக்குலைந்து கலங்கிப்போமே. (நஅ)

(இ-ள்.)

பொன்னுங்காணியின் வேரை ஒரு நாரத்தங்காயினளவு கொண்டுவந்து, அம்மியின்மேல் வைத்து நேகவரைத்துக் கொள்ளவும்.

அதை 2 படி (பட்டணம் படி) பசுவின் பாலுடனே குழப்பி அப்படியே தோயவைக்கவும். பின்பு, மறுநாளிதைக் கடைந்து வெண்ணெயை எடுத்து, நோயாளி சாப்பிட்டு வர, வரட்காமாலை தீரும்.

---

20. காமாலைக்கு மருந்துகள்.

சொல்லியதோர் பிரண்டையினற் கொழுந்துமிள
கோவசம்பு சுக்குகூட்டி
புல்லிடவு மரைத்தொருபாக்களவு தவுட்
டினிற்பிரட்டிப் புசித்தேயப்பால்

நல்லியல் நற்கழற்கொடியினிலே யோடுள்ளி
வசம்பிதெல்லாம் நறுக்கிக்கொண்டே
யெல்லிருகண்ணிற் பிழிந்தஉடனே கண்
ணூதிவிட்டா லியல்பதாமே. (நஉ)

இயல்பருகங் கொழுந்து பசுவின்பாலி-
லரைத்தெடுத்தே யியம்பும்வண்ணம்
வியன்செய் மருந்திருவகையும் நாளாறு-
மே கொடுக்கவேணும் நன்றுய்
அயர்செய்யும் பொல்லாத காமாலை
வாசிதருமல்லாமல் வேறு
சுயமோடொருவருடமது சென்ற சுடலை
யின்னெலும்பைச் சொன்னவாறே. (சவ)

சொன்னபடி பொடியாக்கி நற்பசுவின்
பாலினிலே சுகமாயீவாய்
இன்னமொன்று நாள்சென்ற வல்லிரும்புக்
கிட்டமதை எளிற்தூளாக்கி
நன்னயமாமைம்பது கடுக்காயைப்
பொடிகளது நன்றுய்ச்செய்து
பின்னதனைவடியிட்டு கையாந்த
கரைச்சாறதைப் பேசுவேனே. (சக)

பேசக்கேளிருநாழி சாறதைவிட்டுக்
கொதிக்கவைக்கிற் பிசகிடாமல்
நேசமுள்ளகுமிழி யெழும்போதிலந்தப்
பொடிமிதக்க நினைவாய்த்தூவி
யேசரியாய்கலந்த பின்பிறக்கி வெள்ளைக்
காக்கணம்வேர் வெச்சோட்டில்
வாசமுறவே வறுத்து நுண்மையாயப்
பொடிகளிட்டு வயணங்கேளே. (சஉ)

வயணமுள்ள கோட்டமதைத் தூள்படுத்திக்
கொண்டெடுத்து வழுத்துமிந்தச்
சுயமான பற்பமிரண்டும் போட்டுத்
திட்டமதாய்ச் சோர்வில்லாமல்
சுபமாகமுன்சொன்ன மருந்தையுமொக்
கக்கூட்டி நயந்துண்டாக்கால்
வியன்மேவுங்காமாலை ரோகமெல்லாங்
கிட்டாமல் விட்டுப்போமே. (சஉ)

(இ-ள்.)

(1) பிரண்டைக்கொழுந்து மிளகு
வசம்பு சுக்கு

இவைகளைச் சமனெடையெடுத்து அம்மியின்மேல் வைத்து நேகவரைத்து, அவ்விழுதில் ஒரு பாக்களவெடுத்துத் தவிட்டுடன் புரட்டிச் சாப்பிடவும். பின்பு,

கழற்சிக்கொடியிலை பூண்டு
வசம்பு

இவைகளை நசுக்கித் (1) துணியில்வைத்து, காமாலைரோகியின் இருகண்களிலும் பிழியவும். (இது மிகவும் காரமுள்ள மருந்தாகையால் ½ துளிகள் வீதம் 2 கண்களிலும் விடவும்.) கண்களில் வீக்கம் ஏற்படில் அருகங் கொழுந்தைப் பசுவின் பாலிலரைத்துக் குழப்பி 6 நாளைக்குக் கொடுத்துவரவும். காமாலை தீரும்.

(2) ஒரு வருடம் சென்ற எலும்பைச் சுடலையிலிருந்து பொறுக்கிவந்து, கல்லுரலிலிட்டிடித்துப் பொடியாக்கிப், பசுவின் பாலுடனே கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

(3) வெகுநாள் சென்ற இரும்புக் கிட்டத்தைக் கோமூத்திரத்தில் சுத்திசெய்து, கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்

செய்துகொண்டு, 50 கடுக்காய்களின்தூளையும் ஒன்றுகலந்து கொள்ளவும்.

கையாந்தகரைச்சாறு 2 படிவிட்டு அடுப்பின்மேல் ஏற்றிக் கொதிக்கவைக்கவும். சாறு இறுகிக், குமிழ் தோன்றும் பக்குவத்தில் மேலேசொன்ன தூள மிதக்கும்படிதூவி, ஒன்று சேரும்படி கிளரவும். இதை இறக்கிவைத்துக் கொண்டு,

வெள்ளைக்காக்கணம் வேர்
உயர்ந்த கோஷ்டம்

இவ்விரண்டையும் சமனெடையெடுத்துத், தனித்தனியாக ஒரு மண்ணேட்டிலிட்டு அடுப்பின் மேலேற்றி பொன்முறுகலாக வறுத்துத் தனித்தனியே இடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும். முன்சொன்ன லேகியத்துடனே இச்சூரணங் களையும் கலந்து வைத்துக்கொண்டு தினம் (ஒரு பாக்களவு வீதம் 2 வேளை) சாப்பிட்டுவரப் பலவிதக் காமாலை ரோகங் களுந் தீரும்.

---

21. காமாலைக்கு நெய்.

சொல்லருமையா மெருமைப் பாலழி
நெய்நாழி சுகந்தமேவும்
நல்லமஞ்சள் சிற்றாமட்டி வேர்வேப்பம்
பட்டையன்றி நண்ணுமந்த
வல்லமைசேர் நெல்லிக்காய் கடுக்காய்தான்-
றிக்காயில் வகையொன்றுக்கே
புல்லவந்தானிருகளஞ்சு சேர்த்தரைத்துக்
கரைத்தெரித்துப் புகலுவேனே (சச)

புகலுகின்ற படிவடித்துக் கொடுத்திடுவா
யின்னமொன்றுப் பொருந்தக்கேளா
யிகழாமலதிமதுரமிரண்டது
வராகனெடை யிட்டரைத்தே
சுகமாம் பசுவின் பாலிலேலாதி
குளிகையொடு சுகிக்கச்செய்தே
திகழ்செய் விளக்கெண்ணெய் தலைமுழுகி
லழற் காமாலை தீர்ந்துபோமே (சரு)

(இ-ள்.)

எருமைப்பால் — 1 படி
எருமை நெய் — 1 படி

இவ்விரண்டையுமொன்று கலந்து,

மஞ்சள்	சிற்றாமுட்டி வேர்
வேப்பம்பட்டை	நெல்லிமுள்ளி
கடுக்காய்த்தோல்	தான்றிக்காய்த்தோல்

இச்சரக்குகளை வகைக்கு 2 கழஞ்சு (2½ வராகனெடை) வீத மெடுத்து நெய்யுடனே குழப்பி அடுப் பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கட்டவும். இந் நெய்யில் ¼ தோலா வீதம் தினம் 2 வேளை கொடுக்கவும்.

(2) அதிமதுரம் 2 வராகனெடை யெடுத்துப் பசுவின் பால் விட்டரைத்து அதிலேயே குழப்பி, ஏலாதிகுளிகை யுடன் சாப்பிடவும்.

ஆமணக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

அழற்காமாலை தீரும்.

22. அழற்காமாலைக்குத் 'திரிபலாதி கிருதம்'

செப்புதிரிபலைகள் சிற்றமுட்டி
யின்வேர் மரமஞ்சள்
வேப்பலகோடதி மதுரமோர் வகைக்குக்
கணக்காய்ச் சொல்வேன்
ஒப்புரப்பத்துக் கழஞ்சரைத்தெருமைப்
பாநெய்யில்வகைக்கொவ்வோர்நாழி
துப்புடன் சேர்த்தெரித்து வடித்துண்ணிவழற்
காமாலைத் துலைந்துபோமே (சசு)

(இ-ள்.)

கடுக்காய்த்தோல்	தான்றிக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி	சிற்றமுட்டிவேர்
மரமஞ்சள்	வேப்ப ஈர்க்கு
அதிமதுரம்	

இச்சரக்குகளை வகைக்கு 10 கழஞ்சு வீதமெடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்து,

எருமைப்பால்	— 1 படியுடனும்
எருமை நெய்	— 1 படியுடனும்,

ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப், பதத்தில் வடித்து இறக்கவும்.

இதில் $\frac{1}{4}$ தோலா வீதம் 2 வேளை சாப்பிட அழற்காமாலை தீரும்.

23. காமாலைக்குக் ‘கஷாயம்’

வன்னமுள்ள நெல்லிக்காய் தான்றிக்காய்
கடுக்காயிவ்வகை யொன்றுக்கே
அன்னதுமுக்கழஞ்சு இருநாழிநன்னீர்
விட்டுழக்காகக் காய்ச்சி
நன்னயமாய் வடித்திருகளஞ்சு சிவ-
தையின்வோர் நற்றூட்போட்டே
யின்னபடி மூன்றுநாட் கொடுத்திடிற்
காமாலையுந் திருந்தானே (சள)

(இ-ள்.)

நெல்லிமுள்ளி தான்றிக்காய்த்தோல்
கடுக்காய்த்தோல்

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு வீதமெடுத்து, ஒன்றிரண்டாக இடித்து 2 படி சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி உழக்காகும்வரை காய்ச்சி, இறுத்து,

சுத்திசெய்த சிவதைவோர்ச் சூரணம் — 2 கழஞ்சும் போட்டு, மூன்று நாளைக்குக் காலைவேளைகளில் மாத்திரம் கொடுத்து வரவும்.

நன்றுகப் (பேதியாகி) காமாலையுந் தீரும்.

---

24. காமாலைக்கு ‘அரித்ராதிச் சூரணமும், சிற்றமுட்டி மாத்திரையும்’

இட்டால் மஞ்சள்கடுக்காய் நெல்லிக்காய்
தான்றிக்காயிந்துப்பல்லால்

நெட்டான கடுகரோகணியிவைகள்
சமங்கூட்டி நேர்தூளாக்கி
மட்டாய் நெய்யிற்குழைத்து செப்பும்வண்ண
மீந்திடிற் காமாலேதீரா
விட்டால் சிற்றுமுட்டியிலே கொன்றைப்
பட்டையோடு விளம்புவேனே (சஅ)

விளம்புமரப்பொடி நாவற்பட்டைக்கொத்த
மல்லியிலே வியன்சேர்ந்தக்
களம்பெருதவுரியிலேயிம் மருந்தைப்
பற்பமிட்டுக் கலந்துகொண்டு
தளம்பாமலெலுமிச்சம் பழச்சாறு
விட்டரைததுத் தானேயப்பால்
வளம்பெறவே நல்ல செப்புகிண்டிதனிற்
சொல்லுகின்ற வயணங்கேளே (சக)

வயணமுடனெலுமிச்சம் பழச்சாற
தையும் பிழிந்து வார்த்துப்பச்சை
நயம்பெறு மென்றுருசியுமிட்டேறவைத்துப்
பின்பெடுத்துநவிலும் வாரே
நியமமொடு காலையிலேதந்திட்டாற்
காமாலே நெஞ்சிற்கொஞ்சம்
இயல்பாகத்தருமமில்லாப் பாவிபெற்ற
பாக்கியம் போலிறங்கிப்போமே (ருல)

(1) மஞ்சள் கடுக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி தான்றிக்காய்த்தோல்
இந்துப்பு கடுகரோகிணி

இவைகளைச் சமமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, வேண்டும்போது, (ஒரு வெருகடி தூளெடுத்து) நெய்யுடனே குழைத்துச் சாப்பிடவும்.

காமாலே தீரும்.

(2) சிற்றமுட்டி இலை கொன்றைப்பட்டை
நாகப்பட்டை கொத்தமல்லி இலை
சுத்திசெய்தஅரப்பொடி அவுரி இலை

இவைகளைச் சமனெடை யெடுத்துப் பற்பாக்கிக் கல்வத்தி லிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து வைத் துக்கொள்ளவும். (சுண்டைக்காயளவு) இம்மருந்தைச் சாப் பிட்டுவரக்

காமாலை தீரும்.

(3) ஒரு செப்பு கிண்டியில் எலுமிச்சம்பழச்சாற்றை ஊற்றிவைக்கப் பச்சை நிறமான களிம்பு உண்டாகும். இத னுடன் சுத்திசெய்த துரிசு பொடித்துப் போட்டு ஒரு நாள் முழுதுமூறவைத்து மறுநாள் காலையில் காமாலை ரோகி உட் கொள்ளவும், காமாலை தீரும்.

குறிப்பு:—$\frac{1}{8}$ சேர் எலுமிச்சம்பழச்சாறுக்கு துருசு 1 குன்றி அளவு சேர்த்துக்கொள்ளவும்.

---

25. காமாலைக்குக் 'கீழாநெல்லிக் கற்கம்'

அந்தமெனக்கீழ்க்காய்நெல்லியினிலை யெலுமிச்சங்
காய் நேர்ரைத்துக்கொண்டு-
கந்த நற்சீரகமுமரைத்துப்போட்டுநல்ல
வெல்லங் கணக்காய்க்கூட்டி
சுந்தரமிலாகு பசுவின்பாலி-
லேகரைத்துச் சுகமாய்த்தானே
பந்தமுட னுண்டுவந்தாலெந்தகாமா-
லையுந்தானே பறந்துபோமே (ருக)

(இ-ள்.)

கீழாநெல்லியிலையை ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து அம்மியின்மேல் வைத்துச் சிறிது தண்ணீர்விட்டு நேக வரைத்து அதனுடன் நல்ல சீரகம் ½ பலம் அரைத்துப் போட்டு, நல்ல வெல்லமும் கூடப்போட்டுப் பசுவின் பாலில் குழப்பிச் சாப்பிட,

எவ்வித காமாலை ரோகமும் தீரும்.

---

26. காமாலைக்கு 'ஆமணக்கிலை மருந்து'

உத்தமஞ்சேராமணக்கின் கொழுந்துசா-
ரணைக்கொழுந்து மொளிருஞ்சுக்கும்
சுத்தவெள்ளை வெங்காயமுஞ் சமதையா-
கக்கூட்டிச் சுகமாயெல்லாம்
வைத்தரைத்துத் தயிரினிலே யுண்டுவந்தாற்
காமாலை வாங்கிப்போகும்
பத்தியங் கேளின்னம் நன்றுய்க் கோழிச்சா
றுஞ் சோறும் பண்புதானே. (ருஉ)

(இ-ள்.)

ஆமணக்கங் கொழுந்து சாரணைக்கொழுந்து
சுக்கு வெள்ளைவெங்காயம்

இவைகளைச் சமனெடை யெடுத்து, அம்மியின்மேல் வைத்து நன்றுக அரைத்து, (எருமை)த்தயிரிலே குழப்பிச் சாப்பிட,

காமாலை தீரும்.

பத்தியம் :—கோழிக்கறி கூட்டிச் சாதம் உட்கொள்ளவும்.

---

27. காமாலைக்கு 'எலுமிச்சை மருந்து'

அந்தமிகுமெலுமிச்சங்காயிற் கீழ்
காய்நெல்லியை யரைத்துக்கொண்டு
சுந்தரஞ் சேரெருமையின்மோருந்தயிருங்
கூட்டியன்னஞ் சுகமாயுண்பாய்
இந்தவிதமுண்டுவரிற் புளியோடுப்பு
நல்லபுகையிலை சேர்க்காமல்
பந்தமுள்ள பத்தியுஞ்செய்தாற் மஞ்சட்
காமாலை பறந்துபோமே (குஉ)

(இ-ள்.)

கீழாநெல்லியை ஒரு எலுமிச்சங்காய் பிரமாணமெடுத்து, அம்மிதனிலிட்டு நன்றுகவரைத்து, எருமை மோரிலோ அல்லது தயிரிலோ குழப்பிச் சாப்பிடவும்.

பத்தியம் :—

புளி, உப்பு, இவைகளை நீக்கவும். புகையிலையையும் நீக்கவும். தயிர் சாதம் சாப்பிடவும். மஞ்சட்காமாலை தீரும்.

---

28. காமாலைமுதலான ரோகங்களுக்குச் 'சாதிலிங்க குளிகை'

சாதிலிங்கம் வெங்காரமிளகு சுக்கு
சார்ந்திடு திப்பிலிசிவதை நேரிந்துப்பு
கோதிலாப்பெருங்காயம் வசம்பிதெல்லாங்
கூறுநிறைக்கே சரியாய்ச்சுத்திசெய்த

நீதியுள்ள நேர்வாளங் கூட்டிக்கொண்டு
நெடும்நாவற்பட்டை சாறல்லாமற்றான்
ஓதியநல்லெலுமிச்சம் பழமிச்சாறி
லொருசாம மரைத்துச்சொன்னவாறே (சு)

சொன்னபடி குன்றிநிகர் குளிகைசெய்தே
சுகமாக நிழலுலர்த்தி வைத்துக்கொண்டே
அன்னதினம் வெந்நீரில் தேனில்நன்றாய்
இப்படியிட்டுண்டு வந்தால் பாண்டுமூலம்
இன்னமுங்காமாலே பெருவயிறுகுன்ம
மிடர்செய் சுவாசம்பேதி சன்னிதீரும்
தென்னவனெப்பாய்ப் புலவோர் சங்கம்வாழுந்
தீர சரபேந்திரமால் செப்பும்வாரே. (ருரு)

(இ-ள்.)

சுத்திசெய்த சாதிலிங்கம்	பொரித்த வெங்காரம்
மிளகு	சுக்கு
திப்பிலி	சுத்திசெய்த சிவதை
இந்துப்பு	பெருங்காயம் [வேர்
வசம்பு	

இவைகள் வகைக்கு 1 பங்கு

சுத்திசெய்த நேர்வாளம் 9 பங்கு

இச்சரக்குகளைச் சூரணித்து, கல்வத்திலிட்டு நாகப்பட்டைச் சாற்றினால் 1 ஜாமமும், எலுமிச்சம்பழச் சாற்றினலொரு சாமமும் அரைத்துக் குன்றிமணி யளவுள்ள குளிகைகளாகச் செய்துகொள்ளவும். இவைகளை, நிழலில் உலர்த்திக்கொண்டு வேண்டும்போது தேனிலோ அல்லது வெந்நீரிலோ குழைத்துச் சாப்பிடவும்.

பாண்டு, காமாலை, மூலம், பெருவயிறு, குன்மம், சுவாசம், பேதி, சன்னி முதலான ரோகங்கள் தீரும்.

---

29. காமாலை, பாண்டு ரோகங்களுக்குத் 'தாமிர பற்பம்'

மடற்போற் முமிரத்தகடுதட்டிச்சீலை
செய்தேயையெட்டுவரளிதன்னில்
புடமிடுபின் பொட்டிலுப்புப் பலமோர்நான்கு
பொருந்து முணமஞ்சள் வராகனெடைகாலு
திடமுளநெல்லிக்காய் கெந்தகம்பலம் சேர்த்
திட்டுமொன்று கள்ளியின் பால்விட்டரைத்துத்
தடவியப்பாற் றகட்டினைத்தான் வரளியிட்டுத்
தயங்காமல் நாற்பதுநாள் சொன்னவாறே. (நுசு)

சொன்னபடி புடம்போட்டுக் கல்வந்தன்னிற்
சுகமாய் நல்லெலுமிச்சம்பழச் சாறூறறிப்
பின்னதைச் சில்லுப்போலே தட்டிக்கொண்டு
பிசகாமல் மடக்கில்வைத்துச் சீலமண்டான்
நன்னயமாய்ச் செய்து கிட்டமிரண்டுபங்கு
நயந்திடித்துச் சூரணித்து வெங்காரத்தை
வன்னமொடு பொரித்ததிற் கலந்துகொண்டு
வைத்து வெருகடிப்பொடி மேலோதுவேனே. (நுஎ)

ஓதுவேன்கேள் முக்கணுவின்பிரண்டைதான் சேர்த்-
துண்மையதாயம்மிதனிலரைத்தெடுத்து
(இதமுடனே)இருபது முப்பதுநாளீந்தால்
நெடுநாளாய்வந்தடுத்தசோகைபாண்டு

வாதஜனசெய்காமாலே வீக்கமெல்லாம்
வாசியதா மீசருட பூசையாலே
சீதளகஞ்சத் திருவா(ன) முகவிலாசன்
கீர்த்திசரபேந்திரமால் செப்பும்வாறே. (ருஅ)

(இ-ள்.)

தாமிரத்தைச் சுத்தி செய்து ஈசலிறகு போல் தகடாகத் தட்டிக்கொள்ளவும். இதை ஒரு ஓட்டில் வைத்துச் சீலமண் செய்துகொண்டு, காய்ந்தபின் 40 வரளிகளே அடுக்கிப் புடம் போடவும்.

பின்பு இத்தகட்டை யெடுத்து;

பொட்டிலுப்பு — 4 பலம்
மஞ்சள் — 4 வராகனெடை
சுத்தி செய்த
நெல்லிக்காய்கெந்தகம் — ½ பலம்

இம்மூன்றையு மொன்றுகலந்து, கல்வத்திலிட்டுக் கள்ளிப் பால் விட்டரைத்து, மேல்சொன்ன தாமிரத் தகட்டின் இரு புறங்களிலும் பூசி, முன்போல 40 வரளிகளில் புடமிடவும்.

இவ்வாறு 40 நாட்கள் புடம் போடவும். பின்பு, இப்பற்பத்தைக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்துச் சிறுசிறு வில்லைகளாத் தட்டி நிழலில் காயவைத்துக்கொள்ளவும். இவைகளே ஒருவாயகன்ற ஓட்டில், ஒன்றன் மேலொன்று இடிக்காமல் சாக்ரதையாக வைத்து, மேலே மற்றொரு அகலினால் மூடிச் சீலமண்செய்து காய்ந்தபின், 8 வரட்டிகளில் புடம் போடவும், ஆறியபின், கவசத்தை நீக்கிப் பற்பத்தை எடுத்துக்கொண்டு, அதனுடன்,

சுத்திசெய்த கிட்டம் — 2 பங்கு
பொரித்த வெங்காரம் — 1 பங்கு

இவற்றையும் சேர்த்து கலந்துவைத்துக் கொள்ளவும். வேண்டும்போது இம்மருந்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துச் சாப்பிடவும்.

அனுபானம் ;—

மூப்பட்டைப் பிரண்டையை அம்மியின்மேல் வைத்தரைத்து அவ்விழுதுடன் சாப்பிடவும்.

20 அல்லது 30 நாளைக்கு இம்மருந்தைச் சாப்பிட்டுவரக் காமாலை, பாண்டு, வீக்கம் முதலான ரோகங்கள் தீரும்.

---

30. காமாலைக்குக் 'கிட்டாதி குளிகை'

கிட்டமரப்பொடி மிளகுவெள்வெங்கா-
யங்கடுக்காய் கிளருஞ்சுக்கு
சட்டமுள்ள திப்பிலியோமமணித்-
தக்காளி கரிசாலங்கண்ணி
வட்டமுற்றிலங்கு குப்பைமேனி
பிரமிய வழுக்கைவளருஞ்சீந்தில்
இட்டமுயர் செருப்படை யிவ்வகைச்சாறு
விட்டரைத்தே யியல்பாய்த்தானே (நிகூ)

இயல்பாகக்குளிகைசெய்து சட்டமதா
யனுபான மியம்புவேனே
நயமேவு மெலுமிச்சம்பழச்சாற்றிற்
குளிகையொன்றை நன்றுயீந்தால்
அயராதே வயிறதுபோம் நொச்சியின்
கொழுந்துகொண்டேயதைவதக்கி
வியமான காரமுள்ளசுக்கோடு
திப்பிலியுமன்றி விளம்பக்கேளே (சுயி)

விளம்பக்கேள் மிளகாகாயக்கெருடன்
கிழங்கிதெல்லாம் வேகவைத்துத்
தளம்பாமற் திட்டமாய்க்குளிகைசெய்து
நல்லெருமைத் தயிரிலேதான்
விளம்பெறவு முண்டிடிற்கண்
கூசியதோர் காமாலைவாசியாகும்
இளம்பிறையர் கிருபைநிறை சரபேந்திர
பூபதி சொல்லியறகைதானே (சுக)

(இ-ள்.)

சுத்திசெய்த கிட்டம்	மிளகு
,, இரும்புத்தூள்	வெள்ளைவெங்காயம்
கடுக்காய்த்தோல்	சுக்கு
திப்பிலி	ஓமம்

இவைகளைச் சமமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணித்துக் கல்வத்தில் போட்டு

மணித்தக்காளிச்சாறு	கரிசாலங்கண்ணிச்சாறு
குப்பைமேனிச்சாறு	பிரமியவழுக்கைச்சாறு
சீந்தில்கொடிச்சாறு	செருப்படிச்சாறு

இச்சாறு வகைகளைத் தனித்தனியே விட்டு, ஒவ்வொரு நாள் அரைத்து (மிளகுப் பிரமாணமுள்ள) குளிகைகளாகச்செய்து கொண்டு நிழலிலுலர்த்திக்கொள்ளவும்.

வேண்டும்போது ஒரு மாத்திரையை எலுமிச்சம்பழச் சாற்றிலுரைத்துச் சாப்பிடவும்.

வயிறு கழியும். காமாலையும் தீரும்.

(2) கருநொச்சிக் கொழுந்து சுக்கு
(வதக்கினது)
திப்பிலி மிளகு
ஆகாசக்கருடங்கிழங்கு (வேகவைத்தது)

இவைகளைச் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு, நன்றாக அரைத்து, சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, வேண்டும்போது, ஒரு உருண்டை எடுத்து எருமைத் தயிருடன் சாப்பிடவும்.

கண் கூச்சத்துடன்கூடிய காமாலை தீரும்.

---

31. காமாலைக்குக் 'குமாரகண்டம்'

கெந்தகம் பொன்னரிதாரம் வெங்கார
மிரதம் நிறைகேளாய்நன்று
யிந்தவகையொன்றினுக்கே யொன்றரை
வராகனெடையதுவல்லாமல்
அந்தமுயரரப்பொடி வராகனெடை
பன்னிரண்டே யனைத்துங்கூட்டி
சந்தமுள்ளகற்றாழஞ் சாற்றினி
லரைத்திடொரு சாமந்தானே (சூஉ)

சாமமரைத்தெடுத்து வட்டில்தன்னிலிட்டு
வெய்யிலில்வைத்துச் சாதிக்காயும்
வாமநெல்லிப்பருப்புச் சுக்குமிளகுடனே
சொல்லுகின்ற வகையொன்றுக்கே
நேமமதா யொன்றரைவராகனெடை
போட்டுமிக நேர்தூளாக்கிச்
சேமமொடு முன்புசொன்னவட்டில்மருந்
தினிலிடுவாய் சித்தங்கூர்ந்தே (சூங)

சித்தங்கூர்ந்திடப் புகைச்சலெ முந்திடும்பின்
மருந்தையெல்லாஞ் சேர்த்தரைத்தே
உத்தமமாம்படிக்கலசத்தினிற்போட்டுத்
தூதுவளையொண் காய்க்கொப்பாய்
நித்தமுஞ் செந்தேனிலுண்டால்
காமாலை வாசிதரும்நேசமாக
முத்தமிட் சங்கத்துதிசெய் சரபேந்திர
பூபதி சொல்முறையிதாமே (சுச)

(இ-ள்.)

சுத்திசெய்த கெந்தகம் சுத்திசெய்த தாளகம்
,, ரஸம் பொரித்த வெங்காரம்

இவைகள் வகைக்கு 1½ வராகனெடை

சுத்திசெய்த இரும்புத்தூள் 12 வராகனெடை

இவைகளை யொரு கல்வத்திலிட்டு, கற்றுழஞ்சாறு விட்டு, ஒரு சாமம் அரைக்கவும். நன்றாக அரைபட்ட பின், ஒரு வெங்கலப் பாத்திரத்தில் அதையப்பி வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவும்.

சாதிக்காய் நெல்லிப்பருப்பு
சுக்கு மிளகு

இச்சரக்குகளை வகைக்கு ½ வராகனெடை வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணம் செய்துகொண்டு, முன்சொன்ன வட்டிலிலுள்ள மருந்துடனே சேர்த்துக்கலந்து கொள்ளவும், பின்பு இதை ஒரு புதுக்கலசத்தில் பத்திரப்படுத்தி, வேண்டும்போது தூதுவளங்காய்ப் பிரமாணம் எடுத்துத் தேனுடனே குழைத்துச் சாப்பிடக்

காமாலை நோய் தீரும்.

32. காமாலை, மகோதரம், சயம் முதலிய ரோகங்களுக்குச் சூரணம்.

இலவங்கப்பட்டை யிலவங்கப்பத்திரி யெழிலோம
மெவட்சாரஞ் சத்திச்சாரம்

நிலவேம்புச்சிறுதேக்குச் சித்திரமூலம்நீள்யானைத்
திப்பிலி செங்கழுநீர்கோஷ்டம்

நலகிராம்பேல மதிவிடையமஞ்சள்நன்னரி
வேர் செவ்வியவாயுவிளங்கம்

இலகுமுள்ளுக்கத்திரிவேர் சிவதைகோரையின்கிழங்கு
பொன் முசுட்டையின்னங்கேளே. (சுருு)

இன்னமுஞ்சீரகங் கருஞ்சீரகமுமன்றே
யிசைந்துவருந்திரிபலைப்பெருங்காயந்தான்

நன்னயங்கள் மிஞ்சுபஞ்சலவணத்தோடு
நற்கடுகுரோகணி யிவ்வகையொன்றுக்கே

சொன்னதவ்வராகனெடை நான்கேசேர்த்துச்
சூரணித்து வெந்நீரிற்றேனிலுண்டால்

மன்னிய சங்கிரகக்கிராணீ சயங்காமாலை
மகோதரமனேக குன்மமருசிதானே (சுசுு

அருசிப்பயித்திய வாயுப்பாண்டுசேர் மந்தாக்கினி
யிவ்வகைரோகம்வாசியாமே

திருவுளக்கடாட்ச நிறைவாரிதன்னிற்
தினம் வாரியவ்வாரியாய்க் கற்றேற்கும்

பருவமுகிலென கன்கமாரிபெய்யும்
பாரியொப்பாய் பாரிடத்திற்பாரியான

புருடமகமேரு பலதேசமன்னற்புகழ்
செய்சரபேந்திரமால் புகன்றவாறே (சுஎ)

(இ-ள்)

இலவங்கப்பட்டை	இலவங்கப்பத்திரி
ஓமம்	எவட்சாரம்
சத்திச்சாரம்	நிலவேம்பு
சிறுதேக்கு	கொடிவேலிவேர்ப்பட்டை
யானைத்திப்பிலி	செங்கழுநீர்க்கிழங்கு
கோஷ்டம்	கிராம்பு
ஏலக்காய்	அதிவிடயம்
மஞ்சள்	நன்னாரி வேர்
செவ்வியம்	வாயுவிடங்கம்
மூள்ளுக்கத்திரி வேர்	சிவதைவேர் (சுத்தியானது)
கோரைக்கிழங்கு	பொன்முசுட்டைவேர்
சீரகம்	கருஞ்சீரகம்
கடுக்காய்த்தோல்	நெல்லிமுள்ளி
தான்றிக்காய்த்தோல்	பொரித்த பெருங்காயம்
இந்துப்பு	கடலுப்பு
உவர்மண்ணுப்பு	வளையலுப்பு
அட்டுப்பு	கடுகரோகிணி

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்து, வெய்யிலில் உலர்த்திக், கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந் நீரிலோ அல்லது தேனிலோ உட்கொள்ள,

சங்கிரக்கிராணி, க்ஷயம், காமாலை, மகோதரம், குன்மம், ருசியின்மை, பித்தாதிக்கம், பாண்டு, மந்தாக்கினி, (அக்கினி மாந்தம்) முதலான பற்பல ரோகங்கள் தீரும்.

உ

சரபேந்திரர் பாண்டு, காமாலை ரோக சிகித்ஸையிலுள்ள மருந்து முறைகளுக்கு அட்டவணை.

(அநேக இடங்களில் மருந்துகளுக்குப் பெயர்கள் கூறப்படாமலிருப்பதால் அவைகளுக்குப் பொருந்தும் பெயர்களோயிட்டுப் பிறைக்குறி (Brackets)யும் இடப்பட்டிருக்கின்றன).

மருந்துகளின் பெயர்.	பக்கம்.
அதிமதுர நெய் (காமாலைக்கு) ...	... 80
அய பற்பம் (பாண்டு ரோகத்திற்கு)	... 70
(அரப்பொடியாதி) எண்ணெய் (விட, பாண்டு ரோகங்களுக்கு) ...	... 71
அரப்பொடியாதி வடகம் (சோகை, பித்தம், பாண்டு முதலியவைகளுக்கு) ...	 66
அரப்பொடி மருந்து (காமாலைக்கு) ...	... 99
அரித்ராதி சூரணம் (காமாலைக்கு) ...	... 108
ஆமணக்கிலை மருந்து (காமாலைக்கு)...	... 111
ஆவாரம்பட்டைக் கஷாயம் (கை, கால்வாதல், வீக்கத்திற்கு) ...	... 3
இஞ்சிக் குழம்பு (பாண்டு ரோகத்திற்கு)	... 7
இரதாதிச் சூரணம் (பாண்டு ரோகத்திற்கு)	... 17
இரதாதிக்குமரி பற்பம் (பாண்டு, மகோதரம், முதலானதற்கு) ...	... 28
இலந்தையிலை மருந்து (பித்தபாண்டு ரோகத்திற்கு)	... 69
எலுமிச்சை மருந்து (காமாலைக்கு) ...	... 112
எலுமிச்சம்பழ லேகியம் (பாண்டு, காமாலைக்கு)	... 48
(எலும்பு) மருந்து (காமாலைக்கு) ...	... 104

மருந்துகளின் பெயர்.	பக்கம்.
கடுக்காய் நெய் (பாண்டு, காமாலை முதலிய நோய் களுக்கு)	81
கடுக்காய் நெய் (காமாலைக்கு) வேறு ...	78
கண்டாமலகம் (பாண்டு ரோகத்திற்கு) ...	45
கரிப்பாணதி லேகியம் (பித்த, விஷ பாண்டு ரோகங் களுக்கு)	61
கல்யாணி கிருதம் (பாண்டு ரோகத்திற்கு) ...	3
காந்தாதிச் சூரணம் (சோகை முதலானதற்கு) ...	31
காந்தாதி மண்டூரச் செந்தூரம் (பாண்டு ரோகத் திற்கு)	36
கிட்டாதி குளிகை (காமாலைக்கு)	116
கிட்டாதிச் சூரணம் (காமாலைக்கு)	93
கிட்டாதி லேகியம் (காமாலைக்கு)	104
கீழாநெல்லி மருந்து (காமாலைக்கு)	85
கீழாநெல்லி மருந்து (காமாலைக்கு) வேறு ...	110
குமரி பற்பம் (பாண்டு ரோகத்திற்கு) ...	59
குமாரகண்டம் (காமாலைக்கு)	118
(கையாந்தகரைச் சூரணம்) (ஊதுபாண்டு ரோகத் திற்கு)	14
(கையாந்தகரை மருந்து) (காமாலைக்கு) ...	86
(கையாந்தகரை ஸ்வரஸம்) (பாண்டு, சோகைக்கு) ...	16
சங்கம் வேர் மருந்து (காமாலைக்கு)	96
சாரணையாதி வடகம் (பித்தபாண்டு, வயிற்று வலிக்கு)	64
சாதிலிங்க குளிகை (காமாலை முதலான ரோகங் களுக்கு	112
சிகைக்காய் மருந்து (காமாலைக்கு)	101
சிஞ்சாதிக் குழம்பு (பாண்டு ரோகத்திற்கு) ...	23
சிஞ்சாதி லேகியம் (பாண்டு முதலானதற்கு) ...	9
சிஞ்சாதி லேகியம் (பாண்டு, மகோதரம் முதலான தற்கு) வேறு	11

மருந்துகளின் பேயர். பக்கம்.

சிற்றமுட்டி மாத்திரை (காமாலைக்கு) ... 108
(சுக்காதி) எண்ணெய் (காமாலைக்கு) ... 82
சுண்ணாம்பு மருந்து (காமாலைக்கு) 97
தண்ணீர்விட்டாங்கிழங்கு நெய் (காமாலைக்கு) ... 91
தாமிர பற்பம் (பாண்டுமுதல் வலிகுன்மாதிகளுக்கு) ... 6
தாமிர பற்பம் (காமாலை, பாண்டு ரோகங்களுக்கு) ... 114
திப்பிலியாதி உருண்டை (சோகை, பாண்டு, காமாலை, பைத்தியம் முதலான ரோகங்களுக்கு) 40
திரிபலாதி நெய் (காமாலைக்கு) 105
திரிபலாதி கிருதம் (அழற் காமாலைக்கு) ... 107
(திரிபலாதி) கடாயம் (காமாலைக்கு) 108
தேங்காய் மருந்து (காமாலைக்கு) 84
நந்தியாவட்டைச் சூரணம் (சோகைக்கு) ... 43
நாயுருவியாதி உருண்டை (பாண்டு ரோகத்திற்கு) 16
(பஞ்சுகெவ்விய) எண்ணெய் (காமாலைக்கு) ... 87
பஞ்சகெவ்விய நெய் (பாண்டு, கிரிச்சரங்களுக்கு) ... 76
பஞ்சபாணச் சூரணம் (பாண்டு, சுவாசகாசத்திற்கு) ... 38
பயறு கடாயம் (காமாலைக்கு) 98
(பிரண்டை) மருந்து (காமாலைக்கு) 104
பீர்க்கம் விதை நஸ்யம் (காமாலைக்கு) ... 100
(பேய்க்கொம்மட்டி) லேகியம் (பாண்டு ரோகத்திற்கு) 73
பொன்னாங்காணி எண்ணெய் (காமாலைக்கு) ... 102
மணித்தக்காளி மருந்து (காமாலைக்கு) வேறு ... 85
மண்டூரச் செந்தூரம் (பாண்டு, மகோதரத்திற்கு) ... 34
மண்டூரச் செந்தூரம் (பாண்டு, காமாலைக்கு) வேறு ... 44
மண்டூர வடகம் (மகோதரம் முதலானதற்கு) 53
மண்டூர வடகம் (சகல பாண்டு ரோகங்களுக்கு) ... 68
மண்டூராதி சூரணம் (சகல பாண்டு ரோகங்களுக்கும்) 47
(மரிசாதி) உருண்டை (பித்தபாண்டு, காமாலைக்கு) 39

மருந்துகளின் பெயர்.	பக்கம்.
லவங்கப்பட்டைச் சூரணம் (காமாலை, மகோதரம், சயம் முதலான ரோகங்களுக்கு) ...	120
லவங்கப்பட்டைச் சூரணம் (காமாலைக்கு)	89
லோஹச் செந்தூரம் (பாண்டு ரோகத்திற்கு) ...	15
லோஹச் செந்தூரம் (பாண்டு, மகோதரம் முதலானதற்கு)	26
லோகச் செந்தூரம் (பாண்டு, நீரழிவு, க்ஷயத்திற்கு) (வேறு)	32
லோகச் செந்தூரம் (பாண்டு முதலானதற்கு) வேறு ...	51
வங்கபற்பம் (காமாலைக்கு)	92
வில்வாதி லேகியம் (பாண்டு ரோகத்திற்கு) ...	19
வில்வாதி லேகியம் (பாண்டு முதலானதற்கு) வேறு ...	55

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
8	1	சேர்த்துடுவா	சேர்த்திடுவா
14	21	திரும்	திரும்
17	4	முதலானதற்குச்	முதலானதற்கு
20	25	பிடித்துக்கொள்ளே	பொடித்துக் கொள்ளே
22	1	முடக்கொத்தான் சாறு—¼ படி என்று சேர்த்துக் கொள்ளவும்.	
22	27	சாதிப்பத்திரியைச் சேர்த்துக்கொள்ளவும்.	
24	11	நிரையுள்ளி	நிறையுள்ளி
25	19	'சுக்கு' என்பதையும் சேர்த்துக்கொள்ளவும்.	
25	20	இவைகளை	இவைகளை
26	8	'காட்டுமல்லிச்சாறு' என்றும் சேர்த்துக்கொள்ளவும்.	
28	12	பிசைநதிடவே	பிசைந்திடவே
38	12	ரூரைசர்க்கரை	நிறைசர்க்கரை
40	5	இதற்குப்பாதி எடை	இதற்குப்பாதி எடை,
42	2	1 பலம்	4 பலம்
47	5	பொருக்கிப்போட்டு	பொறுக்கிப்போட்டு
47	22	அச்சூணரம்	அச்சூரணம்
51	6	யொவ்வொன்றிற்கே	யொவ்வொன்றுக்கே
58	9	சாக்கரை	சர்க்கரை
58	18	விளாமபழவிதை	விளாம்பழவிதை
63	10	½ பலம	½ பலம்
64	21	பொடியுமுழுக்கா	பொடியுமுழுக்கா
66	13	சீரக	சீரகம்
67	7	சுத்திசெய்த காந்தம்	காந்தம்
69	21	நவிலுமோர	நவிலுமோர்
72	8	மேரானமுந்	மோரனமுந்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
73	4	நெய்	நெய், மோர்,
79	5	ஊரவைத்து	ஊறவைத்து
80	5	சேரதிமதுரஞ	சேரதிமதுரஞ்
83	4	நீர்க்காமாலை	நீலக்காமாலை
92	15	வாருபோதில்	வரும்போதில்
92	18	மத்திதாற்	மத்தித்தாற்
92	23	யெழிலாமபற்பம்	யெழில்லாம்பற்பம்
97	4	திகழேலு	திகழேலு
105		21-வது மருந்தான 'காமாலைக்கு நெய்' என்ற மருந்திலுள்ள சரக்குகளுக்கும் 22-வது மருந்தான 'அழற் காமாலைக்குத் திரிபலாதி கிருதம்' என்ற மருந்து முறையிலுள்ள சரக்குகளுக்கும் அளவு பேதங்கள் தவிர, மருந்துகள் இரண்டும் ஒன்றுதான் என்று தெரிகிறது.	
109	13	விட்டரைததுத்	விட்டரைத்துத்

தஞ்சை வெற்றிவேல் பிரஸில் அச்சிடப்பெற்றது.

உண்ணு மகோதரத்துக்குத் திப்பிலித்
தூள் வச்சிரப்பாலுட் கலந்தே
நண்ணு நிழலுலர்த்திட்டு மோருருண்டை
கோமியத்தினல் மருந்தில்
குண்ணு சிலேட்டுமத்துக்கு மந்தமிரு
வகைக்குமே குளிர்ந்த நீரிற்
பண்ணு சன்னிக்கர் மதுவிலோர் குளிகைத்
திப்பிலித் தூள்படுத்திக் கொள்ளே (சு)

பார் கிரிச்சமரகிடிலாவாரை சமூலங்
களுந் தூட் பண்ணேருண்டை
வார் பச்சரிசிக் கழுநீர் தன்னிலிரு
மூலமென்முலவையோருண்டை
நேர் கருணைக்கிழங்கின் றூள் தண்ணீரிற்
கொள் வயற்றில் நெடு வலிக்குச்
சார் சுக்கோமமரைத்து வெங்நீரிலோர்
உருண்டை தானிட்டுண்ணே (எ)

நஞ்சு தின்றேர்க் கோருருண்டை மாதலாயின்
பழச் சாற்றினட்டத்தத் தீரும்
பஞ்ச கோல கடியத்தூட் கஷாயத்தி
லோர் குளிகை படவாதம் போ
மிஞ்சுமதிசாரமெனிற் குளிகை வெப்பா
லரிசியுடன் வெங்நீருட்கொள்
அஞ்சுமிந்த வியாதியெலா மினுபான
வகையாலு மகலப் போமே (அ)

(இ-ள்)

சுத்திசெய்த பாத ரஸம் 1 பலம்
சுத்திசெய்த கெந்தகம் ,,
லோகபற்பம் ,,
செம்பு பற்பம் ,,
சுத்திசெய்த நாபி ,,
இலவங்கப்பத்திரி ,,
ஏலக்காய் ,,
சித்திரமூலம் ,,
வாயுவிடங்கம் ,,

அரேணுகம்	1 பலம்
கோரைக் கிழங்கு	,,
கண்டத்திப்பிலி	,,
சுக்கு	,,
நெல்லிமுள்ளி	,,
கடுக்காய்த் தோல்	,,
தானிக்காய் தோல்	,,
சுத்திசெய்த நேர்வாளம்	,,
மிளகு	,,
*சிறுமூலம்	,,

முதலில் கடைச் சரக்குகளை எடுத்து இடித்துச் சூரணஞ் செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு ஒரு கல்வத்தில் ரஸத்தையும், கந்தகத்தையும் போட்டு நன்றாகக் கறுப்பாகும் வரை அரைத்துப் பின்பு பற்பவகைகளையும் சூரணத்தையும் ஒன்று கலந்து தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரை செய்யவும். இதை நிழலிலுலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

தீரும் வியாதிகள் :—

திப்பிலித் தூளுடன் தேன் கூட்டி, ஒரு மாத்திரையும் கலந்து காலையில் சாப்பிடக் காசம், க்ஷயம், சுவாசகாசந் தீரும்.

திப்பிலித்தூள், சர்க்கரை இவைகளுடனே இம்மாத்திரையைக் கொடுக்க பிரமியங் (நீரிழிவு) தீரும்.

காய்ச்சலுக்கு வெல்லத் தண்ணீரில் இம்மருந்தைக் கரைத்துக் கொடுக்கவும்.

குன்மத்திற்குத் திப்பிலித் தூளுடனே மாத்திரையை உட்கொண்டு வெந்நீரருந்தவும்.

கிராணிக்குப் பச்சரிசிக் கழுநீரில் ஒரு மாத்திரை கொடுக்கவும்.

சூலைக்கு சுக்குக் கல்கத்திலும், கடுக்காய்த்தூளிலும் கொள்ளவும்.

பாண்டு ரோகத்திற்கு பசு மூத்திரத்தில் சாப்பிடவும்.

மகோதரத்திற்குத் திப்பிலித் தூளுடன் வச்சிரப்பால் (சதுரக்கள்ளிப் பால் ஒரு சொட்டு) கலந்து ஒரு மாத்திரை கொடுக்கவும்.

---

*சிறு மூலம் = திப்பிலி

சிலேஷ்மத்திற்குப் பசு மூத்திரத்தில் கொடுக்கவும்.

இருவகை மாந்தங்களுக்கும் குளிர்ந்த ஜலத்தில் கொடுக்கவும்.

சன்னிக்குத் திப்பிலித்தூளும் தேனும் கலந்து ஒரு மாத்திரை கொடுக்கவும்.

மூத்திர க்ருச்சிரத்திற்கு ஆவாரையின் சமூலமான சூரணத்தில் ஒரு மாத்திரை கூட்டிப் பச்சரிசிக் கழுநீரில் சாப்பிடவும்.

இருவகை மூலங்களுக்கும் காய்ந்த கருணைக் கிழங்குத் தூளுடன் கலந்து தண்ணீருடன் கொடுக்கவும்.

வயிற்று வலிக்கு சுக்கையும் ஓமத்தையும் வெந்நீரில் அரைத்துப் பிழிந்து அதிலம்மாத்திரையைக் கொடுக்கவும்.

நஞ்சு தின்றோர்க்கு மாதுளம்பழச்சாற்றில் ஒரு உருண்டை நல்கவும்.

பஞ்சகோல (திப்பிலி, கண்டத்திப்பிலி, செவ்வியம், கொடிவேலி, சுக்கு) கஷாயத்தில் ஒரு மாத்திரை கொடுத்தால் வாதரோகம் போம்.

வெட்பாலையரிசியை வெந்நீர் விட்டரைத்துப் பிழிந்து ஒரு மாத்திரை கொடுத்தால் அதிசாரம் தீரும்.

---

3. சுவாசமிருமலுக்கு மருந்து

முள்ளியென்ற கத்தரியின்வேர் புரணி
பொடிசெய்து மோந்து வைத்து
அள்ளியொரு வெருகடி தூளது
நாணழியினீர் தனிலிட்டு
துள்ளவெரி கஷாயத்திலோர் சிரங்கை
யாகிடவுஞ் சுண்டிறுத்து
வள்ளிய வெண்காரமொரு பணவெடை
தான் பொரித்து மத்தித்துண்ணக்
கொள்ளிருமல் சுவாச காசங்களும்
போமுறையிது கைகூடுந்தானே (கூ)

(இ-ள்)

முள்ளுக்கத்திரியின் வேர்த்தோலை நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, ஒரு வெருகடியளவு தூளையெடுத்து 4 படி ஜலத்தில் போட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு சிரங்கையாகு மட்டும் நன்றாக வற்றக்காய்ச்சி இறுத்துக்கொள்ளவும். பொரித்த வெங்காரம் ஒரு பணவெடையும் போட்டுச் சாப்பிடச் சுவாச காசங்கள், இருமல் முதலியவை தீரும்.

---

4. காசத்துக்கு நெய்

சிறு வழுதலை கையாந்தகரையும்
பிரமியுடன் சீந்தில் தண்டும்
பெறு மொன்று வகை நாழிச் சாறிதிலு
நெய் நாழியிற் கலந்து
மறு தியிலெரித்திட்டுப் பதங்கண்டு
வடித்துங்கொள் காலை மாலை
யுறும்போது நக்கிருமல் காச சுவா
சங்கள் முதலோடிப் போமே (ம)

(இ-ள்)

சிறு கத்திரி	கையாந்தகரை
பிரமி	சீந்தில் தண்டு

இவைகளின் சாறு வகைக்கு ஒரு நாழி.

பசுவின் நெய் ஒரு நாழி, இவைகளை யொன்றுகலந்து அடுப்பின்மேல் வைத்து எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

வேண்டும்போது (½ தோலா) வீதம் காலையிலும் மாலையிலுமாகச் சாப்பிட இருமல், காசம், சுவாசம் இவைகள் தீரும்.

(இ-ன்)

தாளகம் ஒரு பலத்தைச் சுத்திசெய்து, சர்க்கரை 2 பலத் துடனே கூட்டி வெற்றிலைக்காம்பின் சாற்றினால் 2 நாழிகை அரைத்து வில்லைகளாகத் தட்டி, நிழலில் காயவைத்துக்கொள் ளவும். இதைக் காகிதத்திற்குள் வைத்துச் சுருட்டி மேலே புளியஞ்சாம்பலைக் குழைத்துப் பூசவும். இவ்வாறு மூன்று தடவை பூசவும். அதற்குமேல் 4 தடவை சீலைமண் செய்து, ஒரு முழுநீள அகலமுள்ள குழியில் வரளிக்காய் அடுக்கி அதன் நடுவில் இதை வைத்து மேலும் எரு மூட்டைகளை வைத்துப் புடமிடவும். பின்பு வெண்மை நிறமான இப்பற்பத்தை எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

சூலை, வாத, கப, சுவாசகாசங்கள் தீரும்.

---

7. சுவாச காச மருந்து

வசுவாசி தூதுவளை சங்கிலைவே
மூருக்கினிலை வகையிந்நாலு
பிசை சமன் கொண்டு பிட்டு வைத்தெடுத்துப்
பிழிந்து கொள்ளிறுத்த பின்னும்
வீசியுமுக் கடுகு சமன் பொடி செய்து
வெரு கடியுமென்றாளிட்டுப்
பசுந்தேனு நாலிலந்து துளிவிட்டுக்
குடி காசம் பறந்து போமே (கசு)

(இ-ள்)

ஆடாதோடையிலை	தூதுவேளை
சங்கிலை	முருக்கின் இலை

இவைகளைச் சமனெடுத்து ஆவியில் வேகவைத்தெடுத் துக்கொண்டு பிழிந்து கொள்ளவும். இதை இறுத்து, சுக்கு, திப்பிலி, மிளகு சமங்கூட்டி இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, வெருகடிதூள்போட்டுத் தேன் 4 அல்லது 5 துளி கள் விட்டு ஒன்று கலந்து குடிக்கவும். காசம் தீரும்.

8. சுவாச காசமிருமலுக்குத் "தாளிச பத்திரிச்" சூரணம்.

தாளிச பத்திரி யோமமிரு சீரக
முக்கடுகு தான்றிக்காயுங்
கேளரத்தை பெருநாகஞ் சிறுநாகப்பூக்
கடுக்காய் கிராம்பு மேல
மீள வெட்டிவேரு மிலாமிச்சத்தின்
வேர் சந்தனமு மிகு சாதிக்காய்
தீளு மிலவங்கப்பட்டைப் பத்திரியு
மிவையெல்லாம் நிறுத்துக்கூட்டே (கள)

கூட்டியிடி சூரணஞ் செய் சேலி
வடித்துடன் றேனுங் கூறக்கார்
மீட்டியுங் கொள்ளொரு நேரமொரு
வெருகடியாக மேவக் கேளு
வாட்டிருமலத்திசுரஞ்சுவாச காசங்
களுடன் மற்றுந் தீரும்
பூட்டுசிலே வளவனிகர் சரபோசி
மகராசன் புகன்றதாமே (கஅ)

(இ-ள்)

தாளீசபத்திரி	ஓமம்
சீரகம்	கருஞ்சீரகம்
சுக்கு	திப்பிலி
மிளகு	தான்றிக்காய்
சித்தரத்தை	பெருநாகப்பூ
சிறுநாகப்பூ	கடுக்காய்
கிராம்பு	ஏலக்காய்
வெட்டிவேர்	இலாமிச்சைவேர்
சந்தனத்தூள்	சாதிக்காய்
இலவங்கப்பட்டை	இலவங்கப்பத்திரி

இவைகளைச் சமமாக எடுத்துச் சூரணம் செய்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். இதில் ஒரு வெருகடியள வெடுத்துத் தினம் ஒருவேளை தேனில் கொள்ளவும். இதனால் இருமல், அஸ்திஜ்வரம், சுவாசகாசம், முதலிய ரோகங்கள் தீரும்.

9. காசமிரைப்பு, இருமல், எலிகடி இவை களுக்கு உருண்டை

சாதிலிங்கங் கெந்திரசமபி
நாபிதாரமிவை சமனுய்க் கொண்டு
ஆதிய வெண்காரமு முக்கடுகுட
னொரு நிட்க மூட்டு நொச்சில்
மீதுளசி கரிசாலையின்னீராலரைத்
துருட்டி மிளகின் றிட்ட
மீதுமொரு குளிகை யுண் காசமிரைப்
பிருமல் கடி யெலிக்குந்தானே (ஙஙு)

(இ-ள்)

சுத்திசெய்த சாதிலிங்கம்		சுத்திசெய்த	கெந்தகம்
,,	ரசம்	,,	நாபி
,,	வெள்ளித்தூள்	பொரித்த	வெங்காரம்

திரிகடு (சுக்கு, திப்பிலி, மிளகு)

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் கல்வத் திலிட்டு முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்முக கறுப் பாகும் வரை யரைத்துத் தூள்செய்து, மற்ற சரக்குகளையும் போட்டு நொச்சிச்சாறு, துளசிச்சாறு, கரிசாலங்கண்ணிச் சாறு, இவைகளினுல் தனித்தனியே (3 ஜாமம்) அரைத்து மிள குப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தவும். இதை வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் உட்கொள்ள காசம், இரைப்பு, இருமல், எலிகடி முதலியவைகள் தீரும்.

---

10. காசத்திற்கு நெய்

பசுவின் நெய் படியொன்றில் கரிசாலை.
முள்ளியிலை பகருநொச்சில்
வசுவாசியமுதவல்லிச் சாரணை
கண்டங்காரி வச்சிர வல்லி
வசுவாட்டி யிலைச் சாறு வகைக்கரைக்காற்
படியாய் வார்த்து நெய்யைப்
பிசகாது பதமாக வடித்த பின்
றூதுவேளை பெருவேர் சங்கே (ஙஙு)

வேரதின் மேற்றோர்ப் பொடியும் வகை
பலம் மூக்காலாகும் வெள்ளுச்சீனி
சேரரைப் பலங் கூட்டித்தின மொன்றுக்
குள்ளங்கைத் தேக்கிக் கொண்டால்
நேரிருமலீளை இளைப்புடன் காச
மிவையெல்லாம் நீங்கிப் போகுஞ்
சாரவுப்புக் கூட்டுமறு பத்தியமும்
இருப்பதுவுஞ் சந்தமாமே. (உக)

(இ-ள்)

பசுவின் நெய்	—	1 படி
கரிசாலங்கண்ணிச்சாறு	—	½ படி
மூள்ளியிலைச்சாறு	—	,,
கருநொச்சிச்சாறு	—	,,
ஆடாதோடையிலைச்சாறு	—	,,
சிந்தில்கொடிச்சாறு	—	,,
சாரணைச்சாறு	—	,,
கண்டங்கத்திரிச்சாறு	—	,,
பிரண்டைச்சாறு (வாட்டிப் பிழிந்து)	—	,,

இவைகளை யொன்றுகலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாக வடித்து இறக்கவும்—இதனுடன்

பருமனை தூதுவேளை வேர்ப்பட்டை
சங்கம் வேர்ப்பட்டை

இவைகள் வகைக்கு ¾ பலமும்

சீனி ½ பலமுமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, உள்ளங்கை கொள்ளுமட்டும், (½ அணை அளவு) மேலே சொன்ன நெய்யுடன் குழைத்துச் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :—

இருமல், ஈளை, இளைப்பு, காசம் முதலியவை.

பத்தியம்:—

உப்புகூட்டவும். மறுபத்தியமும் பிடிக்கவும்.

11. காசத்திற்கு உருண்டை

பாதரத நாபி கெந்தி லோகமுஞ்
சித்திர மூலம் பருங்கடுக்காய்.
சீத நெல்லித் தான்றியின்காய்
யிலவங்கந் தாளிசபத்திரி யேலங்கள்
ஓதிய திப்பிலிமூலமரேணுகுலுஞ்
செங்கழுநீருத்த கோட்டம்
பேதிய தாம்பிரபற்ப நாககேஸரங்
கோரைப் பெருங் கிழங்கே (உஉ)

பெரு மிலவங்கப் பட்டை யிலை
யெலாஞ் சமபாகம் பெறவே கூட்டி
யரை சூட்ச சூரணமாயெலுமிச்சம்
பழச் சாற்றிலிதை மத்தித்து
ஒரு கடலைக்களவாய்க் குளிகை
செய்ததை நிழலுலர்த்தி வைத்துக்
தரு மனுபானங்கள் கண்டு மிட
காச சுவாசங்கள் சயமும் போமே (உக)

போகுமிதிற் பிரமேக மகோதரம்
பாண்டுஞ் சூலைபோங் கிரிச்சந்
தாகமரோசிகங் கிராணி மூடகெற்
பங்கிருமிகளுந் தனியுன்மத்த
மாகுல்மம் வாத பித்தங் கபத் தொகை
வியாதிகளே மாற்றுவிக்கும்
யேகும் விட சுரமகா தோடமிது
பலநோயுமிணங்காதாமே (உச)

(இ-ள்)

சுத்தி செய்த பாதரஸம்	ஏலக்காய்
,, கெந்தகம்	திப்பிலிமூலம் (கண்டந் திப்பிலி)
,, நாபி	(அரேணுகம்) காட்டுமிளகு
,, இரும்புத்தூள்	செங்கழுநீர்க் கிழங்கு
கொடி வேலிவேர்	பெரிய லவங்கப்பட்டை
கடுக்காய் தோல்	கோஷ்டம்
நெல்லி வற்றல்	தாமிரபற்பம்
தான்றிக்காய் தோல்	நாககேஸ்ரம் (சிறுநாகப்பூ)
இராம்பு	பெருங்கோரைக்கிழங்கு
தாளீசபத்திரி	

இவைகளைச் சமனெடையாக நிறுத்தெடுத்துக் கொள்ளவும். முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டுநன்றாக் கறுப்பாகும் வரையரைத்துக் கொள்ளவும். பின்பு உலோகத் தூள்களையும் போட்டு அரைக்கவும். கடைச்சரக்குகளை வெயிலிலுலர்த்திக் கல்லுரலிலிட்டுச் சூரணித்து, வஸ்திர காயஞ் செய்து உலோகங்களுடனே கூட்டி, எலுமிச்சம் பழச் சாறு விட்டு நன்றாக ஒருநாளைக்கு அரைத்து, கடலைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். நிழலில் உலர்த்திக் கொண்டு தக்க அனுபானங்களில் கொடுக்க.

காசம், சுவாசம், க்ஷயம், பிரமேகம், மகோதரம், பாண்டு சூலை, மூத்திரகிருச்ரம், அரோசகம், கிராணி, மூடகர்பம் (கருப்பையிலிருந்து சிசுவெளி வராமல் சிக்கிக் கொள்ளுதல்), கிருமிகள், பைத்தியம், குன்மம், வாத, பித்த, கபரோகங்கள், விஷ மஜ்வரங்கள், பலவித தோஷங்கள் முதலியவைகள் தீரும்.

---

12. சுவாச காசத்திற்குத் 'தசமூல நெய்'

பெரு வாகை முன்னை வில்வம் பாதிரி
கண்டங் காரி பெருங்குமிழ்தான்
நெருஞ்சி சிறு வழுதுணையுமொரு வகைக்கு
நாற் பலமாய் நிறுத்துக் கொண்டு,
பெருமல்லி, சிறுமல்லி, யொன்றினுக்கு
நாலு பலம் பெருஞ்சமூல.
முருகுதூளாயிடித்து நான் மரக்
கானீரைவிட்டு முதிரக் காய்ச்சே (உரு)

முது நாலுபடியாக வடித்திட்டு
நாழி நெய்யுமொக்க விட்டு
மதிகோட்டங் திரிகடுகேலமிந்துந்
திரிபலையுமிருவோமங்கள்
கதிவிளால் வாலுளுவையரிசி
தானிலவங்கங் காணெண்றுக்கு
மிதுகளஞ் சொன்றரைத்துக் கலந்
திட்டு மூன்று தினமெரி கொதித்தே. (உசு)

எரி நாலா நாள் வடித்து மொருவேளைக்
கிருகாசினிடையுட் கொள்ளுங்
திருமார்பிலிடிப்பிழைப்போடு நெஞ்சுக்
கட்டு குன்மஞ் செறி கிராணி
யுருகாச சுவாசங்கள் தீருமிதிற்
குன்றியிடை ஊட்டானந்த
வைரவத்தைக் கலந்திட்டுக் கிருதமுண்ணக்
குணமாகு மகிழ்ந்து செய்யே (உஎ)

(இ-ன்)

பெருவாகை	முன்னை
வில்வம்	பாதிரி
கண்டங்கத்திரி	பெருங்குமிழ்
நெருஞ்சி	சிறுவழுதுணை
பெருமல்லி	சிறுமல்லி

இச்சரக்குகளின் வேர் வகைக்கு 4 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து 4 மரக்கால் தண்ணீர் விட்டு 4 படியாகச் சுண்டக் காய்ச்சி

பசுவின் நெய் ஒரு படியும் விட்டு,

கோஷ்டம்	திரிகடு
ஏலக்காய்	இந்துப்பு
திரிபலை	ஓமம்
குரோசாணி ஓமம்	கிராம்பு
வாலுளுவையரிசி	

இவைகள் வகைக்கு 1½ கழஞ்சு (கழஞ்சு—1¼ வராக னெடை) எடுத்துத் தூள்செய்து பால் விட்டரைத்து, நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி 3 நாளைக்குச் சிறுகச் சிறுக எரிக்கவும். நான்காவது தினத்தில் பக்குவப்படுத்தி இறக்கி வடிக்கவும்.

வேளைக்கு இரு காசளவு வீதம் இந்நெய்யை யுட்கொள்ள மார்பில்வலி, மூச்சுத்திணரல், நெஞ்சுக்கட்டு, குன்மம், கிராணி காசம், சுவாசம் முதலியவைகள் தீரும். இந்நெய்யுடன் ஆனந்த பைரவம் ஒரு குன்றிமணியெடை சேர்த்துக் கொடுக்கவும். மேலே சொன்ன வியாதிகள் தீரும்.

13. சுவாச காசத்திற்குத் 'தாளிச வடகம்'

தாளிசபத்திரி சுக்குச் செவ்வியங்
திப்பிலிப் பங்குதானிரண்டு
நீளுந்திரிபலை யேல மிளகு
திப்பிலி மூலநெரி நாகப்பூ
மீளிய பச்சிலை வகைக்கொரு பங்கு
நாற்பது வெல்லம் பங்கை
தோளமை நீரிற் கரைத்து வடிகொண்டு
மடுப்பேற்றி தோய பாகாக்கே (உஅ)

பாகதனிற் புளிச்சிராய் சுடு நீறு
மது பங்கு பத்து மிட்டுப்
பாகுத்திரளக் காய்ந்த பக்குவத்
தில் முன்மருந்தைப் படுத்தூட் செய்து
நாகமதில் வடிகட்டித் தூவு
களியாகக் கிளறி நற் பதத்தில்
வேக விறக்கியிதை மூன்று காசினிடை
யாயுருட்டி விடியற் கொள்ளே (உக)

கொள்ளிதனிற் சுவாசங்கள் பாண்டு காசங்
காமாலைகொடு மேல் மூச்சுந்
தள்ளுமந்தாக்கினி வெப்புப்பாவை
மருந்தீடு முதற் சாரா தோடுங்
களமில்லை மண்டலங்கள் செலுத்துஞ்
செங்கோன் முறையாய் காக்குந்தஞ்சை
வள்ளல் சபோசி மகாராசனிந்த
முறை தன்னை வகுத்தவாறே (ஙடி)

(இ-ள்)

தாளீசபத்திரி சுக்கு
செவ்வியம் திப்பிலி

இவைகள் வகைக்கு 2 பலம்

கடுக்காய்	ஏலக்காய்
நெல்லிக்காய்	தான்றிக்காய்
மிளகு	திப்பிலி மூலம்
சிறு நாகப்பூ	பச்சிலை

இவைகள் வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சூரணித்துக் கொண்டு, வெல்லம் 110 பலத்தைத் தண்ணீர் விட்டுக் கரைத்து வடிக்கட்டிக்கொண்டு, அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கிக்கொண்டு, புளியம் புரணி சுட்டசாம்பல் 10 பலம் போட்டு, பாகுதிரளும் பக்குவத்தில் முன்னுல் சித்தமாக வைக்கப்பட்டிருக்கும் சரக்குகளின் தூளையும் போட்டுக் கிண்டி வரவும். களிப்பக்குவமான பதத்தில் இதை இறக்கி வைத்துக்கொண்டு 3 காசெடையளவு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

தினந்தோறும் ஒரு உருண்டை வீதம் காலையில் கொள்ளவும்.

தீரும் வியாதிகள் :—

சுவாசம், பாண்டு, காஸம், காமாலை, மேல் மூச்சு, மந்தாக்னி, வெப்புப்பாவை, மருந்தீடு முதலியவைகள்.

---

14. காசத்திற்குக் 'கரிசாலை நெய்'

தூதுவளை கரிசாலை வசுவாசி
சங்கிலுடன் சுழலாவாரை
யோதுமிலைச்சாறு வகைக்கொருநாழி
யாயிதில் நெய்யுரியுமெண்ணெய்
யீதளவாய்க் கூட்டுக் கடுக்காய் நூறும்
பொடியாக விடிதோல் வெல்ல
மாதிருபான் பலஞ் சேரவொன்றுபடக்
கூட்டுச் சுக்கு வாய்விளங்கம் (நிகண்டு)

வெண் கடுகு, கொடிவேலி சிறுதேக்குத்
திப்பிலி செவ்வியமுங் காயங்
கண் மிளகதி விடயஞ் சீரகம் பொன்
முசுட்டைவேர் கடுகரோகிணி
விண் சுழலாவாரை பெருங்குரும்பையுங்
குங்கிலியமேல மோமம்
மண்ணிய திப்பிலிமூலமரேணுக
மிவையொன்று வகைகளஞ்சே (கூஉ)

அளவாகுஞ் சூரணஞ் செய்தரைப்
பலமரப் பொடியுமதனிற் கூட்டி
யிளமந்தாக்கினி தன்னிற் குழம்பாகும்
பக்குவத்திலிறக்கியோர்நா
ளளவாறிப் பதினேந்து தினங்
தானியப் புடத்திலமரவைத்தும்
வெளியெடுத்தொரு கொட்டைப்பாக்கள
வுண் மண்டலம்போம் வியாதி கேளே (கூஎ)

பொருமீளை காச சுவாசமிரும
லீதுவெல்லாம் புகாது கைப்பு
மருபுளிப்புடன் விட்டுப் பசுவின்பால்
வெள்ளாட்டுப்பால் மற்று நெய்யும்
பருப்புடன் புடலங்காய் கவுதாரி,
காடை கொச்சைப் பத்தியங்கள்
முருங்கிலைப் பிஞ்சுங்கொண்டு
வரலாகு மிந்த முறையைச்செய்யே (கூச)

(இ-ள்)

தூதுவளை — கரிசாலங்கண்ணி
ஆடாதோடை — சங்கம் இலை
சுழலாவாரை

இம் மருந்துகளின் சாறு வகைக்கு — ஒரு படி
பசுவின் நெய் — ½ படி
எள்ளெண்ணெய் — ½ படி

இவைகளை யொன்று கலந்து, கடுக்காய் 100 (எண்ணிக்கையில்) எடுத்துக் கொட்டை நீக்கித் தூள் செய்து, சாறு கலந்த நெய்யுடனே போட்டு, வெல்லம் 20 பலமும் போட்டு, ஒன்றுகக் கலந்து,

சுக்கு	வாயுவிடங்கம்
வெள்ளைக்கடுகு	கொடிவேலி வேர்
சிறு தேக்கு	திப்பிலி
செவ்வியம்	பெருங்காயம்
மிளகு	அதிவிடயம்
சீரகம்	பொன்முசுட்டை வேர்
கடுகரோகிணி	சுழலாவாரை வேர்
பெருங்குரும்பை	குங்கிலியம்
ஏலக்காய்	ஓமம்
திப்பிலி மூலம்	காட்டு மிளகு

இவைகளை வகைக்கு 1½ வராகனெடை வீதம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, அதனுடன் கலந்து சுத்திசெய்த இரும்புத்தூள் ½ பலமுடன் போட்டு அடுப்பின் மேலேற்றி மந்தாக்கினியாலெரிக்கவும். இதைக் குழம்பு பக்குவத்திலிறக்கி ஒரு நாளைக்கு ஆற வைக்கவும். பின்பு இதை ஒரு பாண்டத்திலிட்டு 15 நாளைக்கு நெல்லில் புதைத்து வைக்கவும். இதில் ஒரு கொட்டைப் பாக்களவெடுத்துச் சாப்பிட ஈளை, காசம், சுவாசம், இருமல் இவைகள் தீரும்.

பத்தியம் :—

கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும். பசுவின்பால், வெள்ளாட்டுப்பால், பசுவின் நெய், துவரம்பருப்பு, புடலங்காய், கெளதாரி இறைச்சி, காடையிறைச்சி, முருங்கையிலை, முருங்கைப்பிஞ்சு இவைகளைக் கூட்டிக்கொள்ளவும்.

---

15. காசத்திற்குக் 'குடி நீர்'

சிறு வழுதலைவேரும் வசுவாசி
சங்கினிலை சீந்திற்றண்டுஞ்
சிறுதேக்கு நாகரம்பேராம்பிலையுந்
தேட் கொடுக்கி சேரக்கூட்டியுற
விரு நாழி தண்ணீரொருபாதி
தனிலிட்டுமுழக்காய்க் காய்ச்சி
நறுந்தேனுந் திப்பிலியுங் கலந்துண்ண
சயங்காச நலமதாமே (ஈரு)

(இ-ள்)

சிறு கத்தரிவேர்	ஆடாதோடை இலை
சங்கின் இலை	சீந்தில்கொடி
சிறுதேக்கு	சுக்கு
பேராம்பல் இலை	தேட்கொடுக்கு இலை

இவைகளை வகைக்கு (1 பலம்) வீதமெடுத்து இடித்துப் பாணையில்போட்டு, 2 படி தண்ணீர்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றக் காய்ச்சவும். இக் கஷாயத்தை வடிகட்டித் தேனும் திப்பிலிச் சூரணமும் சேர்த்துச் சாப்பிட்டுவர க்ஷயம், காசம், இவைகள் தீரும்.

---

16. காசத்திற்கு மருந்து

குங்கிலியம் வெள்ளையதாய்ப் பொடி
செய்து சாறுவகைக் கூறுமூலந்
தங்கு வெள்ளையுள்ளீ வசம்பது நறுக்கி
நல்லெண்ணெய் தன்னிலிட்டு
அங்கி தனிற் கொதிப்பித்து வடித்து
வைத்திதனை யுள்ளருந்தும்போது
சங்கையில்லை யெண்ணெயினல் காசமுதற்
சுவாச காசந்தானும் போமே (ஈக)

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிசெய்து, அதனுடன் சாறுவேளைவேர், வெள்ளைப்பூண்டு, வசம்பு இவைகளையும் சேர்த்திடித்து (வகைக்கு ½ பலம்) நல்லெண்ணெய் (2 சேரி லிட்டு)க் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இவ்வெண்ணெயைத் தினமும் சாப்பிட்டு வரக் காசம், சுவாசகாசம், முதலியவை தீரும்.

குறிப்பு :—சாறுவேளை என்பது சிறு சாரணை

---

17. சுவாச காச கிருதம்

சங்காடா தோடை மிளகரணை, பே
ராம்பல் நொச்சி, தான்றி, நெல்லி
யங் கடுக்காய் சாறுவளை மஞ்சளிவை
பத்துக்குளாறு வேருங்
தங்கு வகையொன்றுக்கு மூன்று பலம்
பெருவாகை தானு முன்னை
பங்கு பெருங்குமிழ் வில்வம் பெருமல்லிச்
சிறுமல்லிப் படுநெருஞ்சில் (கூஎ)

படு கண்டங்கத்திரி பாதிரி சிறு
வழுதலை வேர் பத்தொன்றுக்கு
விடுமிரு பலமாக மாவலிங்கஞ்
செம்முள்ளி வேருந் தண்ணீர்
அடு முட்டான் மூலமுடன் கொடிவேலி
விழுதி வேராயிற்புங்குங்
கடுகளாத் தழுதாழை மூக்கரட்டை
நாணல் புன்னை காணைதண்டை (ங அ)

ஆகவிது பனிரெண்டு வகை வேருங்
தூக்கு பல மைம்பதாகும்
பாகமிது முன் மருந்துங் கூட்டு வசு
வாசியிலை பலமெண்ணான்கும்
ஏக மதாயிருதூணி நீரை விட்டுப்
பதக்காக வெரித்துக் காய்ச்சி
நீ கடாயம் வடித்துமிதையு நா
நாழி பசு நெய்யிற் கூட்டே (ஙக)

கூட்டிடு திப்பிலி மூலங் கொடிவேலி,
சிறு தேக்குங் குடசப்பாலே
யூட்டரிசி கற்றடக சிங்கிபுன்னை
கடுரோணி யுற்ற செவ்வியம்
காட்டிபத்திப்பிலி யேலமிரு சீரகந்
திரிபலையும் நல்லரத்தை
கோட்ட மிந்துமசமோ தமிளகு
வாலுளுவை யரிசி கொடு கற்பூரம் (சுய)

முந்திரிகைப்பழமட்டி யிலவங்கம்
லவங்கபத்திரி மொழிந்ததெல்லாஞ்
சந்திரண்டு காசினெடை வீதமெட்டுக்
கடாயஞ்செய்ததிற் கலந்து
வந்த நெய்யை நக்கிடவும் ரத்தபித்தங்
காச மிரைப்பையமீழை
யுந்துருமலிவையெல்லாம் திருமுறை
சரபேந்திரனுரைத்ததாமே (சுக)

(இ-ள்)

சங்கம் வேர்	ஆடாதோடை வேர்
மிளகரணை வேர்	பேராம்பில் வேர்
நொச்சி வேர்	தான்றிக்காய்த் தோல்
நெல்லிமுள்ளி	கடுக்காய்த் தோல்
மஞ்சள்	சிறு சாரணை வேர்

இவைகள் வகைக்கு 3 பலம்

பெருவாகை	முன்னை
பெருங்குமிழ்	வில்வம்
பெருமல்லி	சிறுமல்லி
பெருஞ்சில்	கண்டங்கத்திரி வேர்
பாதிரி	சிறுவழுதலை வேர்

இவ்வகைகளின் வேர் தனித்தனியே 2 பலம்

மாவலிங்கம்வேர்	செம்முள்ளிவேர்
தண்ணீர்விட்டாங்கிழங்கு	கொடிவேலிவேர்
விழுதிவேர்	புங்கு
அழுதாளைவேர்	மூக்கரட்டைவேர்

நாணல்வேர்	புன்னைவேர்
ஆதண்டம்வேர்	ஆயில்யமரப்பட்டை

இச்சரக்குகள் தனித்தனியே 50 பலமும், ஆடாதோடையிலை 32 பலமும் எடுத்து எல்லாவற்றையும் இடித்து 8 மரக்கால் ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி இரு மரக்காலாகும் வரை வற்றக்காய்ச்சவும். பின்பு வடிக்கட்டி பசுவின் நெய் 4 படி விட்டு,

திப்பிலிமூலம்	கொடிவேலிவேர்
சிறுதேக்கு	குடசப்பாலை அரிசி
கற்கடசிங்கி	புன்னைமரப்பட்டை
கடுகரோகிணி	செவ்வியம்
திப்பிலி	ஏலக்காய்
சீரகம்	கருஞ்சீரகம்
கடுக்காய்த்தோல்	நெல்லிவற்றல்
தான்றித்தோல்	சிற்றரத்தை
கோஷ்டம்	இந்துப்பு
ஓமம்	மிளகு
வாலுளுவையரிசி	கல்பூரம்
முந்திரிகைப்பழம் (திராக்ஷை)	கிராம்பு
லவங்கப்பத்திரி	

இச்சரக்குகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்து இடித்து 8 மடங்கு ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுகக் காய்ச்சி வடிக்கட்டிக், கஷாயம் கலந்த நெய்யுடனே ஊற்றி, பக்குவமாக எரித்து, பதத்திலிறக்கவும். இந்நெய்யைச் சாப்பிட்டுவர இரத்தபித்தம், காசம், இரைப்பு, கபக்கோளாருலேற்பட்ட ஈளை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

---

18. காசத்திற்கு 'நிரா அபையாதி லேகியம்'

கடுக்காய் நூறு பலம் பாப்பார
முள்ளியின் வேர் காணவ்வீத
மிடுக்கிடித்திருதூணி நீரை விட்டுக்
குறுணியாயெரித்துக் காய்ச்சி
யெடுமிதிற் பழவெல்ல நூறு தொடி
கரைத்திட்டுமிலேகியம் போ
லடு பாகமாய்க் காய்ச்சித் திரி கடுகு
முப்பலியுந் தேலமாமே (சஉ)

இலவங்கம் வங்கப்பத்திரி சிறுநாகப்
பூவுமவையியம்பொன்றுக்குப்
பலமொன்று கூட்டி யெலாஞ் சூரணஞ்செய்
ததிற்றாவிப்படிதேன் வார்த்துக்
கலந்து பின்னிரு நேரங்கொண்டு வரக்
கபமிரைப்புங் காச சுவாசம்
பல சயமிருமலுப்பிசங்களுந்
தீருமிதைப் பரிந்து செய்யே (சஞ)

(இ-ள்)

முற்றிய கடுக்காய்—100 பலம்.
பாப்பாரமுள்ளி (கண்டங்கத்திரி வகை)—100 பலம்.

இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீர்விட்டு ஒரு அடுப்பின்மேலேற்றி 1 மரக்காலாகும்வரை எரித்து வடி கட்டிக்கொள்ளவும். இதனுடன் பழய வெல்லம் 100 பலம் போட்டுக் கரைத்து, அடுப்பின்மேலேற்றிப் பாகு செய்து

சுக்கு	திப்பிலி
மிளகு	கடுக்காய் தோல்
நெல்லிக்காய் வற்றல்	தான்றிக்காய் தோல்
ஏலக்காய்	இராம்பு
லவங்கப்பத்திரி	சிறுநாகப்பூ

இவைகளை வகையொன்றுக்கு ஒரு பலம் வீதமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, முன்னே தயாராக இருக்கும் பாகுடனே சேர்த்துக் கலந்து, லேகியமாகக் கிண்டவும். இதை இறக்கி ஆறியபின்பு, ஒருபடி சுத்தமான தேனை ஊற்றிக் கலந்து கொள்ளவும். இந்த லேகியத்தைத் தினம் 2 வேளை (காலையிலும், மாலையிலும்) (ஒரு கழற்சிக்காயளவு) சாப்பிட்டு வரக் கபம், இரைப்பு, காசம், சுவாசம், க்ஷயம், இருமல், உப்பிசம், முதலிய ரோகங்கள் தீரும்.

---

19. காச முதலானதிற்குத் 'திரிலோக சிந்தாமணி'

சூதம் வெள்ளரி, வயிரமுருக்குச் செம்பு
சங்கமப்பிரகஞ் சொர்ண முத்தும்
ஓது பிரவாளமிவை யீரைந்து
மாம் பற்பமுரிய கெந்தி
கோது பச்சைகாபி மஞ்சிலித்
தாளகங்களெல்லாங் கூருன்றுக்கு
வீதமொரு பலமாகக் கல்வத்திலிட்டு
அரைக்க மேலுங்கேளே (சச)

ஏழுதினங் கொடிவேலிக் கஷாயத்தி
லரைத்துப் பின்னெருக்கம் பாலிற்
சூழு தினமூன்று நொச்சில் வேர்க்குடி
நீராலு மத்தித்துலர்வுலர்த்தி
மீழிடி சூரணஞ்செய்து மாறிய பின்
சமபாக மிரத பற்பங்
கேழு மிதிலுண்கிலொன்று வைக்ராந்தம்
பற்பம் ரெண்டுங் கிளையாய்க் கூட்டே (சரு)

கூட்டிதனை முருங்கைவேர்க் கஷாயத்
திலேழுதினங் கொண்டரைத்து
மூட்டிருபத்தொரு நாளுங் கொடிவேலி
குடி நீரால் முன்னியிஞ்சிச்சா
றூட்டு தின மூன்று கஞ்சாவிலை நீருஞ்
சம்பீரச்சாறுறுங் கொம்மட்டி
நாட்டிடு மாதளம்பழ நீராலாட்டிச்
சூரணத்திலுலத்தொன்றே (சசு)

பொரித்திட்ட வெண்காரஞ் சுத்திசெய்த
நாவிரண்டும் புகலும் பங்காய்
நிறுத்திட்டுக்கல நன்ருயரைத்துப் பின்
சாதியின்காய் நேரிலவங்க
முறி சுக்குந் திப்பிலியு நாவிக்குஞ் சமபாகம்
ஒவ்வொன்றுந்தான் பெருமித்தை
கொம்மட்டி மாதளம்பழச்
சாறிட்டாட்டிப் பின்னெடுத்தே (சஎ)

இடு நிட்க மொன்றளவாய் வில்லை செய்து
நிழலுலர்த்தியெடுத்து வைத்துக்
கொடு தேனிற்றிப்பிலியிலனு பானஞ்
செய்தருந்தக் கோழை காசம்
ஓடு சயமிருமலுடனிரைப்பிதுகள்
தீர்ந்து போமுறு பல நோய்க்குந்
தொடுமனு பானங்கண்டுமிட்டிடலா
மிம் முறையாற் சுகமதாமே (சஅ)

(இ-ள்

வெள்ளிபற்பம் தங்கம் பற்பம்
பாதரஸ பற்பம் முத்து பற்பம்
வைரபற்பம் பவழபற்பம்
செம்பு பற்பம் ஸ்ஃபடிக பற்பம்
சங்கு பற்பம் அப்பிரக பற்பம்

இவைகள் வகைக்கு 1 பலம்

சுத்திசெய்த கெந்தகம் சுத்திசெய்த நாபி (ஈரமானது)
,, மனோசிலை ,, தாளகம்

இவைகளையும் வகைக்கு ஒரு பலமெடுத்துக் கல்வத்திலிட்டுத் தூள் செய்துகொண்டு, பற்பவகைகளையும் போட்டுக் கொடிவேலிவேர் கஷாயம் விட்டு ஏழு தினங்கள் அரைத்துக் கொண்டபின், எருக்கம்பால்விட்டு மூன்று நாளரைக்கவும். நொச்சிவேர் கஷாயத்தினல் 3 நாளரைத்துக் காயவைத்துச் சூரணித்துக் கொண்டு, இம்மருந்திற்குச் சமன் ரஸபஸ்மம்

அதற்கு நாலிலொன்று வைக்ராந்த பற்பமும் கூட்டி, முருங்கைவேர் கஷாயத்தினுல் 7 தினங்கள் அரைத்துக் கொள்ளவும். கொடிவேலிக் கஷாயத்தில் 21 தினமும், குருத்தஞ்சி சாற்றினுல் 3 தினமும், கஞ்சாயிலைச்சாறு, கொம்மட்டி மாதளம்பழச்சாறு இவைகளின் சாற்றினுல் முறையே 3 தினங்களும் அரைத்துக் காயவைத்துக் கொள்ளவும். இச்சூரணத்தின் நான்கிலொருபங்கு பொரித்த வெங்காரமும், சுத்திசெய்த நாபியும் சேர்த்து அரைத்துக்கொண்டு,

சாதிக்காய்	கிராம்பு
சுக்கு	திப்பிலி

இவைகளையும் சமனெடுத்துச் சூரணத்துடன் கலந்து கொண்டு, கொம்மட்டி மாதுளம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து, வராகனெடையளவுள்ள வில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இதைத் தேனிலோ அல்லது திப்பிலிச் சூரணத்திலோ சாப்பிட்டுவரக் காசம், கோழை, க்ஷயம், இருமல், இரைப்பு, இவை தீரும். பற்பல நோய்களுக்கும் அதற்கேற்றபடி அனுபானத்தில் கொடுக்கவும்.

---

20. காசத்திற்கு 'ரச பற்பம்'

பாதரத நான்கு நீட்கங் கொப்பரையின்
உள்ளடைத்துப் படுவாய் மூடி
யீதை யொரு நாற்பது நாள் சுவத்தின்
மூத்திரத்திலிடு புதைத்து
வோதளவு நாள் கழித்து மெடு செம்பு,
பித்தளை யொன்றிரண்டு குழாய் குள்
போதடைத்துச் சேலைமண் செய் தொரு
பாணைக்குள்ளதனை பொருந்தவையே (முகு)

வைத்து மணல்மேற் சொரிந்துமறுபது
நாழிகையுந் தீ மன்றெரித்து
மத்திதின் சூடாறிய பின்னெடுத்தும் பார்
பற்பமதாம் வரு நோய்க்கெல்லா

மித்தையனுபானத்தாலிடு பொழுது
காச சுவாசிசைப்புங் தீரு
முத்திருமலீலாகளுங் குணமாகுஞ்
சரபேந்திரன் மொழிந்ததாமே (ருய)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம் 4 வராகனெடை எடுத்து ஒரு கொப்பரைத் தேங்காய்க்குள்ளடைத்து நன்றாக மூடவும். குதிரை லாயத்தில், சிறிய குழிதோண்டி, மூத்திரம் சாரும் வண்ணம் பூமியில் மேற்சொன்ன கொப்பரையைப் புதைத்து 40 நாட்கள் சென்றபின் எடுத்து, செப்புக் குழாய்குள்ளோ அல்லது பித்தளைக் குழாய்க்குள்ளோ அடைக்கவும். பின்பு சேலமண் செய்து ஒரு பாணைக்குள்ளிதை வைக்கவும். பாணைக் குள் மணலைப் போட்டு பாணையை அடுப்பின் மேலேற்றி 60 நாழிகைக் கமலாக்னியாலெரிக்கவும். சூடாறியபின்பிதை எடுத்து உடைக்கத்துல்யமான் பாதரஸ பற்பம் கிடைக்கும். தக்க அனுபானங்களில் கொடுத்துவரக் காசம், சுவாசம், இரைப்பு, ஈளை, இருமல் இவைகள் குணமாகும்.

---

21. சிலேஷ்ம காசத்திற்கு நெய்

தேள் கொடுக்கி யறுபத்து நாலு பலம்
வெட்டி யிடிதண்ணீர் தூணி
மீள்க விட்டுமிதைக் காய்ச்சி நாலுழி
யாயிறக்கி மிளகு சுக்குந்
தாள்கு மிந்தும் கற்கடகசிங்கி
யத்திக்திப்பிலியுந் தண் வசம்புங
கள் கடுகு ரோகிணி செங்கொடிவேலி
வேர்ப்புரணி காமனுமே (ருக)

எவச்சாரஞ் சிறு மூலகங்கள் கண்டங்
கத்திரி வேரின் புராணி
நவபங்கம்பாளையின் வேராயிலின்மூல்
சாறடை வோர் நஷிலொன்றுக்குப்

பலமிரு கழஞ்சிட்டுமரை கலந்து
கொச்சை நெய்யும் பால் நாழுழி
கவனஞ் செய்தெரி வடித் தாறினற்
பதின் பலந்தேன் கலந்துநக்கே (குஉ)

(இ-ள்)

தேள்கொடுக்கிப்பூண்டு 64 பலம் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி 4 மரக்கால் சுத்தஜலம் விட்டு, ஊறவைத்துப் பின், அடுப்பின் மேலேற்றி 4 படியாகும் வரை வற்றக் காய்ச்சவும். இதை வடிக்கட்டிக் கொண்டு

மிளகு
இந்துப்பு
யானைத்திப்பிலி
கடுகரோகிணி

சுக்கு
கற்கடசிங்கி
வசம்பு
செங்கொடி வேலி வேர் [பட்டை
யவக்ஷாரம்
கண்டங்கத்திரி வேர்ப் [பட்டை
ஆயில்ய மரத்தின் வேர்

ஜாதிக்காய்
திப்பிலி
ஆடுதீண்டாப் பாளை வேர்
சாறடைவேர்

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (கழஞ்சு-1½ வராகனெடை வீதமெடுத்து மை கஷாயம் விட்டு நன்றாக அரைத்து,

வெள்ளாட்டு நெய் 4 படி
வெள்ளாட்டுப் பால் 4 படி

சேர்த்து, எல்லாவற்றையும் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். நெய் நன்றாக ஆறியபின் தேன் 40 பலம் விட்டுக் குழப்பிக் கொண்டு சாப்பிடவும்.

22. சுவாச காசத்திற்கு மருந்து

சிறு தேக்குக் கற்கடக சிங்கி சுக்குக்
கறி மஞ்சள் திப்பிலி மூலஞ்
சிறு மல்லி சடாமாஞ்சில் கொடிவேலி
யசமோதந் திப்பிலி தானுஞ்
சிறு வழுதலை யுள்ளிக்கரு நொச்சில்
வெண்ணெய்ச்சிற் செவ்வியமுன்னி
மறு கண்டங்கத்திரி பாதிரி நெல்லி
முள்ளிபெரு வாகையாமே (ருக)

வசுவாசி கொன்றையின்வேர் பெருங்குமிழ்
தூதுவளை வசம்பரத்தை
பசுவில்வம் பெருமல்லி யரிதகிக்
காய் நெருஞ்சிற் பகருந்தான்றி
கசி கடுகிலவங்க மகிலேலஞ் செம்
பிளிச்சை கிரும்பிந்துப்பு
மசி யானைத்திப்பிலி மாதளம் பழந்
துராயுத்தாமணி நாகப்பூ (ருங)

பூணு மனைசிலை தேற்றுப் பெருங்காயம்
பிரவினடிப் பூண்டுமேனி
காணு முள்ளங்கிக்கிழங்குந் தாளிச
பத்திரி சாதிக்காய்க் கீழ்நெல்லி
யூணுகையாணிவட்சார மருதோன்றி
நவச் சாரமுரை பெரும்புல்
பேணு முருக்கழிஞ்சி சர்க்கரை தேன்
பாற்றேட் கொடுக்கி பிரசித்தமாமே (ருரு)

(இ-ன்)

சிறுதேக்கு	கற்கடசிருங்கி
சுக்கு	மஞ்சள்
திப்பிலி மூலம்	சிறுமல்லி
சடாமாஞ்சில்	கொடிவேலிவேர்
ஓமம்	திப்பிலி
சிறுவழுதலை (கத்திரி)	பூண்டு
கருநொச்சி	வெண்ணெய்ச்சி

செவ்வியம்	முன்னை
கண்டங்கத்திரி	பாதிரி
நெல்லிமுள்ளி	பெருவாகை
ஜாதிபத்திரி	கொன்றைவேர்
பெருங்குமிழ்	தூதுவேளைவேர்
வசம்பு	சிற்றரத்தை
வில்வம்	பெருமல்லி
கடுக்காய்தோல்	நெருஞ்சில்
தான்றிக்காய்தோல்	கடுகு
கிராம்பு	அகில்
செம்பிளிச்சை	லவங்கப்பத்திரி
இந்துப்பு	யானைத்திப்பிலி
மாதுளம்பழம்	திராய்
உத்தாமணி	சிறுநாகப்பு
மஞ்சிகை (சுத்தியானது)	தேத்தாங்கொட்டை (சீவியது)
பெருங்காயம் (பொரித்தது)	பிராப்பூண்டு
குப்பைமேனி	முள்ளங்கிக்கிழங்கு
தாளீசபத்திரி	சாதிக்காய்
கீழாநெல்லி	கையாந்தகரை
யவட்சாரம்	மருதோன்றி
நவச்சாரம்	பெரும்புல்
மூருக்கு (கல்யாண) சர்க்கரை	அழிஞ்சில்

இச்சரக்குகளை வகைக்கு சமபாகமாக எடுத்து, நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும். இத்தூளைத் தேனிலோ, பாலிலோ அல்லது சர்க்கரையிலோ கொடுக்கவும்.

23. காசத்திற்குப் பூசணி நெய்

பூசணிக்காய் நீர்குருணி பசுவின்நெய்
யிருபடியிற் புகட்டியேலம்
வீசு கரிப்பாலியின் வேரிலவங்க
மிந்து சுக்கு விலாமிச்சம்வேர்
பேசதிங்கம் விழாலரிசி நாகப்பூப்
பச்சிலையும் பெருத்த கோட்டங்
தேசுவ கெந்தியின் வேரசமோதஞ்
சிறு தேக்குந் தேவதாரம் (ருசு)

தருவகை யொன்றினுக்கு முக்கழஞ்சாம்
பூசணிக்காய்ச் சாற்றுலாட்டி
மருவிட்டு வெச்சனவு நாலுதின
மூறியைந்தாய் மன்னு நாளில்
குரு வடித்ததிற் கண்டுச் சர்க்கரை நாற்
பலங் கூட்டிக்கொள் நாளொன்றுக்
கொரு மூன்று கழஞ்சுண்ணக் காசரோகஞ்
சுவாசகாசம் விக்கலோடிப்போமே (ருள)

(இ-ள்)

பூசணிக்காய்ச்சாறு	1 குறுணி
பசுவின் நெய்	2 படி

இவைகளை யொன்று கலந்து,

ஏலக்காய்	கரிப்பாலிவேர்
கிராம்பு	இந்துப்பு
சுக்கு	விளாமிச்சம்வேர்
அதிங்கு (அதிமதுரம்)	விழாலரிசி
சிறு நாகப்பூ	பச்சிலை
பெருத்தகோஷ்டம்	அமுக்கிராக்கிழங்கு
ஓமம்	சிறுதேக்கு
தேவதாரு	

இச்சரக்குகள் வகையொன்றுக்கு 3 கழஞ்சு (3¾ வராகனெடை) எடுத்துப் பூஷணிக்காய்ச்சாறுவிட்டு நன்றாக வரைத்து, சாறுகுழப்பிய நெய்யுடனே குழப்பி 4 தினம்

களுக்கு ஊறவைத்து ஐந்தாந் தினத்தில் இம்மருந்தை அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பக்குவமாகப் பதத்திலிறக்கவும். இதை வடிக்கட்டி 4 பலம் சர்க்கரை கூட்டிக்கொண்டு, தினமொன்றுக்கு 3 கழஞ்சு வீதம் (பாலுடனே) சாப்பிட்டு வரவும்.

தீரும் வியாதிகள் :—

காசரோகம், சுவாசகாசம், விக்கல் முதலியவைகள்.

---

24. காசம், இளைப்பு, இரைப்புப் பினிசத்திற்கு நெய்

தூதுவளை வேர்ப்புரணி காயவைத்துந்
தூளிடித்ததொரு சிரங்கை
யோது கடுக்காயதின் றூள் மஞ்சளின் றூள்
மிளகின் றூளொரு வகைக்கு
மீது காலேயரைக்கால் சிரங்கைத் தூளுங்
கலந்து மிதை நெய்யதனிற்
கோதகலக்காய்ச்சியிடுமதிலிட்டுக்
கிண்டி வைத்துக் கொள்ளப் போமே (ருஅ)

(இ-ள்)

தூதுவேளை வேரிலுள்ள மேல் தோலை உரித்துக் காயவைத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு எடுத்த தூள் ஒரு சிரங்கையுடன்

கடுக்காய் தூள் மிளகு பொடி
மஞ்சட் தூள்

இவைகள் வகைக்கு காலேயரைக்கால் சிரங்கை வீதமெடுத்துப் பசுவின் நெய் (1 சேரிலே) குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவப்படுத்தி, இளரிவைத்துக் கொள்ளவும். இதை வடிக்கட்டாமல் கடுகுடனே உபயோகிக்கவும்.

---

25. காசத்திற்குத் 'திப்பிலி ரசாயனம்'

திப்பிலி நாற்பல மேல மிலவங்கப்
பட்டையும் பத்திரி கிராம்பு
மொப்பிலொரு வகைக்குமொரு தொடி
யாகு மிரியல் சுக்கோமமல்லி
திப்பிலி மூலஞ் செவ்வியங் கொடிவேலி
தாளிச பத்திரி தக்கோல
நப்பி சதகுப்பை சிறு தேக்குடன்
வாய் விளங்கமும் நற் சீரங் காணே (ருசு)

காணு வகைக்கரைப்பலங் கரிசாலைப்
பொடியுஞ் சர்க்கரையிரண்டு
மூணு வகைக்கிரு தொடியாயிவை யெல்லாஞ்
சூரணஞ் தெனெனன்றினுக்கா
லாணுபடி யளவிட்டு லோக பற்ப
மரைப் பலமதனிற் கொள்ளப்
பூணு பலஹீனமும் பாண்டனல்மந்தம்
சுவாச காசம் போகுந்தானே. (சுமி)

(இ-ள்)

திப்பிலி — 4 பலம்

ஏலக்காய்	கிராம்பு
இலவங்கப்பட்டை	இலவங்கப்பத்திரி

இவைகள் வகைக்கு 1 தொடி

மிளகு	சுக்கு
ஓமம்	கொத்தமல்லி
கண்டத்திப்பிலி	செவ்வியம்
கொடிவேலி வேர்	தாளீசபத்திரி
தக்கோலம்	சதகுப்பை
சிறுதேக்கு	வாயுவிடங்கம்
சீரகம்	

இவைகள் வகைக்கு 1½ பலம்

உலர்ந்த கையாந்தகரை யிடித்த தூள்
சர்க்கரை

இவை வகைக்கு 2 தொடி

இச்சரக்குகள் அனைத்தையும் வெயிலில் உலர்த்திக் கல் லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதனுடன் சுத்தத் தேன் ¼ படி சேர்த்துக் குழப்பி, சுத்த மான அய பற்பம் ½ பலமும் கலந்து கொள்ளவும்.

இம்மருந்தைக் கழற்சியளவு தினம் 2 வேளை சாப்பிடப் பலவீனமும், காசமும் பாண்டு. காங்கை, மந்தம் முதலிய ரோகங்களும் தீரும்.
குறிப்பு :— தொடி. என்பது ஒரு பலமாகும்

---

26. காசத்திற்குத் ' திப்பிலி ரசாயனம் '

திப்பிலி யெண்பல மிளகு வாய்விளங்கஞ்
சிறு தேக்குஞ் சீரகஞ் சுக்குந்
தப்பிலொரு வகைக்கு நாற்றொடி
கொடிவேலி கரிசாலித்தூளுந்
திப்பிலி மூலஞ் செவ்வியம் வகையொன்றுக்கு
யிரு பலமுஞ் சேரக்கூட்டி
யொப்பிலரப் பொடியிரு பலமிட்டுத்
தூளிடித்து மொன்றுய்த் தாக்கே (சுக)

தாக்கிடு சர்க்கரையுஞ் சேரொன்றரை
தேனரைச் சேருஞ் சாரித்தூட்டி
யாக்குவதைப் பதினைந்து தினங்கள்
தானியப் புடத்திலமர வைத்து
நோக்கி யெடுத்திதை யுண்ணச்சய காச
சுவாசங்கள் நோயாங் குன்மந்
தேக்கிட ரோசிகம் வாந்தியிவை
முதலானது தீருஞ்செய்துபாரே (சூஉ)

(இ-ள்)

திப்பிலி 8 பலம்

மிளகு வாய்விளங்கம்

சிறுதேக்கு	சுக்கு
சீரகம்	

இவைகள் வகைக்கு 4 பலம்

கொடிவேலி வேர்	கரிசாலைத்தூள்
திப்பிலி மூலம்	செவ்வியம்
சுத்திசெய்த அரப்பொடி	

இவைகளை வகைக்கு 2 பலவீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, சர்க்கரை 1½ சேரும், தேன் ½ சேரும் விட்டு நன்முகப் பிசைந்து இடித்து லேகியமாக்கிக் கொள்ளவும். இதை 15 தினங்களுக்குத் தானிய புடத்தில் வைக்கவும். பின்பு இதையெடுத்துத் தினம் 2 வேளை வீதம் கழற்சிக்காயளவு சாப்பிடக் காசம், சுவாசம், குன்மம், அரோசகம், வாந்தி முதலிய ரோகங்கள் தீரும்.

---

27. காசத்திற்குக் 'குண்டலாதி லேகியம்'

வன சங்கின்வேரொரு நூற்றன்பது
கண்டங்காரி மன்னுஞ் செவ்விய
மினமொன்றுக்கேளொரு பானந்து
பலவீதமதாயிட்டு வில்வந்
தனில் வேரு நிலக்குமிழும் பாதிரி
காட்டாமணக்குஞ்சார் நெருஞ்சிற்
கனமுள்ளிக்கத்திரி யானை நெருஞ்சிற்
பேராமல்லி கண்டங்காரி (கூகூ)

சிறுமல்லி யிலவயெல்லாம் வேரின்
வகைக் கொடிவேலி திப்பிலி மூலஞ்
சிறு தேக்குச் சடாமாஞ்சில் வகையொன்
றுக் கிருபதாந் தெரிபலங்க
ளறுபதுபடி தண்ணீர்விட்டு யெட்டி
லொரு பங்காயனலிற் காய்ச்சி
யிறுத்திட்டு வடிக்கொண்டு நூறுட
நாற் பலவெல்லமிடு பாகாக்கே (கூஞ)

பாகதனிற் திரிபலி இராம்பேலம்
நாகப்பூப் பத்திரித் தானும்
மாக வொருவகைக்கு மூப்பலஞ் சேரஞ்
சிறுதேக்குமரிதகிப்பூ
வீகவிரு பலமோமம் பெருங்காய
மூங்கிலுப்பு மிளகிலவக்குப்
பாகமது நாலுபலந் திப்பிலியு
மிருபது பலஞ்சுக்கெட்டே (கரு)

பலமிட்டுச் சூரணஞ்செய் பாகிலிதை
லேகியமாம் படிதேன் கூடக்
கலந்துண்ணப் பீனிசமு மார்புவலி
சூலவிக்கல் காச சுவாச
மூலந் தழல் மந்தகுன்மமகோதர
மூலம் வீக்கமுதரக்கட்டி
மலந் தள்ளுங் கிராணி முதற் றீருமுறை
சரபேந்திரன் வகுத்ததாமே (கசு)

(இ-ள்)

சங்கம் வேர்	150 பலம்
கண்டங்கத்திரிவேர்	15 பலம்
செவ்வியம்	15 பலம்

வில்வவேர்	நிலக்குமிழ்வேர்
பாதிரிவேர்	காட்டாமணக்கு வேர்
நெரிஞ்சில்	முள்ளுக்கத்திரி வேர்
யானை நெரிஞ்சில்	பேராமல்லி
கண்டங்கத்திரி	சிறுமல்லி
கொடிவேலிவேர்	திப்பிலிமூலம்
சிறுதேக்கு	சடாமாஞ்சில்

இவைகள் வகையொன்றுக்கு 20 பலம் வீதமெடுத்து, எல்லா சரக்குகளையும் ஒன்றிரண்டாகவெட்டிக் கல்லுரலிலிட்டிடித்து, ஒருபெரிய பாண்டியில்போட்டு 60 படி ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி, எட்டிலொன்றுகும்வரைச் சுண்டக்காய்ச்சவும். இதை இறுத்துக்கொண்டு வெல்லம் 104 பலம் போட்டுக் கஷாயத்துடனே கரைத்து, அடுப்பின் மேல் வைத்துப் பாகாக்கிக் கொள்ளவும்.

கடுக்காய்தோல்	நெல்லிவற்றல்	இவைகள் வகைக்கு 3 பலம்
தான்றிக்காய்தோல்	கிராம்பு	
ஏலக்காய்	சிறுநாகப்பூ	
லவங்கப்பத்திரி		

சிறுதேக்கு கடுக்காய்பூ

இவ்விரண்டும் வகைக்கு 2 பலம்

ஓமம்	பெருங்காயம்	இவைகள் வகைக்கு 4 பலமும்
மூங்கிலுப்பு	மிளகு	

திப்பிலி 20 பலம்

சுக்கு 8 பலமுமெடுத்து

இச்சரக்குகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, பாகுடன் கலந்து (நெய் விட்டு) லேகியமாகக் கிண்டிக்கொள்ளவும். ஆறியபின் தேன் ஒருபடி விட்டுக்கிளறி வைத்துக்கொள்ளவும்.

பீனஸம், மார்வலி, சூலை, விக்கல், காசம், சுவாசம், மூலச்சூடு, மந்தம், குன்மம், மகோதரம், மூலம், வீக்கம், வயற்றுக்கட்டி, கிராணி (வயிற்றுப்போக்கு) முதலிய ரோகங்கள் தீரும்.

---

28. காசத்திற்கு 'விளங்காதிச் சூரணம்'

சொல்லிய வாய்விளங்காதி பெருங்காயந்
திப்பிலியுஞ் சுக்கினோடும்
புல்லிய சத்தியின் சார மிந்துப்புஞ்
சித்தரத்தை பொருந்து மேழும்
வல்லி யிவை சமபாகஞ் சூரணஞ் செய்
தாவின் நெய்யில் வளங் கலந்து
நல்லியலுண்பது காச சுவாசச்
சயந்தீரும் வகை நன்கு செய்யே. (க்ஷ)

(இ-ள்)

வாயுவிடங்காயம் பெருங்காயம்
திப்பிலி சுக்கு
சதுர்ச்சாரம் இந்துப்பு
சிற்றரத்தை

இவைகளைச் சம பாகமாக எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் வெருகடியளவெடுத்துப் பசுவின் நெய்யுடனே கலந்து, சாப்பிட்டுவரக் காசம், சுவாசம், க்ஷயம் முதலிய ரோகங்கள் தீரும்.

---

29. காசத்திற்குப் பஞ்ச கோலாதிச் சூரணம்

பகர் பஞ்ச கோல மிலவங்கப்
பட்டை பத்திரியும் பார் கிராம்பு
மகிழ்மேலஞ் சித்தரத்தை சிறுதேக்கு
மரமஞ்சள் வாய்விளங்க
முகிழ் சாதி பத்திரி காய் கொடி வேலி
யமுக்கிரா மூலங் கோட்டஞ்
செகதாளீசப் பத்திரியு மிளகோம
நாகப்பூச் சீரந்தானே (சூ அ)

இவை யெல்லாஞ் சமபாகமாய்க் கூட்டிச்
சூரணித்து மிதற்கு நேராய்
கவை தேவதாரமிதின் சூரணஞ்
சேர்த்துள்ளருந்த நயனகாசங்
குவை திமிரஞ் சயரோகஞ் சுரபாண்டு,
கடிரோகங் குட்டங் குன்மஞ்
சுவை யக்கினி மந்தங்கள் பீனச
நீரடைப்புந் துலைந்துபோமே. (சூ கூ)

(இ-ள்)

* பஞ்சகோலம் இலவங்கப்பட்டை
இலவங்கப்பத்திரி கிராம்பு

---

* பஞ்ச கோலமாவது : திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், கொடிவேலி சுக்கு.

ஏலக்காய்	சிற்றரத்தை
சிறு தேக்கு	மரமஞ்சள்
வாயுவிடங்கம்	சாதிப்பத்திரி
கொடிவேலிவேர்	அமுக்கிராக்கிழங்கு
கோஷ்டம்	தாளீசபத்திரி
மிளகு	ஓமம்
சிறுநாகப்பூ	சீரகம்
சாதிக்காய்	

இவைகளை வகைக்குச் சம எடை யெடுத்துக் கல்லுரலி லிட்டுச் சேதமாகாமலிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, இதற்குச்சமன் தேவதாரச் சூரணத்தைச் சேர்த்துக்கொண்டு, சாப்பிட்டுக் கொண்டுவரக் கண்களிலுள்ள காச வகைகள், திமிரம், கூயரோகம், சுரம், பாண்டு, கடிவிஷங்கள், குஷ்டம், குன்மம், அக்கினி மாந்த்யம், பீனஸம், நீரடைப்பு இவைகள் நீரும்.

---

30. சுவாச காசத்திற்குப் பூரண சந்திரோதய மாத்திரை

தபனீய பற்பமைந்தும் பாதரத
நாற்பதரிதாரம்பத்தும்
அமர கெந்தி மூப்பதிவை யிட்கனிரை
யிடு கூட்டியிதை கல்வத்தில்
குமரியினீர் சிவந்திடும் பருத்திப்
பூவிதின் சாற்றுல் குமிர வாட்டிச்
சமஞ் சிறுவில்லை பிடித்துலர்த்தி யுங்
துஇற் கட்டித்தானை மண்செய் (எ0)

செய்து வனையலின் குப்பி தனிலிட்டு
வாயடைத்துச் சேலைமண் செய்
வை யிதையோர் குண்டுசட்டி தனக்கு
மேலில்லிகுப்பி வாய்பிடிக்கச்
செய்தலை கீழாகவைத்து மணல்சொரிந்து
அடுப்பேத்திக் தினற் சாமம்
பெய் மூன்று விறகதனற்றீபாக்கினி
யாக வெரி பின்னற் சாமம் (எக)

காலாக்கினியாக வெரிபன்னிரெண்டு
சாமமும் பின் கனலெரித்து
மேலதனைப் பூசை செய்து குப்பியெடுத்
துடைத்திட்டால் வியன் செந்தூரம்
நாலுவகை யானுபானங் குங்குமப்பூச்
சாதியின் காய் நற்பச்சைபூரங்
கோலமிளகிவையொன்று பணவெடை
யரைக் காலாய்க் கேள் செந்தூரம் (எ)

கொள்ளு பொடியது செய்து காலியிலும்,
வெற்றிலையிற் கூறந்திக்கித்
துள்ளியதேனிலு முண்ணச் சுகயகாச
மூக்கடுதிற் சுவாச காசந்
தள்ளு மிளைப்புப்பிசமு மீளா மிகு
புகைச்சலுடன் சன்னியெல்லா
மெள்ளுறு மெண்பது நாலு வாதமுடன்
வியாதியெலாம் விட்டுப்போமே (எக)

(இ-ள்)

ஸ்வர்ணபஸ்பம்	—	5 வராகனெடை
சுத்திசெய்த பாதரஸம்	—	40 வராகனெடை
சுத்திசெய்த தாளகம்	—	10 ,,
சுத்திசெய்த கெந்தகம்	—	30 ,,

முதலில் இரசத்தையும், கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்தில் போட்டு நன்றாக கறுப்பாகும் வரை அரைக்கவும். பின்பு தாளகத்தையும் ஸ்வர்ண பற்பத்தையும் ஒன்று கூட்டி, நற்றுழைச்சாறு விட்டு 4 ஜாமம் அரைக்கவும். இதை வில்லை களாகத்தட்டி காயவைத்து, மறுபடியும் செம்பருத்திப்புஷ்பச் சாறுவிட்டு 4 ஜாமம் அரைத்துக்கொள்ளவும். இதைச் சிறு சிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைத்துக்கொள்ளவும். இவைகளைப் பட்டுத்துணியில் சுற்றிச் சீலைமண் செய்து, வஸ்திர குப்பியிலிட்டு (காசிக்குப்பி) மறுபடியும் சீலைமண் செய்து, அதை ஒரு குண்டுச்சட்டிக்குள் வைக்கவும். குப்பியின் வாயை மூடிவிட்டு குண்டுச்சட்டிக்குத் தக்க ஒரு சில்லிட்டுவைத்து

மணல் சொரியவும். இச்சட்டியை அடுப்பின் மேலேற்றி 3 விறகால் (மூன்று விரல் கனமுள்ளவை) நாலு சாமத்திற்குத் தீபாக்கினியாக எரிக்கவும். பின்பு நான்கு ஜாமம் கமலாக் கினியாலெரிக்கவும். இப்படி 12 ஜாமங்களெரித்துப் பூஜை செய்தபின் குப்பியையுடைத்துச் செந்தூரத்தை யெடுத்துக் கொள்ளவும்.

அனுபானமும் தீரும் வியாதிகளும்

குங்குமப்பூ, பச்சைக்கல்ப்பூரம், சாதிக்காய், மிளகு இவை களை ஒரு பணவெடையெடுத்துச் சூரணித்து, அதனுடன் இச் செந்தூரம் அரைக்கால் பணவெடையும் கூட்டி காலையில் வெற்றிலையில் கொள்ளவும். மாலை நேரங்களில் தேனில் சாப்பிடவும். கூயகாசம் தீரும்.

திரிகடுச் சூரணத்துடன் உட்கொள்ள (சுக்கு, மிளகு, திப்பிலி) சுவாசகாசந் தீரும். இளைப்பு, உப்பிசம், ஈளை, புகைச்சல், சன்னி, 84 வித வாதரோகங்கள் முதலிய வியாதி களும் தீரும். இது கைகண்டது.

---

31. காசத்திற்குத் 'தாளிசபத்திரிச் சூரணம்'

தாளிசபத்திரி செவ்வியங்காிலும்
வகைக்கொன்றுதான் பலங்கள்
காளிய திப்பிலிமூலந் திப்பிலியும்
வகைக்கிரண்டு காண்பலந்தா
னீளு சுக்கு மூன்றுபலஞ் சிறு
நாகப்பூ வேலங்காிலாமிச்
சூளியவேரிலங்கப்பட்டைப் பத்திரி
வகையொன்று தொடிகாலாமே (எஉ)

ஆவதெலாந் தூளிடித்துச் சூரணத்துக்
கிரட்டியாயதனில் வெல்லப்
பாவு மதித்தோர் கழற்காய்ப்பிரமாண
வுண்டை செய்துபகர் நாளொன்றுக்
காவதொரு குளிகை யுண்வாதபித்த
வரோசிகங் கப சுரங்கள்

நாவ சய காச குன்மம் வீக்க
மகோதரங்கிராணி நலமதாமே (எக)

(இ-ள்)

தாளீசபத்திரி மிளகு	செவ்வியம்	இவைகள் வகைக்கு ஒரு பலம்
திப்பிலிமூலம் திப்பிலி		இவைகள் வகைக்கு 2 பலம்
சுக்கு		3 பலம்
சிறுநாகப்பூ இலாமிச்சைவேர் இலவங்கப்பத்திரி	ஏலக்காய் இலவங்கப்பட்டை	இவைகள் வகையொன் றுக்கு ¼ பலம்

இச்சரக்குகளைக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, மொத்த நிறைக்கு இரட்டிப்பு வெல்லத்தை யெடுத்துப் பாகாக்கிக்கொண்டு கிளறி கழற்சிக்காயளவு உருண்டைகளாகச் செய்துகொள்ளவும்.

தினம் ஒருமாத்திரை வீதம் உட்கொண்டுவர வாதம், பித்தம், அரோசகம், கபசுரம், க்ஷயம், காசம், குன்மம், வீக்கம், மகோதரம், கிராணி முதலிய ரோகங்கள் நீரும்.

---

32. சுவாச காசத்திற்குக் 'குக்குலாதி மாத்திரை'

முக்கடுகு வாய் விளங்கங் கோரை,
மூலஞ் செவ்விய முப்பலாதி
தக்கடுகு ரோகிணி மஞ்சள் கொடிவேலி
தரு தேவ தார மேலம்
புக்கர மூலம் வசம்பு மரமஞ்சளி
லவங்கப் புரணி யிந்து
மிக்க வளீசவ்வச்சலவணபிட
லவணங்கள் வெட்பாலி மேவே (எச)

மேவரிசி மூக்கரட்டை யானை பெருந்
திப்பிலியும் விளம்பு மூலங்
கூவு வகைக்கரைப் பலமுஞ் சுத்திசெய்த
குக்கில் பலங்கொள் பன்மூன்று
யீவதெலாஞ் சேர்த்திடித்து மிலந்தை
தருங்கனியினளவிதையுருட்டி
யாவது தேன் நெய்யிலொரு வுண்டை தின
மொன்றனுபானத்தருந்தே. (எரு)

அருந்துடல் வீக்கமுடஞ் சயகாச
சுவாசங்களக்கினி மாந்தம்
பெருங்குன்மம் பகரோக மூலம் வயிற்
றுள் கட்டிப் பொருமலாதி
வருமகோதரம் பாண்டு கிராணிகள்
கிருமியுறுவளி ரோகங்கள்
தரு கபமீளை முதற்றீரு முறை
யுரை செய்யுஞ் சரபவேந்தே. (எசு)

(இ-ள்)

சுக்கு	திப்பிலி
மிளகு	வாயுவிடங்கம்
கோரைக்கிழங்கு	செவ்வியம்
கடுக்காய் தோல்	நெல்லிக்காய்
தான்றிக்காய் தோல்	கடுகரோகிணி
மஞ்சள்	கொடிவேலி வேர்
தேவதாரம்	ஏலக்காய்
† புக்கர மூலம்	வசம்பு
மரமஞ்சள்	இலவங்கப்பட்டை
இந்துப்பு	வளையலுப்பு
கறியுப்பு	வெட்பாலை அரிசி
மூக்கரட்டை வேர்	யானைத்திப்பிலி
திப்பிலிமூலம்	

இவைகளை வகைக்கு ½ பல வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, சுத்தி செய்த குக்கில் * 13 பல

* திரிபலைக் கஷாயத்தில் பாவனை செய்யவும்.

† புக்கர மூலம் என்றசரக்கு மனோயாள மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

மெடுத்துச் சூரணத்துடன் கலந்து, நன்றாக ஒன்று சேரும் வரை இடித்து, இலந்தைக்கொட்டை அளவுள்ள குளிகை களாகச் செய்து கொள்ளவும். இதை நெய்யிலோ, தேனிலோ சாப்பிட்டு வர உடம்பு வீக்கம், க்ஷயம், காசம், சுவாசங்கள், அக்னி மாந்தியம், குன்மம், ஆசன நோய்கள், மூலம், வயிற்றி லுள்ள கட்டிகள், பொருமல், மகோதரம், பாண்டு, கிராணி, கிருமி ரோகங்கள், கபம், ஈளை, முதலிய பலவித கொடூர ரோகங்களுந் தீரும்.

---

33. காசத்திற்கு 'ஆனந்தரசம்'

சாதிலிங்கநாவி கெந்தி முக்கடுகு
வெண்காரஞ் சமபாகங்க
ளோதிவை கல்வத்திலிட்டு மேலெலுமிச்
சம்பழச் சாற்றூலூற்றரைத்து
வீது குன்றிப் பிரமாண மாத்திரைகள்
செய்து லர்த்தி யிஞ்சி நீரில்
மோதி யனுபானமிடும்போது சய
காச வகை முறிந்துபோமே (எ எ)

(இ-ள்)

சுத்திசெய்த இலிங்கம் சுத்திசெய்த நாபி
,, கெந்தகம் சுக்கு
திப்பிலி மிளகு
பொரித்த வெங்காரம்

இவைகளைச் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு ஊறவைத்து, நன்றாக (4 ஜாமங்கள்) அரைத்து குன்றிமணி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ளவும். இதை இஞ்சிச்சாற்றில் சாப் பிட க்ஷயம், காசம், இவைகள் தீரும்.

---

34. காசத்திற்கு 'ஷண்முகரசம்'

கருவங்கம் வெள்ளீ வங்கமப்பிரகந்
தாம்பிரமுங் காந்தம் லோகமுந்
தரும் பற்பமிந்த வகைக்கொரு நிட்கம்
பாதரதந் தனிச் செந்தூரம்
பொருமைந்து நிட்க மிடுவிவையெல்லாங்
கல்வத்திற் போட்டுக் கண்ட
மருவு கத்திரிச் சாற்றுலரைத்தொரு
குன்றி யளவாயுருட்டே (எஅ)

உருட்டியேயதை வாழைக்கனி கொம்பிற்
றேனி லொன்றிலுரவு செய்துந்
தெருட்டியே பின்னனு பானங்களிலுங்
கலந்திட்டாற்றெரிக்கு நோய்க
ளருட்டியே மார்புவலி யீளையிரைப்பு
பீருமலுடனருசிதானுஞ்
சுருட்டியே பீனசமுஞ் சயகாச
சுவாசங்கள் துலைந்துபோமே (கூஎ)

(இ-ள்)

சுத்திசெய்த காரீயம் சுத்தியான வெள்ளீயம்
,, அப்பிரகம் ,, தாமிரத்தூள்
,, காந்தம் ,, இரும்புத்தூள்
இவைகளின் பற்பம் வகைக்கு 1 வராகனெடை
ரஸச் செந்தூரம் 5 ,,

அவைகளை யொன்றுசேர்த்துக் கல்வத்திலிட்டு, கத்திரி இலைச்சாற்றினுலரைத்து குன்றியளவு உருட்டவும். இதை வாழைப்பழத்திலாவது, கொம்புத்தேனிலாவது சாப்பிட்டுவர மார்புவலி, ஈளை, இரைப்பு, இருமல், அரோசகம், பீனிஸம், க்ஷயம், காசம், சுவாசம் முதலிய ரோகங்கள் தீரும்.

35. சுவாச காசத்திற்குக் குடிநீர்

முளை கீழா நெல்லி கடுக்காய் செவியஞ்
சிறுதேக்கு முள்ளிவேருந்
தளை யாடாதொடையின்வேர் திப்பிலியுங்
களில் சீந்தித்தண்டு பத்திரம்
இளை சுக்குந் தூதுவளை மூல கண்டங்
கத்திரிவேர் இளர்ந்த தெல்லாங்
களை நாழி நீரைவிட்டுக் காய்ந்துழக்காய்
கொள் சுவாச காசம் போமே (அம)

(இ-ள்)

கீழாநெல்லி	கடுக்காய்தோல்
செவ்வியம்	சிறுதேக்கு
முள்ளிவேர் (நீர்முள்ளி)	ஆடாதொடைவேர்
திப்பிலி	மிளகு
சீந்தில்கொடி	சீந்தில் இலை
சுக்கு	தூதுவளைவேர்
கண்டங்கத்திரிவேர்	

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக், கல்லுரலி லிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒருபடி சுத்தஜலம் விட்டுறை வைத்து, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி வடிக் கட்டிப் பருகவும். சுவாசகாசம் தீரும்.

---

36. சுவாச காசத்திற்குப் பூசணி நெய்

பூசணிக்காய் நீர்க்குறுணி, பசுவின்
நெய்யும் நாகாழி புண்டரீகம்
பேசரத்தை வசம்பு காரோளிதமுஞ்
சிறுதேக்குப் பேரா முத்தக்
காசு சுக்குப் பூவரிசி திப்பிலி பற்
பாடகமுங் கண்டத்திப்பிலி
தேசவத்தித்திப்பிலியுங் கொடிவேலி
யிந்தவகை தெளியென்றுக்கே (அக)

தெளி நான்கு பலங் கொண்டு மரைத்தாவின்
பாலதுவுந்திகழ் நாநாழி
யளி கரைத்துடன் புகட்டடுப் பேற்றி
யெரியில் வடித்ததை யிறுத்து
ளளி கலசங்களிலும் பதனஞ்
செய்திரு நேர் நக்கஷிக்க
ளிளி காசஞ் சயரோகஞ் சுரபித்த,
குன்ம முதலேகுந்தானே (அஉ)

(இ-ள்)

பூஷணிக்காய்சாறு 1 மரக்கால்
பசுவின் நெய் 4 படி

இவைகளை யொன்று கலந்து,

தாமரைக்கிழங்கு
வசம்பு
பெருங் கோரைக்கிழங்கு
பற்பாடகம்
யானைதிப்பிலி
திப்பிலி

சிற்றரத்தை
சிறுதேக்கு
சுக்கு
கண்டத்திப்பிலி
கொடிவேலிவேர்

இவைகளை வகைக்கு 4 பலமெடுத்துத் தூள்செய்து, பசுவின்பால் 4 படிவிட்டு நன்றாக அரைத்து சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின்மேல் வைத்து, எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும். இதை வடிக்கட்டிக் கொண்டு பத்திரப்படுத்தி, உள்ளுக்குச் சாப்பிட்டுவர விக்கல் காசம், க்ஷயம், சுரம், பித்தகுன்மம் முதலிய ரோகங்கள் தீரும்.

37. இருமலுக்குச் சூரணம்

சித்திர மூலத் துடனில்வாகை
செந்தொட்டி யடவியதன்னி
லுத்திடுமாடுதின்னாத பாளையும்
நாலுஞ் சமூலமிதுவல்லால்

முத்தின பிரண்டை ஐந்துமே சமனு
முடுக்கின் மிளகுடனுதல்
இத்தனை மருந்துங் காயவே வைத்து
மே யதைச் சூரணஞ் செய்யே (அக)

சூரணஞ் செய்து வடியது கட்டிச்
சுத்தமாம் கலசமதண்ணில்
நேருடன் வைத்து வெந்நகடி தூள் வெந்
நீரில் கலந்து காலியினில்
சீருடன் கொள்ளு பத்தியமில்லை
தேகத்தினிலிருமலுங்
தீருமோது மிகுந்த தஞ்சை வாழ்
சரபேந்திரனருள் முறையிதுவே (அச)

(இ-ள்)

கொடிவேலிவேர் நிலவாகை
செந்தொட்டிவேர் ஆடுதீண்டாப்பாளை
பிரண்டை

இவைகளைச் சமூலமாக சமனெடை எடுத்துக்கொண்டு, நறுக்கி வெயிலில் காயப்போட்டு, மிளகு (சரி எடை) கூட்டிக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதையொரு சுத்தமான பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, வேண்டும்போது வெந்நகடியளவு (மூவிரல் கொள்ளும் அளவு) தூளை வெந்நீரில் கலந்து காலை நேரத்தில் குடிக்கவும். இருமல் தீரும். இதற்குப் பத்தியமில்லை.

---

38. சளி, இருமல், உடம்புலர்தல் எலும்புருக்கி, கோழை, சளி, முதலிய நோய்களுக்கு 'நெய்'

அத்தியாலரசு இத்தி யிங்காலி
னதிலுறும் பட்டை யுஞ்சிகப்பாய்
முத்தலாய் வெட்டி வகைக் கொருபலமு
முனிவுடனிடித்து மெய்தனில்

நத்துவமாகத் தூணி நீர் விட்டு
நயமுடனெட்டொன்ருய்காய்ச்சி
சத்துவமான வெள்ளருகு மேயிடித்த
சாறிரு நாழியுங் கூட்டே. (அரு)

கூட்டு கற்ருழை நீரிரு நாழி
குணமிகு நெய்யிரு நாழி
நாட்டர சத்தியால முகிள் மூன்றும்
நலமுள் சந்தனமதுகம்
கோட்டமுமிலுப்பைப் பூவிலவங்கங்
குணமிகு நெய்தலின் கிழங்குங்
காட்டி நன்னரி வேரமுக்கிரா வேர்
கச்சோலஞ் சண்பக மொட்டே (அசு)

மொட்டு செங்கழுநீர்க்கிழங்குப் பச்சிலையு
முதிரிலவங்கப் பத்திரியுஞ்
சட்டமாம் பேரீச்சம்பழமேலந்
தாமரை வீயமதுடனே
இட்ட வெள்ளருகம் வேர் நாணல்தாது
இலவங்கப்பத்திரி கூட
மட்டுள நாகப்பூவுடனே தான்
வகையது மிருபத்திரண்டே (அள)

இருபது மிரண்டில் வகைக்கொரு கழஞ்சு
மெடுத்துப் பால் விட்டதையரைத்துக்
கரையவே கலந்து வடுப்பினிலேற்றிக்
காய்ச்சிடு நாளது நாலுந்
துருசுடனீந்தாளைதை வடித்துத்
தடரும்நோய் வலுவது மறிந்து
இருபொழுதுண்ணு மந்தத் தேகத்
திடர்செய்யும்நோய் விதமறிந்தே (அஅ)

விதமறிந்துண்டாலுடம்புலர்தலு
மெலும்புருக்கியுமிருமலுமே
சதந்தா மீளை நெஞ்சினிலுற்ற
சளிகளுஞ் கோழையும் மாறும்

இதமிகுந்த தஞ்சைதனை மனுநீதி
யியல்புடனுண்டு விப்பிரர்க்கும்
பதமிகுங் கவிஞர் தமக்கருள் சரப
பார்த்திபனுணர்ந்து அருளியதே (அக)

(இ-ள்)

அத்திப்பட்டை ஆலம்பட்டை
அரசம்பட்டை இத்திப்பட்டை

இவைகளை நன்றாக முற்றியதாகவும், சிவப்பாகவும் பார்த்து வகைக்கு ஒருபலம் வீதம் கொண்டுவந்து, நன்றாகப் பஞ்சுபோலிடித்து, 4 மரக்கால் ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிக்கொண்டு, அதனுடன் வெள்ளரிக்குச்சாறு 2 படியும், சோற்றுக் கற்றாழைச்சாறு 2 படியும், பசுவின் நெய் 2 படியும் விட்டு, ஒன்றுகலந்து,

அரசமொட்டு ஆலமொட்டு
அத்திமொட்டு சந்தனத்தூள்
அதிமதுரம் கோஷ்டம்
இலுப்பைப்பூ கிராம்பு
நெய்தல் கிழங்கு நன்னாரிவேர்
அமுக்கிராக் கிழங்கு பூலாங்கிழங்கு
சண்பக மொட்டு செங்கழுநீர் கிழங்கு
பச்சிலை இலவங்கப்பத்திரி
பேரீச்சம்பழம் ஏலக்காய்
தாமரையிலைச் சுருள் வெள்ளரிகம் வேர்
நாணல்தாது சிறுநாகப்பூ

இச்சரக்குகள் வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துப் பால் விட்டரைத்து, சாறு கலந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின்மேலேற்றி, சிறு தீயாக 4 நாள் எரிக்கவும். 5-வது தினத்தில் இதைப் பக்குவப்படுத்தி இறக்கவும். நோயின் பலத்தை அறிந்து தினம் 2 வேளை (ஒரு ஸ்பூன் வீதம்) சாப்பிடவும். இதனால், உடம்பு உலர்ந்துபோதல், எலும்புருக்கி, இருமல், ஈளை, நெஞ்சில் சளி, கோழை, முதலிய நோய்கள் தீரும்.

39. புகைச்சல், இருமலுக்கு மருந்து

முசு முசுக்கையிலையவித்துமத்துடனே
முனிவுள மிளகது பத்தும்
இசைவதாய்ப் போட்டு மரைத்து நன்றுக
யெருமையின் வெண்ணெயும் போட்டு
பசையுள சாதத்துடனதைப் பிசைந்துப்
பருகிடப் புகைச்சலு மிருமற்
றிசையது கெட்டு மோடிடு மிதையுஞ்
செய்து பார் தெரிந்திடுந்தானே (கூடு)

(இ-ள்)

முசுமுசுக்கையிலையை (ஒரு குத்தள வெடுத்து), ஒரு பாத்திரத்தில் போட்டு அவித்து, அதனுடன் 10 மிள கையும் சேர்த்து நன்றுக அரைத்து, எருமை வெண்ணெய் ஒரு (எலுமிச்சையளவு) எடுத்து அதனுடன் மத்தித்து, சாதத் துடன் கலந்து சாப்பிடவும்.

புகைச்சல், இருமல் இவைகள் தீரும்.

---

40. இருமலுக்கு மருந்து

சீரகஞ் திப்பிலியுஞ் சரி சேர்த்துச்
செம்மையாய்ப் பொடியது செய்து
சிருள பலீயின் கட்டியுங் கூட்டித்
திற வெருமையின் வெண்ணெயொக்கக்
கூருடன் கலந்து கொண்டிடத் தானே
குணமிதா மிருமலுங் கூட
தாரணி மார்பன் றஞ்சை வாழ் சரப
சக்கிரவர்த்தி தன்னருளே (கூக)

(இ-ள்)

சீரகம் திப்பிலி

இவ்விரண்டையும் சரி எடை யெடுத்துப் பொடி செய்து, வேண்டிய அளவு பசுவெல்லம் சேர்த்து, எருமை வெண்ணெயும் ஒரு எலுமிச்சையளவு கூட்டிச் சாப்பிட, இருமல் குணமாகும்.

---

41. சிவயிருமலுக்குத் 'தூதுவளையாதி கிருதம்'

தூதுவளை, கையாந்தகரையு மாடா
தொடையினிலையு மிம்மூன்று
மோதிய வகைக்குச் சாறும் நாநாழி
யுடனே நெய் நாழியும் விட்டு
ஈதுடன் கற்கம் பூசணிப்பூவு
மீத்திண்ணுகின்ற வெளவாலுந்
தீதிலாமிளகு வசம்புடனே கருஞ்
சீரகந் திப்பிலி வகையே (கூஉ)

வகையதுவாறிலோரொன்று களஞ்சு
வளமுள் சுக்கதிரண்டுந்
துகையுள் ளேழுமரைத்ததிற் கலந்துச்
சூடதாந் தீயை யிட்டெரித்து
தகையுடன் வடித்துக் காலையில் நக்கத்
தானறுமீளையுமிருமல்
சந்தலம் புகழத் தஞ்சையை யாளுஞ்
சரப பூபதி யுரை யிதுவே (கூங)

(இ-ள்)

தூதுவேளை கையாந்தகரை
ஆடாதொடையிலை

இவைகளைத் தனித்தனியாக எடுத்துப் பிழிந்த சாறு வகைக்கு 4 படி எடுத்துப் பசுவின் நெய் 1 படியும் கலந்து,

பூஷணிப்பூ ஈத்தின்னி வெளவால்
மிளகு வசம்பு
கருஞ்சீரகம் திப்பிலி

இச்சரக்குகள் வகைக்கு ஒரு கழஞ்சு (1¼ வராகனெடை)

சுக்கு 2 கழஞ்சு

இவைகளை யொன்றுசேர்த்துப் பால் விட்டரைத்து, சாறு கூட்டிய நெய்யுடனே கலந்து, அடுப்பின்மேலேற்றி நன்றாக எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்நெய்யைத் தினந்தோறும் காலையில் சாப்பிட்டுவர சூலை, இருமல், முதலியவை தீரும்.

---

42. சூலை, இருமல், உளமாந்தைப் புகைச் சலுக்குத் "தேற்றான் நெய்"

காட்டினிற் றேற்றான் கொட்டையும் நூறு
கடுகவே கொணர்ந்தரைத்ததனி
னாட்டிளநீர் நானாழியாம் நெய் நா
னாழியு மதனிலே விட்டு
கூட்டிடு மிளகு திப்பிலியுடன் கடுகு
ரோகணி கற்கடக சிங்கி
வாட்டமில வெள்ளைத்தப் பிசினுங் கஸ்தூரி
மஞ்சளும் பூவந்திப் பழமே (கசை)

பூவந்திப் பழத்தோ டெழுவகை மருந்தும்
புதியதா யொவ்வொரு பலமும்
ஆவலா யரைத்துக் கரைத் தெரித்ததனி
லன்புடன் வடித் ததிகாலை
நாவிலுல் நக்க யீளையுமிருமல்
நவிலுசூ லாந்தையு மல்லால்
தாவிய புகைச்ச லென்பதுந் தீரும்
தப்பிலா விர்ப்பன னுரையே (கரு)

(இ-ள்)

தேற்றங்கொட்டை 100 (எண்ணிக்கையில்) கொண்டு வந்து மேல்தோலைச் சீவிவிட்டு அவைகளுடன் இளநீர் 4 படி விட்டு, நன்றாக அரைத்து பசுவின்நெய் 4 படியும் விட்டு, ஒன்று கலந்து

மிளகு	திப்பிலி
கடுகரோகிணி	கற்கடசிருங்கி
வெளுத்தபிசின்	கஸ்தூரி மஞ்சள்
பூந்திப் பழம்	

இவைகள் வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து, இளநீர் விட்டு நன்றாக அரைத்து, நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்துப், பக்குவத்தில் வடிக்கவும். இந் நெய்யைக் காலையில் ½ தோலா வீதம் சாப்பிட்டுவர சுரம், இருமல், உளமாந்தம், புகைச்சல் (80 வகைகள்), முதலிய பலவித ரோகங்கள் தீரும்.

---

43. இருமலுக்குத் 'துதுவளையாதி கிருதம்'

துதுவளையும் பொன்னுங்காணியுடனே
துடிமிகுங் குப்பையின் மேனி
சாதகக் கையாந் தகரை யின்னலுஞ்
சமூலமுன் புரொண்டி வெரல்லால்
தாதவிழ் கண்டங் கத்திரி வேருஞ்
சம்பீரமச் சிறுக்கீரை வேரு
பூதலச் சிறு வழுதலையின் வேரும்
புகன்றிடு மருந்து மெட்டே (நூசு)

எட்டு வகையிலுஞ் சரி சமனுகவே
எடுத்தே துவைத்ததனில்
விட்டிடுமஞ்சுபடி தண்ணீரொரு நாள்
வெந்தபின் கடுகுடன் மிளகு
மட்டவிழ் சாதிக்கா யதிமதுரம்
வசம்பு திப்பிலியு வெண்காரந்
திட்டமாங் கடுக்காய் நாட்டினிற் சுக்குஞ்
சேருமோ ரொன்பது வகையே (சுள)

வகைக் கொரு களஞ்சு மரைத்ததிற் போட்டு
மாவிநெய் யுரியும்பால் நாழி
துணையுடன் விட்டுக் கடுகது திரள
துருட்டி னெரித்தலதை வடித்து

தகைவுட னீரண்டு துட்டிடை காலை
தன்னிலே கொள்ளிருமலும் போம்
வகையுள புளிப்புங் கைப்பதைத் தள்ளி
மண்டல மரையதுங் கொள்ளே (கூஅ)

(இ-ள்)

தூதுவளை பொன்னுங்காணி
சுப்பைமேனி கையாந்தகரை

இவைகளைச் சமூலமாக எடுத்துக் கொள்ளவும்.

கண்டங்கத்திரி வேர் எலுமிச்சை வேர்
சிறுகீரை வேர் சிறுவழுதலை (சிறுகத்திரி) [வேர்

இவைகளையும் சரி எடையெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 5 படி, சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகக் காய்ச்சிய கஷாயத்துடன்

கடுகு பிளகு
சாதிக்காய் அதிமதுரம்
வசம்பு திப்பிலி
வெங்காரம் கடுக்காய்த் தோல்
சுக்கு

இச்சரக்குகளைத் தனித்தனி 1½ வராகனெடை வீதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்துக் கலந்து

பசுவின்நெய் ½ படி
பசுவின் பால் 1 படியும் சேர்த்து,

எல்லாவற்றையும் ஒன்றுகலந்து, அடுப்பின் மேலே ஏற்றிக் கடுகு திரளும் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இதில் 2 துட்டெடை வீதம் காலை நேரங்களில் சாப்பிட்டு வர இருமல் தீரும்.

புளிப்புப் பதார்த்தங்களையும் கசப்புப் பதார்த்தங்களையும் நீக்கி 20 நாளைக்கு இந்நெய்யைச் சாப்பிடவும்.

44. காசம், சுவாசம், சூலை, இருமல், கண்டத்தைப் பற்றின வியாதிகளுக்குப் 'பொடுதலை யாதி யெண்ணெய்'

பொடுதலைகையாந்தகரை தூதுவளை
புதிய கீழ்காய் நெல்லி பிரமி
அடவுள சிறு வழுதலையுஞ் சுழலா
வாரையிவ் வேழில் நாழிச் சாறு
துடியியங்கிலேச்சாறதியுமா யுழக்குச்
சுகமுடன் விட்டு மேன் கற்கங்
கொடிவேலி வேர் திப்பிலி பெருங்காயங்
குணமிகும் வசம்பு சீரகமே (கூகூ)

சீரகங் கடுக்காய் மிளகுடனே சிறு
தேக்கு, வெட் பாலையினரிசி
சாரமாமேலம் பெருங் குரும்பையும் நற்
சாதிக்கா யிலவங்கத்தோடே
சீரிலவங்க விழாலரிசியுமே
சேரு கோரோசனை கூட்ட
பாரொரு பத்திலொன்பது வகையும்
பண்டுள கடாயம் நாழிக்கே (கா)

கடாயம் நா நாழிக்குக் கற்கமும் வகைக்குக்
களஞ்சரைத்ததனிலே கரைத்து
அடவுள எள்ளினெண்ணெயும் நாழி
யதனிலே விட்டதைக் காய்ச்சி
துடியுள மெழுகு பக்குவத்திறக்கிச்
சுகமுடன் வடித்ததிகாலை
எடுமிருகளஞ்சு கரண்டியால் குடிக்க
யேகிடும் நோய் வகைகேளே (காக)

வகை சொல்வேன் கயசுவாசமு மிருமல்
வல்லீஹ கண்டத்தைப் பற்றி
யுரும் வியாதிகளுமறும்பத்து நாளி
லுசிதமும் ரசிதமுமிகுந்த
செகதலமன்பத்தாறு மன்னர்
போற்றுஞ் செகபதி சோடசதான
மகமகிழ்ந்திடப் பூசுரர்க் கருள் சரப
அண்ணலுமுணர்ந்ததிம்முறையே (ாஉ)

(இ-ள்)

பொடுதலை	கையாந்தகரை
துாதுவளை	சீமாநெல்லி
பிரமி	சிறுவழுதலை
சுழலாவாரை	

இப்பச்சிலைகளின் சாறு வகைக்கு 1 படி, சங்கம் இலைச் சாறு 1 உழக்கு இவைகளை ஒன்று கலந்து

கொடிவேலி வேர்	திப்பிலி
பெருங்காயம்	வசம்பு
சீரகம்	கடுக்காய்
மிளகு	சிறுதேக்கு
வெட்பாலை அரிசி	ஏலக்காய்
பெருங்குரும்பை	சாதிக்காய்
கிராம்பு	இலவங்கப்பட்டை
விழலரிசி	கோரோசனை
கருஞ்சீரகம்	இலவங்கப் பத்திரி

இச்சரக்குகளை வகைக்கு $1\frac{3}{4}$ கழஞ்சு வீதமெடுத்துச் சாறு விட்டரைத்து மேலே சொன்ன 7 படிசாற்றில் கலந்து,

சுத்தமான எள்ளெண்ணெய்—1 படியும் சேர்த்து ஒன்று கலந்து, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் இறக்கி வடிக்கட்டவும். இவ்வெண்ணெயைத் தினம் அதி காலையில் 2 களஞ்சு வீதம் குடித்துவர,

க்ஷயம், சுவாசம், இருமல், ஈளை, தொண்டையைப் பற்றிய பல நோய்களும் 10 நாளையில் தீரும்.

45. ஈளை, இருமலுக்கு மருந்து

வனத்தினிற் கையாந்தகரையு மிடித்த
வளமுள சாறும் நாநாழிக்
கினத்துடன் கற்கஞ் சுக்குடன் மிளகு
மிந்துப்புத் திப்பிலி கடுகு
முனிவுள கண்டங் காரிவேர் நெல்லி
முள்ளி கற்கடக சிங்கி மாஞ்சில்
வனப்புள தேவதாரமுந் தான்றி
வளசிறு தேக்கையுங் கூட்டே (ரூ)

கூட்டிடு வர்க்கப் பனிரெண்டு வகையுங்
கொள்ளொரு வகைக்கு மோர் களஞ்சு
நாட்டமா யரைத்துக் கரைத்ததை யெரித்து
நற்பதங் கண்டதை வடித்து
வூட்டதி காலை சீரறிந்துண்ணு
மோடிடு மீளையு மிருமல்
மாட்டினிற் பவனிவருஞ் சிவன் பாதம்
அர்ச்சிக்குந் தஞ்சை மானுரையே (ரூச)

(இ-ள்)

கையாந் தகரையைக் கொண்டு வந்து நன்றாக ஆய்ந்து, கல்லுரலிலிட்டிடித்துப் பிழிந்த சாறு 4 படியுடன்

சுக்கு	மிளகு
இந்துப்பு	திப்பிலி
கடுகு	கண்டங்கத்திரி வேர்
நெல்லி முள்ளி	கற்கடசிங்கி
சடாமாஞ்சில்	தேவதாரம்
தான்றிக்காய் தோல்	சிறுதேக்கு

இச்சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து, ஷை சாறு விட்டு அம்மியிலிட்டரைத்து, ஷைசாற்றில் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்து, அது இறுகிய பதமான பின் அதை இறக்கிக் காலை வேளையில் சாப்பிட, ஈளை, இருமல், முதலிய நோய்கள் தீரும்.

46. இருமல், நாசியாலிரத்தம் விழுதல், நீர்விழுதல் முதலியவைகளுக்குப் புகை

நிலத்தினிற் படர்ந்த யிலந்தையின் கொழுந்தும்
நேரரிதாரமுஞ் சமனுய்க்
கலர்ந்தரைத்ததையுங் குழம்பதுமாக்கிக்
கருதுவேன் வெள்ளிய சீலை
யிலுங்கிழித்தலிற் ரேய்த்து நன்ருக
வே நிழலுணத்தலா யுணத்தி
பல திரியாகத் திரித்ததை வைத்து
பண்புள சோறு மோருண்ணே (ாதி)

உண்டுமே வயிறு நிரம்பமுன் றிரியி
லொன்றெடுத் தனலிற் கொளுத்தி
ஒண்டிய கொருக்காய்க் குழாய் வழியாக
வுண்ணந்தப் புகையை மூன்றே நாள்
சண்டி செய்யிருமல் நாசியில் நீரிரத்
தம் விழும் வியாதியுந் தீருங்
கண்டமிழ் வாணற்கவித் திற்மறியுஞ்
சரப பூபதி யருளாமே (ாசு)

(இ-ன்)

நிலத்தில் படர்ந்த இலந்தையின் துளிருடன், சமன்எடை சுத்திசெய்த தாளகம் சேர்த்து, ஒரு கல்வத்திலிட்டு அரைத்துக் குழம்பாகச்செய்து, ஒருசாண் நீள அகலமுள்ள வெண்மையான துணியின்மேல் ஒரே சீராகத்தடவி, நிழலில் உலத்திக் கொள்ளவும். இதைக்கிழித்து சிறுசிறு திரியாகச் செய்து கொள்ளவும்.

நோயாளி வயிறு நிரம்ப மோர்சாதம் சாப்பிட்ட பிறகு, முன் தயார்செய்த திரியிலொன்றை எடுத்து, அனலில் கொளுத்தினுல் புகை எழும்பும். இப்புகையை ஒரு கொருக்காத் தட்டைக் குழாயின் வழியாக வரும்படிசெய்து அதை வாயினுல் உள்ளுக்கு இழுக்கவும். 3 நாளையில் இருமல், ஜலதோஷம், இரத்தம் விழல் முதலிய நோய்கள் தீரும்.

47. பல வியாதிக்குத் 'தேத்தான் கற்பம்'

(அனுபானம் வெவ்வேறு)

காட்டினிற் றேற்றும் பழமதின் கொட்டை
கையினுற் பிதுக்கியே தள்ளி
வாட்டிட வுலர்த்திப் பொடியது செய்து
வளமுள யெண்ணெய் வார்த்தரைத்து
நாட்டமாய் காலை தன்னிலே விழுங்கு
நற்றிய யிருமலுந் தீரும்.
நாட்டினிற் கோமூத்திரத்தினிற் கொடுக்க
நடந்திடும் பிசாசுபேய் தானே (ாஎ)

தானதைப் பாலுடனே கொள்வயிற்றிற்
சள்ளை செய் கிருமிகடீரு
மான வெங்காய நீரினிற் கொடுக்க
வணுகிய வெள்ளையோக்காள
ஊனமுந் தீரு மஞ்சளிலரைத்து
மூட்கொள் விடங்களுந் தீரும்
கூனவே வெள்ளுள்ளி அரைத்துப்
பாலுடனே கொண்டிட தீபனமாமே (ாஅ)

ஆவின் மூத்திரத்தி லரைத்துணப் பாண்டு
மற்றிடுமப்பொடி தன்னை
யே வெள்ளை யுள்ளி யரைத்ததை மோருட
னே யுணுநெஞ்சடைப்பினும் போம்
காவினற் றேனிலரைத் துண்ணத் தானே
கண்ணி நோயற்றிடும் நலமு
மேவு மெள்ளெண்ணெய் தன்னிலே யரைத்து
மே நசியமும் பண்ணக் கேளே (ாக)

நசியமும் பண்ணவொருத் தலைநோயும்
அகன்றிடும் விளக்கெண்ணெய் தன்னில்
மசியவே யரைத்துமிடு கண்ணிலுற்ற
மாசறுமிப் பொடி தன்னை

சுசியுள நெய்யிற் கொண்டிடப் பாண்டுஞ்
சூழ்ந்திடுந் தலைவலி தீரும்
வாசமுள மோரிலுண்டிட வெறுப்பு
மகற்றிடுமிப் பொடி தானே (ஈ ம)

பொடியதைக் காலை, மண்டல மரையும்
புசித்திடத் தேகமும் நன்றுந்
திடமுள தஞ்சை நகர்த்துள சேந்திரன்
செல்வனிப்புவிக்கனுகூலன்
துடி மிகும் புண்டரீக மதனையெதுப்
பாக்கிக் கொண்டேயொரு குறியா
லுடனதினுயிரை வாலுல கேற்று
முற்பனமானுவினருளே (ஈ ம்க)

(இ-ள்)

தேத்தாம் பழங்களைக் கொண்டு வந்து அதன் கொட்டை களைப் பிதுக்கி, அவைகளை வெயிலில் உலர்த்தவும். பின்பு அதன் மேலுள்ள தோலைச் சீவிக், கல்லுரலிலிட்டிடித்து வஸ் திரகாயஞ் செய்து கொள்ளவும்.

காலை நேரங்களில், நல்லெண்ணெயுடன் வெருகடி தூள் குழப்பிச் சாப்பிட இருமல் தீரும்.

கோமூத்திரத்தில் கொடுத்தால் பேய், பிசாசுகள் நீங்கும்.

பசுவின் பாலில் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் விழும்.

வெங்காயச் சாற்றில் கொடுக்க, வெள்ளை ஒக்காளம் தீரும்.

மஞ்சள் (விழுதுடனே அல்லது பொடியுடனே) கொடுக்க விஷங்கள் அனைத்துந் தீரும்.

பூண்டின் விழுதுடன், பால் விட்டுக் குழப்பி, ஷை சூரணத்தை அருந்த தீபனம் உண்டாகும்.

பசுவின் மூத்திரத்துடன் உட்கொள்ள பாண்டு தீரும்,

வெள்ளைப் பூண்டு விழுதுடன், இச்சூரணத்தைக் கலந்து மோர் விட்டுச் சாப்பிட, நெஞ்சடைப்பு தீரும்.

இச்சூரணத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிடப் பல வித, கண்ணோய்களும் தீரும்.

இச்சூரணத்தை நல்லெண்ணெயுடன் கலந்து மூக்கில் விட்டு உறுஞ்ச 'ஒருத்தலிவலி' தீரும்.

விளக்கெண்ணெயில் அரைத்துச் சாப்பிடக் கண்ணோய்கள் தீர்ந்து கண்களும் துலங்கும். இச்சூரணத்தை நெய்யுடனே உட்கொண்டால் பாண்டு ரோகமும், தலைவலியும் தீரும்.

மோருடனே உட்கொள்ள வெறுப்பு (அன்னத்வேஷம்) தீரும்.

இந்தச் சூரணத்தைத் தினந்தோறும் காலையில் சாப்பிடவும். இம்மாதிரி 20 நாள் உட்கொள்ளத் தேகம் திடமாகும்

---

48. காசம் முதலானதற்கு "அரிதாரப் புகை"

பொன்னரிதாரஞ் சுத்தியுஞ் செய்து
பொடி செய்துமப்பொடியூடே
பொன் மெழுகதனீ கூட்டியே யுருக்கிப்
புகலும் பாவட்டையின் கொய்பால்
அன்னத்தை நன்றுய்ச் சாரித்துமுருண்டை
யது செய்து பதனமும் பண்ணி
யுன்னிதப் புளியஞ் சிராய் தணல் தன்னீ
யோர் கலசந்தனிற் போடே (ரா பி உ)

போட்டுமோருருண்டையன்னெருப்பினிலே
புதுமையாய்ப் புகை தன்னீ
நாட்டமாய் முக்காடிட்டுவப் புகையை
நயமுடன் கொண்டிட விரும
லோட்டிடு மிதுவுங் கையது கண்ட
வுற்பனப் புகையிது தானே
தாட்டிகற்றஞ்சை நகர் சரபேந்திரன்
தானுணர்ந்தருளிய முறையே (ரா பி உ)

(இ-ள்)

தாளகத்தைச் சுத்தி செய்து ஒரு கல்வத்திலிட்டுப் பொடி செய்து கொள்ளவும். இதற்குச் சரி எடை பொன் மெழுகை உருக்கி அதில் மேற் தூளைப் போட்டுக் கலக்கி வரவும். பாவட்டையின் பால் விட்டரைத்து உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

ஒரு கலசத்தில் புளியஞ் சிராய் தணலைப் போட்டு, அதில் ஒரு உருண்டையை இட்டால் அதிலிருந்து புகை எழும்பும், அந்தப்புகையை வெளியே விடாமல், நோயாளிக்கு மூக்காடிட்டுப் புகையை உட்கொள்ளச் செய்யவும், இருமல் நிற்கும். கை கண்டது.

---

49. இருமலுக்குத் திரிப் புகை

பிரண்டையை யிடித்தச் சாறதை வெள்ளைப்
புடவையிற் றோய்த்ததை யுணர்த்தி
மருதினங் தேற்றுன் காய் தண்ணீர் தெளித்து
வளமுடனறுக்கிய சாற்றை
சரியென் மூன் சொற் சீலையிற் தோய்த்து
அதையும் நிழலுணத்தியே மறுநா
ளுரு முளகுப்பைபேனியின் ரசத்தி
லுள்ளுரத்துவைத்ததையுணத்தே (ாமிச)

அதை யுணத்தியபின் பொன்னரிதார
மரைத்ததிற் றோய்த்துமேயுணத்தி
பதனமதாகவைத்துமே யுந்தன்
பாணியால் கிழித்ததைத் திரியாய்
விதமுடன் திரித்துத் தயிருடன் சோறு
மே யுண்டு யனலினிற் கொளுத்தி
யதை யவித்தேயப்புகையதை யுண்ண
அசடு செய்யிருமலும் போமே (ாமிரு)

(இ-ள்)

பிரண்டையை ஒரு கல்லுரலிலிட்டிடித்துச் சாறு பிழிந்து. அதையொரு வெள்ளைச் சீலையில் ஊட்டி நிழலில் உலத்தி, மறுநாள், தேத்தாங்காயை இடித்து ஊறவைத்த சாற்றில் மூன் சொன்ன துணியைத் தோய்த்து நிழலில் உலத்தவும் இம்மாதிரியே மறுநாள் குப்பைமேனிச்சாற்றில் தோய்த்து நன்றாக நிழலில் உலத்தவும். சிறிது ஈரம் இருக்கும்போது,

தாளகத்தைச் சுத்தி செய்து அதைத் தூள்செய்து அதில் போட்டுப் புரட்டவும்; அதல் தூள் ஒட்டிக் கொள்ளும். இதைக் காயவைத்து, சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத் திரியாகத் திரித்து வைத்துக்கொள்ளவும்.

நோயாளி, தயிர் சாதம் சாப்பிட்டபின், முன்சொன்ன திரியிலொன்றை எடுத்து அனலில் கொளுத்தி அணைக்கவும். அதிலிருந்து புகை எழும்பும், இதைக் வாயினுலுட்கொள்ளவும். இதனுல் இருமல் தீரும்.

குறிப்பு:—

67 நெ. சுவடியில் கண்டங்கத்திரி எண்ணெயிலோ நெய்யிலோ தோய்த்துக் கொளுத்தவும் என்று காணப்படுகிறது.

---

50. இருமலுக்குப், பொன்னிதாரப் புகை

பொன்னிதாரம் பொற் கொன்றைப் பட்டை
பொருந்திய யிரண்டையுந்தானே
நன்னயக் கொன்றை யிலை ரசம் விட்டு
நயமுடனரைத்து வெண் சீலை
தன்னிலே தோய்த்துத் திரி செய்து வைத்துத்
தயிருடன் சோறதுமுண்டு
வன்னமாந்திரியைக் கொளுத்தியப் புகையை
வாங்கிட யிருமலும் போமே (ஈமூசு)

(இ-ள்) சுத்தி செய்த தாளகம் கொன்றைப் பட்டை இவ்விரண்டையும் சமமெடுத்துக் கல்வத்தில் வைத்துத் தூள் செய்து கொன்றை இலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து ஒரு வெள்ளைத் துணியில் தோய்த்து, (ஒரே சீராகத்தடவி) நிழலில் உலர்த்தி அதை சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத் திரிசெய்து கொள்ளவும்.

நோயாளி, தயிர் சாதம் சாப்பிட்டு, மை திரியில் ஒன்றை யெடுத்துக் கொளுத்தி அணைக்க அதிலிருந்து புகை எழும்பும். இதை உட்கொள்ளவும். இருமல் தீரும்.

---

51. இருமலுக்கு "அடை"

காட்டினில் முசுமுசுக்கை வேர் வெட்டிக்
கடுகவே கொணர்ந்ததைத் தானே
நாட்டமாயரிசி மாவினிற் கூட்டி.
நயமுடனரைத்ததைச் சுட்டு
யூட்டிடு காலை மூன்று நாளுந்தா
னுண்டிடு மிருமலுந்தானே
தாட்டிகற்றஞ்சை நகர்ச் சரபேந்திரன்
தானுணரடையிது தானே (ா மெ)

(இ-ள்)

முசு முசுக்கை வேர் கொண்டுவந்து அதை அம்மியில் வைத்து தண்ணீர் விட்டரைத்து, அரிசி மாவுடன் சேர்த்துப் பிசைந்து அடைதட்டிச், சுட்டுத் தினம் காலை வேலையில் சாப்பிடவும். இப்படி 3 நாள் சாப்பிட இருமல் நிற்கும்.

---

52. இருமலுக்குக் கிருதம்

தூதுவளையின்புராவுமே யாடா
தொடையிம்மூன்றுஞ் சமூல
மீதுடன் குழவிவேர் குருந்தம்வே
ரெழில்பெருங்குரும்பைவேர் கூட
சாதகவமுக்கிழுவேர் மிளகரணை
தன்னுடவேரழஞ்சிவின்வேர்
கோதிலா மணவரை வேருடனுய்யக்
கொண்டானின் வேராகவுமெட்டே (ா மஅ)

ஆகவேரெட்டுஞ் சங்கிலி முருக்கி
னதிலி குப்பைமேனியிலை
வாகுள வடவிக்குலசிலை காட்டு
மல்லிகையிலையதுங் கூட
வேகமாங் கோழியவரையினிலையு
மிவ்வாறு யிலையுடன் குக்கில்
சோகைதீர் கடுகுரோகிணியுள்ளி
சுக்கு திப்பிலியுமிந்துப்பே (ா மக)

இந்துப்புச் சீனக்காரம் வாலுழுவை
யிதமூள கிராம்பு வெண்காரங்
கந்த நற்சீரக வசம்புடனே சவுக்
காரமுமிளகு நேர்வாளஞ் சாதி
சந்தமாங்காந்த முடனரிதாரஞ்
சாதிலிங்கங் கருஞ்சீரகம்
விந்தை செய்யிரதமுடனிவட்சார
மேற் பெருங்காயமுங் கூட்டே (ாஉ ம)

கூட்டிடு துவர்ச்சிலகயதுங்கூடக்
கூறிய யிருபத்தி மூன்றும்
நாட்டமாய்ச் சரியாயெண்ணெய்சேர் நெய்சேர்
நாரிகேளத்தின்பால் சேருங்
காட்டினிற் கள்ளிப் பாலதுவுங் கூட்டிக்
கடுகதாய்ச் செய் துட்டிடையுங்
கூட்டிடு காலியிருமலுமீளா
குடிபுகுமூரது விட்டே (ாஉக)

(இ-ள்)

தூதுவளைச்சமூலம்	இம்புராச்சமூலம்
ஆடாதோடைச்சமூலம்	குழவிவேர் *
குருத்தம்வேர் அதாவது காட்டு எலும்பிச்சை வேர்	பெருங்குரும்பைவேர்
அமுக்கிராக்கிழங்கு	மிளகரணைவேர்
அழிஞ்சில்வேர்	மணவரைவேர்
உய்யகொண்டான்வேர்	சங்கிலை
முருக்கின் இலை	குப்பைமேனி இலை
அடவிக்குளசிலை	காட்டுமல்லிகை இலை
கோழியாவாரை இலை	குக்கில்
கடுகரோகிணி	உள்ளி
சுக்கு	திப்பிலி
இந்துப்பு	சீனக்காரம்
வாலுழுவை	கிராம்பு
வெங்காரம்	சீரகம்
வசம்பு	சவுக்காரம்
மிளகு	நேர்வாளம்
சுத்திசெய்த லிங்கம்	கருஞ்சீரகம்
,, ரஸம்	எவட்சாரம்
பெருங்காயம்	கடுக்காய்
சுத்திசெய்த காந்தம்	சுத்திசெய்த தாளகம்

* குழுவி வேர் என்று காணப்படுகிறது.

இவைகளை வகைக்கு (1½ வராகனெடை வீதம்) எடுத்து. அம்மியில் வைத்துத் தண்ணீர் விட்டரைத்து,

நல்லெண்ணெய்	1 சேர்
பசுவின் நெய்	1 சேர்
தேங்காய்ப் பால்	1 சேர்
கள்ளிப் பால்	1 சேரும் விட்டு

எல்லாவற்றையும் ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்து, பதத்தில் வடித்துக் கடுகுடனே வைத்துத் தினந் தோரும் ஒரு துட்டெடை வீதம் காலை நேரங்களில் சாப்பிட இருமல், ஈளை, முதலிய ரோகங்கள் தீரும்.

---

53. இருமலுக்குச் சங்காதிப்புகை

சங்குடனுடா தோடையுங் கையாந்
தகரை செம்முள்ளியுந் தும்பை
துங்கமாங் குப்பைமேனியுந் துளசி
தூது வஸ்ளையும் வேலியின் பருத்தி
பங்கமில செருப்படியும் பொடுதலையும்
பதினேரு வகையிலை தனியும்
பொங்கமாய்த்துவைத்த ரசமதில் வெள்ளைப்
புடவையைற்றேய்த்திடுவாயே (ராஉஉ)

புடவையைறேய்த்து நிழலுணத்துணத்திப்
போட்டிடு மீளவும் ரசத்தில்
திடமுடன் றேய்த்து முணத்தி நன்றுகச்
செய்விதம் பொன்னரிதார
மடவியின் றும்பையிலை ரசத்தரைத்து
அச்சாற்றில் குழப்பியே பின் முன்
புடவையைற்றேய்த்து நிழலுணத்துணத்தி
பீசகிடாமலுமதைவையே (ராஉங)

வைத்து நல்லெண்ணெய்தனில் விளக்கேத்தி
வளமுடனுணத்திய துணியில்
சத்ததிற் பிழித்துத் திரியது வாக்கிச்
சாற்றிய விளக்கினிற் கொளுத்திச்
சுத்தமாய் நாழிதனிற்றகில் தோய்த்
துடியுடன் போட்டதின் புகையை
தத்துவமாயுண்ணிருமலுந் தீரும்
நம்பி நீ செய்விபுவரையே (நாஉசி)

(இ-ள்)

சங்கிலை	ஆடாதோடை
கையாந்தகரை	செம்முள்ளி
தும்பை	குப்பை மேனி
துளசி	தூதுவளை
வேலிப்பருத்தி	செருப்படி
பொடுதலை	

இவற்றை ஒன்று சேர்த்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்த ரசத்தை எடுத்துக்கொண்டு, அதில் ஒரு வெள்ளைத் துணியைத் தோய்த்து நிழலில் உலரவைக்கவும்.

முன்போல மறுபடியும் ஒரு தடவை தோய்த்து உலத்தவும்.

சுத்தி செய்த தாளகத்தைக் காட்டுத் தும்பை இலை ரஸத்திலுலரைத்துக் குழம்பாகச் செய்து மேல்சொன்ன சீலையை மறுபடியும் அதில் தோய்த்து நிழலில் உலத்தவும்.

இத்துணியைச் சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத் திரியாகச் செய்து, ஒரு அகலில் நல்லெண்ணெயூற்றி, அதில் இத்திரியை இட்டு விளக்கேற்றி அதன் மேல் ஒரு துவார முள்ள படியைக் கவிழ்த்து அதின் வழியே எழும்பும் புகையை உட்கொள்ளவும். இருமல் தீரும்.

---

54. இருமலுக்குப் புகை

சித்தொடுவியின் பட்டையு மெல்லிதாகச்
சீவியே செங்கலின் பொடியுஞ்
சத்ததிற் போட்டு மூலத்தித் தூளாக்கித்
தகை பெருங் கொட்டங்கச்சியிலே

வைத்ததிலோர் பெருந்தணலதிலிட்டு
மற்றொரு துளைக் கொட்டங்கச்சி
சுத்தமாய் மூடிச்சோறு மோருண்டு
துளைவழி புகையதை யுண்ணே (ாஉடு)

புகையதை யுண்ணச் சத்திய தாமப்
போதிலுஞ் சாதமோருண்ணு
வகை வெகு வீதமாய் வருமிருமலுமே
மாறிடுஞ்சிவனருளாலே
அகமகிழ்ந்தன்ன தானமுஞ் சொர்ண
மாடையுமிரவலர்க் களிக்குங்
துகையினிலடங்காக் கீர்த்திகள் பெற்ற
துரை சரபேந்திரனருளே (ாஉசு)

(இ-ள்)

சித்தொடுவியின் பட்டையை எடுத்து மெல்லியதாகச் சீவிச் செங்கல் பொடியும் சேர்த்து, இடித்துத் தூளாக்கி கொள்ளவும்.

இதையொரு கொட்டாங்கச்சிக்குள் வைத்து, அதன் மேல் ஒரு நெருப்புத் துண்டையிட்டு, வேறொரு துளையுள்ள கொட்டாங்கச்சியினால் பொருத்தும்படி மூடவும்.

நோயாளி. மோரும் சோறு உண்ட பின், மேலேயுள்ள கொட்டாங்கச்சியின் துளைவழியாய் வரும் புகையை உட்கொள்ளவும். வாந்தி ஏற்படில் மறுபடியும் மோர் சோறு உண்ணவும். பலவகைப்பட்ட இருமலும் தீரும்.

குறிப்பு :—

67 கெ. சுவடியில் '4 நாளைக்கு உபயோகிக்கவும்' என்றிருக்கிறது.

---

55. இருமலுக்கு 'அண்டா நீராகாரம்'

அண்டாவிற் சமைத்த சோற்றினிற்றண்ணீ
ரடவுடனூற்றியே வைத்
திரண்டாளுலைந்த தண்ணியை யிறுத்து
நட்புடனவுப்புமிடாமற்

---

* சித்துடி = இலுதிலுப்பை பூடு எனக்காணப்படுகிறது.

கொண்டடு நாலிந்தாறுநாடன்னிற்
குலிர்திடுமிருமலுந்தானு
மண்டாது சொன்னேன் விபு சரபேந்திர
னருளிய நீரிது தானே (ாஉஎ)

(இ-ள்)

சமைத்த சோற்றின் தண்ணீரை ஒரு அண்டாவில் ஊற்றிவைத்து, (வடித்த கஞ்சி), மறுநாள் அந்தத் தண்ணீரை இறுத்து, உப்புச் சேர்க்காமல் அப்படியே சாப்பிடவும். இவ்வாறு, 4, 5, அல்லது 6 நாட்கள் சாப்பிடவும் இருமல் தீரும்.

---

56. ஈளைக்கு மருந்து

துவற் கடுக்காய்திவிடையமதோடே
துடிமிகுங் காசுக் கட்டியுமே
யிவைகள் மூன்றையுமே சரி நிறையாக
வெடுத்ததைப் பொடியது செய்து
கவனமாய் காசினிடையது வொன்று
காலமே கொண்டிட யீளை
யலம் பார்த்தோடுந்தப்பிலாமலுமே
யன்புள தஞ்சை மானுரையே (ாஉஅ)

(இ-ள்)

கடுக்காய் தோல் அதிவிடையம்
காசுக்கட்டி

இம்மூன்றையும் சமனெடை எடுத்துப் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணித் தினம் காசெடை எடுத்துக் காலையில் சாப்பிட ஈளை (கபக்கட்டு) தீரும்.

---

57. சூலை, இருமல், குன்மம், சயரோகம், எரிகுன்மம், இரத்த பித்தத்திற்குக் "கூழ்பாண்ட லேகியம்"

பூசணிக்காய் மூத்தினைதயுங் குடலிற்
போக்கி நன்முகவே திருகிக்
கூசிடாமலுமே பிட்ட தாய்ச் சுட்டுக்
குணமுடன் கையினுல் பிழிந்து
மேசட்டி காய வவத்ததிற் போட்டு
மேன்மையாம் பசுவினெய் விட்டு
சூசினியாகச் சிவக்கவும் வறுத்து
துடிமிகுமுரலினிலிடியே (ாஉக)

இடித்ததைத் தெள்ளியதற்கு மேன் மருந்து
இயம்புவேன்றிப்பிலி மூலந்
திடக்கராம்போமஞ் சாதிக்காயேலஞ்
செண்பகப் பூவிலங்க
மிடுக்குள சுக்கு நிப்பிலி மிளகு
மிந்துப்பு கற்கட சிங்கி
யடவு செங்கழு நீர் கோட்டமதுடனே
யதிமதுரமு நிலவேம்பே (ாஉ ம)

நிலத்தினில் வேம்பு நற்சிறு தேக்கு
நேருள்ள கொத்த மல்லி விரை
வலுத்திடு நாகப்பூ நாகந்தூது
வளமிருஞ் சீரகத் தோடே
நலத் தேவதாரமுடன் கருஞ்சீரம்
நவிலிருபத்திரண்டதனில்
செர்லத்தகு மருந்தில் வகைக்கு முக்கழஞ்சு
தூளதாயிடித்திடுவாயே (ாஉக)

இடித்து முன் சொன்ன பொடியதிற் கலந்து
இயல்புடன் பிசரியோர் சட்டி
அடுப்பினில் காயவைத் திரு நாழி
ஆவினெய் விட்டு வேக விட்டு

விடுத்திடு தேனுமூரியுஞ் சர்க்கரையு
மெய்ப்புடனுரியதிற் போட்டு
வடிப்பமாய்க் குழப்பிப் பதத்தினிலிறக்கி
வை யொரு கலசமதனிலே (ாகூ உ.)

கலசத்தில் வைத்துத் தினமெலுமிச்சங்
காயளவு உண்டிடு காலே
உலவிய யீளை யிருமலுங் குன்ம
மொட்டிய சயமெரி குன்மங்
கல்ஞ் செய்யிரத்த பித்தமுந்தீருங்
கடவுளர் கிருபையினுலே
பலனுற்ற தஞ்சை விபு சரபேந்திரன்
பண்புடனுணர் லேகியமதே (ாகூகூ)

(இ-ள்)

மூற்றிய பூசணிக் காயைக் கொண்டு வந்து, நறுக்கிக் குடல்களையும், விரைகளையும் நீக்கிவிட்டு அதை தேங்காய் திருவலினல் திருகி ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீருற்றி வேடுகட்டி. அதன் மேல் பூசணித் திருகலைப் போட்டு அவிக்கவும். பின்பு, இவைகளைப் பிழிந்து. அடுப்பின்மேல் ஒரு சட்டியை வைத்து அதிலிட்டு பசுவின்நெய் விட்டுப் பொன் வறுவலாக வறுக்கவும். இதை உரலிலிட்டிடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். பின்பு,

கண்டத்திப்பிலி	ஓமம்
சாதிக்காய்	ஏலக்காய்
செண்பகப்பூ	கிராம்பு
சுக்கு	திப்பிலி
மிளகு	இந்துப்பு
கற்கடசிங்கி	செங்கழுநீர் கிழங்கு
கோஷ்டம்	அதிமதுரம்
நிலவேம்பு	சிறுதேக்கு
கொத்தமல்லி விதை	சிறு நாகப்பூ
சீரகம்	தேவதாரம்
கருஞ்சீரகம்	லவங்கப்பத்திரி

இச்சரக்கு வகைகளை வகைக்கு 3 கழஞ்சு (கழஞ்சு 1¼ வராகனெடை)

வீதமெடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பூஷணிச் சூரணத்துடனே கலந்து கொள்ளவும்.

அடுப்பின்மேல் ஒரு சட்டியை வைத்து 2 படி பசுவின் நெய்விட்டு அதில் மேற் சூரணத்தை இட்டு,

தேன்	½ படியும்
சர்க்கரை	½ படியும்

போட்டு எரித்துப் பதத்தில் இறக்கவும். இதை ஒரு பாத்திரத்தில் பத்திரப்படுத்தித் தினமும் ஒரு எலுமிச்சங் காயளவெடுத்துக் காலை நேரங்களில் சாப்பிட்டுவர.

ஈளை, இருமல், எட்டுவகைக் குன்மங்கள், க்ஷயம், எரிகுன்மம், இரத்த குன்மம் முதலியவை தீரும்.

---

58. தொண்டைக் கம்மல், பித்தம், வாந்தி மயக்கம், இருமல், கால், கையெரிவு, அரோசகம், விக்கலுக்குப் 'பேராமுட்டி நெய்'

காட்டினிற் பேராமுட்டி சமூலங்
கணக்குடன் றூக்கதிரண்டு
நாட்டமாயிடித்துப் பாலினிற் போட்டு
நல்ல தண்ணீரெட்டு மரக்கால்
கூட்டியே குறுணியாகவே காய்ச்சிக்
கொண்டிறுத்தே படி நெய்யுங்
தாட்டிகமாய் விட்டெரித்து நற்பதத்திற்
சாற்றுவேன் மென் பொடி தானே (அகச)

பொடியது மிளகு திப்பிலி சுக்குப்
பொற்புள செண்பகப் பூவுங்
கடிமிகு மேலஞ் சந்தனமரே ணு
கம்பெருஞ்சீரக முடனே
துடிமிகுந்தாளிசபத்திரி தானுஞ்
சுகசடாமாஞ்சிலிப்பத்து
மிடிவகை யொன்றுக்கொன்றரைப் பலமு
மிதமுள சூரணமாக்கே (ாகஏ)

ஆக்கியே யடுப்பிற் கொதிக்கிற பாகி
லன்புடன் றூவியே கிண்டி
யேற்கவே லேகியப் பதமதினெய்யு
மிடுவொரு காற்படி தானும்
தாக்க நாழிலையுங் காலது கொதிக்கத்
தான் வைத்துத் தேன் படி காலும்
யோக்கியமாய் விட்டிறக்கி பாக்களவு
முண்டிடத் தீரும் நோய் கேளே (ாகசு)

தீரு நோய் கேளு தொண்டையின் கம்மல்
தேகவாந்தியும் பித்தமயக்கஞ்
சிரிய யிருமல் கால் கை யெரிவு
சினத்திடரோசகம் விக்கல்
பாரிது களெல்லாஞ் சூரியன் முன்னே
பனி யெனப் பரந்திடுந் தானே
தாரணி புயன்றஞ்சையில் வளர் சரபத்
தலிவனு மருளிய முறையே (ாகள)

(இ-ள்)

பேராமுட்டியைச் சமூலமாக 2 தூக்கு எடுத்துத் துண்டு துண்டுகளாக நறுக்கி ஒரு பாணையில் போட்டு, சுத்த ஜலம் 8 மரக்கால் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாகும் வரைச் சுண்டக் காய்ச்சவும், அதனுடன் பசுவின் நெய் 1 படி விட்டுக் கலந்து அடுப்பின்மேலேற்றிக் காய்ந்து வரும்போது,

மிளகு — திப்பிலி
சுக்கு — செண்பகப்பூ
ஏலக்காய் — சந்தனம்

காட்டு மிளகு	பெருஞ் சீரகம்
தாளிச பத்திரி	சடாமாஞ்சில்

இவைகளை வகைக்கு 1½ பலம் வீதம் எடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, அடுப்பின் மேலுள்ள பாகில் கலந்து, தூவிக் கிண்டி வரவும். லேகியம்போல சுண்டி வரும்போது பசுவின் நெய் ¼ படி, விட்டு, அடிப்பிடிக்காமல் இளரி லேகிய பதத்தில் இறக்கவும். பின்பு ½ நாழிகை ஆனபின் தேன் ¼ படி விட்டுக் இளரித் தினம் பாக்களவு சாப்பிடவும்.

இதனல் தீரும் நோய்கள் :—

தொண்டைக் கம்மல், வாந்தி, பித்தம், மயக்கம், இருமல், கை காலெரிவு, அரோசகம், விக்கல் முதலியவை.

குறிப்பு :—

தூக்கு—1½ வீசை.

---

59. ஈளைக்கு இரண்டு மருந்துகள்

தாயைக் கொன்றூனை யுலத்தியே பொடிகள்
தான் செய்து சோத்திலிட்டாலுங்
தாயகப் புரசம் பட்டையைக் கடாயங்
தான் வைத்துப் பருகிடில் தானும்
போயிடுமீளை சிவன் இருபையினல்
பொற்புள தஞ்சையை யாளுங்
தாயினு மெற்ற தயவுத் தீரன்
சரப பூபதி யருள் முறையே (ஈஈஅ)

(இ-ள்)

தாயைக் கொன்றூனை உலர்த்திப் பொடிசெய்து சாதத்துடன் கலத்து சாப்பிட்டாலும்.

புரசம் பட்டையைச் சிதைத்துக் கஷாயம் வைத்துப் பருகினலும் ஈளை தீரும்.

குறிப்பு :—

தாயைக் கொன்றூன்—வாழை

இம்மருந்தில் வாழைக்கிழங்கை எடுத்துக் கொள்ளவும்.

---

60. இருமலுக்கு மருந்து

" தூதுவளைச் சமூலமுமே கொண்டுவந்து
நன்முகற்றுவைத்துத் தண்ணீர்
சாதகமாயூற்றியதைப் பிசைந்து பிழிந்
தேயுழக்குச் சாற்றுக்குத்தா
னேது மோர் கொட்டைப் பாக்களவு
கண்டங்கத்திரி வேருமரைத்து
பேதகமில்லாமலதை கரைத்துச் செய்யும்
விதமதனை பேசக்கேளே " (எஉ)

" பேசக்கேள் மூன்றேநாள் காலைதனிற்
குடித்திடவே பிசகிடாமற்
கூசிடாமற் பருத்திச்சூ போலும்
விழும் வாயால் குக்கியாலு
மேசத்து நேரமதின் பிறகு கஞ்சி
காய்ச்சியுண்ணு இருமற்றீருந்
தேசத்திற் கீர்த்திபெற்ற தஞ்சை சர
பேந்திரனருள் செய்துபாரே " (எஅ)

இ-ள்)

தூதுவளையைச் சமூலமாகப்பிடுங்கி வந்து நன்முகக் கல் லுரலிலிட்டு இடித்து, ஜலம்விட்டு ஊரவைத்து மறுநாள் அதை நன்முகப் பிசைந்து சக்கையைப் பிழிந்தபின் அதன் சித கஷாயம் 1 உழக்கு எடுத்துக் கொள்ளவும். கண்டங்கத்திரி வேர் ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்து அரைத்து, முன் வைத்த சிதகஷாயத்தோடு குழப்பித் தினம் காலைவேளைகளில் மூன்று நாளைக்கு குடிக்கவும். வாயிலிருந்தும் வயற்றிலிருந்தும் கபம் விழும். சிறிதுநேரஞ்சென்று கஞ்சி காய்ச்சிச் சாப் பிடவும். இருமல் தீரும்.

61. சுரம், தாபம், மார்வலி, சூல, இருமல், எலும்புருக்கி, பெரும்பாடு, சத்திகுன்மம், அரோசகம், உஷ்ணம், கிராணி, அதிசாரம் பாண்டு, அசீரணம் முதலான ரோகங்களுக்குத் தாளிசபத்திரி வடகம்

தாளிசபத்திரி நாகப்பூ கூகைநீர்
கிராம்பு தன்னுடனெடுக்க
கீளுருத்திர மூலமைந்தும் வகைக்குப்
பலமொன்றுவெகுநேர்த்தியான
கோளிலாமிளகு திப்பிலிமூல
மிரண்டு துகைக்குங் கூறத்தான்
கேளிரண்டு பலம் நாட்டு சுக்குதுவ
மூன்று பலங்கெடியாய்க் கூட்டே (ரசக)

கூட்டியிடித்தே வடித்து வொருசட்டி
யிற் பசும்பால் குணமாய்விட்டு
நாட்டமாய் வேடு கட்டி வேட்டின்மேல்
முன் பொடியில் நறுநெய்விட்டு
போட்டிடு சர்(க்)கரை மூன்று சேரிதெலாம்
பிசைந்து வைத்துப் பிட்டாய்ச் சுட்டு
நீட்டி கையாலிறக்கியது வாறினபின்
தேன்வார்த்து தீயுந்தானே (ரசஉ)

தானே யிதிற்கழற்கொடிக்காய்ப் பிரமாண
மனுபானத்தனிலே கொள்ளு
மீனமுறுஞ் சுரந்தாப மார்வலி
யீளை யிருமலெலும்புருக்கி
ஜனமிகும் பெரும்பாடு சத்திகுன்ம
மரோசிகமுமுஷ்ணங்கிராணி
நானுமதிசாரம் பாண்டீரணமூ
லிவ்வூரில் தரித்திடாதே (ரசஙு)

(இ-ள்)

தாளிசபத்திரி	சிறுநாகப்பூ
கூகைநீர்	இராம்பு
சித்திரமூலம்	

இவைகள் வகையொன்றுக்கு ஒரு பலம்

பிளகு	திப்பிலிமூலம்
இவ்விரண்டும் வகைக்கு	2 பலம்
சுக்கு	3 பலம்

இவைகளை எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, சூரணித்து வஸ்திர காயம்செய்து கொள்ளவும். இதில் சிறிது பசுநெய்யை விட்டுப் பிசரிகொண்டு, ஒரு சட்டியில் பசுவின்பாலை விட்டு வேடுகட்டி, அதன்மேல் முன்சொன்ன சூரணியிட்டுச் சர்க்கரை 3 சேரும் போட்டுக் கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பிட்டாகச் சுடவும். பின்பு இது ஆறியவுடன் தேன் விட்டுப் பிசைந்து கொள்ளவும். இதில் கழற்சிக்காயளவெடுத்துத் தக்க அனுபானத்தில் சாப்பிட சுரம், தீபம், மார்வலி, ஈளை, இருமல், எலும்புருக்கி, பெரும்பாடு, சத்தி குன்மம், அரோசகம், உஷ்ணம், இராணி, அதிசாரம், பாண்டு, அசிரணம், முதலிய நோய்கள் தீரும்.

---

62. ஈளை, இருமல், மருந்தீடு, முதலானவை களுக்குக் கண்டங்கத்தரி எண்ணெய்

கண்டங்கத்தரி தூதுவளை யுத்தா
மணியு மிளகரணை சங்கு
மூண்டிய மூற்றெருக்கின் செவி காரிசாலங்
கண்ணியுஞ் செம்முள்ளி போடே.
உண்டிடுஞ் சிறுவழுதலை யொன்பது
வேருஞ் சரியாயுந்தான் கொண்டு
அண்டிய வாவின் பாலை வார்த்தரைத்து
வேண்டிய வாமணக்கு நெய்யே (ஈசச)

ஆமணக்கினெண்ணெய்தனிற் கரைத்தெரித்து
மிறக்கிற போததனிற்றூனே
நேமமுடனிலுப்பைதனிலொருபிடிபோட்
டேயிறக்கி நிதமுங்காலே
யேமனத்தோடொருகரண்டி கொள்ளீனே
இருமல் மருந்திடுதல் தானும்
போமிதுக் கென்றே தஞ்சைச் சரபோசி
மகாராசன் புகன்றவாறே" (ராசரு)

(இ-ள்)

கண்டங்கத்திரி	தூதுவளை
உத்தாமணி	மிளகரணை
சங்கம்	முத்தெருக்கஞ்செவி
கரிசாலங்கண்ணி	செம்மூள்ளி
சிறுவழுதலை (சிறுகத்திரி)	

இச்சரக்குகளின் வேர்கள் வகைக்கு (1 பலம்) விதமெடுத்துப் பசுவின்பால் விட்டு அரைத்து, சிற்றாமணக்கெண்ணெய் (4 சேருடனே) குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமானபின் இறக்குந் தருவாயில் இலுப்பைத்துளிர் 1 பிடியை அதிலிட்டுக் குழப்பி இறக்கவும். இவ்வெண்ணெயைத் தினந்தோறும் காலை வேளையில் ஒரு சிறு கரண்டியளவு உட்கொள்ள ஈளை, இருமல், மருந்திடு முதலிய ரோகங்கள் தீரும்.

---

63. இருமல், அக்கினிமந்தம், ஈளை, பெருவயிறு, மூலம், கிராணி, கிருமி, பக்கசூலைக்குத், தும்பு.

தூதுவளை கையாந்தகரை நொச்சி
யுமாடாதோடை சங்கு
சாதகச்சிறுவழுதலை குப்பைமேனி
தேட்கடைசாரடையிலூடே

சீதகக் கீழ்காய் நெல்லி பிரமியுட
னே நல்ல சிற்றமட்டி
ஓது மீராறு வகையிலை யிடித்து
மதின் சாறுமோரொன்றுக்கே (காசசு)

" ஓரோன்றுக்கும் நான்கு நாழிச்சாறு
எண்ணெயதுமொன்று நாழி
சீருடைய முத்தக்காசதிவிடைய
பேரீச்சமுந்திப்பிலிசுக்கு
சீரகமுங் கொடிவேலி வசம்பு வெட்
பாலையினரிசி சிறுமூலந்தான்
காரமிளகு மிலந்தையடையும்
விழாலரிசி மருக்காரை தானே" (காசள)

" மருக்காரை செ(வ்)வியஞ் சிறுதேக்கு பெருங்
குரும்பை யசமதாகங் கூட்(டே)
பெருங்காயமுங் கடுகுரோகிணியுங்
கடுகேலம்பிசகாமற்றுன்
இருபத்தியிரண்டு வகைக்கொவ்வொரு
வகையதற்குமே தான்கேளு
ஒருபலமு மெடுத்தரைத்து மென்பொடியாத்
தூவி விடுவொக்கத்தா(னே)" (காசஅ)

" தூவியெரித்தே பதத்திலிறக்கி நோய்
வலுவதும் பா(ர்)த்துக் கொண்டேதான்
ஆவலுடனே காலை தனிற் கொள்ள
யிருமலுடனக்கினிமந்தம்
மேவிநீ பெருவயிறு மூலரோகங்
கிராணிமெற்றக்கிருமி
தாவு பக்கச்சூலையெல்லாம் பரந்தோடுந்
தப்பாமல் சகத்திற்றுனே" (காசக)

(இ-ள்)

தூதுவளை
நொச்சி (கருப்பு)
சங்கு
குப்பைமேனி
கையாந்தகரை
ஆடாதோடை
சிறுவழுதலை
தேள்கொடுக்கு

சார்ரடை	பீழாநெல்லி
பிரமி	சிற்றரமுட்டி

இச் சரக்குகளின் இலையை பிடித்துப் பிழிந்த சர்று வகைக்கு 4 படி.

சுத்தமான நல்லெண்ணெய் 1 படி

கோரைக்கிழங்கு	அதிவிடையம்
திப்பிலி மூலம்	சுக்கு
சீரகம்	கொடிவேலி வேர்
வசம்பு	வெட்பாலை அரிசி
திப்பிலி	மிளகு
இலந்தை	விழாலரிசி
மருக்காரை	செவ்வியம்
சிறு தேக்கு	பெருங்குரும்பை
ஓமம்	பெருங்காயம்
கடுகரோகிணி	கடுகு
ஏலக்காய்	பேரீச்சங்காய்

இச்சரக்குகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்துக் கல் ஓரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்து சாறுகலந்த எண் ணெயுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தி லிறக்கவும்.

நோயின் பலமறிந்து இந்த எண்ணெயைத் தினந்தோறும் காலை வேளையில் உட்கொள்ள.

இருமல், அக்னிமந்தம், ஈளை, பெருவயிறு, மூலரோகம், கிராணி, கிருமி, பக்கசூலை முதலிய வியாதிகள் நிச்சயமாக தீரும்.

---

64. ஈளை, இருமல், இரைப்புக்கு மருந்து

"தேவதாளிக் கையாந்தகரைத்
தாயைக் கொள்ருன் செகத்திற்ருனே
தாவிவளரவுரியிங்நாற் சாறு மிடித்
தேயதையுஞ் சமனுய்க் கூட்டி

பாவமுடனல்லெண்ணெய் விட்டெரி,
நல்ல குணப்பதத்திறக்கி
யேவயண மாய்க் காலை நக்க,
யிருமலீளை யிரைப்பும் போமே." (ாருய)

(இ-ள்)

தேவதாளி சமூலம்	கையாந்தகரை சமூலம்
வாழைக் கிழங்கு	அவுரி.சமூலம்

இவைகளின் சாறு தனித் தனியே	1 சேர்
சுத்தமான நல்லெண்ணெய்	4 சேரும்

விட்டு ஒன்முகக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும் இந்த எண்ணெயை தினம் காசளவெடுத்துக் காலை வேளையில் சாப்பிட இருமல், ஈளை, இரைப்பு முதலிய ரோகங்கள் தீரும்.

---

65. இருமல், ஈளை, முதலான நோய்களுக்கு இலக்கள்ளிச் சூரணம்

(அனுபானம் வெவ்வேறு)

"இலக்கள்ளி வடக்கினிற் போம் வேர் வெட்டித்
தோல் சீவிரவி முன்வைத்
துலர்த்திப் பொடிசெய்து வைத்துக் கொண்
டத்திக் காயளவுமே யெடுத்து
நலத்துடைய நெய்யதனிற் குழைத்துண் ணுக்
காலையினில் நவிலுமீளை
குலைத் தோடுஞ் சோகை யிருமல் பித்த
பாண்டு மின்னங் கூறக் கேளே". (ாருக)

"கூறக் கேளிப் பொடியை வெள்ளாட்டுப்
பாலினுடன் கூட்டியுண்ணச்
சீறும் பேய்ப் பிசாசகலுமிப் பொடிகோ
மயத்தினிலே சேர்த்துண்டக்கால்

தீருமகுவை பருத்த வயிறு சூலை
நீராமை செகத்திலே தான்
சாரமுள்ள காடியுடனுண்டக்கால்
சிறு புழுவுந் தானும் போமே''. (ாருஉ)

''போமிதற்குச் சளி நாக்குப் பூச்சி கீரை
யின்புழுவும் புகலும் வாதம்
நேமமுடன் முலைப்பாலிற் கலக்கி யுண்ணக்
காமாலை நிலை கெட்டோடும்
பூமிதனிற் கீர்த்தி பெற்ற துரை சரபேந்
திரனுணர்ந்து புதுமையாக
நேம முள்ள யிலைக் கள்ளிச் சூரணமிது
நம்பி யிதை நீசெய்வாயே''. (ாருஊ)

(இ–ள்)

இலைக் கள்ளிச் செடியின் வடக்கே போகும் வேரை வெட்டிக் கொண்டு வந்து மேல் தோலைச் சீவிவிட்டு, துண்டு துண்டுகளாக நறுக்கி வெயிலில் காயவைக்கவும். பின்பு, இதைக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, இச்சூரணத்தில் ஒரு அத்திக்காயளவெடுத்து நெய்யுடன் குழைத்துக் காலை நேரங்களில் சாப்பிடவும். ஈளை, சாகை, இருமல், பித்தபாண்டு, முதலியவை தீரும்.

பேய், பிசாசு, தீரச்

சூரணத்தை வெள்ளாட்டுப் பாலில் சாப்பிடவும்.

பெருவயிறு, ஈளை இவைகளுக்குப்

பசுமூத்திரத்தில் சூரணத்தை யுட்கொள்ளவும்.

வயிற்றிலுள்ள கிருமி விழவும், பெருவயிறு, சூலை, நீராமைக்கட்டி, சளி, நாக்கப்பூச்சி, வாதம் முதலான ரோகங்களுக்குச்

சூரணத்தைக் காடியுடன் சாப்பிடவும்.

காமாலை தீர

முலைப்பாலில் இச் சூரணத்தை உண்க.

66. சூலை, இருமலுக்கு 'அரிதாரப் புகை'

"இலந்தையிலை மணித்தக்காளி யினிலையு
மிடித்துப் பிழிந்திரண்டு சாறும்
நலந்தரு மெல்லிய சீலைதனிற்றேய்த்து
வைத்துமதை நன்றுதத்தா
னுலர்ந்த பின்பு இப்படியே யைந்துதரந்
தோய்த்துமதையுலத்தித் தானே
பலந்தரும் பொன்னரி தாரம் பொடி செய்து
முன்றுணிகைப் பத்திக் தானே" (ாருச)

"பத்தி கிழித்தப்பொடியைத் தூவிதிரித்
தே புளியம்பரு மரத்தி
னுத்த பொருக்கின்தணலைக் கொளுத்தியிந்தப்
புகையதனையுட் கொண்டாலே
னித்த மிருமூம் நோயு மீளையெலாந்
தீ(ர்)ந்து விடும் நிசமாய்த்தானே
சத்திய வாசகன் சரப மகிபால
னுணர்ந்த புகைதானிதாமே". (ாருரு)

(இ-ள்)

இலந்தை இலை, மணித்தக்காளி இலை.

இவைகளைக் கொண்டு வந்து, கல்லுரலிலிட்டிடித்துச் சாறு பிழிந்து, அதை ஒரு வெள்ளைத் துணியிலூட்டி, நிழலில் காயவைத்துக் கொள்ளவும், மறுபடியும் மை சாற்றில் தோய்த்து உலர்த்திக் கொள்ளவும், இவ்வாறு 5 தடவை செய்து கொள்ளவும்.

தாளகம் ¼ பல மெடுத்துச் சுத்தி செய்து, அதைத் தூளாக்கி மேலே சொல்லி யிருக்கும்படி செய்துள்ள துணியில் ஒரே சீராகத் தூவித், திரியாகத் திரித்துக் கொள்ளவும். வேண்டும்போது இத் திரியை புளியம் பொருக்குத் தணலிலே கொளுத்தி, அதிலிருந்து எழும் புகையை வாயினூலுட்கொள்ளவும். சூலை, இருமல் முதலிய நோய்கள் தீரும்.

67. இருமல், சுக்கிலப் பிரமேகத்திற்குப்புகை

"அவுரி கொடி வேலி கையாந்தகரைவே
ருடனே பொன்னரி தாரந்தான்
நவிலுமிந்த நாலுஞ் சரியாகவுமே
பசும் பாலை நாடி வார்த்து
துவளுமையைப் போலரைத்து யீக்கிபோ
லே நிரைத்து சொல்லக் கேளு
நவமாக நிழலுணத்தலாயுணத்திப்
பொட்டி தனில் நலமாய் வையே" (ாருசு)

"வைத்தெருக்கங் குழல்தனிற் சொருகி நெருப்
பினிற்கொளுத்தி வகையாய்த் தானே
யுத்திடுமப் புகையதனைக் காலையந்தி
யிலுங் கொள்ளவுடம் பிலுற்ற
சத்த மிகு மிரும்லுடன் சுக்கிலப்பிர
மேக மறுந்தப்பாமற்றுன்
மத்த கெசமீதிலிந்திரனிகர்ப்பவனி
வருந்தஞ்சை மாலுஞ் சொல்லே". (ாருள)

(இ-ன்)

அவுரி வேர் கொடி வேலி வேர்
கையாந்தகரை வேர் சுத்தி செய்த தாளகம்

இந்நான்கு சரக்குகளையும் வகைக்குச் சரி எடை யெடுத்துச் சூரணித்துப் பசுவின் பால் விட்டு மைபோலரைத்து மெல்லியதாக ஈர்க்கின் கனம் போலத் திரித்துக் கொள்ளவும். இதை நிழலில் உலர்த்தி வைத்துச் கொள்ளவும்.

இதை எருக்கங்குழலிற்குள் சொருகி. நெருப்பில் கொளுத்தவும். இதிலிருந்து எழும்பும் புகையைக் காலையிலும் மூக்கினுலுட் கொள்ளவும். இருமல், சுக்கிலப்பிரமேகம் முதலியவைகள் நீரும்.

68. ஈளை, இருமலிரைப்பிற்கு மருந்து

"முடக்கொத்தான்சாறு உரி வெள்ளையுள்ளிப்
பூண்டைந்துமொக்கக் கூட்டி
திடத்துடனே யரைத்துக் கலக்கியு
மூன்று நாட்குடிக்க சேட்டை செய்துக்
கடுத்தீளையிருமலிரைப்புந் தீருஞ்
சிவனுடைய கருணையாலே
யடுத்தவரை யீடேற்றுந் துரை சரபேந்
திரனுணர்ந்த வருளதாமே". (ாருஅ)

(இ-ள்)

முடக்கொத்தான் சாறு ½ படி
வெள்ளைப் பூண்டின் பல் 5 (எண்ணிக்கையில்)

இவைகளை யரைத்துக் குழப்பித் தினம் காலை வேளையில் குடிக்கவும், 3 நாளைக்குக் குடிக்கவும். இருமல், ஈளை, இரைப்பு முதலிய நோய்கள் தீரும்.

---

69. ஈளைக்கு மா

"பொன்னரி தாரம் பண்டத்தினிடை மூன்று
பணவெடை பொருந்துந் திப்பிலி
யின்னிரண்டும் பொடி செய்து பச்சரிசி
மாபடி லொன்றிதிலே தானே
நன்னய மாய்ப் பிசைந்து தேன் கூட்டி யொரு
பாக்களவோர் நாளே கொள்ளு
மின்னயமா யீளை யகலும்
பத்தியமாக விரு நீயுந் தானே". (ாருக)

(இ-ள்)

சுத்தி செய்த தாளகம்	3	பணவெடை
திப்பிலி	12	,,
பச்சரிசி மா	1	படி

அவற்றையும் ஒன்று கலந்து கல்லுரலிலிட்டிடித்து, தேன் வேண்டிய அளவு விட்டுப் பிசைந்து கொண்டு, ஒரு பாக்களவு காலை சாப்பிடவும். ஈளை தீரும். மருந்து சாப்பிடும்போது பத்தியமாக இருக்கவும்.

---

70. ஈளை, இருமல், மந்தாக்கினி, அருசிக்குத் தாளீச பத்திரிச் சூரணம்

''தாளிச பத்திரியு மொரு பங்கு
மிளகிரண்டுபங்கதனுடன்ருனே
கேளு சுக்கு மூன்று பங்குக் கூகை நீராம்
ஐந்துபங்கு கொடி யதான
நீளு மிலவங்கத்தின் பட்டை யரைப்
பங்கேலம் நிறை பலந்தான்
சூளுமிந்த வாறு வகை மருந்தெல்லாஞ்
சேர்த்தரைத்துச் சூரணஞ் செய்யே'' (ாசூ ம்)

''சூரணத்துக்கிரண்டுபங்குச் சீனி கலந்
தே காலைத் துடியாய்க் கொள்ளு
சீரீளையிருமல் மந்தாக்கினி யருசி
நோயதுவுந் தீர்ந்தே போகும்,
பாரில் மிகு கீர்த்தி பெருந்துளசேந்திர
பூபனருள் பாலனென்கோன்
தீரன் சரபோசி மா(கா)ராசேந்திர
நிர்ணயித்துச் செப்பும் வாரே''. (ாசூக)

(இ-ள்)

தாளீச பத்திரி	1 பங்கு
மிளகு	2 பங்கும்
சுக்கு	3 பங்கு
கூகை நீர்	5 பங்கு
இலவங்கப் பட்டை	½ பங்கு
ஏலக்காய்	1 பங்கு

இவைகளைக் காயவைத்து, ஒன்று சேர்த்துக் கல்லுரலி லிட்டு இடித்து, வஸ்திர காயஞ் செய்து, அதற்கு 2 பங்கு சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும்.

இச் சூரணத்தைத் தினம் ஒரு வெருகடி விதம் சாப்பிட, ஈளை, இருமல், மந்தாக்னி, அருசி, முதலியவைகள் தீரும்.

---

71. ஈளை, இருமலுக்குப் பூசினிக்காய் மருந்து

முத்தின பூசணிக்காயைக் கொண்டு வந்து
குடல் தோலுமுன்னே போக்கி
சத்துள பொன்னரிதாரந்திப்பிலி சுக்
கிது மூன்றுந் தான் கழஞ்சு
நத்துவமாமிலவங்கமிருகழஞ்சு
சீனி பலம் நாலுந்தாகும்
பத்து கழஞ்சே கடுக்காய் பசுவின் பால்
நாழிப்பண்பாய்க் கூட்டே. (ராசூஉ)

கூட்டியே வேகவைத்துப் பதத்திறக்கி
நாளொன்றுக்குந் தான் கேளு
நாட்டி னெலுமிச்சங் காயளவுண்ணு
அதிகாலை நாளொன்றுக்கு
வாட்டிய ஈளையுமிருமலற்று விடுந்
தப்பாமல் மனிதற்காக
வூட்ட யிந்த முறையதனை யுணர்ந்த சர
போசி மன்னனுரை யிதாமே''. (ராசூஊ)

(இ--ள்)

ஒரு முற்றிய பூசினிக்காயைக் கொண்டு வந்து அதன் குடல், தோல் இவைகளை நீக்கிவிட்டு, சிறு சிறு துண்டுகளாகச் செய்து கொள்ளவும்.

சுத்திசெய்த தாளகம்	1	கழஞ்சு (1¼ வராகனெடை)
சுக்கு	1	,,
திப்பிலி	1	,,

இராம்பு	2	கழஞ்சு
கடுக்காய்த் தூள்	10	,,

இச்சரக்குகளை எடுத்து, உலர்த்தி, இடித்து வஸ்திர காயஞ்செய்து கொள்ளவும்.

ஒரு இருப்புச் சட்டியில் 20 பலம் சீனி போட்டு, பசுவின் பால் 4 படி விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப், பாகான பின் பூசிணிக்காய்த் துண்டுகளையும், சூரணத்தையும் அதில் போட்டு வேகவைத்து லேகியபதத்தில், இறக்கி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு எலுமிச்சங்காயளவெடுத்துத் தினம் காலையில் சாப்பிட சூலை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

---

72. குலைப்புக்கு மருந்து

"குலைப்பு வந்த போது செருப்படி சமூல
மும் பிடுங்கிக் கொண்டே வந்து
உலர்த்தி யிடித்துப் பொடி செய்தே
நன்றுப் வடிக்கட்டியுறுதியாக
வலுத்த வெருகடி தூளை மோரினிலா
குதல் வெந்நீர் வைத்தே யாதல்
பலத்தகுலைப்பும் வந்தபோது கொள்ளு
மைந்து விசை பறந்து போமே". (ாகூசு)

(இ-ள்)

இருவித செருப்படி களில் எது கிடைத்தாலும் அதை எடுத்துக்கொள்ளலாம். செருப்படியைச் சமூலமாகப் பிடுங்கி வந்து, நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதைக் குலைப்பு இருமல் இருக்கையில் ஒரு வெருகடி (மூவிரல் கொண்ட அளவு) தூளை மோரிலோ அல்லது வெந்நீரிலோ சாப்பிடவும். 5 நாளைக்கு உட் கொள்ளவும்.

---

73. குலைப்புக்கு உருண்டை

"துத்தமெலிப் பாஷாணந்துருசி யிது
மூன்று சரிதொகுத்தெடுத்துன்
மத்தை யிலைச் சாறு விட்டுமரைத்துப்
பயறளவுண்டை வகையாய்ச் செய்து
சத்துளவாவின் பாலிலோருண்டை
யிடக் குலைப்புந்தானே நிரும்
தந்தையர் மோகன வனங்கன் சர
பேந்திர னிர்ணயித்த தானி தாமே". (ராசூரு)

(இ-ள்)

சுத்தி செய்த துத்தம்
சுத்தி செய்த எலிப்பாஷாணம்
,, துருசு

இவைகளைச் சம எடையெடுத்துக் கல்வத்திலிட்டு, ஊமத்தை இலைச் சாறு விட்டு நன்றாக அரைத்துப், பயறளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும், ஒரு மாத்திரை வீதம் பசுவின் பாலில் உட்கொள்ள குலைப்பிருமல் நிரும்.

---

74. "குலைப்புக்கு மருந்து"

"தாக்கியகுலைப்பது வந்திடுபோ
துச் சிதமருந்து தானே கேளு
மூக்கரட்டைவேரை யெண்ணெயிற் போட்டுக்
கொதிக்க வைத்து முசிதமாக
சாக்கிரதையாக விட்டு மேலுக்கும்
பூசுமிதைத் தானே யைந்து
நாட்குளந்தக் குலைப்பு விட்டு மறு
தேசம் புகுந்து சடம் நலமதாமே". (ராசூசு)

(இ-ள்)

மூக்கரட்டைவேரை எண்ணெயிலிட்டுச் (நல்லெண்ணெய்) சிவக்கக்காய்ச்சி, இந்த எண்ணெயை உடம்பிலும் பூசி

உள்ளுக்கு ஒரு துட்டெடையும் சாப்பிடக் குலைப்புத் தீரும். 5 நாளையில் குணம் இடைக்கும்.

---

75. மருந்தீடுக்கு மருந்து

"காசினியில் வளர்வேலிப் பருத்தியுட்
கொழுந்ததனைக் கையினாலே
மாசிலாமற் கொணர்ந்துமதிலிலந்து
பாக்களவுமரைத்து நன்றாய்
வாசமிகுமா வெண்ணெயிற் குழைத்து
மைந்து நாள் வகையாய்க் கொள்ள
வீசுமருந்தீடு தீர்ந்து முடம்பு சவுக்கிய
மாகு மியல் பாய்ச் செய்யே". (காசுஎ)

(இ-ள்)

வேலிப் பருத்திக் கொழுந்தைக் கொண்டு வந்து தண்ணீர் விடாமலரைத்த விழுதில் 5 பாக்கள வெடுத்து பசுவின் வெண்ணெயுடனே குழைத்து, 5 நாளைக்குச் சாப்பிடவும். மருந்தீடு நீங்கித் தேகமும் பலப்படும்.

---

76. காசமீள, இருமலுக்குச் 'செம்பு பற்பம்'

"செம்புபத்து கழஞ்சிசலிறகதுபோ
லேதட்டிச் செய்விதங்கேள்
கம்பி கம்பியாகவொரு யிரை நீள
மத்தகட்டைக் கத்தரித்து
அம்புவியெருக்கம் பாலினில் மூன்று
நாளுறவதையும் வைத்துப்
பிம்பிரத முக்கழஞ்சுங் கெந்தகமு
மைங்கழஞ்சும் பிசறிடாதே". (காசுஅ)

" பிசகிடாதே வெள்ளைப்பாஷாண
மோர்கழஞ்சும் பேதமில்லா
திசைவான குழிக்கல்லிலே கருக
மத்தித்து மிதையும் வைத்து
இசையழிஞ்சில் பருப்புழக்கு மெருக்கினுட
பழுப்புச் சாற்றினிலரைத்து
வசமான குகை பிடித்து நன்முக
வுலத்தியதை வைத்துக் கொள்ளே ". (எசுஉ)

" வைத்துக்கொண்டே யந்தச் செம்பினுட
தகடெடுத்து வகையாய்த் தானே
சுத்த முள்ள தூள் போட்டுத் தகட்டையு
மத்தித்துக் கொண்டேதான்
சத்து வைத்து மதின்மேலே பொடி தூவிக்
குகைவாயைத் தானுமூடிச்
சுத்த வெள்ளைச் சீலதனியடை யடையாய்
வைத்துபின்புஞ் சொல்லக்கேளே ". (எளய)

" சொல்லக்கேள் காயவைத்தோர் கலசமதற்
குள் குகையைத்துடியாய் வைத்து
நல்ல கலசத்தின் வாயோட்டாலே
மூடி மண் சீலையுமே செய்து
வல்ல பண்ணியுயரமெருக்குவித்து நடு
வே கலசம் வைத்துத் தீயை
யல்லலறவேயிட்டு மது வெந்த
வாறறிந்து மதையுந்தானே ". (எளக)

" அதையடுத்துக் கலசத்துக்குள் மருந்தை
வாங்கி குகையதினுடேதான்
பதமாக மத்தித்து பிளைகதனிலே
யடைத்துப் பதனமாய்வை
யிதனி (ன்) நோய் வலுவறிந்து சற்றெடுத்துத்
தேனிலதை யிதமாய்க் கொள்ள
உதரத்திலுற்ற பிணி யீளை இரு
மல் காசமுடனே போமே ". (எளஉ)

சுத்தி செய்த செம்பு 10 கழஞ்சு எடுத்து ஈசலிறகைப் போல் மெல்லிய தகடாகத் தட்டிக்கொள்ளவும். ஒரு விரற் கெடை நீள முள்ளதாக அதைத் கட்பியாகக் கத்தரித்துக் கொள்ளவும். இத்துண்டுகளை எருக்கம் பாலில் 3 நாளூற வைக்கவும்.

ஒருகல்வத்தில் சுத்திசெய்த ரஸம் 3 கழஞ்சும், சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம் 5 கழஞ்சும், சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் 1 கழஞ்சும் விட்டு நன்றாக மத்திக்கக் கறுப்பான பொடியாகும். பின்பு, அழிஞ்சில் பருப்பு ஒரு உழக்குப் போட்டு, எருக்கம்பழுப்புச்சாறுவிட்டு நன்றாக அரைத்து ஒரு குகை செய்து கொள்ளவும். இதை நிழலில் நன்றாக உலர்த்திக் கொள்ளவும். முன்னே சொல்லப்பட்டதூளையும் செம்புத் தகட்டைக் கம்பிகளாக்கியதையும் தூளாக்கிக் குகைக்குள்ளே வைத்து மூடி வெள்ளைத் துணியினால் அதின் மேல் சுற்றவும். இவ்வாறு மூன்று அல்லது நான்கு தடவை சுற்றவும்.

ஒரு சட்டியை எடுத்து அதற்குள்ளே துணி சுற்றிய குகையை வைத்து, சட்டியின் வாய்க்குத் தகுந்த ஒரு ஓட்டால் மூடிச் சீலை மண் செய்யவும். ஒரே அளவு, நிறையுள்ள வரளிகளை அடுக்கி, அதன் நடுவில் சட்டியை வைத்துப் புடமிடவும். புடம் ஆறிய பின்பு, கலசத்தைத் திறந்து மருந்தை எடுத்துக்கொள்ளவும். நோயின் பலமறிந்து தேனில் கொடுக்கவும்.

நீரும் நோய்கள் :-

வயிற்றிலுள்ள நோய்கள், சூலை, இருமல், காசம் முதலியவை.

77. இருமல், சுவை, நெஞ்செரிவு, உடலுளைச்சல், பித்தம், விஷசுரத்திற்கு 'ஆடாதோடை நெய்'

" இருமலுக்குமாடாதோடையினெய்யு
மொன்றுரைப்பேனிதமாய்க் கேளு
தருவாடாதோடையிலை வேர்க் கொம்பு
பட்டையதிற் சமூலமுந்தான்
குருகவுமேயரிந்துமதினூற்றிருப
துபலமுங் கொண்டிடித்து
இருதூணி நீர் விட்டு மஞ்சு நாள்
வைத்து மடுப்பேத்திடாயே". (ாளங)

" ஏத்திகாலொன்றுகப் பதக்கு
ரோய்க்காச்சியே வடித்து
மூத்தபசுப்பால் குறுணி நெய்யுமொரு
நாளுழியொக்கவிட்டு
பார்த்து மதுகாய்ந்த பிறகிதற்குக் கற்க
மமுக்கிராவேர் பாரில் மேவும்,
வாய்த்த வட்டத்திருப்பியு மாடாதோடை
யுஞ்சுழலா வாரைதானே". (ாளச)

" தானுமுக்கா வேளையுங் கண்டங்காலி
வட்டு வேரதனுடனேழ்வே
ரான சிறு மூலக முந்திரிக கடுகு
சிறுதேக்கு மரத்தை யேலம்
ஈனமிலா முந்திரிகைப் பழம் பேரீச்
சம் பழமுமிருவேலிவேர்
கானில் விழாலரிசி யிலவங்கமர
மஞ்சளுங்கற் கடகசிங்கே". (ாளஞ)

" சிங்கிகார்கோலி க்ஷீரக்கார்
கோலியிடமியமுந் தேவதாரம்
பொங்கமிகுமிந்துப்புச் சிவதையுடன்
இலவங்கம் பொருந்தத்தானே

பங்கமில்லாச் சந்தனத்தோடாகயிரு
பதுவகையும் பசு நெய் நாழிக
ருங்கவனமாக வொரு கழஞ்சுவீ
தமதையுங் கொண்டிடாயே". (ாளசு)

"கொண்டரைத்துக் கரைத்துப் பதத்தினி
லிறக்கி வடித்துமதைக் கொள்ளுகாலே
மண்டுபிரும்மலீகா நெஞ்செரிவு
முடலுணர்தல் வலுத்த பித்தங்
கொண்ட விஷசுரமதெலாங் குணமாகுஞ்
சிவ கிருபைக்கு முகந்த
மண்டலாதிபதி சரபோசி மகா
ராசனுணர் வகையாம் நெய்யே". (ாளள)

ஆடாதோடையிலை, வேர், கொம்பு, முதலியவைகளுடன் சமூலமாக எடுத்து. சிறு சிறு துண்டுகளாக வெட்டி 120 பலம் எடுத்து, கல்லுரலிலிட்டிடித்து 8 மரக்கால் தண்ணீர்விட்டு, 5 நாள் முழுதும் ஊறவைக்கவும். பின்பு, இதை அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றுகக் காய்ச்சவும். பசுவின் பால் ஒரு மரக்காலும், பசுவின்நெய் 4 படியும் விட்டு, ஷை கஷாயத்தை யும் ஒன்று கலந்து,

அமுக்கிராக்கிழங்கு	வட்டத்திருப்பி
ஆடாதோடை வேர்	சுழலாவரை வேர்
முக்காவேலீ வேர்	கண்டங்கத்திரிவேர்
திப்பிலி	முந்திரிகைப்பழம்
திரிகடுகு	சிறு தேக்கு
சிற்றரத்தை	ஏலக்காய்
பேரீச்சம்பழம்	வெட்டிவேர்
விழாலரிசி	கிராம்பு
மரமஞ்சள்	கற்கட சிங்கி
காகோலி	க்ஷீரகாகோலி
தேவதாரம்	இந்துப்பு
சிவதை வேர்	இலவங்கப்பட்டை
சந்தனத்தூள்	* இடமியம்
கரிமுள்ளி வேர்	

* 67. தெ. சுவடியிலும் இடமியம் என்றே காணப்படுகிறது. இது மலையாளச் சரக்கான 'எடவகம்' என்று சொல்லப்படும் அவிடவர்க்க சரக்கிலொன்றுக இருக்கலாமென்று தோன்றுகிறது.

இவைகளை வகைக்கு 4 கழஞ்சு வீதம் எடுத்து, இடித்து ஊறவைத்து, அம்மியிலிட்டரைத்துக் கஷாயம் கூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்திலிறக்கவும். தினம் ½ தோலா வீதம் காலை நேரங்களில் சாப்பிடவும்.

இருமல், சுளை, நெஞ்செரிவு, உடம்பு உலர்தல், பித்தம், விஷஜ்வரம், முதலியவைகள் குணமாகும்.

---

78. சுளை, இருமல், கிருமி, கோழை, தோஷம், வாய்வுக்குத் திப்பிலி நெய்

'திப்பிலி நெய்யிருமலுக் கொன்றேதுவேண்
றிப்பிலியுந் திறமாய்த்தானே
யற்புதமாயிரண்டு பலங்கடுகரோ
கணியிளகு மாழாக்குத் தான்
தப்பிலா வெளுத்த பிசினெரு பலமுங்
கூட்டியரைத்ததனிற் போடடு
செப்பமுடனதிகாலை நோயறிந் தோர்
கரண்டிநக்கத் தீர நோய் கேளே.'' (ஞானஅ)

'கேளிருமலீளையறுந் தேகத்தி
லுண்டான கிருமி திருங்
கோழையறுஞ் சலதோஷ முதலான
வாயுவெல்லாங் குணமதாகுங்
காளை தனிற் பவனி வரும் பரமசிவ
னருளாலே கனதை பெற்ற
வாளிறைவன் தஞ்சை சரபேந்திர னுணர்
திப்பிலி நெய் வகையாயுண்ணே.'' (ஞானசு)

(இ-ள்)

திப்பிலி	2 பலம்
கடுகரோகிணி	1 ஆழாக்கு

மிளகு	1 ஆழாக்கு
வெளுத்த பிசின்	1 பலம்

இவைகளை எடுத்துச் சூரணித்து, * பசுவின் நெய் (1 படி) யுடனே கலந்து அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இந்நெய்யில் ஒரு சிறு கரண்டியளவெடுத்துக் காலை வேளையில் சாப்பிட, இருமல், ஈளை, கிருமிகள், கோழை, சலதோஷம், வாயு முதலிய பற்பல ரோகங்கள் தீரும்.

---

79. ஈளை, இருமல், காசுவாசம், மந்தார காசம், எலிகடி, இரைப்பு, அரிகுரல், நெஞ்செரிவு முதலான ரோகங்களுக்கு 'நாகச் செந்தூரம்'

முத்திரைக் கட்டியுந் துத்தநாக
மதி லஞ்சுபலமுந்தான் கேளு
வுத்த பசுவின் வெண்ணெயிலுப்பெண்ணெ
யுங் கலந்து வோர் கரண்டி
யித்தடவியத் துத்த நாகமதைப்
போட்டு மிருபது திறந்தான்
சத்துள வெள்ளாட்டுப் பாலிற் சாய்த்தும்
புதுச் சட்டி தனிலே தானே." (ரா அம)

புதுச் சட்டி தனிற் சுக்குப் பலமைந்
தோமமும் வெடியுப்பு மூழ்க
பதத்துடனே பொடி செய்து சட்டிதனி
லே நிரவி பகரக்கேளு
இதவாந் துத்த நாகமதிற் போட்டு
வறுபின்பு மேதினிக்குள்
விதமாகச்சிவந்த நாயுருவி கண்டங்
கண்டமாய் வெட்டிக் கொள்ளே." (ரா அக)

---

* செய்யுளில் காணப்படவில்லை.

வெட்டிக் கொண்டே வைத்துச் சிறுக
சிறுகப் போட்டுமே வறுக்க
திட்டமுருக்கம் பூவைப் போல்
சிவந்தேவருமச் செந்தூரத்தை
சட்டமா யோர்பணவினிடை சுக்கு
மிளகிரண்டுந் தான் வெதுப்பி
அட்டியிலாமற்றூள் செய்தே வெரு
கடிதூளு மருந்தேருனே.'' (ாஅஉ)

''தேனதனிற் கலந்திரண்டு வேளையுமே
நாற்பது நா(ள்) திறமாய்க் கொள்ளு
தானிதற்குமீளா யிருமற் காசச்
சுவாசமு மந்தாரகாச
மானயெலிகடியிரைப்பு மரி குரல்
நெஞ்சு நோவுமகலுமிந்த
ஔனமிலா நாகசெந்தூரமிது
தஞ்சை விபுவுரைத்தவாறே.'' (ாஅங)

(இ-ன்)

சுத்தி செய்த துத்தநாகம் 5 பலமெடுத்துத் தகடாகத் தட்டி இலுப்பெண்ணெயும், பசுவின் நெய்யும் தனித்தனி ஒரு கரண்டியளவு எடுத்துக் கலந்து, தகட்டின்மேல் பூசி, அதை ஒரு சட்டியிலிட்டு அடுப்பின்மேல் வைத்து உருக்கவும். அது உருகியபின் அதை வெள்ளாட்டுப் பாலில் சாய்க்கவும். இவ்வாறு 20 தடவை செய்யவும்.

ஒரு புதுசட்டியை யெடுத்து அதில், சுக்கு, ஓமம், வெடியுப்பு இவைகளை வகைக்கு 5 பலமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து போட்டு, அதை ஒரே சீராக நிரவிவிடவும். அதன்மேல், மேலே சொன்னபடி சுத்திசெய்த துத்தநாகத்தை போட்டு, அடுப்பின்மேல் ஏற்றவும். சிவப்பு நாயுருவியைச் சமூலமாக எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கிக் கொண்டு இவைகளைச் சிறுகச் சிறுகப் போட்டு சட்டியிலிருக்கும், நாகத்துடன் வறுக்கவும். முருக்கம் பூவை யொத்த சிவப்பு நிறமான செந்தூரம் கிடைக்கும்.

இச்சிந்தூரத்தில் ஒரு பணவெடை (3½ குன்றி) யெடுத்து, அதனுடன் மிளகு, சுக்கு இவ்விரண்டையும் சமனெடை யெடுத்து வெதுப்பிச் சூரணித்த தூளில் ஒரு வெருகடி எடுத்து தேன்விட்டுக் குழைத்துக் காலையிலும் மாலையிலுமாக 40 நாளைக்குச் சாப்பிடவும். ஈளை, இருமல், காசம், சுவாசம், நெஞ்சிலுண்டாகும் ரோகங்கள் முதலியவை நீங்கும்.

---

80. காசம், இருமல், ஈளைக்கு 'வேலிப் பருத்திச் சூரணம்'

அடவி வேலிப்பருத்தியிலை யடுப்பதில் வறுத்து
தூள் செய்துமி(ரண்டு)கா
சிடையுந் திப்பிலி சுக்கு மிளகிவரிவிரண்டு
காசிடையும் வகையொன்றுக்கு
திடமதாகவுஞ் சூரணஞ் செய்து முன் செப்பிய
பொடியுங் கூட்டி நான்கையுங்
கடத்திலுற்றிடு தேனிற் குழப்பியுண்
காசமோடிருமலீளை தீருமே. (சாஅச)

(இ-ன்)

வேலிப்பருத்தி இலை 2 காசளவு எடுத்து ஒரு புதுச்சட்டியி லிட்டு அடுப்பின் மேலேற்றிச் சிவக்க வறுத்துக்கொள்ளவும். அதை இடித்து வஸ்திரகாயஞ் செய்து அதனுடன் திப்பிலி, மிளகு, சுக்கு, இவைகளையும் வகைக்கு 2 காசெடை எடுத்துச் சூரணித்து, ஒன்று கலந்துத் தேனில் குழைத்து வைத்து கொண்டு சாப்பிட்டுவரக் காசம், இருமல், ஈளை முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு :—

காசெடை—வராகனெடை.

---

81. இருமலுக்கு மருந்து

கானத் தூதுவளே வேரரைத்துமே
கள்ளமில்லாப் பசுப்பாலிலே கலந்து
தானமில்லாமலே யதிகாலையி
லுண்டு பார்மூன்று நாளதிற்றுணுமே
ஈனமாக மனிதரைப் போர் செயு
மிருமலுமற்றுப்போம் நிசமாகவே
ஞானவான் தஞ்சையாளுஞ் சரபோசி
ராச பூபதி சொல்லு முறையிதே. (ா அரு)

(இ-ள்)

தூதுவளை வேரைப் பசுவின் பாலில் அரைத்து அதிலேயே கலந்து காலை வேளையில் மாத்திரம் 3 நாளைக்குச் சாப்பிட இருமல் தீரும்.

---

82. இருமலுக்கு 'நீர் முள்ளியாதி நீர்'

நீரின்முள்ளி சமூலமொருபிடி
நீண்கையாந்தகரை யொருபிடி
காரமா மாடாதொடை யொருபிடி
கானச் செம்முள்ளி வேருமரைப்பிடி
சாரமான முருக்கினிலையதுஞ்
சாற்றிய படியேயதரைப்பிடி
ஊரிற் சுக்குடனே கடுக்காயது
மொக்கக்கூட்டி நாகாழி நீர்வா(ர்)த்திடே. (ா அசு)

வா(ர்)த்தடுப்பினில் வைத்திரு நாழியாய்
வந்ததே யிறக்கி வேரடுப்பினி
லூற்றிச் சட்டியிற் சூடதாய் வைத்து நா
ளொன்றுக்கு மூன்று காசிடை நீரதும்
வா(ர்)த்துத் திப்பிலிமென் பொடி தூவியே
வதிகாலையிற் கொண்டிட இருமலுங்
காற்றெனவே பறந்து நன்றுகிடுங்
கனமிகுந் தஞ்சை மானருளீதே. (ா அளை)

(இ-ன்)

நீர்முள்ளிச்சமூலம்	1 பிடி
கையாந்தகரை	1 பிடி
ஆடாதோடை இலை	1 பிடி
செம்முள்ளி வேர்	½ பிடி
முருக்கிலை (முள் முருக்கு)	½ பிடி
சுக்கு	1 பிடி
கடுக்காய்த்தூள்	1 பிடி

இவைகளையொன்று சேர்த்து இடித்து 4 படி தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி 2 படியாகும்வரை காய்ச்சவும். இக்கஷாயத்தை வேறொரு சட்டியில் ஊற்றிவைத்து, சூடாக இருக்கும்போதே நாளொன்றுக்கு 3 காசெடை வீதம் எடுத்து அதனுடன் திப்பிலித்தூள் போட்டு அதிகாலையில் உட்கொள்ளவும். இருமல் தீரும்.

---

83. இருமலுக்குக் 'கடுக்காய்த்தூள்'

சட்டமாங் கடுக்காய்ப் பொடி செய்ததூ
டன்னீச் சிலைதனில் வடிக்கட்டியே
திட்டமான நற்றேனிற் குழைத்துமே
திப்பிலியதின் மேன்பொடி கூட்டியே
நட்டனும் பிள்ளை நாவிற்றடவிட
நாட்கள் சென்றயிருமலுமாறிடும்
அட்டியில்லாமற் செய் பிள்ளையானதுக்
காகுமேகைகண்டமுறையதே". (ஈ அ அ)

"தோட்டத்தின் குப்பைமேனியின் வேரதைத்
தூக்கியே வொருகாசளவு மரைத்
தேட்டமா மங்கைப் பாலிற் கொடுத்திடத்
தீர்ந்திடும் வயிற்றின் கழிச்சலதும்
நாட்டமாய் மூன்றுநாளது மீய்ந்திடு
நல்லகோயில் மதில்களுஞ் சூழ்ந்திடுந்
தாட்டிக மிகுந்(த) தஞ்சை நகரில் வாழ்
சரபபூபதி சாற்றுமருளிதே". (ஈ அ கூ)

(இ-ன்)

(1) கடுக்காயைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து கொண்டு, திப்பிலிச் சூரணமும் சேர்த்து தேனில் குழைத்துச் சாப்பிட்டுவர நாட்பட்ட இருமல் தீரும். இதனுல் அதிகமான மலப்பிரவிருத்தி உண்டானுல்.

(2) குப்பைமேனியின் வேரை ஒரு காசளவெடுத்து முலைப்பாலில் அரைத்துக் கொடுக்கவும். வயிற்றுக்கழிச்சல் தீரும். 3 நாளைக்குக் கொடுக்கவும்.

---

84. சலக்கழிச்சலுக்குத் "தாம்பிர பற்பம்"

தாம்பிரத்தைத் தகடது தட்டியே தண்ணீர்
வாத்தரைத் தேயரிதாரத்தை
சோம்பிடாமற்றகட்டிற்றடவியே
சுத்தமாயெருமூட்டைப் புடம் பண்ணி
தேம்பிடாமலதையெடுத் தேயரைத்
திடு கல்லம்மியிலுச்சித மாம்பற்ப
மாம் பின் பத்திரம் பண்ணி பணவிடை
மாத்திரங்கொளச் சுடுநீரிற் காலையே." (ாகூ ம)

காலையே யைந்துமாறுநாட் கொண்டிடு
கற்புடன் புளிப்புங் தவிர் வாயுவின்
சோலியான பதார்த்தமுங் தள்ளிடு
தோன்றிடுஞ் சலத்தின் கழிச்சலது
கோலமான கதிரவனீக்கண்ட
கொடும் பனியெனவோடிடுமற்புத
வாலச் சந்திரனீச் சூடுஞ் சங்கரன்
வரங்கள் பெற்றமகாவிபு சொல்லிதே." (ாகூக)

(இ-ள்)

சுத்தி செய்த தாளகத்தைத் தண்ணீர் விட்டரைத்து விழுதாக்கிக் கொண்டு, சுத்தி செய்த தாமிரத் தகட்டின் மேல் ஓரேசீராக இருபங்கங்களிலும் தடவவும். இதை ஒரு அகலில் வைத்துச் சீலைசெய்து காய்ந்தபின், வரளிகளை அடுக்கிக் ஜெக

புடம் போடவும். ஆறியபின்பு, புடத்தைக் கலைத்துத் தாமிரத் தகட்டை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

இப்பற்பத்தில் ஒரு பணவெடை எடுத்து வெங்கீரில் போட்டு காலை வேளைகளில் உட்கொள்ளவும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும். புளிப்புப் பதார்த்தங்களையும், வாயு பதார்த்தங்களையும் நீக்கவும், சலக்கழிச்சல் தீரும்.

குறிப்பு :—

தாளகத்தை சுண்ணாம்புக் கல்லுக்குள்வைத்து பசுவின் மூத்திரத்தை விட்டு 2 நாளுரவைக்கவும்.

---

85. சலக் கழிச்சலுக்கு 'ஸ்ரீசிக்காந்தாதிச் சூரணம்'

"ஸ்ரீசிக்காந்தமபினி குரூசானி
வோமஞ் சாதிலிங்கஞ் சாதிபத்திரி
வாசமாஞ் சாதிக்காயுங் கிராம்புடன்
வகையொன்றுக்கோர் பலமதுவெண்காரந்
தூசிபோகச் சாணகத்திலேயதைச்
சுத்தி பண்ணி யொருவராகனெடை
பேசுமெட்டும் பொடி செய்து வைத்துமே
பின்பு நாலுபணவெடை தேனிலே". (ராகூடு)

"தேனிலாவதலது சர்க்கரை
தின்னும் வாழைப்பழத்தினிலாவது
தானுமெட்டு நாட்கொள்ளு புளிப்பதுந்
தள்ளுகைப்புட்ன் வாயுப்பதார்த்தமும்(ம்)
ஈனஞ் செய்யுஞ் சலக்கழிச்சலது
மேகுமூரைவிட்டடைந்தாறு நாடனி
லான மில்லாத் தஞ்சாபுரி தன்னில்வா
ழுத்தமன் சரபேந்திர னருளதே". (ராகூடு)

(இ-ள்)

சுத்திசெய்த ஊசிகாந்தம்	அபினி
,, சாதிலிங்கம்	குராசானி ஓமம்
சாதிபத்திரி	சாதிக்காய்
கிராம்பு	

இவைகள் வகைக்கு 1 பலமும்

சாணியில் சுத்தி செய்த வெங்காரம் } 1 வராகனெடையுமெடுத்துக்

கல்வத்திலிட்டு நன்முக நுணுக்கிக்கொள்ளவும். இந்த சூரணத்தில் 4 பணவெடை யெடுத்துத் தேனிலோ அல்லது சர்க்கரையிலோ அல்லது வாழைப்பழத்திலோ 8 நாளைக்குச் சாப்பிடவும்.

இதற்குப் பத்தியம் :—

புளிப்பு, கைப்புப், பதார்த்தங்களை நீக்கவும்.

5 அல்லது 6 நாட்களுள் சலக் கழிச்சல் நிற்கும்.

---

86. சூல, இருமல், சுரம், முதலான வியாதி கட்கு அரிதார பற்பம்

(அனுபானம் வெவ்வேறு)

"வன்னமாமரிதாரம் பலமொன்று
வரிசை நொச்சிலைச் சாறு தன்னிலிட்
டுன்னிதமாயரை பின்பு கேள்செம் பருத்
தியினிலைச்சாறு வார்த்து மூன்று நாள்
நன்னயத்துடனே யரைத்தேயதை
நற்று மண்ணின் குகைதனில் வைத்துமே
பின்னுங்கேள் முருங்கையிலைச் சாறதைப்
பிசகிடாமலோர் சீலையிலூட்டிடே". (ஞானசூ)

"ஊட்டியே யந்தச் சிலையை யக்குகை
யொக்க மூடியதின் மேலறுசில
நாட்டமாகவே யிட்டலி போலிட்டு
நல்ல வெய்யினிலே வைத்துலர்த்தி
காட்டெருவை யடுக்கிக் குழியிலே
கடுக வைத்துக் கெசபுடந்தானதுப்
போட்டெடுத்துப் பதனமதாகவே
புதுமையாகவும் வைத்திடுமேலுமே". (ராகுரி)

"மேலுஞ் சொல்வேன் சிறு பயறத்தனை
வெற்றிலை ரசந்தனிலே கொண்டிட
வோலஞ் செய்யு மிநமலுஞ் சேற்றும
முடனே நிற்கும் வெங்காய ரசத்தினில்
நாலு நாளது கொண்டிடு(டஇ)ருமலும்
நாடிடாது மஞ்சள் பொடிதன்னிலே
மேலும் நாலுநாட்கொண்டிட மாந்தர்க்கு
மேலின் மூச்சதுமூரை விட்டோடுமே." (ராகுசு)

"ஏகுந் திப்பிலிச் சூரணந் தன்னிலே
இதமாய்க் கொள்ள இருமலும் போகுமே
வாகுள நொச்சியின்னிலைச் சூரணம்
வகையாய்ச் செய்த திற்கூட்டியே யுண்டிட
தேக மீதுற்ற கொடிய விஷசுரஞ்
சேற்றுமசுரந் தீர்ந்திடும் வாழையி
னுகிடும் பழந்தன்னிலே யுண்டிட
யருஞ் சுரம்போ மோர்தன்னிலே யுண்டிடே."(ராகுஎ)

"மோரிலுண்டிடக்குக்கிக் கழிச்சலு
முக்கிய மாஞ்சுரந் தானதுந் தீருமே
சாரமான வெண்ணெயதிற் கொண்டிட
சகல வாந்தி விக்கலதுந் தீருமே
தூருத்தாமணிச் சாற்றினிற் கொண்டிடச்
சுத்த நாலா முறைக் காச்சல் தீருமே
கூறுளமருதம் பட்டைச் சாற்றினிற்
கொள் சலக்கழிச்சலது மோடுமே." (ராகுஅ)

"ஓடிடும் பருத்தி விதைச் சாற்றினி
லூறுதியாய்க் கொள் வெகு மூத்திர மறும்
பாடிய வைத்திய நூல் முறையதைப்
பார்த்துப் பார்த்து வுணர்ந்து நன்முகவே
தேடியே யிதைச் சொன்னது தஞ்சையின்
தீரனுந் துளசேந்திர மகீபதி
யாடவர் சிரோரத்தி னமருளிய
அன்பனுஞ் சரபேந்திரனருளிதே." (ாகூகூ)

(இ-ள்)

சுத்தி செய்த தாளகம் 1பலம் எடுத்துக் கல்வத்திலிட்டு, கருநொச்சியிலை சாறு விட்டு நன்முக (4 ஜாமங்கள்) அரைத்துக் கொள்ளவும். பின்பு செம்பருத்தியிலைச் சாறுவிட்டு 3 நாள் அரைத்து, மண்குகைக்குள் அவ்விழுதை வைக்கவும்.

முருங்கையிலைச் சாற்றை ஒரு சிறிய வெள்ளைத் துணியில் லூட்டவும். இந்தச் சீலையினுல் குகையின் வாயை மூடி 6 தடவை சீலைமண் செய்யவும். அந்த குகையானது ஒரு இட்டிலி பரிமாணமாகும் வரை சீலைமண் செய்தல் வேண்டும். பின்பு, இதை வெயிலில் நன்முகக்காயவைத்து, ஒரு குழியில் காட்டெருவை (தானுகவே உலர்ந்த சாணி) அடுக்கிக் கஜபுடம் இடவும். ஆறியபின் இப்பற்பத்தை யெடுத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு சிறுபயறளவு எடுத்து, வெத்திலைச் சாற்றில் சாப்பிட இருமல், கபம், முதலான ரோகங்கள் உடனே தீரும்.

இருமலுக்கு :—

4 நாளைக்கு வெங்காயச் சாற்றில் சாப்பிட வும்.

மேல் மூச்சு நிற்க :—

4 நாளைக்கு மஞ்சட் பொடியில் சாப்பிடவும்.

இருமலுக்கு :—

திப்பிலிச் சூரணத்திலும் உட்கொள்ளலாம்.

விஷஜ்வரம், சலேஷ்ம ஜ்வரத்திற்கு :—

நொச்சி இலைச் சூரணத்தில் இப்பற்பத்தைச் சாப்பிட வும், ஜ்வரம்தீர வாழைப்பழத்திலும் சாப்பிடலாம்.

வயிற்றுக் கழிச்சலுக்கு :—

மோரில் சாப்பிட மேல்சொன்ன நோயும் ஜ்வரமும் தீரும்.

வாந்தி விக்கல் தீர :—

வெண்ணெயுடன் சாப்பிடவும்.

நாலாம் முறை காய்ச்சலுக்கு (நான்கு நாளைக்கு ஒரு தடவை வரும் ஜ்வரம் அதாவது மலேரியா)

உத்தாமணி (வேலிப்பருத்திச்) சாற்றில் உட்கொள்ளவும்.

சலக்கழிச்சல் தீர :—

மருதம் பட்டைச் சாற்றில் உட்கொள்ளவும்.

வெகு மூத்திர ரோகத்திற்கு :—

பருத்தி விதைச் சாற்றில் கொள்ளவும்.

---

87. சளி, இருமலுக்கு "எண்ணெய்"

"நொச்சிவேர் வெள்ளெருக்கு வழிஞ்சிலும்
நூதனப் பிரட்டான கொஞ்சில் வேரைந்துஞ்
சொச்சமாக வில்லாமற் சரியதாய்
சுக்குமுள்ளி வசம்பு மிளகுமே
இச்சையாகவே கூட்டியே சூரண
மிதமாய்ப் பண்ணியே யெண்ணையுஞ் செய்துதான
உச்சிதத் திப்பிலியது மேன் பொடி
யொக்கத்தூவி யிறக்கியும் வைத்திடே." (உ ா)

"வைத்துக் காலையிலுள்ளுக்களவதாய்
வகையாய்க் கொண்டதை மேலும் பூசிடச்
சுத்தமாக விருமல் சளியுமே
துரத்திடு மிதற்கும் வாயுப்பண்டங்கள்

நத்திடும் புளிதள்ளிடவே வெகு
நாட்கள் சென்ற யிருமலும் போய்விடும்
பத்தியாகவுஞ் செய்திடு நந்திக்குப்
பரமனுருரை செய்த முறையதே.'' (ஊக)

(இ-ள்)

கொச்சி வேர்	வெள்ளெருக்கம்வேர்
அழிஞ்சில்	கொஞ்சிவேர்
பிரட்டான் வேர் *	

இவைகளைச் சம எடை எடுத்துக்கொள்ளவும்.

சுக்கு	உள்ளி
வசம்பு	மிளகு.

இவைகளையும் சம எடை எடுத்து, இரண்டு வகைகளையும் ஒன்று சேர்த்து இடித்து நல்லெண்ணெயுடனே குழப்பி, அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரிக்கவும். இறக்குந்தருவாயில் திப்பிலி (சமனெடை) சூரணத்தைத்தூவிக் கிளறி வைக்கவும்.

இவ்வெண்ணெயைக் காலைவேளையில் உள்ளுக்குக் கொடுத்து, மேலும் பூசிவர, நாட்பட்ட இருமல், சளி இவைகள் தீரும்.

பத்தியம் :—

வாயுபதார்த்தங்களையும், புளியையும் நீக்கவும்.

---

88. இருமலுக்கு 'நாக செந்தூரம்'

'' இரதங்காரீயந் துத்தநாகத்துட
னிதுகள் மூன்றுஞ் சரி நிறைகூட்டியே
உருக்கிச் சட்டியிலிட்டு மஞ்சள் பொடி
யொக்கத் தூவி வறுத்து யிடித்தபின்

* பிரட்டான் வேர் என்பது என்னவென்று விளங்கவில்லை.

கரண்டி தன்னிலிட்டுத் தேய்த்துத் தேய்த்ததைக்
கருத்ததாக வறுக்கச் செந்தூரமாம்
அருமையாக யெடுத்ததைப் பத்திர
மாக வைத்ததைச் செய்வி தங் கேட்டிடே.'' (உஉ)

'' வி தமுங் கேளினி காலமுந் தோற்றின
வி டாதியின் வலுவுங் கொண்டு காலையிற்
பதமறிந்திரண்டு மூன்று நான்கைகந்து
பணவெடை யெடுத்தே தேனில் மண்டல
மதுவுங் கொள்ளரை மண்டலமாவது
வண்மையாய்க் கொள்ளிருமலுந்தீருமே
யிதுவும் நாக செந்தூரமெனவும் பெய
ரின்ப மாஞ்சர பேந்திரனருளிதே.'' (எஉ)

(இ-ள்)

சுத்திசெய்த		பாதரஸம்
,,		துத்த நாகம்
,,		காரீயம்.

இம்மூன்றையும் சரி எடை எடுத்து, ஒரு புதுச்சட்டியி லிட்டு, உருகி வருகையில் மஞ்சள் பொடியைச் சிறுகச்சிறுகத் தூவி வறுக்கவும். இதைப்பின்பு கல்லுரலிலிட்டு இடித்துக் கொண்டு, ஒரு கரண்டியில் போட்டு நன்றாக வறுக்கவும். சிவப்பான சிந்தூரமாகும்.

காலைநேரங்களில் நோயின் பலத்திற்குத் தக்கபடி 2, 3, 4, அல்லது 5, பணவெடை சிந்தூரத்தைத் தேனிலுட்கொள்ள வும். ஒருமண்டலமோ (40நாட்கள்) அல்லது அரைமண்ட லமோ உசிதம்போல் சாப்பிடவும், இருமல் தீரும்.

---

89. இருமல், இரைப்புக்கு 'ஏலாதிச் சூரணம்'

ஏலமஞ்சுயவட்சார மஞ்சுட
னிலவங்கமஞ்சு திப்பிலி நாலுமே
கோலச் சுக்கது மூன்று மிளகது
கொள்ளிரண்டு பங்குபிது வல்லாமற்

ஓலத்தாளிசபத்திரி வெண்காரஞ்
செப்பிரண்டும் வகைக் கொருபங்குதாய்
சோலிசெய்யாதரைத்து வடிக்கட்டி
சுத்தமான சர்க்கரையுமதே.'' (உாசு)

'' சர்க்கரையது முப்பத்திரண்டுமே
தானே கூட்டிக் கலந்ததிகாலையி
லுருக்கமாக வெருகடிதூளதி
லொக்கத் தேனது மாகுதலிஞ்சிச் சாறு
திருத்தமாகவே கூட்டியே காலையிற்
றின்னிடு மரைமண்டலந் தன்னிலே
வருத்தமான யிருமலிரைப்பது
மற்றிடு முனிவோர்களருளிதே.'' (உாருி)

(இ-ள்)

ஏலக்காய்	5 பங்கு
எவச்சாரம்	5 பங்கு
கிராம்பு	5 ,,
திப்பிலி	4 ,,
சுக்கு	3 ,,
மிளகு	2 ,,
தாளீசபத்திரி	1 ,,
எண்ணெய் வெங்காரம்	1 ,,

இவைகளை உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திர காயஞ் செய்து சர்க்கரை 32 பலம் கூடப்போட்டுக் கலந்து வைத்துக் கொண்டு, காலை வேளைகளில் ஒரு வெருகடித்தூளைத் (மூவிரல்கொண்ட அளவு) தேனிலோ, இஞ்சிச் சாற்றிலோ, 20 நாளைக்கு உட்கொள்ளவும். இருமல், இரைப்பு, முதலியவை தீரும்.

90. இருமல், சூல, இரைப்பு, கோழை, இளைப்பு, சுவாசகாசம் முதலான ரோகங்களுக் கும் திரி தோஷ கோபத்தாலுண்டான நோய் களுக்கும் 'அரிதாரப் புகை'

பொன்னரிதாரம் வராகனெடையொன்று
புனிதமா மணத்தக்காளிச் சாற்றை விட்
டுன்னதையரைத்து மைகள் போலவே
யளவதாகவு மாறுவிரற்கெடை
யுன்னிதச் சீலதனிற் சவுக்கமா
யொன்றிரண்டு மூன்று நாலுமஞ்சுமே
நன்னயத்துடனே கிழித்தேயதில்
நாட்டமாகவு மூட்டிடுவுண்மையே (உாசு)

ஊட்டியூட்டி யுணத்தி யுணத்தியே
யோரேழுவிசை யானபின் வைத்துக் கொள்
சாட்டிய பித்தங்களான சரீரமுந்
தானென்ரு வரிதாரம் வராகனு
மேட்டிமை யெலுமிச்சம் பழச்சாற்றை
விட்டரைத்து முன் சொன்னபடியுமே
நாட்டமாக யேழுவிசை தானுமே
நயத்துடனுணத்தி யதைவைத்திடே''. (உாள)

''வைத்துக் கொள்ளிருமலுமிரத்தமும்
வழலையும் விழும் நோயதற்குச் சொல்வேன்
சவத்துவப் பொன்னரிதாரந் தன்னிலே
தானே கேளுவராகனெடை யொன்றும்
ஒத்திடு மிளகை வெந்நீர் விட்டரைத்
துப் பிழிந்த ரசத்திற் கலந்துமே
இத்தையு முன் போலேழுவிசை தோய்த்து
யின்பமாயுணத்தி வைபதனமே''. (உாஅ)

''பதனமாகவே மூன்று விதமுள்ள
பஞ்சுச் சீலை தனையடையாளமாய்
விதமுடன் முன்(ன)ஞ் சொலலிய பதத்தி(ல்)
லியாதியைக் கருவாக வறிந்துமே

சதமதாம் பசும்பாலு முக்காற் படித்
தானே கொண்டொரு சுங்கான் கழியிலே
அதன மாவிலாமலற் கால்துட்டிடை
யதிற் கிழித்துப் புகையுங் குடித்திடே''. (உாகூ)

''குடித்திடிப் படிக்காலைக்குமந்திக்கும்
கொண்டிடு மறுநாள் காலரைக் காலும்
வடிப்பமான முன் சீலையிலே கிழி
வாவின் பால் குடித்தே புகை கொண்டிடு
நிடத்துடன் மூன்று நாளரைத்துட்டிடைச்
சீலைதன்னிற் கிழித்துத் தணலிட்டு
மிடுக்குடன் புகை யுண்டி டிந்தப்படி
மேன்மையாய் மூன்று நான்கைந்து நாளுமே''. (உாப)

''ஐந்தேயாறு யேழெட் டொன்பது பத்து
மதிகமாய்ப் பதினைந்து நாள்மட்டுமே
யிந்த நற்புகையுங் குணங் கண்டதே
யிதமுள புகையவிடு வட்சிணம்
சந்தவாதசிலேத்துமப் பித்தத்தின்
சரீரக் கூறறிந்தே துணியிற் கிழி
விந்தையா முருங்கையிலைப் பிஞ்சதும்
விரும்புவாய் நற்றுவரம் பருப்புமே''. (உகக)

பருப்புங் கூட்டிடுவப்புப்புளியது
பார்த்திடாதே கண்ணுலே பசுவின் பா
லுரிசையாகிய நெய்யும் நிரம்பவே
யுண்டு பாரிந்த மூன்றுவிதமுள்ள
இருமலீளை யிரைப்புடன் கோழையு
மிளைப்புடன் சுவாச காசமுமற்றிடுந்
திருநடமிடுந் தென்றஞ்சை மாநகர்
தீரனுஞ் சரபேந்திரனருளிதே''. (உகஉ)

(இ-ள்)

சுத்திசெய்த தாளகம் 1 வராகனெடை எடுத்து ஒரு கல்வத்திலிட்டு மணத்தக்காளிச்சாறு விட்டு நன்றாக மையாகும் படி அரைத்து வைத்துக்கொள்ளவும்.

6 விரற்கெடை அகலமுள்ளதும் ஒருசாண் நீளமானது முள்ள ஒரு வெள்ளீத்துணியை 5 பாகங்களாக கிழித்து அவைகளை மேலே சொன்ன தாளக விழுதில் தோய்த்துத் தோய்த்து உலரவைக்கவும். இவ்வாறு 7 தடவை செய்யவும் இது வாதநோய்களுக்கு உபயோகப்படும்.

வேறொரு துணியில் 1 வராகனிடை சுத்தி செய்த தாளகத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து முன்சொன்னபடி 7 தடவை அதில் தோய்த்துக் காயவைக்கவும். பித்த ரோகங்களுக்கு இது உதவும்.

மற்றொரு ஒரு சாண் நீள அகலமுள்ள துணியை யெடுத்துச் சுத்தி செய்த தாளகம் 1 வராகனிடையும், மிளகு ஒரு வராகனிடையும் எடுத்து வெந்நீர் விட்டு நன்றாக, அரைத்துப் பிழிந்த ரஸத்தில் தோய்க்கவும். இவ்வாறு 7 தடவை தோய்த்துக் காயவைக்கவும். இது இருமல், இரத்தம் கோழை முதலான ரோகங்களுக்குப் பயன்படும்.

இம்மாதிரி மேற்சொன்ன 3 வகைத் துணிகளிலே ஏதேனு மொன்றை வியாதிக்குத்தக்கபடி எடுத்து ¾ படி பசுவின்பாலிலக் குடித்த பின், இதில் கால் துட்டெடை கிழித்து ஒரு சுக்கான் கழியில் சுற்றிக் கொளுத்திப் புகையை உட்கொள்ளவும். இம்மாதிரி காலையிலும், மாலையிலும் சாப்பிடவும். மறுநாள் பசுவின் பால் குடித்துவிட்டு, காலையரைக்கால் துட்டெடை துணி கிழித்துப், புகையை முன் போல் உட்கொள்ளவும். மூன்றும் நாளன்று, ½ துட்டெடை, துணியைக் கிழித்து தணலில் இட்டு, அதிலிருந்து எழும்பும் புகையை உட்கொள்ளவும். 3 அல்லது 4 முதல் 5, 6, 7, 8, 9, 10, நாட்களுக்கு இவ்வாறு சாப்பிடவும். அதிகபட்சம் 15 நாளைக்கு உபயோகிக்கவும். வாதபித்த ச்லேஷ்மத்தின் பலத்தை யறிந்து அரைக்கால் துட்டெடை துணியைக் கிழித்துக் கொள்ளவும்.

பத்தியம் :—

முருங்கை இலை, முருங்கைப் பிஞ்சு. துவரம் பருப்பு முதலியவைகளைச் சேர்த்துக்கொண்டு, உப்பையும், புளியையும் விலக்கவும். பசுவின் பால், நெய் முதலியவைகளை வேண்டிய அளவு சாப்பிடவும்.

தீரும் நோய்கள் :—

3 விததோஷங்களினாலும் உண்டான, சூலை, இளைப்பு கோழை இரைப்பு, சுவாசகாசம் முதலியவை.

---

91. ச்லேஷ்மத்துக்கு நஸ்யம்

"கடப்பங்கொட்டைப் பழச்சாற்றிலாவது
கன்னியர் முலைப்பாலினிலாவது
வடிப்பமாக வரைத்துக் கலக்கியே
வண்மையாயந்தி காலையுந்தானுமே
திடத்துடன் மூன்றுதுள்ளி-நசியஞ்செய்
சேத்துமமற்றிடுமேயந்த நேரமே
மிடுக்குளக்களிறுமீதிற் பவனிசெய்
விபுவுணர்ந்த முறையிதுவாகுமே". (கஉ-ஈ)

(இ-ள்)

கடப்பம் விதையை எலுமிச்சம்பழச் சாற்றிலாவது அல்லது முலைப்பாலிலாவது அரைத்துக் கலக்கி காலையிலும், மாலையிலும், 3 துளிகள் வீதம் இரு நாசிகளிலும் விட்டு நஸ்யம் செய்ய ச்லேஷ்மம் (கபம்) அக்கணத்திலேயே தீரும்.

குறிப்பு :—

நசியம் இடும் விதம் :—

ரோகியை மல்லாந்து படுக்கச்செய்து தலையைச் சிறிது தூக்கச்சொல்லி (முன்புறமாக நிமிர்த்தி) அவனது மூக்கில் எண்ணெய் ஊறுத காகிதத்தை புனல் மாதிரி செய்து, அடியில் துவாரமிட்டுச் சொருகவும். அதில் வேண்டிய திரவத்தைவிட்டு, வைத்தியன் தனது வாயினல், புனலிலுள்ள மருந்து ரோகியின் நாசிக்குள் செல்லும்படியாக, நிதானமாக ஊதவும். புரை ஏறும்படி வேகமாக ஊதக்கூடாது. இவ்வாறு செய்தபின் ரோகியை அப்படியே சிறிது நேரம் இருக்கச் செய்யவும்.

---

92. சிலேட்டும விகாரங்களுக்குத் 'தூதுவளை யாதி நெய்'

"தூதுவளை பிரமிசங்கு செம்முள்ளி
யுமாடாதொடை நொச்சி
ஓது குப்பைமேனியுந் தேள்கொடுக்கி
வேலிப்பருத்தியுடன் பிரண்டை
வாதமறுமின்புரல் பொடுதலை சாரடை
யும்பிருவடிப்புஞ் செம்பை
கோதில் கையாந்தகரை போரும் பிலியி
னிலை பதினேழ்(கூ)ட்டிக் கொள்ளே. (உகச)

"கூட்டுவொருவகைக்கரைச்சேர் சாறும்
பசுவின் நெய் குணமதாக
தேட்ட முடனிரண்டுசேர் பசுவின்பால்
நாலுசேர் சேர்த்துக்கொண்டு
வாட்டமிலாப் பெருமருந்து வமுக்கிராக்
கொடிவேலி வட்டத் திருப்பி
நாட்டமுடனிங்கால்வேர் திப்பிலியும்
விழாலரிசி நல்லிந்துப்பே. (உகரு)

"இந்துப்புப் பெருங்காயமத்தித்
திப்பிலியுஞ் சாதிக்காய் கிராம்பு
விந்தைத் தான்றிக்காய் நெல்லிமுள்ளிகற்
கடகசிங்கி வித்தக்கடுக்காய்
சந்தவரிதாரமுடன் சிறுமூலஞ்
சிறு தேக்கு சதகுப்பைதான்
சுந்தரமதாந்தேவதார மனைசிலை
மிளகுஞ் சுக்குத்தானே." (உகசு)

"தானே கருஞ்சீரகத்தோடேழுவகை
மருந்தது வுஞ் சரியதாக
ஈனமிலாக் குழம்பதுவும் நாழிக்குக்
கழஞ்சரைத்துமேகரைத்து

உள்(ன)மிலாவடுப்பேற்றி யெரித்துப் பதத்
தினில் வடித்து மோர்நாட்காலே
பானமது செய் நாலுகாசிடையுஞ்
சிலேட்டு மங்கள் பறக்குந்தானே." (உகள)

(இ-ள்)

தூதுவளேவேர் — பிரமி
சங்கு — செம்மூள்ளி
ஆடாதோடை — நொச்சி
குப்பைமேனி — தேள்கொடுக்கு
வேலிப்பருத்தி — பிரண்டை
இம்பூராவேர் — பொடுதலே
சாரடை — செருப்படி
செம்பை — * பொரும்பிலி
கையாந்தகரை

ஆக இப்பதினேழுவகை இலைகளின் சாறும் வகைக்கு ½ சேர்

பசுவின் நெய் — 2 சேர்
பசுவின் பால் — 4 சேர்

இவைகளே யொன்றுகலந்து கொண்டு,

பெருமருந்து வேர் — அமுக்கிராக்கிழங்கு
கொடிவேலி வேர் — வட்டத்திருப்பி வேர்
திப்பிலி — வீழாலரிசி
இந்துப்பு — பெருங்காயம்
யானைத்திப்பிலி — சாதிக்காய்
கிராம்பு — தான்றிக்காய்தோல்
நெல்லிவற்றல் — கற்கடசிங்கி
கடுக்காய்த்தோல் — சுத்திசெய்த தாளகம்
சிறுமூலம் (திப்பிலி) — சிறுதேக்கு
சதகுப்பை — தேவதாரு
சுத்திசெய்த மனோசிலே — மிளகு
சுக்கு — கருஞ்சீரகம்

* பெரும்பிலி என்பது சூழலாவாரை

இச்சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து, ஏதேனும் ஒருசாறு விட்டரைத்து, சாறு கலந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்நெய்யில் 4 வராகனெடை வீதம் தினம் ஒருவேளைச் சாப்பிடச், ச்லேஷ்மங்கள் தீரும்.

குறிப்பு :—

திப்பிலியை இருமுறை கூறப்பட்டுள்ளதால் ½ பங்கு எடுத்துக் கொள்ளவும்.

---

93. ச்லேஷ்மத்திற்குச் சூரணம்

"தேத்தான் கொட்டையைச் சுட்டு அரைத்து
மதினுடனே தான் சீரகத்தோ
டேத்தத்திப்பிலி யேலமிவை மூன்றும்
வறுத்துப் பொடியே தான் செய்து
வாய்த்த கொம்புத் தேனதினிற் குழைத்து
விழுங்கிடத் தீரும் வளருஞ் சேற்றும
மாத்தி வடுஞ் சிவகிருபை தன்னாலே
தஞ்சை விபு வருளிதாமே". (உகஅ)

(இ-ள்)

தேத்தான் கொட்டையின்மேல் தோலை நீக்கி அடுப்பிலிட்டுச் சுட்டு, அதனுடன்,

சீரகம் திப்பிலி
ஏலக்காய்

இம்மூன்றையும் சமனிடை எடுத்துப் பொன் வறுவலாக வறுத்து எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, வெருகடிதூள் (மூவிரல் கொள்ளுமளவு) எடுத்துத் தேன்கலந்து சாப்பிடச் ச்லேஷ்மங்கள் தீரும்.

---

94. சேத்துமத்திற்கு (உருண்டை)

''தூதுவேளை சங்காடா தோடை கண்-
டங்கத்திரியுந் துளசியைந்துஞ்
சாதகப் பிட்டவியலாயவித்துப்
பிழிந்தச் சாற்றிற்றூனே சுக்கு
மீதுடன் திப்பிலி கடுக்காய் மிளகிவை
நான்கும் வறுத்துமே முன் சாறுவிட்
டோதுமம்மிதனில் மைப்போல யரைத்
துப் பாக்களவுமுருட்டித் தானே''- (உகக)

''உருட்டி நெல்லின் பொரிமாவிலே புரட்
டிநன்றாக வுணத்தி வைத்து
திருத்த மூள்ள வாய்தன்னிலடக்கச்
சேத்து மமுறியுந் தேனிற்றூனே
உரத்திடுண்டை தனிலொன்றைப் பொடித்துக்
குழப்பிக் கொள்ளவுடனே சேத்தும
மருட்பிடித்து வுரை விட்டுப் போமிது
வந்த ப்பாமல் வளமாய்ச் செய்யே''. (உஉ)

(இ-ள்)

தூதுவேளை இலை	சங்கம் இலை
ஆடாதோடை இலை	கண்டங்கத்திரி இலை
துளசி இலை	

இவைகளைச் சமனெடை எடுத்துக்கொள்ளவும். ஒரு சட்டியில் அரைவாசி ஜலம் விட்டு, அதன் வாயில் ஒரு வெள்ளைத் துணியினுல் வேடுகட்டி, அதன்மேல் மேற்சொன்ன இலைகளைவைத்து மேலே ஒரு பாத்திரத்தினுல் மூடிப் புட்டவியலாக அவிக்கவும், பின்பு அந்தப் பச்சிலைகளைப் பிழிந்து, அச் சாறுடன்,

சுக்கு	திப்பிலி
கடுக்காய்த் தோல்	மிளகு

இந்நான்கு சரக்குகளையும் பொன் வறுவலாக வறுத்து வஸ்திர காயஞ் செய்து மேற் சாறு விட்டு அம்மியின்மேல்

வைத்து மைப்போலரைத்துப், பாக்கள வெடுத்துக் கொண்டு, நெல்லுப் பொரி மாவில் புரட்டி வாயிலடக்கச் ச்லேஷ்மம் முறியும்.

அல்லது தேனில் ஒரு உருண்டையைப் பொடித்துக் குழைத்துச் சாப்பிடக் கபம் தீரும்

---

95. ச்லேஷ்ம விகாரங்களுக்குக் 'கடுகாதி கிருதம்'

" கடுகு வெள்ளை வெங்காயஞ் சிற்ற
மட்டியுடனே மிளகதுவுங் கூட
திடமுடைய பேராமட்டி கருஞ் சீர(க)ம்
வெளுத்த பிசின் சிறு காஞ்சொறி
யுடனே வசுவாசியிந்த வொன்பதை
யுஞ் சரியாகவுந்தான் கொண்டு
அடவியின் தூதுவளைச்சாறு விட்
டரைத்து நெய் நாழியதிற்புகட்டே". (உஉக)

" புகட்டியடுப்பினிலேற்றி யெரித்து
வடித்தோர் கரண்டி பிசகிடாமல்
வகையுடனே காலையந்தி கொள்ளத
னின் கடுகதுவும் வயணமாக
துகையுடனே முக்கழஞ்சது கொள் சிலேத்ம
விகாரமறுஞ்சுகமாய்த்தானே
சகமதனிற் கீர்த்தி பெருஞ் சரபோசி
மகாராசன் சாற்றும் வாறே". (உஉஉ)

(இ-ள்)

கடுகு	வெள்ளை வெங்காயம்
சிற்றமட்டி	மிளகு
பேராமட்டி	கருஞ்சீரகம்
வெளிச்சைப்பிசின்	சிறுகாஞ்சொரிவேர்
ஜாதிபத்திரி	

இந்த ஒன்பது சரக்குகளையும் சரி எடை எடுத்து, தூது வளைச்சாறு விட்டரைத்து, 1 படி பசுவின் நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யில் ஒரு கரண்டி (வராகனெடை) வீதம் காலையிலும் மாலையிலுமாக இருவேளை உட்கொண்டு, அதன் கடுகில் 3 கழஞ்சு வீதம் உட்கொள்ளச் சீலேஷ்மம் தீரும்.

---

96. பஞ்சகுன்மம், சயரோகமூளை, இருமல், விக்கல், முதலானவைகளுக்குக் 'கண்டங் கத்தரியாதி லேகியம்'

"கண்டங்கத்தரி வேரும் பலம்நூறு
மத்துடனே கடுக்காய் நூறு
உண்டிடுநீர் நான்கு மரக்கால் விட்டுக்
காய்ச்சி யிறக்கோர் மரக்கால்
பண்டுள வெல்லமதனி(ல்) நூறுபலம்
போட்டு நல்ல பக்குவமாகச்
சுண்டிவரும் லேகிய பதம் பார்த்ததனிற்
போடும் வகை சொல்லுவேனே". (உஉக)

"சொல்லுவேன் தேனுமறுபலமிளகு
திப்பிலியுஞ் சுக்கிம்மூன்றுஞ்
சல்லயமிலாமல் வகையொன்றுக்கு
மூன்று பலந்தானேயேலம்
நல்ல யிலவங்கபட்டை யிலவங்கப்
பத்திரியும் நாகத்திப்பிலி.
வல்லமையாயின்னுலும் வகைக்கு மொரு
பலமதுவுமாகுந்தானே". (உஉச)

"ஆக யேழுவகைமருந்தும் பொடிசெய்து
போட்டு கிண்டியதை யிறக்கி
தேகமதின் கூறறிந்து காலையந்தி
கொள்ளவு மேதிரும் வியாதி

லேகபஞ்சகுன்மங்கபரோக
மீளா யிருமல் விக்கலொடு
மேகவிசை முதலாகத் தீர்ந்துவிடுங்
கும்பமுனி யியம்பும் வாறே". (உஉடு)

(இ-ள்)

கண்டங்கத்திரிவேர் 100 பலம்
கடுக்காய் 100 ,,

இவைகளை யொன்றிரண்டாக விடித்து, இவற்றுடன் 4 மரக்கால் ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாக வற்றக் காய்ச்சவும். இக் கஷாயத்தை வடிக்கட்டி அதனுடன் 100 பலம் பழயவெல்லம் போட்டுப் பாகு காய்ச்சிக் கொள்ளவும். பின்பு

மிளகு திப்பிலி
சுக்கு

இவைகள் வகைக்கு 3 பலம்

ஏலக்காய் இலவங்கப்பட்டை
இலவங்கப்பத்திரி திப்பிலி

இவைகள் வகைக்கு 1 பலமும் எடுத்து, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து பாகில் போட்டுத் தேன் 6 பலமும் விட்டுக் கிண்டி இறக்கிக் கொள்ளவும்.

தேகத்தின் பலமறிந்து தினம் காலையிலும், மாலையிலும் சாப்பிட 5 வித குன்மங்கள், கபரோகம், ஈளை, இருமல், விக்கல், மேகம் முதலிய ரோகங்கள் தீரும்.

97. அக்கினி மந்தம், காசசுவாசம், வறட்சி, குன்மம், உள்ளெரிவு, ஈரல்குலையெரிவு, பீலிகை, சேத்துமபித்த விகாரங்களுக்குச் சூரணம்

"சாதிக்காயும் வெள்ளிலோத்திரமு
மிலவங்கந்தக்கோலத்தோ
டோதுசெவ்வியமிளகுங் கற்பூரஞ்
சர்(க்)கரையினுடனுகப்பூ
வாதியந்தமாயொன்பது வகை மருந்துஞ்
சரியா யரைத்துத் தேனில்
பேதமிலா நெய்யிரண்டிலொன்றதிலே
கலந்து குழப்பியுங் கொள்வாயே. (உஉசு)

கொள்ளலக்கினியின் மந்தங்காசசுவா
சம் வறட்சி குன்மத்தோடே
உள்ளெரிவினுடனீரல் குலையெரிவும்
பீலிகையினுடனே சேத்தும
முள்ளவிகாரங்கள் சேத்தும விகாரங்கள்
கண்டத்திலுற்ற நோய்கள்
தள்ளியூர்விட்டுக் கதிர் கண்டபனி
யென வோடுஞ் சகத்திற்றனே (உஉஎ)

(இ-ள்)

சாதிக்காய்	வெள்ளிலோத்திப் பட்டை
கிராம்பு	தக்கோலம்
செவ்வியம்	மிளகு
கர்ப்பூரம்	சர்க்கரை
சிறு நாகப்பூ	

இந்த ஒன்பது வகைச்சரக் குகளையும் சமனெடை எடுத்துச் சூரணித்து, வஸ்திரகாயம் செய்துகொண்டு, தேனிலே அல்லது நெய்யிலோ குழைத்துச் சாப்பிடவும். இதனால் அக்கினிமந்தம், காசசுவாசம், வறட்சி, குன்மம், உள்ளெரிவு (தேகத்தின் அனத்தல்), ஈரல் குலை எரிவு, பீலிகைக்கட்டி, கபத்தினாலுண்டான விகாரங்கள், கழுத்து வியாதிகள் முதலியவை தீரும்.

98. கபரோகம், சுவாசகாசம், சூலைக்குத் 'தாளிசபத்திரிச் சூரணம்'

சுத்தமுள்ள தாளிசபத்திரி நறுக்கு
மூலமுடன் சுக்குத் திப்பிலி
கொத்தம(ல்)லி சிறுநாகப்பூ செ(வ்)வியங்
கடுக்காயுங் கூகை நீரு
முத்தவில்வ வேர் நெருஞ்சில் வேரிலவங்
கப்பட்டையோடு கிராம்பு
நத்து முந்திரிப் பழந்திப்பிலி மூலங்
கருஞ் சீர(க)ம் நற்சாதிக்காய். (உஉஅ)

சாதிக்காய் கற்கடகசிங்கிலவங்கப்
பத்திரி சடாமாஞ்சேலஞ்
சாதிபத்திரி பேரீச்சம் பழஞ்சீரக
மிளகு தானுங்கிராம்பு
மாதனீயோடுடனிருபத்தாறு வகை
மருந்து மொவ்வோர் வகைக்குத் தானே
ஓதிய சொற்படியுமரைப்பலங் கூட்டிச்
சூரணங்களுஞ் செய்வாயே. (உஉக)

சூரணஞ் செய்தே யதையும் வடிக்கட்டி
யெலுமிச்சைச் சுத்தச் சாற்றில்
நேருடனே பிசறியதை நிழலுணத்த
லாயுணத்தி நீயுங்கேளு
சாரமுள்ள யிஞ்சிச் சாறதனீ விட்டுப்
பிசறி நிழடனிலுணத்திச்
சூரணங்கள் நின்ற நிறை சீனிச் சர்(க்)
கரைகலந்து சொல்லக் கேளே''. (உஉஎ)

''சொல்லக் கேளுடம்பு பலன் வியாதி குணங்
காலமறிந்தும் மதனில்
சல்லயமில்லாம லெடுத்தே காலை
யந்தி யிலுந்தானே புணரை

அல்லல் செய்யுங் கபரோகஞ்சுவாச
காசமீளையதுவுந் தீரும்
பல்லோர்கள் புகழ் தஞ்சை நகராளுஞ்
சரபேந்திரன் பகரும் வாறே'' (உகக)

(இ–ள்)

தாளீசபத்திரி	கண்டத்திப்பிலி
சுக்கு	திப்பிலி
கொத்தமல்லி விதை	சிறு நாகப்பூ
செவ்வியம்	கடுக்காய்த் தோல்
கூகை நீர்	வில்வவேர்க் கட்டை
நெரிஞ்சில் வேர்	இலவங்கப் பட்டை
கிராம்பு	திராக்ஷைப்பழம்
திப்பிலி மூலம்	கருஞ்சீரகம்
சாதிக்காய்	கற்கடகசிங்கி
இலவங்கப் பத்திரி	சடாமாஞ்சில்
ஏலக்காய்	சாதிப்பத்திரி
பேரீச்சம் பழம்	சீரகம்
மிளகு	மாதளை ஓடு

இச்சரக்குகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இச் சூரணத்தை எலுமிச்சம் பழச்சாறுவிட்டுப் பிசரிக் கொண்டு நிழலில் உலர்த்தவும், மறுநாள் இஞ்சிச்சாறு விட்டுப் பிசரிக்கொண்டு, நிழல்தனில் உலர்த்தவும். பின்பு, சூரணத் திற்குச்சரி, நிறை சர்க்கரை கலந்து வைத்துக் கொள்ளவும். இச்சூரணத்தில் ஒரு வெருகடி யளவு காலையிலும் மாலையி லும் உட்கொள்ளக் கபரோகம், சுவாசகாசம், ஈளை முதலி யவை தீரும்.

குறிப்பு :—

கண்டத்திப்பிலி இருதடவை வருவதை கவனிக்க ஆகவே 2 பங்கு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

99. சேத்துமத்திற்கு இரண்டுமுறையவுடதம்

"துவற்கடுக்காய் பலமொன்றுந் தானிக்காய்
பல மொன்றுந் தூக்கிக்கொண்டு
தவிப்பிலாநெற் பொரியுங் கூட்டிப்பொடி
செய்து மதைதற்றூனே தேனி
லுவப்புடனே குழப்பியந்தி காலியுமே
கொள்சேத்துமமுடனே தீரும்
நவகண்டங்கத்தரி சமூலந்தூ
ளாப்பாலில்நயமாய்க் கொள்ளே." (உங உ)

(இ-ள்)

கடுக்காய்த்தோல்	1 பலம்
தான்றிக்காய்தோல்	,,
நெல்பொரி	,,

இவைகளை யொன்றுகூட்டிக் கல்லுரலிலிட்டிடுத்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு தேனில் குழைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

(2) கண்டங்கத்திரியைச் சமூலமாகக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பசுவின் பாலிலுட்கொள்ளச் சிலேஷ்மம் தீரும்.

---

100. இலவப்பு, இருமலுக்குத் 'தூதுவளம் பழவு(ரு)ண்டை

"தூதுவளம் பழமு முப்பது விரையு
மதினுடைய தோலுந்தானே
பேதகமிலாமலதைப் பொரித்துவைத்து
நன்முகப் பின்னுந்தானே

சீதமிகுஞ் சீரகந்திப்பிலி மிளகு
இராம்பாகச் செப்பும் நான்கி
லோதும் வகை யொன்றினுக்கு நிறையாக
வராகனிடை யொன்று கூட்டே". (உங-ங)

"கூட்டிடு தேற்றுன்கொட்டைத்தோல் சீவி
யே யதனுக்குள்ளிருக்கும்
நாட்டமுள்ள விதையதனில் நாலுவரா
கனிடை வைத்து நயமாய்த்தானே
போட்டு சட்டிதனிற் பொரித்து யிவ்வாறும்
நன்றுகப்பொடியே செய்து
தாட்டிகமாந் தேனே விட்டு நன்றுக
வரைத்து மதைத்தானுங்கேளே. (உங-ச)

"தானுங்கேள் தேற்றுன்காயளவுருண்டை
செய்துமதைத்தானேயுந்த
ஊனமிலாவாய்தனிலடக்கி யந்தச்
சாரமதையுள்ளினுக்கு
ஈன்மிகு மிரைப்புடனே யிருமலுந்தீர்ந்
தே நல்லயிதமாந்தேக
மான்பான தஞ்சையில் வாழ் சரபேந்திர
பூபதியின் வசனமிதே". (உங-ஞ)

(இ-ள்)

தூதுவளப்பழ விதை 30
அதன் மேல்தோல் (பொரித்தது)
சீரகம் திப்பிலி
மிளகு இராம்பு

இந்நான்கு சரக்குகளும் வகையொன்றுக்கு 1 வராக னெடை வீதம் எடுத்துக் கொள்ளவும்.

சீவிய தேற்றுங்கொட்டை 4 வராகனெடையும் எடுத்து, எல்லாவற்றையும் ஒரு சட்டியிலிட்டு பொன் வறுவலாக வறுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். பின்பு, வேண்டிய அளவு சுத்தத் தேனே விட்டுப் பிசைந்து தேற்றுங்கொட்டைப் பிரமாணம் உருண்டைகளாகச் செய்து, தினம் ஒரு உருண்டைவீதம் வாயிலடக்கிக்

கொண்டு உமிழ்நீரை உட் கொள்ள, இரைப்பு, இருமல் முதலியவை தீரும்.

---

101. இருமல் ரோத்துமத்திற்குக் குடிநீர்

"சுந்தர வெண்காரமதைப் பொரித்துப்
பாசித்தண்ணீர் துரிசெடுத்து
வந்தப் பழந்தண்ணீரிற் கலக்கி மூன்றே
நாளும் வகையாய்க் காலை
யுந்திரமாய்க் கொள்ளிருமல் சேத்துமமு
மேயகன்று மோடுந்தானே
தந்திரமா மருந்திதையுந் தஞ்சை
சரபோசி மன்னன் சாற்றும் வாறே". (உகூ)

(இ-ள்)

வெங்காரத்தைப் பொரித்துப், பாசித்தண்ணீரில் கலக்கி 3 நாளைக்குக், காலை நேரங்களில் உட்கொள்ளச் சிலேஷ்மம் தீரும்.

---

102. இருமலுக்கு மருந்து

"நந்தனச் செவ்வகத்திப்பூ விடித்து ரச
மதையெடுத்து நலமாய்த் தானே
சந்தமிகுந் திப்பிலியைப் பொடி செய்து
ரசத்துடனே தான் கலக்கி
பந்தமுடனதி காலைதனில் மூன்று
நாட் கொள்ளப் பாரிதற்கு
வந்த யிருமலுமகன்று குணமாகு
மிதுவும் நல்ல மருந்து தானே" (உகஎ)

(இ-ள்)

செவ்வகத்திப் புஷ்பத்தைக் கல்லுரலிலிட்டிடித்துச் சாறு பிழிந்து, திப்பிலியைத்தூள் செய்து அதனுடன் கலக்கி 3 நாளைக்கு அதிகாலையில் உட்கொள்ள, இருமல் குணமாகும்.

---

103. இருமலுக்குச் சூரணம்

''ஏலமிலவங்கந் திப்பிலி மிளகு
சுக்குடனே யிந்த வைந்துஞ்
சிலமுடன் சூரணித்துச் சரிசர்க்க
ரையுங்கலந்து தின்று பாரு
காலையந்தி தனிற் பத்து நாடனிலே
யிருமலது கழன்று போகும்
ஞாலமதிற் கீர்த்தி பெற்ற சரபேந்திர
பூபதியும் நவின்றதாமே.'' (உ-ம-அ)

(இ-ள்)

ஏலக்காய்	கிராம்பு
திப்பிலி	மிளகு
சுக்கு	

இச்சரக்குகளைச் சமனெடை எடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்து, சரி எடை சர்க்கரை கூட்டிக் கலந்து, காலையிலும் மாலையிலுமாக 10 நாட்களுக்கு (ஒரு வெருகடிதூள்) சாப்பிட்டுக் கொண்டுவர இருமல் தீரும்.

---

104. இருமல் சேத்துமத்திற்கு 'நிலவிளாச் சூரணம்

''நிலவிளாயிலையதனைச் சூரணித்து
மாடையிடை நிலவாய் மூன்றும்
நலமான மிளகு பொடி மாடையிடை
யொன்றிரண்டும் நவிலக்கேளு
பலமாக மூன்று நாட்கொளு கீரைக்
கறிசோறும் பத்தியந் தான்
சிலுக்கான யிருமலுடன் சேத்துமமு
மற்றுவிடுஞ் செய்து பாரே''. (உ-சூ)

(இ-ள்)

நிலவிளா இலையைக் காயவைத்து இடித்து, வஸ்திர காயஞ் செய்து 1½ வராகனெடை தூளுடன் பிளகுப் பொடி 1½ வராகனெடை சேர்த்து 3 நாள் உட்கொண்டால் இருமலும், கபமும் தீரும்.

பத்தியம் :—

கீரை வகைகளையும், சாதத்தையும் உண்டுவரவும்

குறிப்பு :—

மாடை ½ வராகனெடை

---

105. காசம், கபரோகங்களுக்குச் 'சண்டமாருத லேகியம்'

மலையன் கடுக்காய் நூறு புளித்திடுங்கா
டியதனில்வளமாய்ப் போட்டு
நலத்துடனே யூறவைத்து மெடுத்திரவி
தனில் மூன்று நாளுலர்த்தி
மலையாமல் மூன்று விசை யூறவைத்து
மொன்பது நாள் வணிதமாக
யுலர்த்தி கொட்டைத் தள்ளியுமேற்றோலதையுந்
தராசில் நிறுத்துக் கொள்வாயே. (உசம)

நிறுத்துக் கொண்டன்னிறைக்கு நாலிலொன்று
கல்லுப்பு நீயும் போட்டு
திருத்து பசுவின் குழம்புப் புளிமோர் வார்த்
துமரைத்துச் சிறு நீயிட்டு
யெரித்துமோர் சுண்டினவாறே யிறக்கி
யத்தூளை யெடுத்துலர்த்தி
கருத்த பிளகிந்துப்புமோர்வகைக்கு
மோர் பலமுங் கருத்தாய்க் கூட்டே. (உசக)

கூட்டு கண்டத்திப்பிலித்திப்பிலி மூலஞ்
செவ்விய மூங்கொடி வேலிவேர்,
நாட்டமுள்ள திப்பிலி யிவ்வைந்தில் வகைக்
கைந்து பலம் நயமாய்க் கூட்டி

தேட்டமுள்ள மருந்து மொன்பது வகையுஞ்
சூரணங்கள் செய்து நன்றாய்ப்
போட்டுமு(ன்)னஞ் சொல் கடுக்காய்த் தூளதனிற்
தூவியதும் பொருந்தத்தானே." (உசஉ)

" பொருந்தெலுமிச்சம் பழச்சாறு விட்டுமைதை
மத்தித்துப் புளிதமாக
திருந்து சண்ட மாருத லேகியமென்று
பெயரிதற்குச் செப்பித்தானே
உறைத்திடு தான்றிக்கா(ய்)ப் போலுண்டை செய்து
நாற்பது நாளுங்கொள்காலே
உருக்கமுடன் புளிப்பு கைப்புப் புகையிலையும்
நீக்கியதை யுண்டுபாரே." (உசஊ)

" உண்ணு கரியுப்பை வறுத்து கூட்டிக்
கொள் பால் நெய்யுந் தான் கூட்டு
நண்ணு முருங்கைப் பிஞ்சு வழுதலங்கா
யவரைக்காய் நன்மையாகச்
சண்ணு துவரம்பருப்பு மூளைக்கீரை
தனுடகாயும்,
பண்ணும் வாழைக் கச்சல் கூட்டுகப
காச நோய்பறக்குந்தானே". (உசச)

(இ-ள்)

சுத்தமான முழுக்கடுக்காய் எண்ணிக்கையில் 100 எடுத்து, நன்றுகப் புளித்த காடி (1 படி) விட்டு ஒரு இரவு முழுதும் ஊறவைத்து வெய்யிலில் 3 நாளைக்கு உலர்த்தவும். மறுபடியும் புதுகாடியில் அவைகளையூறவைத்து 3 நாளைக்கு உலர்த்தவும். இப்படி 3 முறை செய்யவும், நன்றுகக் காய்ந்த பின்பு கடுக்காய்களை உடைத்துக் கொட்டைகளை நீக்கியதன் தோலை ஒரு தராசில் போட்டு நிறுத்துக்கொள்ளவும்.

மொத்தநிறைக்கு நாலிலொன்று கல்லுப்புப்போட்டு, தண்ணீர் விடாத புளித்த பசுவின் மோர்விட்டு கடுக்காய்த் தோலையும், கல்லுப்பையும் நன்றுக அரைத்து அம்மோரிலேயே குழப்பி அடுப்பின் மேலேற்றி மோர் சுண்டும் வரை எரிக்கவும். பின்பு அச்சூரணத்தையெடுத்து வெயிலில் உலர்த்தவும், அதன்பின்,

மிளகு இந்துப்பு

இவ்விரண்டும் வகைக்கு ஒருபலமும், இதனுடன்

கண்டத்திப்பிலி திப்பிலி மூலம்
செவ்வியம் கொடி வேலிவேர்
திப்பிலி

இவைகள் வகைக்கு 5 பலமும் எடுத்து உலர்த்திக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, முன் சொல்லிய கடுக் காய்த்தூளுடன் கலந்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து லேகிய பதமாக எடுத்து பத்திரப்படுத்தவும்.

இது 'சண்ட மாருத லேகிய'மாகும். இதில் ஒரு தான் றிக்காயளவெடுத்துத் தினம் காலை வேளையில் மாத்திரம் 40 நாட்கள் உட்கொள்ளவும்.

பத்தியம்:—

புளிப்புப் பதார்த்தங்களையும், கசப்புப் பதார்த்தங்களை யும், புகையிலையையும் நீக்கவும். உப்பை வறுத்துக் கூட்டிக் கொள்ளவும். பசுவின் பால், நெய் வகைகளை வேண்டியவரை கூட்டிக்கொள்ளவும். முருங்கைப் பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, அவரைக்காய், துவரம்பருப்பு, முளைக்கீரை, வாழைக் கச்சல் முதலியவைகளை கூட்டிக்கொள்ளவும்.

குறிப்பு :—

கண்டத்திப்பிலியும் திப்பிலிமூலமும் ஒன்றுதான். ஆகவே அதை இருமடங்கு எடுத்துக் கொள்ளவும்.

---

106. கபரோகமிருமலுக்குச் 'சண்டமாருத லேகியம்'

(வேறு)

"கண்டங் கத்திரி தூதுவளை சங்கு
மிளகு தக்காளியோடே
வண்டுளபமுமாடாதோடை மஞ்சணத்
தியேழுவகையின் சாறு

மிண்டியிடித்தேவகைக்குக் காற்படிச்சாறு
கூட்டி வற்றும் விதமாய்க் காய்ச்சி
யுண்டிடும் பனங்கட்டியஞ்சு பலம்
பொடிசெய்து மொக்கப்போடே.'' (உசடு)

''போட்டு இண்டிக் காற்படியாய் நிற்கையிலே
கண்டுமதிற் போடுங்கற்கம்
வாட்டமிலாத் திப்பிலியுஞ் சிற்றரத்தை
கடுக்காயும் வகை யொன்றுக்கு
கூட்டு பதினேந்து வராகனிடைரவி
தனிற் காயக்குணமாய் வைத்து
நாட்டமுடனிடித்து மதை நே(ர்)த்தியாய்
வடிக்கட்டு நலமாய்த்தானே.'' (உசஉ)

''நலமாகத் தூவியடிப்பற்றுமல்
இண்டியதில் நல்ல தேனுஞ்
சலதாகவுமரைக்கால்படி விட்டுக்
இண்டி பசுதனுட நெய்யு
மலையாமல் மாகாணிவிட்டு இண்டி
தான்றிக்காய் மாத்திரந்தா
னுலவுண்டை செய்து சண்டமாருதத்தின்
லேகிய மெனவுரைக்கலாமே.'' (உசஎ)

''ஆமிதனிலொருண்டை காலிதனி(ற்)
நாற்பது நாளதுவுங்கொள்ளு
நேமமுடன் புளிப்புகைப்புப் புகை நீக்குக்
கல்லுப்பை நீயுங்கூட்டு
ஆமிதற்குநெய் பாலுங்கதலிக்கச்சல்
முருங்கைப் பிஞ்சவரைக்காயு
மேமூலீத் தண்டுங் கூட்டுக்கபரோக
பிரமலுமே விட்டுப் போமே.'' (உசஅ)

(இ-ள்)

கண்டங்கத்திரி வேர் தூதுவளை
சங்கம் வேர் மிளகு தக்காளி (மணித்தக்காளி)
துளசி ஆடாதோடை
நுணை

இவைகளின் சாறுகள் வகைக்கு ¼ படி எடுத்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பின்மேலேற்றிச் சுண்டக் காய்ந்து வரும் பொழுது பனவெல்லம் 5 பலம் கூடப்போட்டுப் பாகு ½ படியாக வற்றி வரும்பொழுது

திப்பிலி
கடுக்காய்த் தோல்
சித்தரத்தை

இவைகள் வகைக்கு 15 வராகனிடை எடுத்து, வெயிலில் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து பாகுடனே போட்டு அடிப்பிடிக்காமல் கிண்டி, சுத்தமான தேன் ½ படியும் சேர்த்துப் பசுவின் நெய் 1 மாகாணி (வீசம் படி)யும் விட்டுப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு தான்றிக்காயள வெடுத்துக் காலைவேளையில் உட்கொள்ளவும். இவ்வாறு 40 நாட்கள் சாப்பிடக் கபரோகங்கள், இருமல் முதலானவைகள் தீரும்.

பத்தியம் :—

புளிப்புச்சுவையுள்ள பதார்த்தங்கள், கசப்புப் பண்டங்கள், புகையிலை இவைகளை நீக்கவும். உப்பையும் நீக்கிவிடவும்.

பசுவின் நெய், பால், வாழைக்கச்சல், முருங்கைப்பிஞ்சு, அவரைக்காய், முளைக்கீரை இவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

---

107. இரத்த காசத்திற்குப் 'பதனி'

" தினவாகியேயிரத்தம்விழுங்காச
மதுதற்கவிழ்த்தஞ் செப்புவேன் கேள்
பனம் பதனி யதிகாலையோர் மண்ட
லங் கொள்ளப்பாரிதுக்குங்
கனத்த பித்தப் பண்டமதைக் கூட்டாதே
மற்றெல்லாங்கருவாயுண்ணு
மனந்தனிலுற்றிடு பயத்தினிரத்தகா
சமுந் தீரும்வகையாயுண்ணே ",

(உசா

இ-ள்)

பதனியை அதிகாலையில் சாப்பிடவும். 40 நாட்களில் இரத்தகாசம் திரும்.

பத்தியம் ;—

பித்த பண்டங்களைத் தள்ளவும். அவையாவன :— கத்தரிக்காய், புளி, முதலியன.

---

108. வாயிலில் இரத்தம் வீழ்கிறதற்கு 'ஊறலவல் குடிநீர்'

"கொட்டைப்பாசிலை துவைத்தச் சாற்றில்
நாழியவல் கூடப்போட்டு
திட்டமுடன் பிசறிக் கடிகைமுப்ப
தூறவைத்துமதையுணத்தி
அட்டியில்லாமற் காலையாழாக்கு
அவலுண்ணு மடவியுற்ற
சட்டமருதங் கொழுந்தைச் சட்டியிலே
போட்டு மதிற்றண்ணிரூற்றே". (உரும)

"ஊற்றிப் பிசைந்தேவடியுங்கட்டியிந்த
நீரைக் கொள்ளுடனே தானே
ஆற்ற முடியாயிரத்தம் வாயிலில்
வீழ்கிறதுமஞ்சாறுநாளில்
மாற்றிவிடும் பத்தியமாயிருமவிழ்தங்
கொள்மட்டும் வகையாய்த்தானே
ஆத்தியணிசிவன் கிருபை பெருஞ் சரபேந்
திரராச னருளிதாமே". (உருக)

(இ-ள்)

(1) கொட்டைப்பாசி இலையையிடித்துப் பிழிந்த சாற்றில், அவல் 1 படி போட்டு 30 நாழிகை (½ நாள்) ஊறவைக்கவும்: பின்பு அவலை வெய்யிலில் உலர்த்தி எடுத்துக் கொண்டு இதைக் காலை வேளைகளில் 1 ஆழாக்கெடுத்துச் சாப்பிடவும். வாயிலிருந்து இரத்தம் விழுதல் நிற்கும்.

(2) மருதங்கொழுந்தை வேண்டிய அளவெடுத்து ஒரு சட்டியில் போட்டுத் தண்ணீர் விட்டுப் பிசைந்து வடிக்கட்டி அந்நீரை யருந்திவர இருமும்போது இரத்தம் விழும்நோய் 5 அல்லது 6 நாட்களுக்குள் திரும். பத்தியமாக இருக்கவும்.

---

109. பக்க காசத்திற்குப் பொங்கல்

"மூன்நாழி நெல்லுக்கு மூன்நாழி
நீர் வார்த்து முறுமையாக
நன்னனவரட் பூலாவேர் வடக்கிற்
போரதையும் நலமாய் வெட்டி
யங்நாளிற் குளிசமதாய்ச் செய்துமொரு
பிடியுப்புமதிலே போட்டு
குன்னுதசங்கம்வேரும் போட்டு
மடுப்பினிலே குணமாய்வையே". (உருஉ)

"வைத்துத் தண்ணீர் சுவற யிறக்கியந்த
நெல்லதனை வகையாய்க் காய
வைத்தரிசிகுத்தியிந்தவுமிக்குசவன்
சூளையிலே வகையாய்ப்போட
வுத்தகுசக்கலமுடையுங் கொல்லனுலை
யிற்போடவுமிரும்பு
சத்துமதுவேகாதுயிதின்தவிட்டைச்
செக்கதனிற்றூனே போடே. (உருக)

"போடையெண்ணெய் காணுது அரிசியை
யாப்பால் தனிற் பொங்கியுண்ண
நாடு பக்ககாசமதுந்தினகரன்முன்
பனியெனவே நகர்ந்துதானே
வோடுமதுதப்பாமலாதி சிவன்
பூசையதிலுருக்கமாகத்
தாடனிலே யர்ச்சனை செய் சரபேந்திர
பூபதி சொல்தானிதாமே". (உருச)

(இ-ள்)

நெல் 3 படி யெடுத்து, அதனுடன் 3 படி ஜலம் விட்டுக் கொள்ளவும். வடக்கேபோகும் வரட்பூலா வேரை வெட்டிக் *குளிசமாகச் செய்து அதில்போட்டு, உப்பு 1 பிடியும் போட்டு, சங்கவேரையும் அதிலிட்டு அடுப்பின்மேல் வைத்து எரிக்கவும். தண்ணீர் முழுவதும் சுண்டியபின் பிசுங்திருக்கும், நெல்லை வெய்யிலில் உலர்த்திக், காய்ந்தபின் உரலிலிட்டு குத்திக் கொள்ளவும்.

இந்த உமியைக் குசவன் சூளையில் போடப்; பானை, சட்டி முதலானவைகள் உடைந்து விடும். கொல்லன் உலையில் போட்டால் இரும்பு வேகாது (உருகாது) அதன் தவிட்டை எண்ணெய் ஆட்டும் செக்கில் போட்டு ஆட்டிவர எண்ணெய் வெளிவராது.

இவ்வரிசியைப் பசுவின்பால் விட்டுப் பொங்கல் செய்து சாப்பிடப் பக்கரோசங்கள் தீரும், கைகண்டது.

---

110. பக்கக்காசத்திற்குத் 'தூதுவளையாதி கஷாயம்'

"தூதுவளம்வேர் கண்டங்கத்திரிவேர்
பெருமருந்துஞ் சொன்னதல்லால்
சாதிச் சீந்திற்கிழங்குவமுக்கிரா
வேராறுஞ் சரியாய்க்கூட்டி
ஓதமம்மிடனில் நறுக்கிக் கடாயம்வைத்து
மூன்று நாளுண்டாயாலுல்
வேதனைப்பக்கக் காசமற்றுவிடுந்
தப்பாமல் மேவிச்செய்யே". (உருநூ)

(இ-ள்)

தூதுவளைவேர்	கண்டங்கத்திரிவேர்
பெருமருந்துவேர்	சீந்தில் கிழங்கு
அமுக்கிரா கிழங்கு	சாதிக்காய்

இவைகளைச் சரிஎடையெடுத்து, ஒன்றிரண்டாக இடித்து கஷாயம் (16 பங்கு ஜலம் விட்டு எட்டிலொன்றுகக் காய்ச்சி) செய்து 3 நாளைக்குச் சாப்பிடவும். பக்ககாசம் தீரும்.

---

* குளிசம்—தாயத்து

111. காசத்திற்குக் 'களி'

"இலவம் பட்டையிற் குறுவையரிசியைப் போட்
டிடித்துக்களியிதமாய்க்கிண்டி
நல் பசுவி(ன்)நெய்விட்டுக் கொண்டைந்தா
றேழெட்டு நாளுந்தின்ன
வலுமிகுத்தகாசமறும் புளிப்புகைப்புக்
தவிர்ந்து விடுவாய் நெற்சோறும்
பெலமாகவுண்ணு சிவன் கிருபை பெற்ற
தஞ்சை விபு பேசும் வாறே." (உருசு)

(இ-ள்)

இலவம் பட்டையைச் சிதைத்துக் குறுவை அரிசியுடன் இடித்துக் களிகிண்டி, பசுவின் நெய் விட்டு 5, 6, 7, அல்லது 8 நாட்கள் சாப்பிடக் காசரோகங்கள் அனைத்தும் தீரும்.

புளிப்புப் பதார்த்தங்களையும், கசப்புப் பண்டங்களையும் நீக்கிப் பத்தியமானவற்றைச் சாப்பிடவும். நெல்லரிசி சாதம் சாப்பிடலாம்.

---

112. எலிகடி, இரைப்பு, மந்தாரகாசத்திற்கு மருந்து

"ஆடுதின்னுப்பாளை கொண்டுவந்தெலுமிச்
சங்காயினளவரைத்துக்
காடதனில் மேய்வெள்ளாட்டுப் பாலில்
மூன்று நாட்காலைதன்னில்
நாடியதைக் கொள்ளயெலிகடியிரைப்பு
மறுமிதலால் நரர்களுக்கும்
பீடைசெய்யுமந்தாரகாச மெல்லாம்
போகுமிது பிசகிடாதே." (உருள)

"பிசகிடாதேயுப்புப் புளி தள்ளு
மறுபத்தியம் பிடிக்கவேணும்
இசைவான மருந்துலர்த்தியுமாகி
லாப்பாலி யிதமாயுண்ணு

சசிதும்பை திங்கள் கங்கையணிபரமன்
பாதமதிற்றுனர்ச்சிக்கும்
வசிவாஞற்றிடுஞ் சரப மன்னவனு
ருன்னிதமாய் வசனித்தாரே.'' (உரிஅ)

(இ·ள்)

ஆடுதின்டாப் பாலையைச் சமூலமாகக் கொண்டு வந்து அதை அம்மியின்மேல் வைத்து எலுமிச்சங்காயளவு அரைத்து, வெள்ளாட்டுப் பாலுடனே குழப்பி, மூன்று நாலைக்குக், காலை வேளையில் மாத்திரமே குடித்து வர, எலிகடி, இரைப்பு முதலிய நோய்கள் தீரும்.

உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களைத் தள்ளுவதுடன், மறு 3 நாளைக்கும் மறு பத்தியம் பிடிக்க வேண்டும். வேண்டிய அளவு பசுவின் பாலைக் கூட்டிக் கொள்ளவும்.

113. சூலை, இருமல், உளைமாந்தம், மந்தார காசம், சயம், வண்டுகடி, குஷ்டம் எலிகடி முதலான ரோகங்களுக்கு 'அரிதார பற்பம்'

''தலை யோடு கொண்டுவந்து பொடி செய்து
சுண்ணும்புத் தண்ணீர் விட்டு
கலியாமலரைத்து குகை பண்ணியதை
நன்றுகரவியில் வைத்து
வுலியாமற் காய்ந்த பின்பக்குகைதனிலே
யரிதாரமுள்ளே வைத்துப்
பலமாக மேல் மூடிச்சீலை மண்ணுஞ்
செய்து மப்பாற் பகருவேனே.'' (உருக)

''பகருவேன் குக்குடத்தின் புடம் போடப்
பற்பமதாம் பதனமாக
வகையுடனே வைத்து பலங்கால மறிந்
தே தேனில் வண்ணமையாகக்
தகைவாகக் கொடு யீளையிருமலுளை
மாந்தை மந்தாரகாச
மிகல் செய்யுஞ் சயம் வண்டுகடி குட்ட
மெலிகடியு மேகுந்தானே.'' (உகம)

(இ-ள்)

வெந்த மண்டையோட்டைக் கொண்டு வந்து, கல்வத்தி லிட்டுச் சுண்ணும்பு ஜலம் விட்டு நன்றாக வரைத்துக், குகைச் செய்யவும். (தட்டான் பொன்னை உருக்குவதற்கு வைத்திருக் கும் மண் குகையைப் போல் வேண்டிய அளவுக்குக் குகை செய்து கொள்ளவும்).

அது நன்றாகக் காய்ந்தவுடன், சுத்தி செய்த தாளகத்தை அதனுள் வைத்து மூடிச் சேலைமண் செய்யவும். ஒரு சாண் நீள அகலமுள்ளதுமான குழியை வெட்டியதில் வரட்டிகளை அடுக்கி அதனுள் மேற் குகையை வைத்துப் புடம் போடவும்.

சுத்தமான தாளகபற்பம் கிடைக்கும். இதை நோயா ளியின் உடம்பு, பலம், காலம் இவைகளை அறிந்து ஒன்று அல்லது 2 அரிசியெடை வீதம் தேனில் கொடுக்க ஈளை, இருமல், உன்மாந்தம், மந்தாரகாசம், க்ஷயம், வண்டுகடி, குஷ்டம், எலிகடி முதலான ரோகங்கள் தீரும்.

---

111. சுரகாசத்திற்குத் 'திப்பிலி நெய்'

"திப்பிலி வெட்பாலியினுட வரிசிரை
கஞ் சுக்கு கூவளை வேர்
தப்பிலா நெல்லிக்காயதிவிடையஞ்
சந்தனம் பேர்மல்லிகை வேர்
ஒப்புள கீழ்காய் நெல்லி வேர் நிலவேம்
புடனே நன்னரி வேர் கூட
நப்புள முந்திரிப் பழத்தோடே
நவில் கடு(கு)ரோகிணி தானே." (உசுக)

"தானிலாமிச்சம் வேருடன் பதிணைந்
தற்புதமாகிய மருந்தும்
தானிதில் வகைக்கு மறுகழஞ்சரைத்து
தப்பிலா நெய்யிரு நாழி
ஞனமிலாப் பாலது மிருநாழி
யொக்கவே கூட்டி தியிட்டு
நீனயமான பக்குவந்தன்னிலே
நிலத்தினிலிறக்கியும் வையே." (உசுஉ)

"வைத்துமே யாதிசிவன் றனை நினைந்து
மனதினிலன் புடன்ருனே
சுத்தமாம் நற்றிப்பிலி நெய்யை யளவாய்
துடர் வியாதியின் பலனறிந்து
நத்துல மாயதி காலையிற்ருனே
நாலைந்து நாளதுங் கொள்ள
வத்திடுஞ்சுரத்தின் காசமுந்தானே
மானுவினருளிதுதானே."

(இ-ள்)

திப்பிலி	வெட்பாலை யரிசி
சீரகம்	சுக்கு
வில்வ வேர்	நெல்லி முள்ளி
அதிவிடயம்	சந்தனம்
பேராமல்லி	கீழாநெல்லி வேர்
நன்னரி வேர்	திராக்ஷைப் பழம்
கடுகரோகிணி	இலாமிச்சம் வேர்
நில வேம்பு	

இவைகள் வகைக்கு 6 கழஞ்சு (கழஞ்சு-40 குன்றி) எடுத்து ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீர்விட்டு நன்றாக ஊறவைத்துப் பின்பு அம்மியின் மேல் வைத்து அரைத்துப்,

பசுவின் பால்	2 படியும்
,, நெய்	2 படியும்

விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப், பதத்திலிறக்கவும், இதை நன்றாக வடிக்கட்டிக் கொண்டு ஒரு பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும். வியாதியின் பலத்தை அறிந்து கொண்டு, தினம் அதிகாலையில் ($\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ தோலா வரை). கொடுக்கவும். இவ்வாறு 4 அல்லது 5 நாட்களுக்கு உட்கொள்ளவும். சுரத்துடன் கூடிய காசம் தீரும்.

115. இரைப்பு, காசம், சுவாசகாசம், அடைப்பு, சேத்துமரோகத்திற்குத் 'தூதுவளை யாதிச் சூரணம்'

"தூதுவளம் பட்டையையுணர்வித்துத்
தூள் செய்துமதிலைரப் படியு
மீதுடன் பெருமருந்து வேர்ப் பொடியு
மேயுழக்கிரண்டையுங் கலந்து,
சாதக யிந்துப்புடன், கடுக்காய் சித்
தரத்தைத் திப்பிலி கருஞ்சீர(க)ந்
தீதிலாயிலுப்பைக் கட்டியு மிளகு
திப்பிலி மூலமுஞ்சுக்கே." (உசுச)

"சுக்குடனே பெருங்காயமிப்பத்துந்
துகையுட னெவ்வொரு வகைக்கு(ப்)
பக்குவமாக யிரண்டு காசிடையும்
பார்த்தெடுத் திளவறுப்பாக
மெய்க்கவே வறுத்து யிடித்து நன்முக
வே வடிகட்டி முன்றூளி
லொக்கவே கலந்து முயர் பொரிக்கார
முரிமையாய்க் காசிடைகாலே." (உசரு)

"காசிடை நன்முய்ப் பொரித்ததில் கூடக்
கலந்துமே பதனமதாகத்
தூசிவிழாமல் வைத்து வெருகடி
தூளது தேனிலே குழப்பி,
யேசந்தி காலி கொள்ளத் தானே
யேழெட்டு நாளையிலிரைப்பும்
காச சுவாச மடைப்புடல் சேத்துமங்
கண்ணிற் படாம லோடிடுமே." (உசசு)

"ஓடிடு மூன்று நாளையிற்முனே
வோதுவேன் பத்தியம் புளிப்பு
நாடிடாதே துவரையுட பருப்பும்
நல்ல தூதுவளையுங் கூட்டு

பாடிய புலவர் கலியது வகன்று
பறந்திடக் கனகமேயருளு
மாடிய பாதச்சிவன் பதம் பணியு
மன்புள தஞ்சை மானுரையே.'' (உசுள)

(இ-ன்)

தூதுவளம் வேர்ப் பட்டையை எடுத்து, நன்றாக வெய்யிலில் உரை வைத்துக் கொள்ளவும். பின்பு, இதை யொரு கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் ½ படியுடன், பெருமருந்துச் சூரணம் (ஈச்வர மூலம்) ஒரு உழக்கும் போட்டு ஒன்று கலந்து

பொரித்த இந்துப்பு	கடுக்காய்த் தோல்
சிற்றரத்தை	திப்பிலி
கருஞ்சீரகம்	இலுப்பைக் கட்டி (அரப்பு)
மிளகு	கண்டங் திப்பிலி
சுக்கு	பொரித்த பெருங்காயம்

இச்சரக்குகள் வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்துக் கொண்டு, கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு முன் தூளுடன் சேர்த்துக் கொள்ளவும்.

இதனுடன் ¼ வராகனிடை பொரித்த வெங்காரம் கூட்டிக் கலந்து கொண்டு தூசி விழாமல் பத்திரப் படுத்தவும்.

இதில் ஒரு வெருகடி (மூவிரல் கொள்ளு மளவு) தூள் எடுத்துத் தேன் விட்டுக் குழைத்துக் காலையிலும், சாயங் காலத்திலும் சாப்பிடவும். 7 அல்லது 8 நாட்களுள் இரைப்பு, காசம், ச்வாசம், அடைப்பு, கப ரோகங்கள் முதலான ரோகங்கள் தீரும். 3 நாட்களுக்குள்ளேயே குணம் காணப்படும்.

பத்தியம்:—

புளிப்புப் பதார்த்தங்களைத் தள்ளி, துவரம் பருப்பு, தூதுவளை இலை முதலானவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

116. இரைப்பிற்குக் 'கண்டங்கத்தரியாதிக் கடாயம்'

"கண்டங் கத்திரி வேர் பேய்ப் புடல் தான்
றிக்காய் கடுக்காய் முசு முசுக்கை
மண்டிய நெல்லிக்காய் சுக்கிவ் வேழு
வகைச்சரியாகவே சேர்த்து
கொண்டு மெட்டொன்றுய் காய்ச்சி கடாயங்
கொண்டிட யிரைப்பு கடூருக்
தண்டமிழ் வாணர் கவித்திற மறியுஞ்
சரப பூபதியருளாமே." (உசுஅ)

(இ-ள்)

கண்டங் கத்திரி வேர்	பேய்ப் புடல்
தான்றிக் காய்த்தோல்	கடுக்காய்த் தோல்
நெல்லி முள்ளி	முசு முசுக்கை
சுக்கு	

இச்சரக்குகளை வகைக்கு (1 பல மெடுத்து) ஒன்றி ரண்டாக இடித்து, 16 மடங்கு ஜலம் விட்டு எட்டி லொன் றுகக் காய்ச்சிக் கஷாயமாகச் செய்து சாப்பிட, இரைப்பு ரோகம் தீரும்.

---

117. பித்தத்திலெழுந்த நாற்பது காசம், உளமாந்தை, செரியாமை, சுரம், இளைப்பு, பாண்டு, காமாலை முதலான ரோகங்களுக்கு 'வில்வாதி லேகியம்'

கூவிளம் வேர் நாற்பது பலமேலிற்
கொண்டிடு தோலையும் போக்கி
நீ ரமாகச் சிறுகவும் நறுக்கித்
திடமுடனெடுத்திடு தூளை

ஆவலாய்ப் பெரிய பானை யிலிட்டு
மதிலிரு தூணி நீர் விட்டு
நீ வைத்து மூன்று நாளது மூறி
நெருப்பினி லிட்டதைக் காய்ச்சே. (உசுக)

"காய்ச்சியே குறுணியான வாரிறுத்து
கடைச்சரக்கேலம் நெல்லிக்காய்
சூச்சமாங் கிராம்பு மிலவங்கப் பட்டை
சொல்லும் நன்னரி வேர் திப்பிலி
வாச்சிடுங் கோரைக் கிழங்குடன் கொத்த
மல்லியிலவங்க பத்திரியுந்
தாச்சியல் வெட்டி வேரதிமதுரந்
தனுடனே சீந்திற் ச(ர்)க்கரையே." (உஎம)

"ச(ர்)க்கரை நெல்லிப் பருப்புடன் பேரீச்
சம்பழ மிலாமிச்சம் வேரு
மொக்கவே பதினைந்து வகையின் மருந்து
மொவ்வொரு கழஞ்சதும் கூட்டி
யெக்கியே யிடித்த தூளதைக் கடாயத்
தினி லிட்டுப் பாகு போற்காய்ச்சிச்
சக்கையில்லாமற் பதின் கழஞ்ச தனிற்
ச(ர்)க்கரை கூடவும் போடே." (உஎக)

கூடவும் போட்டுத் தேனது மூழக்குங்
குணமுள்ள பசுவின் பாலுழக்கு
நாடியே விட்டுப் பதமதாய்க் காய்ச்சி
நலத்துடனிறக்கியே வைத்து
ஆடரவணியு மீசனை நினைந்து
வதிற் கொட்டைப் பாக்கள வெடுத்துத்
தேடியே பசுப்பாடன்னிலே கலக்கித்
தினமுணுமிருபது நாளே." (உஎஉ)

"இருபது நாளுங் கொண்டிடப் பித்தத்
தினிலுறு நாற்பது காசம்,
வருமூள மாந்தை யுண்டிடு சோறும்
வயிற்றினிலே செரியாமை

சுரமுமேலிளைப்புப் பாண்டு காமாலை
சுத்தமாயகற்றிடுங் கைப்பு
மரத்தினிற் புளியுந்தள்ளு பால் நெய்யும்
வளவுப்புக் கண்டமுங் கூட்டே.'' (உஎங)

(இ-ள்)

மேல் தோலை நீக்கிய வில்வவேரில் 40 பல மெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அவைகளை இடித்து ஒரு பெரிய பாணையில் போட்டு 8 மரக்கால் ஜலம் விட்டு, மூன்று நாளைக்கு ஊறவைக்கவும். நான்காவது நாளன்று, அப்பாணையை அடுப்பின் மேலேற்றி எரித்து, 1 மரக்காலாகும் வரை சுண்டக் காய்ச்சவும். அக்கஷாயத்தை யிறுத்து அதனுடன்

ஏலக்காய் — நெல்லிமுள்ளி
கிராம்பு — இலவங்கப்பட்டை
நன்னாரிவேர் — திப்பிலி
கோரைக்கிழங்கு — கொத்தமல்லிவிதை
இலவங்கப்பத்திரி — வெட்டிவேர்
அகிமதுரம் — சீந்தில் சர்க்கரை
நெல்லிவிதைக்குள்ளிருக்கும்பருப்பு பேரீச்சம்பழம்
இலாமிச்சம்வேர்

இச்சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து, நன்றாகக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு கஷாயத்துடன் கலந்து, பாகுபோல் காச்சி, அதனுடன் 10 கழஞ்சு (சுமார் 5 தோலா) ஜீனி சேர்த்து, சுத்தத்தேன் ஒரு உழக்கும் பசுவின்பால் 1 உழக்கு கூடவிட்டுப் பதத்தில் (லேகிய) இறக்கிக்கொள்ளவும்.

இதில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்துப் பசுவின் பாலில் கலக்கித் தினந்தோறும் 3 வேளை உட்கொள்ளவும். இம்மாதிரி 20 நாட்கள் சாப்பிடப் பித்தத்தினாலேற்படும் 40 விதகாசவகைகள், உளமாந்தை, சாப்பாடு செரியாமை, சுரம், இளைப்பு, பாண்டு, காமாலை முதலான நோய்கள் தீரும்.

பத்தியம :—

கசப்புப் பதார்த்தங்களையும், புளியையும் நீக்கிவிடவும். பசுவின்பால், நெய், உப்புக்கண்டம் முதலியவைகளை வேண்டிய அளவு கூட்டிக் கொள்ளவும்.

---

118. இரைப்பு நெஞ்சினடைப்பிற்கு மருந்து

" இரைப்பதுமதிகமாகியே நெஞ்சடைத்
திட்டு முட்டாகிடிலதற்கு
பாவையில் வளரும் பலகரையதனைப்
பண்புள்வம்மியிற்ருனே
அரைத்து நன்ருக வெந்நீரிலே குழப்பி
யருந்திடயிரைப்பதுமகலு
முரந்தனில் மிகுந்த களிறினிற் பவனி
யும் வருந்தஞ்சைமானுரையே". (உளச)

(இ·ள்)

இரைப்பு அதிகமாகி நெஞ்சடைத்து, மூச்சுத்திணரல் உண்டானுல், சுத்திசெய்த சோழியை அம்மியின் மேல்வைத்து வெந்நீர்விட்டு நன்ருக அரைத்து, அந்நீரிலேயே குழப்பி உட்கொள்ளவும். இரைப்பு தீரும்.

குறிப்பு :—

எலுமிச்சம்பழச் சாற்றிலூறவைத்து கழுவிக் கொள்ளச் சுத்தியாகும்.

---

119. இரைப்பு, சேத்துமம், நெஞ்சுக்கட்டு முதலான ரோகங்களுக்கு மருந்து

" ஈர வெங்காயச்சாறு தேங்காய்ப் பா
லிவ்விரண்டுஞ் சரியாய்த்தான்
நேருடன் கூட்டி வெள்ளைக்காக்கரட்டா
னிலு முறுவேர்த்தண்டான் கிழங்கு

கூடனைரைத்துக் கரைத்து வெண்காரங்
குணமுடன் பொரித்ததிற் போட்டு
சாரமாய்க்கொள்ள யிரைப்புடன் சேத்துமங்
தானறும் நெஞ்சினிற்க (ட்டே)." (உஎ௫)

(இ-ள்)

ஈரவெங்காயச் சாறு 1 பங்கு
தேங்காய்ப் பால் 1 பங்கு

இவ்விரண்டையும் மொன்று கலந்து, வேண்டிய அளவு வெள்ளைக்காக்கணம் வேர், ஆவாரை வேர் இவ்விரண்டையும் வெங்காயச்சாறு விட்டு நன்றாக அரைத்து, அதிலேயே குழப்பி, பொரித்த வெங்காரம் (1 வராகனெடை) அதிலிட்டு உள்ளுக்கு அருந்தி வர, இரைப்பு, கபம், நெஞ்சுக்கட்டு முதலான பலவித ரோகங்கள் தீரும்.

---

120. இரைப்பு, நெஞ்சுக் கட்டுக்கு மருந்து

"சுக்கு வெண்காரந் தாளிசபத்திரி
யிந்துப்பு கம்பிப்பிசின் மிளகு
பக்குவமாந் திப்பிலி கருஞ்சீர (க) ம்
பகரெட்டு வகை மருந்ததனில்
பிக்கிலாமலு மோர்வராகனெடையும்
பேதமிலாக் கண்டங்கத்தரி
யிக்கனி யிருபதுமதிற் சேர்த்து
மிவையினிற் பசுவி (ன்) நெய் குத்தே." (உஎசு)

"குத்தி*யே வறுத்துமரைத்து முக்கழஞ்சு
கொண்டிடு மிளவெந்நீர் தன்னில்
சத்துவமாக நாலிந்து நாளுந்
தப்பிலாமலு மதிகாலே
பத்தியம் புளியும் புகையிலை தள்ளுப்
பாரிரைப்புடன் னெஞ்சிற்கட்டு
மத்திடும் நீர்க்கட்டுடனே சிலேட்டு
மாதவர் பண்டிதர்க்குரையே." (உஎஎ)

---

* குத்தி—ஊற்றி

(இ-ள்)

சுக்கு	பொரித்த	வெங்காரம்
தாளீசபத்திரி	,,	இந்துப்பு
கம்பிப் பிசின்		மிளகு
திப்பிலி		கருஞ் சீரகம்

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து ஒன்றிரண்டாக இடித்து அவைகளுடன், கண்டங்கத்திரிப் பழம் 20 (எண்ணிக்கையில்) எடுத்து, ஒரு இரும்பு சட்டியிலிட்டு சிறிது நெய் விட்டு வறுத்துக்கொண்டு, அம்மியிலிட்டு மற்ற கடைச் சரக்குகளையும் போட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். வேண்டும்போது, இதில் 3 கழஞ்சு (சுமார் $1\frac{1}{2}$ தோலா) எடுத்து, இளஞ்சூடுள்ள வெந்நீருடன், அதிகாலையில் மாத்திரமே நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு உட்கொள்ளவும்.

இதற்குப் பத்தியம் :—

புளிப்புப் பதார்த்தங்களையும், புகையிலையையும் நீக்கவும்.

தீரும் வியாதிகள் :—

இரைப்பு, நெஞ்சுக்கட்டு, நீர்க்கோர்வை, கபம் முதலானவை.

---

121. வயிறு பொருமல், பித்தம், வாந்தி இருமலுக்கு 'இலவங்காதிச் சூரணம்.'

"இலவங்கந் தூதுவளையுந்தக்கோல
மேலமூங்கண்டங்கத்திரியும்
நலமுள்ள சுக்கு சாதிக்காய் சன்ன
லவங்கத்தின்பட்டையுங்கூட
பலமிது மிளகு திப்பிலியோடே
பதின்வகை மருந்துமே சரியா
யுலரவேரவியிற் காயவும் வைத்து
யொக்கவே போட்டதையிடியே". (உ ஏ அ)

"இடித்து சூரணங்கள் செய்ததை வடிக்கட்
டியுமொரு புதிய பாத்திரத்தி
லடவுடன் வைத்துப் பதனமுஞ் செய்தோ
ரளவதாய்ச் சூரணமெடுத்துத்
துடி சர்க்கரையிலாவது நல்ல
துப்புள தேனிலாவதுமே
வடிவுளயிள நீர்தண்ணிலாவது நீ
வளமுடன் கொண்டிடுவாயே". (உஎசு)

"கொண்டிடு காலை யந்தியிலுந்தான்
குணமதாம் வியாதியைக்கேளு
மண்டிய வயற்றின் பொருமலும் பித்தம்
வாந்தியுமிருமலுந்தீரு
முண்டியவாயுவின் பண்டமெலாந்தள்
முக்கியமாகியயீசன்
முண்டகத்தாளி வர்ச்சணீபுரியும்
முதல்வனுமுரைத்திடுமுறையே". (உஅம்)

(இ-ள்)

கிராம்பு	தூதுவளை
தக்கோலம்	ஏலக்காய்
கண்டங்கத்திரி	சுக்கு
சாதிக்காய்	சன்னலவங்கப்பட்டை
மிளகு	திப்பிலி

இப்பத்துவகை மருந்துகளையும், நன்றாக வெய்யிலில் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடிக்கவும். இச்சூரணத்தை வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஒரு புதுப்பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

இதில் மூவிரல்கொண்ட அளவு எடுத்துச் சர்க்கரை கலந்தோ, அல்லது தேனிலோ, அல்லது இளநீரிலோ உட்கொள்ளவும். இவ்வாறு காலையிலும் மாலையிலும் சாப்பிட வயிற்றுப்பொருமல், பித்தம், வாந்தி, இருமல் முதலிய நோய்கள் தீரும். வாய்ப் பண்டங்களை நீக்கிப் பத்தியமாகச் சாப்பிடவும்.

குறிப்பு :—

உளுந்து, மொச்சை, மாவுப்பண்டங்கள், கிழங்கு வகைகள் முதலியவைகளை நீக்கவும்.

122. சகல காசத்திற்குங் 'கண்டகாரி லேகியம்.'

" காரியகண்டங்காலி
கரிமுள்ளி விஷ்ணுக்ராந்தி
பாரியசங்கின்பூரல்
பருத்தி தூதளை நன்னரி
சீரியஇலவாவாரைச்
சிறந்ததூதளையும்பின்னே
நாரியபலந்தானென்று
தனிற் பலமன்பதாமே". (உஅக)

" அன்பதாய்க் கலநீர் விட்டு
ஆறிரண்டொன்றதாக்கு
முன்புறச்சங்கு கோட்ட
முதிர் திரிகடுகுதாகம்
வன்புறுமரத்தையேல
மாசிக்காய் பல வெண்காரை
யின்பு வெட்பாலை வளவி
னிசைகடு(கு)ரோகணியுஞ்சேரே." (உஅஉ)

" சேரவாய்விளங்கமிக்கத்
தேக்குடன் சித்திரமூலம்
பாரவே கூகை நீரும்
பருத்தி முந்திரிகை மாஞ்சில்
பூர மோடார் சாதிக்காய்
புதிய நற்கிராம்பு சேர்த்துச்
சார்வெல்லம் லேகியந் தான்
சகல காசங்கள் போமே". (உஅங)

(இ-ள்)

கண்டங்கத்திரிவேர் கரிமுள்ளிவேர்
விஷ்ணுக்ராந்திசமூலம் சங்கம்வேர்
இம்பூரா சமூலம் பருத்திவேர்
தூதுவளை சமூலம் நன்னரிவேர்
ஆவாரை சமூலம்

இச்சரக்குகளை வகைக்கு 50 பலமெடுத்து, ஒன்றிரண்டாக வெட்டி ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 12 மரக்கால் சுத்தஜலம்விட்டு ஆறிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிக் கொண்டு, அதனுடன் வெல்லம் (1 வீசை) சேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பாகாக்கிக் கொண்டு,

சங்கம்வேர்	கோஷ்டம்
சுக்கு	திப்பிலி
மிளகு	ஓமம்
சிற்றரத்தை	ஏலக்காய்
வெங்காரம்	வெட்பாலை அரிசி
கடுகரோகணி	வாயுவிடங்கம்
சிறுதேக்கு	கொடிவேலிவேர்ப்பட்டை
கூகைநீர்	பருத்தி
திராக்ஷை	சடாமாஞ்சில்
சாதிக்காய்	கிராம்பு
மாசிக்காய்	

முதலான இச்சரக்குகளை (ஒரு பலம்) யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, மேல்சொன்ன பாகில் போட்டுக்கிண்டி, வேண்டிய அளவு பசுவின் நெய்யும் விட்டு, லேகியமாக செய்யவும். ஆறியபின் பச்சைக்கல்பூரம் 1 வராகனும், தேன் (2 சேர்) சேர்த்துக்கொள்ளவும். இதைத் தினம் 2 வேளை கழற்சிக்காயளவு சாப்பிடச்சகலவித காசங்களும் தீரும்.

---

123. காசத்திற்குச் 'சாரணைக் கிழங்கு, எண்ணெய்'

"சாரணைக் கிழங்கு தன்னோடு
சதாவரிக் கிழங்கு தானும்
வீருள்ச்சிந்தில் வட்டு
விரவிய வாடாதொடை
மாரிய பிரமி தூதுவளை
மரிச்சாலங்கண்டு
ஆரிய வமுக்கிராவும்
துகளோர் பலங்கள் கொள்ளே." (உ அ)

"கொள்ளறு நாழித் தண்ணீர்
குதிரவே கொதிக்கவிட்டு
மெள்ளவே காய்ந்த தூறி
வெந்து நாநாழியாக்கி
யெள்ளதி லெண்ணெய்தானு
மிரு நாழி கூட்டி யொக்கத்
துள்ளவே துளாவிக் காய்ச்சி
சொல்லிய சரக்குங் கூட்டே." (உ அடி)

"சொல்லிய சரக்குச் சுக்குத்
திப்பிலி மிளகிந்துப்பு
நல்ல சீரகத்தினூடே
நன்று கற்கடகசிங்கி
மெல்லிய கிராம்புமேவெள்
ளுள்ளி கடுகு ரோகணிச்
செல்லமுக்கழஞ்சு கொண்டு
செலுத்திடக் காசம் போமே." (உ அசு)

(இ-ள்)

சாரணைக்கிழங்கு	தண்ணீர் விட்டான் கிழங்கு
சிந்தில் கொடி	ஆடாதோடை
பிரமி	தூதுவளை
குப்பைமேனி	அமுக்கிராக் கிழங்கு

இச்சரக்குகளை வகைக்கு, 1 பலமெடுத்துக் கல்லுரலி லிட்டிடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 6 படி ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி, நன்றாகக் கொதிக்கவைத்து 4 படியாகச் செய்து வடிக்கட்டிக் கொள்ளவும். இக்கஷாயத்துடன், சுத்தமான எள்ளெண்ணெய் 2 படி விட்டு,

சுக்கு	திப்பிலி
மிளகு	இந்துப்பு
சீரகம்	கடுக்காய்ப் பூ
கிராம்பு	பூண்டு
கடுகுரோகிணி	

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு ($1\frac{1}{2}$ தோலா.) வீதமெடுத்துச் சூரணித்து, கஷாயம் கலந்த எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடிக்கவும். இந்த எண்ணெயை (ஒரு துட்டெடைத்) தினம் உட்கொள்ளக் காசரோகங்கள் தீரும்.

---

124. காசத்திற்கு மருந்து.

"சுக்குடன் மிளகு தூது
வளை திப்பி(லி)வட்டுச் சீந்தில்
தக்கவே வோரொன்றுக்குச்
சமனுகச் சாறுதான் கொண்
டொக்கமுந் நாழித்தண்ணீ
ரொன்றதாயரைத்துக் காய்ச்சி
நக்கவே நறுநெய் தேனில்
நன்றெனக் காசம் போமே". (உ-அ-எ)

(இ-ள்)

சுக்கு	மிளகு
தூதுவளை	திப்பிலி
சீந்தில்கொடி	

இவைகளைச் சமமாகவெடுத்து இடித்து 3 படி தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி யெட்டிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிக்கொண்டு, பசுவின்நெய், தேன் இவை கூடவிட்டுக் கொண்டு சாப்பிடக் காசரோகம் தீரும்.

---

125. இருமல், பாண்டு, நீரழிவு, பிரமியம், குடல்வாதம், சிலேத்துமம், வாதம், குட்ட ரோகம் முதலானதற்கு 'நாகபற்பம்'

"நாகமொருபலமதனை கோமூத்திர
மெருக்கம்பால் நல்லயெண்ணெ
யாகவிது மூன்றதனிலுருக்கி சுத்தி
பண்ணிக்கொண்டதை நறுக்கி

வாகுபுதுச்சட்டிதனிற் போட்டுருக்கு
புளிமரத்தில்வளர் பிராணி
யேகையினு லெடுத்ததிற் போட்
டாக்கோலினினிலேதானே''. (உஅஅ)

''கோலினுல் மத்திக்கப்பற்பமா
கும் பிறகுங்கூறக்கேளு
சிலப் பஞ்சாமிரதங்கூட்டியதைப்
பிசைந்துவுலி திறமாய்மூடி
சீலமண்ணுஞ் செய்து புடமிட பற்ப
மா மூளுந்தின் மாத்திரந்தான்
கோலமிகுஞ் ச(ர்)க்கரையிலந்தியுங்கா
லியினுமிதைக் கொண்டிடாயே''. (உஅக)

''கொண்டிடிருமல்பாண்டு ரீரழிவும்
பிரமியமுங்குடல் வாதங்கள்
பண்டிய சிலேத்மமும் வாதமுடன்
குட்டமெல்லாமறுதேசம் போம்
அண்டர் பிரான் கைலாசபதியுடைய
கிருபையினுலகிலமாளு
மண்டலாதிபதி சரபேந்திரனுணர்ந்த
நாகபற்பம் வகையாயுண்ணே''. (உகஅ)

(இ-ள்)

துத்தநாகம் ஒரு பலத்தை ஒரு கடாயிலிட்டு உருக்கிப்,
பசுவின் மூத்திரம்
எருக்கம்பால்
நல்லெண்ணெய்

இம்மூன்றிலும் தனித்தனியே விட்டுச் சுத்திசெய்து கொள்ளவும். இந் நாகத்தை ஒரு புதுச்சட்டியிலிட்டு உருக்கி புளியம்பிராணியை அதில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு ஒரு கோலினுல் கிளறி வரவும். நாகம் பற்பமாகும்.

இதனுடன் சுத்திசெய்த இரஸம் கூட்டிப்பிசைந்து ஒரு அகலில்வைத்துச் சீலமண்செய்து காய்ந்தபின்பு புடம் போட வும். சுத்தமான பற்பம் கிடைக்கும். இப்பற்பத்தில் ஒரு

உளுந்துப் பிரமாணமெடுத்துச் சர்க்கரையில் வைத்துக் காலை யிலும் மாலையிலும் உட்கொள்ளவும். இதனால் இருமல், சீரிழிவு, பாண்டு, பிரமியம், குடல் வாதங்கள், கபதோஷங் கள், வாதரோகங்கள், குஷ்டம் முதலான வியாதிகள் தீரும்.

---

126. சுவாச காசத்திற்கு 'மிளகுக்குடி நீர்'

"கரிசாலங்கண்ணி பொடுதலை துளசி
செருப்படியுங் கண்டங்கத்தரி
உர தூதுவளைப்பேரா மட்டிபெரும்
பூலாவினுடன் செம்முள்ளி
யுரையாடா தொடை சங்கு நொச்சி
பன்னிரண்டு மொக்கவேதான்
சரியாகத்துவைத்துமச்சாற்றை வைத்துப்
பிழியொரு சட்டியிலே தானே." (உகக)

"சட்டியிலே பிழிந்து மிளகுள்ளியரைத்
தேபோட்டு தாளித்துக்கொள்
திட்டமுள்ள சுக்கு திப்பிலி யிரண்டும்
பொடி செய்து திறமாய்த்தானே
அட்டியிலாமற் றூவியதி
காலைகொள்ளு நாலு நாளே
கெட்ட சுவாசகாச மறுங்கைப்புடனே
புளிப்பதுவுந் தின்றிடாதே." (உகஉ)

(இ-ள்)

கரிசாலங் கண்ணி	பொடுதலை
துளசி	செருப்படி
கண்டங்கத்திரி	தூதுவளை
பேராமட்டி	பெரும்பூலாவேர்
செம்முள்ளி	ஆடாதோடை
சங்கம் வேர்	நொச்சி

இவைகளைச் சமபாகமெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து நன்றாக பிழிந்த சாற்றை யொரு புதுச்சட்டியிலிட்டு, அதனு

டன் மிளகு, பூண்டு, இவைக்கூயுமரைத்துச் சாற்றுடன் குழப்பிச் சுண்டவைத்துக்கொண்டு, சுக்கு, திப்பிலி இவ் விரண்டையும் பொடிசெய்து அதில் தூவித் தினம் காலை வேளையில் மாத்திரம் ஒரு வேளையுட்கொள்ளவும். 4 நாட்க ளில் சுவாசகாசம் நீரும். புளிப்பையும், கசப்பையும் நீக் கவும்.

---

127. இருமலுக்கு 'ஆடாதோடையாதிக் கடாயம்'.

"ஒருபிடி யாடாதோடையிலையில் நா
ழியும் நீர் விட்டுறுக்கமாகச்
சரியாகத்திப்பிலி சுக்குடன் மிளகுங்
கடுக்காயுந் தான்றிக்காயும்
உரையைந்துந் துணிதனிலே முடிந்துபோட்
டுக் காய்ச்சி யுழக்கதாக
வரும்போதிலிறக்கி யதைச் சுத்தமாம்
பீங்கானில் வடித்துக் கொள்ளே." (உகூஉ)

"வடித்துக்கொண்டே முடிந்துபோட்டுப் பொட்
டணந்தனையே வகையதாக
திடத்துடனேயரைத்து மதிற்கலக்க வொரு
காசினிடை தேனுங் குத்தி
விடியுமுன் கொள்ளிருமல் தியாகியைக் கண்
டிடுங்கலி போல் விரண்டேயோடும்
படியதனிற் கீர்த்தி பெற்ற தஞ்சைச் சர
பேந்திர துரை பகரும்வாறே." (உகூ)

(இ-ள்)

ஆடாதோடை இலை ஒருபிடியை எடுத்துக்கொண்டு சிறுக வரிந்து 1 படி சுத்த ஜலம் விட்டு அதனுடன்,

திப்பிலி
மிளகு
தான்றிக்காய்த்தோல்
சுக்கு
கடுக்காய்த்தோல்

இச்சரக்குகளை யொன்றிரண்டாக இடித்து, ஒரு துணியில் முடிந்து ஷை கஷாயத்துடன் போட்டு அடுப்பின் மேலேற்றி, உழக்காகும் வரை சுண்டக் காய்ச்சவும். ஒரு பீங்கான் பாத்திரத்தில் இக்கஷாயத்தை இறுத்து முடிந்த பொட்டணத்தை அம்மியின்மேல் வைத்து அரைத்து, அக் கஷாயத்துடனே கலந்துகொண்டு, தேன் 1 வராகனெடையும் விட்டு அதிகாலையில் குடிக்கவும். எவ்விதமான இருமலுந் தீரும்.

---

128. இருமலுக்குக் கடாயம்

"முசுமுசுக்கை சமூலமே குறு கவரிந்
தேமீர் முக்குறுணி விட்டு
யிசவாக வறு நாழியாய்க் காய்ச்சி
நாளொன்றுக்கிரு நாழிதான்
சுசியாகவரை பலஞ் ச(ர்)க்கரைக் கூட்டிக்
கொள்ளிருமல் தொலைந்தே போகும்
வசிவான அளகையினிலுற்ற சரபேந்திர
பூபதியும் வசனித்தாரே." (உகூடு)

(இ-ள்)

முசுமுசுக்கையைச் (10 பலம்) சமூலமாக வெடுத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீர் 3 மரக்கால் விட்டு, அடுப்பின் மேலேற்றி 6 படியாகும் வரைச் சுண்டக் காய்ச்சிக் கொண்டு, அக்கஷாயத்தைத் தினமொன்றுக்கு 2 படி வீதம் மெடுத்து ½ பலம் ஜீனி போட்டு ஒரு நாளில் சாப்பிடவும். அப்போதைக்கப்போது தண்ணீர் சாப்பிடுவதற்கு பதில் இக்கஷாயத்தைச் சாப்பிடவும், இருமல் தீரும்.

---

129. இருமலுக்குச் 'சுக்காதிச் சூரணம்'

"சுக்கு மிளகுந் திப்பிலி தான்றிக்காய்
நெல்லிமுள்ளி துவற்கடுக்கா
யொக்கயிந்த வாறுஞ்சரி சூரணித்து
வெருகடி தூருந்தான் தேனில்

பக்குவமாய்க் குழப்பியுங் கொள்ளிருமலெலாஞ்
சூரியன் முன் பனியதாகும்
கைக்குள் சந்திரப்படையுடையோன் சரபேந்திர
னுச்சிதமாய்க் கருதும் வாறே.'' (உகூசு)

இ–ள்)

சுக்கு	மிளகு
திப்பிலி	தான்றிக்காய்த்தோல்
நெல்லி முள்ளி	கடுக்காய்த்தோல்

இச்சரக்குகளைச் சமனெடையெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து பத்திரப் படுத்தி, மூவிரல் கொள்ளுமளவு இச்சூரணத்தை யெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட, இருமல் தீரும்.

---

130. இருமலுக்குச் 'சூரணம்'

'' கண்டங்கத்திரி வேரொன்றே சுக்கி
ரண்டு மிளகதுவு மூன்று
மிண்டிய திப்பிலி நாலு சீரகமு
மைந்திவையை விளம்பக் கேளு
மண்டியெரியுந் தணலிற் பொன்னிறமா
கத்தானே வறுத்துக்கொண்டு
கண்டிதமாய்ப் பொடி செய்து வோர் பாத்தி
ரத்தில் வடிக்கட்டிடாயே.'' (உகஎ)

'' வடிக்கட்டி வெருகடிதூள் பசு நெய்யிற்
கலந்து வதி காலை கொள்ளத்
துடியாகவந்தியுமே கொள்ளிருமல்
தீர்ந்துவிடுஞ் சுகமாய்த்தானே
படியதனில் விப்பிரர்க்குச் சோடசதா
னங்களருள் பாக்கியசாலி
திடசித்தமூள தஞ்சை சரபேந்திர
னிட்சயித்த செய்கையீதே.'' (எகூஅ)

(இ-ள்)

கண்டங்கத்திரிவேர்	1 பலம்
சுக்கு	2 ,,
மிளகு	3 ,,
திப்பிலி	4 ,,
சீரகம்	5 ,,

இவைகளைத் தனியே ஒரு இரும்புச் சட்டியிலிட்டு, அடுப்பின் மேலேற்றி பொன் வறுவலாக வறுக்கவும். பின்பு இவைகளை யொரு கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, மூவிரல் கொள்ளுமளவெடுத்து பசுவின் நெய்யுடனே குழைத்துக் காலையிலும் மாலையிலுமாகச் சாப்பிடவும். இருமல் தீரும்.

---

131. இருமல், சளிக்கு 'வேர்க்கொம்புக் கடாயம்'

"இரண்டு சுக்கு நறுக்கி யொருபடி தண்ணீர்
விட்டு மதையே ய(ர)ழ(ர)க்காய்
வருமட்டுங் காய்ச்சியதில் திப்பிலிநா
லுஞ் சுட்டு வகையதாக
திரண்டிடாமற் பொடியாயரைத்துமந்தப்
பொடி தூவித் தேனும் நெய்யுங்
கரண்டியிலே காசிடையும் வகையொன்றுக்
கும் விட்டுக் கருத்தாய்க் கேளே." (உகூக)

"கருத்தான கடாயத்தில் விட்டே மூன்
றேநாளுங் காலை தன்னில்
ஒருத்துமந்தியிலுங் கொள்ளுயிருமலுட
னீளையெல்லாந் தீர்ந்தே போகும்
ச(ர்)க்கரையின் மொழி துளசி மகிபால
னின்றருள் சற்புத்திரனெங்கோன்
திருக்கள்நிர்(த்) தமிடுந் தஞ்சைச் சரபேந்திர
னிர்ணயித்த செய்கையீதே." (ஙா)

(இ-ள்)

சுக்கு 2 தூறை யெடுத்து அதன் மேல்தோலைச் சீவிப் பின்பு அதை நன்றாக நசுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 1 படி ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு ஆழாக்காக வற்றக் காய்ச்சவும். திப்பிலி 4 (எண்ணிக்கையில்) எடுத்து சுட்டு (நன்றாக கருக்கும் வரை வறுத்துக்கொள்ளவும்) பொடி செய்து அப்பொடியை முன் சொன்ன கஷாயத்துடன் சேர்த்துச் சுத்தமான பசுவின் நெய்யும், தேனும் வகைக்கு 1 காசெடை சேர்த்து 3 நாள் காலை வேளையிலும், மாலை வேளையிலும் சாப்பிடவும். இருமல், ஈளை முதலியவை தீரும்.

---

132. இருமலுக்குப் புகை

"மெல்லிய சீலையைக் குறட்டைப் பழச்சாற்றி
லூறவைத்துமே யுணத்தி
நல்ல பிரண்டை பாலிலொரு நாள் நனைத்து
மதையுணத்தி நலமதாக
வல்ல வெள்ளெருக்கம் பால்தனில் நனைத்து
நிழலுணத்தி வனத்தில் மேவு
மல்லலில்லாக் குப்பைமேனிச் சாற்றிலேதான்
கொஞ்ச மரிதாரமாமே." (கூகக)

"அரிதாரமரைத்துக் கரைத்ததிலேயுங்
தோய்த் துணத்தி யந்தச் சீலை
திரியாகச் சிறுகவுஞ் செய்தெருக்கங்
குழாயதிலே செலுத்தித் தானே
சரியாகவும் மோருஞ் சோறுண்டு
பின்பு புகைதானே யுண்ணு
இருமலறும் வெங்நீருஞ் சோறுண்டு
பத்திய மாயிரு நீ தானே." (கூகஉ)

(இ-ள்)

ஒரு சாண் நீள அகலமுள்ள வெள்ளைத் துணியை யெடுத்துக் குறட்டைப் பழச்சாற்றில் நனைத்து ஊறவைத்து நிழலில்

உலர்த்திக் கொள்ளவும். மறுநாள் அதைப் பசுவின் பாலில் ஊறவைத்து உணத்திக் கொள்ளவும், மூன்றுவது நாள் வெள் ளெருக்கம் பாலில் முன்போல் நனைத்துக் காயவைத்துக் கொள்ளவும்.

சுத்தி செய்த தாளகத்தைப் பொடித்துக் குப்பைமேனிச் சாற்றில் போட்டுக் கலக்கி அதில் அத்துணியை ஊறவைத்துக், காயவைத்துக் கொண்டு, சிறு சிறு துண்டுகளாகக் கிழித்து திரிகள் செய்து கொள்ளவும். வேண்டும்போது, நோயாளி மோர் சாதம் சாப்பிட்டபின், ஒரு திரியை யெடுத்து எருக்கங் குழலுக்குள்செலுத்திக், கொளுத்தி அதிலிருந்து எழும்பும் புகையை யுட் கொள்ளச்செய்யவும். இருமல் தீரும்.

பத்தியம் :—

அன்று வெங்நீர் சாதம் சாப்பிடவும்.

---

133. இருமலுக்குக் கண்டங்கத்திரிச் சூரணம்

"தூதுவளம் பழங் கண்டங்கத்திரியும்
வகைக்கோர் பலந் தூக்கிக் கொண்டு
சீதமிகுமேலந் திப்பிலி மிளகு
கிராம்புடனே சீரகத்தோ
டோது வகையைந்தினிலே வகைக்கிரண்டு
வராகனெடை யொக்கச் சேர்த்துச்
சாதகமாம் பசுவினெய் விட்டு மதைப்
பொன்னிறமாய்த் தானுங்கேளே." (கூகூ)

"பொன்னிறமாய் வறுத்துப் பொடி செய்து வடிக்-
கட்டி கண்ட பொடிக்குத் தானே
கன்னலிலுள சீனியாகில் ராய
புரிச்ச(ர்)க்கரை யுந்தான் கலந்து
உன்னிதமாம் நெய் தேனுங் கலந்து வைத்துக்
கொண்டு மனதொருமையாகக்
கொன்னே சூடியைப் போற்றி யிரண்டு வரா
கனிடை யதிற் கொண்டிடாயே." (கூசு)

"கொண்டிடந்தி காலியுமே மூன்று நா
ளறுபொழுது குணமாய்த் தானே
மண்டிருமலு மற்றுப் போமுப்பும் புளிப்
பதுவும் வாய்வுப் பண்ட
முண்டிடாதே சோழவள நாடன்
றஞ்சை நகர்க் குறுதியாக
வெண்டிசையும் போற்ற செங்கோல் நடத்து சர
பேந்திரனிதை யியம்பினரே." (நாடு)

(இ-ள்)

தூது வளம் பழம் கண்டங்கத்திரி வேர்

இவ்விரண்டையும் வகைக்கு 1 பல மெடுத்து, அதனுடன்

ஏலக்காய் திப்பிலி
மிளகு கிராம்பு
சீரகம்

இவைகள் வகைக்கு 2 வராகனிடையும் எடுத்து, ஒன்று சேர்த்து ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்தில் போட்டு பசுவின் நெய் சிறிது விட்டுப் பொன் வறுவலாக வறுத்துக் கொள்ளவும். இதைக் கல்லுரலிலிட்டு சேதமாகாமலிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு அதற்குச் சரியளவு ஜீனி சேர்த்துக் கொண்டு,

பசுவின் நெய்யும், சுத்தமான தேனும் வேண்டிய அளவு விட்டுக் கலந்து கொள்ளவும். இம் மருந்தில் 2 வராகனிடை எடுத்து காலையிலும் மாலையிலுமாக 3 நாளைக்கு 6 பொழுது உட்கொள்ள இருமல் தீரும்.

பத்தியம் :—

உப்பு, புளிப்பு, வாயுபண்டங்கள் முதலியவைகளை நீக்கி விடவும்.

134. இருமலுக்குக் 'கொத்தமல்லியாதிக் கடாயம்'

"கொத்தம(ல்)லியின்பூரா வேர் சிறு நா-
கப்பூ கோரைக் கிழங்கு
நத்துகற்கடசிங்கி தூதுவளம்
வேருடனே நன்னுரி வேர்
சத்துள யிவ்வேழு மருந்தும் வகைக்கோர்
பலங் கூட்டித் தானிடித்து
சுத்த மாயஞ்சு பங்கு பண்ணி யொரு
பங்கு மெடுத்துக் கொள்வாயே." (நூகசு)

"எடுத்துக் கொண்டொரு படி தண்ணீர் விட்டுக்
காய்ச்சி யதையே யரைக்கால்
படியாக யிறுத்தாறு வேளைக்குங் கொள்
பத்தியமோ பகரக் கேளு
நடத்து பொரித்திடு மிளகு நீர்ச் சாதந்
தூதுவளை நாடிக் கொள்ளு
துடித் திடிருமலுந்தப்பாமற் போகு
மிது கொள்ளச் சுகமு முண்டே." (நூகள)

(இ-ள்)

கொத்தமல்லி விதை
சிறு நாகப்பூ
கற்கடசிங்கி
நன்னுரி வேர்
இன்புரா வேர்
கோரைக்கிழங்கு
தூதுவளம் வேர்

இவைகளை வகைக்கு 1 பல மெடுத்து, நன்றாக உலர்த்திக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு இச்சூரணத்தை 5 பங்கு களாகச் செய்து ஒருபங்கை யெடுத்து, அதனுடன் 1 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சவும். இக் கஷாயத்தை இறுத்துத் தினம் 6 வேளை உட்கொள்ளவும்.

பத்தியம் :—

பொரித்த மிளகு ரசம், தூது வளங்காய் வறுவல் முதலி யவைகளைக் கூட்டிக் கொள்ளவும். இருமல் நீங்கிச் சுகமுண் டாகும்.

---

135. இருமலுக்குத் 'திப்பிலிச் சூரணம்'

"படி கொள்ளும் பாலை தன்னிற் கால் படி பால்
விட்டு மந்தப் பாலை வாயைத்
திடமாக வேடுகட்டி வேட்டின் மே
லோர் பலந்திப்பிலியும் வைத்து
அடவுடனே யிரண்டு நாழிகை யெரித்துத்
திப்பிலியை யரைத்துத் தூளாய்
துடியாகக் கற்கண்டின் தூளு மொரு
பலங் கூட்டுச் சுகமாய்த் தானே" (கூ.அ)

"சுகமாகக் கலந்து தினசரி யரைக்
காசிடையின் றூ ளெடுத்து
பகவானை நினைந்துண்டு பின்பு வெங் நீ
ருண்ணிதற்குப் பத்தியங் கேள்
புகையிலையும் புளி தள்ளிப் பத்து நாட்
கொள்ளிருமல் போகுந் தானே
சகதலத்திற் கீர்த்தி பெறு சரபேந்திர
தீரனுணர் சாத்திரந்தானே" (கூ.கூ)

(இ-ள்)

ஒரு படி சாமான் கொள்ளத் தகுந்த ஒரு பாலையை யெடுத்து அதில் பசுவின் பால் ¼ படி விட்டு, அதன் வாயில் ஒரு வெள்ளைத் துணியினால் வேடு கட்டிக் கொள்ளவும். அதில் ஒரு பலந்திப்பிலியை வைத்து, பாலையை அடுப்பின் மேலேற்றி 2 நாழிகை எரிக்கவும், பின்பு திப்பிலியை யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, அதற் குச் சரியெடை கற்கண்டுத் தூள் கலந்து வைத்துக் கொண்டு, தினம்

½ வராகனிடைச் சூரணத்தை வெந்நீருடன் உட்கொள் ளவும்.

பத்தியம் ;—

புகையிலை, புளி, இவ்விரண்டையும் நீக்கவும். 10 நாளில் இருமல் தீரும்.

---

136. இருமலுக்கு மருந்து

"அரிசி யொரு சிரங்கைதனை நனையப்
போட்டிடித்துக் குகையாகச் செய்து
வொரு சிரங்கைக் கருப்புட்டித் தூள் மிளகு
திப்பிலியினுடனே சுக்குஞ்
சரியாக வகைக்கு மொருகாசிடையும்
பொடி செய்து தானே கேளு
வுரை வெல்லத்தோடே யித்தூளையுமே
போட்டுப் பிசைந் தொன்றதாக்கே." (கூஎ)

"ஆக்கிமாக் குகையில் வைத்து நெய்யதனைக்
காயவைத்து மடுப்பிலே தான்
மாக்குகையைப்) போட்டுமது வேகச்சே
கோழி முட்டை வளமாய் நாலு
மேற்கது வாம் வெள்ளையதை மாத்திரம் விட்
டே கிண்டி மென்மை யாகு
மாக்கிய சோறுண்ட பின்பு மிதை யுண்டு
முறங்கிருமல் வாங்குந்தானே." (கூஅக)

(இ-ள்)

ஒரு சிரங்கை அரிசி யெடுத்து ஊறவைத்து, இடித்து குகையாகச் செய்து,

கருப்புட்டி (பனை வெல்லம்)	ஒரு சிரங்கை
மிளகு	1 வராகனிடை
திப்பிலி	,,
சுக்கு	,,

இவைகளை ஒன்று சேர்த்து இடித்துப் பிசைந்து அக்குகைக் குள் வைத்து உருட்டி, ஒரு சட்டியில் பசுவின் நெய் விட்டு அடுப்பின் மேலேற்றி அது கொதிக்கையில் மேலே சொன்ன,

குகைகளைப் போட்டு, அவை வேகும் போது 4 கோழி முட்டை களின் வெள்ளைக் கருவை மாத்திரம் அதனுடன் போட்டு வறுத்துக் கிளறி இறக்கிக் கொள்ளவும்- இரவில் நோயாளி சாப்பிட்டபின், இம்மருந்தைத் தின்று, நித்திரைக்குச் செல்ல வும். இருமல் தீரும்.

---

137. இருமலுக்குச் சுக்காதி கற்பம்.

"சுக்கு திப்பிலி கடுக்காயிது மூன்றுஞ்
சரி நிறையாய்த் தூக்கிக் கொண்டு
(ப)க்குவமாய் நேகனமப் போலேயரைத்து
மக்கொட்டைப் பாக்கின் மாத்திர
மூக்கியமாந் தேனில் கலந்தே கொடுக்க
யிருமலெல்லா மோடிப் போகுந்
திக்கு விசையஞ் செய்யுஞ் சரபோசி
மகராசன் செப்பும் வாறே." (கூபஉ)

(இ-ள்)

சுக்கு திப்பிலி
கடுக்காய்த் தோல்

இம்மூன்றையும் சரி எடை யெடுத்து நன்றாக இடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, அதில் தண்ணீர் சிறிது விட்டு அம்மியின் மேல் வைத்து நேகவரைத்துக் கொண்டு, அவ்விழுதில் ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இருமல் தீரும்.

---

138. இருமலுக்கு 'அந்தரத்தாமரைச் சூரணம்'

"அந்தரத் தாமரை பல (மூன்று) சிலப் பட்டைத்
தூள் பல மூன்றதனினூடே
சந்தந் திப்பிலித் தூளுப் பல மொன்று
மொன்றாகத் தான் கலந்து

இந்தத் தூள் தனிலெ வெருகடி யெடுத்துத்
தேன் தலிலிதவாய்க் கொள்ள
வந்திடு மீளாயுபிருமலுப்பிசமுந்
தீர்ந்து விடும் வகையாய்த் தானே.'' (கூ.ஏகூ)

(இ-ள்)

அந்தரத்தாமரை (உலர்ந்தது)	3 பலம்
உசிலம் பட்டைத் தூள்	3 பலம்
திப்பிலித் தூள்	1 பலம்

இவைகளை யொன்று கலந்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, மூவிரல் கொள்ளுமளவு இத்தூளை யெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட இருமல், ஈளை, வயிறுப்பிசம் முதலான ரோகங்கள் தீரும்.

---

139. இருமலுக்கு 'ஏலாதிச் சூரணம்'

''(ஏலமி) லவங்கம் வாய்விளங்கங்கோ
ரைக்கிழங்குமிளிய சுக்கு
கோலசிறு தேக்கு புட்கர மூல
மிளகெட்டுக்கோர் வகைக்குச்
சாலவரைப் பலமுந் திப்பிலி யிரண்டு
பலமெல்லாந் தானிடித்து
ஆலமுண்ட கண்டர் தம்மை நியானித்துக்
கும்பிட்டு மதிலே தானே.'' (கூ.டிச)

''அதிநோயும் வலுவறிந்து தானெ (டுத்)து
முண்டு பாரந்திசந்தி
சதிசெய்யும் புகையிலையும் புளிதள்ளு
துர்ப்பண்டந் தானுந் தள்ளு
இதமாகு மிருமலெல்லாந் தப்பாமல்
மனுநீதியே நடத்தும்
பதிசோழ வள நாடன் சரபேந்திர
பூபனிதைப் பகரும் வாறே.'' (கூ.டு)

(இ-ள்)

ஏலக்காய்	கிராம்பு
வாயுவிடங்கம்	கோரைக் கிழங்கு
சுக்கு	சிறு தேக்கு
* புட்கரமூலம்	மிளகு

இச்சரக்குகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துக், காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, திப்பிலிச் சூரணம் 2 பலமும் போட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

நோயின் பலத்தை அறிந்து, (¼ முதல் ½ தோலா எடுத்து) வெங்கீருடன் உட்கொள்ளவும். தினம் காலையிலும் மாலையிலும் உண்டு வரவும்.

பத்தியம் :—

புளி, புகையிலை, முதலியவைகளையும் இதர வாயுப் பண்டங்களையும் நீக்கவும். இருமல் தீரும்.

---

140. சளையிருமலுக்குத் 'திரிகடாதிச் சூரணம்'

"திரிகடு கோரைக் கிழங்குச் சடாமாஞ்சில்
கற்கடகசிங்கிந்துப்பு
திரிபலையினுடனுறுஞ்சரியாகக் கூட்டிப்
பொடி செய்திதற்குச்
சரி கண்டங்கத்திரி வேர் சூரணமும்
பண்ணி ரெண்டுஞ் சாரித்தே தான்
ஒரு வெருகடித்தூளுங் காலையினில்
கொண்டு வெங்கீருந்தானுண்ணே." (கூ. நி.சு)

---

* இச்சரக்குக் கிடைக்காவிடில் வெள்ளைக் கோஷ்டத்தை எடுத்துக் கொள்ளவும்.

"உண்டு பாரொருமாதந்தனிலீளை
யிருமலெல்லா மோடிப் போகு
மிண்டிய வாய்வின் பதார்த்தங்களெல்லாங்
தள்ளியுண்ணுவிமலனுர் தம்
முண்டகத் தாள் தனில் வாசமலரணிந்து
அருள் பெற்ற முதல்வனுளும்
அண்டினரைக் கார்த்தருள் தஞ்சையில் மா
னுசரபேந்திர னருளிதாமே." (கூபிளை)

(இ-ள்)

திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி)
சடாமாஞ்சில்
இந்துப்பு
கோரைக் கிழங்கு
கற்கட சிங்கி
திரிபலா (கடுக்காய், நெல்லி, தான்றி)

இச்சரக்குகளை வகையொன்றுக்குச் சம எடை (1 பங்கு) யெடுத்து நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்துகொண்டு, இதற்குச்சமன் கண்டங்கத்திரிவேர் சூரணம் போட்டு இரண்டையுமொன்றாகக் கலந்து கொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்துக் காலை வேளைகளில் வெந்நீருடன் உட்கொள்ளவும். ஒரு மாத உபயோகத்தில் ஈளை, இருமல், முதலான நோய்கள் தீரும்.

பத்தியம்:—

வாயு பதார்த்தங்களை நீக்கவும், (கருணைக் கிழங்கு, மாவுப் பண்டங்கள், பூஷணிக் காய், பாகற்காய், அகத்தி முதலிய வற்றை நீக்கி விடவும்.)

---

141. ஈளை, இருமல், க்ஷயத்திற்கு 'விளங்காதிச் சூரணம்'

"ஏலம் வாய்விளங்கமிலவங்கத்தின் பட்டைத்
திப்பிலி யிதுகள் நாலுந்
தேலவிடாதொரு பலமுஞ் சுக்கு கண்டத்
திப்பிலியுஞ் செப்பிரண்டும்

நாலு பலமோர் வகைக்கிம் மருந்தெல்லாஞ்
சூரணித்து நலமதாயுஞ்
சீலசூரணங் கண்ட நிறைக்குச் சர்க்
கரை கலந்து தினமுந் தானே.'' (கூடுஅ)

''தினமுங் காலையிலே வொரு கழஞ்செடுத்துக்
கொள்ளத் தீபனமுமுண்டாம்
ஈனவீளையிருமல் சயந்திரு மிதின் பெயர்
விளங்காதிச் சூரணமாங்
கனயோகசாலி வித்துவ சனசேகர
னெழில் மங்கள கல்யாணன்
அனசேரு மன்னதானனற்றஞ்சை சர
போசி மன்னனருளிதாமே.'' (கூடுகூ)

(இ-ள்)

ஏலக்காய்	வாயுவிடங்கம்
இலவங்கப் பட்டை	திப்பிலி

இவைகள் வகைக்கு 1 பலமும்

சுக்கு	கண்டத்திப்பிலி

இவ்விரண்டும் வகைக்கு. 4 பலமும் எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, இச்சூரணத்திற்குச் சரிநிறை சர்க்கரை கூட்டித் தினந்தோறும் காலை வேளையில் 40 குன்றிமணியளவெடுத்து உட்கொள்ளத் தீபனம் உண்டாகும்.

இம் மருந்தின் பெயர், விளங்காதிச் சூரணமாகும்

---

142. இருமலுக்குச் 'சாரணையாதி வடகம்'

''சாரணை வேர் கொடிவேலி வேர் மிளகுடன்
புளியஞ் சாம்பல் சுக்கு
சீரகந் தாளிச பத்திரி கண்டங் கத்
தரியின்வேர் திப்பிலியேலஞ்

சார்தால பத்திரங் கிராம்புடனே
பன்னிரண்டுஞ் சரியாய்ச் சேர்த்து
கூறுடனேவுலர்த்திப் பொடி செய்து வடி
கொண்டுமப்பாற் கூறக்கேளே.'' (கூஉம்)

''கூறக்கேளொரு பங்கு சூரணத்திற்
கைகந்து பங்கு குணமாம் வெல்லஞ்
சிருடனே தண்ணீர் விட்டனவிட்டுப்
பாகாகத்திரளும் போது
சூரணத்தைப் போட்டுக் கிளறியுமிறக்கிப்
பாக்களவு துடியாமுருண்டை
கூருடனே செய்து மொரு புதுக்கலசந்
தன்னில் வைத்துக் கொள்ளுவாயே.'' (கூஉக)

''வைத்துக் கொண்டே கடவுடனே நினைந்து
மோருண்டை வளமாந் தேனிற்
சத்துவமாயதி காலை கொள்ளு மொரு
மண்டலந்தான் சரீரந்தன்னில்
மெத்தவுபாதிக்கு மிருமலீளை
யற்று விடும் விபுலிதன்னில்
சத்துரு சமஹாரவை வெல் படையுடைய
சரபேந்திரன் சாற்றும் வாறே.'' (கூஉஉ)

(இ.ள்)

சாரணை வேர்	கொடிவேலி வேர்
மிளகு	புளியம் புரணி சுட்டசாம்பல்
சுக்கு	சீரகம்
தாளீசபத்திரி	கண்டங்கத்திரி வேர்
திப்பிலி	ஏலக்காய்
பச்சிலை	கிராம்பு

இச்சரக்குகளை (வகைக்கு 1 பலம் வீதம்) எடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். 60 பலம் வெல்லத்தைத் தூளாக்கி, வேண்டிய அளவு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கி, அதில் முன் சொன்ன சூரணத்தைப் போட்டுக் கிளறி, சூடாறு முன் இந்த லேகியத்தைப் பாக்களவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

அதிகாலைவேளையில் ஒரு உருண்டையைத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இவ்வாறு 40 நாளைக்கு உட்கொள்ளவும். இருமல், ஈளை முதலான நோய்கள் தீரும்.

---

143. ஈளையிருமலுக்கு இண்டம் வேர்ச் சூரணம்

"அடவியிண்டம் வேர்ப் பட்டை சிறு தேக்கி
னுடன் சுழலாவாரை வேருந்
திடக்கண்டங் கத்திரி வேரின்னலுஞ்
சரியாகச் சேர்த்திடித்து
அடவாகச் சூரணஞ் செய்தே தேனி
லுண்டுபாரந்தி காலை
விடுமீளை யிருமலெல்லாந் தப்பாம
லிதுநல்ல விதமதாமே." (கூஉங)

(இ-ள்)

இரண்டம் வேர் பட்டை	சிறு தேக்கு
சுழலாவாரை வேர்	கண்டங் கத்திரி வேர்

இவைகளைச் சரி எடை யெடுத்து, வெய்யிலில் காயவைத்துக், கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமள வெடுத்துத் தேன் விட்டுக் குழைத்துக், காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். ஈளை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

---

144. ஈளை, இருமலுக்குச் சூரணம்

"குஞ்சு பொரித்திடு கோழி முட்டைத் தோ
லெடுத்தரைத்துக் கொட்டைப் பாக்கில்
பிஞ்சாம லெலுமிச்சம் பழச்சாற்றை
நன்றுக விட்டரைத்து

இஞ்சிச் சாறதனிற் குழைத்து மூன்று
நாட்காலை தன்னிலிதமதாகச்
சஞ்சல மில்லாமற் கொள்ளீரையுட
னிருமலெல்லாந் தவிர்ந்து போமே.'' (உஉச)

(இ-ள்)

தானுக பொரித்த கோழி முட்டையின் ஓடு ஒரு கோட்டைப்பாக்களவு எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, இஞ்சிச் சாற்றில் குழைத்து 3 நாளைக்குக் காலை வேளைகளிலுட் கொள்ளவும். ஈளை, இருமல் முதலிய நோய்கள் தீரும்.

---

145. ஈளை, இருமல், உளமாந்தை, அக்கினி மந்தம், வாதகாசம், உள் சுரம், காய்ச்சல் முதலியவைகளுக்குத் 'திப்பிலி நெய்'

''திப்பிலி யொன்றைந்து பல மிளகுவாய்
விளங்கமுடன் சித்திர மூலந்
திப்பிலி மூலங்கார்போ கரிசி சிறு
மூலகமுஞ் செவ்வியமேழுந்
தப்பிலாமல் வகைக்கு மோர் பலமுஞ்
சிறு தேக்கு சாதிக்காயுஞ்
செப்பு கடுக்காய் தான்றிக் காய் கோஷ்டம்
கற்கடக சிங்குதானே.'' (உஉஞ)

''சிங்கி நெல்லிப் பருப்பு மதிமதுரமுடன்
சடாமாஞ்சில் சீரகத்தோ
டுங்கணக்குப் பத்தாம் வகைக்கோர் வகைக்கு
மரைப் பலந்தானு மெடுத்து
சங்கையிலாமலும் பதினெட்டு வகைமருந்து
மரைத்து தானேயப்பால்
பொங்குமிகும் பசுவினெய்யா று நாழி
விட்டுத் தூள் போட்டிடாயே.'' (உஉசு)

"போட்டு நல்லமெழுகு பதத்திலில் வடித்துக்
கடவுளரைப் பூஜை செய்து
நாட்டமுடன்தி காலை யிருகழஞ்சு
கொள்ளெட்டு நாளுந்தானே
வாட்டிய யீளையுயிருமலுளமாந்தை
யக்கினி மந்தம் வாதகாச
மூட்டிடுமுள்சுரங் காய்ச்சல் காசமெரி
குரலெலா மோடிப்போமே." (நூஎ)

(இ-ள்)

திப்பிலி 5 பலம்

மிளகு வாயுவிடங்கம்
கொடி வேலி வேர்ப் பட்டை கண்டத்திப்பிலி
கார் போகரிசி சிறுமூலகம் (ஓர் கிழங்கு)
செவ்வியம்

இவைகள் வகைக்கு 1 பலம்

சிறு தேக்கு சாதிக்காய்
கடுக்காய்த் தோல் தான்றிக் காய்த்தோல்
கோஷ்டம் கற்கடசிங்கி
நெல்லிப் பருப்பு அதிமதுரம்
சடாமாஞ்சில் சீரகம்

இச்சரக்குகள் வகைக்கு ½ பலம்

இவைகளை யெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து.

பசுவின் நெய் 6 படியுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடித்து, இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இந்நெய்யில் 2 கழஞ்சு எடுத்துத் தினம் அதிகாலையில் உட்கொள்ளவும். 8 நாட்களில் ஈளை, இருமல், உளமாந்தை, அக்கினிமந்தம், வாதகாசம், உள் சுரம், காச்சல், எரிகுரல் முதலான பற்பல நோய்களுந் தீரும்.

---

146. ஈளை, இருமல், அருவருப்பு, குன்மம் மூலம், பெருவயிறு, காசம், சூலை, நெஞ் சடைப்பு, ஈளை, இரைப்பு, அகுவை, நாலிகை, பொருமல், கிராணி, வயிற்றில் புழு, மந்தாக் கினி முதலான நோய்களுக்குத் 'தைலம்'

"தூதுவளையுங் கையாந்தகரை தேட்
கடையாடா தொடை சங்கு
சாதகக்கீழ் காய் நெல்லியுங் கண்டங்
கத்திரி சாரணை நொச்சில்
தாதவிழுஞ் சுழலாவாரையினுட
னேசிறு வழுதலை சமூல
மோதிய பேராமுட்டி பன்னிரண்டில்
வகைக்கு மொரு பிடியுந் தானே." (கஉஅ)

"ஒரு பிடியு மெண்ணெயிதற் கொரு
படியும் விட்டு யிதிலொக்கத் தானே
திரிகடுகுமதிவிடயம் வெட்பாலை
யரிசியுடன் சிறு தேக்கோமம்
பெருங்குரும்பை யழிஞ்சில் விதை வசம்பு
முத்தக்காசு பலமாமிங்கு,
கருஞ்சீரக சீரகங் கடுகு
ரோகணியுங் கடுகுந்தானே." (கஉசு)

"தானே பெருமரப்பட்டை வாய் விளங்கத்
தூடனே தூதளையின் வேருங்
கானிற் காட்டாமணக்கம் வேர் கொடி வேலிப்
பட்டை கண்டங்கத்திரி
ஞனபிலா வேராக யிருபத்தி
ரண்டு மருந்தொக்கக் கொண்டு
நானுரைத்த படிக்கு வகைக்கோர் வராக
னிடையது நயமாய்க் கூட்டே." (கஎம)

(இ-ள்)

ஒரு புதுச்சட்டியில் மோரைவிட்டு அச்சட்டியின் வாய்க்கு வேடுகட்டி ஆவாரம் பூவையும் கொழுந்தையும் கன்கு அரைத்து அதன்மேல் வைக்கவும். பின்பு இச்சட்டியை அடுப்பின்மீது ஏற்றி எரிக்கவும். மேலே வைத்த சரக்குகள் வெந்தபின்பு சட்டியைக் கீழே இறக்கி வேட்டை எடுத்துவிட்டு அடியிலுள்ள முறிந்தமோரிலிருந்து ஒரு புன்னைக்காயளவு கற்கம் எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் அம்மியில்வைத்து அரைத்துக்கொள்ளவும். அரைத்த விழுதை இரு பாகங்களாக்கி உருட்டி காகசெங்காரமும் | பனவிடைவைத்து, காலை மாலை இருவேளைகளிலும் கொடுக்கவும். இவ்வாறு 3 நாள் கொடுத்தால் அன்பம் தருகின்ற நீரிழிவு தீரும்.

பத்தியம் :—

கடுமையான இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

31. நீரிழிவுக்கு ஆவாரைவிரைச் சூரணம்

ஆவாரையின் விரைச் சூரணமொன்று கேளு
ஆவரையின் விரைபடி யொன்றரைகொணர்ந்து
காவிலுரை பாலியிலே ச்சாறுவிட்டு
கடிகைமுப்பது மதையுமூறவைத்து
மேவி யெடித்தே காயப்போட்டு மன்னு
மிளநீரில் முப்பது நாழிகைமுன் போல்,
பாவமுடன் காயவைத்துப்பின் னுலர்த்திப்
பத்திரமாய்க் கருக்காமல் வருத்திடாயே. (நூ)

வருத்துத் திருகையிலிட்டு மாவதாக்கி
வடிகட்டிக்கொண்டு நிலப்பனைக்கிழங்கு
பருத்த நெய்தற் கிழங்குடனே மிளகுநெல்லி
பருப்பு தாமரைக்கிழங்குமதனின்றூது

திருத்தும் கன்னியின் வேர்கெருஞ்சிக்காயுக்
திப்பிலி தானிக்காயுங் கடுக்காயோடே
தருக்குளுறு தேற்றாம்வித்துடன் கோம்பு
சாதிக்காய் கடலிறஞ்சிப் பட்டைதானே. ருடு

பட்டைக்கு ப்பதிஞ்று வகையொன்றுக்குப்
பலமொன்று காற்பலஞ்சர்க்கரையதாகுஞ்
சட்ட குங்குமப்பூ பச்சைகற்பூரஞ்
சதிராங் கோரோசனை யிம்மூன்றிலுக்தான்
இட்டிடொரு வராகனிடை சூரணித்து
இதமாகக்கலக்து நீ வைத்துக்கொண்டு
திட்டமாயெருமையின் தயிரிலுண்ணு
சிக்காட்டால் வெங்நீரிலுண்டுபோரே. ருசு

வெங்நீரிலுண்டுபார் பொன்னுங் கண்ணி
மெய்ச்சாற்றிற்கொள்ளந்தி சந்தியுந்தான்
சொன்னேங்கால் மண்டலந்தானிச்சாப்பத்தியங்
துடியான நீரிழிவுந்தீர்ந்தே யோடும்
பொன்னிவளஞ்சூழ் சோழகாட்டையாளும்
புண்ணியனிரணிய கர்ப்ப தானஞ்செய்யு
மன்னருக்கு மன்னன் சரபோசிராசன்
மானுவுணராவரையின் சூரணமாமே. ருஎ

(இ-ள்)

ஆவாரை விரை படி 1½யை ஏடுத்து, பாலியிலைச் சாறுவிட்டு 30 நாழிகை ஊறவைத்துப் பின்பு அதைக் காயப்போடவும். அதில் இளநீரைவிட்டு மறுமடியும் 30 நாழிகை ஊறியபின் காயப்போடவும். அதைப் பொன் வருவலாக வருத்துக்கொண்டு திருவையிட்டு மாவாக அரைத்துக்கொள்ளவும். அதை வஸ்திரகாயம் செய்து கொண்டு,

நிலேப்பனங்கிழங்கு
நெய்தற்கிழங்கு
மிளகு
நெல்லிக்காய் (பருப்பு)
தாமரைக்கிழங்கு
தாமரை தாது
கன்னரிவேர்
கொருஞ்சில்காய்
திப்பிலி
தான்றிக்காய்
கடுக்காய்
தேற்றாங்கொட்டை
சுக்கு
கிராம்பு
ஜாதிக்காய்
கடலிறஞ்சிப்பட்டை
சுக்கு

இவைகள் வகைக்கு 1 பலம்

சர்க்கரை	4 பலம்
குங்குமப்பூ	1 விராகனிடை
பச்சைக்கற்பூரம்	1 ,,
கோரோசனை	1 ,,

இவை யாவற்றையும் நன்கு சூரணித்து வைத்துக் கொண்டு எருமைத் தயிரில் தினந்தோறும் காலை மாலை சாப்பிடவும். கிடைக்காவிட்டால் வெந்நீரிலோ பொன்னாங் காணிச் சாற்றிலோ கால்மண்டலம் (11. நாள்) சாப்பிட்டு இச்சாபத்தியமாக இருந்துவர, பலம்பொருந்திய நீரழிவும் நீரும்.

32. நீரிழிவுக்குப் பஞ்ச சர்க்கரை

சாத்தமிகு பஞ்சசர்க்கரை தாமொன்று
தாரணியில் மானிடர் நீரிழிவுத்குந்தான்
சீந்திற்றண்ட திலுடனே மேலின்ரோலைச்
சீவியே தள்ளியதைத்துவைத்துக்கொண்டு
பாத்தமுள்ள தண்ணீர்விட்டே கரைத்துப்
பண்பான மற்றுமொரு பாலைதன்னி
லேத்திப்பிழிந்தே வடியுங்கட்டிக் கொண்டு
இதைத் தெளியவைத்து மண்டியெடித்துக் கொள்ளே

எடித்துக் கொள்ளிப் படிக்கி யேதானீர்வள்
ளிக்கிழங்கையும் நிலைப்பாலைக் கிழங்கை
வடிப்பமுடனன்றுக வுலர்த்திக்கொண்டு
வஸ்திரகாயம் பண்ணிவைத்துக்கொண்டு
திடத்துடனே நிலக்குமிழ் வேர்குருணிதன்னை
செம்மையாயரைத்துத் தண்ணீரிற் கலக்கி
வடித்துவந்த நீரில் பிழிசதாபலத்தை
வகுத்து அரைப்பழத்தை யதைத்தெளியவையே சக

வைத்திடுமண்டியை யெடித்துக்கொண்டு நற்கோ
வைத்தண்டை யிப்படியே செய்துகொண்டு,
உரைத்திடைந்தையும் வெவ்வேருகக்காய்ச்சி
நளினமாஞ்சர்க்கரையை வைத்துக்கொண்டு
பத்திரமாய் வகை சரியாய்நிறுத்துக்கொண்டு
பண்பாஞ்சர்க்கரை யைந்தையுங்கலந்து
சுத்தமுள்ள மேகநாதந்தானுகில்
சொற்காந்த பற்பமாகிலுந்தான்வையே கூ

காந்தபற்பமாகில் வங்கபற்பமாகில்
கருத்துடனே பணவிடையுமரையுங்கூட்டிச்
சாந்தமுடன் முன்கலந்திருந்த பஞ்ச
சர்க்கரையில் வெருகடியு மதிற்கலந்து

வாய்ந்த நற்றேன் வெண்ணெய் மோரிலேகொள்ள
வலுத்த நீரிழிவோடும் வாணருக்கு
மீந்து மறையவர்க்குதவி மனுவைக்காக்கு
மெழில் சரபோசேந்திரனுரையிது தப்பாதே. கூஉ

(இ-ள்)

சீந்திற்கொடியின் மேல் தோலைச் சீவி எறிந்துவிட்டு ஒரு பாணையில் தண்ணீர் வைத்து அதில் சீவிய சீந்திற் றண்டுகளை நன்றாகக் கசக்கவும். பின்பு அச்சக்கைகளை கன்கு பிழிந்துகொண்டு பாணையிலுள்ள தண்ணீரை வடிக் கட்டிக்கொண்டு, தெளியவைத்து மேல் நீரை நீக்கி மண் டியை எடித்துக்கொள்ளவும். நீர்வள்ளிக்கிழங்கையும் மேல்கண்டவாறே செய்து மண்டியை எடித்து வைத்துக் கொள்ளவும்.

நிலக்குமிழ்வேர் ஒரு குருணியரைத்து வடிக்கட்டின தண்ணீரில் யெலுமிச்சம்பழச்சாறு ஒரு மூடி பிழிந்து தெளியவைத்து மண்டியைக் காய்ச்சிக்கொள்ளவும். கோ வைத்தண்டை இப்படியே தண்ணீரில் கலக்கித் தெளிய வைத்து மண்டியை இறுத்துக்கொள்ளவும். இவ்வாறு இந்த 5 வித சர்க்கரையையும் சமனிடை எடுத்துச் சேர்த் துக்கொண்டு, மேக ரோகத்திலாவது காந்தபப்பத்திலாவது வங்கபப்பத்திலாவது ½ பணவிடை வைத்து, அதனுடன் ஒரு வெருகடி இந்த பஞ்ச சர்க்கரையும் வைத்துத் தேனி லோ, வெண்ணெயிலோ, மோரிலோ கலந்து சாப்பிட கீரி ழிவு தீரும். (1 பணவிடை=$\frac{1}{16}$ விராகனிடை=3 குன்றி மணியிடை)

33. அரோசகத்துக்கும் நீரிழிவுக்கும் கடாயம்

கடலிறஞ்சிபட்டை யாவரைவேர்ப்பட்டை
கருதுமிரண்டில் வகைக்குப்பல முப்பத்தரம்
அடவிகெல்லிமுள்ளிவிரை தாணிக்காயும்
பறங்கிப்பட்டை மூன்றும் பலமொன்றுமே

திடமான தேற்றான் வித்தரைப்பலந்தா
னிதமாக யிடித்தொரு பாணையிலேபோட்டு
அடவுடனஞ்சு மரக்காற்றண்ணீர்விட்டு
அதையுமூச்சிதமாகக்காய்ச்சிடாயே. கூஉ

காய்ச்சியந்தக் கடாயமதை நினைத்தபோது
கவனமாய்க்கொள்ள வரோசகமுந்தீரும்
பாய்ச்சல்மிகு நீர் கிற்குமிதற்குமிச்சாப்
பத்தியமாஞ்சிர கிரியிற்செட்டிப்பெண்ணுக்
காச்சியார் வகைக்குதவுஞ்சிவன்றன் பாதம்
அர்ச்சித்து அருள்பெற்ற வன்பனிக்தி
ராச்சியமெல்லாம் புகழுஞ் சரபோசேந்தி
ரனலமாக வுலகினுக்குரைத்த தாமே. கூங

(இ-ள்)

கடலிறஞ்சிப்பட்டை	10 பலம்
ஆவாரை வேர்ப் பட்டை	10 பலம்
நெல்லி முள்ளி	1 பலம்
தான்றிக்காய்	1 பலம்
பறங்கிப்பட்டை	1 பலம்
தேற்றாங்கொட்டை	½ பலம்

இவைகளை நன்கு இடித்து ஒரு பாணையில் போட்டு 5 மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி 1 மரக்காலாக வற்றக் காய்ச்சவும்.

இக்கஷாயத்தை வேண்டும்போதெல்லாம் உபயோகித்துவர அரோசகம் நீரிழிவு முதலியவை தீரும்.

34. நீரிழிவுக்கு வெல்லாதிக் கடாயம்

வல்ல வெல்லம் பாதிரியின் பட்டைத் தண்ணீர்
காழி விட்டுக் காய்ச்சியதை யுண்டு பாரு
சல்லய ஞ்செய் நீரிழி வுமூடனே தீருங்
தப்பாமற் பத்து சரளந்தி சந்தி

வல்லபமாய் க்கொள்ளிந்த லையகத்தோர்
வருத்த மிலாதிருக்க மனதெண்ணி யிந்த
துல்லிய மாங்குடி நீரைக்கொள்ளு தஞ்சை
துரைமாலு கிர்ணயித்த முறையதாமே. கூசி

(இ-ள்)

கல்லவெல்லம்
பாதிரிப்பட்டை

இவைகளை கசுக்கி தண்ணீர் | காழிவிட்டு $\frac{1}{4}$ பாகமாகக் காய்ச்சி அக்கஷாயத்தை |0 நாளைக்குக் காலை மாலை சாப்பிட நீரிழிவு நீங்கும்.

35. நீரிழிவுக்கு மூழ்கத் தைலம்

பருத்திவிரை யிடித்து காற்பது பலந்தான்
பதிஞறுபடி தண்ணீர் விட்டொன்ருக
யிருத்துக்கொ ள்ளருகம் வேரது தான்கேளு
இருபது பலம் பத்துப்படி தண்ணீர்விட்
டெரித்து மதையு மெட்டொன்ருகக் காய்ச்சி
யிதையும் வடித்தே யமுக்கிருக்கிழங்கு
திருத்தி மெருகங் கிழங்கு வெட்டி வேருஞ்
சித்தமுட்டிவேர் நெல்லிப்பருப்புங் கூட்டே. கூடு

கூட்டிச் சிற்றுமணக்கம் வேர் நிலக்குமிழ்வேர்
குணமான தண்ணீர் மிட்டான் கிழங்கு கூட
காட்டினிற் பாதிரிவேருமத்திப்பட்டை
கல்ல நீர்ப்பூலாவின் பட்டை கூட
வாட்ட மில்லாவாவாரைப் பட்டையொக்க
வகையான பன்னிரண்டிற் றினிசொன்றுக்கு
மூட்டுவாய் பலமஞ்சு பிடித்திரண்டு
மூடாவினிலே போட்டதிற்றண்ணீருற்றே. கூசு

ஊத்து யிருபது மரக்கால் தண்ணீர் விட்டு
ஒன்றுகக் காய்ச்சி யிந்தக்கடா யந்தன்னிற்
சேர்த்திடு நீ நல்லெண்ணெய் படியு நாலுங்
திறமாகக் கலந்து கல்ல வடுப்பிலே தான்
வற்றி நன்றுயெரி கலந்துவரச்சே தானும்
இளந்ரும்நாலுபடி விட்டுக் காய்ச்சு
வார்த்திருந்தாவின் பால் படியும் நாலு
பதமாக விட்டிதற்குக் கற்கங்கேளே சுஎ

கற்கங்கேள் கெவுரா சீரக மஞ்சிஷ்டி
கரு வேலம்பட்டை திரிகடுகங் கல்கார்
தற்கோலமதி மதுரஞ்சாதிபத்திரி
சாதிக்காயும் பஞ்சதிரவியத்தோ
டொக்கு மதிமதுரமுடன் லவங்க பத்திரி
யுந்தகரம் நாகணமுஞ் சிறுநாகப்பூ
சொக்கு மத்திமுகிஞ் நந்தாளீச பத்திரி
சொற்புன் சாந்துப்பட்டைக் கூகை நீரே. சுஅ

நீரிலுரை தாமரையின் வளையம் கல்ல
நொடிய புளியங்கொட்டைத் தோலுங் கூட
பாரில் சடாமாஞ்சிலுடனே சமுத்திராப்
பச்சை தாமரை வளைய நந்தாமரை நீர்
கூருமாவரை விரையினரிசி கல்ல
கொற்ற மல்லிசெங்கழுநீர் கிழங்குடன்கிளி
யூரம்பட்டையுங் கடலினிறஞ்சிப் பட்டை
யுற்ற விளாம்பிசினும் வில்வப்பிசின தாமே. சுஉ

ஆருமுப்பத்தி ரண்டில் வகையொன்றுக்கு
மகலாமல் வராணிடை ரெண்டுங்கூட்டி
வாருள தென்னம் பாளைச் சாற்றை விட்டு
முரைத்த தனிற் போட்டு பதம்பார்த் திறக்கிப்

பாகமுடன் புனுகுசட்டம் பலமுங்காலசம்
பச்சைக் கற்பூர மிடையரைவராகன்
தாகமுடனுரைத்து அதிற் போட்டுந்தானே
தப்பாமல் வாலே பதம் போற்றி மூழ்கே. எயி

போத்தியே மூன்றுகாட் கொருக்கால் மூழ்கு
பொல்லாத வாதபித்த சேட்டுமத்தா
லூத்துசலரோக மாங்கிஷத் தெடுத்த
வுற்பன நீரோகமது யிருபதுந்தான்
கேத்திர ரோகம் வயற்றினெரிவு தாகம்
ரெத்த மூலஞ்சியின் மூலங்கிருணி
சாத்திய காமாலே பாண்டுடனே சோகை
சுயம் விரணஞ்சுர மெல்லாந் தீருந்தானே. எக

தீரும்பார்சலரோக மெல்லா மெண்ணெய்
தேய்த்தன்று மிச்சாபத்திய ஞ்செய் நீயுங்
கூறுமொரு மண்டலம் நீமூழ்கு கல்ல,
கோதையுடனே மருவலா காதிந்த
தாரணியி விரணிய கர்ப்பதானம் வெண்ணி
தந்தி தானம் விப்பிரகன்னி தானம்
பூரணமாயி ன்னம்வேறு தான ஞ்செய்து
புகழ்பெருகு சரபேந்திர னருளி தாமே. எஉ

(இ-ள்)

பிருத்திக்கொட்டை 40 பலம் எடுத்து ஒன்றிரண்டாக இடித்து எடுத்துக்கொண்டு 16 படி தண்ணீர்விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டில் ஒன்றுகச் சுண்டக் காய்ச்சவும். அருகம்வேர் 20 பலத்தை எடுத்து 10 படி தண்ணீரிலிட்டு அதையும் எட்டில் ஒன்றுகக் காய்ச்சிக்கொள்ளவும்

அமுக்கிராக்கிழங்கு 5 பலம்
மெருகன் கிழங்கு ,,

வெட்டி வேர்	5 பலம்
சித்தாமுட்டிவேர்	,,
நெல்லிப்பருப்பு	,,
சிற்றாமணக்குவேர்	,,
நிலக்குமிழ்வேர்	,,
தண்ணீர்விட்டான் இழங்கு	,,
பாதிரிவேர்	,,
நீர்ப்பூலாப்பட்டை	,,
ஆவாரம்பட்டை	,,

இவைகளை நன்றாக நசுக்கி இரண்டு மடாவில்போட்டு 20 மரக்கால் தண்ணீர் ஊற்றவும் இதையும் எட்டிலொன்றாகக் காய்ச்சி இறுத்துக்கொண்டு எல்லாவித கஷாயங்களையும் ஒன்று சேர்த்துக்கொள்ளவும்.

நல்லெண்ணெய் நாலு படியும் சேர்த்து அடுப்பின் மீது வைத்துக் கொதிக்கவைக்கவும். இவையாவும் ஒன்றுபட்டுக் கலந்து வரும்போது, இளநீர் 4 படியும் பசுவின் பால் 4 படியும் சேர்த்துக்கொண்டு, கீழே கண்ட சரக்குகளின் கல்கத்தையும் எண்ணெயோடு சேர்த்துக் கலந்து கொள்ளவும் :—

1. கருவேலம் பிசின்
2. சீரகம்
3. மஞ்சிஷ்டி
4. கருவேவல்பட்டை
5. சுச்சு
6. திப்பிலி
7. மிளகு
8. கல்கார்
9. தக்கோலம்
10. அதிமதுரம்

11. சாதிபத்திரி
12. சாதிக்காய்
13. லவங்கப்பத்திரி
14. சிறுந்தி தகரம்
15. ரகணம்
16. சிறுநாகப்பூ
17. தாளீசப்பத்திரி
18. பூஞ்சாந்திப்பட்டை
19. கூகைநீறு
20. தாமரைவளையம்
21. புலியங்கொட்டைத் தோல்
22. சடாமாஞ்சில்
23. சமுத்திராபச்சை
24. அத்திமொட்டு
25. செங்கழுநீர்க் கிழங்கு
26. தாமரை நீர் (சமூலம் இடித்த சாறு)
27. ஆவாரை விரை
28. கொத்தமல்லிவிரை
29. இலுப்பூரம்பட்டை
30. கடலிறஞ்சிப்பட்டை
31. விளாம்பிசின்
32. வில்வப்பிசின்

இந்த 32 சரக்குகளையும் வகைக்கு 2 வராகனிடை யெடுத்து, தென்னம்பூச்சாற்றினல் கன்கு அரைத்து, அடுப்பின்மேலிருக்கிற தைலத்திற் குழப்பிக்கொண்டு, தைலத்தைத் தகுந்த பதத்தில் இறக்கவும். தைலம் ஆறிய பின் புனுகு சட்டம் $\frac{1}{4}$ பலம், பச்சைக்கற்பூரம் $\frac{1}{2}$ வராக னிடையும் சேர்த்துக்கொள்ளவும்.

3 காலைக்கு ஒருதடவை தலே முழுகிவரவும்:

இதனால் தீரும் வியாதிகள் :—

1 வாதமேகம்
2 பித்தமேகம்
3 கபமேகம், மாம்ஸமேகம் முதலிய 20 விதமான மேகங்கள்
4 நேத்திரரோகம்
5 வயிற்றின் எரிவு
6 தாகம்
7 ரத்தமூலம்
8 சீழ்மூலம்
9 கிருணி (கிரஹணி)
10 காமாலை
11 பாண்டு
12 சோலை
13 விரணம்
14 சுரம் இவைகள் தீரும்

பத்தியம் :—எண்ணை தேய்த்துக் கொண்ட தினத்தன்று இச்சாபத்தியமாக இருக்கவும். ஸ்திரீ சங்கம் இல்லாமல் ஒரு மண்டலம் தலை முழுகிவர மேற்சொன்ன ரோகங்கள் தீரும்.

குறிப்பு :—73 முதல் 79 வரையில் பாடல்கள் உள்ள ஏடுகள் சுவடியில் காணப்படவில்லை.

36. நீரிழிவுக்கு

ஆத்தாத நீரிழிவு நரர்க்கு வந்தால்
அதற்கொன்றுகேள் கானிலுரை கின்ற
தேத்தான் வித்ததனைக் களஞ்சரைத்து மேகா
திக்குவிகை யொன்றுவைத்துக் கொள்ளுகாலை
யேத்தாரே யந்திக்கி க்கடாயந் தானிட்
டேகொள்ளு நீரிழிவு தீருமெண்ணு

மாந்தரை வென்ற துளசேந்திர பூபன்
மைந்தன் சரபேந்திர துணரவிழ்தமாமே. எங

தேத்தான் வித்தை ஒரு கழஞ்சு எடுத்து கன்கு அரைத்து அவ்விழுதுடன் தண்ணீர் கலந்து கஷாயமாக்கி அதில் மேகாதி குளிகையொன்று சேர்த்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிடத் தீராத நீரிழிவுகள் தீரும்.

37. நீரிழிவுக்கு

சூரைதட்சி யிரும்பிலி நீர்ப் பூலாவேரு ங்,
துய்ய பொன்முசுட்டை யாவரையின்வேருங்
கூறுமைந்து வேருங்கடலிறஞ்சிப்பட்டை,
கோரையுடகிழங்கு குன்றில்தேற்றும்வித்து
தாரணியின் மூங்கிலிலை திரிபலையெல்லாஞ்
சமனுகச் சேர்த்திடித்துப் புதுப்பாண்டத்தில்
சீருடனே வண்டு கட்டி வைத்துக்கொண்டு
செய்யும் வகையது சொல்வேன் எருமையோடே.

ஒருகலச மாதலொரு சட்டியாதலு நிமையுட
னிரண்டுபடி தண்ணீர்விட்டு
மருந்தறி லோர் பிடியுந்தானெடுத்துப் போட்டு
வண்டு கட்டி முற்சாமம் ரவியில் வைத்து
துருசாக வடுப்பேத்தி யுமக்காய்க் \காய்ச்சித்
தூய தேனெரு காசினிடையுங் குத்தி
வரிசையுடன் காலமேகொள்ளு கன்ரு
மந்திக்குச்செய்யும் வகையதனைக்கேளே. எரு

அதுகேளு திரிபலை பொன்முசுட்டை வேரு
மற்பு தமாமூங்கிலிலை கோரைமூலம்
இது காலும் வகைக்கிரண்டு காசிடை
தானி டித்திரண்டு படி தண்ணீர் விட்டேழக்கரய்

இதமாகச்காய்ச்சி த்தேன் தன்னி லுண்ணு
இடரான நீரிழிவுமேகும் பாரு
முதன்மைபெறு தஞ்சைநகர் தன்னையாண்டு
முசிதமிகு சரபேந்திர னுணர்ந்த தாமே. எசு

(இ-ள்)

சூரைமின் வேர்
இரும்பிலி வேர்
நீர்ப்பூலா வேர்
பொன்முசுட்டை வேர்
ஆவாரை வேர்
கடலிறஞ்சிப்பட்டை
கோரைக்கிழங்கு
தேற்றுங்கொட்டை
மூங்கில் இலை
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
தொட்டால் சுருங்கிவேர்

இவைகளை வகையொன்றுக்கு 1 பலம் எடுத்து நன்கு இடித்து ஒரு புதுப்பாண்டத்திலிட்டு வேடுகட்டி வைத்துக்கொண்டு ஒரு கலசத்தில் 2 படி எருமை மூத்திரம் விட்டு மேற் மருந்தில் ஒருபிடி எடுத்துப்போடவும். அந்த மூத்திரத்தோடு கூடிய சட்டியை காலை வெய்யிலில் 1 ஜாமம் வைத்து அடுப்பின் மேலேற்றி நன்கு ஒரு உழக்காகவற்றக் காய்ச்சவும். இதைக் காலைநேரத்தில் ஒருகாசிடை தேன் கூட்டிச் சாப்பிடவும்.

சாயங்காலத்தில்,
கடுக்காய்
நெல்லிக்காய்

தான்றிக்காய்
பொன்முசுட்டை வேர்
மூங்கிலிலை
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு 2 காசிடை எடுத்து நன்றாக இடித்து 2 படி தண்ணீர்விட்டு ஒரு உழக்காகக் காய்ச்சி, தேன்விட்டு சாயங்காலத்தில் சாப்பிடவும். தீராத நீரிழிவுகள் பலவுந்தீரும்.

38. நீரிழிவுக்குக் கொன்றைச் சூரணம்

செழுமலர்க் கொன்றையி னிலையை யுலர்த்தி
ச்சூரணஞ்செய்து வடிகட்டி வஸ்திரகாயம்பண்ணி
வழுவாம லந்தி சந்தி வெருகடிப் பிர
மாணங்கொள் சலக்கழிச்சலுடனே நீரி
னழிவும்போஞ்சிவகிருபை தன்னுலித்த
அவனியை யாள மன்னருக்கு மன்னனெங்கோன்
எழில் மிகுந்த போசலகுலத்து மானு
மியல்பாக வுணர்ந்த சூரணம தாமே. எஎ

(இ-ள்)

கொன்றையின் இலையை உலர்த்திச்சூரணம் செய்து சலித்துப் பின்பு அதை வஸ்திரகாளனம் செய்து வைத்துக்கொள்ளவும். தவருவல் காலையும் மாலையும் ஒரு வெருகடிப் பிரமாணம் உட்கொள்ளக் கழிச்சல், நீரிழிவு இவைகள் தீரும்.

39. நீரிழிவுக்கு வலாதி உண்டை

வலவிழு தொன்று சொல்வேன் கேளுமே
லிவங்கம மிர்தவல்லிக் கிழங்கினாடே
கோல த்தாமரை வேரயங்கிராம்பா வாரை
கொள் தண்ணீர் மிட்டா னற்கிழங்குந்தானும்

சில பஞ்சாங்கத்தோ டெட்டினந்தான்
சேர்சமமாய் மோரிலரை த்துண்டைசெய்து
மேலு மதையாவின் பால்தனி லுண்ணும் பிற
மேகமெலாந்தீரும் விபுவுணர்ந்த தாமே. எஅ

ஏலம்
லவங்கப்பத்திரி
கிராம்பு
ஆவாரைப் பஞ்சாங்கம் (வேர், பட்டை, இலை, பூ, காய்)
அமிருதவல்லிக்கிழங்கு (சீந்திற்கிழங்கு)
தண்ணீர்விட்டான் கிழங்கு
தாமரை வளையம்

இவைகளை மோரிலரைத்து உண்டை செய்யவும்.

அனுபானம் :—

பாலில் உட்கொள்ளவும். மேக முதலானவை தீரும்.

40. நீரிழிவுக்கு ஆவாராதிப்பட்டைச் சூரணம்

ஆவாராதிப்பட்டைச் சூரண மொன்று
ஆவாரம்பட்டை த்தூள் காழியாகும்
பூவிளிற் கொட்டிக்கிழங்கு த்தூளும் காழி
பொற்புள வரகரிசி சிறியது காழி கூட்டி
தாவிவளர் தினையரிசியுரியும் கல்ல
சம்பாப் பச்சரிசியுழக்குப் புழுங்கல்
மேவுமரிசியு முழக்கு இவைகளெல்லா
மிரவி தனில் நீர் வற்றக்காய வையே. எக

காயவைத்து இடித்துத் தூளாக்கி யோடு
காய்ந்த பின்பு மணம்வரவும் வருத்துக்கொண்டு
பாயமுடன் குடிக்கை தனிலடைத்துக் கொண்டு
பண்பாகத் தினம் வெருகடிப் பிரமாண

காயவைத்து இடித்துத் தூளாக்கி யோடு
காய்ந்த பின்பு மணம்வரவும் வருத்துக்கொண்டு
பாயமுடன் குடிக்கை தனிலடைத்துக் கொண்டு
பண்பாகத் தினம் வெருகடிப் பிரமாண
மாயதை மீ பத்து நாட் கொண்டுபாரு
வலுத்த நீரிழிவு மறு மவனி யோர்க்குத்
தாயக மாஞ்சரபோசி ராசபூபன்
ரூலுணர்ந்த ஆவராதிச் சூரணமதாமே. அம்

(இ-ன்)

ஆவாரம்பட்டைச் சூரணம்	1 காழி
கொட்டிக்கிழங்குத் தூள்	1 காழி
வரகரிசி	1 காழி
இணையரிசி	½ படி
சம்பாப்பச்சரிசி	1 உழக்கு
சம்பாப் புழுங்கலரிசி	1 உழக்கு

இவைகளை கன்றுக நீர் சுண்டும் வரை வெயிலில் உலர்த்தி நன்கு தூளாக்கி, அதைப் பொன்வருவலாக வருத்துக்கொண்டு ஒரு குடிக்கையில் அடைத்துவைக் கவும். இதில் தினந்தோறும் ஒருவெருகடிப்பிரமாணம் 10 நாள் சாப்பிட வலுத்த நீரிழிவு தீரும்.

41. நீரிழிவுக்கு வெள்வங்க பற்பம்.

பூலாவினிலையும் புண்ணாக்கிரண்டும்
பொடியாக வரைத்து வடையாய்த்தட்டி
யேலான வெள்ளீயம் பலமொன்று
மிரதமது பலமொன்று மிரண்டுங் கூட்டி
மேலான தகடதாக்கி யதனிற் கீழுமேலு
முன்சொல்ல டைகொண்டு மூடியேதான்
மாலாகப் புடமிட்டுப் பற்பமாக்கி,
வைத்துக் கொண்டதைச் செய்யும் வகைதான் கேளே

வகைகேளு விடத்தரிலைப் பொடியதாக்கி
வருத்த பொடியொரு காசினிடையும் பற்பங்
துகையுடனேர் பணவிடையு மெடித்தாவாரைத்
தூய கொழுந்தரைத் தெருமை மோரிலேதான்
றகைவான பிட்டிட்டுப் பிழிந்து அந்தச்
சாறில் மருந்தைக் கரைத்து அன்பிலேடே
சகமீதிற் கடவுளரைத் தியானம் பண்ணிச்
சதிராக நீயுமதைக் கொடுத்திடாயே. அ

கொடுத்தி டந்திசந்தி ரண்டு வேளையுந்தான்
கொள் பத்துகாளிச்சா பத்தியமாகத்
திடத்துட னீயுண்ணு இந்த அவுஷதசாரக்
தெரியுமிருபது நீரினிழி வுந்தீரும்
படித்தவர்கள் கவிபாடும் புலவர் செய்யுள்,
பண்பறியுந் தஞ்சை சரபோசி ராசன்
அடித்தவரை யீடேற்றும் விபுவுணர்ந்த
வன்பாக வெள்வங்க பற்பமாமே. அக

(இ-ள்)

பூலாவின் இலை
பிண்ணாக்கு (எள்)

இவ்விரண்டையும் பொடியாக அரைத்து, கொஞ்சம் தண்ணீர் சேர்த்து வடையாகத் தட்டிக்கொள்ளவும்.

சுத்திசெய்த வெள்ளீயம், சுத்திசெய்த பாதரஸம்—

இதனை வகைக்கு ஒருபலம் எடுத்து, இரண்டையும் மத்தித்துக்கொண்டு தகடாக அடித்துக்கொள்ளவும். இத் தகட்டுக்கு மேலும் கீழும் மேலே சொன்ன அடையை வைத்துவிடவும். இதற்குச் சீலமண் செய்து புடம் போட வும். புடம் ஆறியபின் வெளுத்த பற்பத்தை எடுத்துக் கொள்ளவும்.

விடத்தேரி இலை சட்டியிலிட்டுக் கருக வருத்துக்கொண்டு அத்தூள் காசிடைக்கு ஷி பற்பம் 1 பணவிடையும் எடுத்து ஆவாரங்கொழுந்தை எருமைத்தயிரில் கூட்டிப் பிட்டாக வேகவைத்துப் பிழிந்த சாற்றினுடன், பற்பத்தையும் தூளையும் போட்டுக் குழப்பிக்கொண்டு காலைமாலை கொடுக்கவும். 10 நாள் சாப்பிட்டு இச்சா பத்தியமாக இருந்துவர 20 வகை நீரிழிவுகள் தீரும்.

(மேலே கண்ட மருந்துகளின் மூலச் செய்யுள்கள் காணப்படவில்லை. உரைநடைக் குறிப்புச் சுவடியிலிருந்து எடுத்தெழுதப்படுகின்றன:—(1) நாயெலும்பைப் பொடி செய்து தேங்காயில் அடைத்துவைத்து தேனிற் குழைத்து பத்து நாட்கள் சாப்பிடவும்.

(2) அபின்	வீசை 2
சாதிலிங்கம்	,,
காசுக்கட்டி	,,

எண்ணெய் வார்த்தரைத்து பருத்திக்கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணிக் காலைமாலை ஒரு உருண்டை வீதம் உட்கொள்ளவும்.

(3) ஆவாரை இலை ஒரு கொட்டைப்பாக்களவு ஆவின் பாலில் குடிக்கவும்.

42. நீரிழிவுக்கு ஆவாராதி அடை

ஆவாராதி யடை யொன்றதைக் கேளு
ஆவாரை யிலையுமொரு பிடிகொணர்ந்து
தாவிவளர் குருவையரிசியு முழக்குத்
தானரைத்து வுப்பில்லா வடையாய்ச் சுட்டு
ஆவலுடன் கல்லெண்ணெய் தேய்த்துச் சந்தி
யந்தியு முண்ணெட்டு காலிரண்டு வேளை
தாவியு நீரிழிவு மறும் தப்பாமற்றான்
தஞ்சையில்வாழ் விபுவுணர்ந்த வடையதாமே அ

(இ-ள்)

ஆவாரை இலை	ஒரு பிடி
குருவையரிசி	ஒரு உழக்கு

இவ்விரண்டையும் உப்புச் சேர்க்காமல் அரைத்து வடை தட்டி கல்லெண்ணெயில் தோய்த்து எட்டு நாட்கள் விடாமல் காலைமாலை சாப்பிட நீரிழிவு தீரும்.

43. நீரிழிவுக்கு ஈரவெங்காயப் பிட்டு

ஈரவெங்காயங் குறுணி கொண்டுவந்து
இதின் மேற்றோல் போக்கிச் சிறுகவு மரிந்து
சாரளள்ளின் பிண்ணைக்கோர் படியிடித்துத்
தப்பாமற் சேலை வடிகட்டிக் கொண்டு
கூறுமெருமையின் மோரோர் படியதன்னைக்
குன்று கற்சட்டியி லிட்டு வேகிகட்டி
ஈரவெங்காயமும் பிண்ணைக்கின் றூளு
மிரண்டு ஞ்சேர்த்தே பிட்டாய் வைத்திடாயே அடு
வைத்துச்சட்டி மூடியெரித்தே பிட்டாக்கி
வளமாக யெடுத்தந்தி சந்தியுந்தான்
சுத்திரமா கல்லெண்ணெய் வார்த்து நீயு
கல்லசனஞ்செய் நீரினிழிவுந்தீரு
மித்தரணிதனிற் பரமசிவனுர் பாத
மென்னேரந்தியானித்தர்ச் சனைகள் செய்யுஞ்
சத்ய அரிச்சந்திர நிகர் வாய்மை தப்பா
சரபோசி மகாராசனருளி தாமே. அசு

(இ-ள்)

ஈரவெங்காயம் ஒரு குறுணி எடுத்து மேல் தோலை நீக்கிச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.

எள்ளுப்பிண்ணாக்கு—1 படி எடுத்து கள்ளுக வஸ்திரகாளனம் செய்துகொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியில் ஒருபடி எருமைமோரை விட்டு அச்சட்டியின் வாய்க்கு ஒரு வஸ்திரத்தினால் வேடுகட்டி. வெங்காயத்தையும் பிண்ணாக்குத் தூளையும் அவ்வேட்டின் மீது வைத்து அடுப்பிலேற்றிப் புட்டவியலாக அவித்து விடவும். பின்பு இத்தூளைப் பக்குவமானபின் எடுத்துக் காலையும் மாலையும் சாப்பாட்டில் போட்டு நல்லெண்ணெய் கூட்டிக்கொண்டு சாப்பிட்டுவர நீரிழிவு தீரும்.

44. நீரிழிவுக்கு மருந்து.

வருத்த மிகு நீரிழிவு வந்துற்றாலே
வண்மையுடனோர் விழுதஞ் சொல்லக்கேளு
பருத்தி விரை தண்ணீரில் ஊறவைத்துப்
பண்பாக விடி வேறு துவை த்தாவின் பா
லுருக்கமுடன் விட்டதையும் பிசைந்துகொண்டு
வுபாயமுடன் வடிக்கட்டி யெண்ணெயும் விட்
டருந்திடு நீ பனவட்டுங் கூட்டிக்கொண்டு
அதிகால மேயுண்ணீரிழிவும் போமே. அஎ

(இ-ள்)

பருத்தி விரையைத் தண்ணீரில் ஊறவைத்து இடித்துப் பசுவின்பாலில் பிசைந்து வடிக்கட்டிக்கொண்டு நல்லெண்ணெய் சேர்த்துக்கொண்டு, வாய்க்குப் பனைவட்டுங் கூட்டிக்கொண்டு அதிகாலையில் சாப்பிடவும்.

பனைவட்டு=பனைவெல்லம்

45. நீரிழிவுக்குச் செஞ்சோள விழுது

செக்கவுஞ் சிவந்த சோளமாவதுங் குறுணியா
மொக்கவும் பிண்ணாக்குத் தூள துவுமே குறுணியாந்
தக்கவுஞ் சிவந்த கத்தரிக்காயன்பது மதி
லுக்குள்ளே விரையெடுத்தூளிட்டி டித்திடே அஅ

இடித்தொரு விளாங்கனியளவு முருண்டையாக்கியே
திடத்துட னல்லெண்ணெய் தனிலூற வைத்துக்கொ
வடிப்பமாயிரண்டு வேளையுண்ணுநீரிழிவது [ண்டுமே
மடக்கு மேகரோகமும் பறக்குமே யிதுண்மையே. அசு

(இ-ள்)

சிவப்பு கிறமுள்ள சோளமாவு	1 குறுணி
எள்ளுப்புண்ணாக்குத் தூள்	1 குறுணி
விரை நீக்கிய சிவப்புக் கத்தரிக்காய்	50

இவை மூன்றையும் கல்லுரலிலிட்டு கன்கு மைய இடித்து விளாங்கனியளவு உருண்டைகளாக உருட்டிவைத்து கல்லெண்ணெயில் ஊரவைத்துக்கொள்ளவும். இதைத் தினக்தோறும் இருவேளை காலையும் மாலையும் சாப்பிட நீரிழிவு நீரும்.

46. நீரிழிவுக்கு வெள்ளிலோத்திர மா

வடித்தவெள்ளி லோத்திரத்தை
மாவதாய்ப் பொடிசெய்து
தடித்த வெள்ளரிப் பிஞ்சிற்
களஞ்சது நறுக்கியே
எடித்து ராத்தரித்து விடி
வேறெடுத்து மே பினைக்
திடிக்கடித்த நீரிழிவு மேகு
மூர்ச்சித்தி டிலே கூயி

மூர்ச்சையாகினி லும்நற்ற
யிருஞ்சோறு முண்டிடி
வாச்சு தென்று மேகரோக
மாறுமென்ப துண்மையாம்
பாச்சல் மாவிலேறியே
பவனிகொள் விபுவுணர்

சூச்சமான வெள்ளி லோத்திர
மாப்பொடி யிதாகுமே. கூக

(இ-ள்)

வெள்ளி லோத்திரப்பட்டையை மாவாகும்வரை கன்கு இடித்து வெள்ளரிப்பிஞ்சிலுள் கழஞ்சளவால் ஒரு இரவு முழுதும் வைத்துக் காலையில் சாப்பிடவும். கடிப்புடன் கூடிய நீரிழிவு தீரும். மூர்ச்சையுண்டானால் தயிர்சாதம் சாப்பிடவும். மேகரோகம் மாறும்.

47. நீரிழிவுக்குக் காந்தாதி மருந்து

காந்தமுடன் களிப்பாக்கு நெல்லி மூன்றும்
கருத்துடனே வகைக்கு மொருபலமும் கூட்டி
வாய்ந்தவாவரை விரையும் பொடியதாக்கி
வத்திரகாயம் பண்ணி யெள்ளெண்ணெய்விட்
டேந்திப் பிசைந்தே யுருட்டிச் சேலை தன்னி
லிதமாய்ச் சோளாந்திரங்களாகக் கட்டி
யூந்திறமாடியர் பாண்டந்தன்னி லேதா
னுச்சிதமாய்க் கட்டிச்செய்வகையைக்கேளே. கூஉ

கட்டியிருகாழி நீர்விட்டு முன்னே,
கருது பொட்டணத்தையுமே யதனிற்போட்டு
இட்டெரிநீ கனலையுமே யிறக்கிப்பின்பு
எடுத்துவொரு பாக்களவு பழச்சாறு தன்னில்
விட்டுண்ணு நீரிழிவுந் தீருமந்த
விமலர் பதமர்ச்சித்து நலமேபெற்ற
கட்டழகன் சூரபோசி மகராசேந்திரன்
கருத்துணர்ந்த காந்தாதி மருந்து தாமே. கூங

(இ-ள்)

சுத்திசெய்த காந்தம்	பலம்
களிப்பாக்கு	,,
நெல்லி வற்றல்	,,

வஸ்திரகாளனம் செய்த ஆவாரைச் சூரணம் 1 பலம்

இவை யாவற்றையும் நல்லெண்ணெய்விட்டுப் பிசைந்துகொண்டு ஒரு சேலைதனில் வைத்து நன்றாகச் சுற்றி ஒரு சட்டியில் டோலாயந்திரமாக (தொங்கவிட்டுக்) கட்டி, 2 படி தண்ணீர்விட்டு எரிக்கவும். நன்கு பக்குவமானபின் அடுப்பிலுள்ள அனலை எடுத்துவிட்டுப் பொட்டணத்தைப் பிரித்து அதில் ஒரு பாக்களவு எடுத்து எலுமிச்சம்பழச் சாறுகூட்டித் தினந்தோறும் சாபபிட நீரிழிவு தீரும்.

48. நீரிழிவுக்கு ஜாதிலிங்கக் குளிகை

சாதிலிங்கம் பலமிரண்டு உண்டைக் காந்தந்
தானிரண்டு பலம் வசுவாசி பலமொன்
றோது வெள்ளரிபல மொன்றும் அரப்பொடிதா
னெக்க நாற்பல மத்தங்காய் த்தண்டிலஞ்
சாத்தவாவரை விரையுந் தேற்றாங் கொட்டை
சதகுப்பை யிக்காலும் வகைக்குழக்கு
நீதவட்டத்துத்தி காரீயம் ரெண்டும்
நேராக நாற்பலமு ங்கூட்டிக் கொள்ளே. கூசி

கூட்டிக்கொள் நன்றாகவு மாவாரைக்
கொழுந்துமொரு பிடியெல்லாம் பொட்டணங்கள்
நாட்டமுடன் கட்டிக் குறுணி நெல்லுக்கு
நன்னீரும் பதக்கு வார்த்ததிலே தான்
போட்டுவிட்ட நீர்சுவற வேகவைத்துப்
புதிய எருமைத்தயிர் வார்த்தரைத்து நன்றாய்
வாட்டமிலாத் தேற்றான் கொட்டைப் பிரமாணம்
வகையாக வுண்டை பண்ணி வைத்துக்கொள்ளே.

வைத்துக்கொள் மானிடர்க்கு நீரிழிவும்
வந்துற்ற லாவுரையின் பொடியதன்னில்
சத்துவமாய் வெருகடிப்பிர மாணமுண்டை
தானொன்று தேன்கூட்டிக் கொடித்துப்பாரு

இத்தாணி தனிலதிகக் கீர்த்திபெற்ற
ஈசர் பதம் பூசை செய்து தவங்கள்பெற்ற
பெத்த சரபேந்திர னுரைப்படிக்கி இத்தப்
பிரியமுள்ள சாதிலிங்கக் குளிகையாமே. கூசு

சுத்திசெய்த சாதிலிங்கம்	2 பலம்
,, காந்தம்	2 ,,
சுத்திசெய்த ஜாதிபத்திரி	1 ,,
,, வெள்ளி	1 ,,
,, அரப்பொடி	4 பலம்
மத்தங்காய்ப் புல்லரிசி	2 உழக்கு
ஆவாரை விரை	,,
தேற்றுங்கொட்டை	,,
சதகுப்பை	,,
வட்டத்துத்திவேர்	4 பலம்
சுத்திசெய்த காரீயம்	,,
ஆவாரங்கொழுந்து	ஒரு பிடி

இவைகளை ஒரு பொட்டணமாகக் கட்டி ஒரு சட்டியில் ஒரு மரக்கால் நெல்போட்டு அதற்கு 2 மரக்கால் தண்ணீர் விட்டு அதில் மேற் பொட்டணத்தை டோலாயந்திரமாக (அதாவது, தொங்கவிட்டுக் கட்டி நீர் சுண்டும்வரை எரிக்கவும்.

பின்பு அதை எடுத்து, எருமைத் தயிர்விட்டு நன்கு அரைத்துத் தேத்தான்கொட்டை யளவு உருண்டைகள் செய்துகொள்ளவும். நீரிழிவு ரோகிக்கு, ஆவரைச் சூரணம் ஒரு வெருகடியளவெடுத்து, அதனுடன் ஒரு உண்டையுஞ் சேர்த்துத் தேன்விட்டுக் குழப்பிக் கொடுக்கவும். நீரிழிவு தீரும். இம்மருந்தின் பெயர் 'சாதிலிங்கக் குளிகை' யாகும்.

49. நீரிழிவுக்கு திரிகடு உருண்டை

திரிகடுகு திரிபலை தேங்காயின் றிருகல்
வெல்லங் கடுகு கற்பூரமுங்
துரிசு இந்துப்பெலு மிச்சையின் பழமு
தோலுமுள்ளுங் கருகின தொன்பதுஞ்
சரி நிறையாகக் கூட்டியே யம்மியிற்
றூளைத்துத்தேன் கூட்டியே மைகள்போல்
துரிதமாய்ச்சிறு கொட்டைப் பாக்கத்தனை
தோன்ற வுருண்டை செய்தே யுலர்த்திட்டிடே.

இட்டுவைத்துத் திரிகடி குண்டைநீ
ரினிழிவு வந்துற்றிடி லோருண்டை
சட்டமாகத்தூள் செய்து நற்றேனிலே,
தானே கொண்டிடு வந்தியு ஞ்சந்தியுங்
கட்டஞ் செய்கின்ற நீரிழிவான து
கதிரவன் முன் பனிப்போலவும் போகுமே,
திட்டமா ந்தஞ்சை மாநகர் தன்னில் வாழ்
நீரஞ்ஞ் சரபேந்திர னருளிதே. கூஅ

(இ-ள்)

சுக்கு	திப்பிலி
மிளகு	கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்	தான்றிக்காய்த்தோல்
தேங்காய்த் திருகல்	வெல்லம்
கடுகு	கர்ப்பூரம்
சுத்தி செய்த துருசு	பொரித்த இந்துப்பு
எலுமிச்சம்பழத்தோல் (கருக்கியது)	எலுமிச்சை முள்ளு (கருக்கியது)

இவைகளைச் சரி எடையெடுத்து, அம்மியின் மேல் வைத்தரைத்துத் தேன்கூட்டி மறுபடியும் மைபோலரைத்து ஒரு சிறு கொட்டைப்பாக்களவாக உருண்டைகள்

செய்யவும். இதை நிமலிலுலர்த்திக்கொண்டு நீரிழிவு நோ
இக்கு ஒரு உருண்டையைத் தூள் செய்து சுத்தமான
தேனில் தினமும் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும்.
நீரிழிவு சூரியனைக்கண்ட பனிபோல் அகலும்.

50. நீரிழிவுக்கு ஆவரையாதி யுண்டை

ஆவரைவேர்ப் பொடியது பாதியு மாவரை
கெட்டி நீர்முள்ளி நெய்தலுங்
காவினின் முசுட்டை யுடனைந்திலை,
கணக்கதாய் முன்னே சொற்படி பாதியு
மாவலாக வரை த்துண்டையு ஞ்செய்து
அதை யுலர்த்தியே யந்தியுஞ் சந்தியுங்
கூவு மாவாரையாதி யாமுண்டையைக்
கொடுத்திட நீரிழிவதுக் தீருமே கூகூ

(இ-ள்)

ஆவாரை வேர்	ஆவாரை இலை
கெட்டியிலை	நீர்முள்ளியிலை
நெய்தல் (கருமை) இலை	முசுட்டை இலை

பின் சொல்லப்பட்ட 5 வகை இலைகளையும் சமபாக
மெடுத்து அம்மியிலிட்டு, ஆவாரைவேர்ச் சூரணம் 5 மட
ங்கு போட்டு, இவைகளை யொன்றுக அரைக்கவும். இதை
உருண்டைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக்கொண்டு
வேண்டும்போது காலையிலும் மாலையிலுமாக ஒவ்வொரு
உருண்டை வீதம் சாப்பிடவும். நீரிழிவு தீரும்.

51. நீரிழிவுக்குத் தாமரைவிளையாதிப் பிட்டு

வாவியிலுரை தாமரை தன்னுடவினையம்,
நல்லதுட் நியிலைக்கொழுந்
தாவரை விரைமூன்று ஞ்சரியதா
யாகவே யுலர்த்திப்பொடி செய்ததை

ஆவலாக வோர் பாண்டத்தில் மோரைவிட்
டந்தப் பாண்டத்தை வேடதுகட்டியே,
தூவுமுன் பொடியில் மோரை விட்டுமுன்
சொல்லும் வேடதின்மேல் பிட்டதாய் வையே ஈ

பிட்டதாய்ச் சுட்டு அந்தியுஞ் சந்தியும்
பிரியமாகத் தண்ணீரிழி வானது
விட்டிடுங் திரிபுவன மெரிசெய்த
விமலிசாம்பவி யம்பிகை பார்வதிக்
கிட்டமாய்மகிழாதிசதாசிவ
னிருபத மறவாமற் றுதிசெய்யு
மட்டதிக்கும் புகழ் சாபேந்தி
னருளுந் தாமரை வளையாதிப் பிட்டிதே. ஈக

(இ-ள்)

தாமரையிலைச்சுருள் துடரிக்கொழுத்து
ஆவாரை விரை.

இம்மூன்று சரக்குகளையும் வகைக்குச் சரி யெடை யெடுத்து நிழலிலுலர்த்திச் சூரணம் செய்துகொள்ளவும். ஒரு வசயகன்ற சட்டியில் மோரைவிட்டு அதன் வாய்க்குத் தக்க வேடுகட்டவும் மேலே சொல்லப்பட்ட சூரணத்தி லும் மோர்விட்டுப் பிசரி, அதை அவ்வேட்டின் மேல் வைத்து, மேலே ஒரு சட்டிகொண்டு மூடி, அடுப்பின்மே லேற்றிக் கொதிக்கவைத்துப் பிட்டாய்ச் சுட்டு இறக்கிக் கொண்டு காலையிலும் மாலையிலும் சாப்பிட நீரிழிவு தீரும்.

52. நீரிழிவுக்கு கடலுருஞ்சியாதிப்பட்டை சூரணம்

கடலுருஞ்சி வேராவரையின் வேருங்
கானகத்தின் வரட்பூலாவேரு மூன்று
மூடனிடித்தே யரைச்சேரு ந்தூள்
சேரிலவங்க மேலஞ் சாதிக்காயு

மடலிச்செவ்வேலை வேர்சுக்குக் கோட்டமு
மற்புதச் செங்கழுநீர் க்கிராம்புடன்
அடவுள் கடுக்காய் மிளகிரைந்து
மவ்வகைக்கி வராகனிடை ரெண்டே. ஈ2

வகைக்கிரண்டி வராகனிடை யது
வண்மையாக விடித்தே வடிகட்டித்
துகைபெற மூன்னுஞ் சொல்லிய தூளுடன்
தொக்கச் சேர்த்துக் கொண்டு பொட்டணங்கட்டி
தகுமதுமத்தஞ் சாற்றினிலூற வைத்
ததை யெடித்து வெருகடித்தூளதிற்
பகருங்காரீய செந்தூர மூமொரு
பணவிடை கல்ல தேனிற் குழைத்திடே. ஈ3

தேனிலே குழைத்த ந்தியு ஞ்சந்தியுக்
கின்னு வாய்வு பதார்த்தத்தை விட்டிடி,
மானிடர்க்கு வருகின்ற நீரிழி
வறுமே கால்மண்டலக் தன்னில் நற்
றேனினங்க ளிசைப் பயிற்றஞ்சையின்
றீரஞ்சர பேந்திர பூபதி
தானுரைக்கு ஞ்சொல்லிய நற்கடலுருஞ்சியுட
தன் வேர்ப்பட்டை யாதிச்சூரணமீதே. ஈ4

(இ-ள்)

கடலழிஞ்சில் வேர் ஆவரை வேர்
காட்டிவரட்பூலாவேர்
இவைகளைச் சமமெடித்திடித்த சூரணம் — ½ சேர்

இலவங்கப்பத்திரி ஏலக்காய்
சாதிக்காய் காட்டுச் சிவப்புவேளைவேர்
சுக்கு கோஷ்டம்
செங்கழுநீர்க்கிழங்கு கிராம்பு
கடுக்காய் மிளகு

இப்பத்துவகைச் சரக்குகளும் வகைக்கு-2 வராகனெடை

இவை யெல்லாவற்றையும் கல்லுரலிலிட் டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, முன்கூறிய தூளுடன் சேர்த்து ஒரு துணியில் முடிந்து, ஊமத்தையிலைச் சாற்றில் ஊறவைக்கவும். பின்பு இதை யெடுத்து உலர்த்திக் கொள்ளவும். இதில் ஒரு வெருகடித் தூளெடுத்து அதனுடன், காரீயச் செந்தூரம், ஓரு பணவெடையும் கூடச் சேர்த்துத் தேனில் குழைத்துத் தினம் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். பணவிடை=3 குன்றிமணியிடை.

பத்தியம் வாயு பதார்த்தங்களை (வாழைக்காய், சேம்பு, முதலிய கிழங்குவகை நீக்கவும்.)

53. நீரிழிவுக்கு வேப்பம் பிசின் சூரணம்

கால்மண்டலத்தில் நீரிழிவு தீரும்.

வெய்யில் தன்னில் வெகு காளுமாகிய
வேப்பம்பிசின் கொண்டு வந்துலர்த்தியே,
துய்யசாமை யரிசி பொரித்த மாத்
தூளதாக்கி யிரண்டுஞ் சரியதாய்க்
கையில் மூவிரற் கொண்டிடு சூரணங்
காலமே யந்தி சந்தியு முண்டு பார்
வெய்ய நீரிழி வென்பது தீருமே
விசையனுஞ் சரபேந்திர னருளிதே. (இ-ள்)

வெகுகாட்பட்ட வேப்பம் பிசினைக் கொண்டுவந்து வெயிலில் உலர்த்தி சூரணித்துக் கொள்ளவும். இதற்குச் சரியெடை சாமையரிசியை வறுத்து இடித்த மாவு சேர்த்து, மூன்று விரல் கொள்ளுமளவு, எடுத்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். நீரிழிவு தீரும்.

54. நீரிழிவுக்கு வேலம்பூவாதிச் சூரணம்

வேலம்பூ வுளுந்தா வரம் பூவுடன்,
வெய்யகானகக் குன்றியி ன்றன்னிலை
சால சூரண ஞ்செய்து பேயன் பழஞ்
சர்க்கரை பசு வெண்ணெயி லு ங்கூட்டிக்
காலமே யந்தியு ங்கொண்டி பார் மலுக்
கனத்து நீரிழிவாறுமே தஞ்சைபூ
பாலன் சரபேந்திர னு ணர்ந்திடு
பண்பாம் வேலம்பூவாதித் தூளாகுமே. ஈசு

(இ-ள்)

வேலம்பூ	ஆவாரம்பூ
காட்டிக்குன்றியிலை	உளுந்து

இவைகளை வெயிலிலுலர்த்திச் சூரணஞ்செய்து ஒரு வெரு கடியளவுச் சூரணத்துடன் பேயன்பழம், சர்க்கரை, பசுவெண்ணெய் இவைகளையுங்கூட்டி, தினம் காலையிலும் மாலையிலும் உட்கொண்டுவர நீரிழிவு தீரும். கைகண்டது.

55. நீரிழிவுக்குப் பருத்திவிரை மருந்து

பருத்தியின்விரையும் பொன்னிலாவரைப்
பண்கொழுந்து மரைத்துப்பழ மோரிற்
கரைத்துமே கொள்ளு காலமே காலமே,
கருதியபடி யெட்டித்தின மதுக்
கொருக்க வுழுடியாத தோர் நீரிழி
வுடனே மாறும் பருத்தி விரைமருந்
திருக்கள் நிர்த்த மிடிந்தஞ்சை மாநகர்
நீரஞ்ஞ சரபேந்திர னருளிதே. ஈள

(இ-ள்)

பருத்திக்கொட்டை, பொன்னுவாரைக் கொழுந்து, இவ்விரண்டையும் சமமெடுத்து அரைத்துப் பழயமோரில்

குழப்பித் தினமும காலையில் மாத்திரம், 8 தினங்களுக்குச் சாப்பிடவும். தீராத நீரிழிவு தீரும்.

56. நீரிழிவுக்கு ஆவரைக்கொழுந்து மருந்து

ஆவரங்கொழுந்தை யொன்றும் பேசாம
லப்பவே பறித்து வந்தெருமை மோ
ராவதை யிருநாழி விட்டேயுப் பிட்
டவிய லாயவித்தே யக்கொழுந்தையுஞ்
சாவதானமுடனே பிசைந்தம்மோர்
தனிற்கரைத்துக் குடித்திடு நீரிழி
வாவதோடும்விபுவுணர் ஆவரை
யதின் கொழுந்து மருந்தது வாகுமே. ஈஅ

(இ-ள்)

ஆவாரங் கொழுந்தை வாய் பேசாமல் பறித்துவந்து, ஒரு வாயகன்ற சட்டியில் 2 படி எருமை மோர்விட்டு வேடு கட்டி, அதன்மேல் ஆவாரங்கொழுந்தை (2 பிடி) வைத்து சட்டிகொண்டு மூடி, அடுப்பின்மேலேற்றிப் புட்டவியலாக எரிக்கவும். பின்பு இக்கொழுந்தை யம்மிதனிலிட்டரைத்து, அம்மோருடனேயே குழப்பிக் குடிக்க நீரிழிவு தீரும்.

57. நீரிழிவுக்கு ஆவரை வேர் விழுது

கானகத்தி லினிலாவரை சுற்றிலுங்
கையினலோர் முழத்துக்கு வைக்கல்போட்
டனல் செடிமூடியே தீயை விட்டெரித்திடு,
செடிவெந்த பின்னவ்வேரை
யூனமில்லா வாணிவேரைத் தோண்டியே
யுடனே கண்டங்கண்டமாய் நறுக்கியே
தானரைத்தோர் கொட்டைப்பாக்கின் மாத்திரைத்
தான் கொடி யெருமைத் தயிர்தன்னிலே. ஈஆ

தயிரிலே யவ்விழுதைக் குழப்பியே
கொடு அதி காலமே யாறு நாள்
பயமிலை நீரிழிவது திருமே
பத்தியப்படி கொண்டிடவிழுத்தத்தை
நயமிகு மாவரை விழுதாமிது
நலமிகாஞ்சித குணசீலனே
தயவுடனுணர்ந்தா ராய்ந்ததிது தஞ்சை
சரப்பூபதி சொல் சித்திரமூலியே. 57

(இ-ன்)

காட்டி நில ஆவரைச்செடியைச் சுற்றிலும், ஒரு முழ உயரத்திற்கு வைக்கோல் போட்டுக் கொளுத்திவிடவும். செடி கன்றாக வெந்தபின், அதன் ஆணிவேரை, அரும லெடித்துத் துண்டம் துண்டமாக நறுக்கிக்கொள்ளவும். வேண்டும்போது இத்துண்டுகளை, அம்மியிலிட்டுச் சிறு எருமைத் தயிர்விட்டு, ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்து, விழுதாக்கி எருமைத் தயிரிலேயே குழப்பி அதி காலிவேளையில் சாப்பிடவும். இவ்வாறு 6 நாள் சாப்பிட நீரிழிவு திரும்.

பத்தியமாக இருக்கவும்.

58. நீரிழிவுக்குச் செங்கலாதி மருந்து

பொங்கு நீரிழிவு தானதற் கொன்றுகேள்
புதுமையாஞ் செங்கலாதி மருந்திது,
செங்கலோடொரு செங்கலை வைத்துமே,
தேய்த்திட விழுகின்ற பொடியதை
அங்கையாலோர் சிரங்கைப் பொடியெடுத்
ததையுமோர் புதுச்சட்டியிற் போட்டிடு
செங்கலின் பொடியு மறையத் தண்ணீர்
நிடமுடன் விட்டடுப்பினில் வைத்திடே. 58

வைத்திடா யிராமூப்பது நாழியு
மனலைமூட்டி வெச்சனவும் நீரதை,
வைத்துமே யதி காலமே யங்நீரை
வடித்துக்கொள் கம்பளி சுட்ட சாம்பலைப்
பத்தியாயோர் வெருகடி மாத்திரம்
பண்பதாமயிர்ச் சாம்பலைப் போட்டுமே
கித்திய நித்திய மனுக்குக் குறுணி நீ,
ரிறங்கிடிற் கொடுக்கக் குணமாகுமே. ாபிக

ஆகுமிப்படி மூன்று காடன்னிலே
ஆறுமே நீரிழி வானது பாதியும்
போகு மிக்குணங் கண்டபின் மூன்றுகாள்
புதுமையாக முன்சொன்னபடி யீந்திடு
வேக நீரிழிவானது மிந்த வூர்
விட்டிடும் பத்தியங்களுடன் கொளு
காகபூஷணர் பூசித மாந்தஞ்சை
நரபதி சரபேந்திர னருளிதே. ாபிஙு

(இ-ள்)

செங்கல்லுடனே மற்றொரு செங்கல்லை உராய்ந்து அதினின்று விழும்பொடியில், ஒரு சிரங்கை யளவெடுத்து ஒரு புதுச்சட்டியில் போடவும். அது நன்றாக முழுகு மளவு சுத்த ஜலம் விடவும். அதை யடுப்பின் மேலேற்றி ஒரு இரவு முழுவதும் எரிக்கவும். மறுநாள் காலை அக் கஷாயத்தை வடிக்கட்டிக்கொண்டு, அதனுடன் சம்பளி சுட்ட சாம்பலை ஒரு வெருகடியளவெடுத்துக் கலந்து, தினம் ஒரு குறுணி நீரிறங்கும் மனிதனுக்கு 3 காலைக்குக் கொடுத்துவரப் பாதி குணம் காணும். மறுபடியும் 3 காலைக்குக் கொடுக்க முன்சொன்ன நீரிழிவு நிச்சயமாக நிற்கும். பத்தியமாக இருக்கவும்.

59. நீரிழிவுக்கு கோவையிலைச் சூரணம்

கோவையின் கொடியதன்னை யறுத்துமே,
கொண்டுவந்து கருங்குருவை நெல்லி
லாவலாக இட்டே புழுக்கு கன்
ரூயந்தத் தண்டை யுலர்த்தி யிடித்துமே,
மாவுபோல் தூளாக்கி கற்றேனிலே
யதைக் குழைத்தொரு பாக்களவுந் தின்னு,
நீ வருந்திய நீரிழிவானது
நிற்குங் கோவையிலைச் சூரணமாகுமே. ராஜ

(இ-ள்)

கோவைக்கொடியைக் கொண்டுவந்து, அதனுடன் கருங்குருவை நெல்லிட்டு, தண்ணீரிலூறவைத்துப் புழுக்கவும். பின்பு, இதன் தண்டை யெடுத்துலர்த்திச் சூரணஞ் செய்யவும். இதைத் தேனிலே குழைத்து, ஒரு பாக்களவு கொடுக்கவும். நீரிழிவு குணப்படும்.

60. நீரிழிவுக்கு ஆவரை விரைத்தூள்

அடவியாவரை வித்துமொருபடி
யதைப்புராதன மோரினிலையவைத்
திடமுடனரைத்தே யுரி மோரிற்கொள்
செப்புமெட்டு நாடன்னிலே நீரிழி
வுடனறுமந்தி சந்தியுங் கொண்டிடு
வுண்மை யாவரையின் மருந்தாகுமே,
கடமிகுங்களிறு மேற்பவனி வருங்
காவலன் சபேந்திர னருளிதே. ராஜ

(இ-ள்)

ஆவாரை விரையை யொருபிடி யெடுத்துப் பழய (புளித்த) மோரிலே கலந்து, ஊறியபின் அதையரைத்து ½ படி அம்மோரிலே கலந்து சாப்பிடவும். 8 நாளைக்குத்

தினம் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். நீரிழிவு குணப்படும்.

61. நீரிழிவுக்கு ஆவாரந்தோற்பை மருந்து

காலிலாவாரத் தோற்பை யெலுமிச்சங்
காயளவு மரைத்தெருமை மோரி
லாவலாய்க்கொளு நீரிழிவானது
மாற்றிடும் பத்து காலையிற்ரு லுமே
பூவின் மானிடர் தங்களுக்காயிதப்
புதுமையாவரந்தோற்பைமருந்தை
வாவிசூழ் தஞ்ச மாநகராள்கின்ற
மன்னர்கோன் சரபேந்திரனருளிதே. ரயிசு

(இ-ன்)

ஆவாரையின் தோல்பையை (ஆவாரங்காயின் மேலுள்ள தோல்) எலுமிச்சங்காயள வெடுத்து அம்மியின்மீது வைத்து அரைத்து எருமை மோரில் கலக்கிக் காலையில் குடிக்கவும். 10 காலைக்குள் நீரிழிவு தீரும்.

62. நீரிழிவுக்கு விடத்தரை மருந்து

விடத்தரை விழுவியிலை ரெண்டையு
மேன்மை யெள்ளின் புண்ணுக்குடனே கலக்
திடத்துடனவித்தே யந்தி சந்தியுங்
கின்ற நீரிழிவானதறு மிந்தப்
படிக்குளுச்சிதப்போர்ப் பரியேறியே
பவனி வந்திடு கருலன் பாராக்கிரம
அடிப்பெரும்புய னுக்தஞ்சை மாநகர்
துரைகாமணி பகருமுறையிதே. ரயிள

(இ-ன்.)

விடத்தரை இலை விழுவியிலை

இவ்விரண்டு இலைகளுக்குச் சமனாக எள்ளுப்புண்ணாக்கும் கூட்டி இடித்து ஒரு பாத்திரத்தில் வேடுகட்டி அதில் வைத்துப் புட்டவியலாக அவித்துத் தினமும் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு வரவும். நீரிழிவு தீரும்.

63. நீரிழிவுக்குப் புளியங்கொட்டைத்தோல் சூர்ணம்

புளியம்பட்டை யதிலுட கொட்டைத்தோல்
புகழுகின்ற வரகரிசியிது மூன்றும்
வளமுடன் சரியாக இடித்துமே
வைத்துக் கொண்டந்தி சந்தி யுண்ணு பூ
வளருகின்ற வரகின் சோறு பிண்ணாக்கும்
வழுத்துக்கான முசுட்டை யிலையாகுமே,
உள மகிழ்ந்துற வோர் சொல் முறையதை
யுணர்ந்த தஞ்சை விபுவுணர் பாகமே. ாயிஅ

(இ-ள்)

புளியம்பட்டை புளியங்கொட்டைத்தோல் வரகரிசி

இம்மூன்றையுஞ் சமமெடுத்து இடித்து வஸ்திரசா யஞ் செய்துகொண்டு தினமும் காலையிலும் மாலையிலுமாக வெருகடியளவு எடுத்து உண்ணவும்.

இதற்குப் பத்தியம் :—

வரகரிசிச் சோற்றுடனே பிண்ணாக்கையும் முசுட்டை யிலையையும் சேர்த்துச் சாப்பிடவும்.

64. சுக்கிலப் பிரமேகத்துக்கு சுக்காதி மருந்து

சுக்குலப் பிரமியத்துக்கு மோர் மருக்
தோதுவேன் சுக்கினுதி மருந்தொன்று
சுக்குமேவனஞ்சங்கம் வேர் மூன்றுமே,
சொல்லிடும்படி யொவ்வோர் பலங்கூட்டி

பக்குவப்படித்திக் கொட்டையும் ரெண்டு
படி யிடித்து வுள்ளூரு முக்கால்படி
யொக்கவும் போட்டரைத் தெருமைப்பாலு
முசிதமாகவும் காழியதாகுமே. ாயிசு

ஆகும்பாலது காழியிலே கரைத்
ததிற் பனவட்டு வெல்லமு மொன்றுபோட்
டேகமழுமெள்ளெண்ணை யுழக்குவிட்
டெல்லாமொன்றுகவே கலந்தேயதை
வரகுடன் குடிக்காலமே காலமே,
வந்த சுக்குலப்பிரமியம் வெள்ளைபோம்
காகரீகமிகு தஞ்ச மாநகர்
நரபதி சரபேந்திர னருளிதே. ாஉயி

(இ-ள்)

சுக்கு மேவனம்(?) சங்கம் வேர்

இம்மூன்றும் வகைக்கு ஒரு பலம்.

பருத்திக்கொட்டை 2 படி

உள்ளுப்புப்பொடி $\frac{3}{4}$ படி

இவைகளை யொன்றுகலக்து இடித்து எருமைப்பால் 1 காழியிலே குழப்பி 1 வட்டு பனைவெல்லமுங் கூட்டி, நல்லெண்ணெய் ஒரு உழக்குங் கூடவிட்டு, எல்லாவற்றையும் குலுக்கித் தினமும் காலைவேளை மாத்திரம் வராகுக்கஞ்சியுடன் குடித்துவர, சுக்லப்பிரமேகம், வெள்ளை இவைகள் போம்.

குறிப்பு :—'சுக்குமேவனஞ் சங்கம்வேர்' என்ற 3 சரக்குகள் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாவது சரக்கு இன்னதென்று புலப்படவில்லை.

65. வெகுநாட்சென்ற சீழ்ப்பிரமியத்துக்கு வேளை மருந்து

மெத்தநாட்சென்ற சீழ்ப்பிரமியத்துக்கு
விளம்புவேன் நல்ல வேளை மருந்தொன்று

முத்துக்தேங்காயதன் பாலாயுழக்கதில்
மொழியும் வேளைவேரு முத்தலானதாய்
சத்துமே மிளகுஞ் சீரகங்கூட்டித்
தானரை யிளவெங்நீரு தன்னிலே
சுத்தமாய்ப் பகருங்கொட்டைப் பாக்கத்தளை
சொல்லுகின்ற தேங்காய்ப் பாலுண்டிடே. ாஉ_க

உண்டிடந்தியுஞ் சந்தியு ந்தானிதுக்
குரைக்கிறேன் வெங்நீருஞ் சோறும் பத்தியங்
கண்டுபார் மூன்று நாளது வானபின்
கடலினுப்பை வருத்துமே கூட்டிப்பின்,
வெண்டியாம் பசும்பால் நெய்மோர் கூட்டிக்கொள்
வெகுநாள் சீழ்ப்பிரமியமது தீருமே.
அண்டினோர் தமைக் காத்தருள் தஞ்சையி
னண்ணலாஞ் சரபேந்திர னருளிதே. ாஉ_உ

(இ-ள்)

வெகுநாட்சென்ற சீழ்ப்பிரமேகந் தீர மருந்தாவது :

கன்முக முற்றிய

தேங்காய்ப் பால்	ஒரு உழக்கு
நல்ல வேளைவேர்	ஒரு கொட்டைபாக்களவு
மிளகு	இரண்டு (எண்ணிக்கையில்)
சீரகம்	நான்கு ,,

இவைகளை இளஞ்சூடான வெந்நீர் விட்டரைத்துத், தேங்காய்ப்பாலிலே குழப்பிக் குடிக்கவும். தினம் இரு வேளை காலையிலும் மாலையிலும் சாப்பிடவும்.

பத்தியம் :— வெந்நீர் சாதம் சாப்பிடவும். மூன்று நாள் கழித்து உப்பை வருத்துக் கூட்டிக்கொள்ளவும். பின்பு வேண்டுமளவு பசுவின்பால், நெய், மோர், இவை கூட்டிக்கொள்ளவும். குணமாகும், கைகண்டது.

66. பிரமிய முதலான ரோகத்துக்குக் காரிய செந்தூரம்

வட்டத்துத்திமுத்தல்வேரை வெட்டியே
வந்து துண்டு துண்டாய் நறுக்கியதைச்
சட்டமாகவுங் காயவைத்தே ரெண்டு
சரிமரக்காலும் வைத்துக்கொண்டே புதுச்
சட்டியொன்றை யடுப்பிற் காயவைத்
தந்த சட்டியிற் காரீயந்தானது
மட்ட மாயிரண்டி பலம் போட்டதில்
வண்மையாயுருகு முகந்தன்னிலே. ஈ0_ங

உருகிய முகந்தன்னிலே முன்சொல்வே
ரோரொன்றாய் மூன்றுசாமங்கொடித்திடத்
திருகுகல் மஷமெல்லாம் பறந்துபோய்
செப்பியவட்டத்துத்தி யின்பூ நிற
மருமை காரீய செந்தூர மாமிதை
அம்மியில் வைத்துரைத்துக் குடிக்கையி
லொருமையாகவே வைத்து நோயாளியி
னுடல்வலுவறிந்தே யிட்சொல்வனே. ஈ0_சு

சொல்லு வேன்றேனிலே கால் பணவிடை
தோத்திடிற் சரிபாதிப்பணவிடை
யல்லது மூன்று காலின் பணவிடை
யருந்த வங்கொடி கொன்றைப்பூ தன்னிலே,
கல்ல துத்தியுட வேர்ப்பொடி யிலு
ளாடியே கொடித்திட்டிடலா மதை
வல்லத்தான பிரமியங்களுடன்
மற்றும்நீரிழிவதும் போமுண்மையே. ஈ0_ஞ

போகுமே நீர்ப் பிரமிய மிரத்தத்தின்,
பிரமியஞ் சீழ்ப்பிரமிய மின்னமு

மேகமென் னும் வியாதிகளற்றிடும்
விளம்பிடும்படி வாய்வு பதார்த்தங்கள்
வாகுளப்புளியும் புகையினிலே
வண்மையா கத்தள்ளு மாணிடர்க்காகவே
காகரிக சரபேந்திர பூபதி
காள்கடோறு மூணர்ந்த முறை யிதே. ஈஉ

(இ-ள்)

வட்டத்துத்தியின் மூற்றிய வேரைக் கொண்டுவந்து துண்டு துண்டாக வெட்டிக் காயப்போடவும். இம்மாதிரி 2 மரக்காலளவு இவ்வேரைச் சேகரஞ் செய்து கொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியை யடுப்பின்மேல் வைத்து, சுத்தி செய்த காரீயம் 2 பலம் போட்டு உருக்கவும். அவ்வாறு உருகும்போது முன்னே சொன்ன வேர்த்துண்டுகளை ஒவ்வொன்றாகப் போடவும். இவ்வாறு 3 ஜாமம் கொடுக்கவும். காரீயத்தின் கல்மஷங்கள் வாங்கி, வட்டத் துத்தியின் பூ நிறமாகப் பற்பம் கிடைக்கும். பிறகு இதையெடுத்து அம்மியிலே நுணுக்கிக்கொண்டு ஒரு குடிக்கைக்குள்ளிதை பத்திரப்படுத்தவும்.

நோயாளியின் தேகபலமறிந்து $\frac{1}{4}$ பணவெடையோ, அல்லது $\frac{1}{2}$ பணவெடையோ, $\frac{3}{4}$ பணவெடையோ தேனிலே கொடுக்கவும். பணவெடை=3 குன்றிமணியெடை

கொன்றைப்பூச் சூரணம், துத்திவேர்ச் சூரணம் இவற்றிலும் செந்தூரத்தைக் கொடுக்கலாம்.

சீர்ப்பிரமியம், இரத்தப்பிரமியம், மேகவியாதிகள், சீழ்ப்பிரமியம் இவைகளும் மற்றவகை ரோகிவுகளுந் தீரும்.

பத்தியம்:—வாயு பதார்த்தங்கள், புளிப்பு, புகையிலை இவைகளை நீக்கவும்.

67. பிரமியத்துக்கு

அம்புவியிற் பிரமிய நோயினு
லவதி மெத்தப்படுகின்ற வேதனை
யும்பர்கோன் சரபேந்திர பூபதி
யுள்ளத்தி னிற்றயை யுணர்ந்து
கொம்பரக்கைத் தண்ணீர் தனிற் காய்ச்சி நீர்
குறுகவு மிறுத்தீச் சம்பாலை ரசத்
திம்பது மிருவேளையு மெட்டுநாளுடனே
நிருமி துண்மை யாங்கொண்டியே. பரி ஈஉன

(இ-ள்)

நீரிழிவுநோயினால் அதிகமாக அவதியேற்பட்டால்:- கொம்பரக்கைத் தண்ணீரில் போட்டு, நன்றாகக் கொதிக்க வைத்திறுத்துக் கொண்டு, ஈச்சம் பாலையை மிடித்துப் பிழிந்த சாறும் சமம் சேர்த்துத் தினம் காலையிலும் மாலையிலுமாக 8 நாளைக்குச் சாப்பிடவும். பிரமேகம் நிச்சயமாகத் தீரும்.

68. பிரமியத்துக்கு நல்லெண்ணெய் மருந்து

நல்ல எண்ணெய் பலமு மொன்று
நற்கை யான்றகரைச் சார்
சொல்லியபடி யிரண்டுஞ்
சொகுசுடன் கலக்கியே,
வல்லமையுடனே கொள்,
மனமுவந்து மூன்று நாள்
சல்லியஞ்செய் பிரமியமுந்
தானறு மிது வுண்மையே. ஈஉஅ

(இ-ள்)

சுத்தமான நல்லெண்ணெய் | பலம்
கையாந்தகரைச்சாறு | பலம்

இவ்விரண்டையு மொன்றுகலந்து, நன்றாகக் குழுக் கிச் சாப்பிடவும். இம்மாதிரி 3 நாளைக்குச் சாப்பிடவும். பிரமியம் தீரும்.

குறிப்பு :—94 செ. சுவடியில் இதற்கு உப்பு, புளிப்புத் தவிர்க்கவும் எனக் கண்டிருக்கிறது.

69. பிரமியத்துக்குக் கோழிமுட்டை மருந்து

இன்னமொன்று கோழிமுட்டை
யினிலே மூன்று வெண்கருப்
பின்னையு நல்லெண்ணெயும்
பிசகிடாம லோர் பலம்
வன்னெலுமி ச்சம்பழ
மதுவு மூன்று மூவகை
தன்னையு மத்தி த்துலுப்பு
தண்ணுடன் புளிப்பதே. ஈஉக

புளிப்புடன் புகையிலையும்
போக்கிமூன்று நாளுங்கொள்,
களித்திடும் பிரமியங்கள்,
கண்ணினிற் காணுததே
தளிர் த்திடாம்பல் தாமரைத்
தடாகஞ்சூழ் தஞ்சாபுரி
வளப்பமாய்ச் செங்கோல் செலுத்து
மன்னர் கோனருளிதே. ஈஉ

(இ-ன்)

கோழிமுட்டை மூன்றின் வெள்ளைக்கரு
நல்லெண்ணெய் | பலம்
மூன்று எலுமிச்சம்பழங்களின் சாறு
இவை மூன்று வகைகளையு மொன்று சேர்த்துக் குடிக்கவும். பிரமியம் தீரும்.

பத்தியம் :—

உப்பு, புளிப்பு நீக்கவும். புகையிலையையும் தள்ளவும். இம்மருந்தை 3 காலைக்குப் பருகவும். பிரமியங்களனைத்தும் தீரும். கைகண்டது.

70. பிரமியத்துக்குக் கொன்றை மருந்து

மண்ணிலுலோர் செப்பு செய்து
மதையுங் காயவைத்துமே,
கொன்னையின் கொழுந்தவரைக்
கொழுந்திரண்டு முன் செய்த
மண்ணின் செப்புக்குள்ளிதை வை
வைத்து மேலு மூடியே
வண்ணமான சேலையாலே
மண்ணின் சேலை செய்திடே. ... ...

சேலைசெய்துலர்த்திக் கீழுஞ்
செப்பு மேலும் வறளியைச்
சாலவே யடுக்கிச் சற்றனலி
லிட்டு வெந்த பின்
லிலமா மருந்தைதைத்
திருப்பியே கொடுத்தலு
கூல காலம் வந்த தென்று
கூறெள்ளெண்ணெய் கொஞ்சமே. ... ...

கொஞ்ச மெண்ணெயு கன்மின
சுமரைப்பல மதா
மஞ்சுபலமா ந்தேற்றுன் வித்து
மத்துடன் கடுக்காயொன்று
சஞ்சலமில்லாத நெல்லி
தன்பருப்பு மொன்று தான்
வஞ்சனையில்லா மலம்மி
வைத்தரைத்து ண்டை செயே. ... ...

உண்டையு ங்கழற்சிபோ
லும் பணித்தேன்றன்னிலே,
யுண்டு பாரிரண்டு வேளை
யுந்தா னெட்டு நாளுமே,
பண்டு செய்த வினையினால்
பலத்திடும் பிரமியங்
கண்டனிற் காணுமலே
கலங்கியோடு ங்காதமே. ஈஉச

(இ-ள்)

களிமண்ணினால் ஒரு சிறு செப்புச் செய்து காய வைத்து, அதற்குள் கொன்றைக்கொழுந்து, அவரைக் கொழுந்து இவ்விரண்டையும் செப்புக் கொள்ளும்வரை நிரப்பி மேலே சில்லுப்போட்டு மூடிச் சீலைமண் செய்யவும். இதை வெயிலில் உலரவைத்தபின் கீழும்மேலும் வறிவியை யடுக்கிப் புடம்போட்டு, வெந்தபின்பு, புடத்தைப் பிரித்து மருந்தை எடுத்துக்கொண்டு, மிளகு ½ பலம் போட்டு, கல்லெண்ணெய் சிறிதுவிட்டு,

தேற்றான் வித்து	5 பலம்
கடுக்காய்	1 பலம்
கொல்லிக்கொட்டைக்குள்விருக்கும் பருப்பு	1 ,,

இவைகளையும் அம்மியிலிட்டரைத்து, கழற்சிக்காயளவு உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும். இதைத் தேனில் குழைத்துத் தின மிருவேளை, 8 நாளைக்குச் சாப்பிடவும். பற்பல நீரிழிவுகளுந் தீரும்.

71. பிரமிய முதலான மேகவியாதிக்கு சம்பீர எண்ணெய்

சம்பீரப்பழ த்திற்றேடே
சாறு நாழி யவ்விரை

யும் பாரெள்ளெண்ணெய் காழி
யுரிமையான சீரகங்
கொம்பு சந்தணமும் வெள்ளைக்
குங்கிலிய நந்திப்பிலி
வம்பில்லா தநி மதுரம்
வாய்த்த சாத்திர வேதியே.

வேதி நெல்லிமுள்ளி விரச
மிகுந்திடி கற்பூரமுஞ்
சாதகச்சிலா சித்துஞ்
சார்கெருஞ்சிக் காயுட
னேதமுத சர்க்கரை
யுடனே யிவ்வகையெ லாம்
நீதமாக வோர்வகைக்கு
கிறுத்திடோர் பலமதே.

பலமரை வெண்காரமும்
பதினெண் வகையுமிதைச்
சலமது விட்டே யரைத்து
சஞ்சல மில்லாமலே
லமதா மெள்ளெண்ணெய் விட்டு
காடியுப் பேற்றியே
பலமதாகவே மெழுகின்
பதமதில் வடித்திடே.

வடித்திடோர் கலசமீதில்
வைத்து நோய்களுற்றவர்
கொடித்திடோர் கரண்டிதானும்
கொண்டடிக்கால் மண்டலம்
திடத்துடனி துண்ட பேர்க்குத்
திரும் வியாதி பிரமியங்

துடித்தெழும்பு ருக்கியுங்,
துர்மாம்ஸமும் போகுமே. ஈகூஅ

போகு மேகக்கட்டுடன்
பொல்லாத நீரின் கட்டுமே,
யேழுமே பெரும்பாடு
மிதல்லால் வெகு நோய்களும்
வாகுள சம்பீர எண்ணெய்
மன்னர்கோன் தஞ்சாபுரி
நாகரிக சரபபூபன்
நாடொறு முணர்ந்ததே. ஈகூக

(இ-ள்)

எலுமிச்சம்பழச்சாறு	1 காழி
எள்ளெண்ணெய்	1 காழி, இவற்றுடன்
சீரகம்	சந்தனம்
வெள்ளைக் குங்கிலியம்	திப்பிலி
அதிமதுரம்	சகஸ்ரவேதி
நெல்லிமுள்ளி	கற்பூரம்
சிலாஜது	நெருஞ்சிக்காய்
சீந்தில்சர்க்கரை	எலுமிச்சம் விதை
இவைகள் வகைக்கு	1 பலம்
எண்ணெய் வெங்காரம்	¼ பலம்

இச்சரக்குகளை ஜலம் விட்டு கன்றுக அரைத்து சாறு கூட்டிய எண்ணெயுடனே குழப்பி அடுப்பின்மே லேற்றி மெழுகு பதத்தில் வடிக்கவும். இதை ஒரு பாண்டத்தி லிட்டுத் தினம் ஒரு கரண்டி வீதம் ¼ மண்டலத்திற்குச் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :— பிரமியம், எலும்புருக்கி, துர் மாம்ஸம், மேகக்கட்டுகள், நீர்க்கட்டு, பெரும்பாடு முதலிய பலவித நோய்களுந்தீரும்.

குறிப்பு :—செப்யுளில் 18 சரக்குகள் என்று காணப்படினும் 15 சரக்குகள்தான் உள்ளன. 94 கெ. சுவடியில் இலவங்கம் 1 பலமும் காணப்படுகிறது.

72. பிரமியத்துக்கு நீராதாரா மருந்து

சோத்தினீரு தன்னிலே
துடியிலுப்பை யின்னிலை
வார்த்திடித் துழக்குச் சாறும்
வன்கூரெள்ளி னெண்ணெயுஞ்
சேர்த்திதைக் கலக்கியே கொள்,
தினமுங்கால காலமே,
ஆத்தமுடியா ப்பிரமி
யங்கள் தீரும் பத்தியமே. ஈசுயி

பத்தியங்கள் வாய்வுள
பதார்த்தமுப்பு த்தள்ளிடி
வொத்திடி மிலுப்பை யாதி
யுண்மருந்தி தற்கு மே,
சித்தர் சொன்னதைத் தினந்
தினமுணர்ந்து தஞ்சையின்
சத்திர பதியா மெங்கள்
சரபபூப னருளிதே. ஈசுக

பழய நீராதாரத்தில் இலுப்பையிலையை ஊரவைத்து அதையிடித்துப் பிழிந்த சாறு ஒரு உழக்கு
சுத்தமான எள்ளெண்ணெய் ,,

இவ்விரண்டையும் ஒன்று கலந்து நன்றாகக் குலுக்கித் தினம் அதிகாலையில் மாத்திரமே கொடுத்துக்கொண்டு வரத் தீராத பிரமேகங்களும் தீரும்.

இதற்குப் பத்தியம் :—வாயு பதார்த்தங்களைத் தள்ளவும். உப்பை நீக்கிவிடவும்.

73. பிரமியத்துக்குக் கரிசாலங்கண்ணி மருந்து

தன்னிகரிலாத கரிசாலங் கண்ணி தன்னையே
உன்னித முடனரைத்துடன்கருஞ்சீரகமும்
கன்னயப்பொடி யுஞ்சர்க்கரை யதிற் கலந்துமே,
இன்ன கரிசாலங் கண்ணியின் மருந்திதாகுமே ராஉ

இம்மருந்தை மூன்றுநாளுமே யுண்ணுப்பிரமியங்
தம்மிலேகுமே புளிப்புத்தள்ளு நெய்யுஞ் சோறுணுங்
கம்மையும் பழித்த செங்கான சரபபூபனுஞ்
செம்மையா யுரைத்திடு ஞ்செயலறிந்து பாருமே.

(இ-ள்)

கரிசாலாங்கண்ணி கருஞ்சீரகம்

இவ்விரண்டையும் சம எடை எடுத்து நன்றாக நிழலி லுர்த்தி அதற்குச் சரியெடை சர்க்கரை கூட்டி, நன்றாகக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு வெருகடியளவெடுத்துத் தினமும் சாப்பிட்டு வரவும். இவ்வாறு 3 நாளைக்குச் சாப்பிட்டால் சகலவித பிரமியங்களுந் தீரும்.

பத்தியம்:—புளியை நீக்கி, நெய் வார்த்துச் சாதம் சாப்பிடவும்.

74. பிரமியத்துக்குப் பொடுதலை மருந்து

எருமை மோருதன்னிலே யியம்பிடும் பொடுதலை
அருமையாகவே யிடித்ததனில் சாறு காற்படி
யொருமையாக மூன்றுநாளு முண்ணிரண்டு வேளையும்
பருகுமுப்புடன் புளிப்பும் பாரிதைத் தள்ளிவிடே.

விட்டெருமை யின்றயிர்மோர் விட்டு சோறுமுண்டிடி
மட்டிலாம் பிரமிய மறும் பொடுதலை மருந்
தஷ்டதிக்குடனே ஐம்பத்தாறு தேசமும் புகழ்
சட்டமான தஞ்சையாளு ஞ்சரபபூ பனருளினாலே.

(இ-ள்)

பொடுதலையைக் கொண்டுவந்து எருமை மோரில் ஊறவைத்து இடித்துப் பிழிந்த சாறு—$\frac{1}{4}$ படி. இதைத் தினம் காலையிலும் மாலையிலுமாக, மூன்று நாளைக்குக் குடிக்கவும்.

பத்தியம்:—உப்பு, புளிப்பு இவ்விரண்டையும் நீக்கி, எருமைத்தயிர், மோர் இவைகளைக் கூட்டவும்.

75. பிரமிய முதலான சகல ரோகத்துக்கும் தாளிச பத்திரி வடகம்

பத்தியாகத் தாளிசத்தின் பத்திரி வடகமொன்
றுத்திடும் பிரமேகத்துக் கோதுவேனுசிதமாய்
சத்துவமுள்ள னத்தின் சீந்திச்சர்க்கரை ரெண்டுபல
மொத்தசீனிச் சர்க்கரையு மூன்றுபலமாகுமே. ஈஉ

ஆகும் நெல்லிமுள்ளி தான்றி யங்கடுக்காய் மூன்றுமே,
பாகமாகவுமரை ப்பலந்தாளீச பத்திரி
வேகமாக வோர் பலஞ்செவ்வியமும் வால்மிளகுடன்
தாகந்தீர க்ராம்புடன் சன்னல வங்கக்கூட்டி யே.

கூட்டி டு திகைத்து மிள குமதிமதுரமுங்
கோட்டமுக் திப்பிலி மூலங் குணமதேலக்திப்பிலி
வாட்டமிலா மிந்த வகைக்குக் காற்பலமதாக்
தாட்டிக மிகுந்த நல்ல சாதிக்கா யோர்பலமதே. ஈஅ

பலமிகுந்த வகைகளான பதினாறு வக்கைகளும்,
நலமிகுந்த வம்மியிலரைத்துச் சூர்ணஞ் செய்தே
பலமிகுந்த நற்பசுவின் பால்குறுணி விட்டுமே
கலந்த நிப்பிலேத்தியே கனலிலிட்டெரித்திடே. ஈஉ

எரிகுழம்பானவாறு மேற்றசர்க்கரையதை
பரிவுடனதிலிடும்பின் பகரு சூரணத்தையும்

வரிசையாக யிட்டிரும்புவன் கரண்டி தன்னிலே
துரிதமாகவுமதை துளாவிக்கொண்டிருந்திடோ.ராசுமீ
இருந்துபத மறிந்திறக்கி யாறவைத்துமே,
வருந்துமோர் நெல்லிக்காயளவான வுண்டைபண்ணி
அருந்திடோருண்டை தானுமந்தி சந்திதானுமே, [யே,
திருந்து மிச்சா பத்தியந்தீரும் வியாதி கேளுமே.

தீருங்கல்லடைப்புடன் சீவிழுந்துர் மாங்கிஷ
மாரு காபியின் புண்ணீரடைப்புடன் பிரமேகமுஞ்
சீர்சலக் கழிச்சலுஞ்சி வந்து நீரிரங்குதல்
பாரு செங்கதிர் முன்னே பனியெனப் பறக்குமே.

பனியெனப் பறக்கு மிருபத்தொரு மேகங்களும்
முனிவர்களுரைத்த திந்த முறையதைத் தயையுளா,
மனமுளத்தஞ்சாபுரி மன்னர் சரபேந்திரன்
றினமுணர்ந்த திம்முறையுஞ் செய்துபார் தெரியுமே.

(இ-ள்)

சீந்தில் சர்க்கரை	2 பலம்
சீனி	3 ,,
நெல்லிமுள்ளி	½ ,,
தான்றிக்காய்த் தோல்	½ ,,
கடுக்காய்த்தோல்	½ ,,
தாளீசபத்திரி	1 ,,
சவ்வியம்	¼ ,,
வால்மிளகு	¼ பலம்
இராம்பு	,,
சன்ன லவங்கப்பட்டை	,,
மிளகு	,,
அதிமதுரம்	,,
கோஷ்டம்	,,
திப்பிலி மூலம்	,,

ஜாதிக்காய்	1 பலம்
ஏலக்காய்	½ பலம்
திப்பிலி	,,

இச்சரக்குகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணம் செய்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

பசுவின்பால் ஒரு மரக்காலி அடுப்பின்மேலேற்றி நீச்சுண்டியபின் மேலேசொன்ன 3 பலம் சர்க்கரையை யதிலிட்டு, பிறகு சூரணத்தையும் போட்டு, ஓயாமல் ஒரு இருப்புக் கரண்டியினல் துழாவிக்கொண்டு வரவும். பின்பு, தக்க பதங்கண்டு அடுப்பின்மேலிருந்திறக்கி ஆற வைக்கவும். இதில் கெல்லிக்காயளவெடுத்துத் தினம் இரு வேளை காலையினும் மாலையினும் சாப்பிட்டு வரவும்.

தீரும் வியாதிகள் :—

கல்லடைப்பு, சீழ்விழுதல், துர்மாமிசம், வயிற்றுப் புண்கள், நீரடைப்பு, பிரமேகம், சலக்கழிச்சல், சிவந்து நீர் இறங்குதல் போன்ற பல வியாதிகள் தீரும்.

76. சீழ்ப்பிரமேகத்துக்கு எண்ணெய்

அவனிவாழ் விளக்கெண்ணெய் படியொன்று
மருமை வெங்காயச்சாறு படியொன்றுங்
குவளம் பட்டையின் சாறுபடி யொன்றுங்
கூட்டி மூன்றுங் கலக்தே யெரியிட்டுமே,
கவனமுற்று மெழுகு பதத்தினிற்
கண்டிறக்கி யிறுத்து வைத்துக்கொண்டு
செவையுடன் சாதிக்காயுமை ரைப்பலஞ்
சிக்கிரம் பொடி செய்ததிற் போட்டிடே ஈசுரி

போட்டுமே வேடுகட்டி வைத்துக்கொண்டு
புகலுகின்ற வியாதி மனிதன்சொற்

கெட்டிக்கொண்டு முதலுளெண்ணெய் முழு
கென்று சொல்லி மறுநாளுதயத்திற்
கூட்டுசற்றே வெதுப்பிக் கொண்டெண்ணெ
யைக்கொடு வீசம்படி மூன்றுநாட் காலமே.
காட்டுபத்திய மூன்று நாளெண்ணெயுண்
ணுமலே பத்திய மூன்று நாளாறுமே. ஈக்கூ

ஆறுநாளைக்குக் கைப்புப் புளிப்பைவிட்
டடித்திடுமேழா நாளிலே குண
மாறுகண்டெண்ணெய் தேய்த்து மூழ்கியே
மறுபுளி கூட்டிப் பத்தியஞ் செய்வதில்
லீறு காங்கை யதிகமாறும் பசு
வின்நெய் பால்மோர் மிகக்கொண்டு கூட்டிடு
தேறுகின்ற மனிதர்களுக்குத் தான்
றீருகின்ற வியாதியைச் செப்பிடே. ஈசன

செப்புவாய் கொடுமை மேகவாயவுஞ்
சிந்தை நொந்திடு மேகப்பிடிப்புடன்
வெப்பு உட்டின வாய்வுஞ் சீழ்ப்பிரமேக
மென்றதெல்லா நுங்குணமே தருந்
தப்பிதங்களிலை யிது வுண்மையே,
சரசசற்குண விற்பனனுழி சூழ்
வைப்பின் முத்தமிழ் நித்தம் வளர்த்திடு
வன்னவன் சரபேந்திரன் முறையிதே, ஈசுஅ

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய் | படி
வெங்காயச்சாறு | படி
குவளம்பட்டைச்சாறு (வில்வப்பட்டை) | படி

இம்மூன்றையு மொன்றுகலத்து, அடுப்பின்மேல் வைத்து மெழுகுபதமாக வடித்து இறக்கவும். பின்பு,

சாதிக்காய் ½ பலம்

பொடி செய்து எண்ணெயுடன் குழப்பி வேடுகட்டிக் கொள்ளவும். ரோகியை முதல்நாள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யச்சொல்லி மறுநாள் காலையில் வீசம்படி எண்ணெயெடித்து, அனலில் வெதுப்பி 3 காலைக்குக் கொடுக்கவும்.

பத்தியம் :—

6 காலைக்குப் புளிப்பு, கைப்பு நீக்கவும், 7-வது நாள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும். மறுநாள் புளி சேர்க்கவும்.

காங்கை யதிகமாஞல் பசுவின் நெய், பால், மோர் இவைகளைக் கூட்டவும்.

தீரும் நோய்கள் :

மேகவாயு, மேகப்பிடிப்பு, உஷ்ணவாயு, சீழ்ப்பிரமேகம்.

77. இரத்தப்பிரமியத்துக்குஞ் சீழ்ப்பிரமியத்துக்கும்

முடக்கொத்தா னு முருங்கை விரையையு
மொத்தகத்தேனி லரைத்து விழுங்கிடத்
தொடக்கை கூசிய சீயின் பிறமியத்
துடனிரத்தப் பிரமியந்தீருங்
தடக்குவலயத்திற் சொல்லு கைகண்ட
தாக விங்கிதக்காந்தி மணி முத்து
வடக்கு வலயத்திருமாது வளர்ந்திடு
மன்னவன் சரபேந்திரன் முறையிதே. ரசூக

(இ-ள்)

முடக்கொத்தான், முருங்கைவிரை இவ்விரண்டையும் சமனெடுத்துத் தூள்செய்து தேன்கூட்டி யரைத்து விழுங்கவும்.

சீழ்ப்பிரமேகமும், இரத்தப்பிரமேகமுந் தீரும்.

மூலச்சுவடியில் அடித்த ஓலை காணப்படவில்லை. அதில் கண்ட முறை (உரை நடைச்சுவடியிலுள்ளபடி) பின்வருமாறு:—

78. எட்டுவகை பிரமியத்துக்கு மருந்து

கோவையிலை அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு
ஓமம் அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு
புளியிலைச் சாறு ½ படி
இவைகளைக் கலக்கிக் குடிக்கவும்.

79. பிரமியத்துக்கு

உகா வேர்ப்பட்டை வராகனிடை யொன்று
மொண்கடுகு வராகனிடையொன்றும்
அகாதகாரக்கொடிவேலிவேர்ப் பட்
டையது வராகனிடை யொன்றுங் கூட்டியே
மூகாரவிந்த விழியாலறிந்திந்த
மூச்சரக்கை யரைத்தெடுத்துக் கொண்டு
சகாயஞ்செய் கருப்புட்டியைமுன் கொடு
சாப்பிட்டவுடனிம் மருந்தைக்கொடே. ாரிய்

கொடுத்துத் தின்னவு மிப்படி மூன்றுநாள்
குணமிகுந்திடும் பத்தியமோ விலை,
விடுத்து மெந்தப் பிரமியந்தீரு
மேதினி க்கிது கைகண்டதுண்மையே
அடிக்கு மென்பதடு க்கா துணர்ந்து கல்
லறி விலே யறிந்த ன்னவத்திரங்
கொடுக்கு மிங்கித சங்கித சாகித்திய
குணம் வளர் சரபேந்திரன் முறையிதே. ருக

(இ-ள்)

உகாவேர்ப்பட்டை		வராகனெடை
கடுகு		,,
கொடிவேலி வேர்ப்பட்டை		,,

இம்மூன்றையும் மூன்று சேர்த்து கன்றுக அரைத் துக்கொண்டு கருப்புட்டியை (பனைவெல்லம்) முதலில் கொடுத்து விழுங்கச் செய்து பின்பு, இம்மருந்தைச் சாப் பிடக் கொடுக்கவும் (விழுங்கவும்). இப்படி 3 நாளைக்குக் கொடுக்கவும். இம்மருந்திற்குப் பத்தியம் கிடையாது.

80. பிரமியத்துக்கு மருந்து

வெள்ளைக்குன்றிமணிவேரவரைவேர்
மேன்மை சேர்ந்து வளர் தேத்தாங்கொட்டையும்
கள்ளமில்லாதவப்பிரகமும் கல்ல
காந்தம் ஈயமுந்துத்த மெகுவு முடன்
கொள்ளும் நெல்லி முள்ளி வளரும் புளிக்
கொட்டைத்தோலும் கடுக்காயுந்தானிக்காயும்
விள்ளுகின்ற இரும்பு புரூப்பிச்சு
விளாம்பிசினு மிலவம்பிசினுமே ... ஈரு

பிசினெடெல்லாம் வகை சமன் சேர்த்துமே
பெருகுங்காடிவிட்டே யரைத்துக்கொண்டு
உசிதமான மிளகுகள் போலவே
உண்டை பண்ணியே மோரில் கொடுக்கவும்
பிசிபோலெந்தப் பிரமியம் தீரும்
பேசு கைப்புப் புளிப்பை விடவுமால்
சசியையு ஞ்சடைமீதிலணி சிவன்
தாடெழுந் சரபேந்திரன் முறையிதே. ... ஈருக

(இ-ள்)

வெள்ளைக்குன்றிமணி வேர் புளியங்கொட்டைத்தோல்
அவரைவேர் கடுக்காய்த்தோல்
தேத்தாங்கொட்டை தான்றிக்காய்த்தோல்
அப்பிரகம் (சுத்தியானது) இரும்பு (சுத்திசெய்து)
பூரவின் பித்தம்(?)

சுத்திசெய்த காந்தம்		நெல்லிமுள்ளி
,,	வெள்ளீயம்	விளாம்பிசின்
,,	துத்தம்	இலவம் பிசின்
,,	எஃகு	

இச்சரக்குகளனைத்தையும் சரியெடை யெடுத்து, காடிவிட்டு கன்முக வரைத்து, மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்துகொண்டு நிழலிலுலர்த்தி, பசுவின்மோரில் கொடுக்கவும். பிரமியக் தீரும்.

இதற்குப் பத்தியம் :—

கைப்பு, புளிப்பை நீக்கவும்.

குறிப்பு :—' இரும்பு புருப்பிச்சு ' என்று மூலச்சுவடியில் இருந்த போதிலும், உரை நடைச்சுவடியில், ' இருப்பிரும்புச்சி ' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச் சரக்கு இன்னதென்று நிச்சயமாகச் சொல்ல இயலவில்லை. மூலச் சுவடியைப் பின்பற்றிப் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

81. பிரமியத்துக்குச் சூரசம்

ஏலமுமாவிரை சீரகங் கிராம்புமிது
கான்கும் வகைக்கு வராகனிடை ஐந்தும்,
ஆலம்விழுதொரு வராகனிடை கூட்டி
ஐந்துவகையதைத் தயிர் விட்டரைத்தெடுத்து
சாலவிரண்டிருகை யுள்ளங்கைப் பிரமாணம்
தயிரிலிந்த மருந்தை வைத்துக் கலக்துமே தான்
சிலமுடனருந்தவுமே பிரமேகங்கள்
தீரு நிசம் பத்தியந்தானதற்குக் கூறே. ஈசுரு

கூறவரைப்பிஞ்சு முளைக்கீரை த்தண்டு
குளுமை பச்சைப்பயறு பயறிரசமிந்த
வாறுடனே பத்தியமுஞ் சூரசமுண்ண
வழுத்து வாயிது முறைகைகண்ட துண்மை.

வீறுமறுவர் களுனெதிர்த்து நின்று
வெற்றிபெற்று மட்டதிசை மேதினிக்குள்
ஆறுமெதிரில்லாச் சூராதி சூர
ஞன சரபேந்திரன் சொல் முறையிதாமே. ஈசூட

(இ-ள்)

ஏலக்காய்	ஆவாரை விரை
சீரகம்	கிராம்பு
இச்சரக்குகள் வகைக்கு	5 விராகனெடை
ஆலம் விழுது	1 ,,

இவைகளை யொன்றுகூட்டி அம்மியில் வைத்துத் தயிர் விட்டரைத்துப் பின்பு 2 உள்ளங்கைகள் கொள்ளு மளவு தயிரில் இம்மருந்துகளைக் கலந்துவைத்துக்கொண்டு சாப்பிடப் பிரமேகங்கள் பலவும் தீரும்.

பத்தியம்:—

அவரைப்பிஞ்சு, மூலைக்கீரைத்தண்டு, பச்சைப்பயறு, பாசிப்பயறு, இரசம், இவைகளைக் கூட்டவும்.

82. பிரமியத்துக்கு

சந்தமிகு நல்லெண்ணெய் சிரங்கை கையாந்தரைச்
சாறுஞ்சிரங்கை யிரண்டுஞ் சேர்த்து
விந்தையுள்ள சர்க்கரையைக் கலக்கருந்த
மேகமதிற் பிரமேகம் நிச்சயமாய்த் தீரும்
தொந்த மருவலரை மூன்றுளெதிர்த்து நின்று
துரத்தி வெட்டி செயித்து வெற்றித்
துதியேகொண்டு
வந்த துளசேந்திரன் செய்தவத் துதித்த
மன்மத வேள் சரபேந்திரன்முறையிதாமே. ஈசூடு

(இ-ள்)

நல்லெண்ணெய்	ஒரு சிரங்கை
கையாந்தகரைச்சாறு	ஒரு சிரங்கை

இவ்விரண்டையு மொன்று சேர்த்துச் சர்க்கரை கல க்து சாப்பிடவும். பிரமேகக் தீரும்.

83. பிரமேகத்துக்கு

எழில் மூடக்கொத்தான் சாறு சேரதைக்கா
லெண்ணெய் சேரரைக்கால் சேர்ந்தினிய வாழைப்
பழமதிற் போட்டேல ஞ்சீரகமொவ்வொன்று
பலம் வறுத்துப்பொடி பண்ணிக்கொண்டதோடே
அழகுடன் சர்க்கரையு மொருபலங் கலந்து
மதை மூன்று பங்கு வீதங்கள் செய்து
செழிக்கு மெண்ணெயுடன் வாழைப்பழமுஞ் சாறுஞ்
சேர்ந்ததிப்பி லிப்பொடியை ஒருபங்கு போடே.

போட்டிவாயெண்ணெப் பழச்சாறு மீதிற்
புகல் கோழிமுட்டை வெள்ளைக்கருவை விட்டுக்
கூட்டி யெண்ணெய் குடித்துப் பழமொன்று தின்று
கொண்டிந்தப்படி மூன்று காளருந்த
வாட்டுகின்ற பிரமேகமெல்லாக் தீரு
மகிழ்ந்துகண்டதிது புகழே வளரும் தஞ்சை
நாட்டுக் கென்னுரு மதிபதி யுல்லாச
நாகரிகன் சரபேந்திரன் முறையிதாமே. ாசூஎ

(இ-ள்)

மூடக்கத்தான் சாறு	$\frac{1}{8}$ சேர்
நல்லெண்ணெய்	$\frac{1}{8}$ சேர்

இவ்விரண்டையு மொன்று கலந்து, ஒரு வாழைப் பழத்தையும் கறுக்கிப்போட்டு,

ஏலக்காய்	சீரகம்

இவ்விரண்டையும் வகைக்கு ஒருபலம் வீதம் வறுத் துச் சூரணித்துப்போட்டு, சர்க்கரை 1 பலமும் போடவும்.

இதை மூன்று பங்குகளாக்கி, ஒருபாகம் சாதுகலக்த எண் ணெயுடனே திப்பிலிச்சூரணம், கோழிமுட்டையின் வெள் ளைக்கரு, இவற்றைச் சேர்த்துப் பருகவும். பின்பு வாழைப் பழம் ஒன்று சாப்பிடவும். இப்படி 3 நாட்கள் சாப்பிடவும் பிரமேகங்கள் தீரும்.

84. பிரமேகத்துக்கு

கல்லெண்ணெ யொருபடி கெல்லிக்காய்ச்சாறு
கான்குபடி பசுவின்பால் படிதானென்றும்,
பல்லவஞ்சேர் பிரமியிலைச்சாறு கான்கு
படியுடனே பசுவின் நெய்படி தானென்றும்
செல்ல இவை சேர்த்துமே பக்குவமாய்க் காய்ச்சிச்
சீனியது இரண்டு பங்குஞ் சீக்கிச்சீனி
சொல்லவொரு பங்குமதில் போட்டருந்தச்
சுருக்கிலே பிரமேக மோடிப்போமே. ஈசுஅ

(இ-ள்)

கல்லெண்ணெய்	1 படி
கெல்லிக்காய்ச்சாறு	4 படி
பசுவின்பால்	1 படி
பிரமியிலைச்சாறு	4 படி
பசுவின் நெய்	1 படி

இவைகளை யொன்றுகலக்து அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும். பின்பு, சர்க்கரை 2 பங் கும் சீக்தில் சர்க்கரை ஒரு பங்கும் அதில் போட்டுக் குழப் பிக்கொள்ளவும். இதைத் தினமும் ½ தோலா வீதம் சாப் பிட்டுவர நீர்ழிவு தீரும்.

85. பிரமேகத்துக்கு

பருத்த கெல்லிக்காய்ச் சாறு படியிரண்டும்
பண்பான கல்லெண்ணெய் படிதானென்றும்

விரும்பு கருப்பஞ்சாறும் படிதானென்றும்
வெள்ளாட்டுப்பாலுமே படிதானென்றும்,
நெருஞ்சிவேர்ச்சாறு படியொன்றுமாவின்
நெய் படிதானென்றும் நிலக்குமிழஞ்சாறும்
ஒருபடி சதாவேரிக்கிழங்குச் சாறு
ஒருபடி யிலுப்பைப்பூப் பலமுமெட்டே. ஈசுங

எட்டிடனே அதிமதுரம் பலமிரண்டு
மிலவைகளெல்லாம் பக்குவமாய்ச் சேர்த்துக்காய்ச்சித்
தொட்டிறக்கி வடிகட்டிச் சூடுமாறித்
துலங்குமெண்ணெய் தனிலொருபடி தேன்விட்டுக்
கொட்டு நல்ல சர்க்கரையும் பலமிரண்டு
கொடிமுந்திரிகைப்பழமும் பலந்தானெட்டு
வெட்டிசுக்குப் பலமொன்று மிளகு பலமொன்று
விளங்கு திப்பிலி பலந்தானொன்று சேரே ஈஎல

சேர்த்திவையெல்லாம் பொடியே பண்ணிப்போட்டுத்
திவ்வியமா யெண்ணெயிலே கலக்கிக்கொண்டு
வார்த்திரு வராகனிடை யருந்தச்சொல்லு
மார்புவலி பிரமேகம் ரீங்கி யோடும்
வர்த்துமே விரணத்தாலுடம்பிளைத்த
லிருமல் சயந்தரு மிளைப்பும் வலிப்புன்மாதம்
பார்த்து வயோபலமுங் காலபலமுங் கண்டு
பாண்டு காமாலை திமிர் வாதந்தானே. ஈஎக

திமிர்வாதமோடி தாதுவிருத்தி யில்லா
திளைப்புமதிசாரமொடு வாந்தி தீரும்
உமிழ்சாடாரக்கினிமின் பலமறிந்து
உற்று நிதானித்துமெண்ணெய் கொடு சுத்தானம்
அமிர்தமின்னட்குண்டாகுஞ்சரீரந்தங்க
மாகுந் தீர்க்காயுளது வுண்டாங் கூறு

தமிழருமை யறிந்த விந்தை மிகுந்த சோழன்
றனக்கு நிகர் சரபேந்திரன்முறையிதாமே ளஎ

(இ-ள்)

மூற்றிய நெல்லிக்காய்ச்சாறு	2 படி
நல்லெண்ணெய்	1 படி
கருப்பஞ்சாறு	1 படி
வெள்ளாட்டுப்பால்	1 படி
நெருஞ்சிவேர்ச்சாறு	1 படி
பசுவின் நெய்	1 படி
நிலக்குமிழ்ச்சாறு	1 படி
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	1 படி

இவற்றை யொன்று கலந்து,

இலுப்பைப்பூ	8 பலம்
அதிமதுரம்	2 பலம்

இவ்விரண்டு சரக்குகளையுமிடித்துப்போட்டு, அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாகக் காய்ச்சியிறக்கவும். பின்பு இதை வடிகட்டிக்கொண்டு, சூடு தணிந்தபின் தேன் 1 படியும் நல்ல சர்க்கரை 2 பலமும் போட்டு,

கொடிமுந்திரிப்பழம் (திராக்ஷை)	8 பலம்
சுக்கு	1 பலம்
மிளகு	1 பலம்
திப்பிலி	1 பலம்

இவைகளைப் பொடிசெய்து வஸ்திரகாயஞ் செய்து அதனுடன் குழப்பிக்கொள்ளவும். இதைத்தினம் 2 வரா கனெடை வீதம் சாப்பிட்டுவர,

மார்புவலி	பிரமேகம்
விரணத்தினுலேற்பட்ட உடம்பு இளைத்தல்	இருமல்
சூலை	வலிப்பு
உன்மாதம் (பைத்தியம்)	

முதலியவை தீரும். வயோபலமும் (வயது) காலபல மும் (சீத, உஷ்ணம்) அறிந்து சாப்பிடவும்.

பாண்டு	காமாலை
திமிர்வாதம்	தாதுவிருத்தியின்மை
அதிசாரம்	வாந்தி

முதலிய பற்பல ரோகங்களும் தீரும்.

சாடாரக்ஷியின் பலமறிந்து கொடுக்க ஸ்திரீகளுக்கு சந்தானமுண்டாகும். அவர் சரீரமுந் தங்க நிறமாகும். தீர்க்காயுளுமுண்டாகும்.

86. பிரமேகத்துக்குச் சந்தனாதிச் சூரணம்

அதிமதுரஞ்சந்தண மிலாமிச்சம் வே
ரான நெல்லி முள்ளியுடன் சிறுகாகப்பூ
துதி கோரைக்கிழங்குடன் பேரீச்சங்காயுந்
துலங்குகொடி முந்திரிகைப்பழமுங்கோட்டம்
புதிய விலுப்பைப்பூ திப்பிலியுங் கூட்டிப்
போட்டிவைகள் சமமது சேர்த்திடித்தெடுத்து
மதித்திடு சூரணமும் நின்ற நிறைக்கொப்பாக,
மதுரமுள்ள சீனியுஞ் சேர்த்தாவினெய்யே. ளவு

ஆவினெய்யுடன் கலந்து அந்தி யுண்க
அருணோதயத்தனிற் குளிர்ந்த சலத்திலுண்க,
மேவியங்கதாகமுடனீர்த்துவார
மெரிவுபிரமேகமுடன் மூலை மயக்கந்
தாவிய காமாலை பித்தசுரமுந் தீருந்
தாரணியிற் கைகண்டதிது சொன்னச்சாயல்
தூவியன்ன நடைமயில் மின்னுர்கலாசைத்
துரைமதவேள் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

அதிமதுரம்	சந்தனம்
இலாமிச்சம் வேர்	நெல்லிமுள்ளி

சிறுநாகப்பூ	கோரைக்கிழங்கு
பேரீச்சங்காய்	கொடிமுந்திரிப்பழம் (திராக்ஷை)
கோஷ்டம்	இலுப்பைப்பூ
திப்பிலி	

இச்சரக்குகளைச் சமமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து, இதற்குச் சரியெடை சீனி சேர்த்துக்கொள்ளவும். தினம் இச்சூரணத்தில் ஒருவெருகடியளவு (மூவிரல் கொண்ட அளவு) எடுத்துக் காலையில் குளிர்ந்த ஜலத்திலும் சாயங்காலத்தில் நெய்யுடனும் சாப்பிடவும்.

தாகம், நீர்த்துவார எரிச்சல், பிரமேகம், தலைமயக்கம் காமாலை, பித்தசுரம், முதலியவை தீரும். கைகண்டது.

87. பிரமேகத்துக்கு மேகவெட்டைக்கு

திடமிகுந்த பசுவினெய்யின் படிதானெண்ணில்
செறுப்பூளை வேர் கீழாநெல்லிவேரும்
கடலிழஞ்சி மிளகரணை முசுமுசுக்கை
காட்டிஞ விரை வேரும் பலமொவ் வொன்றும்
அடவுடன் சேர்த்திவை யிடித்துப் போட்டு கத்தி
யா வட்டைசாறு காற்படியும் விட்டு
படருமதிமதுரஞ் சாதிக்காய் சாதி
பத்திரி சீரகங் கிராம்பு கோட்டமரமே. ாளரு

கோட்டமுடன் வகையாளெவ் வொன்றுக்கொன்று
கூறுவசாகனிடையது ஆறுங்கொண்டு
மாட்ட வெள்ளைக் குங்கிலிய மரைப்பலஞ்சேர்,
வாகுடன் விளாம்பிசினு மரைப்பலஞ் சேர்
காட்டமுடனிச் சரக்கையிடித்து முன்சொன்
னற்பசுவின் னெய்யிற் போட்டுவைத்துக்கொண்டு
வாட்டமுள்ள நோயின்றகு அந்திசந்தி
வளரு நெய்யுங் கடுகுமாவருந்தச் சொல்லே. ாளசு

அருந்தவே சகல பிரமியந்தீரும்
அணுகாது மேகவெட்டை மேகவாயு
வருந்தவே பத்தியந் தானிதற்கில்லை பார்
வையகத்தி லிம்முறை கைகண்டதாகுங்
திருந்தவே கமலமீதுறைந்த விந்தைச்
சீரான அட்டயிலக்குமி யுங்கூடிப்
பொருந்து சரபோசி மகாராசன் கீர்த்தி
புண்ணிய வானிம்முறையைப் புகன்றதாமே.

(இ-ள்)

சுத்தமான பசுவின் நெய்	1 படியில்
சிறுபூளைவேர்	கீழாநெல்லிவேர்
கடலழிஞ்சில்	மிளகரணை
முசுமுசுக்கை	ஆவாரைவேர்

இவைகளை வகைக்கு 1 பலமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும்.

அதிமதுரம்	சாதிக்காய்
சாதிபத்திரி	சீரகம்
கிராம்பு	கோஷ்டம்

இவ்வகைகள் வகைக்கு 6 வராகனெடை யெடுத்து (94 நெ. சுவடியில் 1 வராகனெடை என்று காணப்படுகிறது.)

கத்தியாவட்டைச்சாறு $\frac{1}{4}$ படி விட்டரைத்து நெய்யுடன் கலந்து அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும்.

பின்பு,	வெள்ளைக்குங்கிலியம்	$\frac{1}{2}$ பலம்
	விளாம்பிசின்	$\frac{1}{2}$ பலம்

இவ்விரண்டையும் தூள் செய்து வடித்த நெய்யுடனே (சூடாக இருக்கும்போது) சேர்த்துக் குழப்பி வைத்துக்

கொள்ளவும். தினமும் 2 வேளை காலையிலும் மாலையிலும் இங்ஙெய்யைக் கடிகுடனே ½ அவுன்ஸ் வீதம் (பாலில்) கொள்ளவும்.

சகல பிரமேகமும் தீரும். மேகவெட்டை, மேகவாயு முதலியவை தீரும். பத்தியமில்லை. கைகண்டது.

88. பிரமியத்துக்கு

கூறுவாய் சிந்திற் சர்க்கரை யுந்தேத்தாங்
கொட்டையினை யரைத்துத் தயிரிற் கலந்து
வீறுதிகழ் வெல்லமது போட்டருந்த
மேவு வெள்ளைப் பிரமியங்களெல்லாந் தீரும்
காறுறு வாழைக்கிழங்கு தண்ணீரிற் பின்
னற்றேத்தாங் கொட்டைதனை யரைத்துப்போட்டு
மாறுதவிழ் வெல்லமது கலந்துகொள்ள
வாடிவெள்ளைப் பிரமியங்களோடிப் போமே.ாஎஅ

(இ-ள்)

1. சிந்தில் சர்க்கரை சீவிய தேத்தான்கொட்டை இவ்விரண்டையும் சமனெடையெடுத்துத் தயிருடன் கலந்தரைத்து, வெல்லம் ஒரு கட்டியும் போட்டுச் சாப்பிட, வெள்ளைப்பிரமியங்கள் அனைத்தும் தீரும்.

2. வாழைக்கிழங்கைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டிடித்துச் சாறுபிழிந்து, அதில் சீவிய தேத்தாங்கொட்டையை யரைத்து வெல்லக்கட்டியும் ஒன்றுபோட்டுச் சாப்பிடவும். வெள்ளைப் பிரமியங்கள் தீரும்.

89. வெள்ளைப் பிரமியத்துக்கு

வெண்ணலமே மிகுத்த விந்தைத் தேத்தாங்கொட்டை
வேருதனை மோருவிட்டரைத் தருந்து
முன்னம் வெள்ளைப்பிரமியங் கரைந்துபோகு
மூளையுடனே யுலகினிற் கைகண்டதாகும்

அன்னதானமு முதலாயகேக தானம்
ஆரணம் பார்த்ததிலுரைத்தபடிக்கி வாரிச்
சொன்னமழை வேதியர்க்கும் பொழிந்து தர்ம
துரையான சரபேந்திரன் முறையிதாமே. ாஎகூ

(இ-ள்)

தேத்தாங்கொட்டையின் வேரை எடுத்துக்கொண்டு, கன்றுகத் தண்ணீரில் கழுவி, மோர் (பசுவின்) விட்டரைத் துச் சாப்பிட்டால் வெள்ளைப்பிரமியம் அடியோடு தீரும்.

90. பிரமியத்துக்கு மருந்து

சுந்தரஞ்சேர் தென்னம்பாளையைத் துவைத்துத்
தோய்த்த தயிர்விட்டரைத் துப்பிழிந்ததிற்கேள்
தொங்த இலவம்பிசினும் புளியங்கொட்டைத்
தோலும் பொன்மெழுகுடனே யேலஞ்சேர்த்து
மிந்த நால்வகை யரைத்துச் சாற்றினிற்போட்
டினிதெருமைத் தயிரைவிட்டுக் குடித்து மேலும்
விக்தை கற்கிழாயமத்திப் பட்டையாலம்
விழுதறுகம்வேர் காவற்பட்டையாமே. ாஅயி

ஆமென நால்வகையையும் பின்னதுக்கிக்கொண்டு
அனிவலபக்கல்லுப்பொடி யதனிற்போட்டு
ஓமெனக் கடாயம் வைத்துச் சுண்டக்காய்ச்சி
உட்கொள்ளப் பிரமியங்க ளோடிப்போகும்
வாமமீருங் கௌரியிடப்பாக ரான
மகேசுவரன் பூசையினில் மனமகிழ்ந்து நித்தம்
கேமநிஷ்டை மறவாத கருணையினும்
நிறைந்துவளர் சரபேந்திரன் முறையிதாமே.ாஅக

(இ-ள்)

தென்னம்பாளையைக் கொண்டுவந்து அதை நசுக்கி, கன்றுகத் தோய்ந்த எருமைத் தயிர்விட்டு கன்றுக அம்மியி

லிட்டரைத்து ஒரு வெள்ளைத் துணியிலிட்டுப் பிழியவும். அதனுடன் இலவம்பிசின், புளியங்கொட்டைத் தோல், பொன் மெழுகு, ஏலக்காய், இச்சரக்குகளை அம்மிதனி லிட்டரைத்து தனியான எருமைத்தயிர் விட்டு எல்லாவற் றையும் ஒன்றுகக்கலக்து சாப்பிடவும்.

மருந்தைக் குடித்தபின்,

அத்திப்பட்டை ஆலம்விழுது

அறுகம்வேர் நாகப்பட்டை

இச்சரக்குகளைச் சமனெடை எடுத்து கறுக்கிக்கொ ண்டு கல்லுப்பொடிபோட்டு (8 மடங்கு) ஜலம்விட்டு எட் டிலொன்றுகக் காய்ச்சிக்கொண்டு கஷாயத்தை வடிக்கட் டிச் சாப்பிடவும்.

சகல பிரமியங்களும் தீரும்.

91. பிரமேகமெல்லாந்தீர

ஆவிரையின் பூவினடி வேயிருக்கும்

அரிசியுமெள்ளுஞ்ச மஞ்சேர்ந்தரைத் தெடித்து

ஓவியாப்போல் சுண்டைக் காயளவு செய்து

உண்டதின மூன்றருந்த மூன்றுகாட்கு

ளேவுபிரமேக மெல்லாந்தீரு மென்று

விளம்பு நிசங் கமலமுத்தைச் சொரிந்த சோலை

வாவிகள் சூழ் தஞ்சை நகராளுகின்ற

மகராசன் சரபேந்திரன் மூறையிதாமே. ஈஅஉ

(இ-ள்)

ஆவாரம்பூவின் நடுவிலுள்ள அரிசி

எள்ளு

இவ்விரண்டையும் சமனெடுத்து அம்மியிலிட்டரைத் துச் சுண்டைக்காயளவு மாத்திரைகளாகச் செய்துகொ ண்டு, தினம் 3 உருண்டைவீதம் உட்கொள்ள 3 காட் களுள் பிரமேகங்களனைத்தும் தீரும்.

92. பிரமியத்துக்கு மருந்து

பாங்கான வெள்ளைக் குங்கிலியம் கல்ல [ணெய்,
பளிங்கிரண்டு பலம்பொடி செய்ததில் கல்லெண்
நீங்காமல் வார்த்தரைத்துப் பின்னும் நற்றண்
ணீரிலுலரைத் தவ்வித மழுக்கை நீக்கிப்
பாங்காகச் சுத்த வெள்ளையாகக் கண்ட
வாறதனை யெடித்து யிருபது காளைக்கு
ஆங்காணும் பாக்களவு மிரண்டு நேரம்
அருந்த வெந்தப் பிரமியமுந் தீர்ந்துபோமே.ாஅ

(இ-ள்)

சுத்திசெய்த வெள்ளைக் குங்கிலியம் 2 பலமெடித்து கல்லெண்ணெய் விட்டரைத்து, நல்ல தண்ணீரில் திரும்பத் திரும்ப அழுக்கு நீங்கும்வரை கழுவவும். அது சுத்தமான வெள்ளை நிறமாகும். அப்போது, இதை ஒரு பாக்களவெடித்துக் காலையிலும் மாலையிலுமாக 20 காளைக்குச் சாப்பிட எவ்லாவிதப் பிரமியங்களும் தீரும்.

93. பிரமேகத்துக்கு

வங்கபற்பம் வெள்ளிபற்பம் சீசபற்பம்
வளர் சுவர்ண பற்பமிந்த வகை நான்குக்கும்
இஞ்சிதஞ்சேர் வகைக்கிரண்டு பலமுங் காந்த
மிரசபற்பம் வகையிரண்டும் பலமொவ்வொன்
துங்கமுள்ள பவழபற்ப முத்துப்பற்பஞ் [லும்
சொல்லிரண்டு பலம் நான்கும் நான்கதாகப்
பங்கிடாயிதெல்லா மிகல்வத்திட்டுப்
பண்புடன் மர்த்தனை செய்யவும் பகுவின்பாலே.

பாலோடெங் கத்தூரித் தண்ணீரிலும் கல்ல,
பரிமளஞ்சந்தன நீரிற் களுப்பஞ் சாற்றிற்
சால வெட்டிவேர்ச் சாற்றிலாடா தோடைச்
சாற்றிலிந்த வகைப்படி ஒவ்வொரு காளைக்குச்

சீலமுடன் தனித்தனி விட்டரைத்து வில்லை
செய்து நிழலுலர்த்தி மூங்கிற்குழாய்க்குள்
கோலவுமே பதனமது பண்ணிரெண்டு
குன்றிமணிபோ லவிழ்த்த மெடுத்திடாயே. ஈஅடி

எடுத்துச் சர்க்கரையினிற் றேனதிற் கொடுக்க
இசைந்த இருபதுவகை மேகங்களிருங்
கொடுத்திடனுபான விசேஷங்கள் கண்டு
கோசருவரோகமும் போமிது மெய்யுண்மை,
அடுத்த பந்துசன மூதலெல்லோரைக் காக்கு
மற்புதச் சத்திரிய குலதிலக ஞென்றைத்
தொடுத்திடில் மூன்றெடுத்தபடி கடத்தும்வெற்றித்
துரைச்சிங்கஞ் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

வங்கம் (வெள்ளீய) பற்பம்	வெள்ளிபற்பம்
ஸீஸ (காரீய) பற்பம்	தங்கபற்பம்
இந்தவகை பற்பங்கள் வகைக்கு	2 பலம்
காந்த பற்பம்	1 ,,
ரஸ பற்பம்	1 ,,
பவழ பற்பம்	4 ,,
முத்து பற்பம்	4 ,,

இவைகள் எல்லாவற்றையும் ஒரு பழகிய கல்வத்திலிட்டுப் பசுவின்பால் விட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். கஸ்தூரித் தண்ணீரிலும், சந்தனக் கஷாயத்திலும், கருப்பஞ்சாற்றிலும், வெட்டிவேர்ச் சாற்றிலும், ஆடாதோடைச் சாற்றிலும், தனித்தனியே ஒவ்வொரு காளைக்கு ஒவ்வொருசாறு வீதமிட்டரைத்துச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டி, நிழலில் காயவைக்கவும்.

இதை ஒரு மூங்கில் குழாயில் வைத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு, இரு குன்றிமணி நிறை மருந்தை எடுத்துச் சர்க்கரையிலோ அல்லது தேனிலோ கொடுக்கவும்.

20 வகைப் பிரமேகங்களும் தீரும். தக்க அனுபானங்களில் இம்மருந்தைக் கொடுத்துவர சகல ரோகங்களும் தீரும்.

94. பிரமியங் கல்லடைப்புக்கு

நாட்டீரவெங்காயம் பிடிதாணெண்ணும்
காயுருவியிலையுமொரு பிடிதாணெண்ணும்
கூட்டி யிரண்டையு மரிந்து வேகவைத்துக்
கொண்டெடுத்துத் திரும்பவக்தச் சட்டிமீதிற்
போட்டுழக்குப் பசுவினெய் விட்டதை வறுத்துப்
புகலுவாய் காளருந்தவே தான்
வாட்டுகின்ற பிரமியங் கல்லடைப்புந் தீரு
மகிழ்ச்சிதருஞ் சரபேந்திரன் முறையிதாமே.

ஈரவெங்காயம்	1 பிடி
காயுருவி இலை	1 பிடி

இவைகளை நறுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு, சிறிது ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி வேகவைத்து எடுத்துக் கொண்டு, மறுபடியும் பசுவின் நெய்விட்டு வறுத்து அதைச் சாப்பிடப்

பிரமியம், கல்லடைப்பு முதலிய ரோகங்கள் தீரும்.

95. சுக்கிலப்பிரமிய, இரத்தப்பிரமியம், சீழ்ப்பிரமியம், சதை நீரடைப்புக்கு

இடித்துமே தாளவிழுததை வுரிச்சா
றினைவடிகொண் டிறுபசுவின் பாலைவிட்டும்
எடுத்துத் தேத்தாம் விரை ஐந்தரைத்துப் போட்டு
எலுமிச்சங் காயளவு போலே யின்பங்
கொடுத்திடி சர்க்கரை கூட்டிக் கலக்கிக்கொண்டு
கொடுமூன்று காட்காலமே யருந்தில்

விடுத்தி ரத்தப்பிரமியஞ் சீழ்ப்பிரமியம் போம்
விளம்பு சதைவளர்ந்து நீரடைப்பும் போமே.

போமது சுக்கிலப் பிரமியமுமே தீரும்
புகலு வாய்புளிப்பு கைப்புத்தவிர்க்கவே தான்
ஆமவர்க்குச் சகல சுகமகிழ்ச்சி கண்ணுல்
வசியமிப்பு வியினிற் கைகண்டதாகும்
காமமேருவும் புவியைத் தாங்கினுற்போல்
காசினி வாழுயிர்களைக் காப்பாற்றுகின்ற
சேமமிகு செங்கண் மாலுருவெடுத்து
நிசம் வந்த சரபேந்திரன் முறையிதாமே. ஈஅக

(இ-ள்)

தாழை விழுதைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டிடித்துச் சாறுபிழிந்து, அச்சாற்றில் ½ படி எடுத்து அதற்குச் சமம் பசுவின்பால் விட்டுக் கலந்து, சீவிய தேத்தாங் கொட்டை 5 (எண்ணிக்கையில்) எடுத்துப் பால்விட்டரைத்து, எலுமிச்சங்காயளவு சர்க்கரையும் சேர்த்து, எல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்து, 3 நாட்களுக்குக் காலையில் அருந்தவும்.

இரத்தப் பிரமியம், சீழ்ப் பிரமியம், சதையினுலேற்பட்ட நீரடைப்பு இவைதீரும். சுக்கிலப்பிரமியமும் தீரும். பத்தியம்:–புளிப்பு, கைப்புப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்

96. பிரமியத்துக்கு

எள்ளெண்ணெய் யாழாக்கிற் பருத்திப்பிஞ்சை
எலுமிச்சங்காயளவதரைத் துப்போட்டு
உள்ளபடி கலந்தாழக்கெண்ணெய் வீதம்
உண்டிடவே மூன்று நாட்காலமே தான்
கள்ளமிகும் பிரமேகந் தீருமுப்புக்
கசப்புப் புளிப்புத் தவிர்ப்பதி துமெய் யுண்மை

கொள்ளு கலிகாலமதில் கண்ணுல் கண்ட
குபேரனென்னு ஞ்சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

சுத்தமான எள்ளெண்ணெய் 1 ஆழாக்கு

பருத்திப் பிஞ்சு அரைத்த விழுது எலுமிச்சங்கா யளவு எடுத்து, ஒன்றுகலந்து தினம் காலைவேளையில் 3 நாளைக்குக் கொடுக்கவும். பிரமேகம் நீரும். கைகண்டது.

பத்தியம்:—

கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புச்சுவையையும் தள்ளவும்.

97. பிரமிய முதல் தீருமருந்து

மருச்சிவனுர் வேம்புவேர்ப் பட்டைகொண்டு
வந்தரைத்துப் பசுவின் வெண்ணெயினிலுண்டா
கருங்குருவை யரிசியுடன் முள்ளெருஞ்சிக் [லும்
காயுஞ் சேர்த்திடித்தி தனைச் சுட்டுப்பிட்டு
அருந்திடலும் கடுக்காய் கற்றுழஞ்சோறு
மதையிரண்டுஞ் சேர்த்தரைத்த தருந்தினலுக்
திருந்து மிந்தமுறை மூன்று மருந்துவோர்க்குத்
தீராத பிரமேகந் தீர்ந்துபோமே. ாஅக

(இ-ள்)

சிவனுர் வேம்புவேரின் பட்டையைக் கொண்டுவந்து அம்மிமேல் வைத்து நன்றாக அரைத்து, பசுவின் வெண்ணெயுடன் குழைத்துச் சாப்பிட்டாலோ, அல்லது கருங் குருவை அரிசியுடன், எரிஞ்சிக்காய் (சரியளவு) சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்துப் புட்டாகச் செய்து சாப்பிட்டாலோ அல்லது கற்றுழைச் சோற்றையெடுத்து நன்றாக அலம்பிவிட்டுக் கடுக்காயுடன் கூட்டி உண்டாலும்,

தீராத பிரமேகங்கள் தீரும்.

98. பிரமேகத்துக்கு

எலுமிச்சங்காயளவு போலே தேங்கா
யிணை யரைத்து யிளவெங்நீரி லருந்த
மெலிந்து பிரமேகமென்ற தெல்லாந்தீரு
மேதினியிற் சோதணை கைகண்டதாகும்
கலிந்துவிடும் மருவலர்கள் துடர்ந்து கிட்ட
நாடாமல் தூரத்திவெற்றி மிகுஞ்சிங்காரம்
பொலிந்த சரபோசி மகாராச னின்பப்
புண்ணியவானிம் முறையைப் புகன்றதாமே. ஈஅஉ

(இ-ள்)

மூற்றிய தேங்காயை எடித்து எலுமிச்சங்காயளவு அரைத்து விழுதாக்கி இளஞ்சூடான வெங்நீரில் கலக்து சாப்பிடவும்

பிரமேகம் தீரும். கைகண்டது.

99. பிரமேகமெல்லாம் தீர மருந்து

வனக்கீழா நெல்லியைச் சமூலங்கொண்டு
வந்தரைத்து எலுமிச்சங்காயி னேராய்,
தினமும் வெண்ணெயதுவு மதுபோல் நிதானஞ்,
சேர்த்திரண்டையுங் கலந்து அருந்துவோர்க்கு
மனம்படி பத்திய மூன்றுநாட் பின்னேழு
வாரமட்டுமழுது மாத்திரமே கொள்ள
இனவழிசேர் பிரமேகமென்ற தெல்லாம்
ஏகுமிது நிசங்கை கண்டதாமே. ஈஅந

(இ-ள்)

கீழாநெல்லியைச் சமூலமாகப் பிடுங்கிக்கொண்டுவந்து, அம்மிதனிலிட்டு நன்றாக அரைத்து அதனுடன் எலுமிச்சங்காயளவு பசுவின் வெண்ணெய் கூட்டிச் சாப்பிடப்

பிரமேகம் அனைத்தும் தீரும்.

பத்தியம் :— மருந்தை 3 காளைக்குச் சாப்பிட்டு, ஏழு காள் வரை சாப்பாடு மாத்திரமே உட்கொள்ளவும்.

100. பிரமேகத்துக்கு மருந்து

ஆவின் பாலதிற் புளியன் வேரின் பட்டை
அம்மன் பச்சரிசியுடன் கீழாநெல்லி
மூவகையிற் பாலூற்றி வைத்திறுத்து
மோகமுள்ள சர்க்கரை கூட்டிக்குடிக்க
மேவு பிரமேகமெல்லாந் தீருமிந்த
மேதினியிற் கைகண்டதுண்மை யாக்குக்
தாவுமயில் சோலை தஞ்சை நகரையாளுஞ்
சரபோசி மகாராசன் முறையிதாமே. ஈஅச

(இ-ள்)

புளியமரத்தின் வேர்ப்பட்டை, அம்மான் பச்சரிசி, கீழாநெல்லி இவைகளைச் சமமெடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி, பசுவின்பாலில் ஊறவைத்து இறுத்து அப்பாலைச் சர்க்கரை கூட்டி அருந்திவரப் பிரமேகங்கள் தீரும்.

101. பிரமேகந்தீர மருந்து

குத்தும் வெள்ளைப் பச்சரிசி நீரிற் றேத்தாங்
கொட்டையு நெல்லிப்பருப்பு மூறப்போட்டு
வைத்தநாட்போக மறுநாளரைத்து
வாகாகக் கலந்ததிற் சர்க்கரையைக் கூட்டிச்
சித்தமகிழ்ந்ததை யருந்துவோர்களுக்குத்
தீராத பிரமியமுந் தீருமின்பம்
நித்தமுண்டா முலகினிற் கைகண்டதாகும்
நீதியுள்ள சரபேந்திரன் முறையிதாமே. ஈஅடு

(இ-ள்)

குத்திய பச்சரிசியைக் கழுவியெடுத்த கழுநீரில், சிவிய

தேற்றாங்கொட்டையும், நெல்லிக்கொட்டைக் குள்ளிருக்கும் பருப்பும் ஊறப்போட்டு ஒருநாள் முழுதுமூறவைத்து மறுநாள் அவைகளை அரைத்து அக்கழுநீரிலேயே குழப்பிச் சர்க்கரை கூட்டிச் சாப்பிடத்

தீராத பிரமேகங்கள் தீரும்.

102. பிரமியத்துக்கு மருந்து

ஒப்புகழுநீரிற் பச்சரிசி தன்னை
யுவந்தரைத்துக் கரைத்தருந்தப் பிரமேகம்போம்,
அப்பிரகசெந்தூரம் பசுவின் வெண்ணெய்
அதில் நான்குநாளருந்தப் பிரமேகம்போம்,
வைப்புவிக்கற்றாழை மணிபலகையாக
வாங்கி நீர்ப்புலாவேர்ப் பட்டையு மரைத்து
செப்புமிவை யிரண்டையுஞ் சேர்த்தில வெங்நீரில்
தித்திப்புச் சர்க்கரையைக் கூட்டுவாயே. ஈஅசு

கூட்டியே மூன்றுநாளருந்தச் சொல்லு
கூறு கெட்ட பிரமேகமெல்லாந் தீரும்
நாட்டியின்னமொரு முறைகேள் முதியார் கூந்தல்
நல்ல கொடிவேலியுடன் முருங்கைவேரும்
தாட்டிகக் கழல்பருப்பூமத்தைச் சாறு
தனிலரைத்துண்டிடக் கொடலின் பிரமியம்போம்
மேட்டிமை சேருலகினிற் கைகண்டதாகும்
விதானிகள் சரபேந்திரன் முறையிதாமே. ஈஅள

(இ-ள்)

1. கழுநீரில் பச்சரிசியை ஊறவைத்து அரைத்துக் குடிக்கப் பிரமேகம் போம்.

2. அப்பிரகச் செந்தூரத்தைப் பசுவின் வெண்ணெயுடன் குழைத்து நான்கு நாட்களருந்தப் பிரமேகம் தீரும்.

3. கற்றாழைச்சோறு, நீர்ப்பூலா வேர்ப்பட்டை இவ்

விரண்டையும் அரைத்து வெந்நீரில் கலந்து சர்க்கரை கூட்டிச் சாப்பிடவும். 3 நாளில் பிரமேகங்கள் தீரும்.

4. முதியார் கூந்தல், கொடிவேலிவேர், முருங்கை வேர், கழற்கொடிப்பருப்பு, இவைகளைச் சமபாகமெடுத்து ஊமத்தைச்சாறு விட்டரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டி (தினம் 2 வேளை) உண்டிவரப் பிரமேகம் தீரும்.

103. பிரமியத்துக்கும், காபாத தாகத்துக்கும்

இலவங்கம் பலமதொன்றுங் கூகைநீறு
மெட்டிபலம் ஏலமது பலமிரண்டும்
கலந்திகழ் திப்பிலிப் பலமு நான்குமிந்த
நால்வகையைச் சேர்த்துடன் சூரணமே செய்து
கலந்துமதில் சர்க்கரையு மதுவீராறு
காசிடை தேனிரண்டு பங்கும் பசுவினெய்யும்,
இலகவொரு பங்குவிட்டுக் கடுகுபண்ணி
இன்பமுடன் தினமூன்று பலமும் உண்ணே.
உண்ணவே மூன்றுபல வீதமாக
உடலெரிவு பழங்காய்ச்சல் கரபாத தாகம்
வண்ணமுட னிரத்தம் விழுகிறதும் பிரமை
வயிற்றெரிவு பிரமேகஞ்சி லேட்மேம்போம்
கண்ணவனி தனிலிவை கடருமின்ப
நலமுடன் கைகண்டது வற்புத வாரீசக்
கண்ணனெழில் துளசி மகாராசனீன்ற
காதலனற் சரபேந்திரன் முறையிதாமே. ாஅகூ

(இ-ள்)

இராம்பு	1 பலம்
கூகைநீறு	8 பலம்
ஏலக்காய்	2 பலம்
திப்பிலி	4 பலம்

இச்சரக்குகளைச் சுத்தமாக எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். அதனுடன் சர்க்கரை 12 வராகனெடையும், சுத்தமான தேன் 2 பங்கும், புசுவின் நெய் 1 பங்கும்விட்டுக் கல்லுரலிலிட்டு, கன்றுக இடித்து 1 பலம் நிறையுள்ள வடகங்களாகச் செய்துகொள்ளவும்.

இதனைத் தினமும் 3 பலம்வீதம் சாப்பிட உடலெரிவு, ஜீர்ணஜ்வரம், கைகால்களின் எரிச்சல், இரத்தம் வீழல், மயக்கம், வயிற்றுவலி கபம், பிரமேகம், முதலிய ரோகங்கள் தீரும்.

104. பிரமியத்துக்கு

ஏலமிலாமிச்சிரு வேலியுடன் சீந்தி
லிலவங்கப் பத்திரி வேப்பிலையும் கொச்சி
ஆலவிழுதிலவங் தாமரைப்பூ
அதிமதுரஞ் சந்தணங் கற்பூரங் கோட்டம்
சிலமுள்ள தேட்கடை நன்னரி காயன்
சிலக்கியக் திப்பிலிமூலம் பாகல் வேரும்
கோலமத்திப்பழம் பருத்தி மணித்தக்காளி
குக்கிலும் வெள்ளாருகுடனே அகத்திதானோகமி
அகத்திப் புளியிலை கரிப்பான் குதிரைவாலி
அமுக்குரு தாளிசபத்திரி கரந்தை
தகுந்துளசி பெருங்கு மிள்மஞ்சிட்டிகெல்லி
தான்றி முந்திரிகைப்பழமும் வலம்புரிக்காய்
புகழ் பேரீச்சம்பழமுஞ் சோதி நீலம்
புழுகும் வெருகங்கிழங்கும் வில்வப் பிஞ்சும்
பகுந்திவைகள் சேர்த்துடன் சூரணமே செய்தும்,
பகர்ந்திடுஞ் சர்க்கரை யதுக்குச்சரியாய்க் கூட்டே.

கூட்டியந்தச் சூரணஞ் சர்க்கரையுஞ் சேர்த்துக்
கொண்டு நெய்யிற்றேனிரண்டி லொன்றிலுண்ணவு

வாட்டிரத்த பித்தமும் வாந்தியு மிரண்டி
மாதம் விடாச்சுரந் தாபசுரம் பிரமேகம்
நீட்டிய கைகாலெரிவு இவைகடீரு
நிசமிது கைகண்டதுண்மை யிசைச் சங்கீதப்
பாட்டு ரசக்கிய மறிவுல்லாச வாசப்
பரிமளஞ்சேர் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

ஏலக்காய்	இலாமிச்சம்வேர்
வெட்டிவேர்	சீந்தில் தண்டு
இலவங்கப்பத்திரி	வேப்பிலை
கொச்சி	ஆலவிழுது
கிராம்பு	தாமரைப்பூ
அதிமதுரம்	சந்தனம்
கர்ப்பூரம்	கோஷ்டம்
தேள் கொடுக்கு பூண்டு	கன்னிரிவேர்
* சிலந்தி நாயன்	கண்டத்திப்பிலி
பாகல் வேர்	அத்திப்பழம்
பருத்திக்கொட்டை	மணித்தக்காளி
சுத்திசெய்த குக்கில்	வெள்ளறுகு
அகத்தியிலை	புளி இலை
கையாந்தகரை	முதியார் கூந்தல்
அமுக்கிராக்கிழங்கு	தாளீசபத்திரி
சிவகரந்தை	துளசி
பெருங்குமிழ் வேர்	மஞ்சிட்டிக்கிழங்கு
கெல்லிமுள்ளி	தான்றிக்காய்த்தோல்
திராக்ஷைப்பழம்	வலம்புரிக்காய்
பேரீச்சம்பழம்	சோதிநீலம்
புனுகு	வெருகங்கிழங்கு
வில்வப்பிஞ்சு	

குறிப்பு:—சிலந்தி நாயன்=சீந்திற் கொடி

இச்சரக்குகளை நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்துகொண்டு சரி எடை சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

இச்சூரணத்தைத் தேனிலோ அல்லது நெய்யிலோ சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :—

இரத்தபித்தம், வாந்தி, இருமாதங்களாக விடாத சுரங்கள், தாபஜ்வரம், பிரமேகம், கைகால்களின் எரிவு முதலியவை.

105. பிரமேகத்தைப் போக்கும் அவுடதம்

ஆவாரை கடலிறஞ்சிப்பட்டை மஞ்சள்
ஆவாரை விரையும் நிலப்பனைக் கிழங்கும்
ஆவாரம்பிசின் பிலாப்பிசினும் வங்கம்
அப்பிரகமூ க்குத்தமுஞ் சித்திரமூலந்தான்
பூவார விளாம்பிசினு லோகங் காந்தம்
புகல் கடுக்காய் தான்றிக்காய் நெல்லிமுள்ளி
காவாரு முருங்கைப்பூ முருக்கம்பட்டை
கருவேம்பின்பிசின் பருத்தி விரைப்பருப்பே.

பருப்பு பருத்திப்பூ வாழைப்பூ தென்னம்
பாளை வாழைப்பழஞ் சர்க்கரை தேன்காரை
விருப்புத் துத்திவிரை முசுட்டை நீர்முள்ளி
விரை கிளுவைப்பட்டைக் கருங்காலிப்பட்டை
திருவேப்பம்பிசினும் வட்டத்திருப்பி வேருஞ்
செம்பருத்தி மரமஞ்சள் தேத்தாங்கொட்டை
இரும்புமஞ்சிலை சீந்தில்தண்டு மூங்கில்
இலை கருங்காலிப் பிசினல்லெண்ணெய் கொண்டே.

கொண்டிடுவாய் நத்தியாவட்டை வெள்ளைக்
குன்றிமணி குக்குலுங்கோவைக் கிழங்கும்

வீண்டிடுவாய் வெள்வேலாம் பிணிவுங்கட்டம்
விடத்தேரைப் பிசிஞடனிவ்வகைகளெல்லாம்,
கண்டிடுவாய் பிரமியத்தைப் போக்கப்பட்ட
கருணையுள்ள அவுழதமிந்த வுழ்தஞ் செய்து
உண்டிடுவார் பிரமேகமென்ற தெல்லா
மோடிப்போமற்கு மின்பமுயருந்தானே. உயிர

(இ-ன்)

ஆவாரை வேர்	கடலழிஞ்சில்பட்டை
மஞ்சள்	ஆவாரைவிதை
ஆவம்பிசின்	பிலாப்பிசின்
வங்கபற்பம்	அப்பிரகபற்பம்
சுத்திசெய்த துத்தம்	சித்திரமூலவேர்
விளாம்பிசின்	லோகபற்பம்
காந்தபற்பம்	கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்	கெல்லிமுள்ளி
முருங்கைப்பூ	முருக்கம்பட்டை(முள்முருங்கை)
கருவேலம்பிசின்	பருத்திவிதைப்பருப்பு
பருத்திப்பூ	வாழைப்பூ
தென்னம்பாளை	வாழைப்பழம்
சர்க்கரை	காரைவேர்
துத்திவிதை	முசுட்டைவேர்
நீர்முள்ளிவிதை	கிளுவைப்பட்டை
கருங்காலிப்பட்டை	வேப்பம்பிசின்
வட்டத்திருப்பிவேர்	செம்பருத்தி
மரமஞ்சள்	தேத்தாங்கொட்டை
சுத்திசெய்த மனோசிலை	சீந்தில் தண்டு
மூங்கில் இலை	கருங்காலிப்பிசின்(காசுக்கட்டி)
நல்லெண்ணெய்	கந்தியாவட்டைவேர்
வெள்ளைக்குன்றுமணிவேர்	சுத்திசெய்த குக்கில்

கோவைக்கிழங்கு வெள்வேலம்பிசின்
சுத்திசெய்த கிட்டம் விடத்தேரைப்பிசின்

இந்த வகைகள் எல்லாம் பிரமியத்தைப் போக்கும் ஔஷதங்களாம். இவைகளால் பிரமேகம் தீரும்.

106. பிரமேகத்துக்கு, வயிற்றில் புண்ணுக்கு

பறங்கிப்பட்டையின் சூர்ணமுமே ஐந்து
பலமதுக்கு ஒருபலஞ் சீரகமும் போட்டு
நிறுத்தெடித்துச் சர்க்கரையும் பலமு மூன்று
நிசக்கோரோசனையும் வராகனிடை மூன்றும்
சிறந்ததிற் போட்டாவின் நெய்யும் காழிவிட்டுச்
சேர்த்திவை லேகிய பாகஞ் செய்தருந்தில்
மறு நீங்கித் தீருகின்ற வியாதியைச் சொல்
வயிற்றிற்புண் கிரந்தி முதலின்னந்தானே 1

இன்னமென்றி பிரமேகஞ் சூலவாயு
இவைதீரு மெலித்துப் பத்தியந்தான்
நன்னயப்பஞ் சேர்துவரை யிளங்கீரையாகும்
நன்மையுடனிது நிசங்கை கண்டதற்குத்
தன்னிகரிலாத பிரதாப சூர
சத்திரியகுலந் தழைத்திக் கலிகாலத்தில்
முன்னம் வரும்படி கடத்துத்தம சிங்கார
முனிவிசையன் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

சுத்திசெய்த பரங்கிப்பட்டைச் சூரணம் 5 பலம்
சீரகம் 1 பலம்
சீனி 3 பலம்
கோரோசனை 3 வராகனெடை

இவைகளை யொன்றுகலந்து

பசுவின் நெய் 1 படியும்

விட்டு, அடிப்பின்மேலேற்றி லேகியமாகச் செய்து, சாப்பிட

வயிற்றில் புண், இரத்தகள், பிரமேகம், சூலை, வாயு முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—துவரை, இளங்கீரை, முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

107. பிரமேகத்துக்குத் தைலம்

தலைமை கஞ்சா இலை நெருஞ்சி இலையுங்கையாக்
தரை செருப்படியிலை வேலிப்பருத்தி
யிலை குப்பமேனியிலை மயக்கூமத்தை
யிலை யெட்டி மருந்து வகைச்சாறுங் கொண்டு
கலையிலொரு பாளைச்சிலையினி லூட்டிக்
காண நிழலுலர்ந்ததாக வுலர்த்தி
கிலைமை கஞ்சாவிதை கமலப்பூ சாதிக்காய்
கெல்லிக்காய் கெந்தகமு மரைத்திடாயே ... ஒயெ

அரைத்து வெள்ளைப் பசுவின் பாலதிற் புன்னைக்காய்
அளவு கான்கு வகையரைத்தெடுத்து
இரைத்த தெட்டுச் சாறூட்டும் பாரிச்சிலை
ஒருபுறத்தில் தேங்காய்ப்பூ வண்ணப்பூசி
திரித்து விளக்கிற் கொளுத்தித் தலைகீழாகச்
சென்று கலத்தினிற் பிடிக்கத் தைலம் வீழும்,
வருந்தைலமதுக் களவா யிரதம் விட்டு
மத்தித்துத் தைலமது மருந்துவாயே. ... ஒயிஅ

அருந்து பணவிடை யிரண்டுவீதமாக
அடங்காத பிரமேக மடங்கித் தீரும்
வருந்துகின்ற பத்தியமு மிதுக்கில்லைப்பார்
வையகத்திற் சோதனைக் கைகண்டதாகுந்
திருந்திய சாமுத்திரிகா சாஸ்திரம்
செப்பியதோர் புருடலெட்சணங்க ளெல்லாம்
பொருந்து சரபோசி மகாராசனின்பப்
புண்ணிய வானிமுறையைப் புகன்றதாமே. ... ஒயிக

(இ-ள்)

கஞ்சா இலை	கொருஞ்சி இலை
கையாந்தகரை	செருப்படி இலை
வேலிப்பருத்தி இலை	குப்பமேனி இலை
ஊமத்தை இலை	

இந்த எட்டுவகை இலைகளின் சாறுகளையும் ஒரு சீலையில் தனித்தனியே ஊட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இதில்

கஞ்சாவிதை	தாமரைப்பூ
சாதிக்காய்	சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்

இவைகளை புன்னைக்காயளவு வெடித்துப் பசுவின்பால் விட்டு கன்முகவரைத்து மேலே தயாராக வைக்கப்பட்டிருக்கும் சீலையில் தடவிக் காயவைத்துக்கொண்டு, சிறுசிறு துண்டுகளாகச் செய்து, திரியாகத் திரித்துக்கொள்ளவும் இத்திரிகளைக் கொளுத்தித் தலைகீழாக ஒரு பாத்திரத்தில் பிடித்தால் அதிலிருந்து தைலம் விழும். இத்தைலத்திற் குச் சரி எடை சுத்திசெய்த பாதாஸம் விட்டுக் குழைத்துச் சாப்பிடவும்.

வேளைக்கு 6½ குன்றி நிரை இம்மருந்தை உட்கொள்ளவும். தீராத பிரமேகங்களும் தீரும்.

இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை. சோதனைக்குக் கைகண்டது.

108. பிரமேகத்துக்கு மருந்து

உப்பிலிக்காயுட னெலுமிச்சங் காயெங்கும்
ஓதுகருங் கம்பளி சுட்டெடுத்து நீறு
அப்பிலகு ந்தேங்காயு மிவை தோல் பாகி
னளவரைத்து எருமை வெண்ணெயிலெவ்வெ
செய்பிடிவாய் வைத்தருந்தப் பிரமேகங்கள் [ன்று
தீரும் நிசமென்குன் கைகண்டதாகும்

எப்பொழுதும் நன்னெறி தப்பாமல் வாழு
மின்ப சரபேந்திரன் செய்முறை யிதாமே ¼ கய

(இ-ள்)

இண்டங்காய் எலுமிச்சங்காய்
கருப்புக்கம்பளி சுட்டசாம்பல் தேங்காய்

இவைகள் வகைக்கு ஒரு பாக்களவெடுத்து அம்மி யின்மேல் வைத்து நன்றுகவரைத்து எருமை வெண்ணெ யுடன் குழப்பிச் சாப்பிடப் பிரமேகங்கள் தீரும். கைகண் டது.

109. பிரமியத்துக்கு

கனவிடத்தேயிலை நாழிக்குருவை யரிசியு
மிடித்துக் களியாகக் கிண்டி
வனமிகுஞ் சந்தனமு முசுமுசுக்கை கொட்
டைப்பாக்களவாய் வகைக்கரைத்து
மனமகிழுங் களியுடனே நெய்யினிற்
றோய்த்தருந்த வெழில் மணமிருந்தால்
தினங்களியைக் கூட நெய்யிற்றோய்த்
தருந்த பிரமேகந் தீருந்தானே. ¼ கக

தீரு நிசம்பத்தியங்கேள் திருக்கை சுறுக்
கருவாடு சேர்த்துமே தான்
பாருலுகிலிப்படிச் செய்து கொண்டவர்கள்
வெகு சுகம் பரவுவார்கள்
எழுருவர் சங்கை யெடித்தெறிந்திடச்
சூலுதிர்ந்த முத்திந்தேன் கண்டாம்பில்
சிருடனே மலர்ந்த தஞ்சை வளர்ந்த சர
பேந்திரன் செய் முறையிதாமே. ¼ கஉ

(இ-ள்)

விடத்தேரிலை 1 பிடி குறுவையரிசி 1 படி
இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துக் களியாகக்கிண்டி

சந்தனம் முசுமுசுக்கை

இவைகளை தனித்தனி ஒரு கொட்டைப்பாக்களவை த்துக்கொண்டு, களியுடன் கூட்டி, நெய்யுடன் தோய்த் துச் சாப்பிடவும்.

இதற்குப் பத்தியம் :—

திருக்கை மீன், சுறுக்கருவாடு இவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

110. கோபிக்கும் பிரமேகம், வாதப்பிரமேகம், முதலிய பிரமேகத்துக்கு மருந்து

அல்லியத்தி கருங்காலி தாமரை ஆவிரை
யுடனிவ்வைந்தின் பூவை
சொல்லி வெவ்வேறு யுலர்த்திப் பொடித்த தனை,
யெடுத்த தெல்லாஞ் சுயம்புத் தேனைச்
செல்லவிட்டு குழைத்தருந்த
கோபிக்கும் பிரமேக மின்னம்
நெல்லிக்காயின் சாற்றிற் குடிக்கப்
பித்தப்பிரமேகம் நீங்கிப் போமே. ஒகஉ

நீங்கவு மோருடன் குடிக்க வாதப்பிர
மேகமெல்லாம் நிசமாய்த் தீரும்
தேங்குகின்ற பத்தியமு மிதுக்கில்லை
கைகண்ட தெங்கு மோங்கும்
பாங்குசமுதாடி கத்தி கேடயம்,
வல்லிய மிடிப்பில் பண்பாய்க் கட்டி
ஓங்கு தஞ்சைப்பதியில் நிதம்பவனி வருஞ்
சரபேந்திரனு ரைத்த தாமே. ஒகஊ

(இ-ள்)

அல்லிப்பூ *அத்திப்பூ
கருங்காலிப்பூ தாமரைப்பூ
ஆவாரம்பூ

இவைகளைத் தனித்தனியாக எடுத்து, வெவ்வேறாக உலர்த்திப் பொடிசெய்து கொள்ளவும்.

வேண்டும்போது எல்லாச் சூரணங்களையு மொன்று கலக்கு தேன்விட்டுக் குழைத்துச் சாப்பிடவும். அதிக மான பிரமேகம் தீரும்.

கெல்லிக்காய்ச் சாற்றில் குடிக்கப் பித்தப் பிரமேகம் தீரும்.

மோருடனே உபயோகித்தால் வாதப்பிரமேகம் தீரும் இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை. கைகண்டது.

*சிறு சிறு பிஞ்சுகளாக இருக்கும்போதுள்ள கொத்தைப் பறித்துக்கொள்ளவும்.

111. சுக்கிலப்பிரமேகத்துக்கு

கரிப்பாலை வேர்தனைப் பிடுங்கிவந்து
எலுமிச்சங்காய்க்கு நேரா
விருப்பாவின் பாலிலதை யரைத்து
வெல்லங் கூட்டியுண்ணமிகவு நன்று
மிருப்பாரில் வளர் புருடர் சுக்கிலப்
பிரமேக மென்ற தெல்லாந் தீரும்
பொருப்பான குயமானை மருந்துண்ணும்
போதனையாமற் புகல்வ தாமே. உகடு

(இ-ள்)

கரிப்பாலை வேரைப் பிடுங்கிவந்து பசுவின்பால் விட்டு எலுமிச்சம்பழமளவு விட்டு வெல்லம் கூட்டிச் சாப்பிடவும் சுக்கிலப்பிரமேகம் தீரும். மருந்துண்ணும்போது ஸ்த்ரீ ஸங்கம் கூடாது.

112. பிரமேகத்துக்கு

புழுக்கொல்லி யிலையு மொருகூற
நிசியிரு கூறும் போட்டிடித்து

அழுகுமிகும் பிட்டெனச் சுட்டதை
யெடித்து நல்லெண்ணெய் வார்த்துதருந்துவோர்
பழகு பிரமேகமெல்லாம் விலகி நிற் [க்கு
காதோடி மிக்தப்பாரின்மீ துயெழிலுடன் கைகண்டதிது பத்திய
மில்லா முறை யென்றிதைச் சொல்வாயே. ௨௬

(இ-ள்)

புழுக்கொல்லி இலை	பிடியும்
அரிசி	பிடியுமெடித்து

இடித்துப் பிட்டாக சுட்டு அதை எடித்து சுத்தமான நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிடப் பிரமேகங்கள் தீரும்.

113. பிரமேகத்துக்கு

நிசங்கரு ங்குங்கிலிய மதிலிரண்டு பலம்
பொடித்துதைய நெய்யைவிட்டு
பிசைந்து சர்க்கரை கூட்டி வெருகடி
யாண்பிளைகளு ணப்பெண்டு கட்குப்
பசைமிகும் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்
தருந்தப் பிரமேகம் பறக்கும்பாரு
வீரியலி யாடைப்புவி மீதிது
முறைகை கண்டதென விளம்பலாமே. ௨௭

(இ-ள்.)

கருங்குங்கிலியம் 2 பலமெடித்துப் பொடிசெய்து ஒரு பாத்திரத்திலிட்டு அது முழுகும்வரைப் பசுநெய்யை விட்டுப் பிசைந்து சர்க்கரையும் கூட்டி, மூவிரல் கொண்ட அளவெடுத்துச் சாப்பிடவும். ஆண்களுக்கு உண்டாகும் பிரமேகம் தீரும்.

பெண்களுக்கான பிரமேகமானால் நெய்க்கு பதில் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உபயோகிக்கவும். கைகண்டது.